


உ

கடவுள் துணை.

நெல்லூர்வீரனென்னும்.

ஆசுகவிராயர்

பாடியருளின

அரிச்சந்திரபுராணம்

மூலமும்,

பாட்டுகளின் பதந்தோறும் பிரதிபதந்தோன்றத்

திரிசிரபுரம்-மகாவித்துவான்

வி - கோவிந்தபிள்ளை

அவர்கள்செய்த பொழிப்புரையும்.

இஃது

சிதம்பரம்.

குருநாதசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

துங்கம்பாக்கம்,

அருணகிரிமுதலியார்

அவர்களது

அம்பாள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1894.

உ

கடவுள்துணை.

அரிச்சந்திர புராணம்

மூலமும் உரையும்.

பாயிரம்.

கடவுள்வணக்கம்.

கணபதி காப்பு,

பெரும்புகழ்பெறும்படி யருந்துயர்கெடும்படி
பிரியம்பலவரும் படியுளம்
விருப்பிபதனம்பெற மிகும்பெறுபதம்பற
விளங்கிய தவஞ்செயநெடும்
கரும்பவல்பெறும்பய றருங்கனிரசங்கொடு
கவர்ந்ததென வந்தருள்புரி
திருங்கரிமுகன்சிறு சதங்கையொடுகிண்கிணி
யிலங்கியபதம் பெறுவேனே.

(இ-ள்) பெரிதான புகழைப் பெறவேண்டியும் அரிதான துக்கங்கள் கெடவேண்டியும் எனக்கிஷ்டமான வைகள் பலவும் சித்தியாக வேண்டியும் மனதுக்குவேண்டிய திரவியலாபம்பெறவேண்டியும் மிகுவதாகிப் பெறுதற்குரியபதவியை அடையவேண்டும் இவைகளுக்குத் தக்கதான தவங்களைச் செய்யவேண்டியும் நீண்டகரும்பு அவல்பெரும்பயறு அரிய கனிகள் ஆகிய இவைகளின் ரசங்களைக் கொண்டுபுசித்து அந்தரசம் போலவே வந்து திருவருளைச்செய்துபெருமையைக் கொண்ட யானை முகக் கடவுளுடைய சிறிய சதங்கைகளோடு கிண்கிணி களும் விளங்குகின்ற பாதங்களை வணங்கப்பெறுவேன்-எ-று. (க)

இதுவுமது.

பருதினன்மரபில்வருபார்த்தினன்
விரிதரும்புகழ்மேவரிச்சந்திரன்
சரிதமன்னுந்தமிழ்க்குத்துணைசெயக்
கரிமுகன்பதக்கைதொழுதேத்துவாம்.

(இ-ள்) சூரியனுடைய குலத்திலேபிறந்த அரசனானவிரிவான பு
கழைக் கொண்ட அரிச்சந்திர மகாராசனுடைய சரித்திரமாகப்பாடு
கிற தமிழ்ப்பாடல் களுக்கு இடையூறில்லாமலுதவிசெய்வதற்குயா
னைமுகக் கடவுளுடைய பாதங்களைக் கைகளாலே குப்பிட்டுத்துதி
செய்யக் கடவோம்-எ-று. (௨)

பரமசிவம்.

சீர்கொண்ட செழுங்கமலத் திசைமுகனு நெடுமாலுஞ் சிவனு
மென்னப், பேர்கொண்டமூவுருவு மிருருவுமோருருவாய்ப் பிறங்கு
ந்தொல்லை, நீர்கொண்டவண்டத்துந் தாவரத்துஞ்சங்கமத்து நிறை
ந்துநின்றோன், தார்கொண்டதாளிணைக டலைகொண்டவன்பினொடு
தலைமேற்கொள்வாம்.

(இ-ள்) புகழ்ச்சியைக் கொண்ட அழகு பொருந்தியதாமரைப்பூ
விலே வீற்றிருக்கின்ற நான்முகப் பிரமதேவனும்உலகளந்தருளின
விஷ்ணுவும் பரமசிவனும் என்று சொல்வதான பெயர்களை கொண்
ட மூன்றுருபமும் பார்வதி பரமசிவ னென்கிற இரண்டுருவமும் ஏ
கருபமாகி விளங்குவதான பழையநீரான கடலைகொண்ட அண்ட
ங்களிலும் சராசரங்களிலும் பூரணமாகி நிற்கின்ற கடவுளுடைய ம
லர்போலும் அழகு கொண்டபாதங்களிரண்டையும் மிகுதியான ப
த்தியுடனே எமதுசிரத்தின்மேலே சூடிகொள்வோம்-எ-று. (௩)

இதுவுமது.

புகலரியசதுமறை யாயமறைப் பொருளாயு பநிடத்தாய்ப் பூத
மைந்தாய், அகிலமும்மாய்மன்னுயிரா யணுவிலணுவாயவற்றி னகமா
ய்மேலாய்ப், பகலிரவென்றறியாத பராபரமா யறுசமயப் பகுதியாகி
ச், சகலமுமாய் நிஷ்களமாக் நின்றோன்றன் செழுங்கமல சரண்புக்
கேமால்

(இ-ள்) சொல்லுதற் கருமையான நான்குவேதமாய் அந்தவேதா
ர்த்தங்களுமாய் முப்பத்திரண் டுபநிஷத்துக்களுமாய் பஞ்சபூதங்க
ளுமாய் உலகமுமாய் உலகத்திலே நிலைகொண்ட சருவபிராணி களு
மாய் அணுவுக் குளணுவுமாய் அவைகளுக் குள்ளுமாய் புறமுமா
ய் பகலென்றும் இராத்திரியென்றும் அறியக்கூடாத பராபர வஸ்து
வாகி ஆறுவகைச் சமயப்பிரிவுகளுமாய் சகலவஸ்துவுமாய் நிஷ்களவ
ஸ்துவுமாய் நிற்கின்ற கடவுளுடையஅழகிதான தாமரைமலர்போலு
ம்பாதங்களையே கதியாக அடைந்தோம்-ஆல்-அசை. (௪)

இதுவுமது.

ஆதியாயண்டபகிரண்டத்துமப்புறத்துமடங்காதுற்ற [ம்
நீதியாய்மணியொளியும் பாற்சுவையுமெனவிளைத்து நிறைந்துநின்று
பாதியாயொன்றாகி யருவாகியுருவாகிப் பரந்துமல்குன் [ன்
சோதியான் முடிசூட்டத் தனதுதிரு வடிசூட்டத்துணிந்த தூயோ

(இ-ள்) சராசரங்களுக் கெல்லாம் முதலாய் இந்தவண்டத்திலும் வெளியண்டத்திலும் இவ்விரண்டுக்கும் அப்புறங்களிலும் அடங்காமலிருக்கிற நிறைவாய் மணிகளிலே ஒளியும்பாலிலே சுவையும்போல் எல்லாவற்றிலும் வியாபித்திருந்தும் பார்வதியோடேகூடியபாதிவடிவுமாய் தானே பரஞ்சோதி ஸ்வரூபனுமவென்னான் என்தலைமேலே சூட்டிக் கொள்ளுவதாகத்தனது திருவடிகளை த்சூட்டுதற்குத் துணிவுகொண்ட பரிசுத்தன்-எ-று. (ரு)

உபாகேதவி.

களத்தார்வெங் கயமுகனுங் கந்தனுஞ்சம்பந்தனும் பாலுண்டகும்ப களத்தாளையுநம்வளர்த்த கரத்தானை திரிபுரக்கழலாய்வேவச், சினத்தானைசிறியோர்கள் செய்தபிழை பொறுத்திரக்கஞ்செய்யுஞ் செய்யமனத்தானே நின்கமலமலர்த்தாளே யென்றலைமேல்வைத்தாள்வாயே.

(இ-ள்)களமானகால்களையுடைய வெவ்வியயானைமுகக்கடவுளும் முருகக்கடவுளும் சம்மந்த மூர்த்தியும் பால்குடிப்பனவானகுடங்கள் போலும் கொங்கைகளையுடையவளை முப்பத்திரண்டு தருமங்களையும் வளரசெய்தருளின கைகளையுடையவனே முப்புரங்களும் நெருப்பாகிவேவும்படி கோபித்தவனே அறிவீனர்கள் செய்கிற குற்றங்களைப் பொறுத்துத் தயவுசெய்வதான செம்மையுள்ள மனத்தையுடையவனே உனது தாமரைமலர் போலும் பாதங்களையேஅடியேனுடைய சிரசின்மேலேவைத்து அடிமைகொள்ளக்கடவாய்-எ-று.(சு)

விநாயகக்கடவுள்.

வையாப்பன்முகத்தானை மறலியையோடத்துரந்துதாழ்வதென்றும், மெய்யாம்பன் முகத்தாலும் வேதத்து மாகமத்தும் விரித்ததென்றே, மொய்யாய்பன் முகத்தானைப் பொடியாகப்பொருத்துவினைமுடிந்துநீண்ட கையாம்பன் முகத்தானைக்காலையினு மாலையினுங்கருதுவோர்க்கே.

(இ-ள்) கூர்மையானபற்களைக்கொண்டமுகத்தையுடையவனையமனை ஓடும்படிஜயித்து வாழ்வைப் பெறுவதுஎக்காலத்தும்சத்தியமேயாகும் இதுபல இடங்களிலும் வேதங் களிலும் ஆகமங்களிலும் சொல்லுகின்றதென்று கொண்டுவண்டுகள்மொய்க்கின்றமதம்பொருந்திய கஜமுகாசூரனைத் தூளாகச்சண்டைசெய்துஅவனதுகொடுந்தொழிலை முடிவுபண்ணி நீண்டுள்ள துதிக்கையையுடைய யானைமுகக்கடவுளைப் பகலிலும் இரவிலும் தியானிப்பவர் களுக்கு-எ-று.

முருகக்கடவுள்.

பெருமையிலுங் கதிமையிலு முதுமையிலு
முதிவெனவே பிறங்குமேனிக்

கருமையிலுங்கடுந்தறுகட் செம்மையிலும்
வெம்மையிலுங் கலங்கென்காளா
எருமையிலும் வெள்ளாட்டுப்பால்போது
மெனப்பிறரை யெண்ணேனென்பா
வருமையிலும பொறுமையிலும்வரதன்மகன்
குகனுமென்றன் மனத்திலுண்டே

(இ-ள்) காலதூதர்களோடு கூடியிருக்கிற பெருமையினாலும் உனது வேகத்தோடு கூடின ஆரவாரத்தாலும் உனது வயது மூப்பினாலும் மேகம்போலவே விளங்குவதான உனதுநிறங் கறுத்திருக்கிறதினாலும் கடுமையாக அஞ்சாதிருக்கிற உன்கண்கள் சிவந்திருக்கிறதினாலும் உனது உக்கிரகத்தினாலும் உன்னைக்கண்டு அஞ்சேன் யமனே எருமைப் பாலைப் பார்க்கிலும் வெள்ளாட்டுப் பால் கொஞ்சமாயிருந்தாலும் போதுமென்றெண்ணி முருகனல்லாரை மதியேன் யாதினாலென்றால் அன்பு கொண்டு முருகனேறிவருகிற மயிலும் அம்முருகன்போர் செய்தற்குரியவேலும் எல்லாவரங்களையுந்தருகிற பரமசிவன் குமாரனான முருகனும் எனதுமனதிலே உண்டாயிருக்கதால்-எ-று. (௮)

காளியம்மன்.

வேறு.

அந்தரியாமளைய மலையாலகாலியம்பிகைமாதர்கௌரியாளியூர்தி, வந்தரிநான்முகன்வணங்கு மலர்த்தாட்சூரி வைரவிதாருக வைரிமதங்கிநீல, கந்தரியோகினிசூலி நீலிநாககங்கணிசங்கரிவிமலைகாளி வால, சுந்தரிசாமுண்டிதிரி சூலிகோலத்துணையடியென் முடிமீது சூடினேனே.

(இ-ள்) அந்தரி யாமளை அவலை ஆலகாலி அம்பிகை மாதரி கௌரியாளி யூர்தி சமீபத்திலேவந்து விஷ்ணுவும் பிரமதேவனும்வணங்குவனவான தாமரைமலர்போலும் பாதங்களையுடைய சூரிவைரவி தாருகவைரி மதங்கிநீலகந்தரி யோகினி சூலி-நீலி-நாககங்கணி சங்கரி விமலிகாளி பாலசுந்தரி சாமுண்டி திரிசூலியென்னும் பெயர்களைக்கொண்டவளுடைய அழகியஇரண்டுபாதங்களையும்அடியேனுடைய சிரசின்மேலே சூடிக்கொண்டேன்-எ-று. (௯)

கலைமகள்.

மருப்பவளவர்க்குவிந்து திரண்டுமுத்து
வடமணிந்துகுடமெனவே வயங்கிச்செம்பொற்
பொருப்பவளவரவளர்ந்து ததும்பிவிம்மிப்
புடைபரந்துகளபகளும் புளகக்கொங்கைத்

---

0 மயில்-அயில்-மையில்-ஐயில்-எனப்போலியாய்வந்தன

இருபயமுகைமலையாளைத் தெரிவையாளைச்
செழும்படிகநிறத்தனைத் திருமுனைச்சூடுத்
திருப்பவளப்புலசேரு மின்றுதாளை
யெனதிதயமலத்தில் விருந்திட்டேனே

(இ-ள்) யானைக் கொம்பு அவ்வளவாகக் குவிந்தவைக்கு இரண்டு பயமுத்துமாலையுங் கொண்டு குடம்போலவே பிரகாசிக்குஞ்செம்பொன்மலையிலவ்வளவாக வளர்ந்து நிலைமிகுமுதலாய் மாமேருவென்னும் பருவினைக்கத்தகசெறு பரிபாலித்த தானபெரியவர்களையுந்திருப்பவளப்போதும் வாசையுமுடையவராய் தேன்போலமதுரவசனியாய் மான்போல் நேத்திரங்களையுடையவளாய் தவமானபனிவருமபோது சிறத்தையுடையவளாய் விசாலமுடையவளாய் பூவிலே வீற்றிருக்கின்றவளாய் எழுலகங்களையும் பெற்றதாயான சரஸ்வதிதேவியை யென்னுடைய இருதயகமலத்திலே விருந்து செய்வித்தேன்-எ-று. (௰)

அவையடக்கம்.

வேறு.

நீர்கொள்வார்பாலோடு சேறுற்றும்
பதர்கொள்வார் நெல்லோடிற்றும்
நார்கொள்வார் பூவுற்றும் வேர்கொள்வா
ரிற்சிறிது பயனுண்டாயிற்
சீர்கொள்வார்புன்சொல்லுஞ் செஞ்சொல்லுஞ்
சேர்ந்தொன்றிச் சேராப்புன்சொல்லு
யார்கொள்வாரென்பது சற்றறியாமற்
சிறியேனு வசைக்கின்றேனே.

(இ-ள்) நீரையும் விலக்கு வாங்குவார்கள் பாலோடு கூடியிருந்தால் பதரையும் வாங்குவார்கள் நெல்லோடுகூடியிருந்தால் நாரையும் வாங்குவார்கள் பூவோடுகூடியிருந்தால் வேரையும்வாங்குவார்கள் அந்தவேரிலே கொஞ்சம் பயனுண்டாயிருந்தால் அப்படியேசிறப்பாக அங்கீகாரஞ் செய்வார்கள் புன்சொல்லாயிருந்தாலும் செஞ்சொல்லோடே கூடியிருந்தால் அப்படிசெஞ்சொல்லோடே கூடாதனைத்துபுன்சொல்லையார்தாம் அங்கீகரிப்பார்கள் ஒருவரும் அங்கீகரியார்களென்பதைச் சிறிதும் தெரியாமல் நாவை அசைத்துநான் பாடலானேன்-எ-று. ஆனாலும் பெரியோர்கள் அங்கீகரிக்கவேண்டுமென்று கருத்து. (௧௧)

இதுவுமது.

புருடனேர்க்கேத்திழையார் பொருளுரைப்ப
தெனப்பிறாதும் பொருளோவென்வுக்
இருடனேர்மேலவருக் கறமுரைப்ப
தெனச்சிறிய தெள்குதுள்ளிக்

கருடனார்க்குப் பறவைகற்பிப்ப
தெனவனந்தங் கண்ணுள்ளார்க்குக்
குருடனார்வழிகாட்ட லெனபபெரியோர்
முன்சிறியேன் கூறலுற்றேன்

(இ-ள்) தன்புருஷனுக்குப் பெண்டாட்டி யானவள்விவேகஞ்சொல்வதுபோலவும் அந்நியருடைய பொருள்களையே எப்போதுந்திருடுகிறதிருடனானவன் மேலோருக்குத்தரும நீதிசொல்வது போலவும்சிறியசொற்பமானதுகிளம்பிப்பறந்து கருடப்பட்சிக்குப் பறக்குஞ்செய்கையைக் கற்றுக்கொடுப்பதுபோலவும்அநேகங்கண்களையுடையவர்களுக்குக் குருடன் வழிகாட்டுவதுபோலவும் பெரியோர்கள்முன்னேமிகச் சிறியேனான நான்பாடத்தொடங்கினேன்-எ-று. (௰௨)

ஆக்கியோன்பெயர்முதலியன

தண்கவிகைக்குரிசிலரிச் சந்திரன்றன்
சரிதைமதைத்தரணியோர் விருப்பமெய்த
வண்கவிஞர்வழைவழையே வகுத்துரைத்த
வடமொழியுந்தென்மொழியின் வழுவிலாத
வெண்கவியுங்கண்டாங்கின் மழுவிலாத
விதங்கேட்டுவழையெனவே வெருண்டுசோலைக்
கண்கவிகள்குதிபாயு நெல்லூர்வீர
கவிராசனேவிருத்த கவிசெய்தானே

(இ-ள்) குளிர்ந்துள்ள வெள்ளக்குடையை யுடைய அரிச்சந்திரமகாராசனுடைய சரித்திரத்தை உலகத்தாரெல்லாம் சந்தோஷத்தையடைய அழகான வித்துவான்கள் சொல்லுங்கிரமப்படியேசொல்லிப் பாடி நாவடமொழியிலுள்ள பாடல்களையும் தென்மொழியிலே யாதொரு தோஷங்களு மில்லாத வெண்பாவான பாடல்களையும் பரிசோதித்துப் பெண்கள் ஆடுகிற இடத்துண்டானமத்தளத்து
ரி ... கேட்டு அந்தத் துவனியைமேகத் துவனியென்று பயங்
வளியவுரடைய ...
து சோலைகளிலே குரங்குகள் குதித்து ஓடுவதானநெல்லூரிலே யிருக்கிற வீரகவிராசனென்பவனே இப்படி விருத்தக்கவி யாகப்பாடினான்-எ-று. (௰௩)

இதுவுமது

விதியினரசிழிந்தவரி சந்திரன்றன்
வியன்கதையாம்வெண் கவியைவிருத்தமாக்கி
அதிவிதமாங்கலியுகத்தில் வருசகாப்த
மாயிரத்துநானூற்று நாற்பத்தாறில்

சதிற்மறைநொபுல்லாணித் திருமான்முன்னே
சக்கரத்திர்த்தக் கரைமேன்மண்டபத்துள்
கதித்ருசிர்நெல்லூர் வாழ்வீரனசு
கவிராஜன்கவியரங்க மேற்றினனே

(இ-ள்) ஈஸ்வரச்செயலினாலே தனது அரசாட்சியை விட்டுப்போன அரிச்சந்திரமகா ராஜனுடைய பெரிய கதையாகிய வெண்பாவாலான பாடல்களை குருத்தப்பாடல்களாகச் செய்து பலவிதங்களுந் தோன்றுகின்ற கலியுகத்திலே வருவதானசாலிய வாகனசகாப்தமாயிரத்து நானூற்றுநாற்பத்தாறும் வருஷத்திலே நன்றாக வேதங்கள் ஆராய்ந்துசொல்லுகின்ற திருப்புல்லாணித்திருமால்சந் நிதியிலே சக்கரதிர்த்தக் கரைமேலிருக்கிற மண்டபத்தி லிருந்துநல்லகதியைத் தருவதான சிறப்பையுடைய நெல்லூரிலே வாழுகின்றவீரனென்னும் ஆசுகவிராஜன் அந்தவிருத்த பாடலான அரிச்சந்திரபுராணத்தை அரங்கேற்றுதல் செய்தான்-எ-று. (௰௪)

பாயிரம்-முற்றுப்பெற்றது.

நாட்டுச்சிறப்பு

முன்னூற்றியாப்பிறவிக் குருடானமூடன்
தன்னூற்றொசாகரத்தி னிடஞ்சாற்றுமாபோல்
என்னாலறிதக்கதன் றெண்ணினுமன்னர்மன்ன
னன்னாட்டணியான்சில வல்லநடத்தலுற்றேன்

(இ-ள்) முதலிலே வழிதெரியாத பிறவிக்குருடனான ஒருவனாலே பள்ளமான சமுத்திரத்தி னிடவகைக ளெல்லாங் கண்டு செல்லத் தொடங்கினதுபோல் என்னாலேதெரிந்துசொல்லத்தக்கது அல்லவென்றாலும் ராஜாதிராஜனான அரிச்சந்திரனுடைய நல்லநாட்டுச்சிறப்பைநான் சிலவற்றைக்கூடிய மாத்திரம் சொல்லத்தொடங்கினேன்.

தட்பாற்கடலாரமுதங் கெழுமித்தழைத்து
நட்பாற்புகுந்தாலெனவங் துவர்வேலைநண்ணி
உட்பாற்புனலுண்டெழுந் தோங்கியகாளகூடம்
விட்பாற்பறந்தாலென மேகமெழுந்ததன்றே

(இ-ள்) குளிர்ந்ததிருப்பாக் கடலிலே அரிதானஅமுதமானதுண்டாகிச் சிறந்துதனக்கு உறவாகையினாலேலவணசமுத்திரத்துக்குவந்தாற்போல்வந்து அந்தக் கடலி னுள்ளான நீரையுண்டு முன்னாளிலே எழுந்து கிளப்பினவிடமானது ஆகாயத்தினிட மெல்லாம்பரவினது போலமேகம்மேலே கிளம்பியது-எ-று. (௨)

அடியும்முடியுந்தெரிவா திருண்டண்டமெங்கும்
கொடியுங்குடையுமென மாமுகிற்கூட்டமீண்டிப்
படியும்விசும்பும் பகைத்தாலெனப்பாரிற்கோத
இடியுந்துளியுங்கணையாப் பெரிதுய்த்தன்றே

(இ-ள்) கீழும்மேலும் தெரியாதபடி இருண்டு ஆகாயமெல்லாம்நீலக் கொடிகள்பறக்கிறாற் போலவும் நீலக்குடைகள் விரிந்தாற்போலவும் நீலமேகக் கூட்டங்கள்கூடி பூமியும் ஆகாயமும் பகைத்துச்சண்டைசெய்தாற்போல கணையான இந்திர வில்லிலேகூட்டி இடிகளுந் துளிகளுமே அம்புகளாக மிகவும்பெய்கிறது போற்பெய்தன-எ-று.

மீனக்கடலிற் றோன்றியதென்னவிண்ணோர்
தானக்கிழமோதத்தினைப் பெருந்தழியாக்கி
வானந்தனைச்செய்யமிவட் டிகையாக்கிவிட்ட
பானந்தனையொத்துவிழுந் ததுமாரிப்பல்

(இ-ள்) மீன்கள் சஞ்சரிக்கின்ற கடலிலே இந்த மதுவுண்டாகிய தென்று தேவர்களாகிய மதுவருந்துவோர்கள் சராசரங்களுக் கிடமாகவிளங்குகின்ற பூமியைப்பெரிய பானைபோலிருக்கிற சுரைக்குடுக்கையாகக் கொண்டு ஆகாயத்தை அந்தக் குடுக்கைமேலே மூடுகிற பன்றுடையான கிண்ணமாகச் செய்து அக்கிண்ணத்திலே ஊற்றுகிறதுவானது பலவில்லிகளாலும் ஒழுகிறதுபோல் ஒழுகியனமேகத்திற் செறிந்ததுளிகள்-எ-று. (ச)

விண்ணிற்பொழியுங் கனைமாரிவிழுந்துதைத்த
புண்ணிற்பொழியுங்குருதித்திரள்போலவெங்கு
மண்ணிற்பொலியிந்திர கோபமலிந்துதோன்றக்
கண்ணிற்கமையாப்புகல் வந்துகலித்ததன்றே

(இ-ள்) மேகத்தாலே பெய்கிற பாணவருஷங்கள் விழுந்து அதைசெல் பட்டபுண்ணினின்றும் சிந்துகிற ரத்தத்திரளைப் போல் எவ்விடத்திலும் பூமியாலே அக்காலத்திலே தோன்றுகிற இந்திரகோபப் பூச்சிகள் மிகுந்து விளங்க கண்களுக்கடங்காத ஜலப்பிரவாகமாகி ஆரவாரித்தது-எ-று. (ரு)

கள்ளங்கொலைகட்புலை காமமென்றைந்துமற்றோர்க்
குள்ளந்தெளிந்தோர்கரு முத்தானமென்னப்
பள்ளந்திடர்மால்வரை கானகப்பக்கமெங்கும்
வெள்ளம்பெருகிப்பரந் தோடிநிறைந்ததன்றே

(இ-ள்) களவுகொலை கட்குடிபொய்மிக்க காமமென்றுசொல்லுகிற பஞ்சமாபாதகங்களையும் ஒழித்த நல்லோர்களுக்கு மனந்தெளிந்த

○ தாத்திரி - பூமி.

வர்கள் கொடுக்கிற உத்தமதானம்போல் பள்ளம்-மேடு-உயர்ந்த மலை காடுகளாகிய பக்கங்களெல்லாம் அந்தப்பிரவாகமானது பெருகிப் பரவி ஓடிவேகங்கொண்டது-எ-று. ௬

கருவிக்கணமாமழை பெய்துகளித்தவெள்ளம்
பரவிப்பலகோடி பருப்பதக்கோடொடித்தாங்
கருவித்திரள்புக் கடங்காநிரைத்தோடியார்த்துச்
சரயுந்தனிலே தலைவைத்துச்சரித்ததன்றே.

(இ-ள்) பூலோகத்துக்குத் துணைக்காரணமாய்க் கூட்டங் கொண்ட நீலமேகங்கள் பொழிதலாலே ஆரவாரித்து அந்தஜலப்பிரவாகம் எங்கும்பரவி அநேககோடி மலைச்சிகரங்களை முறித்து அந்தச் சிகரங்களினின்றும்வருகிற அருவிக்கூட்டமானவை இறங்கிக்கட்டுக்கடங்காமல் ஆரவாரித்து ஓடிப்பின்னும முழங்கிச்சரயுநதியிலே வந்து கூடிவரலாயிற்று-எ-று.

ஆரங்குளவஞ்சியசோகுபலாசந்தேவ
தாரம்வகுளங்கடிச் சண்பகஞ்சாதிகன்னி
காரஞ்சுரபுன்னைகடம் புகச்சூரம்வேய்யர்ப்
பூரம்பணையோடு புரண்டிடப்போயதன்றே.

(இ-ள்) சந்தனமரம்-மூளவஞ்சிமரம்-அசோகுமரம்-பலாமரம்-தேவதாமரம்-மகிழ்மரம்-கடிமரம்-சண்பகமரம்-சாதிலிங்கமரம்-கோங்குமரம்-சுரபுன்னைமரம்-பேரிச்சமரம்-அகில்மரம்-கர்ப்பூரவள்ளி- அரசமரமாகிய இவைகளுடனே அலைகள்புரள அந்தச்சரயுநதிசென்றது

ஏலந்தகரமிலவங்க மரித்திரந்தக்
கோலம் ⁰வசவாசிசெங்குங்குமங்கோட்டம்வாரித்
தாலம்பதினாலு நடுங்கிடச்சார்ந்துருளிக்
காலந்தனின்மோது கருங்கடலொத்ததம்மா.

(இ-ள்) ஏலம்-தகரம்-இலங்கம்- அரித்திரம்-க்கோலம்-வசம்பு-செங்குங்குமம்-கோட்டம் ஆகிய இவைகளையெல்லாம் வாரிக்கொண்டு உலகம்பதினாலும் நடுங்கும்படிவந்த ஊழியகாலத்திலே அலைகள் மோதுகிறகருங்கடலை அந்தச்சரயுநதி ஒப்பாயிற்று-எ-று.

நீலம்வைரவம்வைடூரிய நித்தலஞ்செங்
கோலத்திகழுந்துகிர் கோமளப்பத்மராகம்
சாலத்தனில்வந்தநெடு ரிந்திரசாபமென்ன
ஓலந்திகழாற்றி னொழுக்கெதிர்த்தோடிற்றன்றே.

⁰ வசவாசி வசம்பு

[உ]

(இ-ள்) நீலம்-மரகதம்-வைடூரியம்-முதலாகிய சிவந்தநிறமாக விளங்குகின்ற பவளம்-அருமையான பதுமராகம் ஆகிய இரத்தினங்களாலே உலகத்திலே நீண்டிருக்குமதான ஒரு இந்திர வில்லைப்போல் ஒளியிருக்க அந்தக் கோபுரங்கள் செல்லுதலாலே ககனத்தை உடைத்துக் கொண்டு ஓங்கியது-எ-று.

ஆடகமாகமு மத்திகளும்வரை
யாடகமாகமு மத்திகையேபுண
லோடகமாகமு முற்றிடலாணை
போடகமாகமு மெத்திசைபொத்ததே.

(இ-ள்) ஆடகமாகமும்-பொன்னாலாகிய மாடங்களும் அத்திகளும்-யானைகளும் வரையான்மலைகள் போன்-பாய்கின்ற ஆகமும் இருக்கின்ற அத்தி-யும்பாறை வடிவின், கை-கையிலே பிடித்த புனலையுண்டானவைகள், நாகமும்- புன்னைமலரும், முற்றிடலால்-பொருந்தலால் ஆடகமாகம் அதின் தன்மைகளும், அத்திகளும்-அத்திமரங்களும் வளையாடுகின்றவைகளும், நாகமும்-பாம்புகளும், அத்திசையிலே நிறைவேற்றப்பட்டு இசைந்த, புனல்சூழ்ந்த ஓடு-நீர்நிலைகளும்-பாம்புகளும், முற்றிடலால்-பொருந்துதலிலே எண்டிசையும் நிறைந்தன, நகரமுழுதும் எப்பொழுதும் நாகமும் போருமாய் மனத்தினை ஒத்திருக்கையின் நகரத்தை எ-று, கடவுள்மேற் சொல்லுங் காலத்தை நாகலோகமென்பதனுக்கு அடியுடைத்தோர் சிலேடையு மாகவி வருமென்றறியப்புகழ்த்தி வரையாக சொல்லப்பட்டது.

அம்மடக்கலு மாறிளிர்க்கெழு
மம்மடக்கலு மொப்பனையன்றதின்
மும்மடக்கலும் வெல்லுமுகிர்கய
மும்மடக்கலுங் கொண்டுமுடிக்கிறதே.

(இ-ள்) அம்மடக்கலும்-சிறுமூலமும்- ஆறிளிர்க்கெழும் மடக்கலும்-கடலினைக்கொண்ட செறிந்தெழுகின்ற அழகிய வழியினைத் தோய்ந்த ஒப்பனையன்றி-சொல்லையன்றி, அதின்-அதினுடைய, மும்மடக்கலும் மூலமாகும் வெல்லும் வெல்லாநின்ற, முகிர்கயமும் பகுத்தாரினையும், மடக்கலும்- அதனை வெல்லுஞ் சிங்கத்தையும், கொண்டு தன்கண்ணே சேர்த்துக்கொண்டு-முடிகிறது- விளங்குகின்றது-எ-று அடக்கமுடிகிறது எனக்கூட்டுக.

முடியுமாதக் கருவுமுகல்லெட
முடியுமாதகதி முத்துகன்மத
வெடியுமாசடி யுக்கொடுவேலகமும்
வெடியுமாரிவு வெக்காரிறுக்கதே

(இ-ள்) முதியும்-தளிர்களும்-மாறும்-வளர்களும்-தருவும்-மரங்களு ம்-முதல்கெட-அடியோடுகெட முடியுமாறு சிதையும்படி-உந்தி வீழ வித்து முற்றி-சூழ்ந்து நல்-நல்ல-மான்மதவெறியும மிருகமதநாற்ற த்தையும் பெரிய-மதசலநாற்றத்தையும்-மாறடியும்-மாறிவைக்கப்பட் ட அடிகளையும்-கொடுகொண்டுவருதலால்-வேகமும்-சீரையும் வெறி யும்-மயக்கமும் மாறிலா-நீங்காத-வெங்களிறுகளது-வெவ்வியயானை யை யொத்தது-எ-று

வாரணத்தடங் கோடும்வளைகளும்
வாரணத்தடங் கோடும்வாரன்றியே
ஆரணத்துறை யத்தரியுண்மகிழ்த்
தாரணத்துறை யொத்தவ்வாறரோ.

(இ-ள்) அவ்வாறு அந்தச்சரயுநதி வாரணத்து யானைகளுடைய அ டிம்-கொலைசெய்கின்ற-அட்-அழகிய-கோடும்-தந்தங்களையும்-வளைகளு ம் சங்குகளையும்-வார்-நீட்சிஅ-ன்-பொருந்திய அத்தடங்கோடும்-அப பெரிய ஒதுகொம்புகளையுட- வாரணத்தடையாகிய தடங்கோடும் த டாகக்கரைகளையும் வாரன்றி-வாரிக்கொண்டு ஆரணத்து-வேதத்தின் ஞானபாதையிலே-உறை-தங்கிய அத்தரி பத்திரகாளி உண்மகிழ்ந்து இருவுளங்களி கூர்ந்து ஆர்பொருந்திய ரணத்துறை போர்களத்தை ஒத்தது-எ-று ஆரென்பதன் ரகரமுதலாக தகரமுதலாதலின் கெ ட்டது அகரமுதனகரவிறுவர் யென்பதுபோல்

துடிமருங்கிற் கொடிச்சியர்தோயவே
துடிமருகிற் பரப்பிச்சுழித்தாய்க்
கொடிபுனைந்த குகன்கழறூழ்ந்துபூங்
கொடிபுனைந்த குறிஞ்சிகடந்ததே

(இ-ள்) துடிமருங்கிற் கொடிச்சியர் உடுக்கைபோல இடையையுள்ள குறமகளிர்-தோய-முழ்க-முடி-ஏலச்செடிகளை மருங்கிற்பரப்பி-அரு கேபரப்பிக்கொண்டு-சுழித்து சுழிகளையுடையதாய் உராய்உராய்ந்து கொடிபுனைந்தகுகன்கழறூழ்ந்து, வெற்றிக்கொடிதரித்த முருகக்கடவு ளினடிகளைவணங்கி-பூங்கொடி-மலர்க்கொடிகளும்-புல்-புற்களும்-னை ந்த தன்றுலேசிதைந்த-குறிஞ்சி-மலைச்சார்பை-கடந்து-கடந்துசென் றது-எ-று பல்புலிமிமாம் அவ்வாறென்றும் எழுவாய்வருவித்துக்கொள்க

வீயும்வேங்கையு மத்தியுமேதகு
வீயும்வேங்கையு மத்தியும்விழ்பலாக்
காயும்பாலையில் தைக்கபழங்கொடு
கூயும்பாலையில் வந்துகலந்ததே,

(இ-ள்) விரும்பப்படுவனவாகிய-வேங்கையும்-புலிகளும்-மந்தியுங்குரங்குகளும் மேதகுவிபுட-செம்பொற்பொருந்திய மலர்களும் வேங்கையும்-வேடர்களும் மந்திரம்-வன்மைகளும் விட்பலாக்காயும்-விருப்பப்பட்ட பலாக்காய்களும்-பால-தன்பக்கங்களில்-அயில்- கூருண்டு இற-கைக்-அறி-கைகளையுடைய கயமுமயானைகளும்- கொடி-கொன்றைகளும் கல்லிலாறபாலையிற்-பாலைநிலத்தில்-வந்துலர்ந்தது-வந்து கூடியது-எ-று. அயில்ஒலியெனப்பொருளாயினுமாம்.

தேருறுமாவணை ராச்சினவேடர்போய்த்
தேருமாறுமூட் டோடும்பாலையில்
வருமாதரியாரையு முக்கியான்
வருமாதரி தாவொடேறுதற்கே.

(இ-ள்) தேருமாறு தெரியும் வழியை- உணரா- அறியாத நிலமே டர்கொடுமையுடையவர்-கொக்கேருமாலையும் ஆறுமுமெ ன்னுமுதல்-உள்-உள்ளே-தேறல்-பருக்தலிதல்கூடாத- பாலையி ல்-பாலைநிலத்தில் வருமா-அருளுள்ளவர்களையும்- மாதரியாரையும்-ம களிரவரையும்-உந்திதன்னிக்கொண்டு-மான்-கலைமானை வருதும்- கட த்தலின்றமாதரிபத்திரகாளியின் தாவொடேறுதற்-தானேவணங்கி-உற் றது-பொருந்திற்று-எ-று.

இரவங்கோங்க மிருப்பையின் பூந்துணர்
இறவசோங்கவெரி யின்மினியெனப்
புறவிமேய்த்தகரம் விட்டுப்போய்ச்செழும்
புறவமெய்த்தது பூம்புனலானவே.

(இ-ள்) இரவங்கோங்கம்- அறுமிபகோங்கினுடையவும்- இருப்பையி ன்பூந்துணர் இருப்பையினுடையவும் பூங்கொத்துகள்-இற-கெடவு ம்-இரு-இருமின்கள்- அக்குழுங்க மெமெழவும்- எரி-நெருப்பு-மின்-மி னியென-மின்மினிபோற்றோன்றவும்-புறவமேய்த்த-புறக்களமேய்த் த கரம்விட்டுப்போய்நிலத்தைவிட்டுப்போய-செழும்-செழித்த-புறவம் முல்லைநிலத்தில் மெய்த்து-பொருந்தியபூம்புனலாம், அழகிய நீரையு டைய ஆறானது-எ-று.

ஆடுமாதரை யாவிடையாழநீர்
ஆடுமாதரை யானிடையோடவே
கோடிருந்தரிக் குலிக்கதுகொண்டுநவில்
கோடிருந்திக் குலிக்குணர்வாசியே.

(இ-ள்) ஆடும்-அசைதற்குரிய-மாதரையாவும்-ருத்தற்சொல்லப்படாத இடையாழ்ம் கல்லாழத்தையுடைய நீர்-நீரானது-ஆடும்- ஆடுகளும்

மா-பெரிய- கரையா- கறையைப் பகக்கறும்- விடை- ஏறுபவருடைய ஓர்-அந்நியொப்பாகியபடியாக-சொன்னதைவின்- கொன்றைமலர்களின்-கோபி களினகளை உருத்து- பறித்து- இந்திர- [illegible] கலைப்பு- அ ளை- பூங்கொத்துக்களைபு- [illegible] - கனைகளை குத்தி-மோதி- குத்தது- அழித்து-எ-று.

அண்டர்தோயலை வாரிமாசமுழி
அண்டர்தேயலை வாரி[illegible]
கொண்டலைத்தரிக ருங்குறத்திய[illegible]
கொண்டலைத்தரிக கொத்தருந்தனருகிய

இ-ள்- அண்டர்-ஆயராது- தோயலை- தயிரை-வாரி- கொள்ளைவிட்டு மாரமாயகத்தை- அழிந்து- அழித்து- அண்டர்- தேவர்கள், தோய ஏழ்காநின்ற-அலை- அலைகளையுடைய வாரிசிம்- கடலினைவன்மேன, ம-ல்போல்-சார்ந்துகூடி- அணி- அலங்கரிக்கப்பட்ட, கொண்டலை- மேகத்தை- தரிக்கும்- தரிக்கின்ற, குறுந்திவ- குருந்தமரத்தில், கொண்டு, ஆச்சிய மாடைகளைக்கொண்டு மான்களைக்கொண்டு அலைத்து- அலைசெய்து, அரிக்கு திருமாலுக்கு, ஒத்த- ஒத்தது, குடிலை- அவ்வாரானது-எ-று. ஒத்தெனபதுகடைக்குறைந்துநின்றது

உறவணங்குமராவுழக்கிவான்
உரவணங்குமராவுயொசித்தது
மறைவணங்குமரியைவணக்கலபோல்
மறைவணங்குமரியைவணங்கியே

இ-ள்-உற-மிகவும்-அணங்கும்-வருத்துகின்ற- அராவும்- பாம்பினையும்-உழக்கி- வருத்தி-வானுற-மேகாதவழு- வணங்கும்- வளைதிருக்கின்ற-மராவும்-மராமரங்களையும்- ஒசித்தது- ஒடித்தது-மறைவும் மறைதல் அன்பொருந்திய- மகமது-குமரியை பொற்றவையை வணங்கல்போல் முன்பாலையில்-வணங்கினைப்போல்-மறை-வேதத்திருமே வணங்கும்- வணங்கப்பட்ட- அரியை-திருமாலை-வளைகனி முலையில வணங்கி-எ-று.

ஆவியன்னபெடைகளுமன்றிலும்
தூவியன்னமுந் துன்னியநாரையும்
மேவியின்பமவிடாதகெடும்புனல
வாவிகுழுமருதப்புறுத்தே

இ-ள்- உயிரையொப்பான பெட்டைகளையுடைய [illegible] அன்றில்களும்-இறகையுடைய அன்னங்களும்-நெருங்கியிருக்கிற நாரைகளுமகூடிச்சந்தோஷம் விடாதிருப்பதான அந்த [illegible] சரயுநதி [illegible] திலசென்றது

வாழைபூகமகிழ்மருதமிலவி
தாழைதெங்குசண்பகருதாலம்
ஏழிலைப்பாலை [illegible]
சூழ்ந்தசோலைதொறுந்தூறுவ்வையே

இ-ள்- வாழைமரங்கள்-கமுகமரங்கள்- மகிழமரங்கள்- மருதமரங்கள்-[illegible]மரங்கள்- தென்னைமரங்கள்- பூக்களையுடைய சண்பகமரங்கள்- இலவமரங்கள்-குங்குமமரங்கள்- பலாமரங்கள்-புன்னைமரங்கள் ஆகிய இவைகள் நிறைந்துள்ளதாய்க் குளிர்ந்த சோலைகள் முழுதும் அழிந்தது அசதப்பிரயாசம்-எ-று.

பால்கடோறும்பரந்துசெறிந்தவக்
கால்கடோறுங்கலந்தகம்புனல்
சால்கடோய்மகிடம்புகலான்படச்
செல்கள்பாயுஞ்செழுந்தடம்புக்கதே

இ-ள்- அந்தமருதநிலத்திலிடங்களெல்லாம்பரவி அங்கங்கேசெறிந்திருந்த அந்தவாய்க்கால்களெல்லாம் கூடின வெள்ளமானது [illegible] எருமைகள் [illegible] செழுமையான தடாகங்களெல்லாம் பாய்ந்தது-எ-று.

வாவிசேரவிசப்பிதவெள்ளில்
தாவிநீள்வகனகாவபுடைதத்து
நீல்வண்டல்செறிந்துசெந்நெல்புனல்
பாவிநீள்வயலிற்பரந்ததே

இ-ள்- அப்படிக் குளங்களெல்லாம் நிரம்பிச்செய்து மதகுகளிலும் [illegible] அந்தச்செந்நெல் [illegible] வயல்களெல்லாம்பரந்தது-எ-று.

வரம்புடைத்துக்கரைக்குமிக்கவின்
குரம்புடைத்துக் குழூதழுக்கஞ்சரும்
கரும்புமிஞ்சியுமஞ்சளுங்கட்டழித்
தரமலைபபோக்குபடப்பையழித்ததே

இ-ள்- அந்தவயல்களின் வரம்புகளையுடைத்துக் கரையப்பண்ணி [illegible] குமுதமலர்களையும் தாமரைமலர்களையும் - கரும்புகளையும் - இஞ்சிகளையும் - மஞ்

சண்பகங்களையும்- கட்டுக்குலையப்பண்ணி வாழைமரங்கள் உயர்ந்துள்ளமந் தவிலத்தார்களையும் அந்தப்பிரவாகஜலம் அழித்தது-எ-று.

எரிசோவுடைத்தழித்தின்கனி
வாரிபொடிவளம்பயின்மள்ளர்தந்
சேரிசோவழித்துச்செழும்புனல்
பெரியாறுபரந்துபெருகிற்றே

இ-ள்- மின்றும்பெரிய குளங்களையெல்லாம் முழுதும் உடைத்து கலக்கித்து இனிதானபழவர்க்கங்களையும்வாரிக்கொண்டு சென்றுசோலை யிலேநின்ற உழவருடையசேரிமுழுதும் கெடுத்து அந்தப் பிரவாக ஜலமானது பெரிய ஆறாகப்பெருகியது-எ-று.

காடுதோறுமலிக்கதைப்புனல்
ஓடிமாரைகளுமொக்கறுத்துக்கரை
சாடுமோதையுந்தண்டலேவண்டுகள்
பாடுமோதையுமெக்குமாக்கவெ

இ-ள்- அப்படி ஆற்றுக்கோசையெல்லாம் பாய்ந்த தண்ணீர்ஜலமான து ஓடிநெருக்கரும்- பார்க்கவெரிதான கரைகளை உடைப்பதனா ம் சோலைகளிலே வண்டுகள் பாடுகிறசத்தமும் ஒக்கும்படியுமே-எ-று.

கள்ளலம்பெபவாயுங்களிமகிழ்
உள்ளலம்பெயுள்ளறும்கோண்டலே
புள்ளலம்பெபொய்கைக்கரையெலாம்
மள்ளர்வந்துநெருங்கிமலிந்தனர்

இ-ள்- கள் ஒழுகிறவாயும்- கள்ளைக்குடித்ததினாலேசந்தோஷம் உள் ளே அடக்காதிருக்கிறமனமும் வெளியாகப்பட்சிகள் சத்திக்கிற குளங் களெல்லாம் உழவர்கள் வந்து நெருங்கிக் கூடினார்கள்-எ-று.

கொட்டுவார்க்கிறுதிக்குவெப்புமண்
வெட்டுவார்சுமப்பார்மிதித்துக்கரை
கட்டுவார்வன்கடிப்பெடுத்துக்கிணை
தட்டுவார்குரவங்கொடுத்தார்ப்பவர்

இ-ள்- மண்வெட்டிகளைக் கொண்டு சந்தோஷமாய் வெட்டியுள்ள மண்ணை வெட்டுவார்கள் சிலர்- அந்த மண்ணைச் சுமப்பவர்கள் சிலர் காலாலே மிதித்துக்கரைகட்டுகிறவர்கள் சிலர்- வலிதான தோற்கடிப் பைக்கொண்டு அந்தமருதநிலப்பறையைக் கொட்டுகிறவர்கள்சிலர்- குரவைமரங்களைவெட்டிவெள்ளமுடைக்காமல் கரையைக் காப்பார் கள் சிலர்-எ-று.

முழுவெழும்படிபொய்கைநிறைத்தநீர்
செழுவெருண்டவன்னமிரிந்திட

பழுவப்புழுத்ததீப்பசுந்தேர்க்க
கழுவுமொக்குமுழுமொலியோங்குமே

இ-ள்- அப்பாதுச் சுர்க்கோலைத்துட்போமருதநிலப் பழையோனைபு ண்டாக வசர்சி, செழக்கின திரண்டுபிரகுகளிலுமகழல்காற்றுத்தோ லைப்பபோது பக்கங்களிலுள்ள அன்னங்கள் பறந்தோட பழையவர டப்புகளைப் புதுமைசம்பாகச் செய்து மருதைக்கூடாக்கலை ஏரிமேல பூட் டி உழவர்கள் எவ்விடத்திலும் உழுதியகத்தங்கள் மிகுந்திருக்குமவ யக்களெல்லாம்-எ-று.

வலம்புரித்திரளவால்வளைவெண்சலஞ்
சலம்பிளப்பத்தாளம்பிளப்பவுந்
பலம்பிளப்பப்பதுமம்பிளப்பமீன்
குலம்பிளப்பச்செழுஞ்செறுஞ்சாலெல்லாம்

இ-ள்- வலம்புரிச்சங்கினங்களும்- வெள்ளைச் சங்கினங்களும்- வெ ண்மையான சலஞ்சலங்களும் உடைபடவும்- அவைகளிலுள்ள முத் துக்களுடைபடவும் சிலோற்பலங்கள் பிளக்கவும்- தாமரைகளுடையவு ம்- மீன்கூட்டங்கள் கலக்கவும்- கலப்பையிலுள்ள கொழுவானது செல்கிற்கும் அவர்களுழுகிற நிலங்களிடமெல்லாம்-எ-று.

இரும்பொடிக்கவேலாடிக்கினறுகோல்
அரும்பெரடிப்பொடியாகவுரப்பிசின்
கரும்பொடித்துக்கடாவிறுந்தெங்களும்
பரம்படிப்பவர்பற்பலகோடியே

இ-ள்- இரும்பாலகிய ஒருமரத்திலே ஒருக்கார்ப்போவிளக்கிற வரிமேல பூட்டின எருதைக்கடாக்கலை அதட்டியோட்டுகிறகோலானது அரிதான அனகாளாக அடிக்கடி ஒடிப்பதால் கரும்பை ஒடித்துக் கோலாகக்கொண்டு அந்த எருதைக்கடாக்கலை அதட்டியோட்டி எவ்வி டத்திலும் பரம்படிப்பவர்களும் கணக்கில்லாதகோடிபேர்கள்-எ-று.

கரும்புங்காவிபுக்கஞ்சமுமாம்பலும்
அரும்புஞ்செம்புமலவுமரையும்
கரும்புகைந்தகரிமுகருஞ்செழு
பரம்புதோறும்படிந்தனெரிந்தவே

இ-ள்- கரும்புகளும்- நீலமலர்களும் தாமரைமலர்களும், செவ்வா ம்பல்மலர்களும், அந்தக்ஷேத்திரங்களிலே சேர்ந்தகளும், கண்டிக ளும்- ஆம்பல்களும், கத்தைகளும், சக்குகளும் அந்தச் செழுமையான பரம்புமரங்களிலெல்லாம் அழிந்துகிடக்கின-எ-று.

சாலெலாம் தாளத்திரள்ளமுன்னர்த்தந்
காலெலாங் கலைக்கூடிக்காக

மேலெலாம்பொழி வேழத்தின்சாறதன்
வாலெலாம்பல யாமலர்மன்றலே

இ-ள்- உழுகிற படைச்சா லெல்லாம் முத்துக் கூட்டங்கள் கிடக்கும் உழுகிறவர்களுடைய கால்களெல்லாம் தாமரைமலர்வாசமாயிருக்கும் கறுத்த எருமைக்கிடாக்களின் மேலெல்லாம் அவற்றை அடிக்கிற கரும்பின் சாறொழுகுவதாயிருக்கும் அந்த எருமைக் கடாக்களின் வால்களெல்லாம் பலவித மலர்வாசமாயிருக்கும்-எ-று

போரடித்தவிதி யவன்போன்றுழன்
றூரடித்தவ னூர்தியென்றெண்ணிபே
ரரடிப்பவிரு சிறையுங்கொடு
o மாரடித்திரியும் மடவன்னமே

இ-ள்- பொருதல்செய்த பிரமாவானவன் சிவனுக்கஞ்சுதல்போல திரிபுரத்தையெரித்த சிவனுடைய வாகனமென்றுதெரிந்து உழவர்கள்ஏரிலேபூட்டின எருதுகளை அடித்தோடும்போது இரண்டுசிறகுகளாலும் தமது மார்பிலேபட அடித்துப் பறந்தோடுவனவா யிருக்கும் இள அன்னங்கள்-எ-று அன்னங்கள் பயந்தோடுவனவற்றை நம்மை யூர்கிற பிரமனை வென்ற சிவன்வாகனம் எருதாகலாற்றங்களையும் வெல்லுமென்று கருதினதாகச் சொல்வது தற்குறிப்பு இங்குப் பொருதுதல் செய்தலென்பது சிவனுக்கு நிகராதலை-எ-று

நன்னுரைத்தநாண்மலர்த்தாதுறிஇப்
பன்னுரைத்தபகடின்பதக்குளம்
பென்னுரைப்பதிடமறலெங்கணும்
பொன்னுரைத்தநிறத்தகற்போன்றவே

இ-ள்- நல்ல நுரைகளையுடைய தடாகங்களிலே தினந்தோறும்பூத்த தாமரை மலர்களிலுள்ள பொன்னிறமான பராகப் பொடிகளை பொருந்தி யிருப்பதினாலே பற்களிலே நுரைகளையுடையஎருமாட்டுகளின் கால்களிலுள்ள குளம்புகளுக்கு யாதுநிகர் சொல்லத்தக்கது என்றால் அந்தக் குளம்புகள் முழுதும் இட மில்லாமல் எவ்விடத்திலும் பொன்னையுரைத்த நிறத்தோடு கூடியிருக்கிற உரை கல்லை ஒத்திருக்கின்றன.

தொக்கவேதியர்க்குந் துறவோர்கட்கும்
தக்கதானந் தருபவர்போலவே
பக்கநோக்கிப் பலிப்பறிந்தெங்கணும்
மிக்கசெந்நெல்லும் வெண்ணெலும்வித்தினார்

o மார்பு-மார்என விகாரமாயிற்று

இ-ள்- ஒருபோசனமுடைய பிராமணர்களுக்கும் சந்நியாசிகளுக்குந் தகுதியான தானத்தை யபேக்ஷிக்கிறவர்போல நாலுபக்கங்களிலும் பார்த்து அவ்விளைவுகள் விளைவாகிற காலபக்குவந்தெரிந்து வண்டிகளிலும் பக்குவமான செந்நெற்களும் வெண்ணெற்களும் விளைந்தன-எ-று.

இறவுபாய விருங்கதலிக்கனி
மறவுபாய்வருக் கைக்கனிமாங்கனி
பிறவும்வாய்விண்டு பீறிப்பொழிந்திடு
நறவுபாய்ந்திட நாறுவளர்ந்தவே

இ-ள்- தென்கூண்டிலுள்ள தென்வழிந்துபாய்தலினாலும்பெருத்த வாழைக்கனி தேனொழுகின்ற பலாக்கனி மாங்கனி முதலான மற்றைக்கனிகளும் வாய்வெடித்துடைந்து சிந்துகின்ற தேன்கள் பாய்தலினாலும் அந்தநாற்றுகள் வளர்ந்தன-எ-று. மறலிகள்

சேம்புதோன்றுவந் தெழுந்தடத்திக்கரைத்
தூம்புதோன்றிய சோர்புனற்றோன்றுவ
காம்புதோன்றுவ கைப்புழைக்கட்பெரும்
பாம்புதோன்றுவ போன்றனபாலெலாம்

இ-ள்- சேம்புகள் முளைத்திருக்கிற செட்டியான குளக்கரையிலே யிருக்கின்ற மதகின்றுவாரம் வழியாய்வருகிற நீர்தோன்றுவதெப்படி யிருக்கிறதென்றால் மூங்கில்கள் முளைத்திருக்கின்ற மலையினின்று கையிலிருந்து பெரும்பாம்பு வருகிறதுபோ லிருக்கின்றன வந்தவிடங்களும்-எ-று.

இரவைவென்ற விருண்டசெழுங்குழல்
அரவைவென்ற வகலணியல்குல்வெங்
கரவைவென்ற கயல்கட்கடைசியர்
குரலைவென்ற குலைகடலார்ப்பையே

இ-ள்- இருளைச்செயிப்பதான இருண்டிருக்கிறசெழுமையாகியகூந்தலையும் சர்ப்பப்படத்தை வென்றதான அகன்ற அலங்காரமான அல்குலையுங்கொண்ட அக்குலத்து வெவ்விதான கரவைச் செயிப்பதான கயல்போலுங் கண்களையுமுடைய உழத்தியர்களுடைய குரலோசைகள் ஒலிக்கின்ற கடலின்முழக்கத்தைவென்றது.
இருண்டசெழுங்குழல் இரவைவென்றன அகலணியல்குல் அரவைவென்றன கயற்கண் வெங்கரவைவென்றன கடைசியர் குரலைக்குலைகடலார்ப்பைவென்றன என்க

செல்லணைந்திருந் தீங்கதிரென்றுகை
மல்லணைந்தெருத் தாய்வாகாவியின்

அவ்வணம்விழி வாயரக்காம்பன்மற்
றெவ்வணங்களை கொய்குவரேழைமார்

இ-ள்- சிவந்தநிறமாக விளங்குகின்ற சிற்றடியையும் மிருதுவான முகத்தையும் கையையும் நிறத்தாலே செழுமையான தாமரைமலர்கள் ஒத்திருக்கின்றன நீலமலர்களினந்த நிறமானவை கண்களையொத்திருக்கின்றன வாயைசெவ்வாம்பல்களொத்திருக்கின்றன இப்படியிருக்கிறதினாலே எப்படிக்களையெடுப்பார்கள் அந்தஉழத்தியர்கள் மயங்கி நிற்கிறார்கள் என்க மற்று அசை-எ-று

வயலின்மென்களை மாய்க்குங்கடைசியர்
கயனெடுங்கண்சலி லத்திற்றோன்றனால்
மயல்விளைந்து மயங்கிடுமள்ளர்தாம்
கயல்களென்றய லிற்பறிகட்டினார்

இ-ள்- அந்தவயல்களிலே மெல்லிதான களைகளைப்பிடுங்குகிறஉழத்திகளுடைய கயல்போலு நெடிய கண்கள் நீரிலே தோன்றுகிறதினாலே ஆசையுண்டாகிமயங்கின உழவர்கள் அந்தக்கண்களினிழல்களை மீன்களென்றுநினைத்துஅவ்வோரிடங்களிலும்பறிகட்டினார்கள்

சேலிருப்புனற் கேள்வனைச்சேர்ந்துபின்
சூலிருந்துதுவண்டலைந் தின்றுமெய்ப்
பாலிருந்து பசந்துபழுத்தசெந்
சாலிகற்பினர் போற்றலைசாய்தலே

இ-ள்- மீன்களையுடைய பெரிதானஜலமாகிய நாயகனைக்கூடிப் பின்பு கர்ப்பங்கொண்டு துவளுதலாய் அசைந்து நெல்லாகியகருவைப்பெற்றுப் பாலுங்கொண்டு பசியநிறத்தை யுடையவளாய்ப் பழுத்து விளைந்த செநெற்கள் பதிவிரதைகளைப் போற் றலைவணங்கின

தோட்டுவார்நறை சூழவயல்சோர்வறிஇப்
பூட்டுவார்கதிப் புள்ளங்கள்சூற்சங்கில்
இட்டுவார்மலர்ச் செந்திருக்காணமுன்
நீட்டுவாரென நெல்லரிவார்களே

இ-ள்- பூவிதழ்களினின்றும்ஒழுகின்றதேன்பாய்வதானவயல்களிலே மள்ளர்களிளைப்பில்லாமல் கைப்பிடியிலே கோத்திருக்கின்ற- நீண்ட ஒளியையுடைய அரிவாள்களைப் கர்ப்பங்கொண்டிருக்கிற சங்குகளிலே இட்டிக்கொண்டவர்களாய் தாமரைமலர்களிலுள்ள லட்சுமி தேவிபார்க்க அவளுக்குமுன்னே வளையலாக அணிந்துகொள்ளச்சங்குகளிலே இட்டிக் கொண்டவர்களாய் தாமரைமலர்களிலுள்ள லட்சுமி தேவிபார்க்க அவளுக்கு முன்னே வளையலாக அணிந்து கொள்ளச் சங்குகளை அறித்துக் கைகளைநீட்டிக் கொடுக்கிறவர்கள் போல் விளைந்தநெற்களை அறுப்பார்கள்-எ-று,

சேற்றுவார்கதிர் சேரக்கொணர்ந்துவைத்
தாற்றுவார்களத் தாற்றினடைந்துபோர்
ஏற்றுவார்பக டேற்றிமிதித்தநெல்
தூற்றுவார்குவிப் பார்சுமப்பார்களே

இ-ள்- சேற்றிலும் நீண்டுகிடக்கிற நெற்கதிர்களை அப்படியரிந்து ஒருசேரக்கொண்டுவந்து வைத்துத்தலைமேற்சுமப்பார்கள் பின்புநெற்களத்துக்கு வழியாகவந்து போராக உயர்த்துவார்கள் பின்பு மாடுகளைமேலேறவிட்டு மிதிப்பார்கள் அப்படி மிதித்துதிர்ந்த நெற்களைப் பதர்போகக் காற்றிலே தூற்றுவார்கள் அப்படித் தூற்றினநெல்லைக் குவிப்பார்கள் பின்பு சுமந்துகொண்டுபோவார்கள்-எ-று

பகடுமட்டறப் பூட்டிப்படுத்தநெல்
சகடுமுட்டவிட் டூர்ந்துதத்தங்குல
மகடுமக்களுமவை குறும்வாழ்மனை
முகடுமுட்டநிறைப்ப காண்முற்றுமே

இ-ள்- எருதுகளை அளவில்லாமற்பூட்டிமிதிப்பித்தநெல்லைப்பண்டிகளிலே நிரப்ப ஏற்றிப்பண்டிகளை ஓட்டிக்கொண்டுபோய் தங்கள் தங்கள்குலத்துப் பெண்டாட்டியும் பிள்ளைகளு மிருக்கிற வாழ்வையுடைய வீடுகளிலே அந்தவீடுகளின் முகடுவரையினும்முட்டும்படி நிரப்புவார்கள் வீடுமுழுதும்-எ-று.

நாடுதோறு மிவ்வாறுநடப்பன
காடுதோறுங் களிமயிலாடுவ
வீடுதோறுந் திருவிளையாடுவ
கூடுதோறுங் கருங்குயில்கூவவே

இ-ள்- அந்தக்கோசலநாடு முழுதும் இப்படி நடக்கின்றன காடுகளெல்லாம் களிப்பையுடைய மயில்களாடுகின்றன அவர்கள் வீடுகளெல்லாம் லட்சுமி சந்தோஷமாய் வாசஞ்செய்வாள் மரத்திலே கட்டியிருக்கிற கூடுகளெல்லாம் இருந்துகொண்டு கரியகுயில்கள் கூவுதல் செய்ய-எ-று

பெடைகிடப்பவும் பிள்ளைகிடப்பவும்
இடைகிடப்ப விளவனச்சேவல்கள்
மடைகிடக்கும் வளைமுத்தையண்டமென்
றடைகிடப்பவன் வன்னப்பெடைகளே

இ-ள்- பெடையன்னங்க ளொரு புறத்திலே கிடக்கவும் குஞ்சுகளொருபுறத்திலே கிடைக்கவும்நடுவே கிடக்கின்றன இளமையான ஆணன்னங்கள் நீர்பாய்கிற மடையிலே கிடக்கிறசங்கினது முத்துகளை தங்கள் முட்டையென்று நினைத்து அடை கின்றன பெட்டையன்னங்கள்-எ-று.

சாயெலாம்புருவச் செழுஞ்சாலியின்
காயெலாந்தின்று கன்னற்படப்பையுள்
மேயலாலின மேதிகளின்கடை
வாயெலாமுத்து யாலைகளுலுமே

இ-ள்- சோரைகள்போல் முழுதும் விளைந்துகிடக்கிற செழுமையான நெல்லுப்பழங்களை யெல்லாந் தின்று கரும்புத்தோட்டங்களிலேபுகுந்து மேய்கிறதினாலே இளமையானஎருமைமாடுகளின்கடைவாயெல்லாம் முத்துக்கோவைகள் தொங்கும்-எ-று.

மட்டிலாமட வார்குடைவாவிவிட்
டெட்டியன்ன மிரிந்துபறக்கவாய்
விட்டிரங்கிடு மார்ப்பினைமென்மலர்
தொட்டிலாட்டித் திரைகடுயிற்றுமால்

இ-ள்- அளவில்லாத பெண்கள் நீராடுகிற குளங்களைவிட்டுத் தூர அன்னங்களோடிப் பறந்துபோக அப்போது வாயைத்திறந்துகத்துகிற குஞ்சுகளை அந்த மிருதுவான தாமரைமலர்களையே தொட்டிலாகக் கொண்டு அசைத்து அலைகள் தூங்கச்செய்யும்-எ-று

பள்ளமேற்பன சக்கனியூறலவ்
வெள்ளமேற்கம லத்தாலேமேல்விழ
உள்ளமேற்கமு முண்டவவாவினுல்
வள்ளமேற்பன போல்வனவாவியே

இ-ள்- மரத்தடியாகிய பள்ளங்களிலே கிடக்கிறபலாப் பழங்களினதுதேனூறலானது அங்குள்ள குளத்திநீர்மேல் மலர்ந்திருக்கிற தாமரைமலரின்மேலே பாய்வதெப்படியிருக்கிறதென்றால்மனந்திருத்தியாக முன்னேகுடித்த ஆசையினாலே தொன்னைகளை யேந்துவனபோலிருக்கின்றன குளங்கள்-எ-று.

பூதகத்தின்செழுப் பாளைப்புன்கவி
நாகரத்தின்பட மென்றுநல்கியே
பாகத்திற்றின்று விட்டபலாக்கனி
மேகத்திற்புறை வெங்கதிரொக்குமே

இ-ள்- கமுகமரத்தினது செழுமையான பாளையைப் புத்தியீனமான குரங்குகண்டு பாம்பின்படமென்று பயந்து ரசத்துடனேதின்றுகொண்டிருந்துவிட்ட பலாப்பழமானது மேகத்திலேமறைகிற சூரியனை ஒத்திருக்கின்றது-எ-று,

சேறுபாய்மலர்த் தேனொடுதிங்கனி
ஊறுபாய்வவு மொண்கருப்பட்டதின்

சாறுபாய்வவுந் தத்தமிற்கூடியே
ஆறுபாய்வன வங்கங்கணந்தமே

இ-ள்- நிலத்திலே சேருண்டாக ஒழுகுகிற பூந்தேனுடனே இனிப்பான பழங்களிலூறுகிற றேன்பாய்வனவும் அழகிதான கரும்பையாட்டின இனியசாறுகள் பாய்வனவும் தம்மிலொன்றாகக்கூடி ஆறாகப்பாய்வன அந்தஅந்த இடங்களெல்லாம் அநேகமுண்டு-எ-று

மன்றறங்குமலர் களின்மேய்ந்தினந்
தென்றல்வந்தவன் சிந்தியதாதுகள்
குன்றில்வீழ்பொன் மழைக்குழுவென்னவே
முன்றிலும்மணி மாடமுமொய்க்குமே

இ-ள்- பரிமளந்தங்கின மலர்களிலே பரவி இளந்தென்றலானதுவந்து அங்கே உதிர்ந்தபராகப் பொடிகள மலைகளின்மேலே பெய்கிற பொன்மழைக் கூட்டம்போல் வாசல்களிலும் அழகிய வீடுகளின்மேலும் நிரம்புப்படியும்-எ-று

உகலரும்புனத் திற்கிளியோச்சுவார்
அகல்வண்கொண் டெறியுமராமணி
பகல்விழுங்கண யொப்பனபாரெலாம்
குகனிருந்தசெழுந் தண்குறிஞ்சியே

இ-ள்- கெடுதலில்லாத தினைப்புனத்திலே கிளிகளை ஓட்டுகிறவர்கள் அகன்ற கவணியிலேவைத்து வீசுகிறநாகரத்தனங்கள் ஒவ்வொருசூரியன் கீழேவிழுகிற திரட்சியை யொத்திருக்கின்றன நிலங்களிலெங்கும் இது எங்கேயென்றால் முருகக்கடவுள் விளங்குகின்ற செழுமையான குளிர்ச்சியையுடைய குறிஞ்சிநிலத்தில்-எ-று

நெடியநெய்தலி னித்திலவண்டலில்
கொடியகாதலிற் கூடலிழைத்திடும்
கடியநீலக் கருங்கணுளைச்சியர்
மடியிலேறிவளைகண்முத் தீனுமே

இ-ள்- விசாலமாயிருக்கிற நெய்தனிலத்திலே முத்துகளோதுங்கிக்கிடக்கிற சேற்றுநிலத்திலிருந்து கொடுமையானகாமத்தினாலேசுழியிட்டுக் கொண்டிருக்கிற பரிமளத்தைக்கொண்டநீலமலர்போலுங் கரியகண்களையுடைய வலைச்சிகள் மடிமேலேறிச் சங்குகள் முகத்தைப்பெறும்-எ-று.

களையளங்குங் கருங்கணுளைச்சியர்
புலையளக்கு நறைக்குப்பொருந்தியே
விலையளப்பன வெண்முத்தயேயற
னிலையளக்கும் பரதனர்நெய்தலே

இ-ள்- காமநூலே அளவுசெய்து பார்க்கிற கரிய கண்களையுடைய வலச்சிகள் இழிகுணத்துடனே அளவுசெய்துவிற்கிற கள்ளுக்குச்சம்மதமாகவில்லைக்கு அளவுசெய்துகொடுப்பவை வெள்ளியமுத்துக்களே தருமநிலையை அளவுசெய்திருக்கிற வலையர்களுடைய நெய்தனிலத்திலேஎ-று. நெய்தல்-கடற்சாற்பு

நிலம்விளக்கிடு நிலத்திலநீலவுற்
பலம்விளங்கிடும் பைம்புனல்பண்பினன்
னலம்விளங்கிடு நல்லவர்வாய்மொழி
குளம்விளங்கிடு கோசலநாடரோ

இ-ள்- நிலங்களெல்லாம் பிரகாசித்துக் கொண்டிடக்கும் முத்துகள்நீலோற் பலமலர்கள் விளங்கிக்கொண்டிருக்கும் பசுமையாணஜலங்களிலே நல்லகுணத்தினையுடைய நன்மார்க்கங்கள்விளங்குவதாயிருக்கும் நல்லோர்களுடைய வாயசொற்களிலே எல்லா நாட்டுக்கும் தானேசிரேஷ்டமாக விளங்குவதான கோசலநாட்டில்-எ-று.

நாட்டுச்சிறப்பு-முற்றிற்று-ஆ௨௩

நகரச்சிறப்பு

மகரதோரண வாயிலுநான்கிலும்
சிகரமாமதிலுஞ் செறிபோசமு
சகரர்வான்புகழ் சாற்றுமயோத்திமா
நகரமேன்மை சிறிதுநடத்துவாம்

இ-ள்- மகரதோரணங்கள் கட்டியிருக்கிற கோட்டைவாசலும் மதிலுறுப்புகளும் அவ்வுறுப்புகளையுடைய பெரியமதிலுஞ்சூழும் மதில்க்கூழ்ந்த பெரியஅழகான துஇதுவேசகரர்தோண்டியகடலென்றுசொல்ல அந்தச்சகரர்கள் பெரியபுகழைப் பிரசத்தப்படுத்துவதான அயோத்திமா நகரத்தினது மேப்பாட்டை இனி எம்மாலே கூடியவளவு கொஞ்சம்சொல்லக கடவோம்-எ-று.

மாடமாளிகையும்மடப்பள்ளியும்
கூடகோபுரமும் பெருககோயிலும்
ஆரடங்குமணியறச்சாலேயும்
பாடலங்கரிவைகியபந்தியும்

இ-ள்- வீடுகளும் உப்பரிகைகளும் மடைப்பள்ளிகளுங்கூடங்களுங்மகாபுரங்களும்பெரிய அரண்மனைகளும் நடனப்பண்ணுகிற நாடகசாலேகளும் அழகிதான தருமசத்திரங் களும் குதிரைகள் யானைகள் நிற்கிற இடங்களும்மிகவும்-எ-று

மாரனன்னவர் மாமயிலன்னவர்
நாரடர்ந்த பயோதரங்களும்
நேர்டர்ந்துநெருக்கலின்வீழ்ந்தபொன்
னாரமின்னுலவா வணவீதியே

இ-ள் மன்மதனை ஒத்த புருஷர்களும் பெரியமயிலைப்போத்த சாயலையுடைய பெண்களும் ஆகிய இவர்களுடைய மாலைகளைநெருங்கியதோள்களும் கொங்கைகளும் நேரேபொருந்தி நெருங்குதலினாலே விழ்ந்தபொன்னாரம் முத்தாரம்விளங்கிக்கிடக்கின்றனவாயிருக்கும் கடைவீதிகளெல்லாம்-எ-று

அன்புதங்குமனத்தரிச்சந்திரன்
தன்புகழ்க்கொழுந்தோங்கித்தழைத்ததுபோல்
பொன்புனைகுழலியார்புலர்த்துமகி
லின்புகைச்சென்றேறுமுகடெங்குமே

இ-ள்- அன்புதங்கிய மனத்தையுடைய அரிச்சந்திர மகாராசனுடைய புகழானது கொழுந்துவிட்டு வளர்ந்து தழைக்கிறதுபோல்பொன்னிறமான தோலைக்கொண்ட தனங்களையுடைய பெண்கள் கூந்தலைச்சாயச் செய்கிறதற்கு மூட்டுகிற அகிற்கட்டைகளின்புகையானதுபோய்ப்படரும்ஆகாயமுகடெல்லாம்-எ-று அன்பு-தெய்வபக்தி

சோலையார்ப்பன சூழிகொடிக்கேதனச்
சேலையார்ப்பன தேரொலியார்ப்பன
வாலையார்க்குநம் வாம்பரியார்ப்பன
ஆனையார்ப்பன வாவணவீதியே

இ-ள்- மேகங்கள் முழங்குவது போலவுஞ்சோலைகளசைந்தார்ப்பொலவுஞ் சேனைகளும் சத்திக்கின்றன தேர்களின் ஒலியும் முழங்குகின்றன ஆகாயத்தைப்பாய்ச்செல்வதாய்த்தாவுகின்றகுதிரைகளும் ஆரவாரிக்கின்றயானைகளும் கிளிக்கின்றன அந்தக்கடைவீதிகளில்-எ-

வேதவோதை வியன்கலையோதையின்
கீதவோதை கிளியோதையயலவர்
பாதவோதை பரிபுரத்தோதையாழ்
நாதவோதை கடப்பனநாளுமே

இ-ள்- வேதகோஷங்களும் பெரிதானகலைஞானவொலியும் இனிதான கீதங்களின்ஒலியும் முழவின் குழல்களின் ஒலியும் ஆடுகின்றவர்களுடையகாலிலுள்ள சதங்கைகளின்ஒலியும்வீணையினுண்டாகுகின்ற கானவொலியும் உண்டாகி மேலோங்கிக் கடக்கின்றனவீதிகளில்- எ-று.

கிள்ளைபாடுவ கீதங்கள்சாரிகைப்
பிள்ளைபாடுவ வேதப்பிராமணர்
கொள்ளைபாடுவ கின்னிசைக்கோதையர்
வள்ளைபாடுவர் மன்னவன்வண்மையே

இ-ள்- கிளிகள்பாடுகின்றன பாட்டுகளை நாகணவாய்ப்புட்கள் மழலைச்சொற்களைப்போற் பேசுகின்றன வேதங்களைப்பிராமணருடைய கூட்டங்கள் பாடுவார்கள் இனிதான ராகங்களைப் பெண்கள் பாடுவார்கள் மங்கலவள்ளையென்னும் பிரபந்தஞ்செய்து பாடுவார்கள் அந்த அரிச்சந்திர மகாராசனுடைய உதாரகுணங்களை-எ-று

கூடலோங்குவ கோதையர்யாவர்க்கும்
ஊடலோங்குவ தவ்வையொருத்திக்கும்
ஆடலோங்குவ கன்னலுளார்க்கன்றும்
பாடலோங்குவ கீத்துமப்பாணர்க்கே

இ-ள்- காமக்கூடலிலே அதிகமாயிருக்கின்றது பெண்களெல்லாருக்கும் அகத்திலே சேராதிருத்தலாகிய பிணக்கு அதிகமாயிருக்கும் மூதேவி ஒருத்திக்குமாத்திரம் அவ்விடத்திலே அதிகமாயிருக்கும் ஆடல்களுக்கு அந்தநகரிலேயும் பாடுகிற தொழிலே அதிசயமாயிருக்கும் எப்போதும்பாணர்களுக்கு-எ-று

பொற்பராகக் கர்ப்பூரபராகச்செம்
பற்பராக பயோதரவேசையர்
விற்பராக பிராவிஷ்டியன்முதல்
கற்பராகம நாடககானமே

இ-ள்- பொன்னிறமான கந்தப்பொடிகளும் பச்சைக்கர்ப்பூரத்தூளிகளும் சிவந்த பதுமராகமணிப்பாளிகளும் கொண்டகொங்கைகளையுடைய வேசையர்கள் விற்கிறவிற்பார்கள் தங்களுடைய இராகதாலமுதலாம் விசயங்களைக்கற்று முன்னின் நடனங் கொள்ளுவார்கள் இராகங்களும் அதனுடன் கூடிய நாடக பாடல்களும்-எ-று

எம்மினண்ணி யிருந்தனயாவையும்
வம்மினென்ன வழைப்பனமானவே
விம்மிநின்ற வியன்கொடிபெண்களும்
தம்மினின்று தடக்கித்தயங்குமே

இ-ள் எங்களிடத்திலே சேர்ந்திருக்கின்றன எல்லாப்பொருள்களும் ஆகையாலவற்றைக் கொள்ளவாருங்களென்று அழைக்கிறது போலவே மிகுந்து நிற்கின்ற கொடியாகையால் பெண்களும் அந்த அயோத்திமாநகரத்தில் தங்கள் மனங்களிலே யசைந்து துவண்டுவிளங்கும்-எ-று.

முன்னைமாதவத் தான்முழுதுக்குநல்
என்னையாமரிச் சந்திரன் றன்னையா
லென்னமேல்வளர்ந் திண்டியபாற்கட
றன்னையொத்த தவளகொடிகளே

இ-ள்- பூருவத்திலே செய்த பெரிய தவத்தினாலே எல்லாப் பொருள்களுக்கும் நல்லதா யிருக்கிற அரிச்சந்திர மகாராஜனை விஷ்ணுவென்று நினைத்துமேலே சூழ்ந்துபரவி பாற்கடலை யொப்பாயிருக்கின்றன வெள்ளைக்கொடிகள்-எ-று.

திருகநோக்கியச் சித்திரப்பாவையை
அருகநோக்கிய வன்பரைவல்லியற்
உருகநோக்கிய வூடிலினுக்குயிர்
பருகநோக்குஞ் சமனைப்பழிக்குமே

இ-ள்- அந்தவீதிகளிலுள்ள பெண்கள் மாறுபாடாகப் பார்த்து அங்கேயெழுதி யிருக்கிற சித்திரபிரதுமைகளைத் தங்களையணைக்கநோக்குவதுபோலலைக்கப் பார்க்கிற நாயகர்களைக் கொடிபோலும் இடைகளையுடையவராய் மனமுருகப்பார்க்கின்ற பிணங்குதலையுடையபார்வையானது உயிரைக்கொள்ளப்பகர்ந்திருக்கின்ற யமனைப்பழிக்கும்-எ-று.

முரணெடுங்குலி வத்தவன்முண்டபோர்க்
கரணமக்கரிச் சந்திரனுமெனச்
சரணடைந்த தடவரைவிட்டம்போல்
திரணெடும்பரித் தேரணிநிற்குமே

இ-ள்- மாறுபாட்டையுடைய நீண்ட வச்சிராயுதத்தையுடைய இந்திரன் மூளுவதான சண்டைக்குவர ரட்சிக்கிறவன் நமக்கு அரிச்சந்திரமகாராசனே ஆமென்று அடைக்கலமென்றுவந்திருக்கிறபெரியமலைக்கூட்டம்போல் திரட்சியாய் நீண்டகுதிரைகள் கட்டிவதான தேரின் வரிசைகள் நிற்கும்-எ-று,

ஏமசாலையு மின்னிசைச்சாலையும்
ஓமசாலை யுடனறச்சாலையும்
தூமசாலையுந் தோகையர்மாதவக்
காமசாலையு மெகணக்கில்லவே

இ-ள்- திரவியங்களிருக்கிற சாலைகளும் இனிதான இசைநூல்கற்கிறசாலைகளும் ஓமம்பண்ணுகிற சாலைகளுடனே தருமசத்திரச்சாலைகளும்புகைகள் கிளருகிற சமையற்சாலைகளும் பெண்களுடையமிகப் பெரிதான காமானுபவம் பண்ணுகின்ற சாலைகளும் அந்தநகரிலே அளவில்லை-எ-று.

அறமிருக்கு மனத்திலனைவர்க்கும்
திறமிருக்கும் புயாதிற்செழுஞ்சுடர்
நிறமிருக்கும் படையின்கணீக்கமின்
மறமிருக்கு மடந்தையர்கண்ணினே

இ-ள்- தருமமே நிலைகொண்டிருக்கும் மனத்திலே எல்லோருக்கும் சாமார்த்தியமே நிலைகொண்டிருக்கும் தோள்களிலே செழுமையானசூரிய காந்தியே நிலைகொண்டிருக்கும் ஆயுதங்களினிடத்திலே நீங்குதலில்லாத பிணங்குங் குணமே குடிகொண்டிருக்கும் பெண்களுடைய கண்களிலே-எ-று.

தொட்டுமன்னன் சடாமுடிசூடிய
மட்டுமேக்கமவ் வாணகர்க்கில்லையூண்
அட்டுண்பாரன்றி யாதுலரின்மையால்
இட்டுணக்குறை யென்பதோரேக்கமே

இ-ள்- அரசாளுகையைத் தொடங்கி அந்த அரிச்சந்திரமகாராஜன் பிரகாசங்கொண்ட திருமுடிசூடிக் கொண்டிருக்குமளவும் ஏக்கமென்பது அந்த ஒளியால் மிக்கப்பட்டணத்துக்கு இல்லை சமையல் செய்து சாப்பிடுகிறவர்களே யல்லது பிச்சைக்குவருகிறவர்களில்லாமையாலே பிச்சையிட்டு சாப்பிடாத குறையே யுண்டென்பதான இந்த ஒருஏக்கமாத்திரம் அந்தப்பட்டணத்திலுண்டு-எ-று.

சுற்றிடுங்கொலைக் கண்கண்டுகாமுகர்
முற்றிடும்பையு மோட்டிளங்கொங்கையால்
இற்றிடும்மருங் கென்றுமிடும்பையும்
மற்றிடும்பையம் மண்டலத்தில்லையால்

இ-ள்- எப்போதும் சுற்றுள்ள கொலைத்தொழிலுடைய பெண்கள் கண்களைக்கண்டு காமுகரானபுருஷர்கள் கிலேசங்கொள்ளுகிற துன்பமும் உயர்ந்த இளமைப் பருவத்தையுடைய கொங்கை யான கனத்தாலே ஒடிந்துபோகும் இடையென்பதான துன்பமுமே அந்தநகரிலே உண்டுவேறுதுன்பம் அந்த நகரினிடத்திலே இல்லை

இபமருப்பெனக் கொங்கைசுமந்திடை
தபமுறிந்திடுந் தக்கதன்றிதென
உபயபாதத்திற் கொண்பொற்சிலம்பிடும்
அபயமன்றி யபயமற்றில்லையே

இ-ள்- யானைக்கொம்புபோல் வளவான கொங்கைகளைத்தாங்கி இடையானது கெடுதலாக ஒடிந்துபோகும் தகுதியானதல்லஇதுவென்று இரண்டுகால்களுக்கும் அழகிதான பொன்னாலாகியசிலம்புகளிட்

ஒலிப்பதான அபயக்குரலே யல்லாமல் அபயக்குரல் வேறில்லை-எ-று அபயக்குரல் பயமில்லாமையை வேண்டுங்குரல்

நிறையுந்தாமரை நீட்டத்தினற்புற
சிறையுமன்றிச் சிறைபிறிதில்லையால்
பிறையுமென்றுமைப் பேதையர்சிற்றிடைக்
குறையுமன்றிக் குறைபிறிதில்லையே

இ-ள்- நிறையுதாய் தாமரைமலர்களின் நீட்சியினையுடைய நல்ல நீர் குளங்கள் முதலானவைகளுக்குச் சிறைசெய்வதேயன்றி சிறைசெய்வது வேறில்லை சந்திரப்பிறையும் மெல்லியதனங்களுடைய பெண்களினுடைய சிறிய இடைகளும் குறையுமே யல்லது குறைவுவேறில்லை எ-று, சிறைசெய்தல் காவல்செய்தல்.

பொருந்திமானும் புலியும்புனலுடன்
அருந்திவாழு மொருதுறையல்லதேல்
பருந்தும்பைங் கிளியும்மொருபஞ்சரத்
திருந்துவாழு மிரவும்பகலுமே

இ-ள்- கூடி மானும்புலியும் தண்ணீரைச் சேர்ந்துகுடித்து வாழ்வதாயிருக்கும் ஒருதுறையிலேயும் உடனேபருந்தும்பச்சைக்கிளியும் ஒருகூட்டிலே கூடியிருந்து வாழ்வதாயிருக்கும் இராத்திரியும் பகலும்-எ-று.

பொருளும்வேத புராணமும்புந்தியில்
தெருளுந்தானதி யாகமும்யாகமும்
மருளின்மாதவமும் வளமும்முயிர்க்
கருளுந்தோன்றுற மந்நகரத்திலே

இ-ள்- அர்த்தங்கொடுத்தலும் வேதபுராணங்கள் பாராயணஞ் செய்தலும் அதனுடைய புத்தியிலே தெளிவுடைத்தாயிருத்தலும் தானங் கொடுத்தலும் இயாகஞ்செய்தலும் யாகங்கள் பண்ணுதலும்மயக்க மில்லாத பெரியதவங்கள் செய்தலும் சம்பத்துக்கொண்டிருத்தலு ம்சீவகாருண்ய முண்டாயிருத்தலுமே விளங்கிக் கொண்டிருக்கும் அந்தநகரத்திலே-எ-று.

வேறு.

அத்திருநகர்க்குளீரையாயிரமணித்தூண்
பத்திசெறியத்தொகையை பைம்பொனுறுகோயிற்
சித்திரமணித்தவிசின் முத்தமணிசெழும்பொற்
சத்திரநிழற்ற வரிச்சந்திரனிருந்தான்

இ-ள்- அப்படிப்பட்ட திருநகரத்திலே வரிசையாக ஆயிரம்ரத்ந தூண்களுள்ள மண்டபவரிசைகளும்அந்த ஆயிரமாற்றுப்பசும்பொ

ன்னாலே செய்திருக்கிற அரண்மனையுமாக அமைந் திருப்பதிலே அநேகசித்திர விசித்திரங்களாக ரத்நங்கள் பதித்திருக்கிற சிங்காசனத்தின்மேலே முத்துகளாலே அலங்கரித்திருக்கிற செழுமையானபொன்மயமான பூச்சக்கரக்குடை நிழல் செய்ய அதின்கீழே அரிச்சந்திர மகாராசன் கொலுவிருந்தான்-எ-று

என்னதிஃதென்னதிஃ தென்றிருகைகூப்பி
மன்னவரிமந்திரிகள் வந்திவிதழைப்பத்
துன்றுமறையோர்கள்பலர் சோதிடமுரைப்ப
மன்றுகவிவாணர் புகழ்மங்கலமியப்ப

இ-ள்- என்னதிஃதிவ்வளவு என்னதிஃதிவ்வளவென்றுசொல்லி இரண்டுகைகளையும் குவித்துக்கொண்டு அரசர்கள் கொடுக்கவேண்டியபொருள்களைக் கொண்டுவந்து சந்தோஷமாக அளவுசெய்துகொடுத்துக் கொண்டிருக்கவும் ஒருபுறத்திலே நெருங்கின வேதப் பிராமணர்கள் பலரும்வந்து பஞ்சாங்கமுதலான பொருத்தநிமித்தங்கள் சொல்லிக் கொண்டிருக்கவும் ஒருபுறத்திலே நிலைபெற்ற கவிவல்லவர்கள் பலருங்கூடிச் சுபமானகவிகள் பாடவும்-எ-று,

முந்தையிரவிக்குல முதற்றலைமையோடும்
வந்தகுலமந்திரிகள் மண்டலீகர்சூழச்
சந்திரமுகத்த மயிலக்களனைத்துஞ்
சுந்தரமடந்தையர் சுழற்றுபணிமாற

இ-ள்- பழையதான சூரியகுலந்தோன்றியநாள்முதல் பிரதானமானசிறப்புடனே கூடி வந்திருக்குமுள்ள சிரேஷ்டமுள மந்திரிகளும்மண்டலீகர்களும் ஒரு புறத்திலே சூழ்ந்திருக்கவும் இருபக்கத்திலும் சந்திரன்போலு முகமும் பொன்மயில்போலும்கனமான நடைகளுமுடைய சௌந்தரியமுள்ள பெண்கள் வெண்சாமரங்களைச் சுழற்றிச் சுழற்றிவீசுகிறசெய்கைகள் மாறிமாறி நடந்து கொண்டிருக்கவும்-எ

ஆடகமணிக்கடக கைத்தலமழுந்த
மாடகமுறுக்குப மடந்தையர்கள்பாட
பாடகபதப்பரி புறத்தொலியெழுப்ப
நாடகமடந்தைய ரசைந்துநட்டாட

இ-ள்- பொன்னினாலேசெய்து ரத்நங்கள்பதித்திருக்கிற கடகங்களணிந்த கைபற்றிய முழுக்காணிகளை முறுக்கிமடந்தைப் பருவப் பெண்கள் பாடிக்கொண்டிருக்கவும் ஒருபுறத்திலே பாடகங்க ளணிந்த கால்களிலே சிலம்போசைகள் ஒலிகடலோடுஞ்செய்கிறபெண்கள் அசைந்தசைந்து நடனங்கள்செய்யவும்-எ-று

ஆகமிசைதங்குமணி யாரமுமவற்றின்
பாகமிலசைசோதி விரிபன்மணியுமின்னக்
கோகனகமங்கையொடு கொற்றவையுமப்பொன்
வாகுவலயங்களு மணிபுயமிலங்க

இ-ள்- மார்பின்மேலே தங்கியிருக்கிற ரத்தினமாலைகளும் முத்துமாலைகளும் அவைகளின்நடுவே சோதிகளைப் பரப்புகின்றபலவகை ரத்நங்களும் பளபளென்னவும் செந்தாமரைமலரிலிருக்கிறலட்சுமியும்வீரலட்சுமியும் அழகிதான பொன்னுலாகிய அழகுகொண்டகேயூரங்களும் அழகியதோள்களிலே விளங்கவும்-எ-று

கோமனைமுடித் தருளுமாபதிகடாத
காமனிவனென்ன வொளிர்கட்டழகிலங்க
மாமகரகுண்டல மணித்திருவில்வீசச்
சோமவுடைவாளது திருக்கையிலியங்க

இ-ள்- சந்திரனைச் சடையேற் சூடிக்கொண்டிருக்கிற பார்வதிநாயகனான பரமசிவனாலே எரிக்கபடாத மன்மதன் இவன்றா னென்று சொல்லும்படி விளங்குகிற பேரழகுவிளங்கவும் பெரியமகரகுண்டலங்கள்ரத்நங்களினுடைய சிறந்தகாந்திகளைவீசவும் உயிர்காவல்செய்கிற உடைவாளானது திருக்கையிலே விளங்கவும்-எ-று

துடிப்படுகரத்த னடியார்த்தொழுதுநீற்றுப்
பொடிப்படவடுப்படு கறுப்புநுதல்பொங்க
முடித்தலைபுறத்திசை முகத்தரசுருத்த
வடுப்படுகறுப்பிரு மலர்க்கழல்விளங்க

இ-ள்- உடுக்கைதங்கின கையையுடைய சிவனடியார்களை வணங்கிவிபூதி தூளிதோன்ற வடுவாகிய கருப்பானது நெற்றியிலே விளங்கவும் கிரீடமணிந்த தலைகள்பட எட்டுதிக்குகளி னிடங்களிலுமுள்ள அரசர்கள் வணங்குதலாலே செய்திருக்கிற வடுவாகிய கறுப்பு இரண்டுமலர்போலும் பாதங்களிலே விளங்கவும்-எ-று

காலமதுகண்டு கதிருஞ்சசியுமொத்தேன்
பாலளவுநீள்கதிர் பரப்புவனபோலக்
கோலமுகநின்றொளி குலாவவதன்மீதே
சாலமணிமேவு முடிநின்றொளிதயங்க

இ-ள்- சமயந்தெரிந்து சூரியனுஞ் சந்திரனு மொருங்குசேரக்கூடிஎட்டுத் திக்குகள் முழுதும் நீண்டகிரணங்களைவிரிக்கிறதுபோல் அழகிதான திருமுகத்திலே நிலைகொண்டு ஒளிவிளங்கவும் அந்த முத்துக்குமேலே மிகவும் ரத்தங்கள் பதிந்திருக்கிற கிரீடத்திலேநிலைகொண்டு ஒளிவிளங்கவும்-எ-று

கண்ணகநிறைந்திமை கடந்துகடை—தாவி
மண்ணகமடங்கலு மடைந்துயிர்கள்வாழ
விண்ணளவுதாவிமிகு வெங்கலிகாப்பத்
தண்ணளிநெடுங்கட லிடங்கொடிரங்கொப்ப

இ-ள்- இரண்டு கண்களுக் குள்ளும் நிறைவாய் இருமைகளுக்கு மேற்பட்டு கடைக்கண்களிலும் தாவுதலாய் இந்த மண்ணுலக முழுதும் வியாபித்து உயிர்களெல்லாம் சுகத்தையடையவும் ஆகாயத்தளவும்சென்று மிகுதியாகிய வெவ்வியகலிபுருஷன் மறைந்துபோகவும் குளிர்ந்துள்ள கிருபையான நெடியகடலைப்போலவிசாலங்கொண்டு பெருகவும்

வந்தெறிபயோத்தியின் மண்டுதிரைவானிற்
சிந்துநுரைமூடு நிசழ்செங்கதிர்கடுப்பச்
சந்தமுலைமாதர்டு சாமரையினோடு
சுந்தரமணிப்பணி துலங்கிடவிருந்தான்

இ-ள்- கரைமேலேவந்து மோதுகிற கடலிலே நெருங்கினஅலைகள் ஆகாயத்திலே வீசுகிற நுரைக்குள்ளே விளங்குகின்ற இளஞ்சூரியனை ஒப்பான அழகான தனங்களையுடைய பெண்கள் வீசுகிறசாமரங்களுக்குள்ளே அதிரமணியமான ரத்நாபரணங்கள் விளங்கஇப்படி அரசிருந்தான்-எ-று

நகரச்சிறப்பு முற்றிற்று-ஆக-விருத்தம்-௱௨

முதலாவது.

விவாககாண்டம்.

இருந்தகாலையிலியாவர்க்கும் விடைகொடுத்தருளித்
திருந்துமாமுடி மன்னவன்சிலருடனிருப்பப்
பொருந்துநன்னெறிப் புண்ணியதீர்த்தங்களாடி
அருந்தவத்திரனேகர்வந் தந்நகரடைந்தார்

இ-ள்- அப்படியிருக்கிற சமயத்தில் எல்லாருக்கும் உத்தரவுகொடுத்தனுப்பி விட்டுச் செவ்வையான பெருமை பொருந்திய கிரீடமணிந்த அரிச்சந்திர மகாராசன் சிலபேருடனே அந்தச்சபா மண்டபத்திலிருக்கும்போது பொருத்தமுள்ள நன்மார்க்கத்துக்குக் காரணமான புண்ணிய தீர்த்தங் களிலே ஸ்நானம்பண்ணி அருமையான தவத்தையுடைய அநேகமுனிவர்கள் வந்து அந்தநகரத்திலேவந்து கூடினார்கள்-எ-று.

சடையுமுண்டமுஞ் சிகையுமுண்டாதாகற்றேய்ந்த
உடையுமாமர வுரிகளுமுடுத்தழகிருந்த

இடையுந்தாழ்ந்திடி யசைந்துமெய்த்திளைத் தோய்ந்த
நடையும்வாழ்த்தலுஞ் சபித்தலு முந்தவர்க்குள்ளவாம்

இ-ள்- சடைக்கற்றைகளும் மொட்டைத்தலைகளும் குடுமித்தலைகளும் மெல்லிதான காவிச்சேலையிலே தோய்த்திருக்கிற வஸ்திரங்களும் பெரிய மரவுரிகளும் உடுத்தி அழகுற்றுக் கொண்டிருக்கிற இடைகளும் தொங்குகிற சதியவயிறுகளும் ஆயாசமாய் இளைத்து நடக்கிற நடைகளும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறதும் கோபித்துச் சபிக்கிறதுமாகிய இரண்டு முந்திவருகிறவாயுகளும்-எ-று

நூலுமார்பமு நாலிடைத்திகழ்ந்தாளுடைக்குந்
தோலுமங்குலித் தருப்பையுங் குலங்கொள்செவியில்
காதும்பாசகுண்டலங்களுந் தண்டமுமேற்றுக்
கோலுமேந்திய குடைகளுங் குண்டிகைக்கரமும்

இ-ள்- முப்புரிநூலும் மார்பும் அந்தமுப்புரிநூலிலிடையாக விளக்கி மிகவும் அசைகின்ற மான்றோலும் விரல்களிலே தர்ப்பை மோதிரமும் அசைகிற அழகிதான காதுகளிலே தொங்குகிற ருத்திராக்ஷமென்பதாகிய குண்டலங்களும் கைக்குடை தமர்க்கங்களுங் கொத்திரிதண்டங்களும் தாங்கிக்கொண்டு வருகிற குடைகளுங் கமண்டலங்களும் கொண்டிருக்கிற கைகளும்-எ-று,

இன்னகொண்டிரு விருடிகளியாவரும்பொய்த்
தன்னசத்திரமவர்க்குப் புக்கராயர்பவிர்க்கு
முன்னமும்வாரியாப் பெறுத்தாவென முழங்கி
மன்னர்மன்னவன் மாளிகைவாயிலில்வந்தார்

இ-ள்- இவ்வகைகளெல்லாங் கொண்டிருக்கிற முனிவர்கள் எல்லோருமவந்து அந்த நகரத்திலுள்ள அன்னசத்திரத்திலேபோய்க்கூடினவர்களைப் போலச் சந்தோஷித்து முன்னே ஆசீர்வாதங்கள் கொண்டு வந்தார்போல முழங்கிக்கொண்டு அந்தராஜாதிராஜனுடைய அரிச்சந்திரனுடைய அரண்மனைவாயிற்குள்ளே வந்தார்கள்-எ-று.

வந்தமாதவரோதை யம்மன்னவன்கேட்டுச்
சிந்தையிற்பெருமகிழ் வாய்ச்சென்றெதிர்கொண்டே
எந்தமாதவமின்று வந்தெய்திய தென்று
அந்தமாதவர்கள் முன்புறத் தொழுதான்

இ-ள்- அப்படிவந்தவுடனே மகாரிஷிகளுடைய சத்தங்களை அந்த அரிச்சந்திரமகாராஜனானவன் கேட்டு மனதிலே பெரிதான சந்தோஷமுண்டாகப்போய் எதிர்கொண்டு நான்செய்த தவத்தின் பலம்

பலமான்து இப்போது வந்துசித்தித்ததென்று அந்த மகாரிஷிகளு
டையபாதபுஷபங்களைத் தன்சிரசிலே பொருந்தும்படி வணங்கினான்

தொழுதகாலையிலாசிகளருந்தவர்சொல்லி
முழுதுமாமறை முழங்கிடமண்டபமுற்ற
எழுதுமாமணியா தனமவ்வவர்க்கிந்து
பழுதிலாமொழி மன்னவனிருந்திவைபகர்வான்

இ-ள்- அப்படி வணங்கினபோது ஆசீர்வாதங்களை அந்தஅருமையான தவரிஷிகள் சொல்லி வாய்முழுதும் பெரியவேதங்கள் முழங்கவுதாகச் சபாமண்டபத்திலே வந்து கூடவேபதித்திருக்கிற பெரியரத்தின சிங்காசனங்களை அந்த ரிஷிகளுக்குத் தக்கபடிகொடுத்துக்குற்றமில்லாத உபசாரவார்த்தைகளை யுடைய அரிச்சந்திரமகாராசன்தானும் தன்னுடைய சிங்காதனத்தி லிருந்துக் கொண்டு இந்த வார்த்தைகள் சொல்லுகிறான்-எ-று.

எந்தத்தேயங்கள் கண்டனீரெத்திசைபுந்திர்
எந்தத்தீர்த்தங்களாடி நீர்புதுமையென்னகண்டீர்
முந்தக்கூறுமிமி னென்றரிச்சந்திரன்மொழிய
அந்தக்காலையி லரசனுக்கருந்தவருரைப்பார்

இ-ள்- ஓமகாரிஷிகளே எந்தஎந்தத் தேசங்களைக்கண்டீர்கள் எந்தஎந்தத் தீர்த்தங்களிலே முழுகினீர்கள் அங்கங்கேஎன்னஆச்சரியங்களைக் கண்டீர்கள் அவைகளை முன்னேஎனக்குத் தெரியச் சொல்லுங்களென்று அரிச்சந்திர மகாராசன்கேட்கஅப்படிக்கேட்டபோது அந்தஅரசனுக்கு அரியதவமுனிவர்கள்சொல்லத் தொடங்கினார்

அங்கண்மாநிலத்தரிய கன்னோசிநாட்டகத்துப்
பொங்குகண்டகியென்ப தோர்புண்ணியதீர்த்தம்
அங்கியாம்புகுந்தாடி நின்னருண்முகங்காண
இங்குவந்தனமின்ன முங்கேட்டியென்றிசைப்பார்

இ-ள்- அழகிய இடத்தையுடைய பெரிய உலகத்திலே அருமையானகன்னோசிநாட்டிலே அலைகள் பொங்குவதான கண்டகியென்பதாகியஒரு புண்ணியதீர்த்தமுண்டு அந்தத்தீர்த்தத்துக்குநாங்க ளெல்லாரும்போய்த் தீர்த்தமாடி உம்முடைய கிருபாரசமுள்ள திருமுகத்தைக் காணும்படி இங்குவந்தோம் இன்னமும் ஒருஅதிசயமுண்டு அதைக்கேளுமென்று அந்த அருமையான முனிவர்கள் சொல்லுகிறார்கள்-எ-று.

அந்தநாட்டினிற்கன்ன மாபுரிக்கரசாள்வோன்
சந்திரன்வழிச்சந்திர தயன்றவம்புரிந்து

கந்தவார்சடைக்கருடன் வரத்திறற்பயந்த
சந்தமாமுலைத்தையல் சந்திரமதியென்பாள்

இ-ள் அந்தக்கன்னேசி நாட்டிலே கன்னமாபுரியென்னும்பட்டண
த்தை யாளுகிறஅரசன் சந்திரனுடைய குலத்திலேபிறந்த சந்திரத
யனென்னும் பரிமளிக்கிற நீண்டசடைகளையுடைய பரமசிவனுடை
யவரத்தினலே பெற்றஅழகான பெரியதனங்களை யுடைய அழகால்
மிக்க ஒருபெண் சந்திரமதியென்பவள்-எ-று.

மண்மடந்தையர் தம்முளும் வாசவனுறையும்
விண்மடந்தையர் தம்முளு நிகரிலாவிரல்வேற்
கண்மடந்தையர் தண்குழலருந்ததிகற்பிற்
கெண்மடங்குகற்புடைய விந்திரையினுமெழிலாள்

இ-ள்- பூலோகத்திலுள்ள பெண்களிலும் தேவேந்திரன் வாசஞ்
செய்கிற தெய்வலோகத்தி லுள்ள பெண்களிலும் ஒப்பாகிறவர்களி
ல்லாத வெற்றிவேல்போலுங் கண்களையுடைய பெண்பின்னும்அழ
கிதான குளிர்ந்த கூந்தலையுடைய அருந்ததியி னுடைய பதிவிரதா
குணத்திற்கு எட்டுபங்கு அதிகமானபதிவிரதாசிரோன்மணியானவ
ள மகாலட்சுமியைப் பார்க்கிலும் மிகுந்த அழகையுடையவள்-எ-று
இனி-அவளழகின்வரலாறு

வேறு.

முகில்வென்றறலைச் சடிந்துசைவரத்தை
மினிந்துபொற் கடுக்கையைமுடுக்கி
அகினறும்புகையுந் தகரமும்புழுகு
மளைஇப்பனி நீரிலேகனைந்து
பகலவற்குடைந்த வசையினல்வெள்கிப்
பலமலர்த்தா ரணிந்தவனே
டிகல்செயக்கருதி யிருடிரண்டாலித்
தெழுந்தனசெழுந் தடங்குழலாள்

இ-ள்- மேகத்தைவென்று கருமணலையும் ஒதுங்கத் தள்ளி பாசி
யையும் வெருத்து அழகிய கொன்றைக்காயையும் துரத்திஅகிலினது
நல்லவாசப்புகையும் மயிர்சாந்தமும் புழுகும்பொழிந்துதலாய்பனிநீ
ரிலே கனைதலுமாய் முன்னேசூரியனுக்குத்தோற்றபழிப்பினலேகா
ணமுண்டாகி இப்போது பலமலர்களாலும் புனைந்த மாலையையணி
ந்து அந்தச் சூரியனுடனே யுத்தம் பண்ணுதற்கு இருளானது திர
ண்டு சந்தோஷித் தெழுந்தாற்போல்வதான செழுமையான நீண்ட
கூந்தலையுடையவள்-எ-று

பயிர்கடிந்தனம் பட்டமாமரமும்
 பண்டைநாளுங்க வெள்ளென்பும்
உயிர்பெறற்பொருட்டுப் பனிதரும்பாலு
 மொழுகியதேனு மாரமுதும்
குயிலினிற்றொலுங் கிளியினின்மொழியுங்
 குழலுய்யாழுங் குழைந்தழைந்து
பயிலியற்சாயல் வாணுதற்றனக்கு
 மலரயன்வகுத்த தேன்மொழியாள்

இ-ள். இந்தபயிர்களும் பட்டுப்போய்க் கிடக்கிற பெரியமரங்களும் முன்னாளிலே உடம்பிளின்றுங் கழிந்துகிடக்கிற வெள்ளை யெலும்புகளும் இவள் பேசுதலாலே உயிருண்டாகும்படி கண்ட சருக்கரையும் பாலும் ஒழுகுகின்றதேனும் அரியஅமுதமும் குயிலினிடத்தில்தொனியும் கிளியினிடத்திலே பேச்சும் பொல்லாங்குழலினிசையையும் வீணையினிசையையும குழப்பிக்கூட்டிமயில்போல் அழகிய சாயலையுடை ஒளிபொருந்திய நெற்றியையுடைய அந்தப் பெண்ணுக்குத் தாமரை மலரிலிருக்கிற பிரமதேவன் செய்துள்ள தேன்பதான வசனத்தை யுடையவள் பாளிதம்பளிதமெனக் குறுக்கல் விகாரம்.

கடலினைக்கயலைக் கணையைமென்பிணையைக்
 காவிடைக்கருவிளமலரை
வடிவினைக்கொடியமறலியைவலையை
 வாளைவேறற்குநீண்டகன்று
கொடுவினைகொண்டிருபுறந்தாவிக்
 குமிழையுங்குழையையுஞ்சீறி
விடமெனக்கறும்புற்றிபரந்துன்கை
 வேலினுங்கூரியவிழியாள்

இ-ள்- கடலையும் கெண்டைமீனையும் அம்பையும் மிருதுவாயிருக்கிற மானையும் நீலமலரையும் கருவிளம் பூவையும் பாவடிவின்பிரப்பையும் கொடுமையைக் கொண்ட யமனையும் வலையையும வாளையும் வெல்லுதற்காக நீட்சியாய்விசாலமுள்ளதாய்கொடியசெய்மையானது குடிகொண்டிருப்பதாய் இரண்டு காதுக ளிடத்திலும் தாவுதலையுடையதாய் குமிழம்பூவைபொத்த மூக்கையும் குண்டலமணிந்தகாதுகளையும் கோபிப்ப தாய் விடம்போற் கறுப்புள்ளதாய் செவ்வரிகள்பரவி உன்கையிலுள்ள வேலைப்பார்க்கிலும் கூர்மையைக்கொண்டகண்களையுடையவள்-எ-று.

இருப்பைவிட்டயனுர் செய்துநாட்டவஞ்செய
 திருகையுஞ்சிந்தையும் வருந்திச்

செருப்0பையின்றிறந்தமதனனைச்சூட்ட
  திருமுடிவேண்டுமென்றியானை
மருப்பையுங்கும்பத் தலத்தையுஞ்சக்கர
  வாளத்தையும்வடகனகப்
பொருப்பையும்படைத்துத் தெளிந்தபின்படைத்த
  புளகிதபூரணமுலையாள்

இ-ள்- நானிருக்குமிடத்தை விட்டுவிட்டு பிரமதேவனானவர் நெடுங்காலந் தவத்தைச்செய்து தன் இரண்டுகைகளும் மனமும்வருந்தங்கொண்டு சிவனோடு சண்டைசெய்து இறந்துபோனமன்மதனுக்கு திருமுடி சூட்டுதற்காகத் திருமுடிவேணுமென்று நினைத்துயானைக்கொம்பையும் அந்தயானையினது கும்பத்தலத்தையும்சிருஷ்டித்துக்கைதேர்ந்தபின்பு சிருஷ்டித்த புளகாங்கிதங்கள்நிறம்புதலான தனங்களையுடையவள்-எ-று.

அறந்திகழ்தவமுமற்றவுமிதனை
  யழியுமென்றயன்படைத்திலனோ
சிறந்தவேல்விழியை முன்படைத்தயர்ந்தா
  செங்கரஞ்சோர்ந்ததோவிளைத்து
மறந்ததோகரந்துவைத்ததோகளப
  வனமுலைப்பொறைசுமந்துருகி
இறந்ததோவுளதோ வில்லையோவினிமே
  லெய்துமோதறியொணாவிடையே

இ-ள்- தருமம் விளங்குவதான தவமும் மற்ற எல்லாமும் இந்த இடையிலே அழிந்துபோகுமென்று நினைத்துப்பிரமதேவன்உருவமுண்டாக்காமல் விட்டானோ சிறப்புள்ள அந்தவேல்போலுங் கண்களைமுன்னே சிருஷ்டித்துச் சோர்ந்து அவனுடைய சிவந்த கைகள் இளைத்துப் போயினவோ அல்லது பயந்து அக்கைகள் மறந்து போயினவோ அல்லது அவளுருவிலே மறைத்துத்தான்வைத் திருக்கின்றனோ சந்தனச்சேறு பூசலான அழகியதனங்களினுடைய கனத்தைத் தாங்கி உருகுதலாய் இறந்துபோயிற்றோ அல்லதுஇரவாமலிருக்கின்றதோ முழுதும் இல்லைத்தானோ அல்லதுஇனிமேலுண்டாகுமோ தெரிந்து சொல்லக்கூடாதுஅவளிடையை-எ-று

செருக்குமோகனச்செந்திருமகளுறையுஞ்
  சேயிதழ்த்தாமரைமலரும்
பெருக்குமாமறைநூலுரைத்தநான்முகத்தோன்
  பிறந்தசெங்கமலமும்வெள்க

---

0 பயின்றென்பது பையின்றெனப்பொலியாயது

முருக்குமாம்பலுமென்காவியுங்குமிழு
முல்லையும்வள்ளையும்மலர்ந்து
திருக்கிளர்கமலமிதுவெனச்செவ்வி
திகழ்வெயர்சேறிதிருமுகத்தாள்

இ-ள்- திருமாலையு மயங்கச்செய்வதான வசீகரத்தையுடைய சவ்வியலட்சுமிதேவி வாசப்பண்ணுகின்ற சிவந்தஇதழ்களை யுடையதாமரைப்பூவும் விரிவான பெருமையையுடைய வேதசாஸ்திரங்களைச்சொன்ன சதுர்முகப் பிரமதேவன் உற்பத்தியான செந்தாமரைப்பூவெய்நாண முருக்கப்பூவும் செவ்வல்லிப் பூவும் மிருதுவான நீலப் பூவும் குமிழம்பூவும் முல்லையரும்பும் வள்ளக்கொடியும் விகசிதமாய்அழகு விளங்குவதான வேர்வைபொருந்துகின்றதிருமுகத்தையுடையவள் இதழ்வாய்-கண்கள்-மூக்கு பல்-காதுகளையுடைய தாமரைமலர்போலு முகமென்றுகொள்க-எ-று.

கடிகமழ்மலருங்கலவையுமழகுங்
கதிர்மணிப்பணிகளுஞ்சுமந்து
கொடியெனவிசைந்துநிறைவுறப்பூத்த
கொம்பெனவசைந்தசைந்தொல்கி
அடியிணைபடியிற் படப்பொறாதஞ்சி
யன்புறுகடகரிப்பின்போம்
பிடியெனக்கன்னி நடைபயிலன்னப்
பெடையெனமடநடைபெயர்வாள்

இ-ள், வாசனைபரிமளிக்கின்ற பூவும் கூட்டிவருக்கச் சந்தனமும் அழகும் ஒளியையுடைய ரத்நாபரணங்களும் தாங்கிஒருகொடிபோல்வாளென்று சொல்லுதற்கு நிகராய் நிரம்பமலர்ந்தகொம்பு போல் துவண்டுதுவண்டு நுறுங்கிக் கால்களிரண்டும் பூமியிலே படுதற்குசகியாமல்வருந்தி ஆசைகொண்ட மதயானைக்குப் பின்னே செல்லுவதானஒருபெண்யானை போலவும் இளமையான கடைநடைகற்றபெட்டையன்னம் போலவும் மிருதுவான நடைநடைப்பாள்-எ-று

அன்னதன்மையளாயமிர்தினிற்பிறந்த
வணங்கபிடேகத்தையனந்த
மன்னர்தந்தமக்குமணஞ்செயக்கருதி
மணமொழிந்தவர்க்கெலாங்கொடாது
முன்னமெம்பெருமான் மொழிந்தவற்கன்றி
முடிக்கிலேன்கடிமணமென்னச்
சொன்னதோர்மொழியுங்கேட்டனமவனி
னோர்களுக்கிசைந்தவளென்றார்

இ-ள்- அப்படிப் பட்டவனை அழகத்திலே தோன்றின லட்சுமிக் குச் சிறக்கத்திருமுகமுடையவளான சந்திரமதியை அநேகம் அரசர் கள் தங்கள் தங்களுக்கு கலியாணஞ் செய்துகொள்ளவெண்ணிக்கலி யாணத்தைக் குறித்துவந்து போனவர்களுக்கெல்லாம் கொடாமல் முன்னே பசுந்துடனே சொன்ன வனுக்கேயல்லாமல் கலியாணஞ் செய்துகொடேனென்று சொன்னதனாலே ஒருவருமறிவார்த்தையாங்கே ட்டிருக்கிறேம் அந்தப்பெண்ணானவள் உன்னுடைய தோள்களைக் கூடத்தக்கதவளென்று சொன்னார்கள்-எ-று.

பாதகமென்னுக்கடிந்தமாமுத்திப்
பங்கமுற்றுறைவிடப்பெருது
மாதவருரைத்தமொழிவழிவந்து
மன்னவன்செவிவழிபுகுந்தாங்
கூடரைவந்தலக்கும் வெளிவிளக்கதனி
லைமலவுறவலைத்தோர்கரிக்
காதலமகொழுந்து வளர்ந்திடவுருகிக்
கலவினிலிக்மெழுகானான்

இ-ள்- முன்னேபாவமென்று நீங்கியிருக்க சாமர்த்தியமானது ப ங்கப்பட்டு தனக்கிருக்க இடமில்லையாமல் இப்போது இந்தமகாரி ஷிகள்சொன்ன சொல்லேவழியாகவந்து அரிச்சந்திரனுடை யகாதாகிய நிலவாயிலே நுழைந்து அநேககாமுகமாகுமோகியசக் குவந்தான பெருவெளியிலே வைத்த விளக்கைப்போல் அவன்மனம லைய அலைச்சற்பட்டு காமத்து ஆசையாகியபத்தாக்குக்கொழுந்துத விர்த்துவர அரிச்சந்திரன் மனமுருகிநெருப்பிலிட்டமெழுகுபோ லுருகினன்.

சந்திரகலையானொக்குநீர்பொழிவ
சந்திரகாந்தமேயல்லால்
0அந்தரசாதிச்சிலைபிழியண்டாகா
தவனியன்மகளிவிபென்றயனர்
முந்தவெளித்த விதியிலையடங்கா
போகமுந்தாரமுமிருந்து
புத்திகெட்டறிவுநிறைபொறைதோற்றம்
போக்கினன்பாக்கியந் தளர்ந்தான்

இ-ள்- சந்திர கிரணத்தினாலே கரைந்து நீரைச் சிந்துவது சந்திர காந்தக்கல்லேயல்லாமல் வேறுசாதிக்கல்லாலே நீரைச்சிந்தக் கூடா து அப்படி அந்தச்சந்திர மதியே இந்த அரிச் சந்திரனுக்குப் பாரி

---

0 அந்தரசாதிச்சிலைவேறுசாதிக்கல்

யாகிறவனென்பது பிரமதேவனுனவை முன்னேதானே அமைத்திருக்கிற அமைவினுலே அடக்கக்கூடாத காயமயக்கமும் அதனுலேயான வருத்தமும் அநுகரித்துப் புத்திமயங்கிக் கல்வியறிவு அடக்கம்பொருமைபிரகாச முதலானவைகளெல்லாம் தன்னிலின்றும் பிரிந்துபோகச் செய்தவனுய் உடம்பெல்லாந் தளர்ந்துபோனுன்-எ-று,

வேறு,

கரையறிகாதலாற்றை யற்றவனுமாக்கச் செய்தாற்றி
ன்றரையனும்புத்து மன்னன் முனிவனை நோக்கியோதுக்
காரிகையடியனேனுக் கனியவைப்புணர்க்கு மெய்வா
யுரையுளதாயினெய்யாட் டியருளதாவென்றுன்

இ-ள், அப்படிக் கரைகடந்து செல்வதான ஆசையென்னும் ஓராற்றைத்தனது கல்வியறிவென்னுங் கரையைவிட்டு அடக்கி அந்தமலைபோலுந் தோள்களையுடைய அரிச்சந்திரன் அந்தமகாரிஷிகளைப்பார்த்து அந்தப் பெண்களுக்கு அரசியானவளை அடியேனுக்கு அழகானகலியாணஞ் செய்துக்கொள்ளும்படி உங்களுடையவாயாலே சொல்லுவதுண்டானுல் என்னுடைய உடலிலே உயிருக்கிறதாயிருக்குமென்றுசொன்னுன்-எ-று

அங்கண்மாஞாலங்காக்கு மரசனேயரசரேறே
திங்கண்மாமுகத்துவாமத் திருவைநீவதுவைவேட்ட
எங்களாற்செய்யுமாறே தியம்பெனமுனிவர்கூறச் (ம்
செங்கண்மாலனையான் செவ்வாய்ச்செங்கையாற்புதைத்துச்செப்

இ-ள்- அப்படிச் சொல்லவே அழகிதான இடத்தையுடையதுமிந்தப்பெரிதான உலகத்தை யாளுகிற ராசனே ராஜாக்களுக்குச் சிங்கமானவனே அந்தச்சந்திரன் போலும் ஒளியையுடைய முகத்தையுடைய அழகிலே லட்சுமிக்கொப்பான சந்திரமதியை நீகலியாணஞ்செய்துகொள்ளுவதற்கு எங்களாலே செய்யும்வகை யென்னசொல்லுமென்று அந்தமுனிவர்கள் கேட்க அதற்கு அந்தச் சிவந்த கண்களையுடையதிருமாலையொப்பான அரிச்சந்திரன்தனது சிவந்த வாயைச் சிவந்தகைகளாலே மூடிக்கொண்டு சொல்லுகிறுன்-எ-று

அல்லியங்குழலாடன்னை யருமணமடியேன்வேட்ட
கல்வியற்சுரமுங்காடுங் கடந்துகால்வருந்தநீபோய்
வல்லியைப்பயந்தோர்கண்டு மணமொழிந்தந்தவேந்தன
சொல்லியநெறிகேட்டென்பால் வருகவென்றினிதுசொன்னுன்

இ-ள்- அகவிதழ்களாலலங்கிருதமான கூந்தலையுடைய சந்திரமதியைநான் அரிதான கலியாணஞ்செய்து சொள்ளுதற்காக கற்கள்

கிடக்கிறபாலைவனமும் காடுகளும் கடந்து சென்று உங்கள் கால்கள் வருந்தநீங்களேபோய் அந்தப்பெண்ணைபெற்ற அரசனைக் கண்டுகலியாணவார்த்தகளைப்பேசி அந்த அரசன்சொல்லிய வகைகளைக்கேட்டுக்கொண்டு திரும்பவும் வரவேணுமென்று மிகவு முபசரித்துச் சொன்னான்-எ-று

காதலான்பன்னன்கூற மாதவர்கருணைவெள்ளம்
மீதெலாமெழுந்துபொங்க வேந்தசெண்மீண்டியாங்கள்
போதலுஞ்செய்வேமுங்கள் புதுமணங்காண்போமாயின்
ஈதலாலுறுதிவேறொன் றில்லையென்றெழுந்திருந்தார்

இ-ள்- அப்படி ஆசையாலே அரிச்சந்திரன் சொல்ல அந்தமகாரிஷிகள் அரிச்சந்திரனிடத்திலே கிருபாசமுத்திரம்மேன்மேலாகக்கிளர்ந்து பெருக அரசனேகேள் நீர் சொன்ன படியேதிரும்பி நாங்கள்போகிறதுபோகிறோம் உங்களுடைய விசேஷமானதிருக்கலியாணத்தையும் பார்க்கவும் பாரப்போமானால் இதுவல்லதுநன்மைவேறொன்றுமில்லையென்று எல்லோரும் எழுந்திருந்தார்கள்-எ-று.

சந்திரமதிதன்பார தனைமாறுஞ்சைலதாரம்
சுந்தரமார்பின்மூழ்கச் சூட்டுவேயென்னவாழ்த்தி
மந்திரமுனிவரெல்லா மண்டபமகன்றுநீங்கி
இந்திரபுரியேயன்ன வெழினகர்கடந்துபோனார்

இ-ள்- எப்படியாயினும் அந்தச் சந்திரமதியினுடையகனத்ததனங்கள் உன்னுடைய மலைபோல்வதான பால்பணிந்த அழகியமார்பிலேபடிவதாகச் செய்யவேணுமென்று ஆசீர்வதித்துவேதமந்திரங்களெல்லாந்தெரிந்த முனிவர்களெல்லாரும் அந்தச்சபாமண்டபத்தைவிட்டுச் சென்று தேவேந்திரலோகம் போல்வதான அந்த அயோத்திமாநகரைக்கடந்துசென்றார்கள்-என்றவாறு

மாதவர்போனபின்னர் மண்டபநீங்கிமன்னன்
ஆதுலர்போலப்பள்ளி யறைபுகுந்தமளிநண்ணி
மீதெலாமனங்களாலி குளித்திடவெளியிற்புக்குக்
காதலங்கடலுட்டாழ்ந்தான் கரைநிலைகண்டிலாதான்

இ-ள்- அந்தமகாரிஷிகள் போனபின்பு சபாமண்டபத்தைவிட்டுப்போய் அரிச்சந்திர மகாராசன் எதுவுமில்லாதவெறியரைப்போற் படுக்கைவீட்டுக் குள்ளே புகுந்துபடுக்குமெத்தையேலேபோய்படுத்து உடம்பெல்லாம் மன்மதபாணந்தைக்க பின்புவெளியிலேவந்து இப்படிமாறிமாறி ஆசையாகியகடலிலே மூழ்கினவனாய் அந்த ஆசைக் கடற்கரையும் நிலையும் காணாதவனானான்-எ-று,

மயங்கினான்வருந்தினான் வாடினான்மதனனம்பால்
இயங்கினான்வளர்ந்த காமத்தீயினாற்செயலற்றானி
தயங்கினான்றீராமோகத்தாற்றளர்ந்துமேன்மேல்
உயங்கினானுருகிமெய்சோர்ந் துளர்த்தொடுமுரைப்பனானான்

இ-ள்- மயக்கங்கொண்டான் அதனாலே வருத்தப்பட்டான் அதனாலே உடம்பு மிகவுமிளைத்தான் பின்னும் மன்மதபாணத்தினாலேகொந்தான் அப்படியாக மூண்டகாமாக்கினியாலே எந்தச்செய்கையுமில்லாமல் உயிர்கலங்கினான் அப்படிமனங்கலங்கி நீங்காதமோக தாகத்தினாலேசோர்ந்து மேலும்மேலும வருந்தினான் மனமுருகிஉடம்பிளைத்துத் தன்மனத்துடனே சொல்லத்தொடங்கினான்-எ-று,

தந்தமால்களிற்றியானைச் சந்திரதயன்றன்பாவை
வந்தமாமுனிவரோடும் வந்திவண்மாயமாகி
எந்தமாருயிரைவெள்வி யெம்முளம்புகுந்துகைகொண்
டந்தமாமுனிவரோடு மகன்றதோவறிகிலேமால்

இ-ள்- கொம்புகளையுடைய உயர்ந்த யானை மேலேறுகிற சந்திர ராஜனுடைய மகளானவள் இங்கேவந்த மகாரிஷிகளோடே வந்து இவ்விடத்தேமாயா ரூபமாய் என்னுடைய அரிய உயிரையும் பற்றிக்கொண்டு என் மனத்தையும் உள்ளே நுழைந்து தன்வசமாக்கிக்கொண்டு அந்தமகாரிஷிகளுடனே கூடவேபோயினளோ நமக்கு ஒன்றுந் தெரியவில்லை-எ-று.

ஒற்றையாழியந்தேர் சூழிவ்வுலகமயான்காவல்பூண்ட
அற்றைநான்முதலாக்கள்ள மின்றியேயமர்ந்ததந்தோ
பிற்றைநாள்வலியினாலோர் பெண்கொடிபெந்தபாவி
இன்றைநாள்கரந்துகொண்டல் தகைமையெய்க்குமன்றோ

இ-ள்- சூரியனுடைய ஒருவண்டிலையுடைய தேர்சூழ்வதானஇந்தவுலகமுழுவதும் நான்காப்பதைக் கொண்டிருக்கிற அந்தநாள்முதலாக இதுவரையினும் இந்தவூர் திருட்டில்லாமலேயிருந்தது ஐயோபின்பு இந்தநாளிலே பலாத்காரத்தினாலே ஒருபெண்கொடியானவள் என்னுயிரை இன்றையதினத்திலே மறைந்துவந்து கொண்டு போனதைப்பார்த்தால் அறியாமையேயாயிற்றெங்களுக்கு-எ-று.

தமக்குறுந்தமர்க்குறூஉ தான்றனைக்காந்தரிற்கொள்ளும்
வனக்குறும்பதற்குவா கைக்குறுவனேயிலேமானே
எனக்குறுமென்றுகாத்த வென்னைவிட்டுன்பால்வந்தால்
உனக்குறுமென்னுயிரென் னுள்ளத்தைக்கொண்டாயென்றான்

இ-ள்- தனக்கு அநுகூலனாய்த் தன் உறவினர்க்கு அநுகூலனாகாதவனை ஒருவனைமறைத்து அவனைபொருளைத்தங்கள்கொடுஞ்செய்கையினாலே திருடிக்கொண்டு போகிற காட்டிலே சஞ்சரிப்பா ரான வேடர்களுக்கு அவர்கள் வெற்றிக்கொள்ளும்படியாய்த் தமக்கேயநுகூலனான நான்சடபதிப்பேனோ மயிற்சாலை யுடையவனே மான்போலுங் கண்களையுடை யவனே எனக்கேதருமென்று நான் அடக்கி வைத்திருந்த என்னைத் தவிர்ந்து உன்னிடத்தே வருமானால் உனக்குத் தருமென்று நீ என்பொருளான என்மனத்தை உன்வசமாக்கிகொண்டாய் அப்படிநீகொள்ளுதல்தகாது என்றுசொன்னான்பின்னும்-எ-று

மைதிரழ்வாரிசூழு மாநிலத்தோர்கட்கெல்லாம்
பெய்தவம்பழிறங்சாப் பிள்ளையைப்பெறுதவென்பார்
செய்தவமன்றுன்றுதை சனனங்கடோறுஞ்செய்த
கைதவமாவிகொள்ளுங் களவினிற்பயந்ததெல்லாம்

இ-ள்- கருமையாய் விளங்குகின்ற கடல்சூழ்வதான இந்தப்பெரியவுலகத்திலுள்ளவர்களுக்கெல்லாம் நன்மையை கொடுக்கிறதவமானது குற்றஞ்செய்யாத பிள்ளையைப்பெற வேண்டியதென்றுசொல்வார்கள் அப்படிக்கிருக்க உன்தகப்பன்செய்தது நன்மையைச்செய்வதான தவமன்று தான்கொண்ட பிறப்புகளெல்லாம் அவன் செய்திருக்கிறவஞ்சனையிலே உயிரைத்திருடுகிறகளவினையுடை வுன்னைப்பெற்றதுமுழுதும்-எ-று.

மாறுகொண்டலையவல்லி வாட்டியவாட்டஞ்சொல்லி
ஆறுதற்கென்பாலண்ணி யலையுபோவனைகிலாமல்
வேறுமிப்படியேவாதை விளைக்குமோவிளைக்கும்வாதை
ஏறுமோகுறையுமோவென் றிருந்தனனிறைவனிப்பால்

இ-ள்- இப்படிமாறுபாடாக என்னை அந்தக்கொடி போல்பவள்வாட்டின வாட்டத்தையெல்லாம் நான்சொல்லிமனமாறுதற்குஎன்னிடத்தே கிட்டிவருவாளோ அப்படிவாராமல் வேறேயுமிப்படிக்கே துன்பத்தைச் சொல்லாளோ இப்படி உண்டாகுகிறதுன்பம் அதிகப்படுமோ அல்லது குறைவுபடுமோ வென்று எண்ணிக்கொண்டிருந்தான் அரிச்சந்திரமகாராசன் இனிமேல்-எ-று.

மானவன்வதனைகூட்ட மணமொழிவதற்குஎண்ணிப்
போனமாமுனிவர்பூகப் பொழிலுடன்பொய்கைநீங்கிக்
கானமுமலையுயயாறுங் கடந்துகன்றோசியென்னும்
மானகாறுக்கொற்ற மதியன்சபையிற்புக்காற்

இ-ள்- இந்தமகானுபாவனான அரிச்சந்திரன் கலியாணஞ் செய்து கொள்ளுவதற்கு கலியாணவார்த்தைபேசுவதற்காக இங்கேவந்துபோயின மகாரிஷிகள் சமூகத்தோட்டத்துடனே வழியிலேயுள்ள குளங்களையுங்கடந்துசென்று காடுமலைகளும் ஆறுகளும் கடந்துபோய்க் கன்னோசியென்கிற பெரியநகருக்கேபோய் அந்தவெற்றிபொருந்திய சந்திரதயராசனுடைய சபைக்குள்ளே போனார்கள்-எ-று.

பெருமலைவெளிசெய்தன்ன மேனிலைமணிமாடத்து
வாரிதியெழுந்தன்ன வந்தவன்றாளைப்போற்றத்
தேரும்யானையுமிழிந்து திறைதருமரசர்நிற்கக்
காருநீள்கடலும்போலக் கதிர்மணிமுரசமார்ப்ப

இ-ள்- மகாமேருவைத் துவாரஞ்செய்து வைத்திருக்கிறதுபோலிருக்கிற மேலுப்பரிகைகளையுடைய அழகிதான கொலுமண்டபத்திலே கடல்பொங்கி வந்தாற்போல்வந்து அந்தச்சந்திரனுடையபாதங்களைத் துதிசெய்யத் தேர்களையும் யானைகளையும் விட்டிறங்கிக் கப்பங்கள் கொடுக்கவேண்டி அரசர்கள் நிற்கச்செய்தே மேகங்களையுஞ்செடிய கடலையும்போற் பிரகாசமான அழகிய பேரிகைகள் முழங்கவும்-எ-று.

வெயில்விரிமகுடம்பொங்க விசிசுடர்கழல்விளங்கக்
கையில்விரிகடகமின்னக் கதிர்மணிக்குழைகடாழப்
பயின்மணிமரகதத்தாம் பசுங்கதிர்பரப்புமாடச்
சயிலசாளரங்கடோறும் வலயத்தின்கிரணந்தாக்க

இ-ள்- சூரியப்பிரகாசத்தைக் காட்டுகின்ற கிரீடங்கள்விளங்கவும் வீசுகிற ஒளியையுடைய வீரக்கழல்விளங்கவும் கைகளிலேயொளிவிரிகின்ற கங்கணங்கள் மின்னவும்பிரகாசமானரத்நகுண்டலங்கள் தொங்கவும் அவனிருக்கிற அழகிதான மரகதத்தினாலே பசியவொளியை விரிப்பதான சபாமண்டபமான பொன்மலையிலேயுள்ள சன்னல்களெல்லாம் அவனுடைய தோளின்மேலேயணிந்த கேயூரத்தின்சோதிகள் வீசவும்-எ-று.

சிகரமார்முலையார்செம்பொற் செழுமணிக்கவரிவீசப்
புகரனையமைச்சர்போற்றப் புரிதவமுனிவர்வாழ்த்த
பகர்தருமறையோர்சூழப் பாவலர்களின்பாட
மகரதோரணக்கீழ்மன்னன் மடங்கலாதனத்திருந்தான்

இ-ள்- மலைச்சிகரம்போலும் பெரியதனங்களையுடைய பெண்கள் செம்பொன்னாலும் செழுமையானமணிகளாலுங் காம்புகொண்டசாமரங்கள்வீசவும் சுக்கிரபகவானுக்கொப்பான மந்திரிகள் துதிக்கவும் தவஞ்செய்த முனிவர்கள் வாழ்த்தவும் வேதபாராயணஞ் செய்கிற

பிராமணர்கள் சூழவும் வித்துவான்கள் கவிகள்பாடவும் இப்படியாக மகா தோரணத்தின்கீழே அந்தச்சந்திரதயராஜன் சிங்காசனத்திலே யிருந்தான்-எ-று.

அந்தவோலக்கந்தன்னி லருந்தவமுனிவரெல்லாம்
வந்தனர்வந்தபோது மன்னவனெழுந்திருந்து
சுந்தரமகுடந்தாழத் தொழுதனனவனைவாழ்த்திச்
சிந்தையின்மகிழ்ச்சிபொங்க விருந்தபின்செப்பலுற்றான்

இ-ள்- அப்படிக் கொலுவிருக்கிற சபையிலே இங்கிருந்து போன அருமையான தவமுனிவர்களெல்லாரும் வந்தார்கள் அப்படி அவர்கள்வந்தவுடனே அந்தச்சந்திரதய னெழுந்திருந்துவந்து அந்நி தா னகிரீடம்படிய வணங்கினான் அப்படிவணங்கின அரசனை ஆசிர்வதித்து மனத்திலே சந்தோஷம்பெருக இருந்தபின்பு சொல்லத்தொடங்கினான்-எ-று.

வானநீர்பொழிந்துமுத்த மணிகொழித்தருவிபாய்ந்த
கானநீர்பெருகுந்தெய்வ கண்டகியென்னுந்தீர்த்தத்
தானநீராடியென்றன் றனக்கடிமுடிகள்சூட்டிப்
போனநீருடனேமீண்ட வருத்தியென்புகலுமென்றான்

இ-ள்- மேகங்கள் நீரைப்பொழிதலாலே முத்துகளையும் ரத்னங்களையும் கொழித்துக் கொண்டு அருவிபாய்தலான காடுகளெல்லாம்நீர் பெருகுவதான தெய்வத்தன்மையுள்ள கண்டகியென்னும் தீர்த்தகட விலேநீராடி முன்னே என்னுடைய சிரசுக்குஉங்களுடையபாதங்களை க்கிரீடமாகச் சூட்டிவிட்டுப்போயின நீங்கள்உடனே திரும்பி வந்த இச்சையென்ன சொல்லுங்களென்றான்-எ-று.

மன்னகேள்சென்றயோத்தி மாநகர்புகுந்தியாங்க
ளந்நகர்க்கரசநீதி யருளரிச்சந்திரனென்பான்
றின்னகர்மனமுகிழ்ந்த னெதிர்புகின்மகிடனேரும்
சொன்னயினின்பாலெய்து முவகையேதுவலிந்துநின்றான்

இ-ள்- அரசனேகேட்பாயாக உடனேபோய்அயோத்தியா நகரிலே புகுந்து நாங்கள் அந்த நகருக்கரசனான நீதியுக்தயவுமுள்ள அரிச்சந் திரனென்பவன் உனதுநகரின்வளமையும் உனதுசன்மார்க்கமும் உன் புத்திரியுடைய வழக்கும சொன்னபின்பு உன்னிடத்திலேவந்ததுகண்டு பேசுவதான சந்தோஷவார்த்தைக்கே துணிந்தவனாயினான்-எ-று.

அறநெறிமிக்கோர்தம்பா லருந்ததிகற்பினாளைப்
புறநெறிபோகாவண்ணம் வருந்தியும்பொருந்தச்செய்தால்
மறநெறியன்றமாயா மாதவந்தன்னின்மிக்க
திறநெறியதனாலின்பாந் சேர்த்தனஞ்செல்வமென்றார்

இ-ள்-தருமமார்க்கத்திலே யிருந்துள்ளவர்களிடத்திலே அருந்ததி போலும் கற்புடையபுத்திரியை தருமத்துக்கு வேறான வழியிலேபோகாதபடி வருத்தப்பட்டாவது பொருந்தப் பண்ணுகிறதுதீயசெய்கையன்று எக்காலத்தும் அழியாதபெரிய தவத்தினாலே யிருந்த உறுதியான நல்லவழியே யாதலால் உன்னிடத்திற்குத்திரும்பவும்வந்தோமென்றார்கள் -எ-று

புவனமுள்ளளவும்பரங்கள் புக்கறிதனேககோடி
நலதரமதிகடம்மைக் கண்டனாந்தார்வேந்தே
சிவனருள்கதியயந்த திருமகடனக்குக்கேள்வன்
அவனலதில்லையென்ன வருந்தவரெடுத்துரைத்தார்

இ-ள்- இந்தலோகமுள்ள அளவும் நாங்கள் போய்க்கண்டு அநேககோடி புதுமையையுடைய அரசர்களையெல்லாங் கண்டுவந்தோம் நல்லபரிமளத்தை யுடைய மாலையணிந்த சந்திரதயராசனை பரமசிவன்கடாட்சிக்க நீபெற்றதிருக்குமாரிக்கு நாயகன் அந்த அரிச்சந்திரனையல்லது வேறொருவருமில்லையென்று அரியதவத்தையுடையமுனிவர்கள் விசேஷித்துச் சொன்னார்கள் -எ-று

மைபலாற்றியகுணத்து மாதவருரைப்பக்கேட்டுப்
பொய்யிலாமொழியானுள்ளம் பொருந்தியும்பொருந்தானாகித்
தையலாள்பக்கன்மேனாள் சாற்றியதனைக்கேது
செய்யலாமோவென்னத் திகைத்திருந்துரைக்கலுற்றான்

இ-ள்- மயக்கத்தைப் போக்கின நற்குணங்களை யுடையமகாரிஷிகள் அப்படிச் சொல்லக் கேட்டுப் பொய்யில்லாதவார்த்தைகளையுடைய சந்திரதயராஜன் மனதுசம்மதித்தும் சம்மதியாதவனாய்ப் பார்வதி சமேதனான பரமசிவன முன்னாளிலே சொன்னதற்குநம்மாலென்ன செய்யக் கூடுமென்று திகைத்திருந்தவனாய்ப் பின்புசொல்லத்தொடங்கினான் -எ-று

மூவராயவரின்முன்னு மூர்த்தியாருளிச்செய்த
தேவராகியமொன்றுண்டா மன்னது தெரியவல்லார்
யாவராயினும்யான்பெற்ற விளங்கொடிதனக்குக்கேள்வர்
ஆவராலவனிங்கெய்தி னறியலாமதையுமென்றான்

இ-ள்- அரியரப்பிரமாதிகளாய் அவர்களில் முதலான பரமசிவனானவரருளிச்செய்த தெய்வரகசிய மொன்றுண்டு அப்படியுண்டாகிய அந்தரகசியத்தைத் தெரிந்துக் கொள்ள வல்லவர்கள் யாராயிருந்தா

லும் காண்பெற்ற இளமையான கொடிபோல்பவளுக்குநாயக ராவார் ஆசையால் அந்தச்சந்திரன் இங்கேவந்தால் தெரிந்துக்கொள்ளலாகும் அந்த அரசனை இங்கேவருமபடி செய்யுங்களென்றுசொன்னான்

அரசைபிக்கழையுமென்ன வகமகிழ்ந்துவமைகூர்ந்து
விரைவுடனெழுந்திருந்து வேதமாமுனிவர்போனார்
இருநிலத்தரசர்க்கெல்லாஞ் சுயம்வரமேழுநாளென்
றுரைசெயுமென்றுதூதுமோலையும்போகவிட்டான்

இ-ள்- அந்த அரிசந்திர மகாராசனை இங்கே வரச்செய்யுங்களென்றுசொல்லவே மனது சந்தோஷமடைந்து சீக்கிரத்திலே யெழுந்திருந்த வேதப்பிராமணர்களான மகாரிஷிகள் போயினா கள் அவர்கள் போனபின்பு சந்திரதயன் பெரிய வுலகத்திலுள்ள அரசர்களுக்கெல்லாம் என்கன்னிகையானவள் அரசர்களே உங்களில்யாவரேனும் தனக்குச் சம்மதியான ஒருவரைகணவனாகச்செய்துக் கொள்ள விரும்பி யிருக்கிறார்கள் அதற்கு ஏழுநாளுள்ளதென்றுசொல்லுங்கள் என்றுதூதரையுமோலையும்போகஅனுப்பினான்

தொழுங்கழன்மன்னர்மன்னன் தூதர்சென்றுரைத்தபோதே
அழுங்கியவாசையோடு மளவிலாவுவகையோடும்
செழுங்குடைமன்னரெல்லாந் தேசமுந்நாடுநீங்கி
எழுங்கடல்வளைந்ததென்ன விண்டியந்தடைந்தாரன்றே

இ-ள்- எல்லாரும் வணங்கத்தக்க பாதங்களையுடையராஜாதிராஜனான சந்திரதயன் அனுப்பின தூதர்கள்போய்ச் சொன்னவுடனே மிகவும் வருந்தச் செய்கிற ஆசை யுடனே அளவில்லாத சந்தோஷத்தையுடையவர்களாய்ச் செழுமையான வெண்மைக்குடையையுடைய அரசர்களெல்லாரும தங்களுடையநாட்டையுந்தேசத்தையுமவிட்டுவந்து பொங்கிற கடல்சூழ்ந்தாற்போல் எங்கும் கன்னோசிநாட்டிலேவந்து நெருங்கிக் கூடினார்கள்-எ-று

சோலைகடோறுநந்நீர்க் குளக்கரைதோறுந்தேவ
ராலயந்தோறுமாத ரரங்குகடோறுமேம
மூலைகடோறுஞ்சீர்சான் முன்றில்கடோறுமேம
சாலைகடோறுமன்னர் தானைவந்திறுத்ததன்றே

இ-ள்- அக்காட்டிலேயுள்ள சோலைகளிலும நல்லஜலத்தையுடைய குளக்கரையிலும் தேவர் கோயில்களிலும பெண்களாடுகிற நாடகசாலைகளிலும் ஒதுக்கமான மூலைகளிலும் சிறப்பமைந்த வெளிமுற்றங்களிலும்பொன்மயமான சந்திரசாலைகளிலும் அரசர்களுடையசேனைகள் வந்திறங்கின-எ-று

மாரனைவென்றுடைந்தகண்ணை மணமகன்வருமுன்வந்த
ஏனையவேந்தர்க்கெல்லா மிமையவர்க்கரியவெண்ணு

○ சுயம்வரம்-கன்னிகை-ஒருவனை கணவனாகத்தானேவரித்தல்,

யானையுந்தேருமாரு மாதருமமைச்சர்தாமுஞ்
சேனையுமளவிட்டார்க்குஞ் செப்பலாந்தகைமைத்தன்றே

இ-ள்-மானைமருட்சியாலேஜெயித்துநெருக்குகின்ற கண்களையுடையவளான சந்திரமதிக்கு மாப்பிள்ளையாகிறவன் வருவதற்குமுன்னே மற்றையரசர்களுக் கெல்லாமுன்னதாய் வந்திரங்கினதேவர்களுக்கு மரிந்து சொல்லக்கூடாத யானைக்கூட்டங்களையுந்தேர்க்கூட்டங்களையும் குதிரைக்கூட்டங்களையும் மந்திரிகள் முதலாயினோர் கூட்டங்களையும் காலாள்களான கூட்டங்களையும் இவ்வளவென்றளவுசெய்து எப்படிபட்ட புலவர்களாலுஞ் சொல்லாகிய தகுதியுடையதன்று-எ

இந்நகர்முழுதுமன்ன ரீண்டியபின்னயோத்தி
நன்னகர்தன்னிற்புக்கார் நற்றவமுனிவரெல்லாம்
மன்னவனெழுந்திருந்து வணங்கிவாய்புதைத்துநீங்கள் ன்
சொன்னதுங்கேட்டவாறுஞ் சொல்லுமென்றெடுத்துரைத்தா

இ-ள்- இந்தப்பட்டணமெல்லாம் அரசர்கள்வந்து கூடின பின்பு அயோத்தியென்கிற அந்தநல்ல பட்டணத்துக்குள்ளே போனார்கள் நல்லதவத்தையுடைய முனிவர்கள் எல்லாரும் அதுகண்டு அரிச்சந்திரமகாராஜன் எழுந்திருந்துவந்து வணங்கிவாயைமூடிக்கொண்டுமுனிவர்களே நீங்கள்போச் சொன்னதும் அதைக்கேட்டு அந்தஅரசன் சொன்ன வகையும் சொல்லுங்களென்று துதிசெய்துகேட்டான்-எ-

அருந்தவமுனிவரெல்லா மரசனைநோக்கிஐய
பொருந்தவமுடையார்மண்ணி னீருலாற்பிறருமுண்டோ
திருந்திழைதனையுனக்கே திருமணமுடிக்கத்தாதை
பொருந்தினன்வல்லைநீயு மெம்முடன்போதுமென்றார்

இ-ள்- அதற்கு அரிதான தவங்கள் செய்ய வல்லமுனிவர்களெல்லோரும் அரிச்சந்திரமகாராசனைப் பார்த்து ஓஅரசனே பெரியதவத்தையுடையவர்கள் உலகத்திலே நீயேயல்லாமல் வேறேசிலருமுண்டோ அந்தச்செவ்விதான ஆபரணங்களை யணிந்துள்ள சந்திரமதியைஉனக்குத்தானே இருக்கலியாணஞ் செய்துமுடிக்க அவள்தகப்பன்சம்மதியாயினன் விரைவிலே நீயுமெங்களுடனே கூடவேவரக்கடவாயென்று சொன்னார்கள்-எ-று.

என்றினிதுரைத்தலோடு மெழுந்தபேருவகைவெள்ளம்
நின்றினிதேக்கவாகு வலயங்கணிமிர்ந்துநீங்கக்
குன்றினுமுயர்ந்தசெம்பொற் கோயில்விட் டெழுந்துபோந்து
முன்றிலின்வந்துமன்ன னிலையனமொழியலுற்றான்

இ-ள்- என்று இப்படிச் சந்தோஷமாகச்சொன்ன அளவிலேஉண்டான பேரின்பக் கடலானது நிலைகொண்டு நன்றாகவளரவுந்தோள் வளையங்கள் தோளுக்குப் போதாமற்கழன்று போகவும் உடனேமலையிலுமுயர்ந்துள்ள தன்னுடையசெம்பொன் மயமான அரண்மனையை விட்டெழுந்திருந்துபோய் ஆசாரவாசலிலே வந்துநின்று அரிச்சந்திர மகாராஜன் இவ்விதமானசிலவார்த்தைகளைச்சொல்லத் தொடங்கினான்

கன்னலங்கழனிவேலிக் கன்னோசிநோக்கியிவ்வூர்
மன்னருமமைச்சர்தாமுஞ் சேனையுமாதராரும்
முன்னரேசெல்கவென்று மொழிந்தருகணைக்கண்சாரதி
வன்னமாமணித்தேர்கொண்டு வருகெனவருளிச்செய்தான்

இ-ள்- கரும்புகள்விளைகிற அழகிதான வயல்களை வேலியாகச்சூழ்வதான கன்னோசிநாட்டைக்குறித்து இந்தவூரிலுள்ள அரசர்களும் மந்திரிகளுஞ்சேனைகளும் இவ்வனைவோர்பெண்களும்முன்னேநடக்க கடவதென்று உத்தரவுசெய்து தனதுசாரதியைக் கண்ணாலே பார்த்துஎன்னுடைய அலங்கிருதமான பெரியரத்நகசிதமாகிய தேரைக் கொண்டுவரக்கடவையென்று உத்தரவுபண்ணினான்-எ-று.

வேறு.

மாதங்கமட்டல்கவ்வயப்பரிமா
பூதம்பலதேரொடுபிணைநிறீஇச்
சூதனகொடுவந்துசுடர்க்கழலோன்
பாதங்களின்மீதுபணிந்தனனே

இ-ள்- அநேகம்யானைகளையும் அநேகசிங்கங்களையும் அநேகம்வெற்றிபொருந்தியகுதிரைகளையும் அந்தத்தேரிலேசேர்க்கட்டி நிறுத்திச்சாரதியானவன் கொண்டுவந்து காட்டிப்பிரகாசமுள்ள வீரகண்டாமணிகட்டின அரிச்சந்திரனுடைய பாதங்களைவணங்கினான்-எ-று.

வாரேறுசெழுந்தடமாமுரசம்
நிரேறியசலசமுழங்கின்றதிரத்
தாரேறுபுயங்கடதும்பநெடுந்
தேரேறிவிரைந்துசெலுத்தினனே

இ-ள்- தோலாலிறுகக் கட்டியிருக்கிற அழகிதான அகலமானபெரியபேரிகைகளும் முன்னே நீரிலேசஞ்சரிப்பதான சங்குகளும் நிலைகொண்டுமுழங்கமாலைகள் தங்கினதோள்கள்பூரிக்க அந்தநெடிய தேரின்மேலேறி அதிசீக்கிரமாகச் செலுத்தச்சென்றான்-எ-று.

நன்றேறினமன்னனடத்திடவே
சுற்றேறுநிறைந்தயனுன்னினவால்

குந்தேவல்செய்யும் பலதொற்றவர்தம்
பொற்றேர்சதகோடி பொருட்பெறவே

இ-ள்- அந்தநல்ல தேரை அரிச்சந்திரன் செலுத்திக்கொண்டுபோ
கும்போது நாற்றிலும் அதிகமாக நிறைந்தது பக்கங்களிலும் நெருங்
கினது இவனுக்குச் சிறிய பணிவிடைகள்செய்கிற அசேவகர்களு
டைய பொன்மயமான தேர்கள் மலைகள்போல்-எ-று.

கவிகைப்படுநீழல்கவிப்பமணிச்
சிவிகைத்திரளின்மிசைசென்றனரால்
புவிகைக்கொளவைச்சர்புகழ்ந்தரசைக்
குவிகைத்தலமிட் டொருகோடியரே

இ-ள்- குடைகளினுண்டாகிற நிழல்குடைத்தப்பல்லக்குகளின் மே
லேபோனார்கள் உலகங்களைத் தங்கள் கைவசப் படுத்திக் கொண்டிரு
க்கிற மந்திரிமார்கள் அரசனைப்புகழ்ந்து கொண்டு குவித்தகைக ளு
டனே ஒருகோடிபேர்கள்-எ-று.

வன்னக்குவிமாமலைவல்லியரும்
கன்னற்சிலைவெளவனகாளையரும்
அன்னத்திரளோடரியினதிரள்வக்
தென்னக்கடிகெய்தினரெங்கணுமே

இ-ள்- பொன்னிறமான தேமல்படர்ந்த குவிந்தபெரியதனங்களை
யுடைய கொடிபோன்ற பெண்களும் கரும்புவில்லையுடைய மன்மத
னையொப்பான யெவ்வனபுருஷர்களும் அன்னக்கூட்டத்துடனே சி
ங்கக்கூட்டங்கள்வந்தாற்போல விரைந்து வருவதானார்க ளெங்கிட
த்தும் -எ-று,

சிறைமேவியமேல்வருதேவனெனப்
பொறைமேவொளிர்வெண் சிவிகைப்பொலிவுற்
றிறையோனுடனைச்சரிறைஞ்சிடமர்
மறையோனிவசிட்டனும் வந்தனனே

இ-ள்- இறகையுடைய அன்னவாகனத்தின்மேலே வருகிற பிரம
தேவன்போல் தாங்குகிறவர்கள் சுமந்தவுடனே விளங்குகிறவெள்
ளைமுத்துப் பல்லக்கிலே விளங்குகிறவராய் அரசனுடனே மந்திரிக
ளும்வணங்கப் பெரியதானவேதங்களைச் சொல்லிக்கொண்டுவசிஷ்ட
மகாமுனிவரும்கூடவே பிரயாணமாய்வந்தார்-எ-று.

தரைசேர்கடலொத்தனயானைகளுந்
திரைபோலநடந்தனதின்பரிமா

விரைசேருவிதிதிரளவிழ்பலமால்
வரைபோலகடந்தனவாரணமே

இ-ள்- பூமிமேலே வருகிற கடலே ஒப்பாயினசேனைகளெல்லாம் அந்தக்கடலிலே கிளருகிற அலைகள்போற் சென்றன பலமானகுதிரைகள் வாசனைபொருந்திய அருவிக்கூட்டங்கள் விழுகிற அநேகமான உயர்ந்த மலைகள்போற் சென்றனயானைகள்-எ-று.

கல்லால்நெறிசெல்வது கால்கள்பொறு
வெல்லாமிகுவாதனைமேவுமெனச்
சொல்லர்முனமே துறவோர்விரைவிற்
௦ சொல்லாநெறியேயினர்சென்றனரால்

இ-ள்- கற்காத மூடர்கள் செல்லும் வழியே செல்லுகிறது நம்முடைய கால்கள் தாங்கா ஆகையாலே குதிரைமுதலிய வாகனங்களெல்லாம் மிகவுந் துன்பத்தையே செய்வனவாமென்று அரசன் உத்தரவுகொடுக்குமுன்னே தாமே சந்நியாசிகள் அதிசீக்கிரத்தில் ஒருவராலும்போகக்கூடாத ஆகாசமார்க்கமேவழியாகக் கொண்டுசென்றார்கள்

பலவெண்குடையும்பவளக்குடையும்
குலவிம்பலசெம்மணியின்குடையும்
உலகுங்கதிருஞ்சதகோடியுவர்
நிலவும்மெனவெங்குநிறைந்தனவால்

இ-ள்- அநேகம் வெண்முத்துக் குடைகளும் அநேகம் பவளக்குடைகளும் கொண்டாடத்தக்க அநேகஞ்சிவந்த ரத்னக் குடைகளும் ஆகாயத்திலே உலாவுகிற நூறுகோடி சூரியரும் நூறுகோடி பூரணச்சந்திரர்களும்போல எவ்விடத்திலும் நிரம்பின-எ-று.

ஆதித்தனருங்குலமன்னவர்தங்
கீர்த்திப்புகழெங்குநிறைந்ததெனச்
சோதிக்கவரித்தொகையுங்கொடியும்
வீதித்தலைதோறுமடைத்தனவால்

இ-ள்- சூரியனுடைய அருமையான குலத்திலே பிறந்த அரசர்கள் கீர்த்தியையுடைய புகழானது எவ்விடத்திலும் நிரம்பியதுபோலப் பிரகாசத்தையுடைய சாமரக் கூட்டங்களும் கொடிகளும் இவர்கள் செல்லுகின்ற வீதியினிடங்களெல்லாம் நெருங்கின-எ-று

கற்றோர்மிகர்த்தகவெட்பரிவார
ரேற்றோர்மிகர்த்தனயானைவரைக்

௦ சொல்லாநெறி ஆகாசமார்க்கம

கூடற்றோடிகர்த்தனதேர்தலவும்
ஆற்றோடிகர்த்தவனிகமரோ

இ-ள்- வாயுவேகத்துடனே ஒப்பாகிச் சென்றனவேகத்தையுடைய குதிரைகள் மேகத்தையும் அதன் முழக்கத்தையும் ஒப்பாகிச் சென்றனயானைகள் மலைகளின் வெவ்வேறான உயர்வை ஒப்பாகிச்சென்றன ரதங்கள்சூழ்ந்துசெல்கிற ஆறுகளைஒப்பாகிச்சென்றனசேனைகள்

மழுவுங்கரவாளமுங்வார்சிலையும்
எழுவுங்குலிசங்களுமேதிகளும்
கொழுவும்பலவளையும்பலகுந்தமுநீண்
முழுவெஞ்சுடர்வேல்களுமொய்த்தனவால்

இ-ள்- அப்படிச்செல்கிற சேனைக்கூட்டங்களிலே மழுவாயுதங்களும் கைவாள்களும் நீண்டவிற்களும் எழுத்தண்டங்களும் வச்சிராயுதங்களும் தோமரங்களும் கொழுக்களும் சக்கரங்களும் அநேக கைவேல்களும் நீண்டமுழுதும் வெப்பத்தைக்கொண்ட ஒளிபொருந்திய சூலங்களும் நெருங்கின-எ-று.

மீயுற்றுடனெற்றியவெம்படையின
வாயுற்றெழுவெம்பொறிமண்டுவுநீள்
வேயுற்றபெருங்கிரிமீதெரியும்
தீயுற்றனவொத்தனசேணளவும்

இ-ள்- மேலேநிகண்டு ஒன்றுடனே ஒன்று மோதுவதாகிய அந்த வெவ்விதமான ஆயுதங்களின் வாய்களிலே உண்டாகிஎழுகின்றவெவ்விய நெருப்புப்பொறிகள் நெருங்குவனவாய் நீண்ட மூங்கில்கள் பொருந்திய பெரியமலைகளின்மேலே எரிகிறநெருப்புப் பற்றினதை யொத்துவிளங்கின ஆகாயத்தளவும்-எ-று

நலிவுற்றுநுடங்கிடைநன்னுதலார்
பொலிவுற்றணிதேர்மிசைபோயினரார்
கலிவுற்றெழுநீள்கனகக்கிரிமே
மலிவுற்றெழுஞ்சிகண்மானுவென

இ-ள்- வருத்தங்கொண்டு துவளுகிற நல்லநெற்றியையுடையபெண்கள் நிறைவுகொண்டு அழகிய தேர்மேலேறிச் சென்றனர்கள் எப்படிக்கென்றால் கடலிலேதோன்றி யுயர்ந்திருக்கிற நீண்ட பொன் மலைகளின்மேலே மிகுதிகொண்டு உயர்ந்துள்ள பொன்னிறக்கொடிகளை ஒப்பாயிருக்கின்றன வென்றுசொல்ல-எ-று.

கருமாமுகிலன்ன கவின்குழலார்
பெருமால்கரியின் பிடர்மேல்வருமா

விருகாறுநிறுக்கிடையேயொழுகின்
வறுமாறுதிகழ்த்தனைவயமேலாய

இ-ள்- கறுத்த நிறத்தையுடைய மேகங்களை யொப்பான அழ கான கூந்தலையுடைய பெண்கள் உடல்வெளுத்து யுகர்ந்திருக்கிற மக் களின் றுறைகளின்மேலே நிலமுதலியவைகளிருக்கின்றனவெ ன்றால் மிகப்பெரிதான மேகத்தினிடையே தோன்றுதலான மின்றுரு வமைநாயகல் என்கின்றனதி வருவனவற்றை ஒப்பாயின அவ ர்கள் செல்லுகிற இடங்களெல்லாம்-எ-று.

விலையுள்ளவாகிரதிமுவெம்பரிமேல்
சிலைகள்ளுதலார்பலர்சென்றனரால்
உலையும்புனல்வாரிதிரைத்துரையிறால்
அலையுந்திரைமேல்வருமன்னமென

இ-ள்- விலைமதிக்கக்கூடாத வேகத்தையுடைய குதிரைகள்மேலே வில்லைப்போலும் நல்லநெற்றியையுடைய பெண்கள்பலருஞ் செ ன்றார்கள் எப்படிக்கென்றால் ஒருவரும்பின்றாமறியா நீரையுடைய கடலிலே காற்றினாலே யசைகிற அலைகளின்மேலேவருகிற அன்னங்களைப்போல்

பரிதுன்னநெகிழ் படைதுன்பமத
கரிதுன்னவிழிக்குடைதன்னால்
வரிவின்றநெருக்குடையர் வெண்டரளம்
சரிகின்றபுனற் சயுகக்ககலையே

இ-ள்- குதிரைகள்நடந்துச் செல்லவும் தேர்முதலியவைகள்தங்கிச் செ ல்லவும் மதயானைகள் நடந்துச் செல்லவும் நாற்புறத்திலும் கூட்டத்துடனே யிருந்த அரிச்சந்திரமகாராஜன் விசாலமான செழுமையுள்ள ஒளியையு டைய வெண்முத்துக்கள் தெறிக்கின்ற அச்சயுகத்தையுடைய-எ-று

விரையேறியதார்புனைவேலினவை
வரையேறுமணிக்கெருக்குதலால்
நுரையேறியதண்புனறன்னநெகிழ்
கரையேறிவராவளர்கின்றனவே

இ-ள்- பரிமளமிகுவதான மாலையணிந்த கொலைத்தொழில் செய் கிறவேலாயுதத்தையுடைய அரிச்சந்திரமகாராசனுடையவரிசைவரி சையாய்க் கரைபோதுகிற சேனைகள் நெருங்குகிறதினாலே நிலத்துக் குமேலே பெருகுவதான குளிர்ந்த நீரானது மேலிடுகிற கரையின்மே லே செல்லவல்லவான வாளைமீன்களுக்கோரளவில்லை-எ-று;

அரியன்னவர்மின்னனையார்கடனம்
தெரியும்படிதுன்னிநெருக்குதலால்

பரியும்மணிமாலைகள்பார்க்கிலர்பின்
சரியுமமணிமேகலைதாமறியார்

இ-ள்- சிங்கங்களையொத்த புருஷர்களோடே கூடநடக்கிறபின்னலை யொத்த பெண்களுடைய கொங்கைகளிடங்கொண்டுநெருக்கித்தோ ன்றுவதாய் மிருந்து நெருக்கிறதினாலே அற்றுவிழுகிற ஆபரணங்க ளையும் மாலைகளையும் என்றாலுங்கவனிக்கிலர்கள் பின்னுங்கீழே சரிந்து வி ழுந்ததிருமேகலையையும் தாங்கள் தெரிந்துக்கொள்ளாமற் செலலுகிறார்கள்-எ-று.

ஆரணர்முனியாமதனனவர்தோள்
பரதாரியர்கொங்கைபடப்படமுன்
ஒருநாளுளவாகிறையொன்றுதல்பால்
வருநாண்மனுநிதி வழங்கிலதால

இ-ள்- சிவனானவராலே கோபிக்கப்படாத மன்மதனையொத்த பு ருஷர்களுடைய தோள்களிலே அன்னியர் மனைவிகளுடைய கொங் கைகள் சந்தடி நெருக்கத்தினாலேமோதமோதச் செல்லுகிறதினாலே முன்னே ஒருநாளாயினும் அழியாதகற்புள்ள அழகியநெற்றியை யு டைய பெண்கள் இப்போது கலியாணத்துக்கு வருகிறநாளிலேமனு வானவர் பிறருடைய தோள்களிலே பிறபெண்கள்கொங்கைபடலா காதென்று சொன்னது சொல்லவில்லை-எ-று.

வெளிறுஞ்சுடர்வேலிளவேளனையான்
பிளிறுங்கரிதுள்ளவிழுந்துபெயர்
தொளிறுந்தன வல்லியொருத்தியைக்
களிறென்றிருகைகொடுகட்டினனே

இ-ள்- வெண்மையான ஒளியையுடைய வேலைக்கொண்டமன்மத னையொத்த ஒருவன் முழங்குகின்ற யானைவெருண்டசையக்கீழேவி ழுந்துபுரண்டு விளங்குவதான கொங்கைகளுடைய கொடிபோல்பவ ளான ஒருத்தியை அந்தயானைதானென்று தனதிருகைகளாலுந்தழு வினான்-எ-று.

ஆடுங்கழல்மன்னனேகருடன்
நாடுந்தருவும்பலநண்ணிநெடுங்
காடுங்கிரியும்பல்கண்டுகடந்
தோடுங்குளிர் கோதியுந்தனனால்

இ-ள்- அலம்புகின்ற வீரக்கழலுடைய ஓரரசனாகிய அரிச்சந்திர ன் இப்படியாக அநேகம் அரசர்களுடனே நாடுகளும்மரச்சாலைகளு ம்பலவாக வுள்ளவெல்லாம் பார்த்துக்கொண்டுபோய் அப்பால் நெடு

தானைகாலேகளும் மலைகளும பலவாசக்கண்டு கொண்டுபோய் நடுவதா னருளார்ந்த புனலையுடைய கோமதியாற்றினருகே போயினான் எ-று

வேறு.

கானயாறனைத்தையுங்கடந்துகௌசிக
மானயாறாயகோமதியைநண்ணியே
யானையுமிரதமு மிவுளியீட்டமும்
சேனையுமன்னனுஞ் சென்றிருந்தவே

இ-ள்- அப்படிக் காட்டாறுகள் முழுதுங்கடந்துபோய்கௌசிகை யென்றுபெயர் கொண்டதான கோமதியாற்றையடுத்துயானைகளும் இரதங்களும் குதிரைக் கூட்டங்களும காலாள்களும் அரிச்சந்திர மகாராசனும்போய் இறங்கலாயின-எ-று

தோய்கதிர்வேற்படை சூழ்ந்துதுன்னிட
ஆய்கதிர்முடியினானாற்றைநண்ணினான்
பாயகதிர்படலையுட் சுருக்கிப்பையவே
காய்கதிர்ச்செல்வனுங் கடலைநண்ணினான்

இ-ள்- ஒளிதோய்ந்த வேலாயுதங்களுடைய சேனைகள் எங்குஞ் சூழ்ந்தலாய்நெருங்க எங்குகும்பரவுவதான ஒளியை யுடைய கிரீடமணிந்த அரிச்சந்திரன் தானும் அந்தகோமதியாற்றினருகேபோயிறங்கினான் அப்போது எங்குப்பரவுவன வானகிரணக்கூட்டங்களைத்தன்னுள்ளே ஒடுக்கிக்கொண்டு மெள்ளச்சுடுகிற ஒளிபால் மிக்கசூரியனும் மேலைக்கடலிலே போயிறங்கினான்-எ-று

ஆழ்வேழ்கருங்கடலதனின்வெய்யவ
வீழலுமன்னனும் வேந்தர்மக்களும்
ஏழையார்யாவருமிரதமுங்கட
வேழமுஞ்சிவிகையும்விட்டிறங்கினார்

இ-ள்- ஆழத்தையுடைய தாயலைகளெழுகிற கறுத்தகடலிலேபோய்ச்சூரியன் முழுகினவுடனே அரிச்சந்திரமகாராசனும்மற்றுமுள்ள இராசகுமாரர்களும் பெண்களெல்லாருஞ்சேர இரதங்களையும்மதயானைகளையும் பல்லக்குகளையும் விட்டுக்கீழேயிறங்கினார்கள்-எ-று

மண்டலவேந்தருமாதரீட்டமும்
திண்டிறலமைச்சருஞ்சேனைவெள்ளமும்
தண்டாளம்வளைதவழுமாநதி
வண்டலிடமுறவிருந்தவே

இ-ள்- உலகத்தரசர்களும் அவர்களுடைய பெண்டுகளின் கூட்டமும மிகுந்த புத்தியல்லமையையுடைய மந்திரிகளுமமற்றச் சேனையின் கூட்டமும தன்னிதானமுத்துக்களைச் சங்குகள் பெற்றுக்குத்தவழுவனவான அந்தக் கோமதியென்னும பெரிய ஆறானது சேறுசெய்யும் இடங்களும வெளியில்லா திருக்கும்படி வந்திறங்கின-எ-று.

பட்டினுமணியினும்படங்கமைத்துவின்
முட்டியசெம்பொனின் முடிகள்வைத்துமேற்
கட்டியும்பாதகையுங் கட்டிநிடிரை
விட்டனர்மன்னருமின்னனாருமே

இ-ள்- பட்டினாலும் மணிகளாலுஞ் செய்திருக்கிற கூடாரங்கள் நிறுத்தி ஆகாசத்தையளாவுவதாகச் செம்பொன்னாற் செய்த சிகரங்களைவைத்து மேற்கட்டிகளும் கொடிகளுங்கட்டி நீண்ட திரைகளுஞ் சூழவிட்டார்கள் அரசர்களும் அவர்கள்பெண்டுகளும்-எ-று

சண்பகத்தருவினுஞ்சந்தனத்தினும்
திண்டலையகிலினுந்தேவதாரத்தும்
தண்பரும்பலவினுந் தாறுபாய்பசும்
பண்படுகரிகளும்பரியும்பூட்டினான்

இ-ள்- சண்பகமரங்களிலும் சந்தனமரங்களிலும கெட்டியான கிளைகளையுடைய அகிலமரங்களிலும்தேவதாரமரங்களிலும்தண்ணிதாய்ப்பருத்துள்ளபலாமரங்களிலும்மதத்தாரை ஒழுவதானபசுமையான சாந்துகள் முகத்திலே பூசுதலையுடைய யானைகளையும் குதிரைகளையும் கட்டினார்கள்-எ-று

நிலைமரம்பிளந்திட நிமிர்ந்துருத்திய
கொலைமதயானையின்கோடுபோலவே
சிலைமதன்னையவர்மார்புற்றேனனார்
முலைமதயானையின்கோடுமூழ்கின

இ-ள்- அங்கேநிற்கிற மரங்கள்பிளக்க உயர்ந்துருத்தினகொலைசெய்கிற மதயானையின் கொம்புபோல் வளைவாய் வில்லையுடையமன்மதனையொப்பான புருஷர்களுடைய மார்பிலே தேன்போலும் வசனத்தையுடைய பெண்டுகள் முலையாகிய மதயானைகளின் கொம்புகள் அழுந்தலாயின-எ-று.

மோதுகொண்டலைப்பொருமுரியானைதம்
மீதுகொண்டலைத்தபெய்ம்மெலிவுமாறமென்
தாதுகொண்டலைகுழற்றையலார்முலை
வேதுகொண்டொழிந்தனர் வீரர்மீதெலாம்

இ-ள்-கடலிலேயோதுவதான மேகத்தையொப்பாகப் பகைவர்மேலே யோதுகின்ற பெரியயானைகளின்மேலேறிவந்து அயர்வானவுட

ம்பின் மெலிவுறா மெல்லியபாதங்களைக் கொண்டுமலர்க ளலர்கிற கூந்தலையுடைய பெண்டிகள் தங்கள் தனங்களாகியவெம்மையைக்கொ ண்டு ஒற்றுதல்செய்தார்கள் அந்தவீரர்கள் உடம்பெல்லாம்-எ-று

அகிலொடுசெந்தனத் துளியிறைக்கிடு
துகில்பொதிமண்புகையெரிந்துமமும்
திகிலெனப்பலபல செக்கர்வானம்வெண்
முகில்பொதிந்தனவென மூண்டெழுந்தவே

இ-ள்- அகிற்சட்டைக ளுடனே சந்தன கட்டைகளாலே மூட்டி யெரிக்கிற அவர்கள் சிலையிலே முடியத்தக்க செம்மணியையொத்தர த்தங்களையொப்பான நெருப்பும் புகையுங்கண்டவர் நெஞ்சுதிடுக்கிட அநேகம் விதங்களாகச் செவ்வானமும் வெள்ளை மேகமுங்கம்முதலா யினபோல் மேல்மேலாய்க் கிளர்ந்தன-எ-று

ஆறிலாதணிபடங்கத்துலேற்றிய
மாறிலாத்துளங்கெழின்மணிவிளக்கொளி
சேறலாந்தகைமையெய்திநாற்பொதி
தூறெலாமின்மினித்தோற்றமென்னவே

இ-ள்- புகுதற்குவிட்ட வழியல்லது வேறுவழிகளில்லாமல் எங்கு மறப்புதலான கூடாரத்துள்ளே எற்றிவைத்திருக்கிறகாற்றுகியபகை யில்லாமல் விளங்குகின்ற அழகையுடையரத்நவிளக்குகளின்ஒளியா னது துணிந்து சொல்லாகிய தகுதியையுடையவன்சிலம்பிப்பூவாலே கட்டப்பட்ட நூற்படலைகள்முழுதும் மின்மினிப் பூச்சிகளினுடைய தோன்றுதலென்று(சேறலாந்தகையை) எ-று.

குசைநெடுங்கடும்பரிக் கொற்றமன்னவன்
வசையிலாதங்குல மடந்தைமாமுலைக்
கிசைவனோவென்றவக் கெட்டிப்பார்க்கெனத்
திசையெலாங்கதிர் விரித்தெழுந்ததிங்களே

இ-ள்- கடிவாளத்தை யுடைய நீண்டவேகமான குதிரையேலேறு ற செயத்தை கொண்ட அரிச்சந்திரமகாராசனானவன் யாதொருப ழிப்புமில்லாத நமது குலத்துப்பெண்ணானசந்திரமதியினுடையபெ ரியதனங்களுக்குத் தகுந்தவனோவென்று சந்தோஷித்து அவனை எ ட்டிப்பார்ப்பதுபோல எட்டுத்திக்கிலும் தனது கிரணங்களை விரித் துக்கொண்டு உதயமாகிறான் சந்திரன்-எ-று

செங்கயலணையகட் டெரிவைதன்னிரு
மங்கலமுணர்ந்துமன்மடந்தையட்டதோ

பங்கயவிலிரசிதப்பானைமேல்வழி
பொங்கலிற்புதுநிலாப்பொலிந்ததெங்குமே.

இ-ள்- சிவந்தசெங்கெண்டைமீனைப்போலான கண்களையுடைய சந்திரமதியின் திருக்கலியாணத்தைத் தெரிந்து பூமிதேவிசமையல்செய்ததாகிய ஒருசேதாரமுமில்லாதவெள்ளிப்பானைமேல்விரிந்துபொங்குகிறபாற்பொங்கல்போல் புதிதான சந்திரிகை நிறைந்தது விளங்கின எல்லிடத்தும்-எ-று.

பெருத்தவானில்விடப்பெறைநயாதரைக்
கருத்துவக்காதர்கலந்துறங்கினர்
வருத்தமுங்காதலும்வளரமன்னவன்
ஒருத்தனேதனிக்கிடந்துறக்கநீங்கினன்

இ-ள்- அப்படிப்பரவின வெண்மையான சந்திரிகையிலே அதிபாமையையுடையபெண்கள் மனதொருமிக்க நாயகர்கள்கூடி நித்திரைசெய்தார்கள் மனவருத்தமும் ஆசையும் மேன்மேலாகிவளர அரிச்சந்திரன் ஒருவனே தான் தனியாய்ப்படுத்து நித்திரையில்லாதிருந்தான்- எ-று.

உருவெளிநோக்குவனுவப்பனுன்னுவன்
கரவினிலெங்குவன்கலங்குவன்மதி
யரவினுடன்கனென்மனதுபோம்வழி
இரவுபோவதற்கிடமில்லையோவென்பான்

இ-ள்- அப்படிநித்திரை கொள்ளாமல் சந்திரமதியினுடைய உருவெளித்தோற்றத்தைப்பார்ப்பான் பார்த்துச்சந்தோஷிப்பான் அதையேகருதுவான் அதுமறைந்தபோது துக்கிப்பான் கலங்குவான்சந்திரகுலத்துச் சந்திரமதியினிடத்திலே என்மனதுபோவதாகிய வழியில் இராத்திரியிலேமாத்திரம்போவதற்கு இடமில்லையோவென்றுபுலம்புவான்-எ-று.

கொடியமாமதனையுங்கொழுநிலாவையும்
கொடியினுமொருகுறைசொல்லிநோகிலான்
படிகிலாவிழிவையும்பாரில்வேர்விறி
விடிகிலாவிரவையும்வெறுக்கும்வேளையில்

இ-ள்- கொடுமையையுடையபெரியமன்மதனையும் செழுமையான சந்திரனையும் கொடிப்போழுதாகிலும் ஏதேனுமொரு குறையைச்சொல்லி நொந்துகொள்ளாதவனால் தூங்காத கண்களையும் உலகத்திலே வேரூன்றி விடியாதிருக்கிற இராத்திரியையும் வெறுத்துக்கொண்டிருக்கிறசமயத்தில்- எ-று.

மையலுங்கங்குலுமதியும்வாட்டவில்
வையனேவெளியனென்றணிவயிற்றினில்
கையினாலறைந்துகூய்க்காமர்வாரணம்
வெய்யவாவிரையவாவெனவிளித்ததே

இ-ள்- காமமயக்கமும் அர்த்தராத்திரிகாலமும் சந்திரனும் அரிச்சந்திரனை வாட்டஞ்செய்வனவாயிருக்க அப்போது இந்த ஐயனான அரிச்சந்திரனே எளியவனாயிருக்கிறானென்று தமதழகானவயிற்றிலேகையினாலேமோதியடித்துக்கொண்டு கூப்பிட்டு அழகானகோழிகள் சூரியனை உதயமாகிவிரைவில்வாவென்று கூப்பிட்டது -எ-று

வாழிவெங்கதிரவனுதயமுன்னறிந்
தாழியுந்திங்களுமார்ப்படங்கின
கோழியுமார்த்தன ௦ குக்கிலார்த்தன
௦ குழியிற்புள்ளெலாந்துள்ளியார்த்தவே

இ-ள்- வெயிலையுடையவனான வெப்பமான கிரணத்தைக் கொண்ட சூரியோதயத்தை முன்னே தெரிந்து கடலுஞ்சந்திரனும் தங்கள் ஆரவாரமடங்கின அப்போதுகோழிகளெல்லாங் கூவினசெம்போத்துகள் சத்தித்தன குளங்களிலே தூங்குகிறபட்சிசாதிகளெல்லாம் துள்ளித்துள்ளிச் சத்தித்தன-எ-று.

நங்குலத்தரசனை நலிந்தபாதகக்
கங்குலைத்திங்களைக்கனன்றுதேர்கதுப்ப
அங்கண்மாஞாலம்விட்டகற்றுவேனெனாச்
செங்கதிர்க்கடவுளுஞ்சிவந்துதோற்றினான்

இ-ள்- நமதுகுலத்திலேபிறந்த ஓரரசனான அரிச்சந்திரனை வருத்தப்படுத்தின பாவிகளான இராத்திரியையும் சந்திரனையும் கோபித்துத்தனதுதேரைச்செலுத்திக்கொண்டு அழகிதானஇடத்தையுடைய பெரியஉலகத்தைவிட்டுப் போம்படிசெய்கிறேனென்று சிவந்த சூரியபகவானுந் தனதுகண்கள் சிவப்பாயுதயமாயினான்-எ-று.

படர்கொடுத்தாங்கிலைபறித்தமன்னனுக்
கிடர்விளைத்தெய்தியவிராடமங்கையைப்
புடவிவிட்டேங்கினுய்போனதிக்கெல்லாம்
தொடர்மினென்றெண்ணலாச்சுடரையேவினான்

இ-ள், உலகத்திலுள்ள துன்பத்தைப் போக்கித் தருமத்தினாநிலையைக்காத்த அரிச்சந்திர மகாராசனுக்குத்துன்பத்தை யுண்டாக்

௦ குக்கில்-செம்போத்து ௦ குழி-குளம்

இக்கொண்டிருக்க இராத்திரியாகியபெண்ணை அவள் இந்தஉலகத்தை விட்டுப்போனாலும் அவளோடிப்போன திசைகளெல்லாந் தொடர்ந்துபற்றுங்களென்று கணக்கில்லாத தனதுகிரணங்களையனுப்பினான்,

அலறிவந்தெழுமுரசதிரவாழிபோல்
புலரியிலரணடிபூரித்தன்னனும்
சிலர்சிலர்சுடர்மணித்தேரிலேறினார்
பலர்பலகரிகளும்பரியுமேறினார்.

இ-ள்- அப்படிச்சூரியன்வந்து உதயமாகவே கடலைப்போல் பேரிகைகள்முழங்க விடியற்காலத்திலே சிவனடியைப் பூசைபண்ணி அரிச்சந்திரமகாராஜனும் அவனைக்கூடிவருகிற சிற்சிலரும ஒளியையுடையரத்நகசிதமான தேர்மேற்கொண்டவர்களாக மற்றப்பலரும்பலபல வானயானைகளின்மேலும் குதிரைகளின்மேலுமேறினார்கள்-எ-று.

அந்தமாலாற்றைவிட்டகன்றுமன்னவன்
முந்தமால்கரிபரிநடப்பமொய்த்துடன்
கந்தமாலைக்குழற்கடலுடன்வரச்
சந்தமால்வரைத்தடஞ்சாரணண்ணினான்

இ-ள்- உடனே அந்தப்பெரிதான கோமதியாற்றைக்கடந்து நீங்கி அரிச்சந்திரமகாராசன்முன்னே உயர்ந்தயானைகளும் குதிரைகளும் நடக்க நெருங்குதலாய்க்கூடவேபரிமளத்தையுடைய மாலைகளணிந்த கூந்தலையுடைய பெண்கள் கூட்டமானது கடலுந்தொடர்ந்துவரச் சந்தனமரங்களோடுகூடி உயர்ந்துள்ள மலைகளினுடைய பெரியசாரலைப்போய்ச்சேர்ந்தான்-எ-று.

அரிதகிபலர்சமாலகாமகினி
விரிமலர்சண்பகம்வேங்கைகோங்கைகமை
சொரிமலர்ச்சுரபுன்னையசோகுதுன்னிய
வரிமணக்காவுடைத்துவந்துவைகினான்

இ-ள்- கடுக்காய்மரம்பலாமரம் மாமரம் மஞ்சாடிமரம்பலாமரம்விரிகிற மலர்களுடைய சண்பகமரம் வேங்கைமரம் கோங்குமரமிலாங்கில் மரம் சொரிகின்ற மலர்களுடைய சுரபுன்னைமரம் அசோகமரம் ஆகிய இவ்வகைமரங்கள் நெருங்கியவேண்டிவதான மணத்தைக்கொண்ட சோலையிலேவந்துதங்கினான்-எ-று.

அலைசுனையாடவுமருவியாடவும்
மலைமிசைப்பிடியும்வன்களிறுமானவே
சிலைநுதலாருஞ்செல்வருஞ்சென்றேறினா
முலையொடும்புயத்தொடுநிகர்த்தமொய்ம்பின

இ-ள்- அலையையுடைய சுனைநீராடவும் அருவிநீராடவும்மலைமேலே பெண்யானையும்வலிதான ஆண்யானையும்போல்வில்லைப்போலும் நெற்றியையுடையபெண்களும் புருஷர்களும்போயேறினார்கள் அம்மலையானது கொங்கைகளையும் புருஷர்தோள்களையும் ஒப்பான சிகரங்களையுடையதாயிருக்கின்றது-எ-று மொய்ம்புதோள் மலைக்குத்தோள் சிறுகுன்றுகள்

அருவிகளாடுவார்சுனைகளாடுவார்
வெருவிவந்தகன்கரைமிசையேறுவார்
o சருவிநின்றாடியப்புனலிற்றாவுவார்
மருமலர்கொய்குவார்மலைந்துமீள்குவார்

இ-ள்- அருவிகளிலே நீராடுகிறவர்களும் சுனைகளிலேநீராடுகிறவர்களும் இப்படிநீராடுவதற்குக்கூசிவந்து அகன்றகரைமேலேறுகிறவர்களும் சைகைசெய்து விளையாடிக்கொண்டுநின்று அந்தநீரிலேகுதிக்கிறவர்களும பரிமளத்தையுடைய பூக்கொய்கிறவர்களும் அப்பூவைச்சூடிக்கொண்டு திரும்புகிறவர்களுமாயினார்கள்-எ-று;

அருவியுஞ்சுனைகளுமாடிநுண்மணல்
மருவியவண்டலுமணந்தசோலையும்
பருவரைக்குடுமியும்பளிக்குப்பாறையும்
பொருவிலாப்புனங்களும்புகுந்துநோக்குவார்

இ-ள்- அப்படி அருவிகளிலுஞ் சுனைகளிலும் நீராடி நுண்ணிய மணல்களுடைய வண்டலிலும அவ்வண்டல் கூடினசோலைகளிலும் பருத்த மலைச்சிகரங்களிலும் பளிக்குப்பாறைகளிலும் ஒப்பில்லாத தினப்புனங்களிலும்போய் வேடிக்கைப்பார்ப்பார்கள்-எ-று,

அன்றிருந்தணிவரைச்சாரல்வைகியே
துன்றிருள்விடிந்தபின்சோதிவேலினான்
சென்றிருஞ்சுடர்மணித்தேரிலேறியே
வென்றிவெம்படையொடுவிரைந்துபோயினான்

இ-ள்- அப்படி அன்றையதினம் அங்கேயிருந்து அழகிதானமலைச்சாரலிலே தங்குதலாய்நெருங்கின இருளுடைய இராத்திரிவிடிந்தபின்பு ஒளியைக்கொண்ட வேலாயுதத்தையுடைய குரூரமானசேனைகளுடனே அதிசீக்கிரத்திலேபோயினான்-எ-று.

---

o சருவல்-சைகைசெய்தல்

வெயிருக்கானமும்வெற்பினுச்சியும்
மாயிருமபொழில்களுமடிந்துறன்பொடி
யாயினவிசும்பினையடைத்ததூளியும்
சேயிருஞ்சுடர்மணித்தேர்கள்செல்லவே

இ-ள்- மூங்கில்களுடைய பெரியகாடுகளும மலைச்சிகரங்களும் மிகப்பெரிதான சோலைகளும அழிந்து சிறியதூள்களாயினவாய் ஆகாயத்திலேபோய்ச்சேர்ந்தன தூளிகளெல்லாம் இப்படித்தூளிகளாயினதுயாதினாலென்றால் மிகவுமுயர்ந்து பெரிதான காந்தியையுடையரத்நகசிதமான ரதங்கள் செல்லுதலாலே-எ-று

செந்திறப்பொலன்கதிர் தேருருளியுந்
தந்திறமவ்வழியனைத்துமாதலால்
பன்னிறக்கிரிகளும்பரந்தபாறையும்
பொன்னிறமேருவைபோற்பொலிந்தவே

இ-ள்- சிவந்த நிறத்தையுடைய பொன்னிறமான ஒளியைக்கொண்ட அரிச்சந்திரனுடைய தேருருளைகள் படிந்து அந்தத்தேரினிறமே அவ்வழிமுழுது மாருகிறதினாலே பலநிறங்களையுடைய மலைகளும் பரவுதலான கற்பாறைகளும் பொன்னிறமான மகாமேருவைப்போல் விளங்கின-எ-று.

வானமுற்றெழுந்தமாமலையுமால்கரித்
தானமுற்றெழுகியதடமுஞ்சாரலும்
நானமுற்றெழுநறும்பொழிலுநண்ணிவெங்
கானமுற்றருநெறிகடந்துபோயினான்

இ-ள்- ஆகாயத்தைத்தொட்டுக்கொண்டுயர்ந்திருக்கிற பெரிய மலைகளையும் உயர்ந்தயானைமதங்கள் பட்டுயர்ந்துகிடக்கிற மேடுகளும அந்தமலைப்பக்கங்களுமகஸ்தூரிவாசங்கொண்டெழுந்துள்ள நல்லமலர்ச்சோலைகளுங் கடந்துபோய் வெப்பாகிய காடுகளும்போய் இப்படி அரிதானவழிகளெல்லாம் கடந்துபோயினான்-எ-று

விரிந்தசெங்கமர்களும்வெயிலின்வெந்துகீழ்
சரிந்தமாமலைகளுஞ்சருகுவெந்துமேற்
பொரிந்தமாமரங்களும்புகைந்துபார்மிசை
எரிந்தெழுகடுஞ்சுரத்தெல்லையெய்தினான்

இ-ள்- இப்படிவிரிந்திருக்கி செவ்விதான விடநிலங்களும் வெயிலினாலே வெந்து கீழேசரிந்துகிடக்கிற மலைகளும் சருகுகள் வெந்து மேலே பொரிந்திருக்கிற பெரியமரங்களும் புகைதலாய் நிலத்தின்

மேலெல்லாம் எரிக்கொழுந்தெழுகின்றதைக்கொண்ட பாலைவனத்தினெ ல்லைப்போயணுகினான்-எ-று

வேறு.

என்றுமமரர்க்குதவிலையின்றிபரன்றமப்புரமெரித்தனலும்
வென்றிமதனைப்பொடிபடத்திருநுதற்கணைவிழித்தகனலும்
வன்றிரையெறிகொழுகடற்றுணைவைத்தவுகைக்கனலுமேற்
றொன்றுபடவக்குடிகொண்டதுறைநிறைந்தனவெதுப்பமெழவே

இ-ள்- இனி எக்காலத்தும் தேவர்களுக்குத் துன்பவினையல்லாமல் சிவன் திரிபுரத்தையெரித்த நெருப்பும் வெற்றியையுடைய மன்மத னைச் சாம்பலாகவழியநெற்றிக்கண்ணைத் திறந்தெரித்த நெருப்பும் வலிதான அலைகளைவீசி எழுகிற கடலுக்குள் சமுத்திரத்தில் வைத்திருக்கிற வடவாக்கினியும் கூடிஒன்றாகவந்து குடிகொண்டு அவ்விடத்தே தங் குதலாயின அவ்விடத்தும் வெப்பம்வீச-எ-று.

கானமுழுதுந்தெறுகனற்றிரள்வெந்தெழுந்திர்ச்சுடரின்வெங்
கானமுறவற்றியுரகக்கலெவெடிப்பவதனுச்சிவழிபோய்
வானனவெழுந்துபுவிமீதுவிழுகின்றமணியக்குப்பதல்லாம்
மீனம்விழுகிறபடியாமெனவிளங்கினவெளிப்புறமெலாம்

இ-ள்- அக்காடுமுழுதும் சுடுகிறநெருப்புச்சுவாலையினாலேவெந்து ஆகாயத்திலெழுந்துவருகிற சூரியகிரணத்தினாலும்வெந்து பருக்கா கவுலர்ந்துவற்றுதலால் பாம்புக்கல்லகளும்வெடிப்ப அந்தஉடைபதலை யினின்றும் போய் ஆகாயத்தளவுமெழுந்து மண்மேலே விழுகின்ற நாகரத்தினங்களுக்குவந்து பகற்காலத்திலே நட்சத்திரகூட்டங்கள் உதி ருகிறபடியே ரூபமென்ன விளங்குகின்றன அந்த வெளிநிலவெ ளியிடங்களெல்லாம்-எ-று.

கரும்புயலநந்துளிகரந்துடல்கரிக்கவெல்கலக்குநெடுதாய்
வருவம்பருவமுற்றலையயற்றிவரையென்பதுவறந்தவதனால்
பெரும்புவிவிளக்கினதனைத்தன்முடியிற்சூடிற்றிறங்கிவெழுமால்
இரும்புவிசினத்தழலுமிழ்ந்தவதனைச்சுடவெழுந்ததெனவே

இ-ள்- கரியமேகங்கள்பெய்கிற அரிதானமழைத்துளிக ளில்லாமல் அந்தநிலவெப்பத்தினாலேஉடலெல்லாக்கரிக்க அந்தநிலத்துக்கப்பா லே தங்கள்கூட்டங்களைக்கொண்டு சென்றுகாலுமாதவலைவாக வருவதானப ருவகாலத்தைமறந்து மழைபெய்கிறதென்பதைமறந்துபோன அதனு

லே அந்தபெரிதானநிலமெல்லாம் பிளந்துவெடித்து அவ்வழியே ஆதிசேடனுடைய தலையிலுள்ளரத்நச்சோதிகள் விளங்கிவரும் அதெப்படிக்கென்றால் அந்தப்பெரிதானபாலைநிலமானது கோபித்துத்தன்மேல் நெருப்பைச் சொரிகிற சூரியனைச் சுடுதற்காக மேலே கிளம்பினதுபோல் -எ- று

சுரப்புறுசிறைப்புனலெனக்கருதிவந்தியதுவட்சியதனால்
நிரப்புறுதவிப்பினையொழித்திடமனத்தினினைத்துழையெலாம்
இரப்பவரைநீத்தலுநடத்தியொரற்பமுமிரக்கமிலர்பால்
பரப்பவரையொத்தனகரப்பவரையொத்தனபசாசரதமே,

இ-ள்- பேய்த்தேறானகானலைப்பெருகிற குளத்துநீரென்று நினைத்து உடம்பிளைத்துவற்றிய தளர்ச்சியினாலே தமக்கு நிரம்புதலான தாகத்தை நீக்கிக்கொள்ள மனதிலேநினைந்து மான்களெல்லாம் யாசிப்பதாக ஒருவரிடத்திலே நினைந்தோடுஞ்சென்றும் ஒருசிறிதேனுங் கொடுக்க இரக்கமில்லாதவர்களிடத்திலே பாவியலைகிறவர்களை யொப்பாயின அவர்களுக்குக் கொடாமல் மறைந்துகொண்டு திரிகிறவர்களையொப்பாயின பேயத்தேறான கானல்- எ-று.

அடுந்திறலுமவ்வவர்படுந்திறலுநாமமுமனைத்துமெழுதி
○நடுங்கலுநறம்புனறவிர்த்துடல்பதைத்துயிர்நடுங்கியுழலும்
கொடுங்கரிமருப்புமெருள்சுற்றிடருமற்றளருவட்டினிடையும்
நெடுங்கடலுடைந்திரைகிளர்ந்தெனமுழங்குவநெடித்திரளெலாம்

இ-ள்- பகைவரைக்கொல்லுகிற சாமர்த்தியமும் அவரவர் படுவதாகிய சாமர்த்தியமும் பெயருமுதலான எல்லாமெழுதி நடப்பட்டகல்லும் நல்லநீர்கிடையாமல் உடல்பதைபதைத்து உயிருமஞ்சியலைவதான கொடியதானயானைக்கொம்புகளும் பயப்படத்தக்க கல்லுமேடுகளும் இன்னமுமுண்டான குன்றுகளினிடத்திலும் நெடிதானகடலிலே பெரியஅலைகள் ஒலித்தாற்போல் முழங்குவதாயிருக்குநெடியசேனையின்கூட்டங்கள்-எ-று.

அந்தவெயிலத்தகல்விசும்பிடைவெடித்தெழுமானையினெடுந்
தந்தமணியைத்துளிரியெனக்கருதியுண்டுழல்வசாதகமெலாம்
வெந்தெரிகொளுஞ்சுருகெழுந்துவிழுகங்குலில்விரிந்தவிழுவில்
வந்தடருமென்குமரையுங்கடையுங்கலையுமானினமுமே.

இ-ள்- அந்த நிலத்திலே எரிக்கிற வெயிலினாலே அகன்ற ஆகாயவெளியிலும் வெடித்துச்சென்று விழுகிறயானையினுடைய நீண்டகொம்பிலுள்ளமுத்துகளை மழைத்துளியென்று நினைந்து அலைகின்றன

○ நடுங்கல்—நடப்பட்டகல்

சாதகபட்சிகளெல்லாம் வெந்து எரிகிறநெருப்புக் கொள்ளுகிற சருகுகள் எழுந்தாவிழுகிற இருட்டிலே விரித்திருக்கிற நிழலில்வருவது போல் கருகிவிழுந்து நெருங்குகலாகும் காடுகளும் கானக்குதிரைகளும் கடமைகளும்மான்கூட்டங்களும்-எ-று.

மணகளுநீத்ததிரைவாரிவடவைக்கனலேமாற்றிலதிலோர்
வெண்மணலைவைக்கிமாமங்கையரிருமபதியும்வெந்துவிடுமால்
○ கண்புழுதையும்புடைபெயர்ந்துகவருங்கடையுகத்தினிதிலோர்
நுண்மணலெறிந்துவிடினும்பிரளயப்புனலைறங்கிவிடுமால்

இ-ள்- பூமிதேவி ஆடையாகவுடுத்திருக்கிற அலைகடலிலுள்ளவடவாக்கினியை அதிருக்கிறவிடத்தில் இந்த நிலத்திலுள்ள ஒரு வெண்மணலைக்கொண்டுபோய் வைத்தால் அரம்பையர்களிருக்கிறபெரிய தெய்வலோகமும் அதன் சுவாலையாலே வெந்துபோம் இந்தப் பூமியிலிடங்களெல்லாம் தானிருக்குமிடத்தை விட்டுவந்து சமனாகிக்கிறயுகமுடிவிலே இந்த நிலத்திலுள்ள ஒரு நுண்ணியமணல் தெறித்து விழுந்தாலும் பிரளய காலத்து வெள்ளத்தையும் குடித்துச் சுவாப்பண்ணும்-எ-று.

வெங்கதிர்நெருங்கொடியவிண்டவனம்வெந்தெரியும்வெந்தழலின்வாய்
அங்கதமிறந்துமதகுஞ்சரமிறந்துடலழிந்திடமெலாம்
செங்குருதியக்கடலின்மண்டமுதுவாரியிலேசிந்துநுரைபோல்
எங்கணும்விளங்குவனவெண்குவடெனும்பரிசெலும்புமலையே

இ-ள்- சூரியனாலே சுடப்படுகிறநீண்டமூங்கிற்காடுவெந்து எரிகிறவெப்பமானநெருப்பினிடத்திலே விழுந்து பாம்புகள் செத்துமதயானைகளுஞ்செத்து அவைகளினுடம்புகளழிந்து எந்த இடங்களும் பெருகின சிவந்த ரத்தமானது அழகிதான கடலிலேபோய்க் கலக்க அந்தப்பழையதானகடலினலைகள் சிந்துகின்றநுரைபோல் எவ்விடத்திலும் மிதப்பனவாயின வெள்ளை மலைகளென்னும்படி எலும்புமலைகள்-எ-று.

வெங்கரியுரித்துடைபுனைந்தவன்சலஞ்சசிமியங்குசடிலச்
சங்கரிதிரிசூலதரிதாருகவினாசனிசவுந்தரிசெழும்
பொங்கரிமணப்பரிபுரதிருபதத்தினன்பொருப்பனதனத்
தெங்கடனிநாயகியிருந்தசமயத்தில் வெடுத்துரைசெய்வாம்

இ-ள்- வெவ்விதானயானைகளையுரித்து அதன்றோலைப்புனைந்தவன் கங்காசலமும் சந்திரனும்விளங்குகின்ற சடையையுடைய சங்கரிதிரிசூலதரிதாருகவினாசனிசவுந்தரிசெழுமையாகவொலிக்கின்றகற்களாகமுத்துமுதலிய ரத்தங்களையிட்ட சிலம்புகளணிந்த இரண்டு திருவ

○ கண்—திடம்;

டிகளையுடையவள் மலைகளையொப்பான தனங்களைக்கொண்டவெங்களுடைய ஒப்பற்றகுலதெய்வமான காளியிருக்கிற சபையினிலக்கணத்தை ஒருவகைவிதந்துசொல்லுகிறோம்-எ-று.

எறித்தசெழுமுச்சுடருமொத்தொருதலத்திடையெழுந்ததெனவே
செறித்திருபுறக்கடைசிவந்திடைகறுத்தகண்மிகச்சுழலவே
சிறுத்தவிடையிற்கரதலத்தின்முடியிற்றிகழ்செறித்தவைப்
பொறிக்கணபணத்தலைமணிக்கடிகையிற்கதிர்கள்பொங்கியெழவே.

இ-ள்- விளங்குகின்ற செழுமையானசோமசூரியாக்கினிகளென்கிற மூன்றுசுடர்களு மொருங்குசேரக்கூடி ஓரிடத்திலே உதயமானாற்போலசெறிந்துவிளங்கி இருபுறத்திலுங் கடையிலேவந்து நடுவேகறுத்திருக்கிற கண்கள் மிகவுஞ் சுழல்வனவாக சிறிதான இடையிலும் கைகளிலும் தலையிலும் விளங்குவனவாக அணிந்த சர்ப்பங்களினது புள்ளிகளையுடைய கூட்டமான படங்களைக்கொண்ட தலைகளிலுள்ள ரத்நங்களையுடைய உச்சிக்கொண்டைகளிலொளிகள்மிகுந்துகிளரவும்-எ-று.

மிடித்தவர்களைப்பொருண்மிகுத்தவர்வினைதொழில்விலைப்பதெனவே
கொடிப்படர்பொருப்பெனவிடைக்கிடர்விளைத்தனகும்பவழகும்
நடித்தினடிநிற்குமிரதத்தைநிகர்பொற்கடிதடத்தினழகும் (வே.
பொடித்தெழுமெயர்த்திருமுகத்தழகுநின்றொளிபொழிந்தொழுக

இ-ள்- வறுமையுற்றவர்களைக்கண்டு திரவியத்தின் மிகுந்தவர்கள் சண்டைத்தொழில் செய்வதுபோல் ஒருகோடி மேலேதாங்குகின்ற இரண்டுமலைகளைப்போல் இடைக்குத்துன்பத்தைச்செய்கிற தனங்களாகிய குடங்களினழகும் ஒருமின்னலினடியிலே நிற்கின்றதேரை ஒப்பான அழகிதான கடிதடத்தினுடைய அழகும் பொடிப்பொடியாவெழுகின்ற வெயர்வையுடைய திருமுகத்தினழகும் நிலைகொண்டு ஒளிகள்வழிந்தொழுகவும்-எ-று,

வேலைகளொழிந்துலகமேழிரண்டுமொழியும்விழுங்கிவிடுபக்
காலமுடிவிற்கொடியவூழிநெடிவெங்கனல்கனன்றெரிதல்போல்
சாலவினைகொண்டுபொருதாருகனைவென்றவுணர்தங்கள்குடர்
மாலையிடுகின்றதிரிசூலமிசைவெங்கனல்களைந்தெரியவே.

இ-ள்- கடல்கிளர்ந்து உலகங்கள் ஏழோடேழான பதினான்கையும் கபளீகரித்துக்கொள்ளுகிற கலிகாலமுடிவிலே கொடிதானவூழிகாலத்து நெடியவெவ்விதான நெருப்புக்கொதித்தெரிகிறதுபோல்மிகவுஞ்சண்டைகொண்டு பொருதுகின்ற தாருகனைவென்ற அசுரர்களுடைய குடலைமாலையாக அணிந்துகொள்ளுகின்ற திரிசூலத்தின்மேலே வெவ்வியநெருப்பானது சூழ்ந்தெரியவும்-எ-று.

பொடிப்பொடி திரைத்திரை தெறித்திடர்த்திபுரத்தழலெனத்
தொடுத்தெழுவலத்ததடக்கைவடிவாளொளிர்தயங்கியெழவே
அடுக்கடியெதிர்த்தகலியுகத்தெதிர்முகக்கடலதிர்ச்சியெனவே
இடக்கரன்முழக்கொளிடக்கையின்மணிக்கடகிரைத்தசையவே.

இ-ள்- பொடிப்பொடியாக வக்கத்திக்குகளிலும்தெறிக்கின்ற திரிபுரத்துநெருப்புப்போலமின்னலெழுகின்ற பலத்தையுடையதாகிய வலதுதடக்கையிலேகூர்மைகொண்டவாளானது ஒளிவிளங்கித்தோன்றவும்திருப்பத்திருப்பக் கனைபோலெதிர்கொண்டு அலைமோதியெழுகின்றஉகமுடிவில் முழங்குகின்றகடலின்முழக்கம்போலவும் இடதுகையிலேயிருக்கிற மணிக்கடகமானது ஒலித்துஅசையவும்-எ-று,

பட்டயமெடுத்தொருகைபத்திரமெடுத்தொருகைபற்றுமழுவும்
சொட்டையுமெடுத்திருகை சக்கரமெடுத்தொருகைசுற்றயிலும்
வட்டமெடுத்திருகைவச்சிரமெடுத்தொருகைபுட்கரதலம்
எட்டினும்விதிர்ப்பனசுழற்றுவனவெந்தழலெழுந்தெரியவே.

இ-ள்- பட்டயத்தைக்கொண்டு ஒருகையும் வாளைக்கொண்டு ஒருகையும் பற்றுகின்ற மழுவையும் வளைதடியையுங்கொண்டு இருகைகளும் சக்கரத்தைக்கொண்டு ஒருகையுஞ்சுற்றுவதானவேலுங்கேடகமுங்கொண்டு இருகைகளும்வச்சிராயுதத்தைக்கொண்டு ஒருகையும் இப்படிப்பலங்கொண்டகைகளெட்டிலும் வீசுகிறதாகவும்சுழற்றுகிறதுமுதலாகவுஞ்செய்கின்றனவாயின வெம்மைகொண்ட நெருப்பெழுந்தெரியும்படியாகவும்-எ-று,

ஆடகமணிக்குழைகள்பாரியராப்பணிகள்தக்கடகம்
சூடகமிரட்டையுதிதாரமொடுபட்டையணிதோள்வளைசெழும்
பாடகமெழிற்பரியகங்கழல்சதங்கைகள்பதக்கமுடனே
நீடெழின்மதாணிகளலைந்துதிரையெங்குமொளிநின்றிடவே.

செய்யகையாநந்தனிமுக்கிற்சேர்த்தியில்
வையனுபொய்யனென்றரசர்கூறினார்.

இ-ள், இந்தப்பெண்ணினுடைய கழுத்திலே தாலியிருந்தால் உங்கள்கையாலவது கண்ணாலவது காட்டுங்கள் நீங்களேசொல்லுங்களென்றுசொல்ல அதுகேட்ட அரசர்கள் தங்கள் சிவந்தகையைத்தட்டி அதிசயித்து அழகியமூக்கிலே விரலைவைத்து இந்தமகாப்பிரபுவான அரிச்சந்திரன்பொய்யனாயிருக்கிறானென்றார்கள்-எ-று. ௨௪௰

மண்டலவேந்தனெம்மடந்தைமங்கலம்
கண்டதுநீங்கடாங்கண்டிலாத்தப
திண்டிறலீரொருதேவரகசியம்
உண்டெனமதிதயனுரைப்பதாயினன்.

இ-ள், அப்போது இந்தப்பூமண்டலத்தையாளுகின்ற அரிச்சந்திரமகாராஜன் எங்கள்பெண்கழுத்திலே தாலியிருக்கக்கண்டதற்கும் நீங்களெல்லாங்காணாதிருக்கிறதற்கும் மிகுந்தசாமர்த்தியத்தையுடைய அரசர்களே ஒருதேவரகசியமொன்றுண்டென்று மதிதயராஜன்சொல்லுகிறான்-எ-று. ௨௪௧

அண்டர்நாயகன்வரமளித்தநாளையில்
வண்டணிகுழலிபோடுதித்தமங்கலம்
கண்டவர்பதியிவட்கென்றகட்டுரை
உண்டதன்றிவேறுண்டுகேட்டிரால்.

இ-ள், தெய்வநாயகனான பரமசிவனெனக்கு வரங்கொடுத்தகாலத்திலே வண்டுகள்மொய்க்கின்ற கூந்தலையுடைய இந்தச்சந்திரமதியுடனேகூடப்பிறந்த திருமங்கிலியத்தைக்கண்டவனே இவளுக்குநாயகனென்றுசொன்ன உறுதிவார்த்தைஉண்டு அதையல்லாமல் வேறேயுமொன்றுண்டோசொல்லுங்கள்-எ-று ௨௪௨

மஞ்சனக்சடைப்பிரான்வரத்தில்வந்தநாள்
கஞ்சனநிழலிற்காண்பதன்றியே
அஞ்சனக்கண்ணிக்குமங்கைக்கெய்திடா
தெஞ்சலில்யாவரும்பானுங்கண்டிலேம்.

இ-ள், கங்காஜலபிஷேகத்தைக்கொண்ட சடைகளையுடையபரமசிவனானவர்கொடுத்தவரத்தினாலே இவள்பிறந்தநாள்முதல் இவள்தாலியைக்கண்ணாடிநிழலிலேநாங்கள் பார்த்திருக்கிறதேயல்லது மையிட்ட கண்களையுடைய இந்தச்சந்திரமதிக்கும் அவளுடைய அழகிதானதைக்குத்தொடஅகப்படாது குறைவில்லாமல் எங்கள் வீட்டிலுள்ள எல்லாரும்நாலுங்காணதுவரையிலும்பார்த்ததில்லை-எ-று. ௨௪௫

வேறு.

என்றனும்வல்லிமுளெண்ணியநாமம்
ஒன்றலதுள்ளுறவுன்னலளாகிச்
சென்றவன்மார்பிதுசேர்கெனவுன்னு
மன்றலர்மாலையைவானிலெறிந்தாள்.

இ-ள், என்றுசொல்லும்போது சந்திரமதியானவள் தான்முன்னே நினைத்தஅரிச்சந்திரனையுடையபெயரொன்றையல்லது வேறேயொருபெயரையுந்தன்மனதுக்குள்ளாகநினையாதவளாய் இந்தமாலைபோய் அரிச்சந்திரமகாராஜனுடையமார்பிலே விழக்கடவதென்றுநினைத்துமணம்விரிகின்றபூமாலையைஆகாயத்திலேஎறிந்தாள்-எ-று. ௨௪௬

வார்பயின்பூண்முலைமாலையுநெஞ்சும்
பார்பயின்மன்னவர்பற்பலர்கண்ணும்
தார்பயில்வேலரிச்சந்திரனென்பான்
மார்பிலணைந்துமலர்ந்தனமன்றே.

இ-ள், ரவுக்கைபொருந்தின ஆபரணங்களையணிந்ததனங்களையுடையசந்திரமதிஎறிந்தமாலையும் அவள்மனமும் அந்தச்சபையிலேயிருக்கிற அரசர்கள்பலபலபேர்களுடையகண்களும்மாலைபொருந்தினவேலைக்கொண்ட அரிச்சந்திரமகாராஜனுடையமார்பிலேகூடி விகசிக்கலாயின.

வஞ்சிவழங்கியமாலையணிந்தோன்
செஞ்சுடரின்முகநின்றொளிசெய்ய
வெஞ்சுடர்முன்சசியாமெனமிக்கோர்
கஞ்சமுகங்கள்கரிந்தனவன்றே.

இ-ள், அப்படிச்சந்திரமதிஎறிந்தமாலையையணிந்துகொண்ட அரிச்சந்திரமகாராஜனுடைய முகமானதுசிவந்தசூரியனைப்போல் நிலைகொண்டுவிளங்க அப்படிப்பட்ட வெப்பத்தையுடைய சூரியனுக்குமுன் சந்திரன்போல் அங்குமிருந்துள்ள அரசர்களுடைய தாமரைமலர்போன்றமுகங்கள்வாடி ஒளிமழுங்கின-எ-று. ௨௪௭

மாதர்களார்த்தனர்வானவரார்த்தார்
கீதர்களார்த்தனர்கேளிருமார்த்தார்
சூதர்களார்த்தனர்துறவருமார்த்தார்
வேதர்களார்த்தனர்வேலையடங்க.

இ-ள், அப்போதுபெண்களெல்லாரும்ஆரவாரித்தார்கள் தேவர்களும்ஆரவாரித்தார்கள் கீதங்கள்பாடுகிறவர்களும்ஆரவாரித்தார்கள்சந்திரமதியினுடையஉறவினரெல்லாரும் ஆரவாரித்தார்கள் பாடுவார்களும்ஆரவாரித்தார்கள்துறவினராகியமுனிவர்களும்ஆரவாரித்தார்கள் வேதப்பிராமணர்களும்ஆரவாரித்தார்கள்கடலோசையடங்க-எ-று.

நல்லியனூறறிநாவலர்பாடப்
பல்லியமும்பலபாடலுமார்ப்ப
அல்லிமலர்த்தொடைமாலையணிந்தே
வல்லியுமன்னனுமாளிகைபுக்கார்.

இ-ள், நல்லஇலக்கண நூலினையுணர்ந்த வித்துவான்கள்பாடவும் பலவாத்தியங்களும்பலவகைப்பாடல்களுமுழங்கவும் அகவிதழ்களையுடையபூமாலையைச்சூடினசந்திரமதியும் சூடிக்கொண்ட அரிச்சந்திரமகாராஜனும்படுக்கைவீட்டுக்குள்ளேபோனார்கள்-எ-று. ௨௪௮

மின்னியதாபவிளக்கொருகோடி
கன்னியர்வந்துகலத்தொடெடுப்ப
மன்னியமாமணிமஞ்சலணைந்தே
பொன்னின்முலைக்கொடியோடுபுணர்ந்தான்.

இ-ள், மின்னுகின்ற ஒளியைக்கொண்ட மாணிக்கவிளக்குகள் ஒருகோடிபெண்கள்வந்து அதன்பாத்திரத்துடனே தாங்கிக்கொண்டுநிற்கநிலைகொண்டபெரிதான ரத்நகசிதமானகட்டில்மெத்தையின்மேலேபோய்ப்பொன்போலுந் தேமற்படர்ந்தமுலைகளையுடைய சந்திரமதியுடனேகூடினான்-எ-று. ௨௪௯

ஆரமகிற்புகைகாசநீரைக்கர்ப்
பூரநாந்தமணிந்துபுலர்த்திப்
பாரதனத்திணியிட்டபராகம்
சோரமணிந்தெறிசுண்ணமெறிந்து.

இ-ள், சந்தனஞ்சேறு-அகிற்புகை-கஸ்தூரி-பனிநீர்-பச்சைக்கர்ப்பூரம்-சவ்வாது ஆகிய இவைகளெல்லாம் அணிந்து உலரச்செய்துகொண்டு கனமானதனங்களிலேஅணிந்த சந்தபொடிகளுதிரப் பூசிவீசிவிளையாடுகிறபொன்னிறப்பொடிகளை ஒருவர்மேலொருவர் வீசிவிளையாடி-எ-று-காசறை-மயிர்ச்சாந்தெனவுமாம். ௨௫௰

மல்லிகைசண்பகமாதவிபுன்னை
முல்லைகுராமகிழ்தாமரைநீலம்
அல்லிநிறைந்தசெவந்திசெருந்தி
புல்லிதழ்வாசமிலைக்குப்புனைந்தார்.

இ-ள். மல்லிகைப்பூ-சண்பகப்பூ-குருக்கத்திப்பூ புன்னைப்பூ-முல்லைப்பூ-குராப்பூ-மகிழம்பூ-தாமரைப்பூ-நீலப்பூ-அல்லிதழ்-நிறைந்தபொ ல்லசெவ்வந்திப்பூ-செருந்திப்பூ-இவைகளினாலேயாகிய இதழ்களின்பரி மளத்தினாலே சேர்க்கப்படுத்துக்கொண்டார்கள்-எ-று. ௨௱௯

அங்கைபொடங்கைப்பிணைத்துடனேலாங்கறுக்
கொங்கைபுயத்திரள்குன்றிலழுத்தச்
செங்கயல்சென்றுநிருக்குழதாவ
மங்கையுமன்றுமகிழ்க்குபவர்க்கார்.

இ-ள். அழகியகைகளுடனே ஞானகையினைத்து உடம்பெல்லாம் ஒருமிக்ககொங்கைகள்தோள்களாகிய திரண்டமலைகளிலேயழுத்தியவர் தகெண்டையீன்போன்றகண்கள்மேல் அழகுயுருண்டவளிக்ககாது களிலேபாயஇப்படிசந்திரமதியும் அரிச்சந்திரனும் சந்தோஷித்துக்கூ டினார்கள்-எ-று. ௨௱௰

வேறு.

வாசமார்மாலைமன்னவன்றன்றன்மருவிடவெறுளிரிக்கயலைக்கு
பூசல்சேல்பலகைவேய்த புன்றுக்குப்புனர்முலைவேதுகொண்டோர்
மாதிலாயவாயிசெய்குடைக்காரதன்மலர்க்காமாவேறட்டி. [தி
அரசகோசிவமுதவாபுதமாவித்தனளிலமாப்பெருமான்.

இ-ள், மணம்பொருந்தியமாலையை அரிச்சந்திரமகாராஜன்முன்னே த ன்லைவக்குகூடாததோபத்திறுவேஷட்டி சண்டைசெய்கிறமன்மதன் பலகைமுதிமெய்த அம்புகள்பட்டபுண்களுக்குத நலதிரண்டதிகொ ங்கைவெப்பாரதக்கொண்டு ஒற்றித்துத்தமிலைசமைவித்தன்னர் பதி ருதிருமதிற கண்களைக்கவளிக்க மாக்கள்மைபோறாம் வையாகவே அவன்மாய்புதெவையுக்கு சட்டிமாவிதது அவதுகுடைய மைமயியாதி வில்லாக்கவது அழகைவிழுள்வள்ளர்கொழித்தான் பெண்களுக்கரசி யானசந்திரமதி-எ-று. ௨௱௰௧

கல்டானவாக்காதிருவருமாதனுப்பவிபுப்புகவிபுரிவிலைக்கு
முண்டகவதனங்கேயரும்பிடிமுமுகிழ்புலைடமைக்கிடனும்
கொண்டலக்குழலில்வண்டலம்பிடநம்குறைவிளாகிறையிடசெய்தி
மண்டுக்காசன்னினைநாம்பாங்கைமுக்குலிலெறுநடிநகன்றே.

இ-ள், ஒருவரையொருவர் பார்த்தகண்களை நீங்காபசம்பந்தமுடை யஉயத்திரமைத்திருமேலகூடலும் உடனுஞ்செய்த தாமரை மலர்போன்ற முகத்திலெசந்திரமதிக்கு வெயர்வையுண்டாமேனும் தாமரையரும்பு போன்ற தனங்களிலே முத்துமாலைகளசைந்தாலும் மேகம்போற் கூந் றத்தாலழகிதான கூந்தலிலே வண்டுகள் முழங்கினாலும் இவைகளாக மாட்டாமல் வருந்துமென்று குறையாமல் திரப்புவதாக அவையெல்லாக் கொண்டு பூமண்டலத்துக்கெல்லாம் அரசனான அரிச்சந்திரன்மனைவியா ன அந்தச்சந்திரமதியினுடைய இடையினுமேல ஒருவழிப்படாதிருக்கின் றது-எ-று.

உடைப்பெரும்பண்டமிக்கன நதேற்றி பொலிகடலிக்கிடையாத்து றைசேர், தடைப்பெருப்பாத்தாற்றுமெய்மேருடியறப் பயந்திறந் வார்போலப், படைக்கலனிழியாளனிவொரிகுளையும்பவரிமலர்த் தொடை யிலும்பரமாய், இடைக்கிடைகிளைக்கணிறுமெனப்பதறி யிருகையாற் பிறை தருகுறத்தான்.

இ-ள். தங்களுக்குச்சொந்தமானபெரிதானசரக்குகளைதிரயாசக்கப்ப லிலேயேற்றிருமிக்கின்ற கடலைக்கடந்து ஒருதுறைமுகத்துக்குவரும்போது தரங்களேற்றின பெரிய கப்பலிலே அமிழ்ந்து போமென்று நினைத்து வி ரைந்து வந்து மிகவும் பயப்பட்டு அப்பண்டங்களை இறக்குபவர்களைப் போல்வாளாயுதம்போலும் கண்களையுடைய சந்திரமதியினுடைய ஆப ரணங்களுடனே கலைகளையும் குளிர்ந்த மலர்மாலையைக் காட்டிலும் பார மிடைத்தாங்கப்படாதசெய்யலினிலே இடைமுறியுமென்று பதறியவ ளுடைய இரண்டு கைகளாலும் அவளைத்தாங்கிப்பிடித்துக்கொண்டிருந்தான்.

தாமரைசெங்குருக்கைகளும் பூவைப்படைத்தனரே, டாமரைசென்றடைமாதர்வலுவல்லுளத்தீர்த்தல்செலுத்தி, வினை வென்றகெண்வேல்பட்டருவமில்லாதவோரதிருமா மேனைக்கத்தலை வென்றினித்தசெஞ்சொலாளின்பச்செருத்தொழில்பற்பலவிருந்தாள்.

இ-ள். மேகலையாகியசேனைகூடி ஒலிக்கவும் திருமங்கிலியத்தை யுடை யகழுத்தாகியசலஞ்சலச்சங்குறுவிக்கவும், கொங்கைகளாகியசெப்பாலை கள்சேர்த்துநெருக்கவும்; வஸ்திரளாகிய குதிரைகள் அவ்விடத்தே ஒலி க்கவும், அல்குலாகிய அழகியதேர்ச்செலுத்தியினையென்றசொல்லுடைய னவாகிய கண்களென்கிறவேலையுந்தனக்கப்பரனாகிய வில்லையும் தொடுத் து அயோத்திகாருக்கு அரசனான அரிச்சந்திரனைத் தோளிற்றுவைத்த

தைவென்றுசுதியும் இனிப்பான செவ்வியசொல்லையுடைய சந்திரமதியானவள் கலவிபாயசன்னை ச்செய்கைகள்பலபணிவிதங்களாகச் செய்தாள்—எ—று.

உ௫௬

இந்நெறியரசுநிறைவனுமயிலுமின்பமுண்டிடைவிடாதிணங்கிக்
கன்னமாபுரியிற்சிலபகல்கழித்தப்பின்கழகனேய்நுவரன்கருதி
மன்னனுமன்னமென்னடையயிலுமணிக்கொடுந்தேர்மிசையேறிப்
பொன்னணிகுடுமிகண்டுகொண்டயப்புரிகைசீத்தப்புறம்போனார்.

இ-ள். இத்தப்படி தப்பாமல் நாள்தோறும் அரிச்சந்திரனும் சந்திரமதியும் காமபோகத்தை அநுபவித்து இடைவிடாமற்கூடி அந்தக் கன்னமாபுரியிலே சிலகாலமிருந்தப்பின்பு நகரத்து காவலையுடைய அயோத்தியாபுரிக்குப்போக நினைத்து அரிச்சந்திரனுமன்னமென்கிற நடையையுடையசந்திரமதியுமாகிய இருவரும் தேர்மேலேறிக்கொண்டு பொன்னிலைக்கிருக்கிற தேவதையுங்கொண்டகோட்டையாகிய இவ்விடத்தைக் கடந்து அப்பாற்போனார்கள்—எ—று. உ௫எ

பன்னிறத்தனக்கதிர்த்திரளுக்கனைபோற்பலமணிக்குடைகள்மேனி
றற்ற, கன்னெறிக்குமனைத்தெருப்பிசைந்தகவரிக்களமசைப்ப, பி
ன்னிறக்கொடிமின்னுக்கன்றுமிடைக்கொடிரண்டசாமரமிரட்ட,
அன்னிறப்பொழிற்சூழ்கன்னமாபுரியின்மாமதிலுமகழுங்கடந்தார்.

இ-ள். பலநிறங்களையுடைய பலதேசத்து அரசர்கள் போலிருக்கிற அநேகங்கொடிகள் குடைகள் மேலேநெருங்க மின்னலைப்போல் ஒளிபொருந்திக் கொடிபோல் துவளுகின்ற சிறுத்தாளான இடையையுடைய பெண்கள் வெண்சாமரைவீச சோலைகள்சூழ்ந்தகன்னமாபுரியினுடைய மதிலும் அகழும்கடந்து நீங்கினார்கள்-எ-று. உ௫அ

காந்தளஞ்செங்கைக்கன்னியர்பின்போர்நகரோதிடையிடைமீள
மாந்தர்களனைவருமுடிமந்திரத்தலைவர்மீண்டேக
வேந்தவிழ்க்கிளைஞர்பணிவிடைகேட்டுவிடைகொடுமீண்டுமெய்த
போந்தனன்புரவியுந்தேரும்புடைதொடர்ந்திடலைப்பொலிய.

இ-ள். காந்தட்பூப்போலுஞ்சிவந்தகைகளையுடைய வழிவிடவந்தசிலபெண்கள் வணங்கிக்கொண்டு திரும்பிப்போகவும் மற்றமனிதர்கள் வணங்கிக்கொண்டு கூடவரவும் அந்த அந்த அரசர்களுடனே மந்திரிகள் திரும்பிப்போகவும் அரசர்கள் காலிலேவிழுந்து வணங்க

க்கிக்கொண்டுசொன்னஉத்தரவுகேட்டுச்செலவுபெற்றுக்கொண்டு திரும்பிக்கன்னமாபுரத்துக்குப்போகவும் வந்தான்யானைகளும் குதிரைகளும் தேர்களும் நாலுபக்கங்களிலும் கடல்போனிறைய-எ-று. ௨௬௰

வேறு.

தொடுத்தன்றாமரைமிசைத் துணைபுணரன்னம்
மீநின்றதோர்மதிநிழ றனைக்கண்டுமற்றோர்
பெடையென்றெனச்சேவலைப் பிரிந்தயன்மலர்சேர்
தடத்தின்றலைச் செழும்புனற் றண்பணையுற்றார்.

இ-ள். இதழ்கள்நெருங்கின தாமரைமலர்மேலே தனதுஜோடுபட்சியுடனேகூடிக்கொண்டிருந்த பெட்டையன்னமானது அவ்விடத்தே மேலேநின்றஅழகிய ஒப்பற்றசந்திரனுடைய நிழலைத்தோன்றக்கண்டுவேறேயொருபெட்டைநமதாணுடனேகூடியிருக்கிறதென்று தனதுசேவலைவிட்டுநீங்கி வேறொருபூவின்மேல்போயிருந்துகொண்டுபிணங்குவதான அந்தச்செழிப்பையுடையநீர்சூழ்ந்தகுளிர்ந்தமருதநிலத்திற்குவந்தார்கள்-எ-று

கோடுவார்மலர்ப்பொழில்களுங் குளிர்தடத்திரளும்
நீடுவார்சிறைப்பறவையின் குழாத்தையுநிறைநீர்
ஆடுவாரையுமவ்விடத் தணிமலர்கொய்து
சூடுவாரையுங்காட்டினான் றேவைக்குத்துணைவன்,

இ-ள். கொம்புகள்நீண்டுள்ள பூஞ்சோலைகளையும் குளிர்ந்த தடாகங்களையும் அதிகமானநீண்டசிறகுகளையுடையபட்சிக்கூட்டங்களையும்நிறைந்தநீர்க்குளங்களிலேநீராடுகிறவர்களையும் அந்த இடங்களிலே அணிந்த பொன்னப்பூக்கொய்துசூடிக்கொள்ளுகிறவர்களையும் சந்திரமதிக்குக்காட்டினான் அவள் நாயகனாகிய அரிச்சந்திரமகாராசன்-எ-று. ௨௬௧

செய்யமாமலரடுத்துமென் பெடைகடேனருந்தாப்
பையவேகருப்பணைவழி பார்த்தினிதுறலாற்
றையலாருணவமைத்தன்பர் தாமவரநோக்குந்
செய்யுநாளொத்தசெழுமலர்க் காவெலாந்திருவே.

இ-ள். சிவந்தபெரியபூவிலேபோய்க்கூடி அழகியபெட்டை வண்டுகள் தேனைப்புசியாமல்மெள்ள ஆண்வண்டுகள்வருகிற வழியைப் பார்த்துக்கொண்டு அதுவரைக்குங்காத்திருக்கிறதினாலே உலகத்திலேபெண்கள் சோறுசமைத்துக்கொண்டு தங்களுடைய நாயகர்கள் வரும்படிபார்த்துக்கொண்டிருக்கிறகாலத்தையொத்திருக்கின்றன செழித்த பூஞ்சோலைகளெல்லாம்லட்சுமிபோல்பவளே-எ-று. ௨௬௨

காடையினக்கிளைதயங்கிடுவேதியர்க்கடியும்
கொடியர்போன்றுபிள்ளையைக்கூட்டிவிற்கூட்டி
வடிநெடுங்கணுமலர்நெடுஞ்சோலைகடோறுங்
கொடியிளங்கருங்குயில்களைத் துரப்பனசுரியாய்.

இ-ள். காலையுடையபாதங்கள்விட்டிலைதரையைச்சேர்ந்தவர்களை இருக்கச்செய்து அந்நிரயைத்தருகின்ற கொடுஞ்செய்கையையுடையவர்கள் போல் காகருந்தைக்கூட்டியோரிருக்கச்செய்து கூரியநீண்டகண்களையுடையவிளைநீண்டபூஞ்சோலைகளெல்லாம் காக்கைக்கூட்டங்கள் கருங்குயில்களை ஓடச்செய்வனவற்றைப்பார்-எ-று. ௨௩௩

அரவின்மடைப்படைப்புடைமையிற் புரந்திடையழுந்து
தூரவோடியேவெளியிடைப் பரவுறுந்தோயம்
தாமரைமன்வருந்திடத் தனிமகளைச்சாருஞ்
சோரவொத்தனமுத்தன திருநகைத்தோகாய்.

இ-ள். வரம்புகளின் நீண்டபள்ளமாயின்மடைகளையுடையமருதநிலத்தார்வழியேபோகாமல்தவேபள்ளமாயழுந்திக்கிடக்கிறநீண்ட வெகுதூரம் வரையிருந்துசென்று வேறுவெளியானநிலங்களெல்லாம் நீர்ப்பரவுகின்றன எப்படியென்றால் மணாளனானவன்வருந்தப்பட வேசையையடைந்தசன்மைபோற்பனவாயின, முத்துப்போலும் அழகியபல்வரிசையைக் கொண்டமயிலே-எ-று. ௨௩௪

மன்றல்மண்டிசைபாட மாமயினமர்டத்
தென்றல்வந்தலைத்திடபல முழவொலிசெய்ய
கொன்றமரங்களில்புழுக் காயெதிர்நீட்டக்
கொன்றைபொன்சொரிவளையபா ராய்குலக்கொடியே.

இ-ள். மணங்கொண்டவண்டுகள் பாட்டுகளைப்பாடவும் கறுத்தமயில் நடனஞ்செய்யவும் தென்றற்காற்றுவந்து வீசுதலினாலேபலஅலைகளும்மத்தளம்போலொலிக்கவும் அங்கேசிறந்திருக்கமுகமரங்கள் வெற்றிலைக்காய்ப்பாக்குகளைநீட்டிக்கொடுக்கவும் கொன்றைமரங்கள் ஆடுகிறபெருக்குப்பொன்கொடுப்பனபோல் மலரைச்சொரிகின்ற அழகைப்பாராய் குலக்கொடியே-எ-று. ௨௩௫

மதுரமங்கலமுரசெழ வண்டுவாழ்த்திசைக்க
உதிரமொத்தசெந்தாமரை யோமத்தீவளரப்
புதுமலர்த்துணைப்புணரிண வன்னமும்பெடையும்
வதுவைசெய்வனவொப்பன கண்டருண்மயிலே.

இ-ள். மதுரமானசலிமங்கலவாத்தியம்போற்கிளரவும்வண்டுகள்பல்லாண்டுகள்போல்வாழ்த்திப்பாடவும் ரத்தமயமானசெந்தாமரைமலர்கள் ஓ

மாக்கினிபோல்விளங்கவும் புதிதாகமலர்ந்த பூவிலேசோடாகக்கூடுகின்ற இளமையான ஆணன்னமும் பெட்டையன்னமும் கலியாணஞ்செய்து கொள்வனவற்றை ஒத்திருக்கின்றன னிபார்த்தருள்வாயிலே-எ-று. ()

வெடித்தவாற்சிறுகன்றுகண் மேதியின்முலைப்பால்
குடித்தவேம்பலாலரும்பலர் கோகனகப்பூக்க
கடித்துவாங்குதலூடலின் மகளிர்கைகணவர்
பிடித்துவாங்குதலொப்பது பெண்கொடியாராய்.

இ-ள். மேலேதூங்கிக்கொண்டவாலையுடைய இளங்கன்றுகளானது எருமை யூட்டினதுமுலைப்பாலைக்குடித்ததச்சோஷத்தினாலே அரும்பாகிமலருகின்ற தாமரைப்பூவைக்கடித்து இழுத்துக்கொண்டு நிற்கிறது எப்படிக்கென்றால் பிணங்கினசமயத்திலே பெண்கள் கையைப்பிடித்து நாயகரிழுக்கின்றதுபோலிருக்கின்றன ஓ பெண்கொடியே நீ பார்-எ-று. ௨௬௭

இத்தடத்துமினருந்திய வன்னங்களெல்லாம்
அத்தடத்தின்மொய்த் திழிவனவருநிதியெல்லாம்
தத்தமக்களித்திழந்தவர் தங்களைத்துறந்து
கைத்துளார்கட்செல் கணிகையரொப்பனகாணாய்.

இ-ள். இந்தக்குளத்திலேமீனைப்புசித்தவிப்பறவைகள் முழுதும் அந்தக்குளத்திலேநெருங்கிப்போயிறங்குகின்றன எப்படிக்கென்றால் அருமையானதிரவியங்கள்முழுதும் தங்களுக்கேகொடுத்து இல்லாமையையடைந்தவர்களை விட்டுவேறேபொருளுள்ளவர்களிடத்திலே போகின்றவேசையரையொப்பாகாயிருக்கின்றனபார்-எ-று. ௨௬௮

மேயுமோதியஞ்சேலினைக் கவர்ந்திடவெருண்டு
பாயுநீள்கயல் செங்கமலத்தவர்படிவ
ஆயிழையிங்கரற்கணவனை யமரிடையிழந்து
தீயில்வீழ்குவாரொப்பன திருந்திழைகாணாய்

இ-ள். குளத்திலேமேய்கிறநீர்ப்பறவை சேற்கெண்டையைப்பிடித்துத்தின்ன அதற்குப்பயந்துபாய்கிறநீண்டகயற்கெண்டைகள் செந்தாமரைப்பூவிலே போய்விழுகின்றன எப்படிக்கென்றால் தன்னைப்பார்க்கிலுமிகுந்த அன்புள்ளகணவனைச்சண்டையிலேபோய்ச்சாவக்கொடுத்துத்தீயிலேவிழ்கிறபெண்களை ஒப்பாயிருக்கின்றன பெண்ணேபார்-எ-று.

கூடுமன்னங்கள்பறந்தினை கவர்ந்திடக்குழாத்தில்
ஊடுமன்னமொன்றுயர்ந்த தாமரையிசையுகளல்

நீடுவார்கழையேற்றியே நிறையவைநடுவின்
ஆடுவேழம்பமாதரை நிகர்த்தல்பாரணங்கே.

இ-ள். கூடியிருக்கின்ற அன்னங்கள்பறந்துபோய் இரைகொண்டு நின்ன அக்கூட்டத்திற்பிணங்கின ஒருஅன்னமானது உயர்ந்துதோற்றுகிற தாமரைமலரின்மேலே வந்திருந்துகொண்டிருக்கிறது எப்படியென்றால் மிகவும் நீண்டமூங்கிலின்மேலேறி நிறைந்தசபைநடுவே நின்று ஆடுகிற கழைக்கூத்தாடிச்சியை ஒப்பாயிருக்கிறது பெண்ணேபார்-எ-று. ௨௭௧

நற்புனற்பதுமத்துறைதந் தனிநறையுணவால்
வண்டினிற்பிடித்தூடிய மகளிரைமணாளர்
அன்புறத்தெவிட்டாவித ழாரமுதருந்தும்
இன்பமெல்லணையொப்பன இளங்கொடிகாணாய்.

இ-ள். அந்த நல்லநீரிலே மலர்ந்திருக்கிற தாமரைமலரிலே வண்டுகள்நெருங்கிமொய்த்துத்தேனைக்குடிக்கிறதினாலே பலாத்காரமாகப்பிடித்துக்கொண்டு பிணங்கினபெண்களை நாயகர்கள்பிரீதியாகத் தெவிட்டாத இதழ்களிலுள்ள அரிய அமுதத்தைப்பருகுகின்றகருத்தையுடையதாயிருந்துவருவதுமாத்தை ஒத்திருக்கின்றன இளங்கொடியேபார்-எ-று.

துஞ்சல்வந்தபோதோழமை விட்டயலுறக்கும்
வஞ்சநெஞ்சர்போல் காதுவண்டணிகுழன்மாதே
அஞ்சலாதுநின்றவருட னிறந்தநல்லவர்போல்
கஞ்சமெல்லுடனறப்புண்டு கிடப்பனகாணாய்.

இ-ள். சாவுவந்தபோது அந்தணரைநீங்கிவேறேசெல்லுகின்றவஞ்சனையுடையமனத்தினரையொப்பாகாமல் வண்டுகள்மொய்க்கின்றகூந்தலையுடையபெண்ணேபயப்படாமல்அந்தணருடனேசாகிற நல்லோரைப்போற்றாமரைமலர்கள் நெல்லுடனேகூடஅறுபட்டுக்கிடக்கின்றவற்றைப்பார் எ-று. ௨௭௨

அடலனங்கனுக்கணியபிடேகமனையாய்
மடல்கொள்வாவினீர்குடைந்திடப்பாய்கின்றமடவார்
மிடைநெடுஞ்சிலைபுயல்பிறை சுமந்துபன்மின்போய்க்
கடலில்வீழ்ந்திடு காட்சியைநிகர்ப்பதுகாணாய்.

இ-ள். எல்லாரையும்ஜயங்கொள்கிறமன்மதனுக்குச்சூட்டுவதானகிரீடம்போன்றவளேபூவிதழ்களைக்கொண்டகுடத்துநீரிலேவிழுகிற பெண்களுடைய தோற்றம்பலங்கொண்டநீண்டவில்லும் மேகமும் பிறையுங்கொண்டு பலமின்னல்கள்போய்க்கடலிலேவிழ்கிறதோற்றத்தை ஒத்திருக்கிறதைப்பார்-எ-று. ௨௭௩

ஏந்திளந்தனத்தொருத்தியின்புனல்குடைந்தெழுந்து
கூந்தலங்கைபான்முறுக்குவாள்குளிர்முகத்தோற்றம்
காந்தண்மாமலருடுபோய்த்திங்களைக்கரிய
பாந்தளுண்டுவதொப்பதுபசுங்கொடியே.

இ-ள். தாங்குகின்றஇளமையான கொங்கைகளையுடைய ஒருபெண்ணானவள் இனிதானநீரிலேமுழுகியெழுந்திருந்து கூந்தலைத்தனதழகிய கையினாலேமுறுக்கிநீரைப்பிழிகிறவர்களுடைய குளிர்ந்தமுகத்தினது தோற்றமானது காந்தளின்பெரியமலருள்ள இடத்திலே போய்ச்சந்திரனைஒருகரும்பாம்புபிடிப்பதை யொத்திருக்கின்றதைப் பசுங்கொடிபோலே பார்-எ-று. ௨௭௪

சிறுநுதற்பெருங்கண்ணியோர்தெரிவைநீர்மூழ்க
நறுமலர்க்குழல்வண்டெழுந்தலமருதல்வ
அறநெறிப்படிபுரந்தகோவரசர்களிறக்க
மறுநமக்குடிபோல்வனகாண்டிமாமயிலே.

இ-ள். சிறிதானநெற்றியையும்பெரிதானகண்ணையுமுடைய ஒருபெண்ணீரிலேமுழுகிப்போக அப்போது அவளுடைய மணங்கொண்ட பூவையணிந்தகூந்தலிலிருந்தவண்டுகள் கிளம்பிச்சுழன்று அலைவன எப்படியென்றால் தருமநீதியாக உலகையாண்ட செங்கோலையுடைய அரசர்களிறந்துபோகவேதுன்பப்படுகிறகுடிகளை ஒத்திருக்கின்றவைபார்க்குத்தமயிலே-எ-று. ௨௭௫

மஞ்சனகுடைந்தாடியோர்வாணுதன்மடந்தை
கஞ்சநன்மலர்குடைந்ததன்மிசைக்கைவைத்தல்
சஞ்சலந்தவிரென்முகந்தனைக்கண்டுதளுப்பா
சஞ்சலென்றுகையமைப்பதுநிகர்த்தல்பாரணங்கே.

இ-ள். திருமஞ்சனமானநீரிலேமூழ்கிவிளையாடி ஒருஒளிபொருந்திய நெற்றியையுடையபெண்ணானவள் ஒருதாமரையினது நல்லபூவைக்கிள்ளி அதன்மேலேதன்னகையைவைத்ததெப்படியென்றால் துன்பந்தவிர்த்துவிடுஎன்முகத்தைப்பார்த்துக்கண்ணீர்ததும்பாமல்பயப்படாதேயென்றுதனதுகையாலமைக்கின்றதை ஒத்திருக்கின்றதுபார்பெண்ணே-எ-று.

காளிமைப்பெருநீழலின்மருவொருகன்னி
தேனிரைத்தமென்கிழிநகறுமலர்தெரிவ
வானிரைத்ததண்கருமுகிலிடையிடைவயங்கு
மீனிரைத்தனவொப்பனகாண்டியாண்மயிலே.

இ-ள். [illegible]

[illegible]

இ-ள். [illegible]

[illegible]

இ-ள். [illegible]

[illegible]

இ-ள். [illegible]

கள்சிவக்க மனத்திலேகோபங்கொண்டு அவள்பார்க்கிற பார்வையையும் அவன்கண்பார்வையும்போர்—எ-று. உ௮0

இன்னதன்மையானவையுங்கண்டுகொண்டேபோ
பின்றுமன்னனுங்கலவியும்புலவியும்விளைத்து
நன்னெடும்பனைகடந்தருஞ்சுரத்திடைநண்ணி
வன்னையாமூலைவைரவிகோட்டத்தில்வந்தார்.

(இ-ள்) இப்படிப்பட்டவேடிக்கைகளெல்லாம் பார்த்துப்பார்த்துக்கொண்டுபோய்ச் சந்திரமதியும் அரிச்சந்திரனும் கூடலும் ஊடலுஞ்செய்துகொண்டு அந்தநல்லதானநெடிய மருதநிலத்தைக்கடந்துசென்றுஅப்பால் அரிதானபாலைவனத்துக்குப்போய்சுவர்ணநிறத்தையுடையதாய்ப் பெரிதானகொங்கைகளையுடைய காளிகோவிலுக்குள்ளே இருவரும்வந்தார்கள்-எ-று. உ௮க

யோகினிக்கணஞ்சூழ்ந்திடக்கொடுஞ்சுரத்துறையும்
போகினிப்பெருமாட்டிமுன்றிலிற்றொழுது
பாகினிற்சிறந்திரதித்தமொழியொடுபனிமந்
தாகினித்துறையணைந்ததிற்படிந்தயலகன்றார்.

(இ-ள்) அநேகம்யோகினிக்கூட்டங்கள்சூழ அந்தக்கொடுமையான பாலைவனத்திலேவாசஞ்செய்கின்ற காளியாதேவியினுடைய திருமுற்றத்திலேநின்றுஅவளைவணங்கிக்கொண்டு சர்க்கரைப்பாகினும் சிறப்புள்ளதாய்த்தித்திக்கின்றவசனத்தையுடைய சந்திரமதியுடனேகுளிர்ந்தகங்காநதித்துறைக்குவந்து அதிலேநீராடிக்கொண்டு அப்பாற்போனார்கள்-எ-று. உ௮உ

வேலோங்கியமலைகளும்வனங்களுநெடும்விடுத்துச்
சூலோங்கியவருவியுந்தூரத்தியுங்கடந்து
சாலோங்கியசக்கரப்பொருப்பையுந்தள்ளி
ஆலோங்கியவயோத்தியாநகரியையணைந்தார்.

(இ-ள்) மூங்கில்வளர்ந்துள்ள மலைகளையும் காடுகளையுங்கடந்து பிரப்புகாடுகள்வளர்ந்துள்ள அருவியாற்றையும் அவ்வாற்றினது திட்டுகளையுங்கடந்துசென்றுபக்கங்களிலே உயர்ந்துள்ளசக்கரவாளகிரியையுங்கடந்துபோய் மதில்களுயர்ந்துள்ள அயோத்தியாபுரியைப்போய்ச்சேர்ந்தார்கள்—எ-று. உ௮௩

வாரணத்தொலியெழுமணிவாயிலிற்புகுந்து
தோரணத்தெருக்கடந்துசோபனம்பலர்சொல்ல
ஆரணத்தொலியாதிகண்மழையெனவார்க்கப்
பூரணக்குடஞ்சுமந்தபொற்கோயிலுட்புகுந்தார்.

(இ-ள்) யானைகளினுடைய தொனிகிளருவதான அழகிய கோட்டைவாயிலுக்குள்ளே நுழைந்துபோய்த் தோரணங்கள் கட்டியிருக்கிற வீதிகடந்துபோய் மங்களவாழ்த்துகள் அநேகம்பெண்கள்பாட வேதவோசைகள் முதலாகிய வோசைகள் மேகங்கள்போல் முழங்க நிறைநீர்க்குடம் பொற்சிகரத்தைத் தாங்கியிருக்கிற சுவர்ணமயமான அரண்மனைக்குள்ளே போனார்கள்-எ-று. ௨௮௪

முளைத்தவெற்பனகோயிலின் முதிர்மலரணைமேல்
இளைத்தநுண்ணிடையிரதியுங்காமனுமெனத்தாம்
விளைத்தநல்லின்பவெள்ளத்துவேந்தனுமயிலும்
திளைத்திளைத்தருள்பொழிந்திடக்கழிந்தனசிலநாள்.

(இ-ள்) தானே தோன்றினமலைபோலிருக்கிற அந்தரண்மனையிலே அதிகமாகப்புஷ்பங்களாலலங்கரித்துள்ள மெத்தையின்மேலே சூக்ஷமமாய்ச் சிறிதாயிருக்கிற இடையையுடைய இரதிதேவியும் மன்மதனும்போல் தாங்கள்செய்துகொண்ட நல்லசுகக்கடலிலே அரிச்சந்திரனுஞ்சந்திரமதியுங்கூடிக்கூடி ஒருவருக்கொருவர் தயவுபெருகிவளர இப்படிச்சிலநாள் கழிந்தன-எ-று-திளைத்து திளைத்தென்க. ௨௮௫

வேறு.

தருவையொத்தகரத்தரிச்சந்திரன்
அரிவையைப்பிரியாமலணைந்தநாள்
மருவையுற்றமலர்க்குழல்வல்லிதன்
திருவயிற்றிக்கருப்பந்திகழ்ந்தவே.

(இ-ள்) கற்பகவிருட்சத்தையொப்பானகையையுடைய அரிச்சந்திரமகாராசன் அந்தச்சந்திரமதியை ஒருபொழுதும்பிரியாமல் கூடிவருகிறகாலத்திலே மணங்கொண்டபூவையணிந்தகூந்தலையுடைய சந்திரமதியினுடைய திருவுதரத்திலே கர்ப்பம்உண்டாயிற்று-எ-று. ௨௮௬

செயிரறப்புனறேக்கிடக்காமத்தண்
பயிர்முளைத்தொழும்பான்மையிதாமென
உயிர்நலக்கொடியொன்றுநல்வண்ணமெய்ம்
மயிர்பொடிப்புற்றரும்பிமலர்ந்தவே.

(இ-ள்) குற்றந்தீரநீரைநிரப்புதலினாலேகாமமென்கிறகுளிர்ந்தபயிரானது முளைத்தெழுவதானமுறைமை இப்படித்தானிருக்குமென்னும்படி அரிச்சந்திரனுக்குயிர்போலு நலத்தையுடைய சந்திரமதியினுடைய அழகானஉடம்பெல்லாம் உரோமஞ்சிலிர்த்துப்புளகங்களும் அதிகமாயின-எ-று-கொடியொன்றுநல் கொடிபோல்படவளரும் அழகியதோற்றமுடையவள். ௨௮௭

நிலைமயிர்க்கஞ்செறுநர்கொண்டுநீள்கருங்
கொலைமதர்க்கண்குழிந்துகுளிர்முகம்
கலைநிலாவின்விளர்த்துக்கதிர்மணி
முலைமுகங்கள்கறுப்புமுதிர்ந்தவே.

(இ-ள்) நிமிர்ந்துநிற்கின்ற மயிரினிடமெல்லாம்புளகித்தலாய் நீண்டகொலைசெய்வதாய்மருட்கையையுடைய கண்களுங்குழிந்துபள்ளமாய் குளிர்ந்தமுகமும் சோடசகலைகளையுடைய சந்திரனைப்போல்வெள்ளையாய் ஒளிபொருந்திய நீலரத்னம்போன்ற முலைக்காம்புகளும் கறுப்புமிக்கன-எ-று. உஅஅ

தொடைமலர்க்குழல்சோர்ந்துசெழுந்துகி
லுடைநெகிழ்ந்துபையப்பையவொல்கியே
நடைபெயர்ந்துநரம்புபசுத்தவால்
இடையுண்டென்றறியப்பட்டதியார்க்குமே.

(இ-ள்) தொடுத்தமலரணிந்தகூந்தலுஞ் சோர்தலாய்ச்செழுமையானவஸ்திரமுமுடுத்ததல்குலைந்து மெள்ளமெள்ளத்துவண்டு நடைநடந்து உடம்பிலுள்ளநரம்புகளும்பச்சைநிறமாயின அப்போது இடையுமுளதாயிருக்கிறதென்றுதெரிதாயிற்றுஎல்லார்க்கும்-எ-று. உஅகூ

பாங்கிமாரிருபக்கமுநின்றுகை
தாங்கிமுன்செலத்தானடந்தொல்கியே
ஆங்குதிங்கணிறைந்தபின்பாயிழை
தீங்கிலாமற்சிறுவனைப்பெற்றனள்.

(இ-ள்) தோழிமார்களிருபுறத்திலும்நின்று கைகளைத்தாங்கிக்கொண்டுமுன்னேபோகப்பின்புதானுநடந்துதுவண்டு அப்படிப்பத்துமாதமுநிரம்பினபின்புசந்திரமதியானவள் யாதொருதோஷமுமில்லாமல்புத்திரனைப்பெற்றாள்-எ-று. உகூ௦

பிள்ளைவந்துபிறந்தனனென்றலும்
வள்ளலுள்ளமகிழ்ந்திரவோர்க்கெல்லாம்
அள்ளிநீரறையத்திறந்தேழுநாள்
கொள்ளைகொண்மினெனக்கொடுத்தனரோ.

(இ-ள்) அப்படிப்பிள்ளையானவன் உண்டாகிப்பிறந்தானென்றவுடனேபிரபுவாகிய அரிச்சந்திரன்மனமகிழ்ந்து யாசகருக்கெல்லாம் அள்ளிக்கொள்வதாய்நீங்கள்பொக்கிஷத்தைத்திறந்து ஏழுநாளளவுங்கொள்ளையடித்துக்கொள்ளுங்கோளென்று உத்தரவுகொடுத்தான்-எ-று.

மதலைவந்துபிறந்தமகிழ்ச்சியால்
திதலையல்குனல்லார்தெருவெங்கணும்
பதலைதோறும்பனிநீர்புழுகுநெய்
குதலைமாதர்கொணர்ந்துசொரிந்தனர்.

(இ-ள்) அந்தப்படிப்பிள்ளையுண்டாகிப்பிறந்த சந்தோஷத்தினாலே தேமற்படர்ந்தஅல்குலையுடையபெண்களிருக்கிறதெருவெல்லாம் பானைகளிலேபனிநீரும்புனுகும்அத்தரும்மழலைச்சொற்களையுடைய அப்பெண்கள்கொண்டுவந்துகொட்டினார்கள்-எ-று. உகூச

தொட்டிதாழிகடோணிகடாரங்கள்
மட்டிலாதனவீதிதொறுமிரீஇ
விட்டமஞ்சனம்வீதியெலாங்கடை
கட்டிவைத்தபின்கன்னியர்கூடினர்.

(இ-ள்) மரத்தொட்டிகளிலும் பானைகளிலும் தோணிபோலிருக்கின்றபாத்திரங்களிலும் கடாரங்களிலும் அளவில்லாத வீதிகளெல்லாம் வைத்துவைத்தின திருமஞ்சனநீர் அந்தவீதிகளெல்லாம் நிரம்ப எந்த இடங்களிலும் அமைத்துக்கொண்டபின்பு மஞ்சள்நீராடப் பெண்கள்கூடினார்கள்-எ-று. உகூரு

இளகிடாதிடைச்சேலைபிறக்கிமேல்
புளகக்கொங்கையிற்கச்சிறப்பூட்டியே
அளகம்பின்னியணிகளணிந்துமாப்
பிளவுபோன்றகட்பேதையர்தோன்றினர்.

(இ-ள்) நழுவாமலிடையிலேசேலைகளை இறுகக்கட்டிக்கொண்டுமிருதுவான புளகமுள்ளகொங்கைகளிலே ரவிக்கைகளுந்திருத்தக்கட்டிக்கொண்டு கூந்தலைப்பின்னிக்கொண்டு ஆபரணங்களுமணிந்துகொண்டுமாவினதுபிளவுபோன்ற கண்களையுடையபெண்கள் எங்கும்நீராடப்புறப்பட்டார்கள்-எ-று. உகூசு

பொன்னின்வட்டிலும்பொன்னின்விசிறியும்
துன்னுதந்தக்குழலுந்துருத்தியும்
மின்னுநுண்ணிடைமெல்லியலார்கொடு
நின்றுநின்றெதிர்நீர்விளையாடினர்.

(இ-ள்) பொன்கிண்ணங்களும்பொன்றுருத்தியும்நெருங்கினதந்தக் குழலும், தோற்றுருத்தியும், மின்னுகின்றநுண்ணிதான இடையையுடையபெண்கள் கைகளிலேகொண்டு நின்றுநின்றுமென் றொருவர்க்கொருவரெதிர்நின்றுமஞ்சள்நீர்விளையாடினார்கள்-எ-று. உகூஎ

ஆழிசோரவளிவடஞ்சோர்ந்திடத்
தாழிநீரொண்டுதாமெறிந்தாடினர்
ஏழுமேகமுமொத்திடத்தப்பொழி
ஊழிகாலத்துமாரியைப்பொக்கவே.

(இ-ள்) மோதிரங்களுங் கழன்றுபோகவும் அணிந்தமுத்துமாலைகளும் அற்றுவிழவும், பானைகளிலிருக்கிற மஞ்சணீரைமொண்டு தாங்களொருவர்மேலொருவரூற்றிக்கொண்டு விளையாடினார்கள். ஏழுமேகங்களும் ஒருங்குசேர்ந்து பூமியினிடங்களெல்லாம் பொழிகின்ற ஊழியகாலத்துமழையையொப்பா-எ-று. ௨௯௬

துடியிடக்கைவலம்புரிதுந்துபி
திடிமென்பேரிகைசின்னநற்காகளம்
இடியெனக்கிளர்ந்தார்த்திடவேழையர்
படியின்மின்பாங்கெனப்பாவினர்.

(இ-ள்) உடுக்கை-இடக்கை-சங்கு-நகாரா-துந்துபி-திமிலென்றுமூழக்குகின்றபேரிகைசின்னம் எக்காளம்இடிபோலமுழங்கவொலிக்கப்பெண்கள் அந்தவீதிகளெல்லாம் மின்னல்பாவினதைப்போற்பாவினார்கள்.

முருக்கின்வாய்ச்சியொருத்திமுகத்திலோர்
திருக்குழற்பெய்செழும்புனல்சிந்துதல்
அருக்கற்கென்றுமனுத்திடுமர்க்கியம்
சாற்சிக்குந்தருசெயல்போன்றதே.

(இ-ள்) முருக்கம்பூவைப்போலும் வாயையுடைய ஒருத்திமுகத்திலேயொருவன் அழகிதாணபிச்சுக்குழலிலேகொண்டசெழுமையானநீரைச்சிந்துதலெப்படியென்னில் சூரியனுக்குஎப்போதுங்கொடுக்கிற அர்க்கியஜலம்சாற்காலசந்திரனுக்குக்கொடுக்கிற செய்கைபோலிருந்தது.

ஒருத்திகொங்கையிரண்டினிலொன்றன்மேல்
துருத்திநீரிருதோகையர்வீசினர்
பெருத்தமந்தரவெற்பைப்பிணித்ததோர்
பருத்தவாசுகித்தாம்பிழுப்பாரென.

(இ-ள்) ஒருபெண்ணினுடைய இரண்டுகொங்கைகளிலே ஒருகொங்கைமேலேதுருத்தியிலுள்ளநீரை இரண்டுபெண்கள்பீச்சினார்கள் எப்படியென்னில்பெரிதானமந்தரமலையைச்சூழ்ந்து ஒருகனமானவாசுகியென்னுங்கயிற்றினாலேஇழுக்கிறதுபோல-எ-று. ௨௯௯

நவ்விநோக்கினளிர்முகத்தேயொரு
செவ்வியாள்சிந்திடுஞ்சுவிறிப்புனல்
அவ்வியத்துடனாழிவேண்டிங்களைக்
கவ்விமுன்னிமிர்கட்செருவொத்ததே.

(இ-ள்) மான்போலுங்கண்ணியான ஒருத்தியினுடையகுளிர்ந்தமுகத்திலேமற்றொருபோழ்போனவள் வீசின்றசந்தனக்குழம்பினாலது பொலுமைகொண்டு சுக்கோதகமானகடலிலேதோன்றுகிற வெண்மையானசந்திரனைக்கவ்விக்கொண்டு சுக்கோதகமானகடலிலே தோன்றுகிற கேதுவென்னும்பாம்பையொத்திருந்தது-எ-று. ௯௰

காருருக்கொள்கருங்குழல்கைக்குழ
லீரொருத்திகிதம்பத்திற்றுக்கலால்
போருக்கென்றுபுறப்படும்புட்பகத்
தேருக்கிட்டதிரள்வடமொத்ததே.

(இ-ள்) மேகநிறத்தைகொண்ட கருத்தகூந்தலையுடைய ஒருத்தி கையிலேகொண்டபீச்சுக்குழலின்நீரான துமற்றொருத்தியினுடைய அல்குலிலேபடுகிறபோது சண்டைக்கென்றுவெளிப்படுகிற புட்பகத்தருக்கணிந்ததிரட்சியாகிய முத்துமாலையையொப்பாயிருந்தது-எ-று. ௯௰௧

புழுகுசக்தனம்பொன்னிறக்குங்குமம்
ஒழுகுசெச்சையுதகமிமசலம்
வழுவில்பொற்சுண்ணநல்லெண்ணெமஞ்சணீர்
முழுகும்வல்லியர்மொண்டெறிந்தாடினர்.

(இ-ள்) புழுகு—சந்தனம்—பொன்னிறமானகுங்குமம் ஒழுகுவதான சிவந்தநீர்பனிநீர் குற்றமில்லாத பொன்னிறக்கந்தபொடி நல்லெண்ணெமஞ்சணீர் ஆகியஇவைகளெல்லாம் அந்தப்பெண்கள் முகந்துவீசி விளையாடினார்கள்—எ-று. ௯௰௨

வம்புலாமுலைமாதர்க்குமைந்தர்க்கும்
கம்பமால்களிற்றேனுக்குங்கன்னிக்கும்
அம்புராகியிலாமுதுற்றநாள்
உம்பர்கோதுற்றவோகைவந்துற்றதே.

(இ-ள்) இப்படிஅந்த அயோத்தியாபுரியிலுள்ள ரவுக்கையணிந்த தனங்களையுடையபெண்களுக்கும்புருஷர்களுக்கும் தூணிலேகட்டுகிற உயர்ந்தயானைமேலேறுகிற அரிச்சந்திரனுக்குஞ்சந்திரமதிக்கும் கடலிலேஅரிதான அமுதம் உண்டானபோதுதேவர்களுக்கும் அவர்களுக்கரசனான இந்திரனுக்குமுண்டான சந்தோஷம்வந்துகூடியது—எ—று.

மேலினோர்தம்விதாணமுந்தனிக்
கோலினோர்தக்குணமுங்குலமனு
நூலின்வத்துநுணங்கியகேள்வியும்
பாலினேடுகலந்துபருகினர்

(இ-ள்) மேன்மக்களுள்ளபுத்தியும்நிகரில்லாதனீதியையுடையவ னுக்குள்ளகுணமும்அக்குலத்திலுள்ளமனுவாலேசொல்லியநீதியா யின்படியேவருவதான அதிருட்சமானகேள்வியும் தம்கள்முறையுட னேகூட்டிக்குடித்தார்கள் புத்திகுணம்கேள்விகளாகியதேனைத்தங்கள் புத்தியாகியபாலுடனேகூட்டி யனுபவித்தார்களென்க-எ-று. ஙாச

ஆவலின்னரிச்சந்திரன்மைந்தனை
மூவரன்னமுனிவர்கள்வாழ்த்தியே
யாவருந்நிகரில்லவற்கேற்றிடத்
தேவதாசனெனப்பெயர்செப்பினார்.

(இ-ள்) மிகுந்தபிரீதியுடனேவந்து அரிச்சந்திரனுடையபுத்திரனுக் குமும்மூர்த்திகளையொப்பான தவமுனிவர்கள்ஆசீர்வதித்து எவருநிக ரில்லாதஅவனுக்குத்தகுதியாகத்தேவதாசனென்றுபெயரிட்டார்கள்.

பொலன்கொள்காப்புப்படியுகிர்த்தண்டைமுத்
தலங்கல்கிண்கிணியைம்படையாழிகள்
இலங்குபொன்னரைஞாணிவைசாத்தியே
அலங்குமாமணித்தொட்டிலேற்றினார்.

(இ-ள்) பொன்னாலேசெய்தகாப்புபுலிநகத்தாலேபதக்கமும் தண் டைமுத்துமாலைகிண்கிணிபஞ்சாயுதப்பூண்மோதிரங்கள்விளங்குகின் றபொன்னரைஞாண் ஆகிய இவைகளெல்லாமணிந்து விளங்குகின்ற பெருமையையுடையரத்நத்தொட்டிலின்மேல்படுக்கவைத்தார்கள்.

சூழுமாமணித்தொட்டிலிலேற்றியே
தாழுநீள்குழற்றாதியர்போற்றயாண்
டேழுபுக்கனனிவ்வகைகாதலன்
வாழுநாளினில்வந்தவைகூறுவாம்.

(இ-ள்) சூழ்வதான பெரியரத்நங்கள்பதித்த தொட்டிலின்மேலே படுக்கவைத்துநீண்டதொங்குவதானதாதிமார்கள்வளர்க்கஇப்படிஏழு வயதுபிள்ளையானான்தேவதாசன் இப்படிப்பிள்ளையுடனிவர்கள்வாழு கிறகாலத்திலேவந்தசெய்கையை இனிச்சொல்லுகிறோம்-எ-று. ஙாஎ

விவாககாண்டம்-முற்றிற்று-ஆக-விருத்தம்-சக.

---*---

௧.

இரண்டாவது,

இந்திரகாண்டம்.

இம்மையம்மையுமறுமையுமெனவிசைத்துமாமறைகடீரா
மும்மையுந்தெளிவுற்றநெஞ்சரின்மாக்குமாப்புமாறத்திடுஞ்
செம்மையன்பர்மனத்துளைவ்வியதெய்வநாயகர்தேவிமற்
றெம்மையாளுடையுமைதாள்களிரண்டுமேத்திநினைத்துவாம்.

(இ-ள்) இம்மைப்பிறப்புமறுபிறப்புமென்பனவென்றெடுத் துசம்மதிக்கப் பெரிதான வேதங்கள்சொன்ன மூவகையுந்தெரிந்து மனத்திலுள்ளமலமகற்றோர்க்குமெய்யுப்போக்கினொன்றுமின்றியசெ ல்வமுள்ளவர்க்குமுடைய அடியார்களுள்ளத்திலேதங்குகின்றசெல்வ நாயகருடையதேவியாகி, என்னைஅடிமைகொள்ளுமவளுமுடைய அம் மைபாதங்களிரண்டையுந்துதித்துவணங்கக்கடவோம்-ஏ-று. ௧

கொற்றவாசவன்றன்வசிட்டனுணர்த்தநற்செறிகோதிலான்
சொற்றவாறுமுடிக்கவல்லமைதொடங்கிவாவிளக்கினுள்
செற்றவாறுமுறுத்தவன்புரிகின்றமைக்கமனப்புக்குநான்
உற்றவாறிசைத்தகதையறுமுணர்க்கவாறுவிளம்புவான்.

(இ-ள் வெற்றிபொருந்தின இந்திரனுக்குமுன்னேவசிட்டமுனிசொ ன்னதற்குமேலே விசுவாமித்திரர்சொன்னதும் அப்படிசொன்னபடியே மூவுலகெப்பளக்கமாகச்செய்தும் கோசலைகேட்டவிதமும்அவ் ளவுமேவதித்தும்அதற்குக்கோபங்கொண்டு உக்கிரமுள்ளனான்ட ரிச்சந்திரனை அரிச்சந்திரன்பலப்பட்டுக்கெட்டதைப்போலவு ம்அவ்வகைநடந்ததும்மயர்க்குத்தெரிந்தஅளவுசொல்லுகிறேன்-ஏ-று. ௨

மண்டகத்திருதிக்கநாடுமாழுந்தபன்றநாதிபன்
கொண்டவாதலிபெற்றெடுத்தகுலத்துமாதவனைத்திறுக்
பண்டுமுன்றவிலங்கலங்கிநைசெரியரவியோன்
அண்டர்கோனரசாளுமண்டபமாவதற்கதிறமோதுவாம்.

(இ-ள்) திருவத்திக்கமைந்தசேவிமுக்கசதுர்முகப்பிரமதேவன்பெ ற்றகாசிபன்கொண்டமனைவியான அதிதிபெற்றவனுக்குமகனென்ற ஸ்ருஷிக்கதைப்பரத்திலேமுன்னாளிலேகோபங்கொண்டு பயிகள்ளு டையசைலமான இந்திரனுமடைமானவீரியமுடையவர்களுக்குச்தேவேந் திரனவன் அரசாட்சிசெய்கிறசெல்வமான அமராவதிப்பட்டணத் தப்பெருமையை இனிச்சொல்லுகிறோம்-ஏ-று. ௩

வாஜனை இந்திரன்கொல்லைக்காளிபோன்றவளையத்திறந்து இப்பி
தங்களைச்சொல்லத்தொடங்கினேன்—எ—று. ௬௧

பாய்மக்கலோலக்கடல் சூழ்புவிபார்த்திவர்க்குள்
நிலைக்குஞ்சேகைச்சிறுகுரு பிடங்கொடாது
வாழ்கைக்குநன்றால் வனைறுக்குமனைத்திறற்ற
ஆய்மைக்குமிக்கார்தமை யாய்ந்தறிதொண்மினென்றான்.

இ—ள், கைமேலேமோதுவைதானைகளுத்தஅலைகளைக்கொண்ட கடல்சூழ்ந்த உலகத்துள்ள அரசர்களில் தாம்ஆளுகிற நாடு நகரங்களிலே பாவங்களுண்டாகுதற்கும் வினைக்கப்பற்றுகின்றதான்பமுண்டாகுதற்கும்இடங்கொடுக்காமல்மெய்க்கும்நல்ல சாஸ்திரவிசாரணைக்கும் அந்த விசாரணையைத்திலேபொருந்தினதன்மைக்கும்,மிகுந்தயோக்கியர்களைத்தெரிந்துகொள்ளுங்கள் இன்றென்றுசொல்லுங்களென்றுசொன்னன்—எ—

கறையோதியிறேனவிராணி கலந்நிலைக்கும்
இறையோதியமாற்றமியாவரும் கேட்டபின்னர்ச்
சிறையோதியபேல்வரு நான்முகன்செல்வன்தெய்வ
மறையோதியமிதிட்ட மெடுத்துரைப்பான்.

இ-ள், பரியைத்தலைக்கொண்டகூந்தலையுடையவளான இந்திராணி சுகத்தைஅநுபவிக்கின்றஇந்திரன்சொன்னவார்த்தையை எல்லாரும் கேட்டபின்பு இறகையுடைய அன்னத்தின்மேலேறிவருகிற சதுர்முகக்கடவுளுடையபுத்திரனுந்தெய்வத்தன்மைகொண்ட வேதங்களெல்லாந் தெரிந்தவனுமாகியமுனிவர்அப்படிப்பட்ட அரசன் இன்னனென்று சொல்லுவார்—எ—று. ௬௨

பாருக்கொருவன்பாதார சகோதரன்வெம்
போருக்கொருவன்பகழ்க்கு மறைப்பொருட்கும்
நேருக்குநேர்விடாமலு நன்மைக்கும்பொறைக்கும்
ஆருக்குமிக்கானரிச்சந்திர னெனுமென்றான்.

இ—ள், இந்தலோகத்திலே ஒருவருநிகரில்லாதவன்பின்னும்அப்பிரமணிகளுக்குச்சகோதரனுனவன் வெவ்விதானைக்கடைசெய்கிறதிலு நிகரில்லாதவன்கீர்த்திக்கும் வேதார்த்தவுரைக்கும் அந்த அர்த்தப்படியேநடக்கிறதைப்புக்கும்விடாமல்பலசாஸ்திரயார்த்தத்துக்கும்பொறுமைக்குமெப்படிப்பட்டயோக்கியர்களுக்கும் சிறந்தவன் அரிச்சந்திரனேதக்கவனுவானென்றுசொன்னார்—எ—று. ௬௩

அன்னைதுகூறிடவைத்தனை அட்டதாலும்
முன்னைவென்றெரசட்டின்முடித்ததாலும்
தன்னுள்ளாரசலத்தினைத் தாழுழந்த
சொன்னேர்தவத்தோர்க்கிப்பெளசிகன் கூறலுற்றான்.

இ-ள், அந்தவசிட்டரப்படிச்சொல்ல அப்போதுதன்புத்திரனை க்கொன்றாலுந்தன்னுனிசொன்னபாறுதவோனதொருதன்மடிறுமேல லென்றாதலினுன்னவனைச்செய்தநிறைதுர்தன்னுணுக்கெரிக்குமசொ ன்னக்கடாத வேசபதனைதயுடையவனைக்கொதிப்புக்கொண்டு பெரு மைபொருந்திய தவத்திறனுடையர்க்கதலைவிகனுவிசுவாமித்திரமுனி வர்சொல்லத்தொடங்கினார்-எ-று. ௧௪

வெய்யவன்பாதகன்பாதகரவிருப்பன்வியலன்
பொய்யனைவியரும்பொறையும்மெரித்தாம்பிப்புல்லன்
சையல்சபடன்சலவன்றீயனல்லவென்றிவ்
வையால்மிருமன்னுயர்த்தாயிமெதல்லாகவென்றான்.

இ-ள், பொல்லாதவனும்பாதகனும் பாதகஇச்சையுள்ளவனும் பய ப்படத்தக்கபொய்யனானவனும் பொறுமையும் கொஞ்ச மேனும் இல்லாதஅற்பனும் வஞ்சகனும்கபடனும் அலைநெருப்பினி னிடமேல்லவனென் றரிச்சந்திரராசன்சமூகத்திலேயின் றுசொல்லிமே கித்தனில்பாதுபயமில்லாக்குநிலையான்றார்-எ-று. ௧௫

நிலைக்கொழிவின்றிபொய்பக்தமெய்ச்செல்வமேயாலே
காக்கெலத்திறலானிலைவைதிப்பிவைவிகமேன்
வாய்மெய்க்கிடுகின்மணம்மெய்க்கிலைவாய்புசொன்ன
நிலைநிலைதெய்வழிநின்வலிதபொய்த்தமெதன்றான்.

இ-ள். அரசர்குத்தியனலனைவெவ்விய செய்கைகள்ளுள்ளதுமில்லாம லக்குசெய்கைகனாகவேசிரில்லைதவொழுவைகூணத்தையுடையபொய்ய னைஅரிச்சந்திரனைக்குறித்து உன்னுடையகோபிக்கிற வெவ்வியபலத் தைக்கொண்டு இப்படிச்சொல்லவொருமுனிவனே இப்படிச்சொல்ல நானேஉன்னுடையவாய்மையென நிருக்கிறஉம்முடையமனமும்வேவார த்துக்கிற இப்படிவிராலை வாய்த்தைகளைச்சொன்னீரேர்வேலாதிருக் கிறவேகைச்செய்யாதிருக்கிறதிலுமே தெய்வமும் உம்முடனே கூடிக் கொண்டுபொய்யாவிருக்கின்றது நீரும்உம்முடையவாயும்மனமும்வெ த்துபோகவேணும் என்றார்விசுவா-எ-று. ௧௬

தெய்வத்தநிலைகொக்குவசிட்டனித்தெய்திசெப்ப
மைவைத்தகொடிக்கொழுந்தெனமெனவன்றிநோக்கிப்
பொய்வைத்தவெல்வாய்புழுவாருதலன்றிப்பொய்யா
மெய்வைத்தவெல்வாய்மைவேவலவென்றுசெதுன்றான்.

இ-ள், அப்படித்தெய்வத்தைகொக்குமென்று வசிஷ்டமுனிவர்இ ம்மித்தமாமைத்தெய்வமேகொடுஞ்செய்மைவோலைகூடுதலான விசுவாமி த்திரமோலைச்சுப்பார்த்துப்பொய்சொற்கள்சொன்ன உம்முடையவா

கைப்பற்றுக்கொண்டதுபோய்க்கு பொய்ப்பொழிலைப்பகலைப்பொழுதுதான கை
க்கவாபுரானைறும்வேணைதென்றுசொன்னார்.

புகைக்கொண்டசெந்தீப்பாவிழுத்ததேபோல்
பகைக்கொண்டடக்கப்பெருவன்மையைவிட்டுநெய்திக்
கனைக்கொண்டகற்பமுடிவினைகறுத்தீந்தபோல்
சினைக்கொண்டெழுந்தான்விழித்தீத்திசைதோறுஞ்சிந்த.

இ-ள், காட்டிலேயெடுத்தநெருப்புகையண்டைத்தனதுமிழிக்குநிலை
க்கநெருப்போலைக்கத்தீயிலேதோன்றி அடங்காதபெரிதானசார்த்தியம
கயிலைக்கட்டைகின்றகைவாரணபிரமகற்பமுடிவிலேதோன்றுகின்ற கா
லருத்திரனைப்போற்கோபங்கொண்டெழுந்திருந்தார்கண்களிலேயுண்
டானநெருப்புப்பொறிகள்தசதிக்கிலுஞ்சிதற-எ-று.

தாக்கிற்றினன்கனகென்றுறு பல்லாறுசிற்றம்
நீக்கத்தீக்கற்றை நற்றவப்போதிரண்டும்
பாக்கிற்பரிசெக்கழல் பம்பியுற்றக்குயிக்கும்
நீக்கிற்றிலேன்கொழுக்கோடிச்சியிர்க்கதன்றே.

இ-ள், அதற்குவிசுவாமித்திரரும் பொறுத்தலாய் அப்படியே கோ-
பமென்பேசாதஅதட்டிசுகொண்டிருக்கின்றார் கிழமிறஅப்போது அவ்விரு
வரிடத்திலுமுண்டாகின்ற கொக்கிகோபாக்கினியானது நெருக்கியெழுந்தெ
ரித்துமேலெழும்பிட்டாலதாய்கண்டகொழுந்துசென்றுயர்ந்தது-எ-று.

காணகத்திகழ்தாபனைமட்டிறக்குற்றபுகைதென்
தானைத்தனைகாடிபொழுக்கெரிதாககலோடும்
வானென்பதின்னைபகிடன்பதென்றவாறேர்
கோவென்றுசிம்புயலைக்குறுலைக்கெழுந்தாள்.

இ-ள், வண்மைகளிராகம் பாவிதான தாயனாயகிலே பிற
க்கிறக்கிறபிராமதேவருலகமெல்லாம் பாவிக்கிளர்க்குநெருப்புக்கனைவி
லிசை போகஅராசுந்தான் எல்லாபாதையும் பூலோகத்தார்க்கெல்லாரு
மிலென்றுதேவர்களுக்கராசனானஇந்திரன் அப்போதுபயந்து அலைந்து
குலைந்து வாழுகநிருந்தான்-எ-று.

அற்றுசெயேவலஞ்செய்யாற்றியமோத்திபுன்னம்
தேற்றுமகவான்றிருச்செய்யவர்க்கையமைத்துக்
கூற்றுன்வினைவாவனைகண்டிற்கூறுநீர்மை
தோற்றுவிழித்தக்கசுவெய்வைதன்சொல்லுமென்றான்.

இ-ள், ஒருவராலும்ஆற்றக்கூடாதஅவ்விருவருடைய கோபதாபவெ
ப்பங்கொண்டவேபத்தைஆறப்பண்ணிஅமரும்படிசெய்துபனைத்தைய
க்கேற்றிஇந்திரனைவந்தனத்து கிலக்கயவர்போதுங்கைகூட்டல் அடக்

சச்செய்துஉங்கள்சொல்லின்படி அரிச்சந்திரனிடத்திலேஉண்டாமவற்றைப்பரிசோதித்தால்நீங்கள்சொல்லுகிற குணத்திலே ஒருவர்பட்சம்தோற்பாரானால்தோற்றவர்தாழ்ந்துசெய்பத்தக்கதுயாதுசொல்லுங்களென்று சொன்னான்-எ-று. கூற்றுல்யபனுவெனவுமாம். ௪௧

அன்பாற்கடலாய்வசிட்டனமுன்றுமன்னன்
றன்பாற்றவருண்டெனகௌசிகன்சாய்க்கினன்றே
என்பாற்றவம்விட்டிழிசட்டலையோட்டினேந்தித்
தென்பாற்றனிச்செல்குவன்யானிதுதின்னமென்றான்.

இ-ள், அன்பினாலேகடல்போல்பவராகியவசிஷ்டர் கோபங்கொண்டு அரிச்சந்திரனிடத்தில்நான்சொல்வதற்குத் தவறுவதுண்டாக இந்த விசுவாமித்திரன்காட்டினால்அப்போதென்னிடத்துள்ள தவமெல்லாமிழந்துதாழ்ந்த புலைச்சேரிக்குப்போய்த்தலையோட்டிலேபிச்சைவாங்கியுண்டலைந்துயமலோகத்துக்குப்போகக்கடவேன் யான் இது சத்தியமென்றுசொன்னார்-எ-று. ௪௨

மாறுநெறிகொண்டவசிட்டனம்மன்னனுள்ளம்
வேறாமெனினிச்சபதத்தைவிளம்புவானோ
தேறுகினினின்சபதத்தையித்தேவர்கோன்முன்
கூறுகெனநாரதன்கோசிகனுக்குரைத்தான்.

இ-ள், மாறுபடாதநீதியையுடையவசிஷ்டர் அந்த அரிச்சந்திரனுடையமனசுதாம்சொல்வதற்கு வேறாகுமானால் இப்படிப்பட்டசபதத்தைச்சொல்லுவாரோ சொல்லார்ஆகையால்தெளிந்து இனிமேலும்முடையசபதத்தை இந்தத்தேவேந்திரனுக்குமுன்னேசொல்லக்கடவீரென்று நாரதமகாமுனிவர் விசுவாமித்திரனைப்பார்த்துச்சொன்னார்-எ-று.

நன்றாகுகவென்றுநாரதனுக்குரைத்துப்
பின்றாயவன்போற்பெருநர்பாடைபிதற்றமாட்டேன்
வென்றானெனின்யான்செய்தமெய்த்தவந்தன்னிற்பாதி
குன்றாமலீவேனெனக்கௌசிகன்கூறினானால்.

இ-ள், நல்லதுஅப்படியேஆகட்டுமென்றுஅந்தவிசுவாமித்திரர்நாரதரைப்பார்த்துச்சொல்லிப்பின்புஅந்தவசிஷ்டனைப்போல்பெரிதானசபதத்தைச்சொல்லமாட்டேன் அவர்வெல்லுவாரேயானால் நான்செய்திருக்கிறமெய்யானதவத்திலே பாதிகுறையாமல் கொடுக்கிறேனென்றுவிசுவாமித்திரர்சொன்னார்-எ-று. ௪௪

அமையும்மமையுமடித்தேஅரிச்சந்திரன்பால்
சமையுஞ்சபையின்றிரம்பாவதுஞ்சாற்றாமல்
எமையுஞ்சுரர்காவலிலென்றுமிருத்திநீயிச்
சமையந்துறந்தேகெனப்பின்னருஞ்சாற்றலுற்றான்.

இ-ள், இதுவேபோதும்போதும் அரிச்சந்திரனிடத்திலேஉண்டாகுவதானசபையினிடத்திலே நான்போய்இங்கே நடந்தகாரியங்களில்எவ்வளவும்விளங்கச்சொல்லாமல் என்னையுந்தேவர்கள் காவலுக்குள்ளேநீர்தெரியச்செய்கிறவரைக்கும்இருக்கப்பண்ணினீர் இந்தட்சணமே இவிடம்விட்டுப்போமென்று நாரதர்பின்னுஞ்சொல்லுகிறார்-எ-று. ()

ஆதித்தனருங்குலத்தண்ணலை நண்ணியான்ற
நீதித்தொழிலுந்நெறியுந் தருமத்தினேரும்
சாதித்தவுன்றன்சமைப்பாற் சமர்த்தாற்றுமாற்றூர்
சோதித்திடுபோவெனச் சொல்லியச்சூழலுற்றான்.

இ-ள், சூரியகுலத்திற்பிறந்த அரிச்சந்திரனிடத்துக்குப்போய் அங்கமைந்தநீதிக்கிரமமுந்தருமத்தின்நேர்மையும் இங்கேசொன்னஉம்முடையமுயற்சியினாலும் உம்முடையசமர்த்தைமுடிக்கும் வகையினாலும் பரிசோதித்தறிந்துகொள்ளும்போமென்றுசொல்லி அந்தத்தேவர்காவலுக்குள்ளிருந்தார்நாரதமகாமுனிவர்-எ-று. ௪௬

அக்காலையிலந்தவருஞ்சபையுங்குலைந்து
குதாக்கார்முனிவோர்பலருந்தபருழல்சார்ந்தார்
மைககார்நிறவண்ணலைவாழ்த்தியக்கௌசிகன்போய்ப்
புக்கான்முதல்வைகியபொன்மலைச்சாரற்பொங்கர்.

இ-ள், அப்போது அந்த அருமையானசபைக்கூட்டங்கலைந்து அங்கேகூடியிருந்தவர்களான முனிவர்களெல்லாரும் தங்களிடம்போனார்கள் கறுத்தமேகம்போலும் நிறத்தையுடையஇந்திரனை ஆசீர்வதித்து அந்தவிசுவாமித்திரர்முன்னேதாமிருக்கிறமகாமேருவின் சாரலிலேயுள்ளசோலைக்குப்போனார்-எ-று. ௪௭

இந்திரகாண்டம்-முற்றிற்று-ஆக-விருத்தம்-௪௮.

மூன்றாவது,

வஞ்சனைக்காண்டம்.

—(*)—

திருந்துசெஞ்சொற்செழுமறைக்கௌசிகன்
பொருந்துநீர்க்கடற்பூதலஞ்சார்ந்துபண்
டருந்தவப்புரிசாலையணைந்துபுக்
கிருந்தனன்பின்னிகழ்ந்ததியம்புவாம்.

இ-ள், திருத்தமானசெவ்வியசொற்களைக்கொண்ட செழுமையான வேதமுணர்ந்தவிசுவாமித்திரரானவர்ஜலமயமானகடல்சூழ்ந்தபூலோகத்துக்குவந்துமுன்னே தாம்அரிதானதவத்தைச்செய்கின்ற பன்னகசாலைக்குள்ளேபோயிருந்தார்பின்புநடந்ததைச்சொல்லுவோம்-எ-று.

செவ்வியன்றனைத் தியவனென்றியாம்
வெவ்வியபற்பட விண்ணவர்முன்புகல்
அவ்வியத்தைமெய் யாக்குமருந்திறம்
எவ்வியற்றென் றிதயத்திலெண்ணினான்.

இ-ள், நல்லவனைக்கெட்டவனென்றுநாம்கொடுஞ்செய்கைதோன்றத்தேவர்களுக்குமுன்னேசொன்னபொறாமைச்சொல்லை மெய்யாகச்செய்கிற அரிதானவகைஎவ்வகைபாலாகுமென்றுமனத்திலேஆலோசிக்கலானார்விசுவாமித்திரர்-எ-று. ௨

விண்ணிருந்து விரிமலர்ச்சோலையின்
கண்ணிருந்த கௌசிகற்காண்டுமென்
றெண்ணிகந்த முனிவர்வந்தீண்டுபு
மண்ணில்வீழ்ந்து வணங்கியிருந்தனர்.

இ-ள், அப்போதுஆகாயத்தை விட்டிறங்கி மலர்ந்தபூஞ்சோலைக்குள்ளிருக்கிறவிசுவாமித்திரரைப்பார்ப்போமென்றுகணக்கில்லாதமுனிவர்கள்வந்துகூடிப்பூமிமேலேபடியவிழுந்துவணங்கிஇருந்தார்கள்-எ-று.

இருந்தபின்னரி ருள்ளறுநன்குணத்
தருந்தவத்தானே வருமையநீ
பொருந்துபொன்னகர் புக்கபினுற்றது
திருந்தவேயருள் செய்கென்றுசெப்பினார்.

இ-ள், அப்படியிருந்தபின்புமயக்கந்தீர்ந்த நல்ல குணத்தையுடைய அருமையானதவமுனிவர்களெல்லாரும் ஐயாவிசுவாமித்திரரே!நீர்தேவர்களிருக்கிறபொன்னுலகத்துக்குப்போனபோது அங்கேநடந்ததைச்செவ்வையாகத்தெரிய அருளிச்செய்யவேணுமென்றுசொன்னார்கள்

கொற்றவாசவன் கூறியமாற்றமும்
மற்றோர்வாய்மை வசிட்டனுரைத்ததும்
உற்றவாறு முணர்த்துதலின்றியே
கற்றோர்வஞ்சனைக் கட்டுரைகூறுவான்.

இ-ள், வெற்றிபொருந்தியதேவேந்திரன்சொன்னவிசேஷமும் அதற்குவேறொருவார்த்தைவசிஷ்டர்சொன்னதும் அதற்குத்தாம்பேசினவகையுஞ்சொல்லாமல் வேறொன்றைக் கற்பித்து வஞ்சமானகட்டுவார்த்தை சொல்லுகிறார்-எ-று. ௫

தெரியுநீண்மறைத் தேவரவைக்கணே
பெரியமாதர் பேசிபவேள்வியில்
அரியதொன்று முடிக்கும்வாவினால்
கரியவோலக்கடற் புவியெய்தினன்.

இ-ள். நெடியவேதங்களைத்தெரிந்திருக்கின்றதேவர்கள்சபையிலே பெரியபெருமையைக்கொண்ட முனிவர்களாலேசெல்லுகின்றயாகங்களிலேசிறந்த ஒருயாகசனைச்செய்து முடிக்கவேணுமென்கிற ஆசைகொண்டுகருநிறமாக ஒலித்தலையுடைய கடல்சூழ்ந்தஉலகத்துக்குவந்தேன்-எ-று. ௬

சொல்வதொன்றுண்டுகேட்கத்துணிந்திரேல்
நல்லதென்றுகௌசிகனுட்டினன்
அல்லதாயினுநின்சொல்மறுத்திடல்
வல்லமோவென்றுமாதவர்கூறினர்.

இ-ள், அதற்காகநான்சொல்லுவதொன்றிருக்கின்றது அதை நீங்கள்கேட்கச்சம்மதிப்பீர்களானால் நல்லகாரியமென்று கௌசிகானவிசுவாமித்திரர்சொன்னார் அதற்கு தகாதகாரியமாயிருந்தாலும் உம்முடையசொல்லைத்தடுத்துச்சொல்லமாட்டுவோமோவென்று அந்த மகாமுநிவாரன விசுவாமித்திரர்சொன்னார்-எ-று. ௭

அருளயோத்தி யரிச்சந்திரனையுற்
றிருளறும்பெருவேள் விக்கியான்சொலு
பொருடரும்படி யின்றுபொருத்திநீர்
வருகவென்று மறைமுனிகூறினன்.

இ-ள், கொடுக்குஞ்செய்கையையுடைய அயோத்தியாபுரியையாளுகின்றஅரிச்சந்திரனைநீங்கள்போய்க்கண்டுகுற்றமற்ற பெரிதானயாகத்துக்காகநான்கேட்கின்றதிரவியங்கொடுக்கும்படி இப்போதே அவனைச்சம்மதப்படுத்திக்கொண்டு நீங்கள்வரக்கடவீர்களென்று வேதமுனிவரானவிசுவாமித்திரர்சொன்னார்-எ-று. ௮

கேட்டபோதி லெழுந்துகிரிப்பெருங்
காட்டைநீங்கிக் கடிபொழினீங்கியே
கூட்டமோடு குளிர்புன்றகோசல
நாட்டைநண்ணினர் நான்மறையாளரே

இ-ள், அந்தச்சொல்லைக்கேட்டவுடனேஎழுந்திருந்து மலைகளைச்சூழ்ந்தஅந்தவனத்தைக்கடந்துசென்றுவழியிலுள்ளபரிமளச்சோலைகளையுங்கடந்துபோய்க்கூட்டத்துடனேசென்றுகுளிர்ந்தசங்காசலப்பெருகுவதான கோசலநாட்டைப்போய்ச்சேர்ந்தார்கள் அந்தநான்கு வேதங்களும்பாராயணஞ்செய்கிறமுனிவர்கள்-எ-று. ௯

கன்னலோங்கு கழனியிற்பொன்னிறச்
செந்நெல்கால்பொரச் சேக்கையின்மேவிய
அன்னமெங்கணு மோடுமணிநகர்
மன்னர்மன்னவன் மண்டபத்தெய்தினர்.

இ-ள், கரும்புகள்வளர்ந்திருக்கிறவயல்களெல்லாம்பொன்விளைநெற்கள் அசைத்தசைத்தால் சாமரம்போல்வீசத்தாமரைமலராகிய படுக்கையிலேதூங்குகின்ற அன்னப்பட்சிகள் எவ்விடத்திலும் பறந்துசென்றுசஞ்சரிப்பதான அழகுபொருந்திய அயோத்தியா புரிக்குள்ளேபோய் ராஜாதிராசனான அரிச்சந்திரன்கொலுவிருக்கின்ற சபாமண்டபத்துக்குள்ளேபோனார்கள்-எ-று. ௰

எய்தினரை யிறைஞ்சியிருத்தியே
தொய்தில்மன்னவன் மாமுகநோக்குநீர்
வைதிகத்திரு மாதவத்தீர்வந்த
செய்திசெப்புமென் றுரைசெய்குவார்.

இ-ள், அப்படிவந்தமுனிவர்களைவணங்கியிருக்கச்சொல்லி விரைவிலேஅரிச்சந்திரமகாராசன் அந்தமுனிவர்களுடைய திருமுகங்களைப் பார்த்துவேதக்கிரமமாய்நடக்கின்ற மிகப்பெரிய தவமுனிவர்களே நீங்கள் வந்தகாரியத்தைச்சொல்லுங்களென்றுசொன்னான்அதற்குஅம்முனிவர்கள்சொல்லுகிறார்கள்-எ-று. ௰௧

மன்னனேயொரு வாசகங்கேளிங்ஙன்
சொன்னதுண்டது நல்கத்துணிந்திடின்
இன்னதென்றிங் கியம்புதுமென்றனர்
பின்னர்மன்னவன் பேசத்தொடங்கினன்.

இ-ள், அரசனேகேட்பாயாக ஒருவார்த்தை விசுவாமித்திரர்சொல்லியனுப்பினதுண்டு அதைநீஒப்புக்கொண்டுகொடுக்கச் சம்மதிப்பீராயானால் அதுஇன்னதென்றுசொல்லுகிறோமென்றார்கள் அப்படி அவர்கள்சொன்னபின்பு அரிச்சந்திரன்சொல்லத்தொடங்கினான்-எ-று. ()

இறுதியெய்த றெனினுமினிதுமற்
றுறுதியற்றன தாமெனிற்கமைவதேல்
உறுதினீருரை செய்ததற்கொத்திடப்
பெறுதும்யாமென மாதவர்பேசுவார்.

இ-ள், கெடுதிவருகிறதானாலும்நல்லதேஉங்களுக்குக்கிட்டாததாய் எங்களுக்குக்கிட்டுவதானால்உறுதியாகநீங்கள் சொன்னதற்குச் சம்மதமாகுவோம் அரசர்களானநாங்கள் என்றுசொல்ல அதற்கந்தமகாமுனிவர்கள்சொல்லுகிறார்கள்-எ-று. ௰௩

சந்திராதித்தர் தானவர்வானவர்
இந்திராதிக ளியாவர்க்குமெய்திட
வந்திராவொரு வேள்விவளர்ப்பதை
தோத்திராமுற்ற நன்னிதியென்னினேம்.

(இ-ள்) சந்திரன்—சூரியன்—அசுரர்கள்—தேவர்கள்—இந்திரன்—முதலானவர்கள் எல்லாருக்கும் செய்யத்தக்க தருமமாகச் செய்வதற்குமொருத்தர்படாமல் முடிக்கஅதிருஷ்டபாக்யசாலிகளே-எ-

வேந்தனைப்பெரு வேள்விக்கிருப்பொருள்
ஈந்திடற்குரியா ரெவரென்றியாம்
ஆய்ந்தனைமுனி யஞ்சமற்றிலைநெறிப்
போந்தனம்பென மன்னவன்புகழுளான்.

(இ-ள்) அரசனே அந்தப்பெரிதானயாகத்துக்குவேண்டின அதிர்கிரியையெல்லாம் கொடுக்கத்தக்கவர்கள்யாரென்று நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம் கொடுக்கிறதுக்கு உன்னையல்லாமல் வேறொருவருமில்லையென்று வந்தோமென்றுசொல்லஅதற்குஅரிச்சந்திரன்சொல்லுகிறான்-எ-

யாவுமிப்பொருள் பற்றவுமக்கது
தாவெனக்கென வென்றரிச்சந்திரன்
திரவியங்கொடு வாவெனச்செப்பலும்
பிரயசாரிகள் மீளவும்பேசுவார்.

(இ-ள்) அதிகமாகவேண்டிய இந்தத்திரவியத்தைக்கொள்ளவுக்காக உங்களுக்குச்சேட்டபடியே அதைக்கொடுக்கிறேனென்று நீயறிவாயென்று அரிச்சந்திரமகாராசன் திரவியங்கொண்டுவரும்படியென்று சொன்னபோது கேட்டபிரயசாரியத்தையுடைய முனிவர்கள்சொல்லுகிறார்கள்-எ-று.

இன்றுவேண்டல் பியாகமியற்றிடும்
அன்றுநல்க வமையுமெமக்கென
நன்றுநல்லென மன்னவனின்னவின்
நின்றவாழ்த்தி நெடுமொழிசெய்தனர்.

(இ-ள்) இப்போதுவேண்டாம் நாங்கள்யாகஞ்செய்கிறபோது நீகொடுக்கவேண்டுமென்றுசொல்ல அதற்கு அப்படியேநல்லதுநல்லதென்று அரிச்சந்திரன்சொன்னபோது முனிவர்களெழுந்திருந்து ஆசீர்வதித்து அந்தவேடியரசனைவிட்டுப்போனார்கள்-எ-று. ௰எ

செந்நெல்வெண்ணெல் விளையுஞ்செறுக்களும்
கன்னல்மன்னுங் கழனியுஞ்சோலையும்
அன்னமாகிக்கடமு மகன்றுபோய்
பன்னசாலைப் பழுவத்துளெய்தினர்.

(இ-ள்) செந்நெல்லும்வெண்ணெல்லும் விளைவதானவயல்களுங்கரும்புகள்விளைகிறவயல்களும் சோலைகளும் அன்னங்கள்சஞ்சரிக்கிறகுளங்களுங் கடந்துபோய் விசுவாமித்திரரிருக்கிறபன்னசாலையையுடையசோலைக்குள்ளேபோனார்கள்-எ-று. ௰அ

அல்லவாயின யருந்தவர்கொலைமிகவீ
றன்னவுக்குவிலை சம்பத்திரிச்சந்திரன்
பொன்னுலகப் பொருந்தினமென்றவர்
சொன்னபின்னர்த் தொழுவிதுபோயினர்.

(இ-ள்) போவ அப்போதே அந்த அரிதான தவமுனிவர்கள் [illegible] அரிச்சந்திரமகாராஜன் [illegible] அந்தமுனிவர்கள் அப்படிச்சொன்னபின்பு [illegible] விட்டகன்றுபோனார்கள்-எ-று. ௧௯

அருவனங்கொடுத்தவர் போயபின்
கடுகவிற்பில நிக்கள்சுழிந்துகின்
[illegible]
கொடியபாதகக் கௌசிகன் றோன்றினான்.

(இ-ள்) தம்முடைய பாதங்களை வணங்கிக்கொண்டு அந்த அரிதான தவமுனிவர்கள் போனபின்பு விரைவிலேயே மிகவும் கொடிய [illegible] அரிச்சந்திர மகாராஜனிடத்தில் [illegible] தோன்றினான்-எ-று. ௨௰

கொடுமைக்குவந்தன கொன்றைவேலியர
திரிக்கரும்பினைத் தெங்கறவிட்டிட
[illegible]
எடுக்கவியப்பி பயிர்த்தலைகடலாம்.

(இ-ள்) [illegible]-எ-று. ௨௧

கன்னமீதிக்கொலைசெ கொன்னலிய
தன்மையாக வுணர்த்தியரக்கிகள்
[illegible]
புன்னிறத்தன பொய்கைகடோறுமே.

(இ-ள்) [illegible] போலாயின-எ-று. ௨௨

அலைகள்சாய்த்தகல் வாவியின்மினெலாம்
கலைகள்தாய்த்தய [illegible]

குலைகள்சாய்த்தயல் குப்புற்றநின்றன
தலைகள்சாய்த்தன சாலியின்கூட்டமே.

(இ-ள்) அலைகளைமோதி அகன்றிருக்கிறகுளங்களிலுள்ளமீன்களெ ல்லாம் தங்கள்நிலைகளைவிட்டுத்தூரத்தேபோகலாயின வாழை மரங்க ளெல்லாங்குலைகளைச்சாயப்படிவிட்டுக்கொண்டுகுனிந்துநின்றன—எ-று. நெற்பயிர்க்கூட்டமெல்லாம் தலைகள்வளைக்குகின்றன. ௨௩

எள்ளலேயறி வற்றெறிந்தார்கையில்
வெள்ளையாதலிற் பெய்மலர்க்காவெலாம்
கிள்ளைபாடின கோமாடின
கள்ளையுண்டலின் வண்டுகளித்தனே.

(இ-ள்) எள்ளையொத்தஅறிவும் இல்லாமல் எடுத்தவர்கையிலுள்ளதா கிற வெள்ளையானபடியினாலே மலர்களைச்சிந்துகிறசோலைகள்முழுதும்கி ளிகள்பாடுதலாயின-மயில்களாடின தேனைக்குடிக்கிறதினாலே வண் டுகள்மயக்கங்கொண்டிருந்தன—எ-று. நிறையுண்டானதாகச்சொல்லிற துபோல் இந்தபாட்டிலும் நாட்டுவளமான கள்ளமையையேசொல் லியதாகக்கொள்க. ௨௪

மாடமாளிகை மண்டபமறுகி
ஆடரங்க மகிழ்ந்தரங்குப
கேடசெய்தவிடிவிடுகின்றபோல்
நாடநின்ற நகரிடைநண்ணினன்.

(இ-ள்) மாடங்கள்-உப்பரிகைகள்-மண்டபங்கள்- பெரியவீதிகள் ஆடுகிறசாலைகள்-அகழ்க்கிடங்குகள்முதலான இந்தஇடங்களெல்லாம் கேடுசெய்கிறவன்வருகிறதினாலேவிடுவிடென்றுபயப்படுகிறதுபோ லப்பிரகாசிக்கிறபட்டணத்துக்குள்ளேவந்தார்-எ-று, விடுவி டென்று மாத்திரம்விளைவித்தல். ௨௫

தளிரிலைப்பிற் றமனியவாயில்புக்
களவில்செல்வத் தயோத்தியைநண்ணியே
கிளரொளிக்கதிர் கீழ்ப்படமேலுற்றி
வளரொளிப்பெரு மண்டபத்தெய்தினன்.

(இ-ள்) தளர்வதானதிலைப்படாதே பொன்மயமான கோட்டைவா சிலுக்குள்ளே புகுந்து அளவில்லாத செல்வத்தைக்கொண்ட அயோ த்தியாபுரிக்குள்ளேவந்துவிளங்குகின்ற ஒளியையுடையசூரியன்கீழ்த் தாழ்ப்போகஅவனுக்குமேற்பட்டுவளர்கின்ற ஒளியையுடையபெரிதான சபாமண்டபத்துக்குவந்தார் எ-று. ௨௬

மந்தராசல மண்டபத்தெய்தலும்
அந்தமாதவற் கண்டரிச்சந்திரன்
எந்தமாதவமோ வருளிங்குநீ
வந்தகாரண மென்றுவணங்கினான்.

(இ-ள்) மந்தரமலைபோலுயர்ந்திருக்கின்ற அந்த மண்டபத்துக்குள்ளே வந்தவுடனே அந்தமகாதவத்தையுடைய விசுவாமித்திரனைக்கண்டு அரிச்சந்திரமகாராசன் நான்செய்த எந்தப்பெரிதானதவத்தினாலே இங்கேநீர்வந்தகாரணஞ்சொல்லுவீராகவென்றுவணங்கினான்-எ-று

காவன்மன்ன கடிமறைவேள்விக்கென்
னேவன்மார்கட் கிசைந்தபெரும்பொருள்
தாவினைச்சொலக் கேட்டரிச்சந்திரன்
ஈவனெத்துணை வேண்டுமென்றேத்தினான்.

(இ-ள்) அறத்தால்உலகைத்தாங்குகின்ற அரசனே தேவர்களாலே காக்கத்தக்க வேதயக்ஞத்திற்குரிய செலவுசெய்கின்ற யாகத்துக்காகவே தவமுயலுகின்ற முனிவர்கள்முன்னேகொடுக்கச்சம்மதித்தஅதிகமான பொருள்முழுதும் இப்போது கொடுக்கவேண்டுமென்று விசுவாமித்திரர்சொல்லக்கேட்டு அரிச்சந்திரமகாராசன் இப்போதே கொடுக்கிறேன் எவ்வளவுவேண்டுமென்றுசொல்லித்தோத்திரஞ்செய்தான். உஎ

மானவன்சொல மாமுனிநோக்கியே
யானைமேனின் றெறிந்தகவண்கலை
போனதூரம் பொருளளிப்பாயெனின்
மோனவேள்வி முடித்திடலாமென்றார்.

(இ-ள்) அந்தமகாராசனாகிய அரிச்சந்திரன் அப்படிச்சொல்லும் போது பெரியமுனிவனாகிய விசுவாமித்திரர் அரசனைப்பார்த்து யானைமே லேயிருந்தெறிந்தகவண்கல்போகிறதூரமளவுள்ளபொருள்கொண்டுவந்தளிப்பாயானால் கட்டளையாயிருக்கிறசெய்வதாலயாகத்தை முடித்து நிறைவேற்றக்கூடுமென்றுசொன்னார்-எ-று. உஅ

இறைவனிவ்வகை யீகுவன்பாலென
அறைதிறந்திவ ணின்னையக்காப்பெனக்
குறைவில்லாதன பொதிகொணர்ந்திடப்
பிறையெயிற்றுப் பெருங்களிற்றதே.

(இ-ள்) அதற்கு அரிச்சந்திரமகாராசன் அந்தப்படியே நான்கொடுக்கிறேனென்றுபொருளுள்ள பொக்கிஷவீட்டைத்திறந்துகொண்டு இங்கேயுள்ளதைக்கொண்டுவாருங்களென்று உத்தரவுசெய்ய அப்போதே குறைவுசொல்லாமல் யானைப்பாகர்கள் ஓடிப்போய்க்கொண்டுவர சந்

திரதுண்டும்போலும் கொம்புகளையுடையபெரியயானையும்வந்தது குறைவுதடை—எ—று. ௩௰

ஒத்ததேயமை யும்மெனதொண்பொருள்
வைத்தனன்னின் னிடத்தடைமன்னயான்
சுத்தவேள்வி தொடங்கிடுநாளனக்
குய்த்திநீயென் றுரைத்தவனேகினான்.

(இ—ள்) அப்போது விசுவாமித்திரர்நீசம்மதித்ததேபோதும் இனிநீகொடுப்பதாகிய அழகானபொருளெல்லாம் அரசனே உன்னிடத்திலேதானே அடைக்கலமாகவைத்தேன் இனிநான்பரிசுத்தமான யாகஞ்செய்யும்போது எனக்குகொடென்றுசொல்லி அந்த விசுவாமித்திரர்போனார்—எ—று. ௩௧

அருவனங்கடந் தாச்சிரமம்புகுந்
தொருதருத்தட நீழலுறைந்துபார்
மிருகம்புள்ளினம் யாவும்விரைந்திவண்
வருகவென்று மனந்தனிலுன்னினான்.

(இ—ள்) அரிதானகாடுகளெல்லாங்கழித்துச்சென்றுதம்முடையப்பர்ணசாலைக்குள்ளேபோய் அங்கேஒருமரத்தினது பெரிதானநிழலின்கீழேயிருந்துகொண்டு உலகத்திலுள்ள மிருகக்கூட்டங்கள் பட்சிக்கூட்டங்களெல்லாஞ்சீக்கிரத்திலேயிங்கேவந்து சேரவேணுமென்றுதம்முடையமனத்திலே நினைத்தார்—எ—று. ௩௨

அலங்கலஞ்சடை மாமுனியன்பிலான்
நலங்குலைந்து நினைத்தவந்நாடனில்
கலங்கிவாய்களிற் கௌவியதீன்விட்டு
விலங்கெலாமுன் விரைந்துவந்துற்றவே.

(இ—ள்) அசைதலையுடைய அழகிய தாழசடையைக்கொண்டபெரியவிசுவாமித்திரர்இரக்கமில்லாதவராய் நீதிநலத்தைவிட்டுநினைத்த அக்காலத்திலேபயந்து தங்கள் வாய்களிலேலே கௌவிக்கின்கிறஇரைகளையுப்விட்டுவிட்டுமிருகங்களெல்லாம் அவருக்கு முன்னே அதிசீக்கிரத்திலேவந்துகூடின—எ—று. ௩௩

வளையும்வாலெடு தோச்சிவருகனல்
விளையுங்கண்கள் விழுவனபோலுற
உளைவிரித்து விதிர்த்துதறிப்பெருங்
கிளையினோடுற்ற கேசரிகோடியே.

(இ-ள்) வளைவானவால்களைத்தூக்கிநீட்டிப்புகழுடிவிலேவருகிறவடவாக்கினியானதுகோபங்கொள்ளுநவதானகண்களிலிருந்துசிந்துகிறது

போர்சிந்த உரோமங்களைவிரித்துச்சிலிர்த்து உதறிக்கொண்டு தமது பெரியானைகூட்டத்துடனே கோடிசிங்கங்கள் வந்தன-எ-று. ௯௪

வாணிமிர்ந்து வளைந்துடல்கூனிநீள்
காணிமிர்ந்துவெண் கண்கள்சிவந்துவிண்
மேனிமிர்ந்துவந் துற்றடல்வெங்கடல்
போனிமிர்ந்து வரும்புலிக்கோடியே.

(இ-ள்) வால்கள்நிமிர்தலாய்வளைவுகொண்டு உடம்புவளைந்துநீண்ட கால்கள் நிமிர்ந்துவெள்ளைநிறமானகண்களெல்லாஞ்சிவந்து ஆகாயத்தின்மேலேஉயர்ந்துதாவிக்கொண்டுவந்துசேர்தலாய்க்கொலைத்தொழிலைக்கொண்டவெப்பமான கடல்போல்உயர்ந்துவருவனவாயின கோடிபுலிகள்-எ-று. ௯௫

குளிறுமாமுகில் கூடியவாமெனப்
பிளிறுகன்றும் பிடிகளும்பின்வர
வெளிறுதந்தக் கருநிறவெண்புகர்க்
களிறுகோடி கடிதுவந் துற்றதே.

(இ-ள்) சப்திக்கின்ற கறுத்தமேகங்கள்கூடித்திரண்டனவென்னும்படி பிளிறுகின்றகன்றுகளும், பெண்யானைகளும்பின்னேவரவெளுப்பானகொம்புகளும் கருத்தநிறமும்வெண்ணிறமானமுகத்திற்புள்ளிகளுங்கொண்டகோடியானைகள் விரைவிலேவந்துகூடின-எ-று. ௯௬

கண்ணெலாங்கனல் மண்டக்கடுவிடும்
மண்ணெலாங்குதி கொள்ளமணிச்சுடர்
விண்ணெலாம்வெயில் வீசிடவாய்பிளந்
தெண்ணிலாவர வெங்கும்வந்தீண்டின.

(இ-ள்) கண்கள்முழுதும் நெருப்பெரிய கடுமையானவிடமானது பூமியெல்லாஞ்சிந்தத்தலையிலுள்ள இரத்தினச்சோதியானது ஆகாயமுழுதும் ஒளிவீசவாயைத்திறந்துகொண்டு கணக்கில்லாத பாம்புகளெவ்விடத்திலும்வந்துகூடின-எ-று. ௯௭

மா * னழுங்குபுல்வாய்மறைவாங்கலை
ஏனநான மெலிபெருச்சாளி * மெய்
கானமேதிகாடி செந்நாய்நரி
வானரங்கடமா விவைவந்தவே.

(இ-ள்) மான்கள-ஆனைகள-கடமைகள-கானக்குதிரைகள்-நாவுயிறகலைமான்கள-பன்றிகள-புழுகுபூனைகள-எலிகள-பெருச்சாளிகள-முள்ளம்பன்றிகள-காட்டெருமைகள்-காடிகள்-செந்நாய்கள்-நரிகள்-குர

---

* அழுங்கு-ஆனை * எய்-முள்ளம்பன்றி.

த்துகள்கடமாக்களாகிய இவைகளெல்லாம்வந்துகூடினகட்டமா- னம்ரு
மிருகம்-எ-று. ௩௯

தோகைபூவை சுகஞ்சுக்கில்சக்கர
வாகநாரை மடவனங்கோகிலம்
காகமன்றில் சிவல்கவுதாரிபுள்
வேகமோடு பறந்துவிரைந்தவே.

(இ-ள்) மயில்கள் நாகணவாய்ப்புட்கள் கிளிகள்செம்போத்துகள்சக்கரவாகப்புட்களை நாரைகளை இளமையான அன்னங்களை குயில்களை காக்கைகளை அன்றில்களை சிவற்காடைகளை கவுதாரிகளை காடைகளை ஆகியஇவைகளெல்லாம்அதிகவேகத்துடனேபறந்துவிரைவாய்வந்தன-எ-று

முந்திவந்த முதிர்சினமாக்களும்
வெந்திறற்கொடு வேகத்தநாகமும்
பந்திபந்தி பறவைத்திரள்களும்
(இ-ள்) அப்படிமந்திரி முதலானோர்சொல்லக்கேட்டு உலகமெல்லாம் ஆளுகின்ற அரசனான அரிச்சந்திரன் இன்றைத்தினம் நானொருகொடிதான கெடுதலுள்ள சொற்பனங்கண்டேன் அப்படிநான்கண்டதைக்கேட்டு இனிமேல்வந்துகூடிவதானகாரியத்தைச் சொல்லுங்களென்றுமலைபோலுயர்ந்த தோள்களுடைய மந்திரி முதலானவர்களுக்குச் சொற்பனச் செய்கைச் சொல்லலானான்-எ-று. ௯௨

என்னையீன்றெடுத்ததாதையாக்கையோடெய்தியும்பர்
தன்னையுற்றிமையோர்நீக்கத்தாரகைத்தலத்தமர்ந்த
பின்னையான்பிரசக்கூந்தற்பேதையரைவர்தம்மை
முன்னையூழ்விதியினாலேமுயக்கமுற்றினிதிருந்தேன்

(இ-ள்) என்னைபெற்றுவளர்த்த தகப்பனானவர் தேகத்துடனேசுவர்க்கலோகத்துக்குப்போய்ந் தன்னைக்கண்டுதேவர்கள்தள்ளிவிடப்பின்பு நட்சத்திரமண்டலத்தில் நிலைகொண்டிருந்தபின்பு நான்தேன்பொருந்தியமலர்களை முடித்தகூந்தலையுடைய பெண்களைந்துபேரை பூர்வபுண்ணியத் தொடர்ச்சியினாலே அவர்களுடனேகூடிச் சுகித்திருக்கக்கண்டேன்-எ-று ௯௩

ஒருத்தியிற்புணர்ந்தமாதரைவரிலருந்தவத்தோற்
கொருத்தியையானேயீந்தேனொருத்திபோயவனோடுற்றாள்
ஒருத்திபூணற்றகன்றாளொருத்திபோய்க்கண்ணிழந்தாள்
ஒருத்திவிட்டென்னைநீங்காதிருமைக்குமுறுதிதந்தாள்

(இ-ள்) அப்படிநான் ஆசைகொண்டுகூடியிருந்த பெண்களைந்துபேரில் ஒருத்தியை அருமையான தவத்தையுடைய ஒருமுனிவனுக்குநானேசமமதித்துக்கொடுத்தேன் இன்னமொருத்திதானேபோய் அம்மு

னிவனோடுகூடினாள் மற்றொருத்தி உணவு முதலியனவு மில்லாமற் போனாள் வேறொருத்திதானே விலகிப்போய்க் கண்குருடானாள் போகாதஒருமாத்திரம் அப்படிப்பிரிந்து என்னைவிடாமல் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய நன்மையை எனக்குத் தருவதாயிருந்தாள்.

இப்படியின்றுகண்டேனிச்சொடுங்கனவினாலே
இப்படிவினைவதேதோவந்துணர்ந்திலேனியம்புமென்றா
அப்படியரசன்கூறவடியிணைதொழுதுநன்னூல்
தப்புறவுணர்ந்தகேள்விச்சத்தியகீர்த்திசொல்வான்.

(இ-ள்) இப்படி என்னோடுகூடி ஒருத்திமாத்திரமிருக்கஇன்றுகண்டேன் ஆதலால் இப்படிப்பட்ட கொடுமையான சொர்ப்பனத்தினாலே எப்படியாக இனிநடக்குமோ அதைநான்தெரியேன் சொல்லுங்களென்று அப்படி அரசன்சொல்ல அவனுடையபாதங்களிரண்டையும் வணங்கி நல்லசாஸ்திரங்களெல்லாம் வழுவாமலறிந்த கேள்வியையுடைய சத்தியகீர்த்தியென்கிற மந்திரிசொல்லலானான்-எ-று. ௯௫

அறுவினைவிளைத்தநல்லாய்கௌசிகனவனாலின்னம்
வருவினைமிகவுமுண்டுவளநகர்நாடிழந்து
திருவினையிழந்துசேயுஞ்செல்வியும்வேறுவேறாம்
பெருவினைமுடிப்பான்றன்னைப்பின்னையாம்வெல்வோமென்றான்.

(இ-ள்) இப்படி அரிதான கொடுஞ்செய்கைகளுண்டாகச்செய்தது முழுதும் கௌசிகனென்கிற விசுவாமித்திரரோ அவராலே இன்னம் வருவனவான கொடுஞ்செய்கைகள் மிகவுமுண்டாகும் நீர்கனவிலே கண்ட அருந்தவன் விசுவாமித்திரரோ நீர்அருத்தியிற்புணர்ந்த மாதர் ஐவர்கள பஞ்சசத்திகள் அவருக்குக்கொடுத்த ஒருத்தி பஞ்சபூதமாக நிற்கின்ற கிரியாசத்தியாகிய பொருளேதானே அவருடனேபோன ஒருத்தி வினைத்துணையாக நிற்கின்ற கிரியாசத்தியாகிய அரசாட்சியேஒருத்தி ஊணற்றகன்றது பிராணன்முதலிய வாயுக்களாகநிற்கிற பராசத்தியே அதாவது வளமையான நகர்நாடு முதலியவைகளைவிட்டுத் தேகமெலிவாகுதல் ஒருத்திபோய்க் கண்ணிழந்தது ஐம்பொறி நுகர்ச்சியாகநிற்கிற ஞானசத்தியே அதாவது செல்வத்தையுமிழந்து பிள்ளையும்மனைவியும் வெவ்வேறாகுதல் இப்படி வெவ்வேறாகப் பெரிதான தீயசெய்கையைமுடிக்கிற விசுவாமித்திரரைப் பின்பு நாமேவெல்லக்கடவோம் ஒருத்திநீக்காம லிருமைக்கு முறுதிதருகிறதாவது விவேகம் இதை உயிர்கொளியாக நிற்கிறசத்தியென்று கொள்ளவேண்டும் பரையாதி விருப்பறிவுதொழிலாகி யுலகனைத்தும் படைத்துக் காத்துவரையாதிடைத்து மறைத்தருளியென்பதாலுணர்க என்றுசத்தியகீர்த்திசொன்னான்-எ-று. ௯௬

அனையவையமைச்சன்கூறவரசனையரிவைபோற்றி
எனையிழந்தாலுமன்றேவென்வயிற்றுதித்தமைந்தன்
றனையிழந்தாலுமிந்தத்தலமிழந்தாலும்வெம்போர்
முனையிழந்தாலுநீதிமுறைமையான்றப்பேனென்றாள்.

இ-ள் இப்படிப்பட்ட கருவின்பொருளை மந்திரிதெரிந்து சொல்ல அப்போது அரசனைச் சந்திரமதியானவள் வணங்கிநின்று அரசனே என்னைநீர்யிழந்துபோனாலும் என்வயிற்றிலே பிறந்தபுத்திரனையிழந்துபோனாலும் இந்தவுலகமெல்லாம் இழந்துபோனாலும் செவ்விறமான சடையாடைமுனையை யிழந்துபோனாலும் உம்முடைய நீதிமுறைகு ஒன்றைமாத்திரம் இழவாதிருக்கக் கடவீரென்றாகள் போர்முனையிழந்தல் சன்னடையாண்மை மாட்டாதுபோதல்-எ-று. ௯௰௭

என்றலுமமைச்சரெல்லாம் மிருகணீ ருகுவிபாய
நின்றுகின் முழுவதுமாடி நெட்டுயிர்ப்புற்றகாலை
மன்றலந்தெரியன்மாரபன் வருந்தலீரென்றுதேற்றி
அன்றவனுலாகதாலப்பா லடுத்தவா றெடுத்துரைப்பாம்.

இ-ள் என்றுசொல்லுமளவில் மந்திரிகளெல்லாம் இரண்டுகண்களிலும் நீரனருகி ஆறுபோலொழுக நின்றுநின்று அழுதுவாடியும் பெருமூச்சுவிட்டும் மயங்குகிறபோது வாசனைபரிமளிக்கின்ற அழகான மாலையணிந்த மார்பனான அரிச்சந்திரமகாராசன் நீங்கள் வருந்தப்படாதிருக்கவென்று அவர்களைத்தேற்றி அன்றையத்தினம் அங்கேதானே வாசமாயிருந்தான் அப்பால் நடந்தபடியை எடுத்துச்சொல்லுகிறோம்-எ-று.

வேட்டஞ்செய்காண்டம்-முற்றிற்று.

ஆக-விருத்தம்-௯௰௮.

உ

ஐந்தாவது.

சூழ்வினைக்காண்டம்.

வெற்றிவேன்மன்னன்விட்ட வெங்கணைதைத்துவாயால்
கன்றியகுருதிசோரச் சுழன்றடாடிதுடித்துக்
குன்றுனைக்கசிந்துசென்று கோசிகன்றன்பாற்போந்து
பன்றியாய்வந்தமாயம் பட்டபாடனைத்துஞ்சொல்லும்.

இ-ள் வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய அரிச்சந்திரமகாராசன் எய்தவெவ்விதான அம்புபட்டு வாய்வழியேபெருகின ரத்தமொழுக சுழலுவனாகி உடலெல்லாம் பதறித்துடித்துக் கான்விழுந்தமலையைக்கடந்தப்பால் விசுவாமித்திரிருக்கு மிடத்திற்போய்விழு

ந்து பன்றிருபமாகப்போய் அந்நகரத்தைக்குண்டமாவை பட்டபாடெல்லாம் சொல்லலாயிற்று அக்கபன்றியாயெகவும்-எ-று. க

என்னையாளுடையாயுன்ற னேவலின்படிநாபோயே
மன்னருங்கரியுமாவுந் தேனையுமாளக்கொன்றேன்
பின்னவன்விட்டவம்பாற் சுழன்றியான்பிழைத்துப்போந்தேன்
உன்னருளுடையாற்கல்லா லுய்வுண்டோவெனாநின்றே.

இ-ள் என்னை அடிமையாகக்கொண்டவரே உம்முடைய உத்தரவின்படியே நான்போய் அரசர்களையுமியானைகளையுங்குதிரைகளையுஞ்சேனைகளையும் சாவக்கொன்றேன்பின்பு அரிச்சந்திரனெய்த அம்பினாலே சுழலுவதாகிய நான்தப்பிப்பிழைத்துவந்தேன் இனியுமதுடையதாவுபெற்றவனுக்குப் பிழையுண்டாகுமேயல்லாமல் மற்றொருத்தருக்குப் பிழைப்புண்டாகுமோவென்றுசொல்லிற்று-எ-று. உ

கோலத்திரைகடக்கோளர் கோசிகன்வடவைச்செந்தீச்
சீலத்திற்சிவந்தகண்ணான் சிங்கமுமனையபாழிக்
காலத்திற்கடுக்காலன்ன மூச்சனன்கடலிற்றோன்றும்
ஆலத்தின்சிவர்ச்சியன்றி கோபத்தைமுன்கொழுந்தான்.

இ-ள் அப்படிச்சொன்ன பன்றிசொல்லைக்கேட்டு விசுவாமித்திரர் சிவந்தவடவாக்கினி நிறத்தைப்போற் சிவந்தகண்களையுடைய சிங்கமுமாக அத்தன்மையையனையதிகாலத்திலே வீசுகின்ற காற்றுப்போல மூச்சுடையவனாய் கடலிலேபிறந்த விஷம்போலவும் அக்கினிபோன்ற கோபத்தையுடையவனாகிக் கொதித்தெழுந்திருந்தார்.

பேச்சினிற்கிளிபோற்சிங்காற் பெயர்ச்சியிற்பெடைபோற்செவ்
வீச்சினின்மின்போற்சிற்ற மிருமியாமுனிவன்விட்ட (கை
மூச்சினிற்பிறந்திரண்டு பெண்ணிபாதகரு
நீச்சினினிடைதுணிக்கு நெடுமைகொடிபோனின்றார்.

இ-ள் பேச்சிலேகிளிபோலவும் சிறந்த நடையிலேபெடையன்னம்போலவும் சிவந்த கையிலேமின்னலைப்போலவும் கோபமிகுதியிலேவிசுவாமித்திரர் விட்டமூச்சிலேஇரண்டுபேராகிய பெண்கள்பிறந்து சித்திரமுடைய கடலிடைநிற்கின்ற பொருந்தினகொடிபோல எதிரேநின்றார்கள்-எ-று. ங

செக்கிருவர்திக்கேழுத்த திரைகடற்றோன்றமின்
சக்கிரதருந்திருக்கள் வயதுவென்னனைக்
சக்கிரவர்த்தியைச் சிந்தினின்மிருந்தெனவே
இந்திரலக்கொடிப் பெண்பெற்றெழுந்தனவே.

(இ-ள்) செல்வியான லட்சுமிதேவி அமுதிலேபிறந்த அலைகளையுடைய கடலிலேபிறந்த கஞ்சைப்போல்பிறக்கு இரண்டுகையுத்தலட்சுமிகள் விளங்குவதுபோலவும் கருக்தசக்கிரதாரியர் இந்திரநீலக்கொம்புகளிரண்டுபோலவும் வந்தேகான்றிறும் போலவும்-எ-று. ௫

நீலவாரிதியினீலத்துகிர்க்கொடிநின்றதென்னக்
கூலவாரியினீலக்கொம்பிரண்டெழுந்ததென்னப்
பாலவாரிதிகடைந்தபகுதலைபரவுங்காந்த
ஆலவாரிதியின்மூழ்கிகிளர்ந்தெழுமன்னமென்ன.

(இ-ள்) கருந்கடலிலே நீலநிறமாய்ப் பவளக்கொடிநின்றதுபோலவும் கரைகளையுடைய கடலிலே நீலக்கொம்புகளிரண்டெழுந்து தோன்றினதுபோலவும் பாற்கடலைக்கடைந்த பகுதலைகளுடைய பாம்புகக்கின விஷக்கடலிலேமூழ்கி அந்தவிஷநிறமாக எழுகின்ற அன்னங்கள்போலவும்-எ-று. ௬

ஆலத்திற்பயின்றகண்டமுற்றிருக்கண்ணான்மண்ட
காலத்திற்புறங்கொடாதுகாமனோடொத்தலைந்து
நீலத்திற்கருகிவெம்பிநீவிவில்வந்தவியன்பாய்ச்
சீலத்திலுயர்ந்தகாமன்சேனையிருவரென்ன.

(இ-ள்) விஷத்தினாலேவிளங்குகின்ற கண்டத்தையுடைய சிவனது அக்கினியான திருநெற்றிக்கண்ணினாலே இறந்தகாலத்தில் முதுகு காட்டி ஓடாமல்மன்மதனோடு கூடஅலைந்தரதி நீலத்தைப்போல் அந்தநெருப்பில்வெந்து கருகிவெளும்புகையால் நீளவிலேதோன்றி அந்தமன்மதனுக்குசேவியாகி அந்தமன்மதனிடத்தில் விசுவாசமாய்க் கல்வியாசாரத்தினாலே உயர்ந்திருக்கிறமன்மதன் சேனையிலுள்ள இரண்டுபேர்கள் இவ்விருவருமென்றுசொல்லவும்-எ-று. ௭

சுழிகொளும்பெருக்கன்கங்கைசூடினோன் அலங்குநெற்றி
விழிகொளுந்தழலான்மேனிவெந்தழிந்திறந்தகாமன்
பழிகொளக்கருதிக்காலபாசமேவிழியாக்கொண்டு
வழுவிலாவரங்கள்கொண்டரதியுமாற்றவளுமென்ன,

(இ-ள்) சுழிகளைக்கொண்டுள்ள பெரியனாதுளிர்ந்த கங்கையைமுடித்த சிவனுடையவிளங்குகின்ற நெற்றிகொண்டநெருப்பினாலே மேனிவெந்து சாம்பலாயிறந்த மன்மதன்பழிவாங்க எண்ணி காலபாசத்தையே கண்களாகக்கொண்டு தவறுதலில்லாதவரங்களைக் கொண்டுதோன்றின ரதிதேவியும் அவளுக்கொருசக்களத்தியும் போலவும்.

காவியங்கமலத்துற்றபிரமனைக்கைப்பாங்வேண்டி
வாவியங்கமலவாசக்கோசிகன்வாதிற்றிட்டின
னோவியமென்னநீலவோதிமமென்னநடை
காவியங்கண்ணார்காதகட்கைகதொழுதிறைஞ்சினின்றார்.

(இ-ள்) திருவுந்திக்கமலத்திலே தோன்றின பிரமதேவனைச் சிரித்துப் பழிக்கத்தக்கவேண்டி. அகரத்தாமரைத்தடாகத்தின் கரையிலே வாசஞ் செய்கிற விசுவாமித்திரர் வாதுகொண்டபடியினாலே சித்திரங்கள்போல வுங் கறுத்த அன்னங்கள்போலவும் நடைக்கேற்றபடியாயும் அ ழகியதான கண்களையுடைய அந்த இரண்டுபெண்களும் காந்தள்மலர் போலுங் கைகளாலேவணங்கி எதிரேநின்றார்கள்-எ-று. ௪௰

நிதலாமகொகளுநூக்கொளியுறவுணர்த்தசீர்மைக்
கோதிலாக்குலத்தோர்செல்வார்கோபந்தண்டாளரென்பார்
ஆதலால்முனிவன்மூக்கிறைபுரீச்சிறந்தாரே
போதலாலந்தபாதர்ப்பூசையபாரித்தேபீர.

(இ-ள்) குறைவில்லாத நான்குவேதங்களையுந் தெளிவாகத்தெரிந்த தன்மையையும் குற்றமில்லாத குலத்தையுமுடைய பெரியோர்களா னாலும் கோபமுடையராகில் அவரைச் சண்டாளரென்று சொல்வார் கள் ஆதலாலே அந்தக்கோபமுடைய முனிவருடைய மூக்கிலே நிறை ந்தகோபாக்கினியுற்பவித்த பெண்களான அந்த இரண்டுபெண்களு ம் சண்டாளிகளானார்-எ-று. ௰

மாதவாமுனிவன்பார்த்துவரவழைத்திருந்திகாரை
பேதமுமொழிந்துநின்றார்பெருக்கமேவிருவர்கெட்டுமே
கீதமும்நாடகமுமோங்கின்னாரமூதல்வராய்ந்து
பேதமுமரிச்சந்திரனைத்தொடர்ந்துகட்டுறேனே.

(இ-ள்) அப்படிப்பட்ட பெண்களை விசுவாமித்திரர்பார்த்துக் கிட்டவ ரும்படிக்கு அழைத்து இருத்திச்சொல்லி [illegible] யுத்துப்பேத முஞ் சொற்பெருமை அறியத்தக்க [illegible] நீதமுமகாதி க்கிறவினையுங் கின்னரமுதலாகிய [illegible] அரிச்சந்திரனை இப படியேசொல்லித் தெரியப்படுத்தினார் அவ்விருவருக்கும்-எ-று. ௰௧

சதுரோதநமிர்ச்சொற்கின்னரம்பாருகேட்கப்
பாடினத்திப்பூத்துவக்கத்தபிசெலாயக்களையுமக்கும்
வாடினைனைதப்பட்டபாகைவத்தமைக்குமுன்னர்
விடுகுறுபிரவக்குறப்பெலனியெப்புமிந்திரக்குதம்.

தாழி தாழி.

(இ-ள்) ஒப்பில்லாத தகாதகளும் இவிப்பெரிய மெல்லியர்களும் இன்னாத்தையப்படுபட்டவர்களும் தோற்று விசனப்பட பாடுஞர்கள் அப்படிபாடுகின்றதுமே மிக்க முகரச்சத் பஷிகளெல்லாம் வியவுகொண்டு மிருகங்களிலும் முனிவரில் இறந்தவர்களுடைய சிலைவிவைத்து கூடுதலாயிருக்கின்றமையால் காடும்பும் உணோமக்கள் புனிதத்தலமென-எ-று.

அத்தமெல்லினம்போலத் திசைசினக்கண் சித்திரமெ
கத்தனார்சடைமெயொளிக்கொளிப்பன்றன் மேனிபோற்றி
இத்தரணியிலோனவ்வனவெள்ளைகுஞ்செலியாகும்
வத்தனென்னமிதனாதவைசெமித்தூர்க்கார்

(இ-ள்) அப்படியாணபோதில் அயோத்தியாபுரிக்கு அரசனுன அத்த அரிச்சந்திரனைக்கொண்டு வந்து வாசலையெபாருந்திய நீண்டசடைதருநாலையுடைய விசுவாமித்திரரைக் குறித்து இந்த நகரிலிருந்த அரிச்சந்திரமகாராஜன் எண்ணுதற்கரிய சேனைகளுடனே வந்திருக்கிறாருக்கிறானென்று வசிஷ்டாதி மகாமுனிவர்கள் தெரியச்சொன்னர்கள்-எ-று. கஉ

புண்ணியத்திரண்டபரக்கப்புகலென்கைத்தாலென்ன
எண்ணிமவெண்ணெனெல்லாமுடியுமென்றேம்பலைய்தாய்
பண்ணியன்பாதுக்கெல்லோர்க்ளவைக்க்யெவேல்
கண்ணியர்தம்மைபோக்கிக்களிக்கன்னிலைப்புற்றான்.

(இ-) புண்ணியக்கரன் இரண்டுவேங்கைகொண்டாற்போலும்தேசத்தையுடைய அரசன்கள் இருக்கிறதென்று சொல்லவே காட்டினேத்த நீ எல்லாம் இனியுழுவலபெறுமென்று எக்கோக்கம் கொண்டு இராகம்பொருந்தின மதுரமான செல்வமுடைய சொல்லக்கொண்ட பவளம்போலும் வாயுக் கருமையுள்ள செவ்வையானவேல்போலுங் கண்களுமுடைய அக்கன்னிப்பெண்களையும் பார்த்து விசுவாமித்திரர்சொல்லலானார்-எ-று. கங

பெடைநடைமடவியாவிப்பெருந்தாக்கண்ணிலக்கு
மடையுடையேகத்தபப்போலப்பாடனான்தின்கிலத்திக்
குடைபிடித்தொங்கினின்றாற்கலியைக்கொண்டெதொன்று
விண்ணவமொழிக்குகின்றனர்விளைவின்றுழுந்தபோனார்.

(இ-ள்) பெட்டையன்னம்போலும் நடையுடைய பெண்களே நமது பெரியகுலத்திற்கு கனாபிலேவந்திருக்கிற சேனைகளுடைய அரசனிடத்திருப்போய் நீக்கள்பாடின பாட்டுகளாலே அவனை உருகும்படிசெய்து அவனுடைய வெண்கொற்றக் குடையைவாங்கி வாருங்க

ன் அல்லது அது கூடாதாகில் அவனோடிகூடி தயித்தகிலக்கெள்ளுதற் கேன்று உத்தரவுகொடுத்தனுப்புமளவில் அப்பெண்கள் விரைவி லெவனைவிக்கொண்டு போனார்கள்-எ-று. ௧௫

எடுத்தகன்மகையாழ்பேகெழுமுறுமதோனா
உடுத்தபேகலையுஞ்செய்பொற்சிலம்புமின்னுரைசகாட்டத்
தொடுத்தபூங்கோதைகோக்குழைகுக்கதுமபெருமை
அடுத்தபூஞ்சேரலர்களிடைக்புலந்பொய்கைபுக்கார்

(இ-ள்) அக்கிருவரும் கைசிமேலேகொண்ட கல்லைபக்காவிலையும் புல் லாக்குழலும் பெரிய சித்திரமேகலாபரணமும் செம்பொன்னாற்செ ய்தசிலம்புகளும் அதைத்தபூங்கோவிடுகொண்டு தொளிக்கின்ற ட்டம்பெரிக்கணிக்கும் பாவைகள் அசிற்றத்திழும் இரண்டுகொங் கைகளும் தோன்றிருக்கவும் தயிருக்கபுஞ்சோலையைவிட்டு அந்த அகல மானவரிக்குளத்தருகேபோய்ச்சேர்ந்தார்கள்-எ-று. ௰௬

கலைவழக்கிட்டாற்றேவாக்கட விளிந்தென்றுபுக்க
ளினைவெக்கேவழக்குறையாருள்பொழுதேயிரிபோதுகளி
இலையவிரன்றவைாதுதோனைநபுறைவைப்துபெண்ணெ
புனைவிரைபுனைந்திரைந்துபுலைந்போற்றினாரா.

(இ-ள்) சத்தியாகின்றவீரகண்டமயனிகன்கட்புனைவேக்கைகொண் டகாக்கலையுடைய சேனைக்கடலுக்குள்ளே போய்க்கூடின கொலைத் தொழில்செய்வதான வேல்போலுங்கண்களையுடைய பெண்களைப்பார்த் தது அவ்விருவரையும் இன்றுமென்றுதெய்வமைச்சேதைக்கொள்ளுதி றசமயத்திலே அபரஞ்சுக்கலையணிந்த அந்தபெண்களைந்து அரிச்சந் திரமகாராசனை தரிசித்து நின்றார்கள் அப்படிநின்ற அரிச்சந்திரனு டைய தோளுதெமைக்கட்டுகள்-எ-று. ௰எ

தோளுயர்தோளிற்சாத்துஞ் சூட்டுமணிமையழுத்தெச
தாளுதற்றாவில்விரக் கழுவாகாதமுக்தமையும்
வாளருக்கைப்பிலைமாபுய லைறைமுமேகாகவிமார
வேளுமேனிரைன்றன்னைப் புகழ்ந்தைசிவிமதுரைப்பார்.

இ-ஸ். தோள்களும் அந்தத்தோள்களிலேயணிந்த வாத்தியொன் டாதந்தேயூரங்களும் சிலத்தகால்களும் அக்காலகளிலேயுடைய வீர கண்டாமணிகளும் தீண்டமாலையணிந்த மார்பும் முகம்பார்த்து மன் மதனேயொப்பாகத அரிச்சந்திரமகாராசனைத் தோத்திரஞ்செ ய்து அதிசயித்துச் சொல்லாயினார்கள்-எ-று. ௰அ

பாலைக்குள்பானைமேன்லே பெய்துதக்கிவுத்தவேதா
வீரைக்கருவிலைகொய்துடை விதித்துவைற்றிறந்தும

வாணர்க்குமானோர்க்கோனார்க்கும் வாய்ந்தவாறேபோனின்னைக்
காணற்குத்தொழற்குவாழ்த்தக் கண்கைநாப்படைத்திலேனே.

இ-ள். உலகத்திலுள்ள அழகர்களிலே சிறந்த அழகனே உன்னைச் சேர்வதற்குச்சிருஷ்டிக்கிற பிரமனானவன் வீணானவர்களிலே அதிகமும் வீணனவன் யாதினாலென்றால் எங்களிருவரையுஞ்சிருஷ்டிக்க அப்போதுதானே இந்திரனுக்கும் வாணாசுரனுக்கும் ஆதிசேடனுக்கும் அமைத்தபடிபோல உன்னைப்பார்க்கிறதற்கும் வணங்குகிறதற்கும் துதிக்கிறதற்கும் கண்களும் கைகளும் நாவுகளும் ஆயிரமாயிரமாகச்சிருஷ்டியாமற்போனான்-எ-று. ௰௯

வையநின்னகரிசெம்பொன் வடகிரிநினதுபீடம்
வெய்யவனினதுதீபம் வேலைமஞ்சனனீர்ச்சாலை
செய்யவணினதுபாரி திங்களின்கவிகைசெவ்வே
லையநின்பெருமையெம்மா லளவிடற்கரிதேயென்றார்.

இ-ள். உலகமுழுதும் உமக்குப் பட்டணம் செம்பொன்னான வடமேருகிரி உமக்குச் சிங்காசனம் சூரியன் உமக்கு விளக்கு கடல் உமக்குத் திருமஞ்சனமாகிறவிடம் லட்சுமியே உமக்குமனையாள் சந்திரன் உமக்குக் குடை ஆதலால் செவ்வையான வேலையுடையவனே உம்முடையபெருமையை எங்களால் அளவுசெய்து சொல்லுகிறதற்குமுடியாது என்று சொன்னார்கள்-எ-று. ௨௰

சொல்லியமாற்றங்கேளாத் தோன்றலும்வியந்துநோக்கி
யெல்லீர்யாரேநீர்தான் வந்தவாறேதென்றென்றான்
அல்லியந்தொடையன்மார்ப வில்வனத்தகத்துவாழ்வோம்
புல்லியசாதியினப் புலைச்சியர்யாங்களையா.

இ-ள். அப்படி அவ்விருவரும் புகழ்ந்து கொண்டாடினதைக்கேட்டு அரசனானவன் அதிசயித்துப்பார்த்து ஓபெண்பிள்ளைகளே நீங்கள்யாரெனு உங்களுக்கு என்னிடம்வந்தகாரியம் என்னவென்றுகேட்டான் அதற்கு அல்லியிதழ்களையுடைய அழகான பூமாலையையணிந்த மார்பனே நாங்கள் இந்தவனத்திலே வசிக்கிறவர்கள் இழிவுள்ளசாதியான சண்டப்புலைச்சிகள் ராசகன் ஐயனே-எ-று. ௨௧

வேதமாமுனிவன்வைகு மேதகுசாரனின்றுன்
பாதமேபணிந்துநோக்கு மருத்தியிற்பதறிவந்தோம்
போதமுஞ்செறிவுமில்லாப் புல்லியேம்வல்லியாழும்
கீதமுஞ்சிறிதுவல்லேங் கேளெனக்கிளர்த்திப்பின்னர்,

இ-ள். வைதிகரானமகாரிஷி விசுவாமித்திரரிருக்கிற மேம்பாடான சாரலிலே கூடிநின்றோம் உம்முடைய பாதத்தைப் பணிந்து உம்மைப்

பார்க்கவேண்டின ஆசையினாலே சுற்றத்துடன் வந்தோம் ஆதலால் நீ
ரும் அதற்கேற்ற அறைகூவாமையில்லாத இழிவானசாதியேயா
க்கள் ஆயினும் கல்விவினைபாடுதலும் சங்கீதமும் கொஞ்சம்தெரிந்திரு
க்கின்றீரும் கேளுமென்று சொல்லினன்-எ-று. உஉ

மகரயாழ்வாங்கினிக்கு மாடகமுறுக்கிச்செம்பொற்
நகவமாமுலையிற்சேர்த்தி யிச்செவியுறவிசையெழீஇத்
திகரிளைவமுதப்பாடற் பாணியினறுவிப்பின்னர்
பகர்தருமிசைகளேழும் வகைவகைபாடினாரே.

(இ-ள்) மகரவீணையைக் கையிலேகொண்டு தனக்குள்ள முறுக்கா
ணிகளாலே தந்திகளைமுறுக்கிப் பிரிவுசெய்து செம்பொன்மயமாச்சிக
நம்போதுள்ள பெரியமுலைகளிலே சார்த்திக்கொண்டு காதுடனேகூ
டக் கருதிக்கூட்டித் தமது தப்பில்லாக அமிர்தரசங்கொண்ட பாடலை
கைவந்தியிலேதோன்ற நிறுத்தியபின்பு சொல்லலான ஏழிசைகளையும்
கிரமமாகப் பாடினார்கள்-எ-று. உ௩

காவியங்கண்ணுமூடா கலிசூழ்காதுக்கோடா
வாவியங்கமலமன்ன வதனமுநுதலுமோரா
ஓவியக்கோதைநல்லார் சுவரின்மேலெழுதிவைத்த
ஓவியம்பாடிற்றென்னப் பாடினரருந்தகவாரும்.

(இ-ள்) நீலோற்பலம்போலுங் கண்கள் மூடுகிறதில்லை இருபுற
மாகத்தோன்றுகிற தாழ்ச்செவிக் காதுகளிலே தீண்டுவதில்லை அசைவ
தான அழகையுடைய தாமரைபோலும் முகமும் நெற்றியும் அசைகிறதி
ல்லையாக இவ்வகையுடைய அழகைக்கொண்டமயில்போலும் பெண்க
ள் சுவரிலே யெழுதி யிருப்பதானசித்திரம் பாடுகிறது-எ-று. உ௪

கரும்பினைக்கடிக்கநின்றசொற் காரினைக்கடக்கக்கூந்தற்
பருமணிக்கொங்கைமாதர் பவளவாய்ப்பிறக்குந்தானம்
வருமணிமதியைநோக்கிக் கிண்கிணிவாய்கொண்டார்ப்பின்
அரும்பவிழ்தாமப்போதுள் வண்டிருந்தார்ப்பதென்ன.

இ-ள் கரும்பின்ரசத்தையும் வெல்லுவதான மதுரச்சொற்களும்
மேகத்தை வெல்லுவதானகூந்தலும் மிகவும்பருத்துள்ள கொங்கைக
ளுங்கொண்ட பெண்களுடைய போன்றவாயிலே பிறக்கின்ற இசைய
பாட்டு உதயமாகிவருகின்ற குளிர்ந்த சந்திரனைக்கண்டு கிண்கிணிப்
போல் முகவிலாசமாய்ப்பின்பு அவ்வரும்புதல்முழுதும் விரிகிறசெவ்
வல்லிப்பூவிலிருக்கும் வண்டுகள்பாடுவதுபோல் பாடினார்கள் ஆம்பற்
கண்டபோதைவிரிந்தவே அரும்பவிழ்தென்க-எ-று. உ௫

இக்கலியாவினைமைத்தனென்பா ரெடாதுகைதொடா துவைத்த
வில்லியைப்புருவமாக விதித்தனன்வேதாவென்பார்
முல்லையாமுருகமோ நாமுகையோ முத்தாவலையறியோமென்பார்
நல்லையோநல்லையென்று நாதிபர்வியந்துரைத்தார்.

இ-ள் அப்போது கண்டவர்கள் இப்பெண்களுக்குக் கண்களினிமைக் கிறதில்லையோவென்பார்கள் ஒருவரெடாமலும் தொடாமலும் இருப்பதானவில்லைத் தாமேயுண்டாக்கிவைத்த புருவமாகச் செய்திருக்கிறானென்பார்கள் முல்லையரும்புகளோ முருக்கமுகைகளோ முத்துகளோ இவ்விருவருடைய பல்வரிசைகள்யாமென்றும் சொல்லத் தெரிகிலோமென்பார்கள் எனது பெண்களே நீநன்றாய்ப்பாடினாய் நீநன்றாய்ப்பாடினாயென்று அரசர்களெல்லாம் அதிசயித்துச் சொன்னார்கள்-எ-று. ௨௬

அட்டபாவலைத்தும்புள்ளரு மாவிபெற்றேகுமென்பார்
சுட்டநீள்வனங்களெல்லாஞ் சோலையாத் தழைக்குமென்பார்
பட்டவாள்வீரரெல்லா முய்வகைபலிப்பதென்பார்
வட்டமாமதியமன்ன வதனத்தார்பாடல்கேட்டே.

இ-ள்) இனிமையாலேகொல்லப்பட்ட எல்லாமிருகங்களும் எல்லாப் பட்சிகளும் உயிருண்டாய்ப்போகுமென்பார்கள் தீமாலேசுடப்பட்டநீண்டகாடுகளெல்லாஞ் சோலையாகத் தழைக்குமென்பார்கள் நமது கூட்டத்திலே இறந்துபோனவர்கள் வீரர்களெல்லோரும் பிழைக்கும்படியமிர்தமாயிருக்கிறதென்பார்கள் வட்டமான பெரிய பூரணச்சந்திரன்போலு முகத்தையுடைய அப்பெண்கள்பாடுகிற பாட்டைக்கேட்டு-எ-று. ௨௭

நாடெலாமழிக்கக்கேட்டு நரபதிவெகுண்டவேட்டை
யாடலால்வெருண்டுபோய்ச்சம் மாருயிரோம்பத்தன்றங்
காடெலாஞ்சுரந்தமாக்கள் கன்னியாமதுவாகிதப
பாடலால்வெளிப்பட்டிற்ற பறவையும்பறந்தவம்மா.

இ-ள் அப்போது நாடுமுழுதும் அழிக்கிறதுதெரிந்து அரிச்சந்திரமகாராஜன் கோபித்தவேட்டையாடுதலினாலே பயந்தோடிப்போய்த்தங்களுடையான உயிர்களைக்காத்துக்கொண்டு நெருங்கினகாடுகள்முழுதும்போய் மறைந்த மிருகங்களெல்லாம் இந்தப்பெண்கள்பாடுகிறமதுரகீதங்களாலே வெளிப்படலாகிச் சஞ்சரிக்கலாயின மற்றப்பட்சிசாதிகளும் வெளிப்பட்டுப்பறந்து திரிதலாயின-எ-று. ௨௮

பஞ்சவைப்பிடியேயென்ன மாமுரசதிருமோசைக்
கஞ்சலானைக்குக்கோடி பகுணைமராமீனத்துமாவி
துஞ்சலாதின்றிடியொய்க்கத் தும்புருமுதலோரெல்லாம்
இன்சொலிசைசெய்த யாழிசையாதென்றுரைவார்

இ-ள் மேகங்கள் முழங்குவதான இடியையும்போல் பெரியமுரசங்களொலிக்கின்ற ஓசைக்கு அஞ்சுதலாலே அனந்தங்கோடி அசுணபட்சிகளெல்லாம் உயிர்மாய்க்கிறதில்லாமல் கூடிநெருங்க கும்புமுதலானவர்களெல்லாம் இனியசொல்லினையுடைய இவ்விருவர் பாட்டோசையைக்கேட்டு இந்த வீணாகானமோவென்று ஆலோசிக்கலானார்கள்-எ-று. ௨௯

நல்லியன்மகரயாழி னுகமுமிடறுமொன்றப்
புல்லியகீதவோசை செவிவழிபுகுதலோடும்
வல்லியர்தம்மைநோக்கி மலர்த்திருக்கரமமைத்து
மெல்லியறனும்வெற்றி வேந்தனுமிகமகிழ்ந்தார்,

இ-ள் நல்லவிசைநூலிலக்கணத்திற் சிறந்த மகரயாழினுடைய நாதமுங் கண்டத்தொனியும் ஒன்றாகக்கூடின பாட்டோசை காதுக்குள்ளே நுழைந்தவுடனே அந்தப்பெண்களைப்பார்த்துத் தாமரைமலர்போலுந் திருக்கைகளாலே யமையச்செய்து சந்திரமதியும் வெற்றிகொண்டிருக்கின்ற அரிச்சந்திரமகாராசனும் அதிகமாகச் சந்தோஷித்தார்கள்-எ-று. ௩௰

மணியொளிகடகஞ்செம்பொன் வளையெரிமணிப்பொன்னாரம்
அணிதுகில்பிறவுமீட்டிக் கொண்டுமனவளித்தலோடும்
பணிகளுந்துகிலும்பொன்னும் பெறற்கியாம்படர்ந்தேமல்லேம்
திணிசுடர்முடியாயாங்கே டேடியபரிசில்கேளாய்.

இ-ள் ரத்தினங்கள்பதித்தலுடனே கூடின கடகங்களும் செம்பொன்னாற்செய்தவளையல்களும் நெருப்புப்போன்ற ரத்தினமாலைகளும் பொன்மாலைகளும் மற்றுமுள்ள ஆபரணங்களும் உடுத்துகின்ற வஸ்திரங்களும் மற்றுங்கொடுக்கத் தக்கவையெல்லாங் கொடுத்துப்பெற்றுக்கொள்ளுங்களென்று சொல்லுமளவில் ஆபரணங்களும் வஸ்திரங்களும்-திரவியங்களும் பெறுதற்கு நாங்கள் வந்தோமல்லோம் நெருங்கின ஒளியைக்கண்டகிரீடாதிபதியே நாங்கள்வேண்டிவந்த வெகுமானத்தை நீர்கேட்கவேணும் அதாவது-எ-று. ௩௧

எத்தியபரிசிலாளர்க் கெண்ணியவனைத்துநல்கும்
பார்த்திபவிவையெலாநின் றிருவுளப்படியாலுள்ளேம்
மூர்த்திகண்மூவர்க்காகு முடிபுனையங்காளேந்தி
சாத்தியதவளக்கொற்றக் கவிகையைத்தருதியென்றார்.

இ-ள் உண்மைத்தறிந்த யாசகருக்கு அவர்கள் நினைத்தனவெல்லாந்தரத்தக்கஅரசனே இப்போதுகொடுக்கிற இவைகளெல்லாம் உம்முடைய திருவுள்ளத்தில்சம்மதியாலே தருவதாதலால் அவைகளைவேண்டோம் மும்மூர்த்திகளானவர்களுக்கும் சாதனமாகும்படி நீர்முடிசூடிக்கொள்ளுகின்ற அப்போது பிடித்துக்கொள்ளுவதான வெள்ளைவெற்றிக் குடையைக்கொடுக்க வேணுமென்றார்கள்-எ-று. ௩௨

பழவழிசெழுஞாயிறீன்ற பாரினிற்குலத்துவேந்தர்
வழிவழிவந்துகொற்றக் கவிகையைவழங்கமாட்டேன்
விழிவழிகண்டவேறு கவிகையைவிளம்பிறுங்கள்
மொழிவழிதருவேனென்று மொழிந்தனன்மன்னர்கோமான்

(இ-ள்) பழிப்பிலாமார்க்கத்திலேசெல்லாநின்ற நீதியையுடைய சூரியகுலத்தரசர்கள் தலைமுறைதலையாகப் பிடித்துவருகிற வெற்றிக்குடையையான் கொடுக்கமாட்டேன் உங்கள்கண்ணுக்குநேராக இங்கேதோற்றுகின்ற வேறேதுமொன்றைக் கேட்டால் எங்கள் சொல்லின்படியே தரமாட்டேனோவென்று அரசராஜாதிராஜன் சொன்னான்-எ-று. ௯௧

கணக்கவெண்சாமரைக்குங் கவிகைக்குமாசையாகவ்
விணக்கவொருவராலே யின்பமுண்டாகலுற்றோ
மனக்குளேயுதித்துவந்த மணிக்குடைவழங்குமேலெந்
தனக்கினித்தருதியின்பந் தருதியென்றவர்கள்சொன்னார்.

(இ-ள்) மிகுதியானவெப்பத்தைச் செய்கிற ஆசைகொண்டவர்களுக்கு அவர்கள் விரும்பிய புருஷர்களாலல்லது அவர்களைப்போல மற்றொருவராலே சுகமுண்டாகவல்லதோ நாங்கள்மனத்திலே எண்ணினமுத்துக்குடையை நீகொடுத்துவிட்டால் எங்களுடைய தொல்லைகளையொழித்து எங்களுக்குச் சுகத்தைக்கொடுமென்று அவ்விருவருஞ்சொன்னார்கள்-எ-று. ௯௨

வாட்பொருகண்ணார்கூற மந்திரத்தலைவன்சொல்வான்
வேட்பனவல்லவென்றே யிகமெறிவெந்தனென்பார்
கேட்பனவரிதுமெக் கினிப்பனவனைத்துங்கேளீர்
சேட்படநில்லுமென்னத் தெரிவையாசெப்பலுற்றார்

(இ-ள்) இப்படிவாளைப்போன்ற கண்களையுடைய பெண்கள் சொல்ல அதற்கு ஆலோசனையிற் சிறந்தவனான சத்தியகீர்த்தி சொல்லுகிறான் ஆசைப்பட்டபொருளை இல்லையென்றும் கொடுக்கத்தக்க மெய்யான கீர்த்தியானதனையுடைய அரசனிடத்திலே கேட்கத்தக்கவைகளை தெரிந்துகேளுங்கள் நீங்கள் சண்டாளிகளானதையாலே தூரமாக நில்லுங்களென்றுசொல்ல அதற்குஅப்பெண்கள் சொல்லுகிறார்கள்-எ-று. ()

முன்பியாங்கருதிவந்த முழுமணிக்குடையுதவாய்
பின்பியாங்குறித்தவின்பப் பெரும்பயன்றருவோராய்
அன்பியாமுன்மேன்வைத்த தவத்திலேபோவதற்றோ
வன்பியாமுன்பாடதனாடோம் வள்ளன்மைகண்டிலேமால்

(இ-ள்) முன்னேநாங்களெண்ணிவந்த முழுதும் முத்துக்களாகிய குடையையுங்கொடாமற்போனால் பின்புநாங்கள் வேண்டினவை இப்ப

மாகிய பெரியபாவங்களையுங் கொடுக்கிறதில்லை ஆதலால் நாங்க ளும்மி டத்திலேகொண்ட அன்பானது வீணாகிப்போயிற்றதோ வும்மிடத்தி லேகடிகாசித்தத்தைக்கண்டோமேயல்லது கொடுக்குந்தன்மையை நாங் களொவ்வளவுங் காணவில்லோம் இதற்கென்னசெய்வோம்-எ-று. கூசு

கொடுப்பனகொடுப்பதல்லாற் கொடாதனகொடுக்கமாட்டார்
விடுப்பனவிடுப்பவென்றும் விடாதனவிடவுமாட்டார்
தொடுப்பனதொடுத்துநும்மாற் சொல்வனசொல்லிநுங்கட்
கடுப்பனகொண்மினல்லா கன்மினென்றமைச்சன்சொன்னான்

இ-ள் கொடுக்கத்தக்கவைகளைக் கொடுக்கிறதேயல்லது கொடுக்கத் தகாதவைகளைக் கொடுக்கமாட்டார்கள் விடத்தக்கவைகளைவிடுவர்எக் காலத்தும் விடத்தகாதவைகளைவிடமாட்டார்கள் சூரியகுலத்தரசர்க ள் ஆதலால்நீங்கள் ஆலோசிக்கவேண்டியபடியே ஆலோசித்து உங்க ளாலே கேட்கத்தக்கவைகளைக்கேட்டு உங்களுக்குத் தக்கபடியேபெ ற்றுக்கொள்ளுங்கள் அல்லாவிட்டால் போங்களென்று மந்திரி அதற்கு த்தரஞ்சொன்னான்-எ-று. கூஎ

வள்ளலென்றடைந்தோமுன்பால் வந்திரந்தோர்க்கொன்றீயாக்
கள்ளமென்றறிக்காலிக்கு வருவது கண்டாயென்றார்
உள்ளமுங்கண்ணுஞ்செந்தீ யுகக்கெழுசினத்துவெந்தன்
தன்னெறியென்றருளிச்செய்தான் விளைவதுதன்னைகோரான்

இ-ள் நீர்கொடுக்குமவரென்றெண்ணிவந்தோம் உம்மிடத்தி லேவந்துயாசஞ்செய்வோர்களுக்கு ஏதுங்கொடாதவஞ்சகரென்றுநா ங்கள் முன்னேதானேதெரிந்திருப்போமானால் இங்கேவரமாட்டோ மென்றுசொன்னார்கள் அதற்குடனமுங்கண்களுஞ்சிவந்ததெருப்புக்கொ தித்துத்தோன்றக் கோபங்கொண்டு அரசனானவன் இவ்விருவரையுந் தள்ளிவிடுங்களென் றுத்தரவுபண்ணினான்இனிநடக்கப்போகிறதுதெ ரியாதவனாகி-எ-று. கூஅ

பார்த்திபனுரைப்பக்கேட்டுப் பப்பரர்நெருக்கிச்சீறித்
தீத்திரள்செகட்சிந்த நாக்குலாச்செல்லவேதிக
காத்திரநிலக்கைகயுங் கால்களுநடுக்கமாரிற்
சேர்த்திபயாழுப்போகட் டிரிந்தனர்திசைபடக்கி.

இ-ள் அப்படிஅரசன் உத்தரவுபண்ணவே கேட்டுப்பப்பரரென்கிற ஓர்வகைவீரர்கள் நெருங்கிவந்துகோபித்து நெருப்புப்பொறிகள்சிவந் தகண்களினின்று அவ்விருவரையுந் தள்ளிவிடுகிறதற்கு வருகிறதைக் கண்டுபயமடைகொண்டழுது உடம்பெல்லா நடுக்கவுங் கைகளுங் கால்க

௦-போகட்டு-போகவிட்டு,

ளும்சுமெக்கவும் மார்பிலே வயிரக்கிருக்க விலைமையும் அக்கோதாரணே
யிடக்கவிட்டு நிக்குத்தெரியாம லேசைப்பெற்றார்கள்-எ-று. ௩௯

ஆறுசென்றனபோடாச்சொல்லா ளடைவிதற்சென்றமேனி
மாறுகொண்டனிசறுஞ்சிந்த மஞ்சினைப்பழித்தகூந்தல்
ஆறுகொண்டங்கமோர்ந்த வவிசுரிந்தகலைசாய
வீறுகொண்டுயோட்டவாகிடப் புயல்வழிந்தோக்கு

இ-ள் வழிபோகப்போசெல்லாதவர்களால் நாலுபோகாதகாட்டுவ
ழியிலேயோய் படைப்பெல்லாம் முட்கள்கிழித்து ரத்தங்கொழுகவு
ம்மேகத்தைப் பழிப்பதான கூந்தலோதுதுறன் ரெதுத்துகளைய
நிவிழ்க்கவும் உயிர்நிலைமிகுந்த நீர்த்துபோகவும் சாயுதுக்கிர
ப்பெருமைமைகொண்டு நக்ஷிரபுப்பிக்கட விசுவாமித்திரமுனி
வருக்கு முன்வக்குவிழுந்தார்கள்-எ-று. ௪௰

வேறு.

மண்டலத்தவிழும் புண்டரீகத்தில்வளரமாசடைத்த
புண்டவிழ்பொழ்பனை துதிபுற்தவிழ்ப்பொறுதலுக்கான்
கண்டனன்செவிகள் கைப்புகலைவெண் கழுவிசாபம்
கொண்டனன்கக்கா நெதினைசுகோமநயார் கூறலுற்றான்.

இ-ள் பூமியிலேவிழுப்பட்டுகின்ற விலக்கமைநிதகலையும் மார்பிலேசரி
யுநான புண்ணியிலேநின்று சித்துகின்றபத்திரத்தக்கலையும் விலக்குநி
ழக்கன்பொருளுமகளையும் தாமேதிருடைய கண்களாலேகண்டார் விசு
வாமித்திரர் அப்படிக்கண்டவுடனே யுசுமுடிவிலேபோன்றுகின்ற செ
ருப்பைப்போல் சுகோமயான கோபங்கொண்டார் வினைவிப்படிவர்த
தற்குக் காரணமென்ன வென்றுகேட்க அப்பெண்கள் சொல்லத்தொ
டங்கினார்கள்-எ-று. ௪௧

ஜபகேவிர்னாருட் படிமிறுசிகரன்றாட் டனுகேர்ப்பெ
மைப்பேவுழிலைசகறுந் பாதுவிசொன்னலைப் புகேலைாக்கேசம்
லைகுபொனைக்கிபடிக் குவெரைசசெப்பவக் கண்டனைத்தாம்
உப்பவுக்கபொறுமோ வுசைபூண்டோசெபைச நுகிறுனவேடா.

இ-ள் ஜபனேகேளும் உம்முடைய உத்தரவின்படியே அரசனிடத்
திலே போய்க்கிட்டினின்று மெள்ளமுதலிந நிலைகளையும் பாடி விர்
கேட்கச்சொன்ன அப்படியேகேட்டோம் அதற்குதக்கவறிசகனைம்
கிலே அன்னைபார்களென்று அவ்வு அவன்பண்ணின கட்டளைக்குத்
தப்பிப்பெறுநககவுக்கூடுமோ சொல்லத்தான் சொல்லுண்டா எங்களு
க்கு உயிர்தானுண்டா-எ-று. ௪௨

வளைவுளைத் திடவெயர்த்திடிமிதித் தென்னைத் திருகணுறுதுங்
கலைதெறித்திருபுடைக்கும் [illegible] புகையுகத்தழுட
[illegible] தெறித்துத் தவமுனிவர் சூழ்வரத் தன்
பனவிலைத் தருமனைத் [illegible] சென்றனன்.

(இ-ள்) என்று சொல்லவே உடம்பெல்லாம் வேர்வைகொண்டு இடி முழக்கத்தைப்போல சிரித்து இரண்டுகண்களிலும் நெருப்புப்பொறிகளை இருபுறத்திலும் முள்ளை [illegible] புகையெழும்படியாக கோபம் [illegible] இனி அரசனுக்குச் [illegible] செய்வதற்குத்தக்க காரியமென்று மனத்திலே ஆலோசித்துக்கொண்டு அருமையான வைதிகர்களான தவமுனிவர்கள் கூட்டத்தோடேவர நடந்தார்-எ-று. ௬௪

கைதலத்திற்பொற்கரகமேந்திப்புரிநூல் வரைத்தப
பாலுபொற்றை மகரகுண்டலிக்கள் பொருந்திய புரிகுழல்
சராசிகப்பாதுகை [illegible] கோலமிட்டுப் பாற
புரமெரித்திட வரும் புனிதனிணைத் தனிமனப் பெம்மானுக்கான

(இ-ள்) கையிலேகொண்ட அழகியதான தருப்பைப் புல்லும் படமென்று [illegible] இரண்டுகாலகள் [illegible] பொன்னிறமான [illegible] சடைகளை விரித்துக்கொண்டு போகிறதான உருவத்தைக்கண்டவிடத்திலே அந்தத்தேவர்கள் மிகவும் பீதியடைந்து அபயஞ்சொல்லிக் [illegible] பொன்மலையிலே திரிபுரத்தை எரிக்கவருகிறபரமசிவனை ஒப்பான அந்த அழகியதான பூம் பொய்கைக் கரைக்குவந்தார்கள்-எ-று.

பிணிமுகத்திரள்களும் குருகினப்பகுதியும் பிரிவுற்று
அணிமலர்க்குளிர்த்தடத்தினைத்தொடர்ந்தகன்றுகலோபிம்
பணிமுடிச்சுமைதவிர்த்திருபுறத்தினிலசைப்படிதர்ந்த
மணிமுடிக்குரிசில் [illegible] கொள்ளக் கண்டான்

(இ-ள்) மயிற்கூட்டங்களும் பட்சிசாதிகளின் கூட்டங்களும் நீங்கியிருக்கின்ற அழகானமலர்கள் பூத்த குளிர்ந்த தடாகத்தினருகே அதிககோபத்துடனே நடந்துவருகிற ஆதிசேடனுடைய தலைச் சுமையை நீக்கித்தன்னுடைய இரண்டுதோள்களின்மேலும் பூமிபாரத்தைக் கொண்டுள்ள சக்கிரவர்த்தியுடைய அரசனானவன் அந்தக் கொடிய விசுவாமித்திரர் வருவதைக்கண்டான்-எ-று.

கடல்கவென்னப்பெருகிப் [illegible] பெருகக்கசனமென்றும்
உடல்கவென்னப்பிரவற்றுயிர்களென்னப்பிறப்புக்கூடமென்றும்
விடலருங்கவுஞ்சுடப்பொருள்விக்கசனிகள்வெருளியாரினென
நடவெனத் [illegible] தொழுதெழுந்தெதிர்கடந்து பணிந்தான்

(இ-ள்) கடல்கள் என்னபாடுபடும் நீண்டதிக்குகளென்னபாடுபடும் அகன்ற ஆகாசந்தான் என்னபாடுபடும் இவைகளுக்குள்ளான சரீரங்களென்னபாடுபடும் அந்தசரீரங்களுக்குள்ளானஉயிர்களென்னபாடுபடும் இடிவநாகி உலகந்தானென்னபாடுபடும் விடுதலில்லாத தவத்தையுடையபெரிதான சாமார்த்தியத்தைக்கொண்ட விசுவாமித்திரர் கோபத்தினைவென்று வெற்றிகொண்ட நிண்டவில்லையுடைய அரிச்சந்திரமகாராசன் விரைவிலேயெழுந்துபோய் எதிர்கொண்டுநடந்து அவர்பாதங்களை வணங்கினான்-எ-று.

உருமிடித்தினவெனச்சினமிகுத்திகல்செயற்கு றுவதற்கு
கருமிடற்றவன்றேன்கடனிறந்தலேன்கமரினல்லேன்
இருமையிற்சடையதாமொரியவேனுவலனெனக்கெழுமியேகுற்
திருமலர்க்கழல்களைக்காமுறந்தழீஇநிலத்திடைகிடந்தான்

(இ-ள்) இடியிடித்தாற்போல் கோபமிகுதியாய் நிர்ச்சண்டைசெய்வதற்காக வருகிறதற்கு நிலகண்டனான சிவனுநானல்லேன் கருங்கடல்வண்ணனான விஷ்ணுநானல்லேன் பிரமதேவனுநானல்லேன் ஒருபுழுவிலுங் கடைப்பட்டவனானஎளியேன்நானே உம்மோடெதிர்க்கச்சமர்த்தனென்றுசொல்லிக்கொண்டு சமீபத்திலேபோய்அவருடைய இரண்டுமலர்போலும் பாதங்களை தன்இரண்டுகைகளிலும் பொருந்தப்பற்றிக்கொண்டு கிடந்தான்-எ-று.

காமுறத்தழுவலுங்கௌசிகப்பெயரினன்கால்பறித்தே
சிரமிசைத்திருமுடிச்சுடர்மணித்தொகைதகைசெறிக்க
உரமிசைப்பணிதெறித்திடவுதைத்தனனுதைத்திடலுமுன்றன்
மருமலர்க்கழல்சிவப்புறுமெனக் கைகளால்வருடலுற்றான்

(இ-ள்) தனதுகைகளிரண்டும் பொருந்தபற்றிக் கொண்டு கிடக்குமளவில் விசுவாமித்திரர் தம்முடையகால்களை உதறிப்பிடுங்கிக்கொண்டு அவன்தலைமேலணிந்த திருமுடியான கிரீடத்தில் விளங்குகின்ற ரத்நகூட்டங்கள் பலதிக்குகளிலுந் தெறித்துவிழவும் மார்பின்மேலணிந்திருக்கிற ஆபரணங்கள்தெறித்து விழவும்உதைத்தார் அவரப்படியுதைத்தபோதும அரிச்சந்திரமகாராசன் நீரிப்படி உதைக்கிறதினாலே உம்முடையமணம்கொண்ட மலர்போலும் பாதங்கள் சிவந்துபோமோவென்று தன்கைகளாலே தடவிப்பிடித்தான்-எ-று. சஅ

குடியினிற்பிடைபிழைத்திலமுணக்கடிமையிற்குறையுமில்லேம்
இடியிடித்தினவெனச்சினமிகுத்திடைவிடாதெனையுதைத்த
அடிவருப்படுமெனக்கவலுகிறபகையொழிந்தையவென்றன் (ன்
முடிவடிப்படுமெனக்கவல்கிலேன்வெகுளியென்மொழிதி என்று

இ-ள் உமக்குக்குடியாய் நிற்றவிலேயாங்கள் யாதொருவருஞ் செய்திலோம் உனக்கடிமையாயிருக்கவிலும் யாதொருகுறைவுமில்லாதிருக்கிறோம் இடியிடித்தாற்போல் கோபமிகுதியாய் இவ்விடத்திலக்கோபத்தைவிடாமல் என்னையுதைத்தருளின உம்முடைய திருவடிகளுக்குக் காயமுண்டாகுமென்று துன்பப்படுகின்றதேயல்லாமல்சுவாமியென்னுடைய தலையிலேகாயமுண்டாகுமென்று துன்பப்படுகிறேன் ஆதலால் இப்படிக் கோபங்கொள்கிறதினாலே யாதுபயனுண்டாம்சொல்லுமென்றுசொன்னான்-எ-று. ௬௯

மாவினைத்துணிசெய்தாய் கேழலுங்கிடர்செய்தாய் வானளாவுங்
காவினைப்பொடிசெய்தாய் நீதியாலின்றவென் காதன்மக்கள்
பாவினைப்பழிசெய்தாய் தீவினைக்குரியரோர் பாவிநீதான்
ஆவின்றோற்றோல்போர்த்தி தவிபுசித்தொழில்செய்தாயுமெனென்றான்

இ-ள் அதற்குநான் அனுப்பின மிருகங்களையெல்லாங் கொன்றுப்பன்றிக்கும் துன்பமுண்டாக்கினாய் ஆகாயத்தை அளாவுவதான இந்தச்சோலையையும் நாசஞ்செய்தாய் முறையுடனேநான்பெற்ற பிரியமான என்பெண்கள் பாட்டினையுமிழந்தாய் ஆகையால்பாவச்செய்கைக்கே தகுதியான நீபசுவின் தோலையே மேலே மூடிக்கொண்டு கொல்லுகின்றபுலியினது செய்கையைச்செய்தாய் உன்செய்கைகள் நன்றாயிருந்ததென்றுசொன்னார் விசுவாமித்திரர்-எ-று. ௭௰

நாடழித்திடினுமென் னகரழித்திடினுமென் னாமனைப்புக்
காடழித்திடினுமென் கலறக்கிளைவினைக் களைவினுமென்
றீடழித்திடினுநான் விடுக்கிலேனுறையானுரைத்தால்
பாடழிக்குமிதிலே யென்றரிச்சந்திரன் பலமொழிந்தான்

இ-ள் அதற்குசுவாமி என்னுடையநாட்டையெல்லாம் அழித்தாலும் நகரமுழுதும் அழித்தாலும் என்னுடைய கல்பசுக்கூட்டங்களையும் சோலைகளையெல்லாம் அழித்தாலும் என்னுடைய நெடிதான வழிசெல்லப் போக உதவினவைகளையெல்லாங் களைதல்செய்தாலும் நின்றுமுகங்கொன்று என்பெருமைகளையெல்லாங் கெடுத்தாலும் நீர் அனுப்பினீரென்றுநான் தெளிந்திருப்பேனேயானால் இப்படியாகச்செய்வேனோவென்று அரிச்சந்திரமகாராசன் பலவகையுஞ் சொன்னான். ௭௧

அரியரானவர் தமக்குரியலேயல்லவோ இனைகன்று
வறியரானவர் தமக் கல்லவோபொறைபிறர்க்காகுமோதான்
செறிவிலாவினையினை வினைவினைப்பொருளார் மூளித்தால்
பொறையுமின்னருளுமென்னவிலேவிலையெனப்போனவென்றான்

இ-ள் பின்னும் இந்திரியரா யிருப்பாருக்குத் தகுதியானவையல்லவோ தீமைகள்செய்கிற நல்லசாஸ்திரங்களறிந்தவர்களுக்கல்லவோ அவ்வகைத் தீமைகளைப்பொறுக்குங் கொள்கிறது இவ்விருவகையும் அவ்விருவகைக்கவிர வேறேதாவது உண்டாகும் இப்படிக்கிருக்க நீதிநெறி தெரியவில்லாத பாவியான ஒருபுள்ளியனென்னை ஒருபொருளாகக் கொண்டு நீர்கோபிப்பீராகில் பொறுமையும் உம்மிடத்துள்ள இரக்கமும் எவ்விஷயத்திலேயா இல்லையாகப்போகலாயினவென்று சொன்னான் அரிச்சந்திரன்-எ-று. ௫௨

மடிந்தவாயினன் மிகக்கொதிக்குநெஞ்சினனெதிர் மறுத்துநீதான்
படித்தவாசகமெலா மெனக்குரைத்திடற் பாலவோதான்
வடிக்கவேற்கணை மின்னைக்கொடிக்கோதையொடுநின் மக்கட்டம்மை
அடிக்குக்காரணமெலா மெனக்குநீதக்கவா றறைதியென்றான்.

இ-ள் அகன்றுமடித்த வாயையுடையவராய் மிகவுங் கொதிக்கின்ற நெஞ்சையுடையவராகியும் விசுவாமித்திரர் எனக்குமுன்னே நீ சொல்லித் தடுத்துமுன்னே கற்றவாசகங்கள் சாஸ்திரங்களெல்லாம் எனக்குத் தெரிவதாகப்பலவகையாய்ச் சொன்னாய் அவைகளிருக்கக்கெளியவர்க்க எழிலைசாரும் உனக்குமுன்னே யாமேதற்காகவந்த என்பெண்மக்களிருவரையும் அடிமையாக்குதற்குண்டான காரணங்களையெல்லாம் எனக்குத்தெரிவதாகும்படி உன்னைச்சொல்லென்றுகேட்டார்-எ-று. ௫௩

வேறு.

மீண்டுமன்னவன் வேதியென்றாள்கரம்
பூண்டுவாயிற் புனல்வரண்டற்றிட
ஆண்டநாயக விம்முனிவாற்றிடல்
வேண்டும்யானது விண்ணப்பஞ்செய்வனால்.

இ-ள் மறுபடியும் அரிச்சந்திரமகாராசன் அந்த விஸ்வாமித்திரருடைய பாதங்களைக் கைகளாற் பிடித்துக்கொண்டுவாயிலேநீர்வற்றிக்காய்ந்துபோக என்னை அடிமையாகக்கொண்டசுவாமி இந்தக்கோபத்தைத் தணிவுசெய்யவேண்டும்நான் அந்தச்செய்கைகளை உள்ளபடிதேவரீர் சந்நிதியிலேதெரிவித்துக் கொள்ளுகிறேன்-எ-று. ௫௪

இக்கருங்குழ லேழையர் தம்மைநின்
மக்களென்ப துணர்ந்திலமாதவ
தக்கவாறுரை யாயிற்றள்ளினேம்
புக்கதீதுபொறுத்தருளென்றான்.

இ-ள் இந்தக்கறுத்த கூந்தலையுடைய பெண்களை உம்முடைய பெண்களென்று நாங்களெவ்வளவுந் தெரிந்திலோம் மகாமுனிவரே அந்த

பெண்கள் தகுந்தவார்த்தைகள் சொல்லாமையினாலே தள்ளிவிட்டோம்இதுவே நடந்தசெய்கை இந்தக்குற்றத்தை நீரேபொறுத்தருள வேணுமென்று சொன்னானரசன்-எ-று. ௫௫

கழுத்தரிந்திது கைபிழைவந்ததென்
றழுத்தமாக வுரைத்தனையாதலால்
பழுத்தநல்லறி வுற்றனைப்பற்றிய
ஒழுக்கமற்றுள முட்கிடக்கூறினன்.

இ-ள் கழுத்தைஅறுத்துவிட்டு ஏனென்றால்நான் கைதவறுதலாகச் செய்தேனென்பதுபோல் திடமாகவே அஞ்சாமற்சொல்லுகிறாய் ஆகையால்முதிர்ந்த நல்லஞானத்தை யுடையவராப்உன்னைஆதரவாக அவ்விருவருங்கொண்ட சீலத்தையிகழ்ந்து அவ்விருவர்மனமும் அஞ்சும்படிபேசினாய்-எ-று. ௫௬

இரப்பவர்க்கொன் றிலையெனில்பாவரையும்
கரப்பவர்க்குறு கட்டுரைகூறுவர்
புரப்பவர்க்கும பொருத்தலல்லாலடித்
துரப்பதுந்தகு மோவென்றுருத்தனன்.

இ-ள் இதஞ்சொல்லி யாசகஞ்செய்பவர்களுக்கு ஒன்றுங்கொடுப்பதில்லையென்றுசொன்னால் யாவருக்கும்இயல்வது கரக்குலாகிற செய்கையுள்ளபேருக்குத்தகுந்தசொற்களையாருஞ்சொல்வார்களேயல்லாமல் சொல்லாதுவிடார்கள் அப்படியுண்டாகுமானால் உலகத்தைஆண்டுரட்சிக்கவல்லவரான அரசர்கள் பொறுத்துக்கொள்ளவேண்டுமேயல்லாமல்அடித்து அகட்டித்துரத்துகிறது தகுவதாகுமோவென்று பின்னுங் கோபங்கொண்டார்-எ-று. ௫௭

கட்டதில்லென நின்றவக்கள்வர்பாற்
கெட்டவான்பொருள் காட்டக்கிலேசியா
விட்டமூச்சுடன் விம்மலினாலலை
பட்டுவாரிற் பையப்பையக்கூறினன்.

இ-ள் நாங்களந்தப்பொருளை மண்ணைத்தோண்டி எடுத்துக்கொண்டு போனதில்லையென்று சாதிக்கிறஅந்தத் திருடரிடத்திலதானே அவர்கள்மடியிலே யுள்ளதாகமுன்னே அவர்கள்திருடிப் போனதினாலே குறைந்துசெலவழித்து மிஞ்சினபொருளை அரசன்முன்னே ஒப்பாரி காட்ட அதற்குமிகவுங் கிலேசித்துவிடுகிற பெருமூச்சுடனே விம்முகிலோடுகூடி அலைச்சற்பட்டுப் பெசுகிறவர்களைப்போல் அரிச்சந்திரன் மிகவுமெள்ள அவாகோபந்தணிவாகச் சொல்லுகிறான்-எ-று. ௫௮

மைகுலாவுகண் மாதரைமோதிய
கைகுறைக்கினுங் கண்ணினைச்குலினும்

மெய்குறைக்கினும் வேண்டியவாருநீ
செய்கவென்ன மறைமுனிசெப்புவான்.

இ-ள் அஞ்சனம்விளங்குகின்ற கண்களையுடைய அந்தப்பெண்களை அடித்தவைகளை அருக்காலுஞ்சம்மதமே கண்ணைத் தோண்டினாலுஞ் சம்மதமே உடம்பெல்லாஞ் சேதித்தாலுஞ் சம்மதமே உம்முடைய மனத்துக்கு வேண்டியபடிசெய்து கொண்டருள்கவென்றுசொல்லிஅதற்கு வைதிகமுனிவரான விசுவாமித்திரர் சொல்லுகிறார்-எ-று. ௫௯

கொய்துமாக்களைக் கொன்றதும்பன்றியை
எய்ததும்மிசை கேட்டடித்தினமாய்
வைத்ததும்மென்றன் மக்களைநீமணம்
செய்திடிற்பொருப் பேனென்றுசெப்பினான்

இ-ள் மிருகங்களையெல்லாம் அறுத்துக்கொன்றதும்பன்றியை அம்பாலெய்துதுரத்தினதும் இசைப்பாட்டுகளைக்கேட்டு அவர்களுக்குப்பரிசுகொடாமல் அடித்துஇழிவாகஅவர்களைஉபசரினஞ்செய்ததும்பொருத்துக்கொள்ளுகிறேன் என்பெண்களான அவ்விருவரையும் நீவிவாகஞ்செய்துக் கொண்டாலென்றுசொன்னார்-எ-று. ௬௰

நிலத்தில்யாரு நெறியலசெய்திடின்
விலக்குநீயிவை மென்கண்விளம்பலென்
புலைக்குலத்தொடு மன்னர்பொருந்துதல்
கலத்ததோவென்று நாயகன்கூறினான்.

இ-ள் அதற்கரசா உலகத்திலேயாராகிலும் நீதிக்குவிரோதமானவைகளைச்செய்தால் அவைகளைவிலக்கத்தக்க நீர இந்த அநீதவார்த்தைகளை என்னிடத்திலே சொல்லுகிறதற்கு யாதுகாரணம் நீசசாதியாருடனே அரசர்களைகூடுகிறது நல்ல நீதியோடு கூடியதாகுமோவென்று அரிச்சந்திரமகாராஜன் சொன்னான்-எ-று.

மலையின்வைகும் வசிட்டன்சபித்தலாற்
புலையனானவன் மைந்தவிப்பூவையர்
மூலையில்லைகள் முறையன்றுவென்னக்
கலையுணர்ந்த கௌசிகன்கூறினான்.

(இ-ள்) மலைகளிலே சஞ்சரித்தலுக்குரிய வசிட்டமுனி சபித்ததினாலே நீசனானதிரிசங்குமகனே இந்தப்பெண்கள் தனங்களிலே நீகூடுகிறது உனக்கு நீதியல்லவோ வென்று கலைஞானங்களெல்லாந் தெரிந்தவிசுவாமித்திரர்சொன்னார்.

அற்றனான்றெம தையன்வசிட்டனால்
பெற்றசாபப் பெரும்புலைதீர்ந்தனை

இற்றைநாளிங் கெனைப்புலையாக்கவே
கற்றதேதெனக் கால்காம்பூண்டனன்

இ-ள் அதற்கு அந்நாளிலே எங்களாசாரியராகிய வசிட்டராலேயுண்டாகிய சாபத்தாலானபெரிய நீசத்துவத்தை நீக்கியருளினீர் இந்நாளிலேநீரே என்னை நீசனாக்க யாதுகாரணத்தாலே கற்கலானீர்சுவாமியென்று அவர்பாதங்களைத் தன்கைகளாலேபிடித்துக்கொண்டு அரிச்சந்திரன்சொன்னான்-எ-று. ௯௩

முன்னமுன்கை முழுப்புலைநீக்கினம்
இன்னநீக்க லெமக்கரிதன்றியாம்
சொன்னவாசகங் கேட்டிச்சுடர்முடி
மன்னர்மன்னவென் மக்களைச்சேர்கென்றான்

இ-ள் அதற்குமுன்னே உன்தகப்பன்முழுதும் புலையனானதைப் போக்கினமக்கின்னமும் அப்படிவருகிற புலைமையைப்போக்க அரிதல்லஆகையால்நாம் சொன்னவார்த்தைதப்படிகேட்டு விளங்காநின்ற கிரீடாதிபதிகளான அரசர்களுக்கரசனே எனபெண்களை கூடக்கடவையென்று விசுவாமித்திரர்சொன்னார்-எ-று. ௯௪

இடினுநின்விழி யாரழலாலெனைச்
சுடினுமென்னுட றன்னைத்துறந்துயிர்
விடினுமேனியை வெட்டியரிந்துகூ
றிடினுமிச்சொற் கிசைகிலன்யானென்றான்

இ-ள் அதற்குஐயாநீர் என்னைத்தாழச்செய்தாலும்உம்முடையகோபக் கண்களிலுண்டான நெருப்பால் என்னைச் சுட்டாலும் என்னுடைய உடம்பைவிட்டு உயிர்போகிறதாகச் செய்தாலும் என்னுடம்பை வெட்டிவெட்டிப் பலபலகூறுகள்செய்தாலும் இப்போதுநீர்சொல்லுகிற சொல்லுக்கு எவ்வளவும் நான்சம்மதியேனென்று சொன்னான் அரிச்சந்திரன்-எ-று. ௯௫

யூபவேள்விக் கௌசிகனேய்விலாக்
கோபமெய்திக் கொடியிடைமங்கையர்
தீபமன்னவர்ச் சேர்கிலையானென்
சாபநீபெறு கென்றுரைசாற்றினான்.

இ-ள் தூண்கள்நிறுத்திச்செய்கிற யாகங்களிலேமிகுந்த விசுவாமித்திரர் அந்தச்சொல்லுக்கு மாறாதகோபங்கொண்டு என்னுடையகொடிபோலும் இடையையுடைய பெண்களாகிய விளக்குப்போன்ற அவ்விருவரையும் நீசேராதுபோவையானால் என்சாபத்தைநீபெறக்கடவையென்று மறுமொழிசொன்னார்-எ-று. ௯௬

கூற்றமுன்னைக் கொடுத்திசைமறையீர்
தோற்றனன் றுநன் றென்று துணிந்துநின்
சீற்றமாற்றிடச் செப்பிடுஞ்சாபம்யான்
ஏற்றனன்விடு மென்னவிசைபினன்

இ-ள் அதற்குள்ளமனம்பமதாக எங்களுடைய அரியஉயிரைக்கொடுத்துத் தோல்வியையடைகிறது மிகவுநல்லதுதானென்று துணிவுகொண்டுஐயா உமதுகோபந்தீர்வதாக நீர்கொடுக்கிறசாபத்தை நானேஏற்றுக்கொள்ளுகிறேன் நீர்சாபமிடுமென்று அரசன்சொன்னான். ௯௭

அப்பெருந்தகை யன்னதுரைத்திட
இப்பெருந்தகைக்கும் பொறைக்குமியான்
ஒப்பெடுத்துரைக்கத் தகுமோவெனாச்
செப்பருந்தவன் சிந்தையிலெண்ணுவான்.

இ-ள் அந்தாசன் அப்படிச்சொல்லுமளவில் இந்தப்பெரிதான குணங்களுக்கும் பொறுமைக்கும் நான்சமானங் கூட்டிச்சொல்லத்தக்கதுமுன்பேயிவன்று சொல்லுதற்கரிதான தவத்தையுடைய விசுவாமித்திரர் மனதிலேயாலோசிக்கலானார்கள்-எ-று. ௯௮

இரைத்தெழுந்த கதத்தையிருத்திடின்
வரைத்தடம்புய வாசவன்முன்னம்யாம்
உரைத்தவாசகந் தோற்குமென்றுன்னுடா
நிரைத்தவேணி நெடுந்தவன்கூறுவான்.

இ-ள் சந்தித்துநமக்குண்டான கோபத்தை இந்தச்சமயத்திலே நாமுடித்தோமானால் மலைபோலும் பெரியதோள்களுடையஇந்திரனுக்குமுன்னேநாம சொன்னவார்த்தை தோல்வியடையுமென்று நினைத்துவரிசைவரிசையாய் நீண்டசடைகளையுடைய நெடிதான தவமுனிவர்சொல்லுகிறார்-எ-று. ௯௯

துடிமருங்குலத் தோகையர்தங்களைத்
தடிமணஞ்செயநீகென்றகள்வனே
குடிமைசெய்யுங் கெடும்புலையற்குநீ
அடிமையாவை யறிதியென்றோதினான்.

இ-ள் உடுக்கைபோன்ற இடையையுடைய அந்தப்பெண்களைவிவாகஞ் செய்துகொள்ளுதல் தகாதென்று சொல்லுகிறதிருடனே இனிகுடித்தனமான இழிதொழிலைச்செய்கின்றகொடியனானபுலையனுக்குஅடிமையாகக் கடவையென்று இதுபின்னேதெரிந்து கொள்ளென்றார்.

கொஞ்சிப்பேசுங் குழவிசொற்குற்றத்தான்
வஞ்சித்தன்னை வன்முலைப்பாலினில்

கன்றிட்டாலதை நாடிவிலக்குநன்
றென்றதாருள ரோவிந்நிலத்திலே

(இ-ள்) அதற்குக்கொன்றைக் கொன்றிப்பேசுகின்ற பழிப்பின்னையினுடைய சொற்றாற்றத்தினாலே தாயானவள் வஞ்சனைசெய்து தனைசமுகானை முலைப்பாலிலே நஞ்சுகலந்து கொடுத்தால் அதைத் தெளிந்து விலக்குகின்ற நல்லநெஞ்சுள்ளவர்கள் அந்தத்தாயையல்லது வேறேயிருந்தும் உளராவரோ இந்தவுலகத்திலேயென்று பின்னும்-எ-று. ௭௧

வாரிகாய்ந்து கொதித்திடின்மாற்றத்தண்
ணீரியாலர் தருவரக்கிதியிற்
சீரியாயென்னை நிமிகச்சீரிடின்
யாரியாரஞ்ச லென்பவரென்றனன்.

இ-ள் கடல்வெப்பங்கொண்டு கொதிப்புடையதானால் அந்தவெப்பத்தை யடக்கக்குளிர்ந்த நீரைக்கொண்டு யார்கொண்டுவருவார்கள் அந்த நிதித்தன்மைபோல் சிறந்த மகாமுனிந்திரரே என்னை நீர்மிகவும் கோபித்துச் சாபங்கொடுக்கத்துணிந்தால் பயப்படாதேயென்று எனக்குயாவர்சொல்லவருவார் என்றுபின்னும்-எ-று. ௭௨

தாயுந்தந்தையுந் தஞ்சமுந்தெய்வமும்
நீயுமென்று நினைந்திருந்தோமெனச்
சேயும்வேந்துந் திருவுமமைச்சனும்
போயுன்பாதம் புகவென்றுபூண்டனர்.

(இ-ள்) தாயுந்தகப்பனும் ஆதாரமும் தெய்வமும் ஆனவர்களுக்குண்டாயிருக்கிறீரென்று நாங்கள் எண்ணியிருந்தோமென்று பிள்ளையும் அரசனும் சந்திரமதியும் மந்திரியும் அவரருகேபோய் உம்முடையபாதமே எங்களுக்குகதியென்று கைகளைமேலேபிடித்துக் கொண்டார்கள்-எ-று. ௭௩

அன்னையென்னை யிருந்துணையென்னையுன்
முன்னைவாழ்வு முதலவனுமென்னைமற்
றென்னையிப்படி வெல்பவனிச்சமர்த்
துன்னையல்லது கண்டிலமுண்மையே

(இ-ள்) அதற்குவிசுவாமித்திரர் என்னைத்தாயுமென்பாய் அருமையானசகோதரமுமென்பதாய் முன்னுள்ளஐசுவரியமுமந்தஐசுவரியத்தைக்கொடுத்ததெய்வமுமென்பதாய் இனிமேலிப்படிஉயர்த்திச்சொல்லி வெல்லத்தக்கவென்றீரே இப்படிவெல்லலாகிய சாமர்த்தியமுன்னிடத்திலே கண்டேனேயல்லாமல் வேறேயொருவரிடத்திலுநான் மெய்யாகப்பார்த்திலேன்-எ-று. ௭௪

கண்ணினைவேண்டினு மீகுவன் கொடுக்கிற
மண்ணினைவேண்டினும் வாழ்வுட னீகுவன்
பண்ணினைவேண்டிய செஞ்சொற்பறைக்குலப்
பெண்ணினைவேண்டலன் யானென்றுபேசினான்

(இ-ள்) என் சொன்னதற்கு அரிச்சந்திரன் ஐயா என் கண்களைக் கேட்டாலுங் கொடுக்கிறேன் நானிருக்கிற உலகத்தை வேண்டினாலும் என்செல்வத்துடனே கூட்டிக்கொடுக்கிறேன் இசைகளிக்கும் இராகங்களை வேண்டத்தக்க மெய்ம்மையான சொற்களையுடைய பறைச்சாதிப் பெண்களை நான்வேண்டேனென்று சொன்னான்-எ-று. ௭௫

மன்னர்மன்னனு மன்னதுபோதவன்
அன்னதேதன்மக்கா மென்றவாவுரைத்துச்
சொன்னசெம்மை யுங்கடல்சூழ்புவி
என்னதேயென் றெழுந்தெழுந்தாடினான்.

(இ-ள்) அரசர்க்கரசனை அரிச்சந்திரன் அப்படிசொல்லக்கேட்டு மகாதவமுனிவரான விசுவாமித்திரர் நீஅப்படிசொல்வாயானால் நமக்குச்சம்மதமேயாமென்று சொல்லி அரசனை சத்தியமில்லாமல் உலகமுழுதும் வேண்டினேன் கொடுப்பேனென்று சொன்னதேபோதும் இனிக்கடல் சூழ்ந்தவுலகமெல்லாம் என்னுடையதாயிற்று என்று எழுந்து எழுந்தாடினார்-எ-று. ௭௬

மருவுநாடும் வளநகரும்பெருந்
திருவுமீதல வென்றனை செவ்வியோய்
கருவமென்ற மொழிதவறாமலுன்
அரசளிக்கி னமையுமெனச்சொன்னான்.

(இ-ள்) உன்வசமாகவிருக்கின்ற தேசங்களையும் வளமையுள்ள பட்டணங்களையும் பெரிதானசெல்வத்தையும் ஈகிறேனென்று சொன்னாய் ஓ நல்ல செல்வத்தன்மையையுடைய அரசனே இப்படிக் கருதினேனென்றுசொன்னசொற் பொய்யாமல் உன்னுடைய அரசாட்சியை எனக்குக்கொடுத்தாற்போதும் என்றுசொன்னார்-எ-று. ௭௭

அத்தனையினை கோசிகனைத்தும்
உத்தமக்க ளருகவல்வேண்டிலேன்
எத்தனையு மிருநிதிக்குப்பையும்
தத்தனன்மொழி தப்புவதில்லென்றான்.

(இ-ள்) அப்படிச்சொன்ன விசுவாமித்திரரைப்பார்த்து அந்தஅரிச்சந்திரமகாராஜன் உம்முடைய பெண்களைக்கூடுவதான சுகத்தைசாலவேண்டேன் எனதுடையநாட்டையும் பெரிதானவாக்கள் செல்வ

த்திரட்டையும் இப்போதேகொடுத்தேன் நான்சொன்னசொல் தப்புகி றதில்லையென்று சொன்னான்-எ-று. எஅ

பாரைவார்த்தவிறைற்றாற்பாலரோ
தாரைவாரெனக் கௌசிகன்சாற்றிட
நாரைவானக்கயல்பாயுநாநாட
நீரைவார்த்தன னின்புவியாள்கெனு

இ-ள் அதற்குவிசுவாமித்திரர் உலகத்தைதாரைவார்த்துச் சொன்னபின் [illegible] கொடுத்தக்கதோ நீ தாரைவார்த்துக் கொடுக்கவேண்டுமென்று சொல்ல நாரைகள்மேலே கயற்மீன்கள் துள்ளிவிழுமையான நன்னா [illegible] யுடைய அரிச்சந்திரன் தாரைவார்த்துக் கொடுத்தான் இனிநீரே உலகத்தையெல்லாம் ஆளுதற்செய்யக்கடவீரென்று. எகூ

வையநின்னது மாநகர்நின்னது
வெய்யவாசியும் வேழமுநின்னபொற்
செய்யதேர்களுஞ் செல்வமுஞ்செவிக்குஞ்
மையலார்களுந் தானையுநின்னவே

இ-ள் இனி இத்தரையை முதலிய பெரியநகர அயோத்தியாபுரியும் மிக்க கடுமையையுடைய குதிரைகளும் உம்முடையனவுகளும் உம்முடையபொன்னும் செய்தன செவ்வையான தேர்களும் செல்வமும் உம்முடைய [illegible] சேனைகளும் உமக்குச்சொந்தமாயினவே-எ-று. அ0

என்றுமன்னவன் விட்டுரைத்தபின்
அன்றுகௌசிகன் [illegible]
நின்றமாதவர் தங்களைநோக்கிநீ
ரின்றுநீரெழுந்தார்த்திடுமென்றனன்,

(இ-ள்) என்று அரசன்சொல்லி வார்த்ததாரையை அப்போதுவிசுவாமித்திரர் உள்ளங்கையிலேவாங்கிக்கொண்டபின்பு தம்முடனேகூடயிருந்த மகாதவமுனிவர்களை நோக்கிச்சொல்லி இப்போதுநீங்களெல்லாரும் எழுந்து ஜெயச்சப்தம்பண்ணுங்களென்றுசொன்னார்-எ-று.

கோசிகனிற்கைகூப்பிநின்றுகூவென்றே
ஆசிகள்சொன்னார் [illegible]
விசினார்கள் மேன்மேலுமென்றமென்மேலும்
பேசினார்பேரிமாசனாசெம்பெரிதுந்து.

(இ-ள்) அப்படி விசுவாமித்திரர் சொன்னபின் கூடியிருந்த [illegible] அரிச்சந்திரனுக்கு ஆசீர்வாதம்சொன்னார்கள் ஆகாசங்கள் [illegible]

பண்ணினார்கள் தாங்களுடுத்தியிருக்கிற வஸ்திரங்களைக்கொண்டுவீசினார்கள்நீயேமேன்மகனானவனென்றுமேன்மேலுங்கொண்டாடினார்களப்படிக்கொண்டாடி அந்தமகாஜெனங்களெல்லாம் அரிச்சந்திரனிடத்தில் மிகவும்பிரியங்கொண்டார்கள்-எ-று. அஉ

வாரணமுந்திண்டேர்பரிதேசம்வளனெல்லாம்
ஆரணமோதுகௌசிகனுக்காயினவென்றே
பூரணகும்பம்வீதிகடோறும்பொலித்துத்
தோரணமிட்டார்தாரணியெங்குந்துறவோரே.

(இ-ள்) யானைகளும் பலமானதேர்களும் குதிரைகளும் தேசமும்அதிலுள்ள சமபத்தும்வேதபாராயணஞ் செய்கிறவிசுவாமித்திரர் வசமாயினவென்று நிறைந்தநீர்குடங்களை வீதிகளெல்லாம் நிறையவைக்கச்சொல்லித்தோரணங்களுங் கட்டினார்கள்உலகமுழுதும் அந்தத்துறவறமுனிவர்கள்-எ-று, அங

மென்னடையன்னநன்னடையாளைவிறலானை
முன்னடையாநின்றின்னவைபின்னுமுனிகூறும்
என்னகர்நின்றேயிவ்வுலகமெல்லாம்யானாள
நின்னடையாளந்தந்திடுமாறெனறியென்றான்.

(இ-ள்) மிருதுவானநடையினாலே அன்னம்போன்றநல்ல இல்லறத்துக்கேற்றசெய்கையுடைய சந்திரமதிக்கும் வெற்றிகொண்ட அரிச்சந்திரனுக்கு முன்னேவந்து நின்றுகொண்டு இவ்விதவார்த்தைகளைப் பின்னும் விசுவாமித்திரர்சொல்லுகிறார் அதாவதுஎனக்கு சொந்தமான அயோத்தியிலிருந்து இந்தவுலகத்தையெல்லாம் நான்ஆள்வதாக உமது அடையாளத்தைக்கொடு தப்பாதமார்க்கத்துடனே யென்றுசொன்னார்-எ-று. அச

வாழியநாடூர்செல்வமமைச்சன்மாசேனை
சூழிநெடுங்கப்போர்மதவேழந்துரகந்தேர்
ஊழின்மட்டுமாளுதிதந்தேனுனதென்றே
ஆழியளித்தான்பாருளமட்டுமழியாதான்.

(இ-ள்) வாழ்வையுடையதான கோசலநாடும் ஊரும்செல்வமும் மந்திரியும் பெரிதானசேனைகளும் முகபடாமணிந்த நீண்டதுதிக்கையைக்கொண்ட பலமுள்ளமதயானைகளும் குதிரைகளும்இரதங்களும்ஊழிக்காலத்தளவும்நீரே ஆளக்கடவீர இதோகொடுத்துவிட்டேன் உம்மதாகஎன்றுசொல்லித்தன்கையிலுள்ளமோதிரத்தைக்கொடுத்தான்உலகமுள்ளளவும் அழியாதிருக்கிற மெய்யனென்னுங் கீர்த்தியைக்கொண்ட அரிசசந்திரமகாராஜன்-எ-று. அ௫

குடைதந்தேனீள்கொடிதந்தேனென்குழுவாய்
படைதந்தேனற்கனகத்திண்டேர்பரிதந்தேன்
தடைதந்தேனின்றடியேனைகாத்தவனேநீ
விடைதந்தேகென்றடிமேற்பாவிவீழ்வானை

(இ-ள்) என்குடையையுங்கொடுத்தேன் நீண்டகொடியையுங்கொடுத்தேன் என்கூட்டமாகிய சேனைகளையுங்கொடுத்தேன் நல்லசுவர்னமயமான பலங்கொண்டதேர் குதிரைகளையுங்கொடுத்தேன் இதற்குயாதொரு தடையுஞ்சொல்வதில்லை இனிஅடியேன் போகவிடைகொடுத்துவிட்டுநீர்போமென்று அவர்பாதங்களின்மேலே துதிசெய்துவிழுகின்ற அரிச்சந்திரனை-எ-று. அ௬

துணியுந்தனிநெஞ்சுடையானினதுதோண்மாலை
மணியுமவனையும்வலயங்களுநின்வடிவாளும
அணியும்முடியுஞ்சேயுந்தாயுமணியும்பொற்
பணியுங்கழலுந்தந்தேகென்றுபலசொன்னான்.

(இ-ள்) கண்டு துணிவுகொண்டு ஒப்பில்லாத சடைசித்தரான விசுவாமித்திரர் அரசனேஉன்னுடைய தோளிலுள்ளமணிமாலைகளும் கங்கணங்களும் கேயூரங்களும் உன்னுடையகூரியவாளாயுதமும ஆபரணங்களும்கிரீடமும உன்பிள்ளையும் அந்தப்பிள்ளையைப்பெற்றதாயும்அணிவனவான பொன்னாபரணங்களும வீரக்கழலுங் கொடுத்துவிட்டுப்போவென்று பலவாகச்சொன்னார்-எ-று. அ௭

எத்துக்கிவையென்றணிமாமுடியும்வடிவாளும்
புத்திப்புதல்வன்பூணும்பணியும்புதுமாதின்
பத்திக்கிரணப்பணியுங்கனகப்பணியுமொண்
முத்திற்பணியுங்கழியாமுனிவன்முன்முயத்தான்.

(இ-ள்) என்னத்துக்கு இவைகளெல்லாமென்று வெறுத்துதானணிந்திருக்கிற பெரியகிரீடமும் கூறியவாளாயுதமும் புத்திசாலியானதனதுபுத்திரனணிந்திருக்கிற ஆபரணங்களும் அலங்கரித்தலையுடைய மனைவியினுடைய வரிசையாகவொளிகள்வீசுகின்ற ஆபரணங்களும் பொன்னாபரணங்களும் வெண்மையான முததாபரணங்களும் சுழற்றிவிசுவாமித்திரர் முன்பேவைத்தான்-எ-று. அ௮

உனையும்மடமாதினையும்மாசேயுன்மைந்தன்
றனையும்விடுதற்கணியும்பணிநீதந்தாய்காண்
வனையுங்கழல்மகனுமநீயும்மடவாளும்
புனையுங்கிரணக்கலைதந்தகலப்போவென்றான்.

இ-ள். அதற்கு விசுவமித்திரர் உன்னையும் உனக்கிளமையான மனைவியையும் அரசனே உன்புத்திரனையும் நான்விடும்படியாகிய அணிந்திருக்கிற ஆபரணங்களையெல்லாம கொடுத்தாய் சரியே கட்டினவிரக்குடையுடையவனே இனி உன்மகனும் நீயும் மனைவியும் கட்டியிருக்கிற ஆடையையுடைய வஸ்திரங்களைக்கொடுத்துவிட்டுத் தூரப்போவென்றுசொன்னார்-எ-று. ௮௯

ஆடையிரப்போமாடையளித்தலானேயென்
றாடையளித்தகாவலனின்றேயுயிர்சோருந்
தாரைநினைந்தேகௌசிகனுற்குத்தான்மூடும்
சீரைகிழிந்தேமுவகைவிட்டுச்செலவுய்த்தான்.

இ-ள். அதற்கு நாங்கள்கட்டியிருக்கிற வஸ்திரங்களையுங்கொடுத்துவிட்டால் இனி யாரிடத்திலேபோய் உடுத்திக்கொள்ள வஸ்திரங்கொடுவென்று கேட்போம் சிவனே சிவனேயென்று ஆடையையெல்லாம் ஆண்ட அரசன் அங்கே நின்றுகொண்டு உயிர்சோர்ந்துபோனதுபோலாய் கண்ணீர்விட்டழுகிற தன்னுடைய தாரத்தைக்கண்டாலோசித்து விசுவாமித்திரர் அப்போது தாம் தம்முடைய அரையைமூடிக்கொண்டிருக்கிற மரவுரியைக்கிழித்து மூன்றுபங்குசெய்து கொடுத்து அவர்களுடுத்திக்கொண்டுபோகும்படி அனுப்பினார்-எ-று. ௯௰

காறற்பாழ்ந்துணிச்சீலைப்பேரொருநாண்மாறப்
பிறற்சிலையிதாருக்கென்றுரையேசாமே
மாறற்காலமிதாகிற்செய்வதென்மற்றென்னக்
கூறற்காமிசைபூணக்கோனதுகொண்டானே.

இ-ள். நாற்றம்பிடித்த பழந்துணியாய்ச் சீலைப்பேன்ஒருநாளும்போகாமல் மொய்த்துக்கொண்டிருக்கிற கிழிந்தவஸ்திரம் இதுயாருக்குத்தகுமென்று ஒருபேச்சும்பேசாமல நமக்கெல்லா மாறிப்போகிறகாலம் இப்போதுவந்ததானால் நம்மாலேசெய்யத்தக்கது யாதிருக்கிறதென்று எல்லாருஞ்சொல்லுதற்குத்தகுந்த கீர்த்தியைப் பூணுகின்ற அந்த அரசன் அந்தவஸ்திரத்தை உடுத்திக்கொண்டான்-எ-று. ௯௧

காவிச்சீரையுடுத்துக்கூறைசழித்துச்சென்
றாவிக்காகுலமாகச்சேனையழுங்கப்போய்ப்
பாவிக்கோசிகனார்முன்னொருபாய்வைத்துத்
தாவிற்றாளிணைபூசித்தேவிடைதாவென்றான்.

இ-ள். அப்படி அவர்கொடுத்த காவிவஸ்திரத்தை யுடுத்திக்கொண்டு தானுடுத்தியிருந்த வஸ்திரத்தை அவிழ்த்துக்கொண்டு தம்முயிர்க்கு வியாகுலந்தோன்ற சேனைகள் வருந்துகிறதைப் பார்த்துக்கொண்டு

பாவியான விசுவாமித்திரருகிலேபோய் ஒருபக்கத்திலே வஸ்திரங்க ளையெல்லாம்வைத்து விரைவிலே அவரிரண்டு பாதங்களையும் பூசைப ண்ணிக் கும்பிட்டு உத்தரவுகொடுமென்றுகேட்டான் அரிச்சந்திர ம காராசன்-எ-று. ௯௨

தாவென்றான்விடை தந்தேனீயொருகார்பூடு
போவென்றானிதுவேநலமென்றேப்போவானை
வாவென்றானதுகேளாமீளவும்வந்தெய்தி
யாவென்றானினியீகுவவெந்தாயாவென்றான்.

(இ-ள்) அப்படி உத்தரவுகொடென்றால் இதோ உத்தரவு கொடுத் தேன் நீஒருபுறத்திலேபோவென்றார் விசுவாமித்திரர் அப்போதுஇது தானல்லகாலமென்றுபோகிற அரிச்சந்திரனை அரிச்சந்திரா இங்கே வாவென்றார் அந்தச்சொல்லைக்கேட்டுத் திரும்பவும் அருகிலே வந்து சுவாமீ இனிநான் கொடுப்பன என்னவென்று கேட்டான் அரிச்சந்தி ரன்-எ-று. எந்தாயானினியீகுவயாவென்க. ௯௩

செந்தேனொழுகுந்தண்பணைசூழுந்திருநாடா
வந்தேனம்மாமுனிவோரும்வளர்வேள்விக்
குந்தேநண்ணியிரந்தபசும்பொனுளவெல்லாம்
தந்தேபோவென்றிறையோனைத்தடைசெய்தான்.

(இ-ள்) சிவந்த தேன்பாய்வதாகிய குளிர்ந்த வயல்கள் சூழ்வதான திருநாட்டையுடைய அரசே நான் உன்னிடத்துக்குவந்து அந்தப்பெ ரிய முனிவர்களும் செய்வதற்கொத்த யாகத்துக்காக உம்முடைய ஊ ருக்குவந்து யாசகங்கேட்ட பசும்பொன்னாகவுள்ளவையெல்லாம் இப் போது கொடுத்துவிட்டுப்போவென்று அரசனைப்போகவொட்டாமற் றடைபண்ணினார்-எ-று. ௯௪

முன்னமுனக்குச்சொன்ன திறத்தின்மொழிமாறி
அன்னதுனைக்கொண்டிங்கிதுதந்தேனல்லேன்யான்
நன்னகரோடுபொன்னுமுற்றுநனிதந்தேன்
இன்னமுனக்குப்பொன்றரவென்பாலிடமுண்டோ.

(இ-ள்) முன்னே உமக்குச்சொன்ன வகையிலே சொல்மாறி அந்த ப்பொருள்களை என்வசமாகக்கொண்டு இப்போது வேறேபொருள் கள் நான்தரவில்லை அந்தப்பொருளுடனே எனது நல்ல ஊருடனே உள்ளபொருள்களெல்லாம் முழுதும் உமக்கே அதிகமாகக் கொடுத் தேன் இன்னமும் உமக்குப் பொருள்கொடுக்க என்னிடத்தில் வே றே உள்ளதுண்டோ-எ-று. ௯௫

தாருடனேசெந்தாமரையாள்சேர்தடமார்பா
யாருடனேயிம்மோசமுரைப்பாய்பதியில்லாய்

ஊருடனேமுன்கூறியபொன்னுமுடனென்றே
நீருடனேநீபேசியளித்தநெறியுண்டோ.

இ-ள். மாலையுடனேகூடச் செந்தாமரைத்திருவுஞ் சேர்வதான விசாலமான மார்பையுடைய அரிச்சந்திரா இனி யாருடனே இந்தமோசவார்த்தைபேசுகிறாய் புத்தியில்லாதவனே உன்னுடை ஊருடனே நீசொன்னபொருளுங் கூடச்சேர்த்தல்லவோ தாரைநீருடனே சொல்லி எனக்குக்கொடுத்தது அது உண்டோஇல்லையோ அந்தப் பொருளையு முன்சொந்தமாகக்கொண்டு ஊரோடேசேர்த்துத்தாரைவார்த்துவிட்டால் அதுவேறே கொடுக்கவேணுமென்று வழக்கு-எ-று. ௯௬

சொன்னதுமாறார்பானுகுலத்திற்றொல்வேந்தர்
அன்னதுநானோநின்னிடையென்றனதுகேளா
மன்னவனுள்ளநொந்தறநாணிமதிவல்லோய்
இன்னமுமொன்றுண்டென்னவிரந்தேவிளைகூறும்.

இ-ள். சொன்னசொல்தப்பமாட்டார்கள் சூரியகுலத்துப் பழைய அரசர்கள் அந்நிலையை உன்னிடத்திலேநான் கண்டதில்லையென்று விசுவாமித்திரர்சொன்னார் அதைக்கேட்டுஅரசன் மனது மிகவுநொந்து வெட்கமுண்டாகி ஓபுத்தியுள்ளவரே இன்னமு மொருவார்த்தையுண்டென்று அவருக்கு நல்லவுபசாரங்கள்சொல்லி இவ்வார்த்தைகள் சொல்லுகிறானரசன்-எ-று. ௯௭

வேறு.

நித்தனைப்பிரமனையனையாய்நினைவழிந்த
பித்தனைப்பொருள்வினவுறினையெங்கியான்பெறுகோ
இத்தனைத்தினத்திலதென்றியம்புவையெனின்யான்
அத்தனைக்குநின்பொருடர * வவதியீகென்றான்.

இ-ள், நித்தியனைசிவனையும் பிரமாவையும் ஒப்பான மகாமுனிவரே உம்முடையகோபத்தால் நினைவுதடுமாறின பயித்தியக்காரனை என்னைப் பொருள்கேட்கிறீர் நான் எங்கேபோய்ச் சம்பாதித்துக்கொடுப்பேன் ஆனாலும் இவ்வளவுநாளுக்குள்ளே பொருள் கொடுவென்று ஒருகெடுகொடுப்பீரானால் நான் அவ்வளவுநாளுக்குள்ளே உம்முடைய பொருள்கொடுக்கத்தகுந்த அளவு இதுவென்று கொடுமென்று சொன்னான்-எ-று. ௯௮

ஊருநாடுநீண்மலைகளுங்கானமுமுழன்றே
யாருனோடிமுப்புண்பவரவதியாரிலோர

---

* அவதி - கெடுவு.

சோரமுள்ளனீகூறுமப்பொருடனைச்சொரிந்து
பேரடாவுனைத்தடுத்தனன்பேர்கலையென்றான்

இ-ள். ஊரும்நாடும் நெடியமலைகளும் காடுகளும் உன்னோடேகூட அலைந்து யார்வழக்குப்பேசுகிறவர்கள் அளவுகொடுக்கிறவர்கள் யார் ஒருவருங்கிடையாது திருட்டுத்தனமுள்ள நீ முன்னேகொடுப்பதாகச் சம்மதித்துச்சொன்ன பொருள்முழுதும் இங்கே கொணர்ந்து குவித்துவிட்டு அப்பாற்போகக்கடவையடா இதோ வுன்னைப்பொருள்கொடாமலப்புறம் போகக்கூடாதென்று தடுத்திருக்கிறேன் போகாதேயென்றுசொன்னார்-எ-று. சுகூ

பக்கநோக்கிலன்பார்மிசைவிழுந்தடிபூண்டு
கக்கல்நோக்கிலன்பார்மிசைவிழுந்தடிபூண்டு
விக்கலும்பொருமலுமிசைமிசையெழவிரிநீர்
உக்ககண்ணன்வாயூறுநீர்வற்றிடவுரைப்பான்.

இ-ள். அதற்குச்சம்மதியாய்த் தனைக்குள்ளேநின்று சுற்றெங்கும் பாராமல் பூமியிலேவிழுந்து வணங்கி அவர்பாதங்களைத் தன் சிரசின் மேற்கொண்டு ஒருவனுக்குக் கக்குதல்வந்தபோது மற்றொருவன்வந்து அவன்கழுத்தை நெருக்கிப்பிடித்தகதைபோல் விக்குதலும் பொருமலு மேலுமேலுந் தோன்ற விரிவானநீர்சிந்துகிறகண்களையுடையவனாய் வாயிலே ஊருகிறநீரும் வற்றிப்போகச் சொல்லுகிறான் அரிச்சந்திரன்-எ-று. ள

இழைத்ததீவினைபொறுத்தனனரசுகாவென்னத்
தழைத்தவன்பொடுதந்தியானகன்றிடுங்காலை
அழைத்தனீயெனக்கவதியிட்டான்விடிலைய
பிழைத்திலன்னிதோபெரும்புகழ்பெறுதியென்றிரந்தான்.

இ-ள். நீசெய்தகுற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறேன் உன்னுடைய அரசாட்சியைக் கொடுத்துவிடென்றுசொல்ல நான் சந்தோஷமான பிரீதியுடனே கொடுத்துவிட்டுப்போகும்போது கூப்பிட்ட நீரெனக்கொருகெடுவுகொடுத்து ஒரு ஆளைக்கூட அனுப்பினால் சுவாமிநான்தவறாமல் பொருள்செலுத்துவேன் ஆதலால் இது ஒருபெரியபுகழாகப்பெறுவீரென்று மிகவும் உபசாரங்கள் சொன்னான்-எ-று, ளக

சுற்றுண்டாகியமலைகளில்வனங்களிற்றொட்டுண்
பற்றுண்டாகியபதிகளிற்படுபொருளல்லால்
உற்றுண்டாகியநிதியமுன்றிருவுளமுணர
மற்றுண்டாமெனின் விளம்பிடுவழங்கிடவென்றான்.

இ-ள். பின்னுஞ்சொல்லுகிறான் சுவாமி சுற்றிலுமுண்டாகிய மலைகளிலும் வனங்களிலும் தொடர்தலாய் உமதுசம்பந்தமுண்டாகிய வூர்க

ளிலுண்டான பொருள்களேயல்லாமல் வேறொன்றுமில்லை ஆகையா லுமக்குச் சேரவேண்டியதாயுள்ள திரவியங்கள் உம்முடையதிருவுள ளத்தெரிவதாய் வேறேயெங்கேனுமுண்டாயிருந்தாற் சொல்லும் நான் கொடுக்கிறதற்கென்று சொன்னான் அரிச்சந்திரன்-எ-று. ௱௨

ஆமிதேயெனினரசகேளவதியானுரைப்பான்
ஏமகூடமுங்காசியுமன்றியிவிப்பால்
தாமமார்பநீதந்தநன்னாடிதற்கப்பாற்
போதுண்டெனிற்பொருளுமப்பொருளலாதனியேல்.

இ-ள். அதற்கு மெய்தான் இப்படிக்குச்சம்மதியாகுமென்றுநீசொன்னால் அரசனேகேள் ஓரளவுசொல்லுகிறேன் ஏமகூட பருவதமும் காசியுமல்லாமல் இதற்குஇப்பாலுள்ள நாடுகளே மாலையணிந்த மார்பையுடையவனே நீயெனக்குத்தந்த நல்லநாடுகள் இவற்றுக்கப்பால் நீபோவதுண்டானால் நீகொடுக்கவேண்டியபொருளும் அங்குள்ளபொருள்களேயல்லது இங்குள்ளபொருள்களை நீகொடாதே-எ-று. ௱௩

இந்தவெல்லையிலிப்பொருளீதலில்லாமல்
அந்தவெல்லையிற்பொருட்டரவல்லையேயானால்
முந்துநீசொன்னமுறைமையாலவதியானீவேன்
தந்திடாயெனிற்சத்தியமேதெனச்சாற்றும்.

இ-ள். இந்தவெல்லைக்குள்ளான இந்த பாக்கியான பொருள்களைக் கொடுக்கிறதல்லாமல் அந்தஎல்லைக்குள்ளான பொருளை நீ கொடுக்கவல்லவனானால் முன்னே நீசொன்ன நியாயப்படி கெடுவுனக்குக் கொடுக்கிறேன் அந்தகெடுவுக்குள்ளே நீகொடாமற்போனால் அதற்குப்பிரமாணமென்ன சொல்லுகிறாயென்று விசுவாமித்திரர்கேட்க அரிச்சந்திரன் சொல்லுகிறான்-எ-று. ௱௪

நிற்பிழைத்திடினினக்கியானருநிதியளிக்கு
சொற்பிழைத்திடிற்சூளுறவேதெனச்சொல்லல்
கற்பிழைத்தநற்சொற்பரதாரத்தைக்கருதி
இற்பிழைத்தவனாவனின்னிருநிதிகொடேனேல்.

இ-ள். உம்முடையவிஷயத்தில் அபராதனானாலும் அருமையான பொருள்கொடுப்பேனென்கிற சொற்றவறினாலும் உறுதியான சபத வார்த்தை ஏதுவென்றுசொல்லுகிறேன் பதிவிரதாதர்மத்தையே நடத்திக்கொண்டுவந்து கணவனுக்கு நல்லபுகழ்வரச்செய்கிற அந்நியருடைய மனைவியையெண்ணி இல்லறம்வழுவ நடந்தவனாவேன் உம்முக்குரிய பெரிதாம்பொருளைகொடாமற் போவேனேயானால்-எ-று. ௱௫

காசிநாட்டினிற்சென்றவர்க்காளிலுங்கனகம்
ஆசின்மாதவவளிப்பனவ்வவதியிலதுநீ
பேசிடாய்பனவிருபதுநாளையிற்பின்பு
மூசிவண்டுறைதாரினேய் தருகெனமொழிந்தான்

இ-ள் காசிதேசத்துக்குப்போன அப்போது உம் பொருள்களை குற்றமில்லாத பெரியதவத்தையுடையவரே கொடுப்பேன்சொன்ன அந்தக்கெடுவிலே ஆதலால் அந்தக்கெடுவைநீர் சொல்லவேணுமென்று சொல்ல அதற்கு இருபதுநாளைக்குப்பின்பு நெருங்கிவண்டுகள் மொய்க்கின்ற மாலையையணிந்தவனே கொடுக்கக்கடவையென்று சொன்னார் விசுவாமித்திரர்-௭-று ௭௬

அக்குற்றெறய்தகாலம்முறைந்திருமடங்கடங்கா
எங்குற்றீட்டுவெதிப்பொருளைவென்றியம்ப
நங்குற்றம்மீளைநாற்பதிற்றெட்டணநவின்றான்
உங்குற்றம்மிதற்குட்கொடாதொழிந்திடென்றான்.

இ-ள் அந்தகாசிக்குப்போய்ச் சேருதற்கே அந்த இருபதுநாளைக்கு இரண்டுபங்கானநாற்பது நாளானாலும்போதாது அப்படியிருக்க நானெப்படிகரு எங்கேபோய்சம்பாதிக்கிற இந்தப் பொருள்களையெல்லாம்கலாமென்றுசொல்ல அதற்குநம்மாலே ஒருகுற்றமுமில்லாமல் நாற்பத்தெட்டுநாள் கெடுக்கொடுத்தேனென்று சொன்னார் விசுவாமித்திரர்அப்படிசொல்லிப்பின்னும் உன்குற்றமாகவேமுடியும் இந்தக் கெடுவுக்குள் நீகொடாதேபோனால் என்றுசொன்னார்-௭-று ௭௭

இப்புத்திக்கினிகொடுத்தனனுள்விடுகென்று
குப்புற்றேகனுங்கௌசிகன்மீளவுங்கூவித்
தப்புத்தீர்குலத்தலைப்பொருளெலாம்பதினெட்
டொப்புத்தக்கதுபின்போவெனமன்னனுக்குரைத்தான்

இ-ள் இப்படிச் சொன்ன இந்த அளவுக்கு நன்றாய்ச் சம்மதியானவனுகி ஆளவிடுமென்று அனுப்பிவிட்டுப்போகுமளவில் மறுபடியும விசுவாமித்திரர்கூப்பிட்டு ஒருகாசளவாவது குறைவில்லாமல்கொடுத்த அந்தப்பொருள்முழுதும் நானிருக்குமிடத்துக்குவந்து எனக்குச்சம்மதிப்படுத்திப்பின்பு அப்புறம்போகக் கடவையென்று அரிச்சந்திரனுக்குச்சொன்னார்-௭-று. ௭௮

பாரளித்தனைபுரககநின்பதியிடைசென்றால்
பாரளித்தனரென்பர்நின்னடியவரெல்லாம்
ஊரளித்திடவுடனவர்த்துணிதியிலொழியின்
நீரளித்ததேயெனக்குமண்ணினக்கெனமொழிந்தான்

இ-ள் நான் ஆளும்படி உன்னுடைய உலகத்தை யெனக்குக்கொடுத்தாய் என்று உன்பட்டணத்துக்குள்ளே நான்போனால் உனக்குயார் இந்தப்பட்டணமுழுதும் ஆளக்கொடுத்தவரென்று கேட்பார்கள் உன்னுடைய ஊழியக்காரர்களெல்லோரும் ஆதலால் நீ உன்னூரையெனக்குக்கொடுக்க என்கூடவருவதற்குச் சம்மதிப்பாய் அதற்கு நீசம்மதியாமற்போனால் நீதானைவார்த்தது மாத்திரமே எனக்குலாபம் உனக்கு தான்ஊர்முழுதும் முடிவுபெறுமென்று சொன்னார்-எ-று. ௱௯

நன்றுநன்றுநீகாரியபிலெழுந்தருளுகயென்
இன்றுநின்பிறகெய்துவலென்றினிதியம்பச்
சென்றுசெளசிகன்றேர்மிசையேறினன்றிரண்டு
நின்றமாதவர்கரியினும்பரியிலுநிறைந்தார்

இ-ள் நல்லதுநல்லது நீர்பட்டணத்துக்கெழுந்தருளும் நாயடியேன் இப்போதே உமதுபின்பற்றிவருகிறேனென்று சந்தோஷமாகச்செல்ல அங்குநின்றும்போய் விசுவாமித்திரர் தேர்மேலேறினார் அவர்கூடவேகூடிநின்ற மகாமுனிவர்களும் யானைகள்மேலும் குதிரைகள்மேலும் ஏறிச்செல்லுவாரானார்கள்-எ-று

தேரிலேறிமாமுனிசெலச்சேனைபின்செல்லப்
போரில்வீரனுந்தேவியும்புதல்வனுநடந்தே
பாரின்மேனடந்தடிபொறாதுடலம்பனைதபனைநக்க
வேலிவாவிட்டயோத்தியைநோக்கியேவிரைந்தார்

இ-ள் அப்படித்தேர்மேலேறிக்கொண்டு மகாமுனிவரான விசுவாமித்திரர்போகச்சேனைகளும் பின்னேசெல்ல யுத்தசாமர்த்தியத்தையுடைய வீரனானஅரிச்சந்திரனும் அவன்தேவியும்மகனும் அந்தச்சேனைகளுக்குப்பின்னே மண்மேல்நடந்துகால்கள்பொறுக்கமாட்டாமல் உடம்புதுடிக்கவும்பொருந்திய அந்தக் குளக்கரையைவிட்டு அயோத்தியாபுரியைக் குறித்துப் போனார்கள்-எ-று. ௱௰௧

கன்னலம்பெருங்கழனியுஞ்சோலையுங்கடந்து
வன்னமாமணிப்பரிசையின்புறத்துவந்தணைந்தார்
நன்னகர்ப்பெருஞ்சனமெலாமெதிர்கொடுகண்ணி
மன்னனைச்செழுந்தேர்மிசைக்கண்டிலர்மருண்டார்.

இ-ள் கரும்புவிளைகிறஅழகியதானபெரியவயல்களும்சோலைகளுங்கடந்துசென்று ஒளிபொருந்தியபெரிதான அழகையுடைய அயோத்திபுரத்தின்மதிலுக்குப் பக்கமாகவந்துகூடினார்கள் அப்போது அந்தநல்லநகரத்திலுள்ள மகாஜனங்களெல்லாம் எதிர்கொண்டுபார்த்துத் தங்களரசனைத் தேர்மேற்காணாதவராய் மயங்கினார்கள்-எ-று. ௱௰௨

இரதமேன் முனியேறிய தகிதமோ விதமோ
சாதமோவெனுமையத்தார் வந்தவண் சார்ந்தார்
விரதமிவ்வகை விளைந்தவாறெனத் தனமெலிந்து
கரதலங்களான் முகத்தறைந்தழுதனர் கதறி

இ-ள் இரதத்தின்மேலே இந்த முனிவரேறி வருகிறது தகுமோ அல்லது தகாதோ அல்லது மெய்யோ பொய்யோ வென்பதான சந்தேகத்தையுடையவர்களாய் அங்கே வந்து அவ்விடமெல்லாங் கூடினார்கள் நம்முடைய அரசனுக்கு இவ்வகை விரதவேஷம் எப்படி உண்டாயிற்றென்று மெலிவு கொண்டு கைகளால் முகத்திலே மோதிக்கொண்டு கதறி அழுதார்கள்-எ-று. (௱௰௩)

ஏங்குவாரிளங்கொடியையுஞ் சேயையுமேந்தித்
தாங்குவார்செழுந் தாளின்மேல் வீழ்ந்து வீழ்ந்தயர்வார்
ஓங்கியோங்கியே யறைந்தொளிர் முகங்கன்றி
வீங்குவாரழுவார் விழுவாருளமெலிவார்.

இ-ள் அப்படி விழுகிறவர்கள் சந்திரமதியையும் அவள்பிள்ளையையுந் தாங்கி எடுத்துக்கொள்வார்கள் பின்னும் அவர்களுடைய செழுமையான பாதங்களிலே விழுந்து விழுந்து சோருவார்கள் கைகளாலோங்கி ஓங்கி அடித்து அடித்து ஒளியையுடைய முகங்கன்றுதலாய் வீங்கப் படுவார்கள் அழுவார்கள் விழுவார்கள் மனந்தளர்வார்கள்-எ-று. ௱௰௪

மன்னவற்கு நம்மன்னைக்கு மைந்தற்கு மந்தோ
என்னபாவம் வந்தெய்தியதென்றிருந்தேங்கப்
பொன்னகர்ப்பெரும் புரிசையின் புறத்து வந்தணுகி
இன்னல்செய்தவக் கௌசிகனிரதம் விட்டிழிந்தான்

இ-ள் அரசனுக்கும் நமது தாயான சந்திரமதிக்கும் பிள்ளைக்கும் ஐயோ என்னபாவம் வந்துகூடிற்றென்று இருந்தழ அந்த அழகான நகரினுடைய பெரிதான மதில்வாயிலுக்குப் பக்கமே வந்துசேர்ந்து இப்படி துன்பத்தை யுண்டாக்கின அந்த விசுவாமித்திரர் தேரை விட்டிறங்கினார்-எ-று.

கோசிகன்றனையுடன் கொடுபோய் நகர்புகுந்து
வாசியுள்ளவு மதகரியுள்ளவும் வழங்கிக்
காசினல்லன பூசனையறையெலாங் காட்டித்
தூசினல்லன துயிலறையாமெனச் சொன்னான்.

இ-ள் அந்த விசுவாமித்திரனைக் கூடக்கூட்டிக்கொண்டு பெரிய பட்டணத்துக்குள்ளே சென்று தனக்குள்ள குதிரைகளையும் பின்னுமுள்ள மதயானைகளையுங் கொடுத்து நல்ல பொக்கிஷவீட்டையும் பூசைவீட்

டையுமுதலானவெல்லாங்காட்டிக்கொடுத்து வஸ்திரங்களுக்குள்ளவீட்டையும் நித்திரைசெய்கிற வீட்டையும் பாருமென்றுசொன்னான் அரிச்சந்திரன்-எ-று.

என்னின்முன்னவிருபதோடொருவருண்டந்த
மன்னர்வைத்தசெம்பொன்னறையீதெனவழங்கி
அன்னசத்திரமிவையிவையடியனேன்வைத்த
பொன்னறைத்தொகைகொள்கெனக்கொடுத்தனன்புகழோன்.

இ-ள் எனக்குமுன்னுள்ள அரசர்கள் இருபத்தொருபேர்களுண்டு அந்தஅரசர்கள்வைத்த செம்பொன்னுள்ளவீடு இதென்றுசொல்லிக் கொடுத்துஇவைகள் அன்னசத்திரங்கள் இவைகள் அடியேன்வைத்திருந்தபொன்னிருக்கிறவீடுகள் எல்லாம்ஒப்புக்கொள்ளுமென்று கொடுத்தான் கீர்த்திமானான அரிச்சந்திரன்-எ-று. ௱௰௭

ஆடரங்குகளம்பலமடமன்னசாலை
மாடமாளிகைமண்டபமஞ்சனச்சாலை
கூடகோபுரமடப்பள்ளிகோயில்செய்குன்றம்
பீசமாதனமிவையெனக்கொடுத்தனன்பின்னை.

இ-ள் ஆடுகிறநாடகசாலைகள் பொதுச்சாவடிமடம் அன்னசத்திரம்மாடம் மாளிகைமண்டபம் திருமஞ்சனச்சாலை கூடகோபுரம் திருமடைப்பள்ளிகோயில் செய்குன்றம்பீடம் ஆசனம்இவைகளென்றுபின்னுங் காட்டிக்கொடுத்தான்-எ-று. ௱௰௮

இந்தவாதனத்திருந்தருளெனமுனியிருந்தான்
அந்தவெல்லையிலரசனும்மடிபணிந்திருந்தான்
வந்தமன்னருமமைச்சருமங்கையர்குழாமும்
சுந்தரக்கழற்சேனையுமவனடிதொழுதார்.

இ-ள் இந்தஆசனத்தின்மேலே எழுந்தருளுமென்றுசொல்ல அப்படியேவிசுவாமித்திரர் அதிலிருந்தார்அப்போது அரிச்சந்திரனும் அந்தமுனிவருடையபாதங்களை வணங்கினான் கூடவந்தஅரசர்களும் மந்திரிகளும்பெண்கள்சேனைகளும் அழகான வீரக்கழல்கள்கட்டின சேனைகளும் அரிச்சந்திரனுடைய பாதங்களைவணங்கினார்கள்-எ-று. ௱௰௯

தொழுதெழுந்தகஞ்சுடர்முடிமன்னனைநோக்கி
அழுதுநின்றவத்தலைவனையவன்கையாலமைத்துப்
பழுதிலாதனீரெமக்குமுன்செய்தவப்பரிசே
முழுதுமிந்தமாமுனிவற்குமுறைசெயுமென்றான்.

இ-ள் அப்படி வணங்கியெழுந்திருந்து தமதுஒளிபொருந்தின கிரீடாதிபதியான அரசனைப்பார்த்து அழுதுகொண்டுநிற்கின்ற அந்த அ

சர்கள் பிரதானிகளெல்லாரையும் அரிச்சந்திரன் தன்கையாலடங்கச் செய்து குற்றமில்லாமல் நீங்கள் எங்களுக்கு முன்னே நடந்து வந்த அந்தப்பிரகாரமாக உள்ளகாலமுழுதும் இந்தமகாமுனிவருக்குபயபத்தி செய்யுங்களென்று சொன்னான்-எ-று. ௧௨௰

எவர்க்குநல்லவர்திரிபுரமெரியநச்சிரித்த
சிவற்குநல்லவர்செங்கண்மாலுக்குநான்முகத்த
னவற்குநல்லவரமரர்க்குநல்லவராவர்
இவற்குநல்லவரெனக்குநல்லவரெனவிசைத்தான்.

இ-ள். இந்தமுனிவரோ எல்லாருக்குநல்லவராய்ச் சிறந்தவரின்னமும் திரிபுரதகனமாக நெருப்புத்தோன்றச்சிரித்த பரமசிவனிலுஞ் சிறந்தவர் செங்கண்மாலான விஷ்ணுவினும் சதுர்முகனான பிரமாவிலுஞ்சிறந்தவர் தேவர்களுக்குஞ்சிறந்தவர் ஆன இந்தமுனிவருக்குநல்லவரானவர்களே எனக்கு நல்லவரென்று சொன்னான்-எ-று. ௧௨௧

வையமேழுடைமன்னவனவ்வுரைவழங்கச்
செய்யவாய்மலர்செங்கையாற்புதைத்தடிவணங்கி
ஐயநின்மொழிமறுப்பவராரொருமுகத்திற்
கையறைந்தழக்கண்டவன்கௌசிகன்கருதும்.

இ-ள். ஏழுலகத்தையுமுடைய அரிச்சந்திரமகாராசன் அந்த வார்த்தைசொல்லவே எல்லாரும் தங்கள் சிவந்தமலர்போலும்வாயைக் கையால்மூடிக்கொண்டு பாதம்வணங்கி ஐயா உன்வார்த்தையைத் தடுப்பவர்களிங்கேயாரிருக்கிறார்களென்று தங்கள்முகத்திலேகையாலேமோதியடித்துக்கொண்டு அழுகிறதைக்கண்டு விசுவாமித்திரர் ஆலோசிக்கிறார்-எ-று. ௧௨௨

அறந்திரண்டுருவாகியவரசனையவமே
புறம்பழைத்தனம்புன்மையேயபுத்தியில்லாமல்
திறந்தெரிந்தவர்செயலிதோவெனக்கௌசிகன்மெய்
மறந்திருந்தபின்மற்றுமோர்வாசகமுரைப்பான்

இ-ள். தருமமே திரண்டவடிவாயிருக்கிற அரசனை நாம் வீணாகப் புறமே தேவர்முன்னே நிந்தித்தழைத்தோம் அற்பருணர்ச்சையுடைய நாம் புத்தியில்லாமல் இதனிற்க நீதிதெரிந்தவர்கள்செய்கை இப்படியோவென்று விசுவாமித்திரர் தம்முடம்புமறந்திருந்து பின்னுமொரு சொற் சொல்லுகிறார்-எ-று. ௧௨௩

இந்தவையமுமிருநிதிக்குழுவுமிப்பொருளும்
முந்துநீதாமொழிந்தவப்பொருளுமியானிழப்பேன்
எந்தன்மக்களைமணம்புணர்ந்திடநிருவென்
றந்தணன்மகிழ்ந்தரசனைக்கைபிடித்தழைத்தனன்

இ-ள் இந்தவுலகமும்பெரிதான பொருட்குவியலும் இத்தவஸ்துக்கள்முன்னே நீதருவதாகச்சொன்ன அந்தப்பொருளும் நான்விட்டுவிடுகிறேன் என்னுடைய குமாரியைக் கலியாணம்பண்ணிக்கொண்டு இங்கப்பட்டணத்திலேதானே இருவென்று விசுவாமித்திரர் சந்தோஷங்கொண்டு அரிச்சந்திரனுடையகையைப்பிடிக்க அவனைப்பச்சமாதானஞ் செய்தார்-எ-று. ளாஉச

கைபிடித்தலுமுனிவனைக்கால்பிடித்திறையவன்
மெய்பிடித்துமிக்கவைசெய்தலுமல்லால்
மைபிடித்தகட்பரத்தையர்புணர்தலுமவழங்கப்
பொய்பிடித்தலும்அறனலசெய்தலும்புகழோ

இ-ள் அப்படிஅவர்கையைப் பிடிக்கவே அந்தவிசுவாமித்திரருடையகால்களைப்பிடித்துக்கொண்டு அரசனானவன் சத்தியத்தையே உறுதியாகப்பற்றி அதற்குமேலானகாரியங்களை நடத்துகிறதேயல்லாமல் மையிட்டகண்களையுடைய பரத்தைகளைக்கூடுவதும் கொடுப்பதற்காகப் பொய்சொல்லுதலும் கருமமல்லாதவைகளைச்செய்தலும் கீர்த்திக்குக் காரணமாகுமோ-எ-று. ளாஉரு

உமக்கியான்சொல்லவேண்டுமோமனுவின்பினுதித்தே
எமக்குமுன்னரசாண்டபார்வேர்மூவெழுவர்
தமக்குமுன்னொருத்தருக்குந்தாங்கரும்பெரும்பாரம்
சுமக்கவல்லனேதவிர்கவிச்சொல்லெனத்தொழுதான்.

இ-ள் சுவாமிஇன்னமும் உமக்குநான் சொல்லத்தக்கதுமுண்டோ மனுவுக்குப்பின்னே பிறந்துஎங்களுக்குமுன்னே பூமியைஅரசாண்ட அரசர்கள் இருபத்தொருபேர்கள் தங்களுக்குமுன்னே ஒருவராலுந் தாங்குதற்கரிதான அநீதியான பெரியபாரத்தைநான் தாங்கவல்லவனோவேறே நீரிந்தபாவச்செய்கையான சொல்லுதலை இனிவிட்டுவிட்டுவிடவேணுமென்று அவர்பாதத்திலேவிழுந்து வணங்கினன்-எ-று.

கூளைக்கூட்டயான்பொருந்திலேன்சொன்னவிப்பொருளுக்
காளைக்கூட்டெனவரசனைநோக்கியேமுனிவன்
நாளைக்கூட்டுவனின்றுநீகட்புறத்தென்னத்
தாளைக்கூடுறவாக்கியதலையினன்சாற்றும்

இ-ள் வேசைக்கூட்டத்துக்குநான் சம்மதிக்கமாட்டேன்நான் கொடுப்பதாகச்சொன்ன இந்தப் பொருளுக்காக ஒருஆளைக்கூட்டி என்பின்னேவரவிடுமென்றுசொல்லஅதற்குஅரசனைப்பார்த்து விசுவாமித்திரர்நாளைக்குக்கூட்டியனுப்புகிறேன் இன்றைபதினமேவெளியேநீபோவென்றுசொல்லவேஅரசன் அவர்பாதங்களைச்சேர்வனவாகத் தன்தலைமேற்கொண்டவனாகிச் சொல்லுகிறான்-எ-று. ளாஉஎ

சிறுத்தநாயினேன்செய்தவிப்புன்மைகளெல்லாம்
பொறுக்கல்வேண்டுமென்றடியிணையிரண்டும்பூண்டான்
கறுத்தசிந்தையன்கௌசிகன்பொறுத்தனனென்றால்
மறுத்துமின்னுமொன்றுரைத்திடக்கேளெனவள்ளல்.

இ-ள். சிறிதானநாய்போன்ற அடியேன்செய்த இந்தப் புல்லியவைகளையெல்லாம் பொறுத்துக்கொள்ளுதல் வேண்டுமென்று அவரிரண்டு கால்களையுந் தன்கைகளாலேபற்றினான் அதற்குச் சினமுள்ள மனத்தையுடையவரான விசுவாமித்திரர் பொறுத்தேனென்று சொன்னார் அதற்கு மறுபடியும் சுவாமி இன்னமொன்று சொல்லிக்கொள்ளுவதுண்டு அதைக்கேளுமென்று பிரபுவான அரிச்சந்திரன்-எ-று. கஉஅ

கையினாற்பிடித்தமைச்சனைக்காட்டிமற்றிவர்கள்
வையினுங்கிளைமறுக்கினுமற்றுமோர்குற்றம்
செய்யினும்பொறுத்தருள்செய்வாய்செல்கதிபளித்த
ஐயனேயுனதடைக்கலமிவனெனவளித்தான்.

இ-ள். தன்கையினாலே மந்திரிகளைப்பிடித்துக்காட்டி ஐயா இவர்கள் உம்மைவைதாலும் உம்மைவேண்டாமென்றுசொன்னாலும் உமது சொல்லைமறுத்தாலும் வேறேயொருகுற்றஞ்செய்தாலும் நீர் பொறுத்து அருள்செய்யவேண்டும் எனக்குப்போகும்விடைகொடுத்த சுவாமி இவர்களெல்லாம் உமக்கே அடைக்கலப்பொருள்களென்று அவரிடத்திலே சேர்க்கொடுத்தான்-எ-று. கஉகூ

குடைநிழற்பொலிகௌசிகனடியின்மேற்கொடிபோ
லிடையினாளையுமகனையுமிறைஞ்சவித்தேத்திப்
படையைநோக்கிநீர்நின்மினென்றங்கையாற்பணித்து
விடையிதேயெனப்பணிந்தனன்வேந்தர்க்குவேந்தன்.

இ-ள். குடைநிழலின்கீழே விளங்குகின்ற விசுவாமித்திருடைய பாதங்களிலே கொடிபோலுமிடையையுடைய சந்திரமதியையும் மகனையும் வணங்கச்செய்துகொண்டு தானுந்துதித்துச சேனைகளையெல்லாம்பார்த்து நீங்கள் நில்லுங்களென்று தனதழகானகையாலே அமையநிறுத்தி விடையிதுதானென்று விசுவாமித்திரனைவணங்கினான் அரசர்க்கரசனானவன்-எ-று. கஙய

பாமுனைக்குலகென்றிறையகன்றனன்பரிந்து
புரமெரித்தவனனையமாமுனிபுவிபுரந்தான்
கிரயனீக்குவீர்கள்செறிமன்றமுக்கெருவும்
பிரமகாரிகண்மலிந்தனர்பெருகுமுட்களிப்பால்.

இ-ள் - இனிப் பூமிபாரம் உமக்கேயென்று சொல்லிவிட்டு அப்பாற் போனான் அதற்குப்பரிவுகொண்டு திரிபுரதகனம் பண்ணின சிவனை யொப்பான விசுவாமித்திரர் உலகையாண்டார் ஆயாசந்தீர்ந்திருக்கின்ற வீரர்கள்கூடினசபைகளிலும் தெருக்களிலும் எங்கும் பிரமசாரியப் பிராமணர்கள்கூடினார்கள் பெருகுந்தான உள்ளக்களிப்புடனே-எ-று.

காமத்தேனையர்சுருக்குழல்விரித்தனர்பரப்பிச்
சோமத்தாமங்கள்காட்டுமெய்ந்நிறம்பொலாக்கேய்ந்து
தாமத்தாமலர்க்கருப்பைகள்சமிதைகள்விரித்த
ஓமத்தூமமேகேயாங்கனையுயர்மனையெல்லாம்

இ-ள், அரசனுக்குள்ள காமப்பெண்களெல்லாம் தங் கரியகூந்தலை விரித்துப் பரவவிட்டு அவைகளுலர்வதாக அகிற்புகைகாட்டுகின்ற அவ்வகைச்சிறப்புகளெல்லாம் இப்போது குறைவாய் ஒண்பொருந்திய நல்லமலர்களும் தர்ப்பைகளும் விரித்திருப்பதான ஓமங்கள்செய்கிற புகையே உயர்ந்தவீடுகளின்மேலெல்லாம் கிளர்வதாயின-எ-று.

கோவினோர்களுக்குரதத்தேர்களுஞ்சோதி
மேவினோர்களுமாதருமடைந்தமைமாறி
நாவினோர்களுநான்மறைக்கடவுந்தியர்களுமேக்
கோவினோர்களுமலிந்தனர்கொடித்தெருவெல்லாம்.

இ-ள். யானைவீரர்களும் குதிரைவீரர்களும் ஒளிகொண்ட வேல்வீரர்களும் இவர்பெண்களும் நெருங்கியிருப்பவைபோய் சாஸ்திரம்படிக்கிற பிரமசாரிகளும் ஸ்ரீபதிகளையிலே அணைநாளுங் கௌபீனமுமுள்ள முனிவர்களும் திரிதண்டசந்நியாசிகளும் மிகுதியாய்க்கூடினார்கள் அந்தக்கொடிகளாடுகிற தெருக்களெல்லாம்-எ-று. கருரு

புனிதமாதவர்சூழ்ந்திடப்புரவலர்போற்றக்
கனிதிருந்தியசெய்யவாய்க்கன்னியர்காண
நனிதிருந்தியநவமணியாதனத்தேறி
இனிதிருந்துலகாண்டனன்கௌசிகனிப்பால்.

இ-ள். இப்படி பரிசுத்தமான மகாமுனிவர்கள் சூழவும் அரசர்கள் சேவிக்கவும் கொவ்வைக்கனிபோற் றிருந்தியதான சிவந்த வாயையுடைய பெண்கள்பார்க்க மிகவுந்திருத்தமான நவரத்நசிங்காசனத்தின் மேலேறி சந்தோஷமாயிருந்து உலகமெல்லாம் ஆண்டார் விசுவாமித்திரர் இனிமேல்-எ-று. கருசா

சூழ்வினைக்காண்டம் - முற்றுப் பெற்றது.

ஆக விருத்தம் - எருஉ.

உ

ஆறுவது

நகர்நீங்கியகாண்டம்.

தலைமுழுதுந்தவமுனிவன் றனக்களித்தேமினி யுறைக்ககுதி
யென்றன், றிலகுமணிமண்டபமு மெழின்மணிச்சிங்காதனமுமி
ழந்துபோந்து, பலவரசருடனமைச்சரழுதுடன்போய்ப் பரதவி
க்கப்பதாதிமொய்க்கக், குலமகனுமடமயிலு முன்னடக்கப்பின்
நடந்தான் கொற்றவேந்தன்

(இ-ள்.) உலகமெல்லாம் தவமுனிவரான விசுவாமித்திரரு
க்குக்கொடுத்துவிட்டோம் இனிஇங்கே இருக்கிறது தகாதென்
றுகொண்டு விளங்குகின்ற ரத்நமண்டபங்களையும் அழகானரத்
நங்களையும் விட்டிறங்கிவந்து அநேகம் அரசர்களுடனே மந்திரி
அழுதுகொண்டு கூடவந்துதிக்கச் சேனைகளுஞ்சூழ தனதுகு
லபுத்திரனும் சந்திரமதியுமுன்னே செல்லப்பின்னேசென்றான்
வெற்றிபொருந்திய அரிச்சந்திரமஹாராஜன்-எ-று. (க)

தொடைதுறந்துமுடிதுறந்து பணிதுறந்து துடிமுரசந்து
றந்துதாமக், குடைதுறந்துவெண்க வரிக்குழாந்துறந்து கரிபரி
தேர்க்குலந்துறந்து, நடைதுறந்து மருகணைந்தகாவலன் றன்றி
ருமுகத்தைக் கண்டோரெல்லாம், அடையமனமகிழ்ந்துருகியவ
ரவரேமுகத்திலறைந் தழுவாரானார்.

(இ-ள்) மாலையுமில்லாமல் கிரீடமு மில்லாமல் ஆபரணங்க
ளுமில்லாமல் உடுக்கைபம்பை பேரிகைமுதலானவாத்தியங்களு
மில்லாமல் ஒளிபொருந்தின வெள்ளைக்குடையு மில்லாமல் வெ
ண்மையான சாமரகூட்டங்களு மில்லாமல் யானைகுதிரைதேர்க்
கூட்டங்களுமில்லாமல் அரண்மனைவாசலைவிட்டு வீதியிலேவந்
த அரசனுடைய திருமுகத்தைப்பார்த்தவர்க ளெல்லாருமழு
தும்மனது சந்தோஷித்துருகுதலாய் அவரவர்களும் முகத்திலே
அடித்துக்கொண்டே அழத்தொடங்கினார்கள் (௨)

மயிரொடுஞ்சிறையிழந்த போகில்போல் வேலியொடுவரம்
பிழந்த, பயிரேபோற்கரமிழந்தகரியேபோற்பொறியிழந்தபாவை
யேபோல், உயிரேபோய்ப்பரதவிக்கு முடலேபோன்மத்தா லுள்
ளுடைந்தலம்புந், தயிரேபோற்றளர்ந்தலைந்து தத்தமக்குகேழ்ந்
தவெலாஞ் சாற்றலுற்றார்

(இ-ள்) உரோமங்களுடனேஇறகும்போன பட்சியைப்போ
லவும் வேலியுடனே சிறுவரம்புகளுமில்லாதழிந்து கிடக்கிறபயி
ர்கள்போலவும் துதிக்கையறுபட்ட யானையைப்போலவும் சூஸ்
திரமற்ற பிரதமையைப்போலவும்உயிர்போய்த்துடிக்கிற உடம்
பைப்போலவும் மத்தினாலே உள்ளெல்லாம் உடைபட்டுச்சிதறு
கிற தயிரைப்போலவும் தளர்ந்துஅலைச்சல்கொண்டுதங்களுக்கு
த்தோற்றியவைகளையெல்லாஞ் சொல்லத்தொடங்கினார்கள்-எ-று

கொடிமீதுசெறிதேருங் குஞ்சரமும் பொற்சிவிகைக்குழா
முமின்றிப், படிமீதுநடந்திடவும் படைத்தனவோபார்வேந்தன்பா
தமென்பார், அடிமீதுதொழுமரசர்முடிமீது வடிமீதுமன்றிச்சு
ட்ட, பொடிமீதுநடந்திடவும் பொருந்தனவோகுலகுமரன்பொ
ற்றுளென்பார்

(இ-ள்) மேலேகொடிகட்டி யிருக்கின்ற தேரும்யானையும்
பொன்பல்லக்குமுதலானகூட்டங்களிலே யேறிவருகிறதில்லா
மல் மண்மேலேநடந்து செல்லவும் சுற்றிருக்கிறனவோ இந்தவு
லகத்தையாளுகின்ற அரசனுடைய பாதங்களென்றுசிலர்சொல்
லுவாரகள காலகளிலேவந்து வணங்குகிற அரசர்களுடையதலை
மேலும்மடியேயுஞ் செலுத்துகிறதில்லாமல் வெயிலாற்கொதிப்பு
ள்ள தூளிகளின்மேலே நடக்கவும்பொறுப்பனவாயினவே குல
புத்திரனுடைய பொன்மயமான கால்களென்று சிலர்சொல்லு
வார்கள்-எ-று. (௪)

அஞ்சாயன்னடைவன்னக் கனிதுகிலியதளுமலர்ச்சத்தாலு
ம், பஞ்சாலும் பதைபதைக்கும் பதந்தாட்குந்நானடைபோபவி
த்ததென்பார், செஞ்சாலிக்கோசலமு மிராசகுலவளநாடுந்தேவர்
நாடும், அஞ்சாமற்காத்தருளெம்பெருமானுக் கிதுவோ வந்தடுத்
ததென்பார்

(இ-ள்) அழகியசாலியுடைய இளமையான அன்னத்தின
து அழகான இறகுகளினாலும் அனிச்சமலர்களினாலும் பஞ்சி
னாலும் பட்டபோது துடிதுடிப்பதான கால்களையுடைய சந்திர
மதிக்காலால் நடந்துசெல்லவோ பவித்தமாயிற்றென்றுசிலர் சொ
ல்லுவார்கள் சிவந்தநெல்லினைவதான கோசலநாட்டையும்மற்ற
அரசர்களுடைய சிரேஷ்டமான நாடுகளையும்தேவருடைய நாடு
களையும் பயப்படாமற் காத்தருளுகின்ற எங்களரசனுக்கு இப்ப
டியோவந்து கூடியதாயிற்றென்றுசிலர்சொல்லுவார்கள்-எ-று.

கச்சைக்குளக்கிளமுலை சந்திரமதிதன் கணவனொடுகழுமி
யேகக், கொசசைச்குவலய மயில்கொற்றவனைவிட்டுமுனிக்கூட்
டம்வேட்டாள், இச்சைக்கிதம்பேசி யிந்தாரைப்பாராட்டியீவா
ர்தம்பாற், பிச்சைக்குவந்தவரோ பெண்ணுக்குமணவாளப் பிள்
ளையென்பார்

(இ-ள்) ரவுக்கையைப் பிறுவணவான இளமையைக்கொண்
ட சந்திரமதிதனது நாயகனுடனேசேர்ந்து இந்தவீதிவழியேசெ
ல்லுவதாக அறிவில்லாத இந்தப்பட்டணமாகியபெண் அரசனை
விட்டுமுனிவர் கூட்டத்தைவிரும்பிச்சென்றாள் ஒருவருடையம
னதுசந்தோஷமாக அவருக்குவேண்டிய நன்மைகளைச்சொல்லி
க்கொண்டாடி இன்னமும் கொடுப்பவர்களிடத்திலே பிச்சைக்
குவருகிறவர்களோ அந்தக்கொடுப்போருடைய பெண்ணுக்கும
ணவாள நாயகனாகிறதென்று இப்படிச்சிலர் சொல்லுகிறார்கள-

முல்லைமுகை நகையாளு முடிவேந்தனும் மகனும்முழுதாம்
போன, எல்லையெலாமணவறையு மலரணை முண்டோவென் றிர
ங்கிவீழ்வார், தொல்லைவிதிப்பயனேவந்திரந்தமாமுனிவன்சொ
ன்னதெல்லாம், இல்லையெனாதீந்தோருக் கித்தனையோபெரும்பே
றென்றேங்கிவீழ்வார்.

(இ-ள்) முல்லையரும்புபோன்ற பல்வரிசைகளையுடைய சந்திரமதியும் கிரீடாதிபதியான அரசனும்புத்திரனும்முழுதாஞ்செல்வனவான இடங்களெல்லாம் மணவறைவீடும் புஷ்பமெத்தையும் உண்டாயிருக்குமோவென்று துக்கித்துக்கீழே சிலர்வீழ்வார்கள் முன்னைவிதிப்பயனேவந்து யாகஞ்செய்தபெரிய ஒருமுனிவன்கேட்டனவெல்லாம் முழுதும்இல்லையென்னாமற்கொடுத்தவர்களுக்கு இப்படித்தானோ அவர்களடைவதான பலமென்று அழுதுகொண்டே கீழேவிழுவார்கள்சிலர்-எ-று. (எ)

வல்லார்க்குமாட்டாற்குமறமே நன்றென்றுரைப்பார் மறநன்றோ,
அல்லார்க்குங்குழன்மடவீரறமே நன்றென்றுரைப்பாரது
நன்றல்ல, நல்லார்க்குந்தீயார்க்குமெல்லார்க்கு மொருமையினுண்
டாமென்னே, எல்லார்க்குமுளதாகிலெங்கோனுக்கிலையானதெ
ன்னோவென்பார்

(இ-ள்) செய்யவல்லவர்க்கும் செய்யமாட்டாதவர்க்கும் வீரமேநல்லது அவ்வீரமேவேணுமென்பார்கள்சிலர் இருள்போல்வதாய் வண்டுகளொலித்து மொய்ப்பதான கூந்தலையுடையபெண்களே வீரம்வேண்டுவதில்லை தருமமேநல்லது அதுவேவேணுமென்பார்கள்சிலர் அந்தத்தருமம் நல்லதானால் நல்லவர்க்குங்கெட்டவர்களுக்கும் சமமாய்எல்லாருக்கும் ஒருவிதமாகவே அந்தத்தருமமுள்ளதாயிருக்குமென்று சொன்னால எங்களரசனுக்குமாத்திரம் அந்தத் தருமந்தனைசெய்யாமல் இப்படிப் போகவிட்டது யாதுகாரணமென்பார்கள் சிலர்என்றால்அரசருக்குமறமும் அறமும்வேணும் பொதுவில் எல்லார்க்கும் அறமொன்றுமேபொதுமென்பது கருத்து-எ-று. (அ)

கொண்டிருந்தவளநாடுங் குறையாதபெருந்திருவுங் கொடி
த்திண்டேரும், பண்டிருந்தமாளிகையும் புரிசனமுந் தமக்களித்
துப்பாலரோடும், வண்டிருந்ததாராளும் வாணுதலும்வறியோர்
போல் வனத்தேகபோகக், கண்டிருந்தும்விலக்காத கௌசிகனுந்
தம்மனமுங்கல்லேவென்பார்

(இ-ள்) தாங்கள்கைக்கொண்டிருந்தவளமையுள்ள நாடுங்குறையாதபெரிதான செல்வமும் கொடிகட்டின பலமானதேரும் முன்னேதாங்களிருந்தவீடும் ஊழியக்காரரும் தமக்கேயென்று கொடுத்துவிட்டு மகனுடனேவண்டுகள்மொய்க்கின்ற மாலையையணிந்த அரசனும் தேவியும் தரித்திரரைப்போல் காட்டுக்குச்

செல்ல இதைப்பார்த்துக் கொண்டிருந்து எவ்வளவும் விலக்கா திருக்கின்ற விசுவாமித்திரருடைய மனசும்கல்லோடேசேர்ந்த தோவென்றுசிலர் சொல்லுவார்கள்-எ-று. (கூ)

செம்மையினாலுலகமெலாந் தனக்களித்துச்செறிவனத்தே தேம்பிச்செல்வோர், தம்மைவரவழித் திருத்தியொரு மனைக்குத் தலமீயாந் தறுகட்பாவி, நம்மையெலாங் காத்தளிக்க வல்லவனோ வெனக்காங்கணடுக்கிமாரு, வெம்மையினால் வெயிதுயிர்ப்பார் மின்னுமலிடிவந்து வீழ்ந்ததென்பார்

(இ-ள்) செவ்வைக் குணத்தினாலே உலகமுழுதுந் தமக்குக் கொடுத்துவிட்டு நெருங்கின காட்டுக்குள்ளே தளர்ந்துபோகிறவர்களைக் கூட்டிவிட்டு அவர்களிருக்கும்படி ஒருவீட்டுக்குள்ளிடமும் கொடாதிருக்கிற அஞ்சுதலில்லாதபாவியான விசுவாமித்திரன் நம்மைமுழுதும் காத்துரட்சிக்க வல்லவனாவானோ வென்று கைகள்நடுங்குதலாய்த் தீராததுக்கவெப்பத்தினாலே வெப்பமாகப்பெருமூச்சு விடுவார்கள்சிலர்மின்னலில்லாமல் இடிவிழுந்தது இந்தவூரிலே யென்பார்கள் சிலர்-எ-று. (ய)

என்றலமந்தனைவோரும்வயிறலைத்துவிழுந்தேங்கியிரங்குங் காலைகன்றினொடும் பிடியினொடுங் கிளையினொடுமவனம்புகுதுங் களிறேபோல இன்றளித்தருண்முனிவர்க் கேற்றனவோ வேற்றிலவோவென்றேங்கிக், குன்றனையமதில் நடந்ததனி நடந்துசரையு வினைக்குறுகினனே

(இ-ள்) என்றுசொல்லி துக்கித்துஎல்லாரும்வயற்றிலே யடித்துக்கொண்டு கீழேவிழுந்து அழுது துக்கிக்கிறபோது கன்றுடனும் பெண்யானைகூடிவரத் தம்மிடத்துடனே காட்டிற்செல்லுகிற ஆண்யானையைப்போல் நான்இப்போது கொடுத்ததைக்குறித்து கிருபையுடைய விசுவாமித்திரருக்குச் சம்மதியாயிற்றோ சம்மதியாகவில்லையோவென்று துக்கித்துக்கொண்டு மலையையொத்தமதிலைக்கடந்துதனியேநடந்துபோய்ச்சரயுநதியைக்கிட்டினான்

உரைபெறுசீரரவிகுலத் தரசர்க்குவழிவழியே யுரிமையாய் சரயுவெனுங் தாதியரிச்சந்திரற்கு வந்தவினைதானேதெனா, விரைமலர்த்தாள் பூண்டுகிடந்தாற்றிடவுமிழிந்தேகி விரைந்துபோய்மேல், கரையணுகிவிரிமணலில் விரிமலர்கள்சொரியுநறுங்காவிற்புக்கான்

(இ-ள்) கீர்த்திபெற்ற சிறப்பையுடைய சூரியகுலத் தரசர்களுக்கு வமிசபாரம்பரியமாகச்சொந்தமாயிருக்கின்ற சரயுநதியென்கிற தாதியானவள் இந்த அரிச்சந்திரமகாராஜனுக்குவந்த இந்த விதியானது எவ்விதத்தினாலேயென்று அவனுடைய மனங்கொண்ட தாமரைப்போலும் பாதங்களைப் பிடித்துக்கொண்டு கிடந்து அழும்படி அந்தநதியிலே யிறங்கிப்போய் விரைவிலேசென்று பின்புகரையேறி விரிவாய்க்கிடக்கிறமணலெல்லாம் மலர்ந்

தமலர்களை யுதித்துக்கொண்டு பரிமளிக்கின்ற ஒருசோலைக்குள்ளே போனான்-எ-று. (௰௨)

வரைக்கனகபுயத்தினனம் மலர்க்காவில் விரிமணன்மேல்வந்திருந்தான், விரைக்கரும்பூங்குழலாளுந் திருமகனுமிருபாலும் வீற்றிருந்தார், திரைக்கடலுட்பொருனெனப்போய்செங்கதிரோன் சென்றனனச் சென்றகாலை, யுரைப்பனவும் விளைப்பனவுமறிதுமென முனிவனும்வந்தொளித்திருந்தான்

(இ-ள்) பொன்மலைபோலுந்தோள்களையுடைய அரிச்சந்திரமகாராஜன் அந்தப்பூஞ்சோலைக்குள்ளே பரவிக்கிடக்கிற மணலின்மேற் போயிருந்தான்பின்பு பரிமளிக்கிறபூவையணிந்த கூந்தலையுடைய சந்திரமதியும் திருக்குமாரனும்வந்து இருபுறத்திலுமிருந்தார்கள் அப்போது அலைகளையுடைய கடலுக்குள்ளேஅவர்கள் துக்கத்தைப்பார்த்துப் பொறுதவனாகிப்போய்ச் சூரியன்மறைந்தான் அப்படிச் சூரியன்மறைந்தவுடனே இவர்பேசிக்கொள்கிறவைகளும் செய்கிறவைகளும் நாம் அறிவோமென்று விசுவாமித்திரரும் அங்குவந்து ஒருபுறத்திலேஒளித்திருந்தார்-எ-று

அக்காலத்தமைச்சரெல்லா மடல்வேந்தனடிபோற்றியரசேநீயினி, டெக்காலமெழுந்தருள்வதென்றுரைக்கவாங்கவரையிருகணோக்கி, முக்காலங்களுமுணருமுனிவனுக் கின்றியான் கொடுத்தவூர்தனனில், எக்காலமும்வருவதில்லை யென்றானமைச்சரெலாமேங்கிவீழ்ந்தார்

(இ-ள்) அப்போது மந்திரிகளெல்லோரும் அந்த ஜெயங்கொண்ட அரசனுடைய பாதங்களை வணங்கி அரசனே நீர் எப்போது திரும்பிவந்து எழுந்தருள்வதென்றுகேட்கஅதற்குஅவர்களைத்தன்னிரண்டு கண்களாலும்பார்த்து திரிகாலமும் தெரிந்த விசுவாமித்திரருக்கு இன்றுநான்கொடுத்ததான இந்தப்பழையதான ஊர்க்குள்ளே இனியெந்தகாலமும் நான்வருகிறதில்லையென்று சொன்னான் அதற்கு மந்திரிகளெல்லாம் கீழேவிழுந்து துக்கித்தார்கள்-எ-று. (௰௪)

முன்செய்ததீவினையோமுனிசெய்த வுபகாரமுன்னுண்டாகப், பின்செய்தகைம்மாறோபேரரசுகொடுத்தகன்றுபெருங்காடெய்தல், மின்செய்தநெடுவேலாய்மெய்த்தவனையாந்துரந்துவிட்டேமாகில், என்னசெய்வா னெனவுரைப்பார் யாம்போதும் வன்போருக்கெதிர்க்கவென்பார்

(இ-ள்) இப்படியாக முன்னேசெய்த பாவந்தானோஅல்லது விசுவாமித்திரமுனி நமதரசனுக்குமுன்னே செய்திருந்த உபகாரத்துக்காக இப்போது அதற்குப்பிரதியுபகாரமாகக்கொடுக்கலாயிற்றோ இந்தப்பெரிதான அரசாட்சியை முனிவனுக்குக்கொடுத்துவிட்டுப்போய் பெரியகாட்டில் வாசம்பண்ணுகிறதற்குயாது

காரணம் ஒளிவீசுகின்ற நீண்டவேலையுடைய அரசனே அந்தமெய்யர்னதவமுனிவனை நாங்கள்வேண்டாமென்று தள்ளிவிடுவோமேயானால் அவன்எங்களை என்னபண்ணுவானென்றுஞ் சொல்வார்கள் அவரிற்சிலர் நாங்கள்போகிறோம்அவனுடனேவலிதான சண்டைசெய்வதற்கென்பார்கள்-எ-று.

தோலேந்துமார்புமலர்த் தொடையேந்தக்கருப்பைமுடிச்சுருக்கத்தோடே, கோலேந்துங்குறுங்கைகதிர்வேலேந்தக்கனகமுடிகோடீரத்தின், மேலேந்தியிருடியிருந்துலகாளவவன் குடைக்கீழ்வீணையன்றன், காலேந்திவாழ்வதின் யாங்கனன்மூள் கலமையுமெனக் கட்டுரைப்பார்

(இ-ள்) இந்தவிசுவாமித்திரன் மான்றோல்பூணுவதானமார்பிலே பூமாலைபூணவுமதாப் பைகளைநுனியிலே முடிந்து சுருக்கமாயிருக்கிறதைப் பற்றுகிறகையிலே செங்கோல்கொள்ளவும்அந்தக்குருகுதலான கையிலேஒளிகொண்ட வேலாயுதங்கொள்ளவும் சுவர்ணகிரீடத்தை சடைமுடிமேல்கொள்ளவும் அந்தமுனிவனிருந்து உலகத்தையாள அவன்குடைக்கிழலிலே வியர்த்தமாக அவனுடைய கால்களைசுமந்து நாங்கள்வாழ்கிறதைப் பார்க்கினும்நாங்கள் நெருப்பிலேமுழுகுதலேதருமென்று உறுதியாகச்சொல்வார்கள்-எ-று. (யசு)

சடைபிடித்துங்கரம்பிடித்துந்தாள்பிடித்துமரவுரியாற்றறைந்துடுத்த,உடைபிடித்துமீர்த்தவனை யுயர்வனத்தி லிப்பொழுதே ஓட்டுகின்றோம், மடைபிடித்தவயல்சூழும் வளநாடு நீபுரக்கவருவாயென்று, படைபிடித்தமலர்க்கரத்தாற்பதம்பிடித்துவிறல்வேந்தர் பணிந்துவீழ்ந்தார்

(இ-ள்) சடையைப்பிடித்திழுத்தும்அவன்கையைப்பற்றியிழுத்தும் கால்களைப்பற்றியிழுத்தும் மரவுரியைமறைத்துஉடுத்தியிருக்கிற உடையைப்பற்றியிழுத்தும் அந்தவிசுவாமித்திரனைஇத்தக்ஷணத்துக்குள்ளே காட்டுக்குள்போகத்துரத்திவிடுகிறோம்நீர்பாய்கிறவழிகளையுடைய வயல்சூழ்ந்த வளமைபொருந்தின நாட்டைநீர் ஆளவரக்கடவீரென்று ஆயுதங்களைக்கொண்டமலர்போலுங்கைகளாலே அரசனுடைய கால்களைபிடித்து ஜெயங்கொண்ட அரசர்கள்வணங்கி விழுந்தார்கள்-எ-று. (யஎ)

படிபுரக்குமன்னவன்கேட்டிருநாததார்செவிபுதைத்துப்பாவமந்தோ, குடிகெடினுமுயிர்கெடினுங் கொடுத்ததுவாங்கேனென்றுகூறுமெல்லை, கடிபொழிலிற்காத்திருந்த கௌசிகனும்வந்தெதிர்த்தான் கண்டபோதே, அடியிணைகள்முடிசாத்தி யிருகரத்தாலுறப்பூண்டானரசர் கோமான்

(இ-ள்) அவ்வார்த்தை உலகத்தைஆளுகின்ற அரசன்கேட்டு இரண்டுகைகளாலும் காதுகளைமூடிக்கொண்டு ஐயோ இதென்னபாவம்என்குடிகெட்டாலும்என்னுயிர்போனாலும்நான்கொ

டுத்தவனை இனிக்கொள்ளேனென்று சொல்லும்போது அந்தம
னங்கொண்ட சோலையிலேமறைந்திருந்த விசுவாமித்திரர்வந்து
முன்னேநின்றார் அவர்திறக்கண்டவுடனே அவரிரண்டு பாதங்
களையுஞ்சிரசினமேற் சூடிக்கொண்டுபின்னும் தன்னிரண்டுகைக
ளாலும் அந்தப்பாதங்களை மிறுகமுடியாகப்பூண்டுகொண்டான்
அரசர்க்கரசனான அரிச்சந்திரன்-எ-று. (௰அ)

வெய்தாநீவேடுவரால் விலங்கனைத்துங்கொல்வித்தாய் வெகுண்
டேனத்தை, யெய்தாயென்மக்களையு மிசைகேட்டுத் துறத்தடித்
தாயின்றுமென்னை; வைதாய்நீயெனக்களித்தமண்டலத்தையான்
றாநீ வாங்காயாயில், செய்தாயின் றிருவகரத்த தீமையெல்லா
மென்னாமுனிசெப்பினனே.

இ-ள்) அப்போதுகோபமாக நீவேடர்களாலே இந்தமிருகங்
களையெல்லாங்கொல்லும்படிசெய்தாய் பின்னுங்கோபங்கொண்
டு பன்றியையுமெய்துவிட்டாய் யென்பெண்பிள்ளைகளையுமவ
ரிடத்திலே பாட்டுக்கேட்டு ஒன்றுங்கொடாமற் றுரத்திபடித்தா
ய் இப்போதுமென்னைத்திட்டினாய் இனிநீயெனக்குக் கொடுத்த
உலகத்தை நானேகொடுக்க நீவாங்கிக்கொள்ளாமற்போனால்இப்
போது இவர்கள்செய்ததீமைகளெல்லாம் நீபண்ணினவனே
யென்று விசுவாமித்திரர்சொன்னார். எ-று. (௰௯)

சிறுத்தவர்களறியாமற் செய்தபிழையத்தனையுஞ் செவ்வியோ
யநீ; பொறுத்தருளாயாமாகிற் பொறையென்னா முறையென்னா
புலமையென்னாம்,ஒருத்திடினும்வெறுத்திடினு முனக்களித்தவ
ரசுரிமை யொருகாலத்து, மறுத்தினியான்வாங்கேனென் றெடு
த்துரைத்தான் மன்னன்முனிவாட்டமுற்றான்.

(இ-ள்) சிறியோர்கள தெரியாமற்செய்தகுற்றங்கள் முழுதும்
செவ்வைக்குணத்தையுடைய முனிவரேநீர் பொருத்தருளல வே
ண்டும் அப்படிப்பொறுத்தருள் செய்யாவிட்டால் உம்முடைய
பொறுமைதான் என்னபயனைத்தரும் உம்முடையநீதிதான்என்
னபயனைத்தரும் உம்முடையஅறிவுதானென்னபயனைத்தரும் இ
னிநீர்என்னைக் கொள்கிறதாயிருந்தாலும் என்னைமுழுதும்வெறு
த்துவிடுகிறதாயிருந்தாலும்உமக்குக்கொடுத்தஎன்அரசாட்சியை
நானொருகாலத்திலும் திரும்பவாங்கமாட்டேனென்று உறத்து
ச்சொன்னான்அரிச்சந்திரன் அதற்குவிசுவாமித்திரர் மிகவும்வா
டுதலானார் -எ-று. (௨௰)

பொன்கேட்கப்பொன்னளித்தான்புவிகேட்கப் புவியளித்தான்
போதாதென்னா, என்கேட்கினுந்தருவ தில்லையெனும் புன்மை
யில னிடத்திலில்லை, முன்கேட்கப்பொருளாலே மொழிவழுவந்
தெய்துமது முடக்கமானால், பின்கேட்டாரிகழ்வார்கள்யாம்பொ
ருத்து மெனநினைந்து பேசலுற்றான்.

(இ-ள்) பொருள்கேட்கநாம்கேட்டபடியேபொருளுங்கொடுத்தான் உலகைகேட்க கேட்டபடியே உலகத்தையுங் கொடுத்தான் இவைகள்போதாமல் இனிநன்னுவாலேநான் எதைக்கேட்டாலும் கொடுப்பதில்லையென்கிற அற்பகுணம்இந்த அரிச்சந்திரனிடத்திலேகிடையாதுமுன்னேநாம்கேட்டுகொடுக்கிறேனென்று ஒப்புக்கொண்ட பொருளினாலேஇனியிவன் கொடுக்கமாட்டாமல் சொற்றவறுண்டாகும் அப்படிஅவன்கொடுக்காமல் கெடுத்தப்புமானால் பின்பு கேட்டவர்களெல்லாம் இவனை யிகழ்ச்சி பண்ணுவார்கள் ஆகையால் இப்போது நாம்பொறுத்துக் கொள்ளுவோமென்று ஆலோசித்துக்கொண்டு சொல்லலுற்றார்-எ-று.

ஒன்றுரைக்கநீகேளா யுண்மைக்கும் வண்மைக்குமுரியோ என்னை, தின்றுரைத்தபிழைபொறுத்தே னழல்வேள்வி முடித்திடுதற் கீவேனென்றனங், கன்றுரைத்தபொருளதனை யளிப்பாயோ வளியாயோ வரசவென்றான், என்றுரைத்தகௌசிகனையடிதொழுது வாய்புதைத்தாங் கிதுரைப்பான்.

(இ-ள்) ஏதேனுமொன்றை நான்சொன்னால் அதைநீகேட்கிறதில்லை'ஆனால்மெய்க்கும் கொடைக்கும் தக்கவனானவனே என்னைஇப்போது நீசொன்னகுற்றத்தை பொறுத்துக்கொண்டேன் அக்கினிமூட்டிச்செய்கிற யாகத்துக்காககொடுக்கிறேனென்று அப்போது அங்கேநீசொன்ன பொருள்களைககொடுப்பாயோ கொடுக்கமாட்டாயோ அரசனேயென்றுசொன்னார் என்றுசொன்ன விசுவாமித்திருடைய பாதங்களை வணங்கி வாயைமூடிக் கொண்டு அவ்விடத்தேஇதைச்சொல்லுகிறான்-எ-று. (உஉ)

உன்னுடனேயுரைத்த பொருளுனக்கடியேனுகந்தளித்த வுரிமை செல்வம், தன்னுடனே போனதென வுணர்ந்தேனாயினு முனிவாற்றருவாலென்றே, நின்னுடனேயானுமற்றசபதமினி மாறுவனோ நீயாள்விட்டால், பொன்னுடனேதருவனென்றான் புகரோனைய வணைழத்துப்பொருதிறனே

(இ-ள்) உம்முடனேநான் கொடுக்கிறேனென்று சொன்ன பொருள்கள் உமக்கு அடியேன்சந்தோஷித்துக்கொடுத்த எனக்குச்சொந்தமான செல்வத்துடனேபோயினவென்றெண்ணினேன் ஆனாலும்உம்முடைய கோபத்துக்கஞ்சிக் கொடுக்கிறேனென்று உம்முடனேநான்சொன்ன சபதத்தை இனித்தப்புவனோ தப்பமாட்டேன் இனிநீர் என்னுடனே கூடவரும்படி ஒருஆளை அனுப்பினீரானால் பொருள்கள்முழுதும்உடனே கொடுக்கிறேனென்றுசொன்னான் அரசன் அதற்கு விஸ்வாமித்திரர் சுக்கிரபகவானை கூப்பிட்டுச் சம்மதப்படுத்தினார் பொருள்வாங்கி வரும்படி.

உள்ளியதீவினையனைத்துந்தனித்திருத்தி வகைவகையேயுரைத்து
நீபோய், அள்ளியிடும்பொருள்கவரா தானையின்மேற்கவண்சிலை
போமளவுதந்தால், கொள்ளுதிநீபின்போனகூலியையும்பெறுதி
யெனக்கூறித்தீய, வெள்ளிதனையுடன்கூட்டி மீண்டுமழைத்தொ
ருவாய்மை விளம்பலுற்றான்.

(இ-ள்.) தான் எண்ணினதீயசெய்கைகளெல்லாம் அந்தச்
சுக்கிரனைத்தனியேஒருபுறத்திருக்கச்செய்துவகைவகையாகஇன்
னஇன்ன படிசெய்யென்று சொல்லிகூடப்போய்அவன்அள்ளிக்
கொடுக்கிறபொருளைவாங்காமல் யானையின்மேலிருந்து கவண்டு
கல்லெறிந்தால்அதுசெல்லுமளவுள்ள பொருள்கள் கொடுத்தால்
வாங்கிக்கொள்பின்புநீகூடப்போனதற்குள்ள கூலிப்பொருளும்
வாங்கிக்கொள்ளென்றுசொல்லிப்பொல்லாதவெள்ளியென்கிறசு
க்கிரனைக் கூடக்கூட்டிவிட்டு மறுபடியும் அவனைக்கூப்பிட்டு ஒ
ருவார்த்தைசொல்லுகிறார் விசுவாமித்திரர்-எ-று.

துன்றுபசிச்சரகுகனிதேடும் போதெனக்கினியசோறுவேண்டும்
என்றுமொழிந்திடினுமேலாது வேண்டாவென்னிவனூன்பெற்
றால்,அன்றுபொருடருமுனுணற்கலேலெனில் லெனத்தடுநம்மவ
திவந்தால்,பின்றவறைக்கரிகுறித்து மறுதினத்தினில் வாமனீவா
வென்றான்.

(இ-ள்.) இவன்மிருந்தபசிவந்தால் இலைகள் முதலானவை
தேடுகிறபோது எனக்குநல்லசோறுவேணுமென்றுசொல்லு அ
ப்படியே கொடுத்தாலும்போதாது எனக்குவேண்டாமென்று
சொல்லு இவன்சோறுகிடைத்துஉண்கிற அப்போதுபோகாதே
நில்லு ஏனக்குப்பொருள்கொடுக்குமுன்பு நீசாப்பிடக்கூடாதெ
ன்று தடுநாம் கொடுத்த கெடுவந்தால் அங்கேயிருக்கிறவர்களை
ச்சாட்சிவைத்துவிட்டு நீஅங்கேநில்லாமல்மறுநாளேஇங்கேவா
வென்று சொன்னார்——எ-று.

அடுத்திருத் திமனங்கலக்கி முனிக்களித்த மொழிமாறியளியே
னென்னு, எடுத்துலாகிலுன்னரசையான்வாங்கித்தருவேனெந்
நினைந்தானாகில், தகத்தழைத்துவருதிநமக்கதுபோதுமெனப்ப
லவுஞ்சாற்றக்கூட்டி, விடுத்தனன்விட்டரசனுக்கு விடைகொடுத்
துமாமுனிவன்மீண்டுபோனான்.

(இ-ள்.) பின்னும் நீ இவனோடுகூடியிருக்கச்சொல்லி மனத்
தைக்கலங்கும் படிசெய்து அரிச்சந்திரா விசுவாமித் திரர்க்குக்
கொடுக்கிறேனென்றுசொன்ன சொற்றவறிநான் கொடுக்கமாட்
டேனென்று ஒப்பிநீசொல்லையானால்உன் அரசாட்சியைநானே
வாங்கித்தருகிறேனென்று சொல்லு அதற்கு இவன்சம்மதித்தா
னேயானால் இவனைத்தடைசெய்துநம்மிடத்துக்குக் கூட்டிக்கொ
ண்டுவாநமக்குஅவ்வளவேபோதுமென்றுபலவகைகளுஞ் சொல்
லும்படிசுக்கிரனைஅரசனுடனேகூட்டிவிட்டுஅரசனுக்கும்விடை
கொடுத்துப்பெரிய விஸ்வாமித்திரர் திரும்பிப்போனார்-எ-று.

முனிமேவமன்னை தாழுமிசெநிறுசெயினைதினை முனிவன்றன்னிறை
நுனிமேருமலந்தினியா செனசமினியா செனவழுதகுழி யாருமின
டார் பணிசெறுறுனைபெறுந்து வைபசசொடிழும்மழுனவலும் பா
லன்றுனும், தனிமேயசச்சுண்டனைச்சனசத்திபிர்த்திபுமலசடம
யிற்செலறுன.

(இ-ள்.) அப்படி விசுவாமித்திரர்போகவே அரிச்சந்திரன்
பெரிதான செந்தசெல்வகளைப்பார்த்துதினி விசுவாமித்திரனுட
னே போகக்கடவதுக்குக்கலவாகவே உனக்குகலவாகவென
றசொல்ல அறுமுசொள்ளி அந்த சினசெறுமோ தாதிருப்பினு
க்கள் உடனேபணிக்காமந்து போருதாறுமுனனோகானோ சந்திர
மதியும் அரசனும்புத்திரனும் ஒன்றுமாகப் போமிதனைப்பார்த்
து மந்திரிமார்பசத்திவர்த்திசனப்பானும் அவர்களுடனே கூ
டிப்போருன்-எ-று.

வருமின்றமந்திரிமை மன்னவனுங்கண்டு விழிவழிநீர்வார
உருமியவ லைமெறுபுனி போகதான்மனத முனிவற்காதருன்
போ, அருமிநுகதைபுமிடத்தசனபோலக் கதிவடையாராருமில
லை நிருசாகமேசின்படென் றுரைத்திடது மனைமசச்சமொன்
செப்பலுற்றுன்.

(இ-ள்.) அப்படிக்கூடவருமிறமந்திரினை அரசன்பார்த்துக்
கண்களினிருந்த நீசொருக உருமின்ற இனிதான அன்புடனே
கூடிசென்றுடனே வசதாயாறுல் அங்கேவேதபாராயணசாவி
சவாமித்திரருக்கு உற்றவர்யாரிருக்கிறுர்கள் ஆகையாலே அவர்
க்கிட்ட விருசதா,வக்கசாட்சினை கடத்துவிக்கவல்லேப்போ
ல அங்கேஅறிவுள்ளவர்களொருவருமில்லை இனி நீ அழகுமிகு
த பட்டணத்துக்கே திரும்பிப்போவென்று சொல்லும்போதுஅ
ந்தமந்திரித்தலைவன் சொல்லத்தொடங்கினுன்-எ-று.

கோதிலவாப்பெருநகுணத்தாய் குற்றேவலிக்கெகொல்கொ
டியேன் செய்தேன், ஆதலால்வேது மருஞ்சுகதிற்பணித்தபணி
யார் தான்செய்வார், மாதாருடனேமகனே நின்னுடன்யான்
வாரேனுகில், எதிலாறுனேனு னென்றடிவேறுண்டமாமென்ன
வீழ்ந்தான்.

(இ-ள்.) குற்றமில்லாதபெரியகுணங்களையுடைய அரசனே
உம்முடையசிந்தனைவழியங்களெல்லாம் இவ்வளவுகெகெங்காலமு
மும் பாவியானநான்செய்துகொண்டுவந்தேன் ஆகையால் இனி
நீர்போகின்ற அருமையான பாலைவனமுதலிய காடுகளெல்லாம்
நீர்சொன்னவழியங்களையார் அங்கேசெய்வார்கள் எங்கள்தாயா
ன சந்திரமதியுமவர புத்திரனுக்கூடவாசான்மாத்திரம் வாராதி
ருப்பேனேயானல் உமக்கு அந்நியனானவனே நான் ஆவேன்
என்றுசொல்லி அடியேறு விழுந்த மரம்போலவிழுந்து அழுதா
ன்-எ-று.

இடிவிழுந்தமரம்போல வீழ்ந்தாற்றுயர்திரிசைபெருக்குமேனிப் பொடிதுடைத்துமுடிதடவிப் பொழிவிழிநீர்துடைமாற்றிப்பொருமலாற்றிக், கடிநகரின்வினைவிடுமுயிர்விடுமெனவக்கறிக்கலக்கிக்காமர், காடுவாழுங்கமனமகருக வுயிர்நடுங்க லாதேவருதியென்றான்.

(இ-ள்) அப்படி இடிவிழுந்தான மரம்போற்கீழேவிழுந்தாவிரலாபிக்கின்ற மந்திரியைப்பெயர்த்து அவனுடையமேனித்தாள்கடழுதிகளையெல்லாந் துடைத்து அவன் தலையைத்தடவிச்சிந்துகின்ற கண்ணீரைப்போக்கித்தாக்கித்தழுதிறதையுந் தீர்த்து இந்தக்காவலையுடைய பட்டணத்திலிருந்து அரசனைப் பிரிவேனேயானல் உயிரைவிடுவேனென்று கதறியழுது கலக்கங்கொண்டு உனதழகான உடம்புங்கெடமனமும் தியவுயிரும் அஞ்சிவருத்தங்கொள்ளாதே கூடவாவென்றுசொன்னான் அரசன்-எ-று.

வேறு,

வாழ்வினைவளர்ந்தபொழுதென்னின் மிகவாழ்ந்தாய்
தாழ்வினைமிகுந்தபொழுதென்ற னொடுதாழ்ந்தாய்
சூழ்வினைநமைக்கடிது சுற்றினவையெல்லாம்
ஊழ்வினையெனச் சொல்லியுடன் கொடுநடந்தான்

(இ-ள்) நான்வாழுங்காலத்தைப் பெறுவதான நல்வினைவளர்ந்தபோது என்னிடத்திலிருந்துமிகவும் வாழ்வையேயடைந்தாய் எனக்குத்தாழ்வாதான்கிறதீவினையுண்டானபோது நீயுமென்னுடன்கூடித் தாழ்வையேயடை ஆகையால் ஒருவர்எண்ணிச்செய்கிற செய்கைவந்து நம்மைவிரைவிலே சூழுமானல்அப்படிச்சூழுமவைகளெல்லாம் முன்னேயுண்டானகருமமேயல்லது வேறில்லையென்று சொல்லிக்கூடக்கூட்டிக்கொண்டுபோனான்.

தொடர்ந்தமதிமந்திரி தொடர்ந்துபிறகேக
விடந்திகழ்கடுந்தொழிலின் வெள்ளிமுனடக்க
வடந்திகழ்செழுந்தன மடந்தையொடுமன்னன்
நடந்தனனயோத்திவள நன்னகர்கடந்தே.

இ-ள் அப்படிபின்னேதொடர்ந்து போனமந்திரி தொடர்ந்தேபின்னேவரவும் விஷத்தைபோலகடியசெய்கையுடைய சுக்கிரன்முன்னேசெல்லவும் முத்துமாலைகள் விளங்குவதானசெழுமையான கொங்கைகளையுடைய சந்திரமதியுடனே அரிச்சந்திரமகாராஜன் அயோத்தியாகிய வளமைகொண்ட நல்லநகரைக்கடந்துபோயினன்-எ-று.

நண்பிறெடுமின்புரிசை நன்னகரைநோக்கி
விண்புலமெழுச்சமதில் வேலிதனைநோக்கித்
தண்புனல்வழங்கிடு தடங்களையுநோக்கிக்
கண்புனல்சொரிந்தழுது காரிகைநடந்தாள்.

(இ-ள்) பிரியத்துடன் நின்றுகின்ற மதிலையுடைய நல்லபட்டணத்தைப் பார்த்துக்கொண்டு ஆகாயவளாவியுயர்ந்துள்ள மதிலாகியவேலியைப்பார்த்துக்கொண்டும் குளிர்ந்தநீர்பாய்கிறதடாகங்களைப்பார்த்துக்கொண்டும் கண்ணீர் ஒழுகவிட்டழுதுகொண்டு சந்திரமதிநடந்தாள்

பாதகமலங்கள்பதறபசறிவைத்துக்
காதலிநடந்தநடைகண்டரசர்கோமான்
நாதனருளிப்படியிருந்ததெனநக்கான்
ஆதபனுமன்றெருமருஞ்சுரமடைந்தார்.

(இ-ள்) பாததாமரைகள் நடுக்கத்துடிக்க வைத்துவைத்து தனதுநாயகிநடக்கிறநடையைக்கண்டு ராஜாதிராஜனான அரிச்சந்திரன்ஈசுவரனுடையதிருவுளமிப்படியிருக்கிறதென்று சிரித்தான்பின்பு சூரியனும்வெப்பங்கொண்டுதோற்றுகிற ஒருபாலைவனத்துக்குள்ளேபோனார்கள்-எ-று.

படிசுடவடிக்கனைகல் பாரினெருநாய்நுனை
பொடிசுடவுடற்கனழல் பொங்குவெயின்மீது
முடிசுடமிகத்துடிதுடித்து முதிர்தீர்ப்புங்
கொடிசுடரெழுந்த படுகொள்கையினரானார்

(இ-ள்) கால்களிலேபூமிசுடவும் இவர்செல்லுகிற பூமியிலிருந்தெழுகின்ற நுண்ணியதானதூளிகள் உடம்பெல்லாஞ்சுடவும் கொதிக்கிறவெயிலானது தலைமேற்சுடவும் மிகவும்பதைபதைத்து முதிர்ந்த நெருப்பிலே பூங்கொடிகளானவை சுவாலைவீசக்கசக்குகிற கொள்கையையுடையவர்களானார்-எ-று.

அந்தநெடுவெஞ்சுரமுழன்றுழுதலகண்டே
மைந்தனையெடுத்து மதிமந்திரிநடந்தான்
பைந்தொடிபடும்பரிசுகண்டுயிர் பதைத்தே
வந்தெனதுதோளிலிவாவா வெனவுரைத்தான்

(இ-ள்) அப்படிஅந்தகொடிதான வெப்பங்கொண்டபாலைவனத்தைக்கொதித்துக் கிளருதலைக்கண்டு புத்திரனைத்தூக்கிக்கொண்டு மதிமந்திரியான சத்தியகீர்த்தி நடக்கலானான் அப்போதுசந்திரமதி படுகிறபாட்டைக்கண்டு அரிச்சந்திரன்உயிர்துடித்துப்பெண்ணேகிட்டவந்து எனதுதோளின்மேலேறிக் கொள்வாய் என்று அரசன்சொன்னான்-எ-று.

பூமகளுமண்மகளுமேறுதல் பொறுமல்
மாமுனிவனுக்குறவளித்த தின்மணித்தோள்
காமநெடுவேலிறைவ நாயினிகழ்பெண்பால்
ஆமெளியளோறிரகாழ்ந்தழிவனென்றாள்.

(இ-ள்.) அதற்குலட்சுமிதேவியும் பூமிதேவியும் எதிர்க்கொள்ளுகிறதைத் தாங்கமாட்டாமல் ஒருபெரியகிழவனை முனிவனாயுண்டாகத்தொடுத்து உம்முடைய அழகியதோள்களிலே அஸ்திரத்தைத்தருவதான வேலாயுதத்தையுடைய அரசனே நாயைப்போற்பிறராலே விழுந்தக்க ஒருபெண்பாலாகிய அபலையான என்னைநீரும் காட்டிலேயழைத்து அழிவுபடுவேனென்று சந்திரமதி சொன்னாள்-எ-று.

என்றுமயிற்கூறிட விரங்கியெழும்மன்னன்
நின்றுதலர்வெய்த விழிநீருதவுயிர்த்து
மன்றல்சொரிகின்ற குழலவல்லியினையாய்நீ
சென்றுழலுதிந்தவழியென் றழுதுசென்றான்.

(இ-ள்.) என்பதாகச் சந்திரமதிசொல்லலுமே துக்கித்துமகாவல்லவனான அரசன் அங்கேநின்றுதளர்ச்சியுண்டாகவும் கண்களிலே நீரொழுகவும் பெருமூச்சுவிட்டு பரிமளஞ்சிந்துகின்ற கூந்தலையுடைய கொடிபோன்ற பெண்ணே உனக்குளப்போதும்இந்தப்புத்தியே யிருக்கின்றதென்று அழுதுகொண்டுபோனான்.

சுட்டிடகறுத்துட லுளக்கமுறநீணு
விட்டெடுகொழுங்கனலினெய் சொரிவிதம்போல்
கட்டுறவிதேள்பணிகருங் குளவிபூரம்
மட்டறவழைத்துமுனி விட்டனன்வழிக்கே.

(இ-ள்.) கால்கள்சுடப்பட்டு உடம்புகளுங்கறுப்பாய் நடுக்கமுண்டாக நீண்டநாக்குகளை நீட்டி எரிகின்றகனமான நெருப்பிலே நெய்யை ஊற்றினதன்மைபோல் கட்டெறும்பு தேள்பாம்பு கறுத்தகுளவிபூரான ஆகிய இவைகளை அளவில்லாதபடிவரவழைத்து அந்தவழியிலேதோன்றவிஸ்வாமித்திரனுப்பினர்-எ-று.

பட்டமரமேடுசுழிபாறை வழியெல்லாம்
அட்டையொடுமுட்டையினை பாடரவமெய்ப்பக்
கட்டரவுதேளரணை கண்டவிடமெங்கும்
மட்டறநெருங்கியடி வைக்கவிடமில்லை.

(இ-ள்.) பட்டுப்போனமரங்கள் மேடுகள்சூழ்ந்தபாறைகள் ஆகியஇந்த இடங்களெல்லாம் அட்டைகளுடனே முட்டைகள் மேலே ஆடிக்கொண்டு அடைகிடக்கிற பாம்புகள்மொய்க்கவும் கட்டுவிரியன் தேள் அரணை ஆகிய இவைகள்பார்த்த இடங்களெல்லாம் அளவில்லாமல் நெருங்குதலாய் இவர்கள் கால்கள்வைக்க இடமில்லையாயின -எ-று.

---

* கட்டுறவி - கட்டெறும்பு.

நடந்தபடிபட்டற நசித்திடுமெறும்பர்
அடர்ந்தபல பூரமுடனட்டைகள்கடிக்கும்
தொடர்ந்துபலவாளரவு சுற்றியாதின்றிம்
கடந்தகவினும் பலகருங்குளவிகொட்டிடும்.

(இ-ள்.) இவர்கள் நடக்கிற காலங்கள்பட்டு அவ்விடத்திருக்குக்குமெறும்புகள் நெருங்கினபலவகைப் பூரானோடேயே அட்டைகளுங்கடிக்கும் கூடப்பற்றிவந்து பலவிதமான நீண்டபாம்புகள் கால்களிலேவந்து சூழ்ந்தாலேக்கடிக்கும் அதைக்கடந்துப் பாற்போனாலும்பலவகைக்கருங்குளவிகள்வந்து கொட்டிடும்-எ-று

அறப்பழுதுபட்டுள மழுந்துவதிலாவி
பிறப்பதினியென்றுமன மெண்ணினுயிர்போகா
வறுப்பதினிவந்தொரு மருந்துமிலையாகம்
கறுத்தழகுகெட்டிடதுடித் தனகறுத்தே.

(இ-ள்) அப்படிமிகவும் காயங்கள் உண்டாகி மனம்சஞ்சலப்படுகிறதினாலே உயிர்போகிறது இனி எக்காலமென்று மனமெண்ணினால் உயிர்போகிறதில்லை அப்படிக்கொதிப்பதான அவ்விடங்களிலே வேண்டினால் ஒருமருந்து மகப்படவில்லை அப்படியானதினாலே உடம்புகறுத்து அழகுங்கெட்டு உடம்பெல்லாம் துடிதுடித்தன பின்னும் கறுப்பாகின -எ-று.

மைநவிவிளங்கு விழிமங்கையெதிர்சீறிப்
பைநடுநடுங்க வருபல்லரவுகண்டே
மெய்நடுநடுங்கிடவரம்பையர் புதைத்தார்
கைநடுநடுங்க விருகண்மலர்புதைத்தார்.

(இ-ள்.) கருமைநவிலே விளங்குவதான கண்களையுடையசந்திரமதிதனக்கு முன்னே சீறிக்கொண்டுபடம்விரித்து துடிதுடிக்கக் கடிக்கவருகிற நச்சுப்பல்லையுடைய பாம்பைக்கண்டு உடம்புமிகவு நடுங்கும்போது ஆகாயத்திலுள்ளதெய்வப்பெண்கள்பயந்து இந்தஉத்தமிக்கிப்படிவரலாமோவென்றுதங்கள்கைகள்மிகவுநடுங்க இரண்டுகண்களாகிய மலர்களை மூடினார்கள்-எ-று.

நீருமிலைநெட்டிலைனி ழலிலைநீள்பேய்த்
தேரதனைநீரெனநடந்தடிசிவந்தார்
வேரினொடுவெந்தமரநீழலை விரும்பிச்
சேரினுமடர்ந்தரவு சீறியெழுமன்றே.

(இ-ள்.) அப்படியாகியகாட்டிலே ஜலமுங்கிடையாமல்நீண்ட இலைகளையுடைய மரத்து நிழலுமில்லாமல் நீண்டபேய்த்தேரா

கிய கானலைத்தண்ணீரென்று நினைத்துத்தொடர்ந்தோடிக் கால்கள்தி
வந்தார்கள் வேருடனேவெந்துகிடக்கிறமரத்துநிழலைவேண்டிப்
போனாலும் அங்கேநெருங்கிப்பாம்புகள்சீறிக்கடிக்கவருகின்றன

காவலனைப்பரிசுகண்டு கையறைந்தே
யாவரேழுபாரினிது பட்டவர்களென்று
ஏவரையுநோகிலனம் முனிவனையுநோகான்
தேவரையுநோகிலன் முந்தீவினையைநொந்தான்.

(இ-ள்) எல்லாரையுங்காக்கவல்லவனான அரிச்சந்திரன் அவ்விதங்களைக்கண்டு கையைத்தட்டி இந்தச் சத்தலோகங்களிலும்யார் இம்படித்துன்பப் பட்டவர்களென்று மும்மூர்த்திகளையுங் குறித்து வியசனப்படுகின்றிலன் அந்தவிசுவாமித்திரரையுநொந்துகொள்ளகிலன் முன்னேதான்செய்துள்ள தீவினைபயனிப்படிவிளைந்ததென்று வருந்தினான்-எ-று.

கடுந்தழலில்வெந்தெழி வெறுலைந்தரசர்கோமான்
கொடுஞ்சுரமகன்று குளிர்கோமதிபுகுந்தான்
நடுங்கிடவிலங்கின நலிந்திடுமெனக்கொ
கடுங்கதிர்பயந்தலை கருங்கடல்புகுந்தான்.

(இ-ள்.) அப்படிச் சுடுகிறநெருப்பிலே வெந்துதன்னழகெல்லாங்குலைந்து அரசர்க்கரசனானவன் அந்தக்கொடிதானபாலைவனத்தைகடந்துகோமதியாற்றினருகேபோனான் அப்போது அந்தமுல்லைவனத்துள்ள மிருககூட்டங்கள்நாமஞ்சுவதாக நம்மையும் அவ்வாறு வருத்தஞ்செய்யுமென்று வெந்தகடுமையான சூரியன்பயந்து மறைகிறதுபோற் கருங்கடலிலே போய் முழுகினான்

மைதிகழ்குறும்பொறை வனத்திலிழிமால்யா
றெய்தியதின்வண்டுறை யிழிந்துபுனலுண்டு
கைதவவினைத்துமிளிர் கண்மருசிழிந்தப்
பெய்தமணல்வண்டலிடை பேதையொடிருந்தான்

(இ-ள்.) மேகங்கள் தவழுவனவான மலைச்சார்பிலுள்ள முல்லைநிலத்திலே மலையிலிருந்திறங்கிவருகிற அந்தப்பெரிய ஆற்றைக்கண்டு அதனருகேபோய்அதந்த் அழகானதுறையிலே யிறங்கிநீருண்டு விசுவாமித்திரருடைய வஞ்சகங்களையெண்ணிக்கண்களில் நீரொழுக எக்கரிட்டுக்கிடக்கிறமணல்மேட்டினருகேயுள்ளசேற்றுநிலத்திலே சந்திரமதியுடனே இருந்திளைப் பாறினான்

அந்தவனமயத்தடவியும் பொழிலுநண்ணி
வந்தடிவருந்திய வருத்தமுணராமல்

கந்தமொருகாய் கனிகவர்ந்தருகுலந்தே
மந்திரியுமன்னவன்முன்வைத்தடிபணிந்தான்

(இ-ள்.) அந்தவேளையிலேகாடுகளிலுஞ்சோலைகளிலும்போய்நடந்துவந்துகால்வலித்திருக்கிற வருத்தத்தை நினையாமல் கிழங்குகளுடனேகாய்கள்பழங்களைக்கொண்டுவந்து சமீபமாயிமந்திரியான சத்தியகீர்த்தி அரசன்முன்னேவைத்துப் பாதங்களைவணங்கினான்-எ-று.

அக்கணமெடுத்திறை வனக்கனியுமெல்லாம்
மிக்கனதெரித்த மறை விப்பிரன்முன்வைத்தே
தக்கனவுரைத்தெனது சஞ்சலமுணர்ந்தே
இக்கனியெடுத்தினிதருந் தெனவிசைத்தான்.

(இ-ள்.) அந்தபணைத்தப்பொழுதிலே அவைகளைக்கொண்டு அரசனானவன் அந்தப்பழங்களெல்லாமிகுந்தருசியுள்ளபழங்களைத்தெரிந்தெடுத்துவைதிகப் பிராமணனாய்க கூடவந்திருக்கிறவனுக்கு முன்னேசாப்பிடுமென்று வைத்துத்தகுந்தவுபசாரங்களைச்சொல்லி என்னுடையசஞ்சலங்களெல்லாந்தெரிந்துகொண்டு இந்தபழங்களையெடுத்துச் சந்தோஷமாகச் சாப்பிடுமென்று மிகவும் இந்தவசனங்கள் சொன்னான்-எ-று.

பரிந்துறவிரந்திறைபகர்ந்தமொழிகேளா
விரிந்தநெடுவாயினிதழ்வெண்பலினதுக்கிக்
கரிந்திடுசினந்தழலிரண்டு கணினாலும்
சொரிந்துளம்வெகுண்டு சுடுசொற்கள்சிலசொன்னான்

(இ-ள்.) மிகவும்பரிவுடனே இதஞ்சொல்லி அரசன்சொன்னவார்த்தைகளைக்கேட்டு அகன்றவாயிலுள்ள நீண்டபற்களாலே உதட்டைமடித்துக்கடித்து எரிகின்ற கோபாக்கினிஇரண்டுகண்களாலுஞ்சிந்தலாகி மனத்திலேகோபங்கொண்டு சுடுவனவான கடுஞ்சொற்கள் சிலசொல்லலானானந்த சுக்கிரன்-எ-று.

வேறு.

நீயுமுனியுமிகழ்ந்து நெறிமுன்னுணர்ந்து
தோயுந்தயிர்நெய்பால் சோற்றோடருந்தாமல்
காயுங்கிழங்குங் கனியுமிலையுந்தின்று
வாயும்வயிறும்வளர்க்கிலேன் மன்னவனே

(இ-ள்). அரசனேநீயும் அந்தவிசுவாமித்திரமுனியும்பேசிக்கொண்டகிரமங்களை முன்னே தெரிந்துதோய்ந்துள்ள தயிர் நெய்யால் ஆகிய இவைகளை நல்லசோற்றுடனே கூட்டிச்சாப்பிடாமல் காய்களும் கிழங்குகளும்கனிகளும் இலைகளுந்தின்றுவாயையும் வயிற்றையும்வளர்த்துக்கொண்டிராதேபோனேன் அப்படிக்காய்

முதலியவற்றைமுன்னேதானே தின்றுபசியாறிப் பழகியிருந்தே ணேயானால் இப்போதுண்பேன் பழகாதநானெப்படிச் சோறுமு தலானவையில்லாமற் பசியாறுவேனென்று கருத்து-எ-று.

என்றுபுகரியம்பவேங்கிக் குலேகுலைந்து
நின்றுமொழிகுழறி நெஞ்சடைத்துவாய்வுலர்ந்து
சென்றுபணிந்து திருக்கரத்தாற்றாள்பூண்டு
குன்றுஞ்சிலையுங்கரைந்துருகக் கூறலுற்றான்

(இ-ள்) என்றுசுக்கிரன் சொல்லவே ஏக்கங்கொண்டு நடு ங்குதலாகி நின்றுவார்த்தைகள்குழறிமார்படைப்புண்டாகிவா யுங்காய்ந்து அருகேபோய் வணங்கித்தனதழகிய கைகளாலேபா தங்களை பிடித்துக்கொண்டு மலையுங்கல்லும் கரைந்துருகும்படி சொல்லத்தொடங்கினான் அரசன்-எ-று.

காடுநகருமுனிக்களித்து நானறியாக்
காடுதிசைநோக்கிவந்தமை நீகண்டிலையோ
வாடுந்தமியேன் வருந்திப்போய்ப்பாலடிசில்
தேடும்பரிகள்தேர் செப்பாய்கரவென்றான்.

(இ-ள்) எனதுநாட்டையும் நகரையும் அந்தவிசுவாமித்திர ருக்குக் கொடுத்துவிட்டு நான்தெரியாதவனுந்தரங்களை குறித்து வந்துவருகிறதைநீர் பார்த்திலிரோ இப்படிவாடியிருக்கிறதனிய னானான் வருத்தங்கொண்டுபோமப்பாலுஞ்சோறுந்தேடிக்கொ டுப்பதாகியவகை என்னிடத்துள்ளதோ சொல்லும்நான்தருகிற தற்கென்று சொன்னான் அரசன்-எ-று.

கன்னஞ்சாராய கௌசிகனெஞ்சம்போல்
வன்னெஞ்சோவுன்னெஞ்ச மென்னமயிலுரைத்
தன்னெஞ்சுருகியொரு சற்றேதயையாகித்
தின்னுங்கனியருந்தித் தெண்ணீருந்தான்குடித்தான்.

(இ-ள்) அப்போதுகல்நெஞ்சினரான விசுவாமித்திரருடை யநெஞ்சைப்போல் உம்முடையநெஞ்சம்வலியநெஞ்சுதானோவெ ன்று சந்திரமதியுஞ்சொன்னாள் அதற்குசுக்கிரன் தன்னெஞ்சிள கி ஒருவகைகொஞ்சதயவுண்டாகிதான் தின்னத்தக்கனிகமுதலிய வைகளைத்தின்று தெளிவானசலமுங் குடித்தான்-எ-று.

தாமந்திகழ்புயனுந் தையலாளும்மகனும்
மாமந்திரியு மலர்க்கரத்தாலேவாங்கித்
தேமென்கனியருந்திச் செய்வாய்வெளுப்பேறத்
தாமும்புனலருந்தித் தாரணிமேற்கண்வளர்ந்தார்

(இ-ள்) மாலைவிளங்குகின்ற தோள்களையுடைய அரசனும் சந்திரமதியும் மகனும்பெரியமந்திரியும் அந்தச்சுக்கிரன்கொடுத்ததைத் தங்கள்மலர்போலுங் கைகளாலேந்தி வாங்கிக்கொண்டு தேன்பொருந்திய பிருதுவானபழங்களை புசித்துச் சிவந்தவாய் வெளுப்புக்கொள்ளக் காங்கைநீங்கத் தண்ணீர்குடித்து மண்ணின்மேலே படுத்துநித்திரைசெய்தார்கள்-எ-று.

வெங்கண்மனை விழிமஞ்சனமாட்டக்
காந்தண்மலர்க்கைவழியே காரிகைகண்ணீரோடச்
சாய்ந்தவிடம்பார்த்துக் கடத்துமிடித்தும்மழைகாள்
சேர்ந்தவழிப்பெய்யுமீர் சென்மென்றனன்மாமுனிவன்.

(இ-ள்) அப்போது அரசன்மனைவியைப்பார்த்துத்தன்கண்ணீராலே திருமஞ்சனமாட்டவும் காந்தண்மலர்போன்ற கைவழியே சந்திரமதிக்குங் கண்ணீரொழுகவும் அவர்கள்படுத்துத்தூங்குகிற சமயம்பார்த்து பின்னையும் இடித்துமேகங்களே நீங்கள்போய் அவ்விடத்திலே பெய்வதற்குப் போங்களென்றனுப்பினார் பெரியவிசுவாமித்திரர்-எ-று.

மண்டலமுமம்பரமுமைபோ லிருண்மூடி
அண்டபகிரண்டமதிர வெடித்திடித்துக்
கொண்டலடர்ந்து கொடுங்காலடித்துநவ
கண்டமதிரமழைதா ரூன்றிவீழ்ந்தனவால்.

(இ-ள்) அப்போது பூமியும் ஆகாசமும்மையைப்போல் இருள்மூடுதலாய் அண்டபகிரண்டங்களெல்லாம்நடுங்கி வெடிபட முழங்கிமேகங்கள்நெருங்கக்கொடிதான பெருங்காற்றும்வீசிநவகண்டமும திரும்படிமழைதாரை யூன்றுதலாய் மழைசொரிதலாயின-எ-று.

மங்கைநனைந்து மகனனைந்து மன்னனனைந்
தங்கைநடுங்கியடிநடுங்கி மெய்நடுங்கிப்
பங்கமதுபட்டுப் பற்கிடுகிடென்றடிப்பத்
துங்கமணிமுடியான் சுக்கிரனைப்பார்த்துரைப்பான்

(இ-ள்) அப்போது சந்திரமதிநனைந்து மகனுநனைந்து அரசனுநனைந்து அழகியகைகளுநடுங்கிக் கால்களுநடுங்கிச் சரீரமுநடுங்கிச் சேற்றிலே யழுந்தியழுக்காய்ப் பற்கள்கிடுகிடென்றுஅடிமோத அப்போதுஉயர்ந்த ரதநகிரீடாதிபதியான அரசன்சுக்கிரனைப்பார்த்துச் சொல்லுகிறான்-எ-று.

மாறுவதுமில்லை மழைதான்மறையோனே
ஆறுபெருகிடுமுனைப்பாற்பகுத்துமெனச்
சீறுமரவேபோற் சினத்துநீர்செல்லுமூர்
தோறும்வரவெனக்குக்காரணமென் சொல்லுமென்றான்

(இ-ள்) ஓ பிராமணரே இந்தமழை பெய்கிற இருட்டிலே ஐயா
லே ஒருவேளை ஆறுபெருகிவந்து விடும் அதற்கு முன்னே நாம
போய்த் தூரத்திலேபடுத்துக் கொள்வோமென்று சொல்ல அதற்
குச்சீறுகிற பாம்பைப்போற் சீறிநீங்கள் போகிற ஊருக்கெல்லா
மநான்கூடவருகிறதற்குக் காரணமென்ன சொல்லுமென்று
ள்சுக்கிரன்-எ-று

எந்நகரிற்புக்கேகிட்டீர் வனத்தைவிட்டினிப்போர்
நன்னகரஞ்சேர்ந்தால்நாளை யுணக்கடிபேன்
சொன்னபொருட்டுருவென்னா போய்வருதிரென்று
மன்னவனுமந்திரியு மாதுமவன்றாள்பூண்டார்

(இ-ள்) அதற்குஐயா நாங்களெந்தவூருக்குப் போனோம் இ
ப்படித்துன்பமுண்டாகுகிற காட்டைவிட்டு இனி நல்ல ஒருநக்
குப்போனால் அன்றையதினமே உமக்குஅடி யேன்முன்னே சொ
ன்னபொருள்களைகொடுக்கிறேன்பரிசுத்தகுணத்தையுடை
யவரே கூடவாருமென்று அரசனுமந்திரியும் சந்திரமதியும் அந்
தச்சுக்கிரனுடைய காலைப்பிடித்துக்கொண்டார்கள்-எ-று.

வந்தடியிற்பூண்டவதற்கண்டு மறைமுனிவன்
முந்தமொழிந்ததற்கா வெள்ளிமுயன்றெழுந்தான்
சிந்தைமகிழ்ந்திறைவன்றே விகரங்கைபிடித்தான்
மைந்தன்றனையெடுத்து மந்திரிமுன்னேநடந்தான்.

(இ-ள்) அப்படிவந்துதன் கால்களைப்பிடித்துக்கொண்டது
தற்காகவும் அன்றையத்தினம் வேதமுனிவரான விசுவாமித்திர
ர்முன்னே சொன்னதற்காகவும்சுக்கிரன்முயனுலைக்கொண்டெ
ழுந்திருந்தான் அதுகண்டு மனமகிழ்ந்து அரசனும்வன் நாயகி
யைப்பற்றிக் கொண்டுசென்றான் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு
மந்திரிமுன்னே நடந்தான்-எ-று.

காலால்வழிதடவிக்கட்டைமுள்ளைவெருட்டி
ஆலாலங்காலுமரவின் றலைமிதித்து
மேலாருங்கீழாறு மின்னுலகத்தாலறிந்து
கோலான்முன்னூன்றிக் கொடுங்கானியாற்றிழிந்தார்

(இ-ள்) தங்கள்கால்களாலே வழிதேடிக்கட்டைகள் முள்ளுக
ள்வேர்கள் ஆகியஇவைகள் நஞ்சைக்கக்குகின்ற பாம்புக
தலைகளைமிதித்துக்கொண்டு மேன்முகமும்கீழ்முகம் மின்னல்வெ
ளிச்சத்தாலேதெரிந்து ஒருதடியைக் கொண்டூன்றியூன்றிஆழங்க
ண்டு அந்தக் கொடிதான கானயாற்றிலே இறங்கினார்கள்-எ-று.

சங்கத்தழுவத் தடவண்டலுங்கயமும்
அங்கங்கேசோதித்தடிவைத்துப

பங்கமிகப்பட்டுப் பல்காலுநீர்குடித்துச்
சிங்கப்புலிதிரியுந்திண் கரையிலேறினார்.

(இ-ள்) அந்தஆற்றிலுள்ள சங்குகல்கான்களிலே தடுக்கப் பெரியசேறுமேடும் பள்ளமுள்ளநீரும் அங்கங்கே கோலாலே பரிசோதித்தறிந்து கால்களைமெள்ளமெள்ள ஊன்றியூன்றிநடந்துசேறு உடம்பெல்லாம்பூசுதலாயப் பலதரமும்ஜலத்தைக்குடித்துச் சிங்கங்கள் புலிகள் திரிகிற கெட்டியான கரைமேலேறிப் போனார்கள்-எ-று

நீந்திப்பயமகன்று நெஞ்சிற்பயபாசன்றவ்
வேந்தனினிநாம் விடிந்தேகத்தக்கதெனத்
தோய்ந்தகலையாற்கழலாற் சொரிபடுநீர்
பாய்ந்தொழுகவாண்டோர் பழுவத்துறுகின்றார்.

(இ-ள்) அப்படி அந்தஆற்றை நீந்திக்கொண்டுபோய் நீரையும் விட்டுதங்களெஞ்சிலுள்ள பயத்தையும்விட்டு அரசனானவன் இனிநாம்விடிந்தபின்பு போகத்தக்கதென்றுநீரில்நனைந்த வஸ்திரத்துடனும் தலைகளுடனும் மேலேபொழிகிறநீர் உடம்பெல்லாம் வழிந்தோடவும் அங்கே ஒருகாட்டிலே வந்து தங்குவலானார்கள்-எ-று.

வேறு.

பாதபமுற்றேழுபைம்பொழிறன்னில்
ஏதமிகுத்தவெய்தியநாளில்
மாதவனேவியவன்கணபேயும்
பூதமும்வந்து புகுந்தனவன்றே.

(இ-ள்) மரங்கள்மிகுந்து வளருகின்ற அந்தப்பசியசோலையிலே துன்பம்அதிகமாக அவர்களிருக்கிறபோது அந்தமகாமுனிவரான விசுவாமித்திரனுப்பினவலிதான கூட்டங்கொண்ட பசாசுகளும் பூதங்களும் வந்துகூடின-எ-று.

மண்ணிலெழுந்துவளர்ந்த கருங்கார்
விண்ணிலெழுந்தனமேனியவிண்ட
புண்ணிரண்டுபதங்கபுரைந்த
கண்ணினவெண்ணில்கணங்கண்மலிந்த.

(இ-ள்) அவைகள் அந்தச்சோலையினிடங்களெல்லாம் எழுந்துயர்ந்து நிற்கின்றன பின்னும் கறுத்தமேகங்கள் ஆகாயத்திலேகிளர்ந்தாற்போலு நிறத்தையுடையனவாயிருக்கின்றனவெடித்தபுண்கள்போலவும் இரண்டுசூரியர்களெழுந்தாற் போலவும்கண்களையுடையனவாகக் கணக்கில்லாத பூதகணங்கள் எங்குமிருந்தன-எ-று.

பின்றியெழும்பிறையொத்தவெயிற்றால்
தின்றிதழ்வந்து தெறிக்கவதுக்கிக்

கொன்றுதிரங்கள்குடிக்குதுமென்றே
சென்றுபிடிங்கினதிண்கிரியெல்லாம்

(இ-ள்.) பின்வளைந்துதோன்றுகிற பாகிர்சக்கிரனை யொத்த பற்களாலே இதழைக்கடித்துப் பின்னும்பல்லும் பிறழுந்தோன்றவந்துகசக்தி உங்களைக்கொன்று உதிரங்குடிக்கிறோமென்று போய் மலைகளையெல்லாம் பிடுங்கலாயின-எ-று.

திண்டிறல்கொண்டுயர்செந்தலைமீதே
மண்டியெழுந்தவளர்ந்தசெழுந்தீக்
கொண்டலெழுந்துகொழுந்துசுருண்டே
அண்டமுகட்டையடைந்தனவன்றே

(இ-ள்) மிகுந்தபலத்தைக் கொண்டு உயர்ந்தசிவந்ததலைகள் மேலேநெருங்கியெழுந்து வளர்ந்துள்ளசெம்மயிர்களாகிய செழுமையாகியநெருப்புமேகமண்டலத்தளவுமுயர்ந்துகொழுந்துகள் சுருளுதலால் ஆகாயமுகட்டையுந்தாவின-எ-று.

ஐயனருந்தசையானயில்வேணிச்
செய்யனருந்தசைதின்குவன்யானித்
தையலருந்தசைதம்பினெனக்கிப்
பையலிளந்தசைபற்கெளிதென்னும்

(இ-ள்) இந்தச்சுக்கிராசாரியினுடைய அருமையான மாமிசத்தைநான்றின்கிறேன் இந்தச்சிவந்தநிறத்தையுடையவனுடைய அருமையான மாமிசத்தைநான்றின்பேன் நான் இந்தப்பெண்ணினுடைய அருமையானமாமிசத்தை எனக்குக்கொடுங்கள் இந்தச்சிறுபையனுடைய இளஞ்சதையானது பல்லுக்குமெதுவாயிருக்குமென்னும் பசாசுகள் ஐயனருந்தசை அரசனதுதசையென்றும் செய்யனருந் தசைமந்திரியினுடையதசையென்றுமாம். எ-று.

சென்மினடந்துசெறிந்திவர்தம்மை
கொன்மினெடுந்தசைகூறுறமென்று
தின்மினினத்தவைசெய்மினெனப்போய்ப்
பின்முன்னெருங்கினபேயொடுபூதம்

(இ-ள்) நடந்துகிட்டபபோங்கள்நெருங்கி இவர்களைக்கொல்லுங்கள் இவர்களுடையநெடிதானமாமிசத்தைப்பங்குபண்ணிமென்றுதின்னுங்கள்தங்கள் கூட்டத்திலே அப்படிச்செய்யுங்களென்றுசொல்லிக்கொண்டுபோய்ப்பின்னுமுன்னுநெருங்கின பசாசுகளுடனே பூதங்கள்-எ-று.

சிறப்பமைமேசெயொடுதேவியுமன்னனும்
உறத்தழுவித்தமுணர்சிவிடாமல்

அறத்திணைசற்றுணையாகநினைத்தே
இறக்கவலையாகிலிதென்னவிருந்தார்

(இ-ள்) செல்வத்திருப்பையுடையமின்னோயுடனே தேவியும்அரசனும் செத்தக்கருவிகொண்ட இவர்களெல்லாரையும் தப்பாமல் தருமதனைச்செய்கின்ற துணையாகவெண்ணி இனிச்சாவதே நமக்குநல்லதென்று கூடிக்கொண்டிருந்தார்கள்-எ-று.

சொல்லுவிரட்டமுனிசொல்லியவண்ணம்
கொல்கவிசாம்முயிர்கொல்லுதிரேலும்
அல்லலுழுங்களரும்பசியும்போம்
வில்லிலைவாளிலைவம்மெனவிண்டார்

(இ-ள்) முனிவர்சொன்னபடியே சொல்லுகிறபேய்களேபூதங்களே அந்தமுனிவர்சொன்னபடியே எங்களைக்கொல்லநினைத்தீர்களாகில் எங்களைக்கொல்லுவீர்களேயானால் எங்கள் துன்பமும் உங்களுடைய தீராதபசியுந்தீரும் எங்களிடத்திலே வில்லுமில்லை வாளுமில்லை வாருங்களென்று சொன்னார்-எ-று.

கொன்றிடமாமுனிகூறினனல்லன்
சென்றிடரிந்தனைசெய்தமைபோலும்
என்றவரங்களுமெண்ணிறுபேயும்
நின்றனகட்புலநீங்கியவன்றே.

(இ-ள்) கொல்லும்படி அந்தமாமுனிவன்சொன்னானல்லன் பயங்காட்டப்போகும்படி சொன்னதற்கு இவ்வளவுதுன்பம் பண்ணினதுபோதுமென்று பூதங்களும் கணக்கில்லாதிருந்த பேய்கூட்டங்களுமாகநின்றனவைகள் இவர்களுடையகண்களுக்குத்தோற்றாமல் விலகிப்போயின-எ-று

தங்குலவள்ளறளர்ச்சியுணர்ந்து
செங்கதிரோனுயர்தேரினில்வந்தான்
மங்குனெடுந்துளிமாரிபொழிந்த
கங்குல்விடிந்துகழிந்ததையன்றே.

(இ-ள்) தனதுகுலத்துப்பிரபுவானவனுடைய சோர்வைத்தெரிந்து சிவந்தசூரியன் உயர்ந்ததேரின்மேலேறி உதயமாயினன் மேகங்கள் பெய்கின்ற துளிகளாகிய மழைத்தாரையும் ஒய்ந்தன இரவும் விடிவாகிப்போயிற்று-எ-று.

அன்றுவிடிந்தபினந்தலம்விட்டே
சென்றுசெழுங்கனிதின்றயனல்லனிக்
குன்றுகடந்துகுளிர்ந்தமலர்த்தாள்
கன்றநடந்தனர்கங்கையடைந்தார்

(இ-ள்) அந்நாள்கழிந்தபின்பு அந்தவிடத்தைவிட்டுப் போய்ச்செழுமையாகவுள்ள சுரங்களையும் வனங்களையுங் கடந்துகொண்டு அப்பாற்போய மலைகளையெல்லாங் கடந்துசென்று குளிர்ந்தமலர் போலும்பாதங்கள் கன்றுமாகச்சென்று அழகிதாகங்கையாற் றைப்போய்ச்சேர்ந்தார்கள்-எ-று.

திரைசெறாறுமுருள்கள் செம்மணியாரம்
கரைசெறாறுமுருகாகைகாரகிலாரம்
நுரைசெறாறுமுருள்வனாறுள்ளனிநவன்பூ
விரைசெறாறுமுருள்வனவெற்மதுகைபே

(இ-ள்) அந்தக்கங்கையாற்றின்அலைகளெல்லாஞ் சிவந்தமணி களைப்புறந்தள்ளுகின்றன அந்தஆற்றின்கரையெல்லாங் கரைத்தஅகிலையுஞ் சந்தனத்தையும் அடித்துக்கொண்டிருக்கின்றன அந்தஆற்றினுரைகளெல்லாம் மெல்லிதானமலர்களைப்போற்றிரளுகின்ற அந்தமலர்வாசங்களெல்லாம் தேனைக்குடிக்கிறவண்டுகளை மேல்வீசுகின்றன-எ-று.

துளைமணிவென்ன பவளமணி துத்தி
விளைவணிவெயிலவிட வென்புனலூடே
களமணியொடு மதகரிமணியொடு
வளைமணிநிலவெழும் வாலுகமெல்லாம்

(இ-ள்) துவாரமிடத்தக்க வயிரத்துமெண்மையான பற்களையுடையயானைகளும் தெயல்திறமாகத் தோற்றுகின்ற பஷ்பராகத்தாலும் ஒளிவீச அந்தவெண்மையான கங்காசலத்திலே அழகுள்ளபவளங்களை ரத்தங்களும் மதயானைகளினுடையகொம்பிலுள்ளமணியும் சங்குமணியும் ஒளிவீசுவனவாயிருக்கின்ற அந்தமணற்குப்பல்களெல்லாம்-எ-று.

நளினமரத்த நறுங்கனிநாகத்
தளிரல்வப்புலரவமடக்கத்
தெளிந்திபுக்கணிசிறைகள் புடர்த்துங்
புளினமுயர்ந்தெழுபுளினமதேப்ப

(இ-ள்) செந்தாமரைமலர்களிலும் நல்லஇளமையான புன்னைவிருக்ஷங்களிலுமுள்ள வண்டுகள்ஒலிப்பது அந்தக் கங்கையினை யொலிகளையடங்கச்செய்ய அந்தத்தெளிவான ஆற்றிலேமுழுகிப்போய் அழகிதானசிறகைக்காயச் செய்கிறபட்சிக்கூட்டங்கள் உயர்ந்துவளர்ந்துள்ள அந்தநதியின் மணலுங்கூட்டுக.

வெங்கயமாமதமேயுநேறாயும்
கங்கைவளம்பலகண்டு மகிழ்ந்தே

செங்கைகொடன்னமெ சிறப்புறவெல்லாம்
மங்கைதனக்குலகுத்தரைசெய்வான்

(இ-ள்) வெவ்விதான பயிலமதக்கனே மிகவும் விசைதான ஆக்கைக்கையை யாற்றினுடைய அழகுகள்பலவுங்கண்டு சந்தோஷித்துதனனுடைய சிவதலைசயாலே அரசனுமவன் அங்குள்ள அலங்காரங்களையெல்லாம் சந்திரமதிக்கு வகைவகையாய்ச் சொல்லுகிறான் எ-று.

இந்திரசாபமிரண்டுசெடைத்த
செந்திருவாளுதலாய்தெளிதன்னீர்ச்
சந்தரமேவுசுழித்திரளோதின்
உந்தியையொப்பனவற்றிடைகாணாய்

(இ-ள்) இந்திரவிற்பகலிரண்டைக் கொண்டவட்டங்கிடுபோலும் ஒள்பொருந்தின செந்நிறமுடையவளே இந்ததெளிவாகிய நல்லஜலத்திலே அழகுபொருந்தினசுழிகள் ஒப்பற்ற உனதுந்தியையொப்பாகச்சுழிக்கின்றனபார்-எ-று.

புள்ளியெழுங்கரிபோய்புனலூடே
புள்ளியெழுந்தவராமணியெல்லாம்
துள்ளியெழுந்தவிர்சோதிவிசும்பின்
வெள்ளியெழுந்தெனவீழ்வனபாராய்

(இ-ள்) மூக்கிலேபுள்ளிகள் தோன்றுவனவாவயானைகள் போய்விழுந்த அந்தநீரிலே நின்றுவாரி வீசினசங்கரதங்களெல்லாம் சிதறியெழுந்து விளங்குகின்ற ஒளியையுடைய ஆகாயத்திலிருந்து வெள்ளி உதிர்ந்தது போல் உதிர்கின்ற வற்றைப்பார்

விரித்திரைபுந்தியபெண்மலர்காலால்
வரிமணலூர்திவுதண்டலினூடே
பிரிவுறுசேவல்கள்பெடையெனவோடித்
தெரிவுறகின்றுதிகைப்பனகாணாய்

(இ-ள்) விரிவான அலைகளைக்கின்ற வெண்டாமரை மலரைத்தமதுகால்களாலேவரிவரியாகக் கிழித்துக்கொண்டமணற்சேற்றினிடத்திலேபிரிந்த ஆண்பட்சிகளான வைதுமதுபெட்டையென்று நினைத்தோடி அதுபூவாயிருக்கத்தெரிந்து நின்று பெட்டையைக்காணுமல் மயங்குகின்றவற்றைப்பார்-எ-று.

புண்ணியநீருறைபுள்ளினநம்மைக்
கண்ணிடைகண்டுகவெந்துபறப்ப
மண்டமின்றகலவானிடமுண்
டெண்ணிவிசும்பிலெழுந்தனபாராய்

இ-ள் அக்கபரிசுத்தமானஜலத்திலேசஞ்சரிக்கின்றனபட்சிக்கூட்டங்கள்நம்மைக்கண்டுலேகண்டுகலைந்தபறக்கின்றனவப்படிக்கெ

ன்றுக் இந்தப்பூமியைக்கிடமில்லை அன்றஆகாசமேயிடமாக இருக்கின்றனவென்று நினைத்து ஆகாயத்திலே யெழுந்து செல்கின்றனவாம்-எ-று.

கங்கையொருத்திசிலம்பணிகாலும
சங்கினிக்கதாழுந்தவர்வாயும்
செங்கயற்கண்களும்வெண்பளிங்கன்ன
கொங்கைகளுஞ்சதகோடிகள்பாராய்.

இ-ள்- கங்கையாகிய ஒருபெண்ணுக்குச்சிலம்பையணிந்தகால்களும் சங்குபோலழுந்த சழுக்குமபவளங்களாகிய சிவந்தவாயும் சிவந்தகயல்களான கண்களும் வெள்ளையான பளிங்குகளான குளிர்ந்தமலைகொங்கைகளும் நூறுகோடிகளாயிருக்கின்றனவாம்-எ-று

மூத்தவளிகொங்கையிரண்டுமுடனேக்க
பித்தனையப்பிசைகொயமன்னோத்தான்
இத்தனைகொங்கையுடைத்தருவென்றுய்
அத்தனைபெத்தனையாசைவிளைக்கான்

இ-ள்- மூத்தவளாகிய தனக்கிரண்டுதோன்றுதலாகிய் பசிவனைப்பார்வதிதேவிமிகவும் தன்மேலன்புகொள்ளச்செய்தான் மனைமிகுதியல்களான இவ்வளவுகொங்கைகளைக்கொண்டனளாதலாலே இந்தக்கங்காதேவி அந்தப்பரமசிவனுக்கு எவ்வளவு ஆசையை உண்டாக்கச்செய்யாள் அதிகஞ்செய்வாள்-எ-று.

மண்ணிலமிர்தமன்னனுலாக
ஒண்ணிலவொத்தொளிரொன்றுதன்மேருன்
பெண்ணிலிருந்தபெருத்தனமல்லாம்
எண்ணிலகொங்கைகளென்செயவென்றுல்

இ-ள்- இந்தவுலகத்திலே அருமையானதவத்தையுடைய அரசன் அப்படிச்சொல்லியபோ அழகான நிலவின்பொப்பாக விளங்குகின்ற அழகியநெற்றியையுடையசந்திரமதியானவள் பெண்களுக்கு வேண்டியனவாகியானதன்மைத்தபெரியதனங்களல்லாமல்களில்லாதனங்களைக்கொண்டதனுலேயாதுபயனென்றுகேட்டாள்-எ

ஒருமகவுய்யவளர்க்குமொருத்திக்
கிருமுலையுள்ளனவின்னமுதேகேள்
வருமுயிரெல்லாம்வளர்த்திடுமென்னேக
கிருமுலைபோதுமகோவிசைமென்றுன்

இ-ள்- ஒருபிள்ளைபிழைக்கும்படிவளர்க்கின்ற ஒருத்திக்கு இரண்டு தனங்களே உளவாகவேண்டும் இனிதான அமுதம்போன்றவளே கேட்பாயாக உலகத்திலே தோன்றுகின்ற உயிர்களெல்லாம் வளர்த்தற்கு

வளர்க்கப்பட்ட ஒருத்திக் கிரண்டுதனங்கள்போதுமா அளவில்லாத தனங்களைவேண்டும் நீசொல்வாய் என்றானரசன்-எ-று;

மங்கையுமன்னனுமற்றுமுளோரும்
கங்கைவளம்பலகண்டுநடந்தே
எங்கடவப்பயனெய்தியதென்று
அங்கணெடும்புனலாடினரன்றே.

இ-ள்- இப்படியாகச்சந்திரமதியும் அரிச்சந்திரனும் இன்னமுள்ளவரும்கங்காநதியினுடையவளமைகள் பலவுங்கண்டுகொண்டுபோய் நாங்கள்செய்ததவப்பயன் எங்களுக்கே லபித்ததென்று அவ்விடத்திலே நெடிதானநீரிலே ஸ்நானம்பண்ணினார்கள்-எ-று.

அருமறைநூல்வழியாடியபின்னர்
மருவியவண்டுறைமன்னவனேக
விரிபுனலன்னிலிழிந்துவிளைந்தே
கரையினைசலர்சொருகாவிலணைந்தார்

இ-ள்- அரிதானவேதசாஸ்திரப்படியேஸ்நானஞ்செய்தபின்பு தாங்கள் நீராடின அழகியதான துறையைவிட்டு அரசன்செல்ல அத்தவிரிவான நீரிலேயிரங்கி விளையிலே நடந்து கரைமேலேறி ஒருசோலைக்குள்ளே எல்லோரும்போய்ச் சேர்ந்தார்கள்-எ-று.

சோலையிலன்னவர்சோர்வொடுபுக்கார்
வேலைபுகுந்தனன்வெங்கதிரோனும்
காலையிலேகுதுமென்றுகணித்தம்
மாலையிலவ்விடவைகனன்றே

இ-ள்- அந்தச்சோலைக்குள்ளே அவர்கள்சொன்னவுடனே போய்ச்சேர்ந்தார்கள் கடலிலேபோய்ச் சூரியனுமறைந்தான் விடிந்தபின்பு போவோமென்று ஆலோசித்துக்கொண்டு அன்றிராத்திரி அங்கேதானே தங்கினார்கள்-எ-று.

அன்றிரவப்பொழிலவ்விடம்வைக
வன்றிறன்மாமுனிவஞ்சனையாலே
வென்றிமடங்கல்வியன்புலிவேழம்
பன்றியொடெண்குபடர்ந்தனவன்றே

இ-ள்- அன்றிராத்திரியில் அந்தச்சோலையில் அவ்விடத்தே தங்கியிருக்க மிகுந்தசாமர்த்தியத்தையுடைய பெரியமுனிவரானவிசுவாமித்திரருடைய கபடத்தினாலேஜெயம்பொருந்தியசிங்கம்பெரியபுலியானைபன்றியுடனேகரடி இவைகளெல்லாம்வந்து படர்தலாயின-எ-று

பொருப்பதிரப்பிளிறிக்கைபுடைத்தே
மருப்பைவிதிர்க்குமலைத்தகயங்கள்
செருப்புலிகோளரிசெங்கணும்வாயும்
நெருப்புகவந்துநெருங்கினவன்றே

இ-ள்- மலைகளதிரமுழங்கித்துதிக்கையைவீசிக்கொம்புகளை நீட்டிப்பொருதலாயினயானைகள் சண்டைசெய்கிறபுலிகளும் சிங்கங்களுமசிவந்தகண்களிலும் வாயகளிலுமநெருப்புச்சிந்தவந்துநெருங்கின-எ.

அன்றெயினத்தையறுத்தபழிக்குக்
கொன்றுநினைக்குருதிப்புனலுண்டு
தின்றுபெரும்பசிதீருதுமென்றே
நின்றுமொழிந்துநிறைந்தசெறிந்து

இ-ள்- அப்போது எங்களுடையகூட்டங்களையெல்லாம் நீகொன்றபழிக்காக இப்போதுன்னைக்கொன்று உன்னுதிரத்தைத் தாகக்குடித்து மாமிசத்தைத்தின்றுபெரிதானபசி தீர்க்கிறோமென்று நின்றுசொல்லி எங்குநெருங்கி நிறைந்தன-எ-று.

அன்னதுகண்டவருஞ்சிலர்தம்மைத்
தின்னுவதேயினிதென்றுதெளிந்தார்
உன்னியவெண்ணமுணர்ந்தவையெல்லாம்
மன்னியகானின்மறைந்தனவன்றே.

இ-ள்- அப்படிமிருகங்கள் வந்து கூடினதைக்கண்டு இவர்கள் எவ்வளவும் அஞ்சாதவர்களாய்த் தங்களைமிருகங்கள் கொன்று தின்கிறதே நல்லதென்று துணிவுகொண்டிருந்தார்கள் இவர்கள் எண்ணிய எண்ணத்தைத்தெரிந்து அந்தமிருகங்களெல்லாம் தாங்களிருக்கிறகாட்டிலே போய்மறைந்தன-எ-று.

நீதிவழாதவர்நீர்மையுணர்ந்தே
சாதிவிலங்குகள்சார்விடநண்ண
ஓதியதேவனுணர்த்தகுறிப்பால்
வேதியன்மற்றோர்விசாரமுரைப்பான்

இ-ள்- நீதிவழுவாத இவர்களுடையகுணங்களையெல்லாந்தெரிந்து பலசாதிமிருகங்களும் தாங்கள் சஞ்சரிக்குமிடத்துக்குப்போகக்கண்டு தனக்குவிசுவாமித்திரர் சொன்ன குறிப்பினாலே கூடவந்த சுக்கிரன் வேறே ஒரு ஆலோசனை இவர்களைப்பார்த்துச் சொல்லுகிறான்-எ-று.

மன்னவகேள்வினைவந்ததுசற்றே
இன்னம்வரும்வினையெல்லையிலாத
முன்னமுணர்ந்தமுனிக்களியேனென்
றுன்னாசெய்துதவுத்தமவென்றான்

இ-ள்- அரசனேகேள் இப்போதுசொஞ்சத்தியசெய்கைகளுண்டா யினுமினி இன்னமும வருவனவாகிய தீவினைகள் கணக்கில்லாதவை கள் வரும் ஆகையால் இப்படி தீவினைகள் வருமுன்னே தெரிந்துகொ ண்டு விசுவாமித்திரனுக்கு என் அரசாட்சியைக் கொடுக்கமாட்டே னென்று உன்னரசாட்சியை நீபோய் ஒப்புக்கொள்ளுகிறதே உத்தம மானகாரியமென்றுசொன்னான்-எ-று.

நின்பரமீந்திலன்யானென நிற்றல்
என்பரநின்னரசெய்தலளித்தல்
அன்பமுணர்ந்திவைசொல்லறுணிந்தேதன்
பின்பயில்வேலவனீருதியென்றான்

இ-ள்- பின்னும் கொடுக்கவேண்டிய பொருளைக் கொடுக்கமாட்டே னென்றுசொல்லுகிறதொன்றே உனக்குச்சுமைஅதுசொன்னால்உன் னரசாட்சிஉனக்குக்கிடைக்கும்படிசெய்கிறதுஎனக்குச் சுமைநீங்கள் படுகிறதுன்பங்களெல்லாந்தெரிந்துநானிப்படிச்சொல்லுகிறதற்குத் துணிவுகொண்டேன ஒளிவீசுகின்ற வேலையுடைய அரசனேநான் சொன்னபடியேகேட்டுத் திருமமென்றுசொன்னான் சுக்கிரன்-எ-று.

அந்தணனவ்வுரைகூறிடவண்ணல்
மைந்தனுமங்கையுமற்றுமுளோரும்
நைந்தெனுடன்றொலைவெய்திலுநான்முன்
தந்ததுமாறிலனென்றுதணித்தான்

இ-ள்- சுக்கிரன் அந்தவார்த்தைசொல்லவே யரசனானவன் என்பி ள்ளையும் என்மனைவியும் இன்னமுள்ளவர்களும் வருந்தி என்னுட னேகூடமாறுகிறதானாலும நான் முன்னே தந்ததை இல்லையென்று சொல்லேனென்று சுக்கிரனையடக்கினான்-எ-று.

சொன்னவைகொள்கிலைசூழ்வினைபெய்தின்
அன்னவைபட்டறியாகுலமன்னா
என்னவிடிந்திருளேகலுமேகி
மன்னனடந்தனன்மற்றவரோடும்

இ-ள்- இடம்பருணைத்தையுடைய அரசனே நான்சொன்ன வார்த் தைகளை நீ ஒப்புக்கொள்ளுகிறதில்லை ஆனால் ஒருவர்உண்டுபண்ணி விடுகிற தீவினைகள்வந்தால் அவைகளெல்லாம் பட்டபின்புதெரிந்து கொள்ளென்றுசொல்லுமளவில் பொழுதுவிடிந்து இருள்கழிந்த வு டனே யரிச்சந்திரமகாராசன் அவ்விடம்விட்டுப்போனான் மற்றுமு ள்ளவர்களுடனே ஆகும் இடம்பம்- எ-று.

வல்லையிலேகிமறித்திரள்பொங்கு
முல்லைநிலத்திளைமுற்றுமகன்று

புல்லைமிசக்கொள்குறிஞ்சிபுகுந்தார்
செல்லையிலாமலையேறியிருந்தார்

இ-ள்- விரைவிலேபோய் ஆட்டுக்கூட்டங்கள் மிகுந்துமேய்கின்ற முல்லைநிலத்தை முழுதுங்கடந்து புலிகளைமிகவுமுடையதானகுறிஞ்சிநிலத்துக்குப்போய் அழகுள்ளகணக்கில்லாமலைகளெல்லாமேறியிருக்கிறார்கள்-எ-று.

வேறு.

அரிகளுமரிகளால்வீழ்ந்தழிந்தவெங்
கரிகளுங்கரிகளான்மடிந்தகாமலெறி
வரிநெடும்புலிகளுமகளான்மடிந்
திரிதருமுழைகளுஞ்செறிவைப்பெய்தினார்

இ-ள்- சிங்கங்களும் அந்தச் சிங்கங்களால் விழுந்து செத்துக்கிடக்கிறவெவ்வியயானைகளும் அந்தயானைகளாலே இறந்துகிடக்கிறகாளாலே அறையைத்தக்கவரிகளையுடைய நீண்ட புலிகளும் அந்தப் புலிகளாலே அறையப்பட்டு ஓடுகின்ற யாடுகளும நெருங்கின காட்டுக்குள்ளேபோனார்கள்- எ-று.

நானமுகரந்தமுநாறுநாண்மலர்க்
கானமுமாரமுங்காகதுண்டமும்
பானமும்பார்த்தலின்முடங்குமபாய்கரித்
தானமுந்தெரிகிலார்தலைமயக்கமே

இ-ள்- சவ்வாதுமணமும் கஸ்தூரிமணமும் பரிமளிக்கின்ற அன்றுபூத்திருக்கிற புட்பங்களையுடையசோலைமசந்தனவிருட்சங்களும் அகிலவிருட்சங்களும் ஆகியமணங்களையநுபவிக்கிறதும் அநுபவிக்கின்றபாம்புகளின்மண்டலமும் பாய்கின்ற யானைமதநாற்றமும் வேறுபாடுதெரிந்திலர் எல்லாங்கலந்து நாறுதலினாலே-எ-று.

நல்லணியரம்பையர்விஞ்சைநங்கையர்
மல்லணிநெடும்புயமணாளர்தம்முடன்
புல்லிறுதிர்ந்தசெந்தருவின்பூக்களும்
பல்லவசயனமும்பார்த்துப்போயினார்

இ-ள்- நல்ல ஆபரணங்களையணிந்த அரம்பைகளும் வித்தியாதரப் பெண்களும்வலிமையைக்கொண்ட நீண்ட தோள்களையுடையதங்கள் நாயகருடனே அணைகிறபோது உதிர்ந்தசிவந்த கற்பகத் தருவின்மலர்களும் அவர்கள்படுத்திருந்த தளிர்கள்பரப்பின படுக்கைகளுங்கிடக்க அவைகளைக்கண்டுகொண்டுபோனார்கள்-எ-று.

அழிதருமிறாலுகுநறவுமாய்மலர்
பொழிதருபிரசமும்பெருகிப்பொங்கியே

வழிதருமருவிகள்கிலவணிமாவணி
இழிதருசோணமாநதியையெய்தினார்

இ-ள்- உண்டாக்குகிறதேன் கூட்டுகளினின்றுஞ்சிந்துகிறதேனும் வண்டுகள் தேடுங்களவான பூவினின்றுஞ் சிந்துகிறதேனும் பெருகிப் பொங்குதலாம வழிகின்ற அருவிகளையொப்பாகியபெரியமுத்துக்கள் ஒதுங்குகின்றசோணமாநதியைப்போய்ச்சேர்ந்தார்கள்-எ-று.

கடகரியிருதுறைக்கஞ்சமுத்தமும்
கடவரிபிழிதுறைச்சரிந்தசெம்பொனும்
படவரியிழிதுறைப்பதுமராகமும்
இடமறமினிர்வனவிரண்டுபாலுமே

இ-ள்-மதயானைகளிறங்குந்துறையிலேமலர்கிறதாமரைமுத்துகளும்பெரியசிங்கங்களிறங்குந்துறையிலேசரிந்து கிடக்கிறசிவந்தபொன் மணலும்படத்தையுடைய பாம்புகளிறங்குந்துறையிலேகிடக்கிற பதுமராகமும் இடந்தோன்றாமல் விளங்குகின்ற அந்த ஆற்றினிரு புறத்திலும்- எ-று.

பருமணல்வண்டலும்பரந்தசங்கமும்
கருமணற்புளினமுங்கடிகொள்சந்தனத்
திருமணமருவுநீர்ச்சுழிபுக்கெண்புனல்
வருமணிவரன்றியவாலுகங்களும்

இ-ள்- பருத்தமணலையுடையசேறும் அங்கே வருகின்ற சங்குகளும் கரியமணல்மேடுகளும் மணங்கொண்ட சந்தனவிருட்சங்களினுடைய நல்லவாசனைபரிமளிக்கின்ற நீர்ச்சுழிகளுமதெளிந்த நீரொலாதுங்குகின்றமணிகளைவாரிக்கொண்டுவந்து எக்கலிட்டவெள்ளைமணற்குன்றுகளும்-எ-று.

குரண்டமுமன்னமுங்குருகுநாரையும
திரண்டபோதாக்களுந்திகிரிப்புட்களும்
முரண்டநீர்முடுவலுமுதலைப்பட்டமும்
கரண்டமுங்கம்புளுங்கண்டகண்ணெலாம்

இ-ள்- கொக்குகளும் அன்னங்களும குருகுகளும் நாரையும் திரண்டிருக்கிற போதாக்களும் சக்கரவாகப்பட்சிகளும்மாறுபட்டிருக்கின்ற நீர்நாய்களும் முதலைக்கூட்டங்களும் நீர்க்காக்கைகளும சம்பங்கோழிகளும் ஆகிய இவைகளையே கண்டன இவர்களுடைய கண்களெல்லாம்- எ-று.

கால்களாமெய்கின்றகானபேதியின்
பால்களைந்திழிபுனற்பரப்பைநீந்திப்போய்

மேல்கரைவெண்மணற்பரப்பில்வேதநான்
னூல்கரைகண்டவனெய்தினெய்தினான்

இ-ள்- வாய்க்காற்கரைகளிலே மேய்கிற காட்டெருமைகளின்பால் மடியிலொழுகுகின்ற அந்தநீர்ப்பரப்பை நீந்திக்கடந்து சென்று அந்தஆற்றங்கரையின்மேல் வெள்ளைமணல் பரவிக்கிடக்கிற இடத்திலே நல்லவேதசாத்திரங்களின் கரைகண்டவனான அரசன் விரைவிற்போனான்-எ-று

அடர்ந்தபூஞ்சோலையினன்றுதங்கியே
விடிந்தபின்னவ்விடம்விட்டகன்றுபோய்
படர்ந்தவெங்கானமும்பருப்பதங்களும
கடந்துபோயமுனையின்கரையையேவினார்

இ-ள்- அங்கேயிருக்கிற பூஞ்சோலையில் அன்றிராத்திரித் தங்கிவிடிந்தபின் அவ்விடத்தைவிட்டுப்போய்ப்பரவுதலானவெவ்விய காடுமலைகளும் கடந்துசென்று யமுனாநதிக்கரையைப்போய்ச் சேர்ந்தார்கள்- எ-று.

எடுத்தமன்னனைத்துறந்திருடிதன்னுடன்
அடுத்தகற்பழகிதென்றவனிமங்கையைக்
கடுத்திடித்திறைவனைக்கடிதுமீள்கெனத்
தடுத்துவாறெத்துள்ளியமுனைதானுமே

இ-ள்- தன்னை நாளதுவரையிலுந் தாங்கிக்கொண்டிருந்த அரிச்சந்திரனை விட்டுவிட்டு ஒருமுனிவனுடனே கூடுவதான உன்கற்புநன்றாயிருந்ததென்று பூமிதேவியைக் கோபித்து இடித்துவிட்டு அரசனை நோக்கி நீசீக்கிரத்திலேதிரும்பிப்போவென்று அணைபோட்டுத் தடுத்த தன்மைபோலிருந்தது அந்தயமுனையாறு-எ-று,

ஈட்டினன்பொருள்கௌசிகன்கொளப்
பட்டனவதற்கிதுபகுதிகொள்கென
இட்டெனயமுனையாறியாணர்ச்சந்தகில்
மட்டறக்குவித்ததுமணியும்பொன்னுமே

இ-ள்- அடக்கஞ்செய்துவைத்திருந்த உனதுநல்லபொருள்கள் விசுவாமித்திரனாலே கொள்ளலாயின அதற்காக அதுஉனக்குக் கொடுக்கவேண்டியபகுதிப்பொருள் நீ ஒப்புக்கொள்ளென்று குவித்திட்டாற்போல் அந்தயமுனாநதி அழகானசந்தன விருட்சங்களையும் அளவில்லாத மணிகளையும்பொன்னையும் குவியல்செய்தது- எ-று.

கொழித்தசெம்மணிகளும்பொன்னுங்கோசிகற்
கழித்திடற்கெண்டடங்கானதாயினும்

எழிற்றவமுனிவனுக்கீந்தவெல்லையி
னாழிப்பொருள்கொளுந்தற்றனதென்றுன்னினான்

இ-ள்- அக்கணத்தில் அப்படி அலைகளாலெறிக்கின்ற சிவந்த மணிகளும் பொன்னும் விசுவாமித்திரனுக்குக் கொடுக்கவேண்டிய கடன் தீர்ப்பதற்கு எட்டிப்பங்கு உள்ளதாயிருந்தாலும் அழகான தவத்தையுடைய விசுவாமித்திரனுக்குக் கொடுத்த எல்லைக்குள்ளான பூமியிலுள்ள பொருள்களை அவருக்குக் கொடுக்கிறது கடனென்று நினைத்தான் அரசன்

இன்னதுநிகழ்வுழியிறைவன்காளிந்தி
நன்னதிக்கரையினைநண்ணிவைகினான்
அரசிருந்துறைபடிந்தாடிவைதுமம்
மன்னனெதிர்கௌசிகன்வந்துதோன்றினான்

இ-ள்- இப்படியான அலங்காரங்கள் தோன்றவுங்கண்டு அரசனானவன் அந்தப் புண்ணியநதியினது கரையடைந்து பின்பு அந்த நதியிலே முழுகிஸ்நானம்பண்ணிக்கொண்டிருக்கிற அரசனுக்கு முன்னே விசுவாமித்திரர் வந்து தோன்றினார்-எ-று.

வேறு,

அரவுரத்தமணிதுற்றுதரபந்தனமழுத்தியதன்மேல்
மரவுரித்தொகைவிதிப்புறநெருங்கியமருங்குறவிடைக்
கரநலப்பிரணவத்தொழிற்சிவப்புடைகலக்கமுடிமேல்
குரவுகொச்சிவெள்ளெருக்கலரிகொத்திகழியுந்தலையவே

இ-ள்- எப்படிக்கொன்றும் பாம்புகள் பெற்றரத்தங்களைப் பதித்து உதரபந்தனமாகச் சூழ்ந்து அதன்மேலேமரவுரியினது கொசுப்பைக் கட்டின கட்டுமிகவு நெருங்கின இடையிலேதோன்றத் தொங்கவிட்டு பிரணவத்தையுச்சரித்தெண்ணுகிறகையானது காதிலேகூடவும் திருமுடிமேலேகுரவம்பூவும்- கொச்சிப்பூவும்- வெள்ளெருக்கம் பூவும் அலரிப்பூவும்- கொத்துகளாகிய கொன்றைப்பூவும் அசைவதாகவும்-

இடைநுடங்கியுடங்கியுமெழுந்துறவலைத்திடுசெழுஞ்
சடைகுலைந்துறவரிந்தணிதலந்தனிலவிழ்ந்தபுரள
வடநெடுங்கனலும்விண்டலமும்வெந்துகருகக்
கடைநெடுங்கொடுவிழித்தொறுமடுங்கனல்கனன்றெரியவே

இ-ள்- இடையானது துவண்டும் சுருண்டும் மீண்டுமிகவும் அலைதலையுடைய செழுமையான சடைகள் குலைந்துபோகவும் மறுபடியும் அச்சடைகளைவரிந்துகட்டுகிறபோதில் அழகியபூமியிலேவிழுந்துபுரளவும் நெடிதானவடவாக்கினியும் விண்ணுலகமுமண்ணுலகமும்வெந்துதீயவும் கடைக்கண்களிலே நீண்டகொடுமைகொண்ட கண்களைத்திறந்

துபார்க்குந் தோறும் கொல்லுவதான நெருப்புக் கொதிப்புக்கொண் டெரியவும்-எ-று.

படைபிடித்தணிசெறிந்தகைபவித்திரதருப்பைபநிறுவிக்
குடைபிடித்துவரமற்றொருகைகுண்டிகைபிடித்துவாவே
மடைபிடித்தவயன்மண்டலமுமாநகரும்வண்பொருளுமுன்
கொடைகொடுத்தகருணைத்திருமுகக்குருசிற்குறுகினான்.

இ-ள் சௌமித்ராஜனை யிருந்தபோது ஆயுதங்களைக் கொண்டு மோதிரங்களான ஆபரணங்களணிந்திருந்த கையிலே பவித்திரமுந் தருப்பையுங்கொண்டு குடையும்பிடித்துக்கொண்டுவர மற்றொருகையிலே கமண்டலங்கொண்டு வருகிறவராய் நீர்பாயும் மடைகளைக் கொண்டவயல்சூழ்ந்த மண்டலத்தையும் பெரியபட்டணத்தையும் அழகிதானதிரவியமும் முன்னேதியாகமாகக்கொடுத்தகிருபைபொருந்தின திருமுகத்தையுடைய அரசனைக்கிட்டினார்-எ-று.

கண்டனன்கருணையங்கடல்கதிக்கெழுகௌசிகன்வரவினை
மண்டலத்தலைவர்மந்திரிகடன்பணிமறுத்தனர்கொலோ
தண்டமென்றவ்விசைபண்டொலிந்திருசரண்டழுவியே
கொண்டனன்புனலிரண்டுகணுநின்றுகுதிகொண்டொழுகவே.

இ-ள் கிருபைக்கடலான அரசன் கடுமையான வேகத்துடனே விசுவாமித்திரர் வருகிறதைக்கண்டான் கண்டவுடனே மண்டலிகரான அரசர்களும் மந்திரிகளும் நமதுஉத்தாரவைத் தடுத்துப் பேசினார்களோ அவர்களப்படிப்பேசினதுண்டானால் என்மேலே தண்டனையுண்டாகுமேயென்று மெலிவுகொண்டு அவருடைய இரண்டுபாதங்களையும்போய் பிடித்துக்கொண்டான் இரண்டுகண்களிலும் நீர்குதிகொண்டொழுக-எ-று.

எந்தநாயகவுனக்கெமர்கெடும்பிழைத்தனர்கொலோ
தந்தமாநிதியினிற்சிலகரந்துசிலர்தந்தவுளவோ
உந்தமேவலைமிச்சிலர்பிழைத்தெதிருரைத்தனர்கொலோ
வந்தகாரணமெடுத்தினிதுரைத்தருள்வருத்தமறவே.

இ-ள் எங்கள்தெய்வமே உமக்கு என்னைச் சேர்ந்த மந்திரிமுதலாயினோர் கெடுதானகுற்றங்களைச் செய்தார்களோ நான்கொடுத்த பெரிய திரவியங்களிலே சிலவற்றைமறைத்துக் கொண்டு கொடுத்தவையுண்டோ உம்முடைய ஏவலுக்குக்கலறுதலாக சிலர் அபராதிகளாய் எதிர்த்துப் பேசினவர்களுண்டோ நீர் இங்கே வந்தகாரணத்தை இன்னதென்று தெரியநன்றாகச் சொல்லியருளவேணும் உம்முடைய வருத்தந்தீர்வதாய்-எ-று.

இக்குவெக்கடமனைத்துட றளர்ந்துயிரிடைந்தனையென
தொக்கனன்மனதுநொந்துபடர்கிந்தனை தணிந்திடமுனி
தந்தநாடுநகர்தந்ததிலைதந்ததிலையென்றுமொழிதந்
தந்நாடுதனில்வந்தரசுகொண்டிறைநகவென்றருள்செய்தான்.

இ-ள் என்றுசொன்ன அதற்குஇந்தவெவ்விதான காட்டிலேவந்து உன்னுடைய உடம்புதளர்ந்துமனமும வருந்தினையென்றுதான்மனம்வருந்தினேன் இப்படி வருந்தினதுன்பம் என்மனத்தை விட்டுப்போகுமுன்னே நீகொடுத்ததாம் நான் கொடுத்ததில்லை நீரும்கொடுத்ததில்லையென்று ஒருவார்த்தை சொல்லிப்போட்டு அந்த நாட்டுக்குவந்து உன்பட்டணத்திலிருந்து அரசாட்சியைக்கொண்டு வாழக்கடவையென்று அருளிச்செய்தார் விசுவாமித்திரர்-எ-று.

எத்தகல்லுயிருமென்கிளைஞரின் றாயிருமன்னுயிர்களும்
நந்திறும்படைப்புத்தகத்திலிருந்திடினும்
முக்கண்ணவ்யரிதிட மொழிப்படியளித்தபொருளைத்
தக்கதில்லையெனவுன்றனைநீங்கின் றுனைசெயத்தருவதோ

இ-ள் அதற்கு அரசன் எங்களுடைய நல்லவுயிரும் என்உறவினருடைய இனியவுயிரும்கெட்டாலும ஒருவருடம்பு பசைக்க எங்களை நரகத்திலேகொண்டுபோய் விழுத்தினாலும் முன்னே பிராமணர்களெல்லாருமறிய உமக்குடைய சொற்படிகொடுத்த பொருள்களை உமக்கு முன்னேகொடுக்கவில்லையென்று நான்சொல்லத்தக்கதோ-எ-று.

கடனுமிட்டபசியைத்தணிவிதெனடுத்தபசிக்குநருநும்
மிடைவிட்புலிவிடைவிலெனகவினுமிழிக்கவென்
றடிகளிற்கரமிறுக்கினனிறுக்கிடமறுத்தரசன்முன்
கடியதொற்கொடியினைக்கெகாசிகப்பெயரினன்கழறுவான்.

இ-ள் பாதத்திலேவிட்ட பிச்சையைப் பிச்சையிட்ட தன்கையாலெடுத்து வருந்துகின்ற பசிக்குச்சாப்பிடுகின்ற தரித்திரரை இந்தவுலகத்திலே நான் கண்டதில்லை அப்படிநான் கண்டதில்லை அப்படிநான்கொடுத்ததைத்திருப்பவுமானே அனுபவிக்கும்படி எனக்குஇப்படிஉத்தரவுசெய்கிறது தகாதகாரியமென்று அவர்பாதங்களிலே தன்கைகளிறுகப்பற்றிப் பிடித்துக்கொண்டான் அப்படிப் பிடித்துக்கொள்ளவே அக்கைகளைவிலக்கி அந்தஅரசனுக்கு முன்னேகொடுமையானசொல்லைக்கொண்டு கொடுமையுள்ளவிசுவாமித்திரர் சொல்லுகிறார்-எ-று.

தொக்கபற்பலவிலங்குகடொடர்ந்துடல்பிளந்துநலியும்
புக்கவிக்குடிஞையிற்பலபொருப்புமலிந்தால்
இகடத்தினிலவத்தின்வெளிதிற்புகுதறக்கதலதென்
மக்களைத்திருமணஞ்செய்துபுணர்ந்துநின்வளம்பெறுதியால்,

இ-ள் ஒருசேர்க்கையாகப் பலபல்வகைகளான மிருகங்களைத் தொடர்ந்து உங்களுடம்பைக்கிழித்து வருத்தஞ்செய்யும் நீங்கள் வந்திறங்கின இந்தஆற்றிலே பலபட்சிசாதிகளைக்கொண்டகாயின்குள்ள பழைகளும் அவ்வகைமிருகங்களையுடையவனே ஆகையால் இப்படிப் பட்டகாட்டிலே வீணாகவந்து அலட்சியமாக எண்ணிச்செல்லுதல் நகுந்தகாரியமென்று இனிஎன்பெண்மக்களைத் திருக்கலியாணம் பண்ணிக்கொண்டு கூடிஉன்னுடைய அரசாட்சியை நீயெபெற்றுக்கொள்

கண்ணிலாதமதனப்பிணிகருதிடைபொருந்திடுன்மனத்
தெண்ணிலாதுயிரிறத்திடுபிடக்கினும்பிக்கவுவர்
மண்ணிலாசையும்திருப்பொருவளத்திலிடைவைத்தமரும்
பெண்ணிலாசையுமொருத்தரைப்பிடித்துவிடுதற்குரியவோ.

இ-ள் கண்தெரியாமையைச்செய்கிறகாமரோகமானதுமனத்திலே அதிகமானால் மனத்திலேஒன்றையும் எண்ணவொட்டாமல் உயிரையழிக்கும் அல்லது அந்தக்காமத்தை மறைத்துக்கொண்டிருந்தால் துன்பப்படுவார்கள் ஆகையால்மண்ணிலுள்ள ஆசையும்திரவியமாகியபெரியதன்மையிலே கொண்டமனத்தாசையும் பெண்ணிடத்திலேகொண்ட ஆசையும் ஒருவரைக்கொண்டு திரும்பவிடக்கூடுமானவோ.

குக்கிபுக்கதொருக்கொடுகுடங்கருவருப்புவாவே
கக்கிவிட்டதுபுசிப்பவர்கடற்புவியிடத்திலனரோ
தக்கசொற்றிறமுரைத்திலைமுடிவைப்பெயர்கும்
இக்கருத்தையினிவிட்டுவிடுவிட்டுவிடெனக்கழறினன்.

இ-ள் என்றுசொன்ன அதற்குவயிற்றுக்குள்ளேபோனதுமறுக்குடனேகுடலுக்கு அருவருப்புத்தோன்ற உண்டுசெய்தவனைமறுபடியும் உண்கிறவர்கள் இந்தக்கடல்சூழ்ந்தவுலகத்திலுளராவரோ இல்லை ஆகையால் நீர்தகுதியான சொற்திறங்களைச் சொல்லவில்லை என்னைக்கொருவத்தை யுடையவனென்றுபெயரிடுகிறதிந்தநினைவைவிட்டுவிடுமென்று அரசன்சொன்னான்-எ-று.

இடுதலுங்கவிர்தலும்பிடமுறிக்கும்பசிக்கொடுதான்
விடுதலுங்கொடுதலுமவினையறிந்துவினையும்வினையறிந்த
கடுதலும்படுதலும்மளவறிந்துசெயலால்
கெடுதலுண்டறுதலுண்டவையறிந்துணர்தறிற்றிகிலரோ.

இ-ள் ஒருநாட்பிச்சையிடுவதும் பிச்சையிடாதிருக்கிறதும் கொடுக்குமிடமுந்தெரிந்து அதுசெய்தாலுண்டாகுகின்ற பயனுந்தெரிந்து அந்தக்காரியத்தைவிடவேண்டும் அல்லதுபற்றவேண்டுமதென்றவனாயு

தெரிந்து கைவரைக்கொல்லவேண்டும் இவ்வளவு ஆலோசித்துச் செய்தாலும் கெடுதல்வருகிறதுமுண்டு அந்தக்கெடுதி தீருகிறதுமுண்டு ஆகையா லக்காரியங்களெல்லாந் தெரிந்துணருவார்களேயானால் அவர்கள் கெடுதலடைவார்களோ அடையார்களென்றார் விசுவாமித்திரர்-எ

இந்தவந்தராமுக்கினியெனக்குரைசெய்பக்தருவதோ
வெந்தழற்குழியிலிட்டினும்வெட்டிவகிரிட்டிடினும்
முந்தவன்பினுமென்னுயின்முனிவிக்கடியனேன்
தந்துவிட்டபொருள்கொள்வதில்விருப்பமொருசற்றுமிலையே.

இ-ள் அதற்கு இந்தமறுமொழி இனிஎனக்குச்சொல்ல உமக்குத்தகுமோ இனிவெப்பமான நெருப்பிலே என்னைப்போட்டாலும்வெட்டியென்னைப் பிருபிளவுசெய்தாலும் முன்னேபிரியத்துடனே நீர் என்னிடத்திலே கோபித்துக்கோபத்துக்கஞ்சி அடியேன்கொடுத்துவிட்டபொருள்களை மறுபடியும் வாங்கிக்கொள்ளுகிறதில்கொஞ்சமேனு மெனக்கு விருப்பமில்லையென்றானரசன்-எ-று.

புனிதநின்சொலைமறுக்கவில்வெறுத்திடல்பொறுத்தருளெனப்
பனிதவழ்க்கபொழிற்படிவிழுந்தடிபணிந்துதொழும்
முனிவெகுண்டிருவிழிக்கடைசிவப்புறநெருப்பெழுமுனிந்
இனிவரும்பரிசுகண்டிடுகவென்றவனகன்றனனரோ.

இ-ள் பின்னும் ஓபாபரிசுத்தமுனிந்திரரே உம்முடைய சொல்லைநான் தடுத்துப்பேசுகிறதினாலே என்னைவெறுத்துவிடாமற் பொறுத்தருளவேணுமென்று அந்தப்பனிமொய்த்திருக்கிறசோலையிலே பூமிமேலேவிழுந்து அவனைவணங்கிக் கும்பிடும்போது விசுவாமித்திரர் கோபித்து இரண்டுகடைக்கண்களிலுஞ் சிவப்புண்டாகி மிகநெருப்புத்தோன்றப் பின்னுங்கோபங்கொண்டு இனிநடக்கிற காரியங்களைத் தெரிந்துகொள்ளென்று அவிடம்விட்டுப்போயினர்-எ-று.

மாதவன்கடிதகன்றிடவருங்கொடுமைக்கருதியே
சீதபங்கயமுகங்கருகிவெண்மதிதெளிந்ததுடனே
பீதலம்பெறுவதுமபுலைமடந்தையர்புணர்ச்சியுமலால்
ஏதுவந்திடினுநன்றெனவிருந்தனனிருந்தபொழுதே.

இ-ள் அப்படிஅந்த மகாதவத்தையுடைய விசுவாமித்திரர்விரைவிலே அவிடம்விட்டுப்போகையிலே இனிவருவதான கொடுமைகளை எண்ணிக்குளிர்ந்த தாமரைமலர்போலு முகங்கருத்துக்கருகுதலாய்ப் பின்னும் எட்டுப்பக்க தெளிவு தோன்றுதலுடன் உலகத்தைப்பெ

றுகிறதும் அல்லதுநீச்சப் பெண்களைக்கூடுகிறதும் ஆகிய இரண்டை-யுமல்லாமல் இனி எதுவந்தாலும் நல்லதேயென்று ஆலோசித்துக் கொண்டிருந்தான் அரசன் அப்படியிருக்கிறபோது-எ-று.

வேறு.

இறையவனின்னண மெய்துமெல்லையில்
நிறைமலர்ச்சோலையின் மறைந்துநின்றுழி
அறைகழற்கௌசிக னரசன்பானின்ற
மறையவன்வரும்படி மனத்தினெண்ணினான்.

இ-ள் அரசனானவன் இப்படியிருக்கிறபோது விசுவாமித்திரர் நி-றைந்தமலர்களையுடைய அந்தச்சோலையிலேமறைந்து நின்றுகொண்டு சத்தியாகின்ற வீரக்கழலையுடைய அரிச்சந்திரனிடத்திலே நிற்கிற பி-ராமணனான சுக்கிரனை தன்னிடத்திற்குவரும்படி மனத்திலே யெண்-ணினார்-எ-று.

மாதவனினைத்திட மறையவன்விரைந்
தாதரின்மயங்குறு மரசைநீக்கியே
ஏதமும்வஞ்சமு மிழைக்கவெண்ணிய
பாதகனின்றபூம் பழுவத்தெய்தினான்.

இ-ள் அப்படிப்பெரிய தவத்தையுடைய விசுவாமித்திரர் நினைக்க-வே சுக்கிரன்விரைவிலே அறிவில்லாதவர்போல மயங்குகின்ற அரச-னைவிட்டுப்போய் இன்னமும் அனேகந்துன்பங்களையும் வஞ்சனைகளை-யுஞ்செய்ய வெண்ணிக்கொண்டிருக்கிற பாதகனான விசுவாமித்திரர் இருக்கிறபூ-ஞ்சோலைக்குள்ளேபோனான்-எ-று.

வெஞ்சினக்கௌசிகன் வேதியன்றனை
வஞ்சினத்தழைத்துடல் வல்லநாவினை
நஞ்சினிற்கொடுங்கதே போலக்கன்கிடா
நெஞ்சுறுக்குறுவினை நிகழ்த்தியேகினான்.

இ-ள் வெம்மையான கோபத்தையுடைய விசுவாமித்திரர்சுக்கிர-னைக்கூப்பிட்டுத் தாம்பண்ணியிருக்கிற சபதம் நிறைவேறாத சொல்லுகிற-திலே வல்லதான பக்ஷகராகியவைகளிலே நஞ்சுதாற்போல் அவனு-டைய நன்மையில்லாமைக்கு வேண்டுஞ்செய்வினைகளை செய்யும்-படி சொல்லிவிட்டுப்போனார்-எ-று.

இன்னணங்கௌசிகனியம்பிப்போனபின்
மன்னனைமறையவன் வந்துநண்ணினான்
நன்னதிபெருக்குநீ ரற்றநாளிலே
அந்நதிதன்னைவிட் டகன்றுபோயினார்.

இ-ள் இப்படிப்பட்ட செய்கையை விசுவாமித்திரர் சொல்லிவி-ட்டுப்போனபின்பு அரசனைச் சுக்கிரன்வந்து கூடினான் பின்புஅந்தநல்-லநதியிலே பெருகுவதான நீர்வற்றியிருக்கிற சமயத்திலே அந்தநதி-யைக்கடந்துபோனார்கள்-எ-று.

கன்னியுமன்னனுங் காதன்மைந்தனும்
நன்னதிபமுனிவிட் டேகுகாளிலே
தென்னிறையருகணைக்கினர் சிவந்துகௌசிகன்
வன்னியைவருகென மனத்திலுன்னினான்.

இ-ள் சந்திரமதியும் அரசனும் பிரியமுள்ளபுத்திரனும் அந்தநதியாகிய ஆற்றைக்கடந்துபோகும்போது கவலையடைந்துக் கண் கள்சிவந்து விசுவாமித்திரர் அக்கினிபகவானை வரவேண்டுமென்று மனத்திலே நினைக்கிறார்-எ-று.

வருகெனநினைத்தலு மலத்தண்குழலில்
இருபிறப்பாளரால் விரைவினெய்தியே
அருமறையாதவ வென்னையழைத்ததென்
கருமமேதுரையெனக் கனல்வினவினான்.

இ-ள் வரவேண்டுமென்று நினைத்தவுடனே அந்த மலர்களையுடைய குளிர்ந்தசோலையிலே பிராமணரூபத்தை யுடையவனாகி அதிசீக்கிரத்திலேவந்து அரசனையே வேதங்களெல்லாந்தெரிந்த பெரியதவத் தையுடையவரே என்னையழைத்த அக்காரியம்யாது சொல்லு மென்று அக்கினிபகவான்கேட்டார்-எ-று.

கதிநெருப்பின்னனம் பகரக்கௌசிகன்
செகிவனம்பொடிபட வெரித்துச்சீறித்
தடுதிறன்மன்னனை யடர்த்துக்கொளாதிம்
சுடுகென்றுரைத்தன வலறிச்சொல்லுவான்.

இ-ள் கதிமையான அக்கினிதேவன் இப்படிச்சொல்லவே விசுவாமித்திரர் இந்தசெடிகாடுகளையெல்லாம் எரித்து நீறுபடுத்துவ னைகளைக் கொல்லவல்லனா அரசனை நெருங்கிக்கொன்றாய் இட னேகூடச் சுடவேண்டுமென்றுசொல்ல அக்கினிதேவன் சொல்லுகி றான்-எ-று.

கற்பினின்மிக்கவள் கன்னிகன்னெறிப்
பொற்பினன்மன்னவன் சுடவும்போதிலேன்
வெற்பினிற்றருந்தவ வெளிபடக்கினின்
சொற்படிமறுக்கிலேன் சுடுவன்யானென்றான்

இ-ள் சந்திரமதியோ பதிவிரதாதருமத்திற் சிறந்தவள் அரசனோ நன்மார்க்கமான அறநெறியிற்சிறந்தவன் ஆகையால் நான் அவர்களைச் சுடுகிறதற்காகப் போகமாட்டேன் மகாமேருவிலேநின்று அரியதவஞ்செய்கிறவரே இக்கெல்லைக்கெல்லா மடக்கக்கொண்டு உம்முடைய சொல்லின்படியே சுடுகிறேன் நானென்றுசொன்னான் அக்கினிதேவன்-எ-று.

இவ்வகைகேட்டபின் முனிவனேகினன்
அவ்வழிதீக்கடவுளைவிட்டிட
வெவ்வழன்மறிக்கின் திருக்கவேட்டனும்
நவ்வியன்றனொடு நடந்துபோயினன்.

இ-ள். இந்தப்படி அக்கினிதேவன் சொல்லக்கேட்டபின்பு விசுவாமித்திரர்போனார் அங்கே அந்தஇடத்தைவிட்டுத் தூரப்போய்க் கொடுமையான அக்கினிதேவன் வழியைமறித்துக்கொண்டு சஞ்சரிக்கிறதாகச்செய்தே அரசனும் மான்போற்கண்களையுடைய சந்திரமதியுடனே நடந்து அவ்விடத்திற்றுப்போனான்-எ-று.

வெறிகமழ்சோலையும்வெற்பும்வெண்டியா
எறிபுனற்பொய்கையுங்கடந்தேகியே
செறிதழைவனத்திடைச்செல்வச்சேவலிடைப்
பொறிகளுங்கரும்பெருர்புகைதோன்றின.

இ-ள். வாசனைபரிமளிக்கின்ற சோலைகளும் மலைகளும் வெண்மையான அலைகளைவீசுகின்ற தீர்த்தங்களும் கடந்துசென்று நெருக்கின தழையுள்ளவனத்திலே செல்லும்போது தூரத்திலே நெருப்புப்பொறிகளும் கருமையான பெரிதாகிய புகைப்படலமும் தோன்றலாயின-எ-று.

கண்டனர்புகைவந்தெழுந்தசாலையில்
மண்டலம்வளர்ந்துயர்வானத்தாவியே
அண்டரண்டங்களும்வெடித்தலாக்கதன்
மண்டலமெங்கணும் வளைந்துகொண்டதே.

இ-ள். அதைக்கண்டார்கள் அங்கேபுகைகிளம்பி யாதுகாரணத்தினாலேயென்று நினைக்குமளவிலே அந்தப்பூமியிலே நின்றுகொண்டு உயர்ந்த ஆகாயத்தையளாவி அண்டரண்டங்களெல்லாம் வெடிக்கும்படி முழங்கி அக்கினிகோட்டையாக எவ்விடத்தும் சூழ்ந்துகொண்டது.

இடம்பிறிதில்லெனவெண்டிசாமுகம்
படர்ந்தனவெங்கொழுந்துபாரிடக்
கடந்தவைத்தொகுதியைக்கடிதுகூடியே
தொடர்ந்தனகவனவனற்சுடரொழுங்கே.

இ-ள். கொஞ்சமேனும் இடமில்லையென்னும்படி எட்டுத்திக்கிடங்களும் பரவலாயிருக்க மிருகங்களெல்லாம்ஓடியொளிக்கும்போது அப்படிஓடுகிற அந்தக்கூட்டங்களை விரைந்து கேடத் தொடர்ந்து வருகிறதுபோல அக்கினிக்கொழுந்துவீசியது-எ-று.

அவ்வழல்வளைந்திடவரசர்கோமகன்
இவ்வழியெவ்வழியிலென்றுகூறுமே

செவ்வழலிற்படைக்கிரைவதேனொறு
வெவ்வழலினைபகீர்வெள்ளிகூறுவான்.

இ-ள். அந்த அக்கினி அப்படி நடந்துகொண்டிருக்கும்போது ராசாதி ராசனான அரிச்சந்திரன் இந்தநெருப்பு எந்தநெருப்பென்று கேட்டு மனதில் நினைக்க அக்கினியிலே பொருந்திநிற்கிற வேதாளகணங்கள் வந்து அரசனை நோக்கின்று செப்புமாமிம நெருப்புக்கொப்பான துணை லதுபுராடம சாத்திரம் சொல்லுகிறோம்-எ-று.

சண்டவெம்பசியினாலுன்றனாவியே
அண்டகோளத்தினையடர்க்குஞ்செந்தழல்
மண்டலத்தரசர்தம்மரபிலோருயிர்
உண்டதேதென்றுனை நத்துகின்றான்.

இ-ள். வேகமான வெம்மையான பசியினாலே கொதிக்கும் தாவி அண்டகோளங்களையும் நெருக்குகின்ற சொரூபமான நெருப்பு மண்டலத்துள்ள அரசர்குலத்திலே ஒரு உயிரை யாகத்திலே புசித்தின்று வினைபோகாதென்று சொன்னான்-எ-று.

ஒருவனையாருமிருமைபோகவிடுபார்த்து
ஒருவினைவிரப்பனிருமந்துபோமென
திருவையுமகிலயுமோக்கிச்செக்கவீர்
வரவரவுமனெதிர்பண்ணவெகிறான்.

இ-ள். ஒருவருடைய அரசையாவ உயிரைப்பறித்து இந்தநெருப் புக்களியுமெயானால் நான் ஒருவனை சகிப்பேன் நிற்கின்றதப்பிப்போ வதென்று சந்திரமதியின் புதல்வனையும் பார்த்துச் சிவந்த கண்களி லே நீரொழுக வொருபுற அந்தநெருப்புக்கெதிரே அரசன் சென்றான்;

புரவலனுமகேளப்புண்டனமச்சரோர்
உணர்ந்துகேட்டுமாறுகேணைமறைந்தவே
அரசழிவதாகலான் றமிற்றநீ
வினைவொடுகைவிடைவிழுவன்பாடுவனைக்குன்.

இ-ள். அப்போது அரசனுடைய பாரத்தைப் பிடித்துக்கொண்டி மந்திரியானவன் அரசனை நோக்கி சத்தியகீர்த்தி மந்திரம் கேளும் நாமொருவனிருக்கும்போது அரசன்றக்கிறது நீதியோவென்று நீர் நிற்றும நாமொருவனை விரைவுடனேபோய் அந்தநெருப்பிலே விழு கிறேனென்றான்-எ-று.

வேறு.

இன்னவையுரைக்கவன்னவுலினமார்பிருதப்புர்வி
மன்னவர்தம்மனமகிழ்ந்துவருமிறையுரைத்தான்

தென்னையுங்கேட்டேன்யானிறத்தினுமிறக்கவேண்டும்
என்னுயிர்விடாமலென்றுமேதுருபிர்விடுக்கின்றே.

இ-ள் அத்தவைரத்தைக்கேள மந்திரிசொல்லவே அவனைமார்புடனே இறுகத்தழுவிக்கொண்டு அரசனையல்லது மற்றொருவரைப்புரியா து இருக்கவேண்டுமென்று சொல்லக்கேட்டேன் ஆகையாலே அரசனைத் தான் நீ இறந்தால் உடனே சாகவேண்டும் அதற்காக உன்னுடைய உயிரைவிட்டுவிடாமல் என்னுயிரைவிடுகிறேனென்றுசொல்லத்-எ-று என்னையுமென்றுசொல்லச்செய்தேயுங் கேட்டேன்யான் ஐயா என்றவாறு.

இருவருமிறக்கநாமதெவ்வரையோர்பதியிற்சேர்க்க
ஒருதுணையுண்டோசொல்லாயுறுபொருளுணர்ந்தோயென்ன
மறுமொழிக்கொத்தார்மன்னன்மருங்கிலத்தாரத்துமெல்லத்
திருவெழில்லைமீன்கற்பிற்குருந்தீமதிசெப்பலுற்றாள்.

இ-ள் நாமிருவரும் செத்தோமேயானால் இந்த இரண்டுபேரையும் ஒருபதியிலேகொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமே அதற்காக ஏதேனு மொருதுணையுண்டோசொல்லு இவிலருங்காரியமுந்தெரிந்த மதிமந்திரியேயென்று மனம்பொருந்திய திவ்வியமானமாலையணிந்த அரசன் கேட்கச்சொன்னபோது லட்சுமிபோலும் அழகுடையவருந்ததிபோலும் கற்புமுள்ள இருந்தமான ஆபரணங்களையணிந்த சந்திரமதி சொல்லலானாள்-எ-று.

மாந்தராய்விழுக்கல்வாழ்தன்மாதருக்கென்றுமோனாள்
ஆய்ந்தநூலறிந்தோர்கூறக்கேட்டனனதனாலே
வேய்ந்தனைவிடாதுகாத்திபண்ணணியாளிவ்வெந்தீப்
பாய்ந்துயிர்விடுவேனென்றுபைந்தொடிமுந்திச்சென்றாள்.

இ-ள் புருஷராலே பெண்களுக்குச்சாவும் வாழ்வுமென்று முன்னொளிலேசாஸ்திரங்களை ஆராய்ந்துணர்ந்தவர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன் ஆகையால் பெருமைபொருந்திய சத்தியகீர்த்தியே நமது தலைவனை விட்டுவிடாமற் காத்துக்கொள்வாய் நான் இந்த வெப்பமானநெருப்பிலே விழுந்து உயிரைவிடுகிறேனென்று சந்திரமதிமுந்தி நடந்தாள்-எ-று.

அந்தவேளையிற்கனலறிச்சென்றடிவீழ்ந்தனன்றாய்
என்னைநீர்பயந்திருங்களிக்கனுக்குதவவன்றோ
முன்னையூழ்வினையினாலேமுந்தயான்றழலில்வீழ்வேன்
பின்னைநீர்விழுமினென்றான்பெருகுநீருவிக்கண்ணான்.

இ-ள் அப்படித்தாயானவள் போகும்போது புத்திரன் அலறிக்கொண்டுபோய்க் காலிலே விழுந்து தாயே என்னை நீங்களே பெற்றீர்

காரியார்த்தமாக உங்களுக்குவந்த துன்பந்தீர் குருவியாகவேண்டிய
வர்களோ பூர்வ சம்பாதனையாக முன்னேநானே நெருப்பிலேபோய்
விழுகிறேன் பின்பு நீங்கள் தப்பிக்கொள்ளுங்களென்று பெருமையுற்ற
சீர்திருவிபோன்ற மன்னர்மாபுடையவனுரை-எ-று.

தையலாள்கேட்டுத்தன்னை பணிக்குழலியோர்த்து
செப்பலாம்படைவிழுங்கானேசெல்லடைமறத்தாயல்ல
ஐயவித்துணிவுமித்தமறிவவெங்கடுத்தென்றுக்
கையினுன்முன்னிட்டேகாதித்தவன்வீருவிசொன்னாள்

இ-ள் சந்திரமதியானவள் அந்தவார்த்தையைக்கேட்டுப் புத்திர
னை அவனைத்தூக்கிக்கொண்டு உச்சிமுகந்து நூபனை இன்னமும் உன்னு
டைய சிவசதயாவிலின் தம்பனுமிருந்து நற்குண செழுமையானமு
லைப்பால் குடித்துக்கொண்டிருக்கிறாய் அப்படியே உனக்கு இவ்வளவுநா
ளிலும் இப்படிப்பட்டபுத்தியும் எப்படியுண்டாயிற்றென்று தன்னை
களால்முகத்திலே அடித்துக்கொண்டு கண்களிலே நீரானது அருவி
போலொழுகவிட்டுக்கொண்டு நின்றாள்-எ-று.

செய்தவப்பயத்தினாலே தோன்றியசெல்வம்செய்த
கைதவமுடையேமைக் கவிக்கொல்லுமல்லால்
உய்தகவுறவுமுள்ளம் வருந்திடுபொழுதேயென்று
மெய்துறந்தனைச்சென்று மூவியேட்டினையசொல்வாள்.

இ-ள். நாங்கள்செய்த தவப்பயனாலே தோன்றின புத்திரனே நா
மேதேனு மொருவருக்கு வஞ்சனைசெய்திருந்தோமானால் இக்கொடு
ம்புதுமைக்கொல்லுமேயல்லாமல் வேறொரு வகையாலும் நம்மைக்
கொல்லாது உனக்குமேலான போக்கினை உண்டாகத் தப்பிக்கொ
ள்ளவும் மனம்வருந்தாதே பயப்படவேண்டாம் நெருப்பில் வருகிற
அந்த நெருப்புமுன்னேபோய் விழவுகொண்டேனென்று இவ்வார்த்தைதை
சொல்லுகிறாள் சந்திரமதி-எ-று.

மறைவழிகடந்தேமாகில் வருவிருந்திகழ்ந்தேமாகில்
முறைவழிச்செய்யேமாகில் மூப்பரைவிராகிதேமாகில்
பிறர்மனைநயந்தேமாகிற் பிறர்மனம்நோவேமாகில்
குறைபலசெய்தேமாகிற் கொல்லெனக்கனலிற்பாய்ந்தாள்.

இ-ள். வேதநெறியைக்கடந்து நாங்கள் நடந்தோமானாலும் வருவ
தான விருந்தினரையிகழ்ந்தோமானாலும் நீதிவழியே அரசுநடத்தாதி
ருந்தோமானாலும் பெரியோர்களை யிகழ்ந்தோமானாலும்பிறர்மனையா
ளையிச்சித்தோமானாலும் பிறபுருஷனிடத்திலே மனதன்பு கொண்
டோமானாலும் இன்னம் வேறேயான சிலகுறைகள் செய்திருந்தோ
மானாலும் கொல்லக்கடவையென்று அந்தநெருப்பிலே விழுந்தாள்.

மதுரமென்மொழியாள்கற்பு கனலிலெவெள்ளைத்தீயின்
முதிர்தழலுகாவெனக்கனக் கவிகொறுமுதன்றுசெக்கி
அதிகுாலார்ப்புரழி யடக்கிவரிவெயிலெக்காலை
கதிரவன்வரவுகண்ட விருளெனைப்பதிர்த்ததன்றே.

இ-ள் மதுரமான மிருதுபாஷியாகிய சந்திரமதியினுடைய கற்பென்னுமனலிருளவிடவாக்கினியின் முதிர்ந்த நெருப்பானதுகண்டோ சுடுமென்று முழுங்கியெரிகிற அக்கினெருப்பானது தான் அடங்குகின்ற தாற்சந்தமாறி அடங்குதலாய் காலைநேரத்தில் உதயகாலத்துச்சூரியனைக்கண்ட இருள்போலாறிப்போயிற்று-எ-று.

மண்டமுறலலிர்தழுக்கில் வளமெல்லார்வாவியாதி
முண்டகக்குமுதநீல முளரிகணிறையப்பூப்பக்
கண்டகக்குளிர்த்துதற்பிற் காசினைப்புகழ்ந்துபோற்றி
வண்டினின்மணிகொழிக்கும் வாரணவாசிசேர்ந்தார்.

இ-ள் அப்படிநெருப்பாறி அந்தழுங்கிற் காடெல்லாம் குளமாகிவெண்டாமரை குமுதம் செந்தாமரை ஆகிய இவைகள் நிறையமலர்ந்த சோண்நக்கண்டு மனங்குளிர்ந்து பதிவிரதாசிரோமணியைத் தொழுது துதிசெய்துகொண்டாடி சற்றுபிரமெல்லாமுந்து மணிகொழிக்குமாகின்ற வாரணவாசியைப் போய்ச்சேர்ந்தார்கள்.

வாரணவாசிகண்ணி லஞ்சுறையநணின்மேவி
ஆரணெறிச்சாடி யக்கியசென்றபோகப்
பூரணக்கொள்கையதாம் பூரணயாயின்னேபோகக்
காரணத்தவைச்சதேருடிங் காட்டுக்கோட்டைச்சேர்ந்தான்.

இ-ள் அந்த வாரணவாசிக்குப்போய் அங்குள்ள அழகியகாவிரித்துறையமிழ்ந்து மேவுவாக்கப்படி நித்தியமாடி அக்கினியுங்கடந்துசென்று பூரணகுருவையென்ற கொள்கைகளையுடைய சந்திரமதியும் புத்திரனும் பின்னேவர தன்னிலிருந்தமாகத்தன் கூடவருகிறமந்திரியுடனே காசியெங்கிற நகரைக்கோட்டைச்சேர்ந்தானரசன்-எ-று.

நகர்நீங்கியகாண்டம் - முற்றிற்று.

ஆக விருத்தம் - கூ௱கூ.

ஏழாவது

காசிகாண்டம்.

மாவெலாமரிகள்பாட மகிழ்ந்துநல்வாசமன்னும்
பூவெலாஞ்செழுந்தேனக்கப் பூவையுங்கிளியுமேத்தும்

[illegible]
[illegible] செல்வர்.

இ-ள் [illegible] வயல்களெல்லாம் [illegible] பாதுக்கோலம் [illegible] மலர்களெல்லாம் செழுமையான தே ன்பெருகவும் [illegible] புட்களும் [illegible] பாடுகின்ற பாடல்க ளெல்லாம் [illegible] கேட்டு அவைகளுக்குப் பலவிதப்பாடல் [illegible] கொடுத்துக்கொண்டு [illegible] குவளைகளி [illegible] காட்டுகின்ற வளமையைச் சொல்லுவாம்-ஏ-அ.

தேன்புக்கோடுமேல் [illegible] போதும்
காலிபுக்குமுகப்போதுங் காய்ச்செந்நெல்லடை [illegible]
வாவிபு [illegible] வண்டாம்
பாவி [illegible] பரதவிக்கு [illegible].

இ-ள் சந்திரமதியும் அரசனும் [illegible] குவிக்க நீர்க்குளங் களும் [illegible] செந்தாமரைமலரும் நீலமல ரும் [illegible] தொண்டுசெய்ய [illegible] சந்திரமதியுடைய முகமும் [illegible] பரித [illegible] பாவி [illegible] பது-எ-அ.

வயலெலாஞ்செந்நெல் [illegible]
[illegible]
புயலெலாம்புகையபேக்கப் புகைமேலாம்பூமின்பூழில்
அயலெல்லா [illegible].

இ-ள் வயல்களெல்லாஞ் செந்நெற்களும் [illegible] [illegible] எல்லாம் [illegible] [illegible] [illegible] எல்லாம் [illegible] [illegible] [illegible] ருட்செக்கவின்றுசெல்லாம் [illegible]-எ-அ.

[illegible]
[illegible]
[illegible]
[illegible].

இ-ள் [illegible] களுடைய [illegible] களிலே பூமி [illegible] வாசஞ்வீ

மலிர்ந்த சிறிய நுனிக்கோட்டுக்களைத் தெறுகின்ற அலைகளும் [illegible] விசும் மீனினங்களும் வாசம் வீசும் அந்தக்குளங்களையும் [illegible] கும்-எ-று.

கரும்பினை யொடித்து மள்ளர் கடாவினை யடிக்கச் சீக்கி
ரெம்பினை முகந்த பெண்ணுகேளிராக்க திர்ப்பப் பிக்
திரும்பின திசைகடோறுந் திகழ்குலொற்விசறிந்துபன் மீன்
அரும்பியவாறு மந்நாட்ட சனியுமொத்தவன்றே.

இ-ள் கரும்பை யொடித்து உழவர் எருமைக்கடாக்களை அடிக்க நும் பினின்று தெறிக்கப்பட்டான முத்துக்கள் எல்லிடத்தும் வெடித்தான சக்கிரப்பிரபை வீசித் திரும்பிப் பார்க்கிற திசைகளெல்லாம் விளங் குகிறதிலே நெருங்கிப் பலநட்சத்திரங்கள் பூத்த ஆகாயமும் அந்த ஆகாய நாட்டிலுள்ள [illegible] டியையுமொப்பாயிருந்தன-எ-று.

கயிர்ந்த தென்றொக்கடாக்கள் கமலங்கள் சிதைத்தழுந்திச்
சாய்ந்தவக் கழிகளெல்லாஞ் சக்கினஞ் சரிவமேதி
தேய்ந்து புந்தடங்களெல்லாந் துள்ளுவளைக்காளை
பாய்ந்தவக் குழிகளெல்லாம் பழிவணபலவிறுமால்.

இ-ள் அப்படி உழவராலே அடிக்கப்பட்ட வெம்பிய கோபத்தையு டைய எருமைக்கடாக்கள் தாமரைமலர்களைக் கெடுத்து அழுந்து நசி ந்து சாய்ந்துகிடக்கிற கழிகளிலேயெல்லாம் சங்குக்கூட்டங்கள் சரிந் து கிடக்கின்றன அந்த எருமைகள் படிந்த பூங்குளங்களெல்லாம் இ ளவாளைமீன்கள் துள்ளுவனவாகிப் பாய்ந்த அந்தக்குழிகளெல்லாம் ப லாப்பழத்தேன் வந்து நிறைவனவாகும்-எ-று.

கடைசியர் குரவை கேட்டுக் கலங்கி மயங்கிக் காவி
னிடையிடை மறைவதே போவிரிவண்கிளிக ளெல்லாம்
மடையிடை சரியு முத்தம் வளரிளநகைக் கண்டஞ்சி
உடைபெருப்புனலில் ஒடியொளிப்பனபோன்றவன்றே.

இ-ள் அந்நாட்டிலுள்ள உழத்திகளுடைய குரவைப்பாட்டைக் கேட்டுக் கலங்கி மயங்கிச் சோலையிலுள்ள [illegible] விடங்களி லே மறைந்து கொள்ளுகிறதைப்போற் கிளிகளெல்லாம் ஓடலாயின கீர்மடைகளிலே ஒதுங்குகின்ற முத்துகள் அந்த உழத்திகளுடைய ஒளிவளருகின்ற இளமையான தந்தவரிசைகளைக் கண்டு பயந்து கரை யை உடைக்கிற பிரவாகஜலத்துக்குள்ளே ஓடி ஒளிந்துகொள்ளுகின் றன-எ-று.

இன்விளை மதுவுண் மள்ளரிந்துநாள்தொண்டுவித்தி
முன்விளை செந்நெல் கொய்துவருமுதன் முதிர்ந்துகாய்ந்த
பின்விளை கதிர்களாலைப்பெருக்கினின் முளைப்பவெல்லாம்
பொன்விளை குரம்பிற்றேன் றுய்வெள்ளிவால்போன்றவன்றே.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

தலைபடியவணங்கித் தொண்டுபின்பு வெளியேவந்து அரசர்க்கரசனா னவன் அங்கே ஒருவழிப்பட்ட கோரத்தைக்கொண்டிருக்கிற அம்பலச் சா வடியைப்போய்ச்சேர்ந்தான்

அப்பொழுதேபோதிசிப்புக்காரமைச்சனைக்காதுகன்னி
யப்பொருட்பண்டமூழ்ந்தொண்டெய்தினனிலைவைத்தென்கித்
செப்பருந்திறலின்மல்லியலூருக்கலையாப்படைத்தவன்னைத்
துய்ப்பனசெய்திருக்தாரிருந்தமிலிகழ்ந்தசொல்வாம்.

இ-ள். அந்தப்பெரியனைப் பொதுச்சாவடிக்குள்ளே போனவுடனே மந்திரியானவன் அரசைவிட்டுப்போய் எவ்விதமான பெரியவனாகவோ யனுக்கு செலவுகளைகளெல்லாம் வாங்கிக்கொண்டு வந்தான் வந் து ஒருதனைப்பொழுதுக்குள்ளே சமையல்செய்து சொல்லுதற்கரி தான லட்சுமிபோலிருக்கிற சாதிமதியானவள் தனதுதிருக்கைகளா லே படைத்தசோற்றைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள் அப்படியி ருந்தபின்பு நடந்தவைகளைச் சொல்லுகிறோம்-எ-று.

வேறு.

ஒருசெலமறுகாலையிலுறுதிவிளைகிளையாய்
பெருமால்கள் றுடையாளைப்புகசொன்றுகலைதனை
முநசரிகொடையாம்மறைமுனிகூறியபொருளை
தருமாறுமனெனவின்றனுதருமென்றுரசேந்தான்.

இ-ள். ஒருநாள்போக மறுநாளத்திலே மிக்கக்கொடுமைசெய்ய நி னைத்துப் பொருதுவரான உயர்ந்தபட்டத்தியானவளையுடைய அரச னுடனேகூடக்கொண்டு நிகவுங்கோபங்கொண்டிலைசினனம்மியாலே முடி யையுடைய அரசனை வவித்திரானவிசுவாமித்திரருக்குச் சொன்ன பொருள்களைக் கொடுப்பதுண்டானால் இப்போதே அதைக்கொடுத்து விடென்று கடிந்துகின்றான்-எ-று.

அதிரப்பொருகரவத்தொடுமுழல்கட்புகர்பலகால்
முதிரச்சினல்கதிக்கட்டுளைமொழிப்பொருடனுமைச்
சதுரொப்பதுவெனவெய்ந்துடறனரத்தினையினிறுக்
குதிரச்சிலமொருத்தமுறைகாமலிருந்தான்.

இ-ள். அதிர்ச்சியுமாகமிகுகின்ற முழக்கத்துடனே கொதிக்கின்ற கண்களையுடைய சுக்கிரன் பலதரமும் முதிர்ச்சியாகக் கிழித்துக்கொண்டு சொற்களைச்சொல்லும்போது இனிப்பொருள் தருவதானபக்தி யெப் படியென்று நினைத்து உடம்புசோர்வதாக இரண்டுகண்களிலும் முத் துப்போல் நீரொழுகக் கொஞ்சமேனும் மறுமொழி சொல்லாமலிருந்தா னரசன்-எ-று.

தொழியும்பழியுணரா முதிற்றுலையாக் குமிர்கடனீர்
பொழியுங்கயல்விழியாள் புனிதபொருள் [illegible] தனியா
தெழுகின்றதொரு [illegible] வெழிலொரு [illegible] வெவ்வேபோல்
அழுகின்றனன்றனதே [illegible] வலமுதலிலமொழியாள்.

இ-ள் அப்பொழுது சந்திரன்சொல்லுகின்ற பழிப்பு [illegible] கேட்டு அருப்புபோலுக் [illegible] முறிக்க [illegible] [illegible] நின்ற [illegible] திலோத்தமையென் [illegible] அரசனை [illegible] [illegible] பதுமை [illegible] [illegible] [illegible] [illegible] இருப்பிடத்திலை [illegible] [illegible] இலக்கினை [illegible] காசி [illegible] [illegible] மை தமயந்தியை நோக்கிச்சொல்லுகிறாள்-ஏ-று. ௯௬

பின்னைத்திபன்றிடையாய்கதிர்வெந்திபவிழிபாய்
வன்னெஞ்சுகொடுமுனிகண்முடை [illegible] துள்ளனனுமிகண்டான்
என்னெஞ்சமு முன்னெஞ்சமு பொன்றன்றியிரண்டோ
உன்னெஞ்சறியாதென்வயிறுள்ளே தாபொருளென்றான்.

இ-ள் பின்னைவந்துசவதானந்தையுள் [illegible] [illegible] முகத்துவதான கண்களையுமுடைய [illegible] [illegible] [illegible] டையவிசுவாமித்திரர் கடமுடையவசெல்வமாக [illegible] [illegible] கொண்டார் [illegible] [illegible] [illegible] [illegible] டாருவதுண்டாதில்லையே இனி [illegible] [illegible] [illegible] பொருள் என்னிடத்திலுண்டோவென்றுசொல்லுவ [illegible] [illegible]-று.

கல்லென்றுயர்சோனாய் [illegible] [illegible] [illegible]
இல்லென்பதுமுனிதன் [illegible] [illegible] [illegible] தோமோ
எல்லாந்தனியவித் [illegible] [illegible] [illegible]
வில்லென்றனக் [illegible] [illegible] [illegible].

இ-ள் மலையென்றுசொல்லலான [illegible] [illegible] [illegible] [illegible] பிடத்திலே பொருள்களில்லையென்பதும் [illegible] [illegible] த்திரர் ஆலோசிக்கவேண்டியசெயல் [illegible] [illegible] [illegible] த்துவருத்தஞ் செய்கிறானென்று ஆலோசிக்கிற [illegible] [illegible] க்கெடுவானநாள் பதிவிரதாதருமத் [illegible] [illegible] [illegible] [illegible] ன சந்திரமதியெல்லாளும் நான்முதலியபடி-ஏ-று. ௨[illegible]

அவ்வாறுரைசெயமன்னனனவையுஞ்சுதையுயிர்கொண்
டவ்வாறுமைமிலைகூ றுய [illegible] [illegible] யிடைந்தான்

வெவ்வாய்வடிவேலோயெமைக்கூறுகலரிதென்
றெவ்வாயெனின்விற்மோதமநூழின்வழியென்றாள்.

இ-ள் அப்படிச் சந்திரமதிசொல்லவே அரசனானவன் அலைவதான துறையுயின்றுக்கொண்டு எப்படி உங்களைவிலைகூறுவேனென்றுநினைத்தவருந்திப் பின்னிடும்போது வெம்மையாய்வந்த கூர்மைகொண்ட வேலையுடைய அரசனே எங்களைவிலைக்குவிற்கிற தருமமேயென்றுநீசம்மதியாயேபோனால் நம்முடையபூர்வதருமம் விட்டுவிடுமோவென்று சந்திரமதிசொன்னாள்-எ-று.

தேமென்கனிவாயாளிதுசெப்பச்செயலிதுவே
யாமென்றெழுவேவெள்ளியுமதுவேநல்லென்றான்
மாமன்னவன்மைந்தன்றலை மிசையுங்குலமடவாள்
பூமென்குழன்மிசையுஞ்சிறுபுல்வைத்துநடந்தான்.

இ-ள் தித்திப்புப்பொருந்தின மிருதுவான கனிபோன்றவாயையுடைய சந்திரமதிஇப்படிச்சொல்லவே இனிச்செய்யத்தக்க இதுவே சரியென்று எழுந்தபோதுக்கிறாம் அப்படிவிற்கிறதேசரிநன்மைதானென்றுசொன்னான் அப்போதுபோரசனானவன் புத்திரன்றலைமேலும் குலக்கொடியான சந்திரமதியினுடைய பூவையணிந்த மிருதுவான கூந்தல்மேலும் சிறுபுல்லை வைத்துக் கட்டிக்கொண்டு சென்றான்-எ-

மெள்ளச்செலநாணுஞ்செலவிரையச்செலவாய்மை
தள்ளப்புதல்வனையும்மயிறலையும்முனடத்தி
உள்ளத்துயரறிவாகியவுரனாலுகுவிழிநீர்
வெள்ளத்தினைபடையாவிறைவிலைகூறிநடந்தான்.

இ-ள் அப்படிமெதுவாசப்போகும்போது வெட்கங்கெட்டவனாகிவிரைந்துசெல்லும்போது வாய்ப்பேச்சுகள் தடுமாறவும் புத்திரனையும் மனைவியையும் முன்னே நடாத்திக்கொண்டு மனத்திலேஉயர்ந்த அறிவாகியபலத்தினாலே சிந்துகின்ற கண்ணீர் வெள்ளத்துக்குள்ளே முழுகாமல் அதைஅடக்கிக்கொண்டு அரசன்விலைகூறிக்கொண்டு காசிநகர்வீதியிலே சென்றான்-எ-று. உசு

தாலத்தரமுணராதுயிர்களரும்படிபலசெய்து
மேலைப்பழவினைபற்றிடவிற்கின்றனன்வினையேன்
வாலச்சிறுபருவத்தெனன்மரபிற்புதல்வனையும்
நீலக்கயல்விழியாளையுநிதியுள்ளவர்கொண்மின்.

இ-ள் உலகத்தினது தகுதிதெரியாமல் உயிர்தளர்வதாகப் பலப்படிசெய்த முன்கருமத்தினாலே துன்பமவந்துதொடர அதற்காகஇளமையானசிறிய பருவத்தையுடைய எனதுநல்லகுலபுத்திரனையும் நீலநிறத்துடனே சேற்கெண்டைபோன்ற கண்களையுடைய மனைவியையும்

பாவிநான் விலைசெய்கிறேன் பொருளுள்ளவர்கள் வாங்கிக்கொள்ளுங்கள் மேலைபழவினைப்பற்றி பூர்வகன்மந்தொடர்ந்து பிடிக்கின்க. உரு

சோதித்திருமுடியானிவை சொல்லச்சுடர்மாட
வீதித்தலைநின்றோர்சில மிகவும்மனமழலரப்
போதிற்றிருவனையாளிவ னையும்புதல்வனையும்
ஐதிப்படிவிலைகூறிட வெய்துந்திறமென்பார்.

இ-ள் ஒளிபொருந்தின திருமுடியுடைய அரசன்இப்படிச்சொல்லவே ஒளிபொருந்தின மாடவீதியிலேநின்று கண்டோர்கள்சிலர்மிகவுமனங்கொதித்து பூமேலிருக்கிறலட்சுமியை யொத்தவளாகிய இந்தப்பெண்ணையும் மகனையுமென்னகாரணத்தினாலே இப்படி விலைக்குவிற்க நேரிட்டதென்றார்கள்-எ-று. உசு

செருவுற்றணலைப்பொருகிருவொப்பவளிவளும்
மருவுற்றணிதெரியற்புய மதனொப்பவன்மகனும்
ஒருவற்குறுவிலையிற்பொரு ளுடையார்களுமுளரோ
இருவற்குறுவிலையிப்பதி யெவர்நல்குவரென்பார்.

இ-ள் யுத்தத்துக்குத்தகுந்த வேலையொப்பான கண்களையுடைய லட்சுமிக் கொப்பானவளான இந்தமனைவியும் மணங்கொண்டபூந் தாண்மாலையையுடைய மன்மதனையொப்பானவனான இந்தமகனும்ஒருவனுக்குப் பாத்தியமாகத்தக்க விலையுள்ளபொருள் கொடுக்கத்தக்கவர்களான செல்வர்களுமிக்குண்டோ இவ்விருவரிலே ஒருவருக்கே பொருள்வாங்கத்தக்கவர்கள் இங்கில்லையானால் இந்தஇருவருக்குந்தகுந்தவிலைகொடுத்து வாங்கத்தக்கவர்கள் இந்தவூரிலே யாருண்டென்று தம்மிலேவிசாரிக்கலானார்கள்-எ-று. உஎ

தவருக்கலதயிராவத மெனுநீள்சரசைவந்
தவரிக்கலதளகாபுரி யரசுக்கலதலைசேர்
உவரிக்கடல்புடைசூழ்விய னுலகத்திடையறிவார்
எவருக்கெனுதிவருக்குறு விலைநல்குவதென்பார்.

இ-ள் இவரை விலைக்குவாங்குஞ்சக்தி தவமுனிவருக்காயினுண்டு அல்லது ஐராவதமென்கிற நீண்டகைம்மலையையுடைய இந்திரனுக்குண்டு அல்லது அளகாபுரியையாளுகிற குபேரனுக்குண்டு அல்லது அலைகள்கூடின இந்தவுப்புக்கடல்பக்கத்தேசூழ்ந்த பெரியஉலகத்திலே மதிப்புத் தெரிந்தவராகிய யாராவேனெளிதாக இவ்விருவருக்குந்தக்கவிலை கொடுக்கப்படுமென்பார்கள்சிலர்-எ-று. உஅ

மண்மின்னென வருமென் மனைவியையும் மகனையுநீர்
கொண்மின்னென விலைகூறிய கோமானுரைகேளா
விண்மின்னென வெயிலும்பரி வென்னூலணிமார்பன்
கண்முன்னொரு மறையோனதி களவேடதிர்வந்தான்.

இ-ள் பூமி மின்னல்போல் வருகிற என்மனைவியையும் என்மகனையும் பொருளுள்ள நீங்கள் வாங்கிக்கொள்ளுமென்று விலைகூறிக்கொண்டு வருகிற அரசன்சொல்லைக்கேட்டு ஆகாயத்துள்ள மின்னற்போல் விளங்குகின்ற சேயிரக்கிரணங்களுடைய வெள்ளை முப்புரிநூலணிந்தமார்பையுடைய அரிச்சந்திரன்கண் முன்னே ஒருவேதப்பிராமணன் அதிகதிருட்டிக்கனகத்துடனே எதிரிலேவந்தான்-எ-று. ௨௯

என்சொல்லினை முன்சொன்னவை விற்றும்பகரெனவே
மென்சொல்லிளமைக்கதனை விலைகூறினனெனவே
மன்சொல்லின்சேயையு மடமாதையும் விற்கும்
பொன்சொல்லெனவிறல்வேதியன் மறையோனெதிர்புகலுவான்.

இ-ள் விலைகூறினவனையாது சொன்னாய் முன்னே சொன்னவைகளை இன்னமொருதரஞ் சொல்லென்று கேட்கவே அரசன் இந்தமிருபாஷியான இவளையும் இளமையான புத்திரனையும் விலைகூறினனென்றான் எனவே அரசனை சொல்லுமளவில் உன்பிள்ளையையும் பெண்டாட்டியையும் விற்பதானால் பொருள் எவ்வளவுசொல்லென்றுகேட்க அதற்கு வெற்றிவேலைக்கொண்ட அரசன் அந்தப்பிராமணனுடன் சொல்லுகிறான் மடமான் இளமான்போலும் விழியாள்-எ-று. ௩௰

களபப்பிடர்பிறைசேர்தென்னெறி தலைநிற்பதிசேர்போம்
அளவுக்கிருவிழிநல்கிட னதுவேவிலையென்றான்
உளதப்பொருண்முழுதும் மறைதுரையின்படி தருவேன்
தளவத்திருநகையாளொடு மகனைத்தரிதென்றான்.

இ-ள் யானைமுதுகின்மேல் நின்றெறிகின்ற கவணிலுள்ள கல்லுயர்ந்து போகுமளவுக்குச் சரியாகப் பெருகானதிரவியங்கொடுத்தால் அதுவே நல்விருவருக்கும் விலைப்பொருளென்றுசொன்னான் அதற்குத்தவிட்டு ணுண்டு அவ்வளவுபொருள் முழுதும் உன்சொற்படியே இக்கமுல்லையரும்புபோன்ற அழகியபல்வரிசையுடையவளுடனே மகனையும் நீ கொடுப்பாயானால் தருகிறேனென்றுசொன்னான்-எ-று. ௩௧

வேறு.

இருவருக்கு மிதுவிலையாமெனில்
பொருளளிப்பனின் றென்னுமுகன்றிடத்
தருகவப்பொருடானெனச்சாற்றலும்
வெருவிலத்தனன் மீளவுங்கூறுவான்.

இ-ள், இந்த இரண்டுபேருக்கு மிதாவேலியிலே நிச்சயமானால் நானே அவ்வளவுபொருளுந் தருகிறேன் இப்போதே யென்றுசொல்ல அவ்வளவுபொருளுங் கொடுமென்று அரசன்சொல்லுமளவில் அஞ்சுதலில்லாத அந்தப்பிராமணன் மறுபடியும் சொல்லுகிறான்-எ-று. ௩௨

உண்மகிழ்ந்தின் றளிக்குமுறுபொருள்
கொண்மர்தம்மை யழைமெனக்கூறினன்
வெண்மனத்தனென் வெள்ளியைக்கூவியந்
நுண்மறைக்குலத் தோன்முகநோக்கியே.

இ-ள், நான் மனதுசந்தோஷித்துக் கொடுப்பதான விலைப்பொருளை வாங்கிக்கொள்ளுகிறவனை இங்கேகூப்பிடென்று சொன்னான் உடனே வெள்ளைப்புத்தியீனனென்கின்ற அந்தச் சுக்கிரனைக்கூப்பிட்டு அந்தசூட்சுமமான பொருளுடைய வேதகுல பிராமணனைப்பார்த்து-எ-று.()

இவர்தமக்களி யென்றலுமீவனென்
றவர்தமக்கவ னங்கையறைந்தனன்
உவரிசூழ்புவி மன்னவனுற்றநீர்
கவருமாநிதி கைபுக்கதோவென்றார்.

இ-ள். இந்தப்பிராமணனுக்கு நீர்கொடுமென்றுசொல்லவே கொடுக்கிறேனென்று அந்தப்பிராமணன் தனதழகிய கையைபோட்டுக்கொடுத்தான் அப்போது கடல்சூழ்ந்த வுலகத்தையாளுகின்ற அரசனான அரிச்சந்திரன் நீர் என்கூடவந்து வாங்கிக்கொள்ளத்தக்க பெருந்திரவியம் உம்முடையவசம் ஆயிற்றோவென்று கேட்டான்-எ-று. ௩௪

வந்ததென்பொருண் மாதையுஞ்சேயையும்
அந்தணர்க்களித் தாவணநல்கென
முந்தவாவணந் தீட்டிமுடிந்தபின்
மைந்தனோடு மயிலைவழங்கினன்.

இ-ள். அதற்கு எனக்குவரவேண்டிய பொருள்வந்தது உன்மனைவியையும் மகனையும இந்தப்பிராமணருக்குக்கொடுத்துச் சீட்டு எழுதிக்கொடென்றுசொல்ல முன்னே விலைச்சீட்டெழுதிக்கொடுத்தான் பின்பு பிள்ளையையும் மனைவியையும் கொடுத்தான்-எ-று. ௩௫

வல்லிபோற்றி வருந்தலெமக்கெனச்
சொல்லிவேற்கட் டுளிபலசிந்திட
அல்லிமாமறைத் தாள்களையன்புடன்
பல்லிவீழ்ந்து கிடந்துபுலம்பினாள்.

இ-ள். அப்போது சந்திரமதி கணவனைத்துதித்து எங்களுக்காக நீர் வருத்தங்கொள்ளாதிருமென்றுசொல்லி வேல்போன்றகண்களிலே துளிகள்சிந்த அந்தநாயகனுடைய அகவிழ்களைக்கொண்ட பெரியமலர்போன்ற பாதங்களைப்பிடித்துக்கொண்டு அன்புடன் விழுந்துகிடந்து புலம்பலானாள்-எ-று, ௩௬

நின்றுகாணு நிருபனும்யானுமன்
றன்றுகாண வவாவுறுசெம்முகம்
இன்றுகாணுக தெய்தியதன்றிமற்
றென்றுகாண்ப னினியெனவேங்கினுள்.

இ-ள். நின்று உம்மைக்காணவாகிற அரசர்களும் நானும் அந்தந்த நாள்கடோறும் பார்க்கவேண்டுகிற சிவந்தமுகத்தை இன்றையதினம் காணக்கிடைத்ததேயன்றி இனி என்றைக்குநான் காணக் கிடைக்கு மென்று பலபலவிதங்களும்சொல்லி பிரலாபித்தாள்-எ-று, கூஎ

ஏங்கிமன்ன னிடைவனென்றேபடர்
தாங்கியநாயக தாவிடைபென்றயல்
நீங்கினுளிறை நீள்கழுத்தை நத்தழிஇந்
தூங்கிவாய்விட்டுத் தோன்றலாற்றினுன்.

இ-ள். பின்பு நம்மைநினைந்து அரசன் ஏங்கி வருந்துவானென்று உள்ளே துன்பங்கொண்டு நாயகா உத்தரவுகொடென்று தூரப்போனுள் அப்போது அரசன் கழுத்தைக்கட்டிப் பிடித்துக்கொண்டுதொங்கி மகன் வாய்விட்டுக் கதறியழுதான்-எ-று. கூஅ

எமையவென்னை யியாவையுந்தாங்கிய
சுமையிறக்கினே யோசுகமுற்றதோ
உமையனைந்திக்குற வென்றிருந்தவா
றமையுமேவைய னேயென்றாற்றினுன்.

இ-ள். எங்களையனே என்னையும் என்தாயையும் ரட்சித்துக்கொண் டுவந்த சுமையை யிறக்கிக்கொண்டீரா இப்போதுமக்குச் சுகமாயிற் றோ நாங்களும்மைச்சேர்ந்து இங்கே கூறவிலன் றிருந்தபடி போதுமோ என் ஐயனே யென்றழுதான் மகன்-எ-று. கூகூ

கழுத்தைப்பூண்டழுங் காவலன்கைகளை
அழுத்தமாறபற் றறவிடுவித்தனன்
விழித்தகட்பொறி சிந்திடவேதியன்
இழுத்துபோய்த்தன திவ்விடமெய்தினுன்.

இ-ள். கழுத்தைக்கட்டிக்கொண் டழுகின்ற புத்திரனுடைய கைக ளை அழுத்தமாகிய பிடிப்புப்போக நீக்குவித்தவனுகி திறந்து பார்க்கிற கண்களிலே நெருப்புப்பொறிகள்சிந்த அந்தப்பிராமணன் அந்தப்புத் திரன் கையைப்பிடித்துத் தன்வீட்டுக்கிழுத்துக்கொண்டுபோய்ச் சே ர்ந்தான்-எ-று. சுய

கடியவேதியன் கைதொட்டிழுத்தவக்
கொடுமைகண்டு குலைகுலைந்தேங்கியே
இடிவிழுந்த மராமரமீதெனும்
படிவிழுந்தனன் சற்றும்பதைத்திலன்.

இ-ள். அப்படிக் கடினசித்தனான பிராமணன் புத்திரன் கையைப்பற்றி யிழுத்துக்கொண்டுபோன அந்தக்கொடுஞ் செய்கையைப்பார்த்து அரசன் நடுநடுக்கமாய் அழுது இடிவிழுந்தலான மராமரம் இதுதானென்னும்படி கீழேவிழுந்தான் சற்றேனும் உடம்பசைத லில்லாது அப்படியே கிடந்தான்-எ-று. ௬௧

வந்துமந்திரி மன்னனைத்தாங்கிநீ
புத்தியில்லாதவர் போலப்புலம்புவ
தெந்துகாரணமென்றடிபோற்றலும்
சிந்தைவாட்டமுங் கோட்டமுந்தேறினான்.

இ-ள். அப்போது சமீபத்திலே மந்திரியானவன் வந்து அரசனையெடுத்து அரசனே நீர் புத்தியில்லாதவரைப்போற் பிரலாபிக்கிறது என்னகாரணம் என்றுசொல்லிப் பாதங்களை வணங்கும்போதில் அரசன் மனத்திலுள்ள வாட்டமு மனக்கோணலுந்தீர்ந்து தெளிந்தான்()

அந்தணன்முக நோக்கியருட்பொருள்
வந்ததோவென்று வல்லிவிளம்பயான்
இந்தமாநிதி பெற்றனனின்னமும்
சிந்தையோடுனா செய்வதொன்றுண்டென்றார்.

இ-ள். அப்போது அந்தச்சுக்கிரனாகிய பிராமணன்முகத்தைப்பார்த்து உமக்கு என்றுலேகிடைக்கவேண்டிய அருமையான பொருள்வந்து சேர்ந்ததோவென்று அரசன்கேட்க இந்தப்பெரிதான பொருள் பெற்றுக்கொண்டேன் இன்னமும் என்மனசாரச் சொல்லுவதொன்றுண்டென்றான்-எ-று. ௬௨

முனிக்குமுன்னை மொழிந்தபொருளிந்தனை
எனக்குக்கூலி யீகுவதென்னென
உனக்குமீகுவன் வாவெனவுத்தமன்
றனக்குப்பின்னடந் தானவ்வினைச்சல்லியன்.

இ-ள். நீவிசுவாமித்திரருக்குக் கொடுக்கிறேனென்றுசொன்ன பொருளைக்கொடுத்தாய் சரியே உங்கள்கூடவந்த எனக்குக் கூலிகொடுக்கிற பொருள் எங்கேயென்றுகேட்க உமக்குங்கொடுக்கிறேன் வாருமென்றுசொல்லவே உத்தமனான அரசனுக்குப் பின்னேசென்றான் கொடுஞ்செய்கையையுடைய சுக்கிரன்-எ-று. ௬௩

அன்னகாலை யமைச்சனைநோக்கியே
என்னைநீவிற் றிவற்குப்பொன்னீகெனச்
சொன்னபோதிற் றனக்கெனவேந்தியெம்
மன்னகேளென மந்திரிகூறுவான்.

இ-ள். அந்தவேளையிலே மந்திரியைப்பார்த்து என்னை நீ விலைசெய்து இந்தச்சுக்கிரனுக்குக் கூலிப்பொருள்கொடென்று சொன்னபோதில் மந்திரி திடுக்கிட்டெழுந்து எங்களரசனேகேளுமென்று சொல்லுகிறான்-எ-று. ௪௫

அன்னையாயெம தாண்டகையாகிய
நின்னையான்விலை கூறுதனீதியோ
என்னைநீவிற் றிவர்க்குச்செலத்தகும்
பொன்னைநல்கென வீழ்ந்தடிபூண்டனன்,

இ-ள். எனக்குத்தாயாய் எனக்குஅரசனுமான வும்மைநான் விலைகூறுகிறது நியாயமன்று நீர்என்னை விலைசெய்து இந்தப் பிராமணனுக்குச் செலுத்தத்தக்க பொருள்களைக்கொடுமென்று கீழேவிழுந்து வணங்கிப் பாதங்களைப்பிடித்துக்கொண்டான். ௪௬

மண்ணில்வீழ்ந்த வமைச்சனைமார்பணைத்
தொண்ணிலாவத னத்தொளிமாழ்கவே
கண்ணினிற்புன லாட்டிக்கௌசிகன்
எண்ணுநீர்மைக் கிதேற்குமோவென்றான்.

இ-ள். அப்படி மண்ணிலேவிழுந்துகிடக்கிற மந்திரியைஅரசன்தன் மார்போடணைத்துக்கொண்டு அழகிதான சந்திரன்போன்றமுகத்தில் ஒளிமழுங்க தனதுகண் ணீரினாலே முழுகச்செய்து விசுவாமித்திரர் ஆலோசித்திருக்கிற தகுதிக்கு இதுதக்கதாகுமோவென்றான்-எ-று. ௪௭

ஏர்க்குமோபொருட் குன்னைவிற் றீகுவ
தார்க்குமாதவ னெண்ணமறியலாம
தார்க்குலாவுவெள் வேலவதாழ்க்கிலா
தூர்க்குளென்னைவிற் றொண்ணிதிநல்கென்றான்.

இ-ள். நான்கொடுக்கவேண்டிய பொருளுக்கு உன்னை விற்றுக்கொடுக்கிறது தக்கதாகுமோ இனியெல்லாரும் அந்த விசுவாமித்திரருடைய நினைவெப்படியென்றறியப்படுமே வெற்றிமாலை விளங்குவதான வெள்ளிய வேலையுடைய அமைச்சனே இனி நீ தாமதஞ்செய்யாமல் இந்த வூர்க்குள்ளே கொண்டுபோய் என்னைவிலைசெய்து அழகியதான திரவியஞ் சுக்கிரனுக்குக் கொடுத்துவிடென்றானரசன்-எ-று. ௪௮

என்னபாவ மெனப்பலித்ததென்
றன்னகர்ப்பல வாவணவீதிவாய்ப்
பொன்னின்மாமுடி மீதிற்புற்சூடியே
மன்னனைவிலை மந்திரிகூறுவான்.

இ-ள். இதென்னபாவம் எனக்கு லபிதமானதென்று அந்த வூரிலே பலகடைவீதிகளிலுஞ்சென் றரசனது பொன்முடிசூடுகிற பெருமை

பொருந்தின தலைமேலே ஒருபுல்லைச்சூட்டி அரசனைமந்திரி விலைகூறு வானானன்-எ-று.

ஆதிநூலின ராயினுமல்லது
சாதியினர்க ளாயினுஞ்சால்புடைக்
கோதிலான்றனைக் கொண்டினைப்பல
வீதிதோறும் விலையதுகூறினான்.

இ-ள் வேதசாஸ்திரங்களுக்குரிய பிராமணரா யிருந்தாலுஞ் சரி தான் சாதிசண்டாளராயினுஞ் சரிதான் சான்றாண்மையையுடையகுற்றமில்லாத இந்த அரசனைவாங்கிக் கொள்ளுங்களென்று பலவாறுவீதிகளெல்லாம் விலைசொல்லிக்கொண்டு திரிந்தான்மந்திரி-எ-று.

வாரமேசரு மந்திரிமன்னனைத்
தூரமேவிலை கூறியசொற்கேளா
வீரவாகு வெனும்பெயர்மேவினன்
சூரநீர்மைப் புலைமகன்றோன்றினான்.

இ-ள் உரிமைத்தனத்திலே சிறந்தமந்திரியானவன் அரசனைத்தூரத்திருந்து விலைகூறிவருகிறசொல்லைக் கேட்டுக்கொண்டுவீரவாகுவென்கிறபெயரைக்கொண்ட வனுப்ச் சூரத்தன்மையையுடைய ஒருபறையன்வந்தான்-எ-று. ௫௧

குடக்கணுக்கி மயக்கியகொள்கையால்
தடக்கைகல்விதிர்ப் புற்றதளர்ச்சியான்
விடக்கின்றேறனை விண்டின்றண்டினில்
தொடக்கிக்காவிய திண்பெருந்தோளினான்.

இ-ள் அவன் ஒருகுடங்கள்ளுங் குடித்திருக்கிற கொள்கையினாலே நீண்டகைகளும் கால்நடுங்குகின்ற சோர்வையுடையவனும் மாமிசத்தை மூடியிருக்கிற மாட்டுத்தோல்சதையாகிய இவற்றைமூங்கிற்றடியிலே கூடையேற்றிக்கொண்டுமாட்டிக் காவடிப்போட்டுக்கொண்டுள்ள பலமான பெரியதோள்களையுடையவனும்-எ-று. ௫௨

சுமக்குங்காவைத் தூசொடுவாய்புதைத்
தமக்குவேண்டு முறுபொருணல்கிடின்
அமைக்கும்புன்றொழி லாளரைப்போல்லவர்
தமக்கும்விற்கத் தகுதியுண்டோவெனறான்.

இ-ள் தான்வருவதான காவடியைக்கீழே யிறக்கி வைத்துவிட்டு இடையின்வஸ்திரத்தாலே வாயைமூடிக்கொண்டுநீயாவுங்களுக்குவேண்டிய மிக்கபொருளைக்கொடுத்தால் ஒருவர்சொல்லச் செய்வதான இ

ஸ்ரீதாஸீனராகிய எம்மையொத்தவர்களுக்கும் வேலைசெய்யத்தக்க தூண்டோவென்றுகேட்டான் வீரவாகு-எ-று. ருங

அன்னதன்மை யரசன்மனங்கொளா
இந்தசர்க்கு ளிவனலதெம்மிலைப்
பொன்வளிப்பவ ளிலெனப்புந்திவை
தென்னைவில்லென் றமைச்சற்கியம்பினான்.

இ-ள் அந்தவசனத்தை அரசன்மனத்துட்கொண்டு இந்தநகருக்குள்ளே இவனையல்லாமல் நமக்கு விலைப்பொருள் கொடுக்கிறவனில்லையென்றுயோசித்துக்கொண்டு மந்திரியைப்பார்த்து என்னைவிலைசெய்துவிடென்றுசொன்னான்-எ-று. ருச

ஆதிமன்சொற் றமைச்சனுஞ்செவியின்
மேவினன்னினி விற்பனைக்கென்றான்
ஈயுநல்விலை யேதெனப்பொன்பதி
னாயிரமென் றமைச்சனியம்பினான்,

இ-ள் அப்படியானால் நல்லதென்று மந்திரியானவன் அவ்விடத்திலே வந்தவருகிய வீரவாகுவைப்பார்த்து நான்உனக்குவிலைசெய்கிறேனென்றுசொன்னான் அந்தவீரவாகு நான்கொடுக்க தகுதியான விலையென்னவென்றுகேட்க மந்திரிபதினாயிரம்பொன் கொடுக்கவேணுமென்றுசொன்னான் எ-று. ருரு

தன்குருவேனைத் தன்பெயராற்பொறித்
தருளினன்புலை யற்கமைச்சாவணம்
பொருளைவாங்கிப் புகர்க்களித்தையபோய்
வருகவென்ன மகிழ்ந்தவனேகினான்

இ-ள் அப்படிஆயிரம்பொன்னுந்தருகிறேனென்றுவீரவாகுசொல்லஉடனே மந்திரியானவன் தன்பெயராலே விலைச்சீட்டெழுதி அந்தபுலையனுக்குக்கொடுத்தான் அப்படிகொடுத்தபின்பு பொருளைவாங்கிச்சுக்கிரனுக்குக்கொடுத்து ஐயாசுக்கிராசாரியரே போய்வாருமென்னவே சுக்கிரன் சந்தோஷமாகப்போனான். ருசா

மீளவேந்தும் விடக்கின்றசைச்சுமை
தோளிலேற்றிப் புலையர்க்கடர்த்தனன்
ஆளிமொய்ம்பி னமைச்சனுமன்னவன்
றாளில்வீழ்ந்து தளர்ந்துவருந்தினான்.

இ-ள் அப்போதுடனேவீரனானஅரசன் கோலுமாமிசமுமானகாவடிச்சுமையைத்தனதுதோளிலேற்றிக்கொண்டு அந்தப்புலையனைத்தொடர்ந்துசெல்லலானான் அப்போதுசிங்கம்போலும் புஜபலத்தையுடை

யமந்திரியானவன் அரசனுடைய கவிலைப்பூர்ந்து தளர்ச்சியுடனே வருந்தலானான்-எ-று. ருஎ

கொற்றவர்நின் குளிர்மலர்த் தாளிணை
உற்றநாடொட்டு முனபணியேசெயப்
பெற்றயாவலப் பேறெனக்கின்றொடும்
அற்றதோவென் றயலழுதேகினான்.

இ-ள் அரசனே உம்முடைய குளிர்ந்தமலர்போன்ற பாதங்களிரண்டையும் நான்வந்தடைந்தநாள்முதல் ஊழியமேசெய்யப்பெற்றவெனதுபெரியதவப்பலன் எனக்கின்றோடே முடிவாகிப்போயிற்றோ இல்லையென்று அரசன்கூடவே அழுதுக்கொண்டு புறமேபோனான்-எ-று.

வளையரீத்த புயத்திடைவைத்தகா
அலையவேயின் றொடர்ந்தரிச்சந்திரன்
தொலைவிலாமுடை நாறியதொன்னெறிப்
புலையன்மேவும் புலக்குடிநண்ணினான்.

இ-ள் கேயூரங்களை நீங்கின தோளிலேவைத்த தோற்காவடி அசைய அசைய அவன்பின்னேதொடர்ந்து அரிச்சந்திரமகாராஜன்நீங்குதலில்லாப் புலால்நாறுகின்ற பழையவழியிலேசெல்லுகிற அந்தப்புலையனிருக்கிற புலைக்குடிலுக்குப்போனான்-எ-று. ருஅ

பார்த்தவர்க்குப் பசுந்தசையாய்மறை
கோத்தகாவை யிறக்கிக்கொடுத்தபின்
ஊத்தைக்கொட்டிலி னுள்ளிருந்தேபுவி
காத்தகோவுடன் காலநியம்புவான்.

இ-ள் கண்ணாலேகண்டவர்களுக்கு பசியதசைபாதிவேதத்தையே கோத்திருக்கிறகாவடியை இறக்கிக்கொடுத்த பின்பு அழுக்கடைந்த கொட்டிலுக்குள் ளிருந்துகொண்டு உலகத்தையாண்ட அரசனுடன் காலனென்கிற வீரவாகுசொல்லுகிறான்-எ-று. ௬௦

வேறு.

தூங்கிருள்கடியுஞ்செந்திச் சுடலையிற்சுடும்பிணத்துக்
கோங்கியபுலைப்பேறுவை யொன்றுண்டுபணங்காலொன்று
வாங்கியீதெனக்குவைத்து வாய்க்கரிசியையுமீயிட்டில்
பாங்கிதுவென்றுபின்னு மன்னனுக்கவனுரைப்பான்.

இ-ள் தங்குதலான இருளைப்போக்குவதான சிவந்தநெருப்புமூளுகிறசுடுகாட்டிலே தினஞ்சுடுவதாகிறபிணமொன்றுக்கும் உயர்வதானபுலையன்பெறுவதுவஸ்திரமொன்றுமொன்றுகாற்பணமுமிந்திவற்றைத்தவறாமல்வாங்கிக்கொண்டுஅவற்றையெனக்காகவைத்துவிட்டுவாய்க்கரி

சியைமாத்திரம் நீவாங்கிக்கொடுத்துக்கொண்டு அங்கேதானேஇருவென்றுசொல்லிப் பின்னும் அரசனுக்கவன் சொல்லுகிறான்-எ-று.

எனக்குநீபணமுங்கொள்ளி யாடையுமினிதுநல்கி
உனக்குவாய்க்கரிசிதந்தே ணுண்டிருபசியைநீக்கி
மனத்துளேவஞ்சமின்றி மயானத்திலுறைவாயென்னத்
தனக்குநேரில்லாக்ஞானு நன்றெனச்சுடலைசார்ந்தான்.

இ-ள் எனக்குநீபிணஞ்சுடுகிறபணமும் கொள்ளிவஸ்திரமும்நன்றாகக்கொடுத்துவிட்டபின்பு உனக்குநான்கொடுத்ததாகியவாய்க்கரிசியைமாத்திரம் நீபுசித்துப் பசியைத்தவிர்த்துக்கொண்டு உன்மனத்திலே எவ்வளவும் வஞ்சனையில்லாமல் அந்தச்சுடுகாட்டிலேதானேகாத்துக்கொண்டிருக்கக்கடவையென்றுசொல்ல அதற்குதனக்குச்சமானமில்லாத அரசன்நல்லதென்று சுடுகாட்டுக்குப்போனான்-எ-று. ௬௨

சுட்டவெம்பிணத்தோடொக்கத் தொலைந்துவெந்தெரிந்தகொள்ளி
கட்டையும்பாடைசேர்ந்த கழிகளுமொத்துக்கூட்டி
கொட்டிலென்றெடுத்துமேனள் கொடுந்தசவங்கொணர்ந்துபோட்ட
கட்டிலொன்றேறிச்செங்கோற் காவலன்வீற்றிருந்தான்.

இ-ள் அங்கேசுடுகிறதான வெவ்வியபிணத்தோடேகூடச் சாம்பலாய்வெந்து எரிந்துபோன கொள்ளிக்கட்டைகளாலும் பாடையோடுசேர்ந்துவந்த குறுக்குழிகளாலும் சேர்க்கையாகக்கூட்டி ஒருகொட்டில்கட்டிக்கொண்டு முன்னேகொடிதான பிணத்தைத்தூக்கிக்கொண்டுவந்து போட்டுக்கிடக்கிற ஒருகட்டிலின்மேலேறி நீதியுள்ள அரசனிருந்தான்-எ-று. ௬௩

பாடையிற்கொணர்ந்துவைத்த பிணஞ்சுடுபணமுங்கொள்ளி
ஆடையும்தாங்கியிட்டி யாண்டகைக்களித்தங்குற்றுக்
கூடையில்நிறைந்துநாளுங் கொடுத்தவாய்க்கரிசிலைக்காங்
கோடைமாக்களிற்றின்மன்ன னுறைந்தனனுறைந்தபின்னர்

இ-ள் பாடைமேலே கொண்டுவந்துவைத்த பிணத்தைச் சுடுகிற பணமும் கொள்ளிவஸ்திரமும் வாங்கிச்சேர்த்துத் தன்எஜமானனுக்குக்கொடுத்துவிட்டு அங்கேயிருந்து கூடையிலேதினந்தோறும் கொடுக்கிறவாய்க்கரிசியை நிறப்பிவைத்துக்கொண்டு அப்படியாக முகபடாமணிந்த பெரியயானைமேல்வருகிறஅரசன் இருந்தான் அவனப்படியிருந்தபின்பு-எ-று. ௬௪

அத்திருநகரின்மற்றோ ரம்பலத்திரவுதங்கிச்
சத்தியகீர்த்தியென்பான் றன்சுதயனைத்தேடி
புத்தியில்வருத்தநண்ணிப் புலைகுடிலருகுதேடி
உத்தமனீமங்காக்கு மாறுகேட்டோடிச்சென்றான்.

இ-ள் அந்தஅழகானபட்டணத்திலே அங்கொருமடத்திலே அன்றிராத்திரி சத்தியகீர்த்தி தங்கியிருந்து பின்பு தங்கள்எஜமானனைத் தேடிக்கொண்டு தன்மனத்திலே வருத்தமுண்டாகவந்து அந்தப் புலைக்குடிசில்களினிடமெல்லாந் தேடிப்பார்த்து உத்தமனான அரிச்சந்திரன் சுடுகாடுகாக்கிறது தெரிந்தோடிவந்தான்-எ-று. (சாரு)

நெருப்பெழுந்தெரியுஞ்செந்தீச் சுடுகரைநீக்கியேகி
மருப்பயிலலங்கன்மன்னை மந்திரித்தலைவணங்கிச்
செருப்பயில்வீரவேலான் சிறுகுடிறனிலேபுக்கங்
கிருப்பதுகண்டான்காணு வேங்கியேயலறிவீழ்ந்தான்.

இ-ள் அங்கேநெருப்புமூண்டு எரிவதாகி அந்தச்சிவந்த நெருப்பினாலே சுடுவதான சுடுகாட்டுக்கரையெல்லாங் கடந்துபோய் மணம்பொருந்தின மாலையணிகிற அரசனை முதல்மந்திரியான சத்தியகீர்த்தி வந்துகூடியுத்தஞ்செய்கிற வீரவேலையுடைய அரசன் அங்கொரு சிறிய குடிசைக்குள்ளே புகுந்துகொண்டு அங்கேயிருக்கிறதைக் கண்டான் கண்டவுடனே அழுதுபிரலாபித்துக் கீழேவிழுந்தான்-எ-று. (சாசா)

மன்னவரிடம்பொராது வந்துசூழ்ந்திறைஞ்சிப்போற்ற
அன்னமென்னடையாராட வரம்பையர்பாடவைகும்
பொன்னெடுங்கோயினீங்கி பூதமும்பிசாசுமாடும்
இன்னெடுங்கோயிலோவந் தெய்திவதையவென்றான்.

இ-ள் அரசர்கள் தங்களுக்கு இடம்போதாமல்வந்து பொய்த்துவணங்கித்துதிக்கவும் அன்னம்போலு மெல்லியநடையையுடையபெண்களாடவும் அரம்பைகள்பாடவுமிருக்கிற பொன்மயமான நெடிய அரண்மனையைவிட்டு பூதங்களும் பசாசுகளுங்கூத்தாடுகின்ற இந்தநெடியகோயிலேஉமக்குவந்துலபிதமானது சுவாமியென்றான்-எ-று (சாஎ)

கதிதருமயனுமாலுங் கடக்கருங்கொடியதீர்மை
விதியினைவெளியநம்மால் வெல்லலாந்தன்மைத்தன்றே
அதிகமவஞ்செய்தாலேறு ளமைந்தவேயடுக்குமல்லால்
மதிவலோயிதற்குவாடி வருந்தலேயென்றுசொன்னான்.

இ-ள் மோக்ஷத்தைத் தருகிற பிரமாவும் விஷ்ணுவும் கடந்தற்கரிதான கொடுஞ்செய்கையையுடைய விதியை எளிதானநம்மாலே வெல்லலாகியதகுதியுள்ளதாமோ அப்படிப்பட்ட விதிக்கதிகமாக ஒன்றும்வந்துகூடாது முன்னுனிலே அமைத்தபடியே அமைவதாகும் அல்லாமல் வேறுகா மதிவல்லவனான சத்தியகீர்த்தியே இதற்காக நீவாடிவருந்தாதேயென்று அரிச்சந்திரன் மந்திரிக்குச் சொன்னான்-எ-று.

என்னவேயமைச்சன்றேறி யிருந்தனனிருக்கவேந்தன்
முன்னமேசேர்த்துவைத்த வரிசியைமுறையினீந்தான்

இன்னமுதகவெந்தற்றென் றெண்ணியேயமைச்சன்வீழ்ந்து
பொன்னடிவணங்கிவாங்கிப் புல்லினிற்பொதிந்துகொண்டான்.

இ-ள் என்றுசொல்லுமளவில் மந்திரி தெரிந்துகொண்டிருந்தான் அவனிருக்க அரசன் முன்னேதான்சேர்த்துவைத்திருந்த வாய்க்கரிசிகளை அளவுப்படி கொடுத்தால் அதை இனியசோறுசமைத்தற்கென்று தெரிந்து மந்திரிவிழுந்து அரசன்பொன்னடிகளை வணங்கிக்கொண்டு சில புல்லுக்கற்றைகளுக்குள்ளே அந்தஅரிசியை முடிந்துகொண்டான்-எ-று.

மண்டலத்திறைவனுய்த்த வைத்தவாய்க்கரிசிதன்னை
கொண்டுபோய்ச்சுரபிக்கீயது கோமயத்துடனேவீழ்த்த
தண்டிலமெழுக்குத்திச் சமைத்தினி தகலவச்சோ
றுண்ணவுந்தந்தான்பின்னை யுற்றவாறெடுத்துரைப்பாம்

இ-ள் பூமண்டலாதிபதியான அரசன் சேர்த்துக்கொடுத்த வாய்க்கரிசிகளைக்கொண்டுபோய்ப் பசுவுக்குக்கொடுத்து அதுஉண்டு அதன் சாணியிலேவிழுவதான அரிசியையெடுத்துக் குத்திச் சமைத்துப் பரிசுத்தமாக்கிக்கொடுக்கஅச்சோற்றை உண்டுகொண்டிருந்தான் பின்புநடந்தசெய்கையை இனிமேற்றுச்சொல்லுவோம்-எ-று. (எ௰)

காசிகாண்டம்-முற்றிற்று-ஆக-கூஎக.

எட்டாவது.

மயானகாண்டம்.

வல்லியுமகனுமந்த மறையவன்மனையிற்சேர்ந்து
சொல்லியபணிகளெல்லாந் சோர்தரச்செய்துபின்னும்
எல்லிபோர்சாமமென்ன வெழுந்திருந்தவன்முற்றி
அல்லிருநாழிகென்று வெளிந்துகூமுனெறக்கி.

இ-ள் சந்திரமதியும் மகனும் அந்தவிலைக்குவாங்கின பிராமணன்வீட்டிலேபோய் அந்தப்பிராமணன்சொன்ன வேலைகளெல்லாம் குறைவில்லாமல் பொழுதளவுஞ்செய்து மறுபடியும் அந்தராத்திரியே ஒரு சாமமிருக்கச்சே விழித்தெழுந்திருந்து அவன் ஏவின வேலைகளெல்லா முடியச்செய்து பின்பு அந்தப்பகல் இரண்டுசாமமானால் அரைநாற்றினைகூலழுஉண்டுதூங்கி-எ-று. (க)

கையினிலுலக்கைபற்றிக் கரந்தனிலுதிரம்பாய
மெய்யினில்வெயர்நீர்சிந்த விழியினிலருவிபாய
செய்யினின்முடித்தகூந்த னெற்குத்துங்கொடுமைகாணு
வையினிற்றிகழ்வேற்கண்ணு ரம்பையர்மறுகிச்சோர்ந்தார்.

இ-ள் கையிலே உலக்கையைக்கொண்டு காந்தள்மலர்போன்ற அந் தக்கைகளிலே ரத்தங்கட்டிச் சிவப்பாகவும் உடம்பெல்லாம்வேர்வைநீ ரொழுகவும் கண்களிலே அருவிபோல்நீரொழுகவும் முன்னேசயம்பக்தி யென்னவிட்டுச் சிவிபூடித்த கூந்தலையுடைய சந்நியாசியானவள் நெல்லுக்குக்குத்துற தொழிலைக்கண்டு மையிட்டதுடனேவிளங்கு கின்ற வேல்போலுங் கண்களையுடையவர்களாகிய தெய்வரம்பைகளெ ல்லாரும் இப்படிவரக் கூடுமோவென்று பயந்துச் சோர்வதானார்கள் -எ-று. (௨)

புன்கணுற்றரம்பைமாதர் வருந்தவெப்புக்கிசெய்யா
வன்கணையிரக்கமில்லான் மடித்தவாய்வெடித்தசொல்லான்
தன்கணேன்பில்லான்பொல்லான் றறுகணன்விலைகொண்டாள்போ
இன்கணியில்லாதான்பாரி யிவளிதுகொடியபாவி

இ-ள் அப்படித்துன்பப்பட்டுத் தெய்வரம்பைகள் வருந்தமடைய வும் அதைத்தூலோசியாத வெகுட்டுத்தொனையையுடையவனும் கொஞ்ச மேனும் இரக்கமில்லாதவனும் மடித்தவாயுடனே அதிர்த்தச்சொல்லை யுடையவனும் தன்னிடத்தில்சிலவளவும் அன்பில்லாதவனும் துஞ் சாதவனுமிருந்தான் விலைக்குவாங்கி அருந்திரபிராமணன் இந்தஇனி நான முகத்துக்கண்ணியமில்லாதபிராமணனுடையபெண்டாட்டிமோ அவனைக்காட்டிலும் மிகவுங்கொடுமையான பாவியாயிருந்தாள்-எ-று

அடியிணைதந்தினைமக்க ளனைமார் தலைபதுமைக்க
மிடியுமென்னெருக்கிருக்கு மிசைபுனங்கலைப்பறித்து
மடிவளைத்திட்டுக்கொய்து காட்டமுந்தவிடைநெம்போன்
முடிபுனைதலையில்வைத்து முறைமுறைவருமக்காளில்.

இ-ள் அந்தப்பிராமணனைடிக்கிற அடியிணைபயந்து புத்திரனைத்த வதாசன்பயந்து தாககத்தைச்சீறிப்பிரப்படிசெய்ய விடிகிறதற்குமு ன்னே யழுந்திருந்து அந்தப்பிராமணருக்குவேண்டிய தலத்திலுள்ள கலைகள்பிடுங்கி அவனுடைகாலுக்குமாரானை வனத்திலே அதைத் துதிரித்து இலைக்கறிகள் பறித்துக்கொண்டு விறகும் சமிதையுங்கட்டி பொற்கிரீடமணிந்ததக்க தலைமேல்வைத்துக்கொண்டு இப்படித்தின த்தோறும் வருவனவாகிய அந்நாளிலே-எ-று. (௩)

மைக்கறுத்திருந்ரோட்டி வனத்தனிக்கிறது
தந்திவழியிலோர்பாற் றருப்பைகண்டிதுவிட்டேகில்
அந்தணன்முனிவானென்று வஞ்சியார்வட்டிமிருந்
இதனைபிறக்கிபப்பு விழுந்திடப்புறத்துச்சென்றான்.

இ-ள் ... ஊரிலுள்ள பிள்ளைகளோடுகூடிச் சென்று காட்டிலே விறகு ... கட்டிச்சுமந்துகொண்டுவருகிற

வழியிலே ஓரிடத்தில்தர்ப்பைப்புல் அதிகமாயிருக்கக்கண்டு அந்தத் தர்ப்பையைக்கண்டும் பறித்துக்கொண்டுபோகாமற்போனால் பிராமணன்கோபஞ்செய்தடிப்பானென்றுபயந்து ஒருஆலமரத்தினிழலிலே அந்தவிறகுச்சுமையை யிறக்கிவைத்துவிட்டு அந்தத்தர்ப்பைப்புல் முளைத்திருக்கிற புதரினிடமாகப்போனான்-எ-று.

பரிதனன்கையைபற்றிப் பறிக்கலுமுனிவனேவக்
குறித்துவந்தகருநாகங் கோளராத்திரியோக்கிக்
கெரிக்கழல்விழியாற்சிந்தத் தீண்டிற்றுதீண்டலோடும்
வெறித்தெழுந்தலறியோடி வெருவியேதரையில்வீழ்ந்தான்

இ-ள் அங்கேபோய்த் தர்ப்பைப்பிடுங்குகிறான் அப்படித்தர்ப்பையைப்பிடித்துப் பறிக்கும்போது விசுவாமித்திரமுனிவரேவுதலினாலே கடிக்கவெண்ணி அந்தத்தர்ப்பைக்குள் ளடங்கியிருக்கிற பெரியபாம்பானது சீறியெழுந்து நெருப்புப்பொறித்துக் கண்களினின்று முதிரக்கடித்தது அப்படிக்கடித்தவுடனே மயங்கித்துள்ளி அலறிக்கொண்டோடிவந்து பயத்துடனே தரையிலேவிழுந்தான்-எ-று (சா)

வடத்தின்கீழ்நின்றதோழர் மறுகிப்போய்வள்ளல்வீழ்ந்த
இடத்தினையணுகியையோ வென்னுற்றதுயராவென்னப்
படத்திரைபெரியநாகங் கடித்ததுபாருமென்று
விடத்தினாலறிவுசோர்ந்தான் விட்டுயிரடங்கிற்றன்றே.

இ-ள் அப்போது அந்தஆலமரத்தினிழலிலே இளைப்பாறிக்கொண்டிருந்த தோழப்பிள்ளைகள் பயந்தோடிவந்து அந்தப்பிள்ளைவிழுந்து கிடக்கிற இடத்தையடுத்து ஐயோபிள்ளாய் உனக்கு என்ன துன்பம் வந்தது சொல்லென்றுகேட்க படத்தையுடையபெரியபாம்புஎன்னைக்கடித்தது நீங்கள் அதைப்பாருங்களென்று சொல்லிக்கொண்டே அந்தப்பாம்புவிஷத்தினாலே புத்திமயங்கினான் உயிரும் அவனுடம்பைவிட்டுநீங்கிச் சுவாசமும் அடங்கலாயிற்று-எ-று. (எ)

ஆவிபோயகன்றபின்னை யனைவரும்புரட்டிப்பார்த்து
பாவியூழென்னவிந்தப் பாலகனிறந்தானென்றே
மேவியவ்வடத்தின்கீழ்வந் தவரவர்விறகுங்கொண்டு
காவியங்கழனிசூழுங் காசிபம்பதியிற்புக்கார்.

இ-ள் அப்படிஉயிர்போய் இறந்தபின்பு எல்லாப்பிள்ளைகளும்அந்த உடம்பைப்புரட்டி அசைத்துப்பார்த்துப் பாவியானவிதியினாலே என்ன ஆச்சரியம் இந்தப்பிள்ளை இறந்துபோனானென்று திரும்பிஅந்தஆலமரத்தின்கீழ்வந்து அவரவர்கள் கொண்டுவந்த விறகுச்சுமையை யெடுத்துக்கொண்டு நீலோற்பலங்கள் மலர்ந்துள்ள அழகிதான வயல்சூழ்ந்த காசிப்பட்டணத்துக்குள் சென்றார்-எ-று, (அ)

பாலர்வந் தூரிற்புக்கார் பானுவுங் கடலிற்புக்கான்
மாலைவந் திருத்தபின்னர் வழியினை நோக்கியன்னை
பாலன்வந் திலனென்றேங்கிப் பரதவித் திருகண்தாரை
காலநொந் துருகிவாயிற் கடைத்தலைவந்து பார்த்தாள்.

இ-ள்- அப்படி அந்தப்பிள்ளைகளெல்லாரும் ஊருக்குள்ளேவந்து சேர்ந்தார்கள் சூரியனு மேலைக்கடலுக்குள்ளே போய்ச்சேர்ந்தான் அப்படி ராத்திரிகாலமானபின்பு பிள்ளைவருகிறவழியைப் பார்த்துப்பார்த்துத் தாயான சந்திரமதி தன் பிள்ளை இன்னமும் வாராதிருக்கிறானேயென்று துக்கித்துப் பிரலாபித்துத் தனதிரண்டு கண்களிலுநீர்த்தாரை சிந்தும்படி நொந்து மனமுருகிக் கடைத்தலை வாயிலே வந்து பார்த்தாள்-எ-று.

வணங்கியகரத்தாள்சால வாடியமனத்தாளுக்காள்
இணங்கியுமுடனே வந்த வென்மகனெங்கேயென்றாள்
இணக்கமற்றுழலாயுன்றன் மைந்தனையறவுதீண்டி
உணங்கியேயிறந்தானென்று ருயிர்த்திலண்மருகிவீழ்ந்தாள்

இ-ள், சேர்ந்தகைகளையுடையவளாய் மிகவும்வாடின மனத்தையுடையவளாகி வருகிறபிள்ளைகளைப் பார்த்து பிள்ளைகளே உங்களுடனேவந்த என்மகனெங்கே வரக்காணேனென்றாள் அதற்கு அந்தப்பிள்ளைகள் வாசனைபரிமளிக்கின்ற கூந்தலையுடைய அம்மே உனதுபுத்திரனைப் பாம்புகடித்து அதனாலே சோர்ந்து மடிந்துபோனானென்று சொன்னார்கள் அதுகேட்டு மூச்சுமில்லாதவளாய் மயங்கிக்கீழே விழுந்தாள் சந்திரமதி-எ-று

மடத்தனிவல்லி பின்னு மைந்தனை நோக்கியெந்த
இடத்திலேயிறந்தானென்ன யம்வருவழியினிற்கு
வடத்தினுங்கமைசற்றே வடக்கினிற்குசைபடர்ந்த
தடத்திடிற்றெற்கேயென்று சாற்றியேயவர்கள்போனார்

இ-ள்- அப்படிமயங்கியிருந்து பின்னும் அந்தயௌவனத் தகுதியையுடைய சந்திரமதியானவள் அந்தப்பிள்ளைகளைப்பார்த்துப்பிள்ளைகளே என்பிள்ளை எந்தவிடத்திலே இறந்துகிடக்கிறானென்று கேட்க அந்தப்பிள்ளைகள் நாங்கள் வருகிறவழியிலே நிற்கிற ஆலமரத்திற்குப்பக்கத்தே கொஞ்சம்வடக்குத்திசையிலே தர்ப்பைபடர்ந்து முளைத்திருக்கிறமேட்டுக்குத் தென்புறத்திலே இறந்துகிடக்கிறானென்று சொல்லி அந்தப்பிள்ளைகள் போய்விட்டார்கள்-எ-று.

அறுதியீதென்றுசால வறிவழிந்துருகிவீழ்ந்து
பிறைகிறைநுடையோர்க்கன்றி வாய்திறந்தாற்றுண்மாழ்கிச்

சிறுதொழின் முழுதுஞ்செய்து தீர்ந்தபின் றேடிச்சேறல்
உறுதியென் றுளத்தினுள்ளே யொடுக்கிவந் தகத்திற் புக்காள்

இ-ள்- முடிவுஇப்படியாயிற்றென்று மிகவும்புத்திமயங்கிமனமுருகிக்கீழேவிழுந்து மயங்கினவளாகித்தன்னை விலக்குவாங்கினபிராமணனுக்கும் பிராமணத்திக்கும் பயந்துவாயைத்திறந்து கூவியழாதவளாய்ப்பின்னுஞ்சோர் உடனேதான்செய்வதான சிறியபணிவிடைகள் முழுதுஞ்செய்து முடிந்தபின் இறந்துகிடக்கிற பிள்ளையைத் தேடிக்கொண்டுபோகிறதே இனித்தகுந்தகாரியமென்று தன்மனதுக்குள்ளே அப்படிப்பட்ட துன்பத்தை ஒடுங்கக்கொண்டுவந்து வீட்டுக்குள்ளேபோயினாள்-எ-று.

முறைமுறைபணிகளெல்லாஞ் செய்தரமுடித்துப்பின்னர்
மறையவன்றன்னை யேத்திவாய்புதைத்தழுது விம்மி
இறையவர்கேளாவந்தெண்டி யென்மகன்னிறந்தான்யானச்
சிறையிலேசேறற்குன்றன்றிருவுள மறியேனென்றாள்

இ-ள்- அப்படிவீட்டுக்குள்ளே வந்து கிரமக்கிரமமாகத் தான்செய்வதான ஊழியங்களெல்லாஞ்செய்துமுடிய முடித்துபின்புஅந்தப் பிராமணனை தோத்திரஞ்செய்து வாயைஒருகையால் மூடிக்கொண்டு அழுது துக்கித்துசுவாமி எஜமானனேகேட்பீராக என்பிள்ளைபாம்பு கடித்திறந்து போனான் ஆகையா லினிநான் அந்தஇடத்திற்குபோக உம்முடைய திருவுள்ளமெப்படியோ தெரிகிலேன் சொல்லுமென்றாள் சந்திரமதி-எ-று.

சினக்கடுஞ்சொல்லாற்சீறித் திடுக்கிடவுரப்பிவீணி
எனக்குறுகுறையேயன்றி யென்பொருட்கழிவுவந்தால்
உனக்குறுகுறைதானுண்டோ வுறவிலைப்பட்டபையல்
தனக்கொருதாயுமுண்டோ தவிர்கநீபோவதென்றான்.

இ-ள்- அதுகேட்டுக்கோபங்கொண்ட கடுஞ்சொற்களுடனே சீறி வைத்து சந்திரமதிதிடுக்கிடும்படி அதட்டி அடிபபன்படாதவளே என்பொருளுக்குக்கெடுதி நேரிட்டால்எனக்கு மிகுந்தகுறைவேயல்லது உனக்கு வருவதானகுறைவுவேதேனுமுண்டோ எனக்காகவிலையான அந்தப்பையனுக்கு ஒருதாயானவளுமுண்டோ இல்லை நீ போகவேண்டாமென்று சொன்னான்-எ-று.

அடிமையேயெனினுமையா வந்தரத்திறந்தானென்றால்
கொடியனென்றனக்குப்பெற்ற வயிறுதானகொதித்திடாதோ
படியின்மேலிறந்தான்றன்னைப் பார்த்தெடுத்தடக்கிக்கங்குல்
விடியுமுன் வருவேனென்று விடையெனத்தொழுதுவீழ்ந்தாள்

இ-ள்- அதற்குஐயரே உமக்கு அடிமைதான் ஆனாலும் என்கண்கா
ணாதவனாந்தரத்திலே அந்தப்பையனிறந்துபோனா னென்றுசொல்லக்
கேட்டால் பாவியானஎனக்குப் பெற்றவயிறுதானே கொதிப்புக்கொ
ள்ளாதா ஆகையால் எங்கேபோரிடத்திலே இறந்துகிடக்கிறவனைத்
தேடிக்கண்டு பிடித்து எடுத்தடக்கஞ்செய்து பின்புஇராத்திரி விடிவ
தற்கு முன்னேவந்துவிடுகிறேன் நீர்தயவுசெய்து உத்தரவு கொடுத்
தருளு மென்றுவணங்கிக் கீழேவிழுந்தாள்-எ-று,

மாலையங்குழலாள்கூறமறையவன் மனம்பொருந்தி
வேலைகள்மிகவுமுண்டு விடியுமுன்வருவாயாகில்
நீலவேல்விழியாய்போகுக யெனவொருகாற்சொன்ன
காலையேயெழுந்திருந்து கடிநகர்கடந்துபோனாள்

இ-ள்- அப்படிபூமாலையணிந்தழகுகொண்ட கூந்தலையுடையசந்தி
ரமதிசொல்ல அந்தப் பிராமணன் மனதுசம்மதித்து நாளைத் தினம்
என்வீட்டிலே அதிகமாக வேலைகளிருக்கின்றன அவைகளெல்லாஞ்
செய்வதற்காக நீவிடிகிறதற்கு முன்னேவருவாயேயானால் நீலமலர்
போலவுமசேல்போலவுங்கண்களை யுடையவளே போவென் றொருத
ரஞ் சொன்ன அப்பொழுதே யெழுந்திருந்து அந்தகாவல் கொண்ட
பட்டணத்தைகடந்து போயினாள்-எ-று.

பாவியென்மகனேயென்பள் பதைப்பள்மென்முகத்தின்மோ
தாவியேவிழுவள்நின்று தயங்கியேமயங்கிவீழ்வள் [நித்
காவியங்கண்ணீர் பாயக்கதறுவள்பதறியேங்கி
ஆவியைத்தேடித்தேடி யலமருமுடலமொத்தாள்

இ-ள்- பாவியான எனதுபுத்திராவென்று கூவுவாள் போகும்போ
தே பதைபதைத்து கீழேவிழுவாள் பின்னுந்தன முகத்திலே அடித்
துக்கொண்டு தாவிப்போய் அப்புறத்தே விழுவாள் அங்கே கிடந்து
தயங்கியு மயங்கியும் விழுவாள் நீலமலர்போன்ற கண்களிலே நீர்சிந்
தக்கதறுவாள் அப்படிகதறியும் பதறியும் ஏங்குதலாகி உயிரைத்தே
டியலைகிற உடம்புபோலானாள்-எ-று,

ஆறெலாமடிகள்வைத் தடியெலாம்விழுநீர்நின்ற
தூறெலாமரிவைசென்ற சுவடெலாங்குருதிதொட்ட
மாறெலாங்கூந்தழன்று வனமெலாந்துணிகள்யார்க்கும்
தேறலாந்தகைமைத்தன்றுச் செடியெலாந்தேடிச்சென்றாள்

இ-ள்- அப்படி அவள்போகிறவழிகள் முழுதும் அவள் கால்கள்ப
திந்திருக்கின்றன அந்தக்கால் பதிவாகக்கண்ணீரொழுகுவன வாயின
அங்குள்ள முள்ளுச்செடிகள் உடம்பைக் கிழிக்கிறதினாலே அந்தச்
சந்திரமதிபோகின்ற காற்சுவடுகள்விழுவதும் ரத்தஞ்சிந்துதலாயின

பின்னுமந்தச்செடிகளின் மாதுகள் கூந்தலைப்பற்றியிழுக்கவும் அந்த செடிகளெல்லாம் இடையிலுள்ளகல்லைத்தீத்துணிகள் கிழித்து கிடக்கவும் இல்லபடியொரு எப்படிப்பட்டவர்களும் தெளிந்துசொல்லவொண்ணுதபடியாக அந்தச்செடிகளுக்குள்ளாகவில்லே தேடிக்கொண்டுபோனுள்-எ-று.

ஒருமாருள்ளமெல்லா முருகினுள்கருகிமேனி
வாடினுள்விருதுலைத்த வீட்டத்திருக்குக்கேவந்தாள்
காடினுள்கழுகுபேயுநரி கநுக்குறாநுந்தன்றி
கூடியமுழுவுறும்பண் குயரமேச்செல்முகண்டாள்

இ-ள்- அப்படித்தேடிக்கொண்டேபோனுள் மனமெல்லாமுருகிக்கரைந்தாள் உடம்பெல்லாங்கருகி வாடினுள விருதுகலைமலைத்துக்கிடக்கிற அந்தஜலமாத்தினருகேவந்தாள் அங்கேவந்து தேடினுள் கழுகுகளும்பேய்களும் நரிகளும் பூதங்களும்நெருங்கி கூடியிருக்கிற கூட்டத்தினிடையிலே தன்பிள்ளையைப் போய்க்கண்டாள்-எ-று.

கண்டனள்கதறிவீழ்ந்தாள் காரிகையிரியல்போகக்
கொண்ட தோர்மகவினுடைய பாவியைக்கொல்லைகொல்ல
முண்டகக்கரத்தாலேந்தி முருகினமடிமேல்வைத்தே
அண்டருமருகுமேங்கவாய் திறந்தரற்றலுற்றாள்

இ-ள்- அப்படிக்கண்டாள்கண்டவுடனே ஓவென்றுகதறிக்கொண்டு கீழேவிழுந்தாள் அங்குள்ளகழுகு முதலானதெல்லாமபயந்தோடிப்போகத்தான் கொண்டதான ஓபுத்திரனென்கிறவஞ்சை அவருயிரைக்கொல்லை கொண்டுபோவதாகத்தனது தாமரைமலர் போன்றகைகளிலே பிள்ளையையெடுத்து மடிமேல்வைத்துக் கொண்டுதேவர்களுமயங்கிப் பிரலாபிக்கும்படி வாய்திறந்து பிரலாபிக்கலாயினுள் வேறுமன்று முருகன இலையுள்ளவள்-எ-று.

வேறு.

பனிபாவிக்குவெயிலாமலர்த்த பரியாவிக்குமுலவா
அனியாயவெங்கணைராவாயிரக்க வழிபாவவென்னெனரிதேன்
தனியேயிடக்குவிடகோய்சொரிந்து தவமீருருந்தடமகனே
இனியாவருமபியும்பிரகாசம்யென்னானாகப்போலும்யாருமலனே.

இ-ள்- மகனேபனியினுல் உன்னுடம்பு நனைதலாகியும்பின்புவெயிலினுலே காய்தலாகியும் பசியினுலே வருந்தலாகியும் சாவாமல் பாரையுங்கடிப்பதான அநியாயச்செய்கையையுடைய வெவ்விய கண்களோடுங் கூடின ஒருபாம்பினுலே இறந்துபோகலான அதிகபாவம் யாது செய்தாயோநான் தெரிகிலேன் இக்கே ஒருவனுக்கு கிடாது விடமாகிய விஷத்தைபிடித்து மண்மேற் புரண்டு கிடக்கிற புத்திரனே

இனியாரை வேண்டி உயிர்வாழக்கடவோம் எனது தலைவனு நானும் நாங்களிருவரும் உயிர்வாழ்தல் வீணானதாமே-எ-று.

நிறைதயோதசைபெற்றபனிறையோதசையற்று நிலையாய்நிறைந்தருகின்
சிறையோதயுற்ற செடிபுடைநந்த வதிர்விடைதருதலையிலா
மறையோனிறக்கவனநாடழைத்து வெருவாதளித்துவடிவேல்
இறையோனளித்த மதலையாரு மிடைவாகிதித்தலிதியே

இ-ள்- நிறைந்த ஒளியைக்கொண்ட பரத்தியக்கள் மழுக்கங்களி ல்லாமல் வரிசையாய் நிறைந்திருக்கிற சதுரங்களினுடைய நிறைதிக் கொள்ளுகிற சத்தங்களைக் கொண்ட செடிகளுக்குள்ளே நீ இறந்து போகப் பிரமதேவனுனைப் படைத்து சேர்த்தானோ ஒருபிராமணன் யாசிக்க தனதுவளநாடு முழுதும் கொடுத்த கூரிய வேலாயுதத்தையு டைய அரசனைபெற்றபுத்திரனே உனக்குஇவ்விடம் இப்படிதானோ விதி வாய்த்தது-எ-று.

வானின்றிழிந்து சொரிகின்றதாரை மழைபோலவிழ்விழிநீர்
யானின்றிமேனி யுதிரக்கலந்த வுயிரின்றிவெம்புதழலின்
மேனின்றிவெந்த தளிர்போல்தயங்கி விதியாலையிகொண்டுதனியே
யானின்றிரங்க வேண்டுமென்பதில்லை விதுசெய்வாயுனதுமகனே

இ-ள்- ஆகாயத்திலிருந்திறங்கிப் பொழிகின்றமழைத்தாரையைப் போற்கண்ணீர்தாருகவும் பிராணபலமில்லாமல் வெப்பமாகிய நெ ருப்பின்மேலேயிருந்துவெந்த தளிரைப்போல் வாடிப் பிரமதேவனை நொந்து கொள்ளுகிறதாய் நானொருத்தியாகநின்று பிரலாபிக்க நீ பிரலாபிக்கிறதென்பதில்லாமல் கிடக்கிறதான இதுதானோ உனக் குரியாயமாக முடிந்தது புத்திரனே-எ-று, [ளா

செங்கோலறத்தின் முறையேசெலுத்து திறலோனெவர்க்குமுரவோ
னெங்கோபயானை விறன்மன்னனைம்மை மீட்கவெண்ணவருநாள்
பங்கேருகத்து மலர்போல்விளங்கு வதனமகிழ்ந்தபரிவால்
எங்கேயெனைச மகனென்றுரைக்கி லெதிரேதுசொல்வன்மகனே

இ-ள்- தருமநீதிப்படியேசெங்கோல்செலுத்துகின்றசாமர்த்தியனு ம் எப்படிப்பட்டவர்களும் அறிவாற்சிறந்தவனுமாகியும் வெவ்விய கோபத்தைகொண்ட யானையையுடைய வெற்றியால்மிக்க நமதரசன் நம்மிருவரையும் தானவாங்கின பொருளைக்கொடுத்து மீட்டுக்கொள் ளவரும்போது தாமரைமலர்போலும் முகத்தையுடைய மகனே தா ன்மீட்கவந்த சந்தோஷத்தினாலே என்னுடைய பிரியமுள்ள புத்திர னெங்கேயென் றென்னைக் கேட்டால் அப்போதுமகனே யதுமொழி யாதுசொல்லக்கடவேன்-எ-று.

நீராளவாவி செறிநாடனைத்து நிறைமாதவற்குதவி னும்
பாராளுநீர்மை தொடர்பற்றதனது படியாளுமெந்தைதமுடிவில்
காராளரேர்கள் கடவாமைபோயில் கன்றோசிநாடதனைமேல்
ஆராளவல்லரதவேலனத்தி லரவாலிறந்தமகனே.

இ-ள்- நீர்நிரம்பக் குளங்கள்நெருங்கிய கோசலநாடு முழுதும் நிறைவான பெரியதவமுனிவனுக்குக் கொடுத்து விட்டாலும் உலகத்தை ஆளுவதான சம்பந்தத் தன்மை உனக்கில்லாமல் போனதன்று உன்பிதாவைப்போலவே ஒருநாட்டையாளுகிற என்பிதாவின் கால் முடிவுபெற்றால் வேளாளர்கள் ஏர்களை ஓட்டுகிறதை ஒய திருக்குள்ள சன்றோசிநாட்டைப் பின்பு நீயல்லது இனியார் ஆள்வார்கள் ஐயோ விஷமிக்கக்காட்டிலே ஒருபாம்பினாலே இறந்துபோன குமாரா-எ-று.

நல்லோர்வகுத்த முறையாமறங்க ளறுநெட்டிலொன்று குறையோம்
இல்லோரையற்ப மிகழோமிரக்கு மிறையன்றியேகவுனாயோம்
சொல்லோமறுத்துமுறைபெருமறைத்துறவோர்கள் புத்திகடவோம்
எல்லோர்தமக்கு மினிதேவினைப்ப மேதாகவந்ததிதுவே.

இ-ள்- நனறுணர்ந்த பெரியோர்கள் சொன்னதருமங்கள் முப்பத்திரண்டிலே ஒருதருமமாயினுங் குறையாது செய்தோம் எளியவர்களைக் கொஞ்சமேனு மிகழ்ச்சி செய்திலோம் நாங்களரசராகையால் கொடுத்துத் தீர்ப்பதான பகுதிப்பொருளான ஆறிலொருபங்கையல்லது அதிகமாக விரும்பினோமல்லோம் பொய்சொல்லியறியோம் கேட்டவர்களுக்கு இல்லையென்று மறுத்துச்சொல்லிலோம துறவறத்தார் சொன்ன புத்தியைக்கடந்து சென்றிலோம் யாவருக்கு நன்மையையே செய்துவந்தோம் இப்படியிருக்கச்சே எந்தகாரணத்தினாலே இப்படிப் பாம்புகடித்துச் சாவதானதெங்கள்பிள்ளை-எ-று.

மறைநீதியுற்ற பிறநாடழித்து வருசேனையாள்வதறியோம
அறைநீதிமுற்று முணராவமைச்சை யணிவாயில்வைத்துமறியேம்
குறையேயிழைத்து வினையேவிளைத்த குடிவைத்திருந்துமறியேம்
இறையேதவத்தின் வினைவேயெவர்க்கு மிதுவோவிதித்தவிதியே

இ-ள்- வேதநீதிபடிநடக்கிற அன்னியர்நாட்டைக்கொடுத்து அங்கிருந்துவந்து கூடுவனவான சேனைகளை ஆளுஞ்செய்கையைத் தெரிந்தோமல்லோம் பெரியோர்கள்சொன்ன நீதிமுழுதுந் தெரியாத மந்திரியை எங்களழகிதான அரமனை வாயில் வைத்தாளவுந் தெரிந்திலோம் குறவானவைகளையேசெய்து பாவச்செய்கைகளையேமென்மே

ளும்வளர்கிற குடிகளை எங்கள் காட்டிலே குடிவைக்கவுந்தெரிந்திலா
ம் இப்படிக்குச் செருக்காதே எங்களுக்கும் ஒழிசெய்வமே ஓ எங்கள்
தவப்பயனே நீங்கள் அமைத்த அமைப்பு இப்படியாய்புகுடித் திறப்ப
தோசொல்வீர்கள்-எ-று.

கனமுந்தருக்கள் குலமுந்தருத்த கரமும்பெருத்தவுரமும்
தினமுஞ்சிறக்கு முகமுந்தரித்த சிகையுங்கிடக்குமுறைகண்
டினமுந்தரித்த துயிரானபாவி யிறவாமலென்றன்மகனே
மனமுந்தரிப்ப திலைதாங்குபெற்ற வயிறுந்தரிப்பதிலையே

இ-ள்- கைமாறுவேண்டாதுகொடுக்கிற மேகச்செய்கையையுங்கற்ப கமுதலான தெய்வவிருட்சங்களினுடைய செய்கையையுங் கொண்ட கையும்பெரிதான சாமர்த்தியமும எப்போதும சிறந்துள்ள முகமும் தலையிலேகொண்டகுடுமியும மண்மேற்கிடக்கிற வகைகளைக் கண்டும் இன்னமும் என்னுயிரானபாவி சாவாமலிருக்கிறதாயிற்று எனது குமாரகா இனிஎன்மனமும் தாங்குகிறதாயில்லை வருந்திப்பெற்றஎன வயிறுந் தாங்குகிறதாயில்லை நீயிறந்ததாலான துன்பத்தை-எ-று.

பரவாதிகட்டு மிகவேவிளைத்த படிபோலுளத்திலறமே
விரவாததுட்ட முனிகௌசிகற்கு வினையேயிழைத்தகுறைபோல்
கரவேபிடித்து வழியேயளித்த களிறுவிசெற்றகடுவாய்
அரவேயுனக்கு முளதேபகைக்க வெளியேனிழைத்தவினையே

இ-ள்- ஒருசமயவாதிகள் மற்றொருசமயவாதிகளுக்கு மிகவும் இடர்செய்கிறதுபோல் எங்கள்விஷயமாகத்தமது சித்தையிலேதரும குணங்களை யெவ்வளவுங் கொள்ளாத கொடுஞ்செய்கையை யுடைய கௌசிகமுனிவருக்கு நாங்கள்பண்ணின குறைவைப்போல எளியவனான நான் பெற்ற இளைபாளைபோன்ற புத்திரனுயிரை மறைந்திருந்துவந்து போக்கின விஷவாயையுடையபாம்பே இப்படிவிரோதஞ் செய்வதான உனக்குப்பிறரால் ஐயோவென்றிரங்கத்தக்க நான்செய்த குறைவுண்டோ-எ-று.

என்னாயகன்றன் மணிமார்பிலேறி விளையாடுகின்றவெழிலோய்
முன்னாய்விளைந்த கனலூழ்கவெமமின் முதலேகடந்தமதலாய்
செந்நாய்திரண்டு செறிகானிருந்து தெளியாதிறங்குமெனைநீ
அன்னாய்வருந்தலையெனாதுன்ற னறிவுக்கடாதுமகனே

இ-ள்- எனதுநாயகனுடைய அழகிதான மார்பிலேறி விளையாடத் தக்க செல்வக் குமாரா முன்னே மூண்ட நெருப்பிலே யெங்களுக்கு முன்னேபோய்விழப்போன குழந்தாய் செந்நாய்கள்கூடிநெருங்கின இந்தக்காட்டிலேயிருந்து மனந்தெளியாமலழுகின்ற என்னைப்பார்த்துதாயேவருந்தி யழாதே யென்று சொல்லாமற் கிடக்கிறது உன் புத்திக்குத் தக்கதல்லவே ஓபுத்திரா-எ-று.

மறவாளெயிற்று மணிமாசுணத்தின் வாயாலிறந்துளவெனோ
டிறவாதிருந்த மறிபாவிதன்னோ டுறவேதெனக்கருதியோ
நிறவாய்சிவந்த கனிவாயுரைத்தல் செயிலாய்முகத்துவிழியாய்
பிறவாதகித்த வடிவேவளர்த்த பெருமானளித்தமகனே

இ-ள்- கோபத்தையுடைய வாள்போலும பற்களைக் கொண்டதாய் ரத்தினத்தையும் தலையிலே கொள்வதான ஒருபாம்பினது விஷபலத்தினாலே இறந்துகிடக்கிற உன்னுடனேகூடச் சாவாதிருக்கிற அதிக பாவியான வெனக்குடனே உறவுகொள்ளுகிறதினாலே என்ன பிரயோசனமென்று நினைத்தோ உனது சிவந்த கனிபோன்றவாயாலொருசொற்சொல்லாதிருக்கிறாய் உன் முகத்திலும் விழியாதிருக்கிறாய் பிறத்தலில்லாத கடவுள் திருவடிகளையே அறிகின்ற பெருமையையுடைய அரசன் பெற்றகுமாரா-எ-று;

வடிவேலவெற்றி நெடுவேல்மலர்க்கை மகனோடிறந்துமடியாக்
கொடியேன்முகத்தில் விழியார்முனிக்கு வளநாடளித்தகொடையார்
இடியேறுடைத்த மரமாகியென்னை யிடையேயுழைக்கலுறவோ
அடியேனைநோக்க முடியாதிருந்த வதிபாவமிக்கயமனே

இ-ள்- கூர்மையேறின வெற்றிகொண்ட திண்டவேலைப் பிடிக்கிற மலர்போலுங் கைகளையுடைய மகனுடனேகூடச் செத்துப்போகாதிருக்கிற பாவியான என்முகத்திலே இனி விழிக்கமாட்டாரயாவென்றால் ஒருமுனிவருக்குத் தனதுவளநாடு முழுதுங் கொடுத்தபிரபுவானவர் இடியேற்றினாலே பட்டுப்போன மரம்போலாகி மண்ணிலே கிடந்து நான்வருந்துதல் உனக்கு அழகாயிருக்கின்றதோ என்னையுங் கூட்டிக்கொல்லாதிருக்கிறது யமனே மிகவும அநியாயம்-எ-று.

வேறு.

எனமருந்தியிவனுடனேயிறந்தேதமாகி
யிவனையெடுத்தெரித்தடக்கவுரியாரிலை
மனமுருகாவம்மைவிலைகொண்டோன்சால
வன்கண்ணனென்மனையுவன்றனின்மாபாவி
யினமுடையாரிழிபுறமதற்செல்லேனதற்
செலுவனின்றனைக்கருக்கிச்செல்வனென்று
தனதுதிருமகனையெடுத்தணிதோள்வைத்துத்
தள்ளாடிமதிதயனோர்தனைமையீண்டாள்.

இ-ள்- என்றுயிரலாபித்து இந்தமகனோடேகூட நானும்செத்தேனேயானால் இந்தப்பிள்ளையை யெடுத்துக்கொண்டுபோய்த் தகனஞ்செய்து அடக்கஞ்செய்யத்தக்கவர்க ளொருவருமில்லை நம்மை விலைக்குவாங்கினவன் இந்தசண்டி மனயிரக்கான் மிகவும் பொல்லாதவன் ஆவன்

பெண்டாட்டியோ அவனிலும் பெரியபாவி அவ்விருவரும் மிகவும் கோபமுள்ளவர்கள் விடிவதற்குமுன்னே நான்போகாதிருந்தால் அதிக தண்டனைசெய்வார்கள் ஆகையால் இந்தப்பிள்ளையைவிரைவிலே போய்த்தகனஞ் செய்வித்துப் பின்பு போகக்கடவேனென்றதனது புத்திரனையெடுத்து அழகான தோளின்மேலே சாய்த்துக் கொண்டிருக்குமாரனைத் தூக்கமாட்டாமல் தடுமாறிதளர்ந்தவளாகச் சந்திரதயராஜனுடைய குமாரியான சந்திரமதியானவள் மயானநோக்கிச் சென்றாள்-எ-று,

காடுமேடிருஞ்செறிந்தசெந்நாய்முன்னே
    கௌவியிழுத்திடப்பறந்துகழுகுமோதப்
போடுபோடெனப்பலபேய்தொடரக்கொண்டு
    போடுகெனவெனக்கொடியபூதஞ்சூழ
மாடுதோறும்பரிக்கரிகடாவ
    வார்குழலுஞ்சோர்ந்துவிழும்வனந்தொட்டிக்க
ஈடுபாடித்தனையும்பட்டுநீண்டூள்
    நீடுகாடுநீந்திநெடுஞ்சுடுகாடுற்றாள்

இ-ள்- காட்டிலும் மேட்டிலுந்திரண்டுநிற்கின்ற செந்நாய்களுக்கு முன்னே வாயாற்கொத்தி யிழுப்பதற்காகப் பறந்துவந்து கழுகுகள் மோதவுங் கீழே போட்டுவிடு போட்டுவிடென்றுபலவிதமானபசாசுகள் தொடரவும விகொண்டுபோகாதேயென்று கொடுமையான பூதங்கள்சூழவும் பக்கங்களெல்லாம் வந்து பிள்ளையைப் பிடுங்கிக் கொண்டு போகுதற்கு நரிகள்தாண்டி விழவும் நீண்ட கூந்தலையும் அவிழ்ந்து தொங்குகிற வஸ்திரத்தையும் காட்டிலுள்ள முள்ளுகளு மாறுகளுஞ் சிக்கியிழுக்கவும் இப்படித்தடைபடுகிற இவ்வளவுபட்டுநீண்டமுட்கள் தைப்பதான காடுமுழுதுங் கடந்து கொடிதான சுடுகாட்டைப் போய்ச் சேர்ந்தாள்-எ-று.

பிணங்கள்சுடுங்கடும்புலையராவத்தாலும்
    பிளந்துதலைவெடித்திடுபேரமலையாலும்
நிணங்கருகிச்சுறுநாறுமடையினாலும்
    நெடுங்கனலின்கொழுந்தெழுந்தவிப்பினாலும்
கணங்கண்மிகக்களித்தாடுந்துழனியாலுங்
    கனற்பொறியின்மலிவாலும்புகையினாலும்
சுணங்குபலபிணங்குபெருங்காப்பினாலுந்
    தோகையுமிகத்துணர்ந்து கொடுஞ்சுடலைசார்ந்தாள்.

இ-ள்- அங்கேபிணங்களைச் சுடுகிற கடுமையான பறையர்களுடைய சத்தத்தினாலும் அந்தப்பிணங்களின் தலைகள் பிளந்து வெடிக்கிற

பெரிதான சத்தத்தினாலும் பிணங்களினுடைய கொழுப்புகள் கருகிச் சுறுசுறுவென்று நாறுகிற புலால்நாற்றத்தினால் நீண்ட நெருப்பின் கொழுந்து கிளறுகிற உயர்ச்சியினாலும் பூதமுதலானகூட்டங்கள் மிகவுஞ்சந்தோஷித்து கூத்தாடுகிறசப்தத்தினாலும நெருப்புப் பொறிகளின் மிகுதியினாலும புகையினாலும்பலநாயகள் ஒன்றோடொன்றுவிரோதித்துக்கொள்கிற பெரிய சத்தத்தினாலும் சந்திரமதி சுடுகாடென்று தெரிந்துகளித்து அந்தக்கொடிதான சுடுகாட்டைப் போய் நெருங்கினாள்-எ-று.

கண்டனளிதுவெனக்கருத்திலுன்னிக்
 கடவுளர்தங்காவலிற்றன்மகனைவைத்துப்
பண்டுவெந்துகரிந்தகுறைக்கட்டையெல்லாம்
 பலதிசையும்விரைந்தோடிப்பார்த்தெடுத்துக்
கொண்டுவந்துபிணங்கள்சுடுஞ்சுடலைநண்ணிக்
 கொள்ளியெடுத்தோடியனல்கூட்டிமூட்டி
மண்டுதழற்கட்டையின்மேல்மகனைவைத்தாள்
 வளர்ந்தெரியுங்கனல்விளக்கமன்னன்கண்டான்

இ-ள்- அப்படி நெருங்கப் போய்க்கண்டாள் இதுதான் சுடுகாடென்று மனதிலேயெண்ணி அங்கே தெய்வங்களினுடைய காவலுக்குள்ளாகத் தன்பிள்ளையைவைத்துவிட்டு முன்னேவெந்து தீய்ந்துகிடக்கிற குறைக்கொள்ளிக் கட்டைகளையெல்லாம் பலதிக்குகளிலும்அதிசீக்கிரத்திலே ஓடிஓடிப் பார்த்தெடுத்துக் கொண்டுவந்து பின்புபிணங்களைச்சுடுகிற சுடலையினிடத்திலேபோய் அந்தச்சுடலையில் ஒருகொள்ளிக்கட்டையை யெடுத்துக்கொண்டோடிவந்து நெருப்பைச் சேர்த்து மூளப்பண்ணி அப்படிப்பற்றி யெரிவதானநெருப்புக்கட்டையின்மேலே மகனைவைத்தாள் அப்போது மூண்டெரிகிறநெருப்புவெளிச்சத்தினாலே அதை அரிச்சந்திரனாகிய அரசன் பார்த்தான்-எ-று.

அரவுகடித்தரசிளங்கோவிறந்தானென்ப
 தறியாமல்வெகுண்டிறைவனாரோவிந்த
இரவுதனிற்பிணஞ்சுடுவாரறிவோமென்று
 வெழுந்திருந்துவிரைந்தோடிதேடிமூடி
தரவரியபொருளெனக்குத்தாராதேநீ
 தனியேயிப்பனியிருளிற்சலங்கொணர்ந்து
காவினமுற்சுடுவதுனக்கடைவோவென்றுக்
 கால்வீசிக்கான்முளையையெடுத்தெறிந்தான்

இ-ள்- பாம்பு கடித்துத் தனதரசுக்குரிய இளங்குமாரன் மடிந்துபோனானென்பதைத் தெரியாமல் கோபங்கொண்டு அரசனானவன் யார் இராத்திரியிலேவந்து பிணஞ்சுடுகிறவர்களவர்களை இன்னாரென்று தெரிவோமென்று எழுந்திருந்து அதிசீக்கிரமாகவிரைந்து ஓடி

வந்துஎன்னடி மூடத்தன்மையானவளே நீ தருதற்குரியபொருளை எனக்கு முன்னேகொடுக்காமல் நீஒருத்தியாகவந்து இந்தப்பனிக்கம் முதலையுடைய இராத்திரியிலே ஒருபிணத்தைக் கொண்டுவந்து வைத்து எங்களுக்குத்தெரியாமல் திருட்டுத்தனமாக நெருப்பை மூட்டிச்சுடுகிறது உனக்குத் தகுமோ வென்று தன் பிள்ளையைக் காலாலே தூக்கித் தூரத்தேயெறிந்தான்-எ-று.

எறிந்திடலுமுயிரேங்கவலறிக்கோடை
யிடிவிழுந்தாற்படிமிசையேயடிசாய்ந்தாடி
முறிந்துவிழுமரம்போற்சென்றடிமேல்வீழ்ந்து
மொழிகுழறிவிழியருவிசொரியவல்லி
அறிந்துமிலனிவ்வூரில்வழங்குநீதி
யருவினையேனருமிலியறவும்பாவி
மரித்தமகன்றனைச்சுடவந்தேனையா
வறியேற்குப்பொருளுளதோவழங்கவென்றாள்

இ-ள்- அப்படிஎறிந்தவுடனேஉயிர்சோர்வதாக அழுது கோடையிடிவிழுந்து அதனாலேபூமியிலே அடிவேரற்று அசைதலாகி முறிந்து விழுகிற மரத்தைப்போல போய் அவன் கால்மேல் விழுந்து வார்த்தைகள் குழறுதலாய் கண்களிலே அருவிபோல் நீரொழுகசந்திரமதியானவள் ஐயா இந்த ஊரிலே வழங்குவதான நியாயக் கிரமத்தை எவ்வளவுநான் தெரிந்தேனல்லேன் பாதபாவஞ்செய்துள்ள நானே ஆருமற்றவள் மிகவும்பாவி இறந்துபோன என்பிள்ளையைச் சுடுதற்கு நானொருத்தியாகவே வந்தேன் ஆதலால் ஐயனே உமக்குக் கொடுக்க எளியவளான என்னிடத்திலே எப்படிப்பொருளுண்டாயிருக்கும் என்று சொன்னாள்-எ-று.

பொருளுடையேன்றமருடையேனானாலிந்தப்
புத்திரனைத்தோண்மீதுவைத்துப்போந்திவ்
விருளிடையிற்சுடலையில்வந்தெய்துவேனோ
வெரிந்தகுறைக்கட்டையிலேற்றுவேனோ
தெருளுடையாயறமுடையாய்வினையேனின்ற
சிறுவனையான்சுடக்கருணைசெய்யாய்தேயா
அருளுடையாயாதாரமற்றேற்குன்ற
னடியிணையேதஞ்சமெனவலறிவீழ்ந்தாள்.

இ-ள்- பின்னும் பொருளுள்ளவளாய் உறவின்முறையுமுடையவளானால் நான் இந்தப் பிள்ளையை என் தோளின்மேலே சாத்தி தூக்கிக் கொண்டுவந்து இந்தஇருட்டிலே சுடுகாடுவந்து சேருவேனோ இன்னமும் எரிந்தவிழ்ந்துகிடக்கிற குறைக்கொள்ளிக் கட்டைகளை அடுக்கி

அதன்மேல் பிள்ளையைப்பெற்றே இதெல்லாந்தெரிந்துகொண்டவரே தருமந்தெரிந்தவரே பாவியான நான்பெற்றபிள்ளையைத்தகனஞ்செய்வதாக நீர்கிருபைசெய்யவேணும் குறையாத இரக்கமுள்ளவரே யாதொரு ஆதாரமுமில்லாத எனக்கு உம்முடையபாதங்களிரண்டுமே ஆதாரமென்றுசொல்லி அரசன் கால்மேலே அலறிக் கொண்டுபோய் விழுந்தாள்-எ-று.

பொன்னனையாய்விடுவிடுயாண்டலையவென்னிற்
　புலையனுமல்லேன்புலையற்கடிமைகண்டாய்
என்னடிநீதீண்டுவதுதகாதுநீதா
　னிப்பொருட்கியானுரியனலேனென்னையாள்வோன்
சொன்னபணங்காணுங்கொள்ளியாடைத்
　துண்டமொன்றுண்டு தந்துசுத்தியன்பால்
அன்னவன்றான்படியாகவெனக்குத்தந்த
　வாய்க்கரிசியானளிப்பேனறிதியென்றான்

இ-ள்- அப்படி விழுந்து காலைப்பிடிக்கிறதைக் கண்டு ஓ லட்சுமிக்கொப்பானவளே என்காலை விட்டுவிடு நான் சுடுகாட்டுக்குச் சொந்தமான பறையனென்று நீகொள்வாயானால் அந்தஎஜமானனானபறையன் நானல்லேன் நானே அந்தப் பறையனுக்கு அடிமையானவன் நீ என்காலைத்தொடுகிறது உனக்குத்தகாது இந்தப்பொருளுக்கு நான் சொந்தக்காரனல்லன் என்னை அடிமையாகக்கொண்டவன்சொல்லியிருக்கிற காற்பணமுண்டு கொள்ளித் துண்டு வஸ்திரமொன்றுண்டு ஆகஇவ்விரண்டையு நீகொடுத்து விட்டுச் சுட்டுக்கொள் பிரியத்துடனே அந்தஎஜமானன் பறையன் எனக்குப்படி செலவாகக்கொடுத்த வாய்க்கரிசியை வேறுமாறுதலுனக்குப் பிரியத்துடனே நான் கொடுக்கிறேன் இந்தப்படிதான் இந்தவூர்ச்சுடுகாட்டிலே நடக்கிற வழக்கம் தெரிந்துகொள்ளென் றரசனசொன்னான்-எ-று.

துஞ்சியமைந்தனையெடுத்துச்சுமந்துபோந்து
　சுடுவாரற்றிடுகாட்டிற்றோண்மேலேற்றிப்
பஞ்சிபடும்பாடுபடுப்பாவியேற்கும்
　பணமேதுகொள்ளிமுறிப்பாதியேது
நெஞ்சுதளர்ந்தருவினையேன்வருந்தக்கண்டு
　நீயிரங்காயெனவிரந்துநிற்குங்காலை
வஞ்சிதிருமணியிடற்றில்லயங்காணின்ற
　மங்கலநாண்கண்டிறைவன்மகிழ்ந்துஞ்சொல்வான்

இ-ள்- அதற்குஇறந்துபோன புத்திரனை தூக்கிசுமந்துகொண்டுவந்து சுடுகிறவர்களில்லாமல் சுடுகாடுவரையிலுந்தோள்மேல்தாங்கிபஞ்ச

படுகிறபாட்டெல்லாம்பட்டு இன்னமும் அப்படியே படுவதான பாவியான என்னிடத்திலும் எப்படிப்பணமுண்டாகும் கொள்ளிவஸ்திரத்துண்டு எப்படிகிடைப்பதாகும் மனமிரங்காதிரவில்லாதபாவியான நான்வருத்தப் படுகிறதைக்கண்டு நீயேதாயது செய்யவேண்டுமென்று நல்லவார்த்தை சொல்லிக்கொண்டிருக்கிறபோது அச்சந்திரமதியினுடைய அழகியதான திருக்கழுத்திலேவிளங்குகின்ற திருமங்கிலிய சூஸ்திரத்தைக்கண்டு அரசன்பின்னுஞ்சொல்லுகிறான்

நல்லநல்லதிரச்சயர்த்திநீயேகண்டே
　　னன்னுதலாரனைவரினுமிந்திரஜாலம்
வல்லைவல்லைவிற்குதருங்கணைவேலைசெம்பொன்
　　மங்கலநாணுன்கழுத்திலிருக்கவிவணும
இல்லையெனச்சொல்லுவதுசற்றுமேலா
　　இதனையெனக்கீவாயென்றியம்பவேடர்
பல்லமுயிர்விலைவாயிர்பட்டமான்போற்
　　பதைபதைத்துப்பைந்தொடியாள்பதறிவீழ்ந்தாள்

(இ-ள்) நீநல்லவளே மிகவுஞ்சமத்துள்ளவள் நீயேநான்பார்த்தேன் நல்ல நெற்றியையுடைய பெண்களெல்லாரினும் இந்திரசால வித்தையில் வல்லவளா யிருக்கிறாயென்ன புகழ்வதுபோலக்கூறி நீ அடுக்கினவிற்குகள் கூட இருடியேகொண்டுவந்திருக்கிறாய் செந்த பொன்னாற்செய்த திருமங்கிலியசுயிற்றுடனே உன் கழுத்திலிருக்கச்சே ஒன்றுமில்லையென்று சொல்லுகிறது சிறிதும் பொருந்தாது இந்தத்தாலியையெனக்குக்கொடுக்கவேண்டிய பொருளாகக்கொடுவென்றுசொல்லலே வேடர்களுடைய அம்புகள்மிக்க குழிச்சிவாசலிலே அகப்பட்டமானைப்போலே துடிதுடித்துச் சந்திரமதியானவள் பதறிவிழுந்தாள்-எ

வேறு

வாடினுடலார்ந்தாண்மலர்மாமுகம்
கோடினாள்குலைந்தகரவலைந்தாள்கொடுங்
கோடினுள்வந்ததென்றுகிலேசமெய்
கூடினுணெடுமூச்செறிந்தாளரோ

(இ-ள்) உடம்பெல்லாம்வாடினாள் [illegible]யினாள் தாமரைமலர்போலும் பெருமைபொருந்திய முகங்கோணினாள் தலையாலைந்தாள் பயந்தான்வருந்தினாள் கொடிதானகேடுவிடப்போ[illegible]வந்து சேர்ந்ததென்று துன்பத்தைஉடம்பு நிரம்பகூடிநலானாள் பெருமூச்சும் விட்டாள்-எ

அலையிலாவரிச்சந்திரர்க்கல்லது
தொலைவில்பாவற்குந்தோற்றருமங்கலம்
புலையன்காணவும்போதுவதோவென
உலையின்மீதுமெழுகொத்துருகினாள்

(இ-ள்) எக்காலத்தும் வருந்துதல்கொள்ளாத அரிச்சந்திரமகாராசனுக்கேயல்லாம் வருந்துதலையுடைய எல்லாருக்கும் காணப்படாத எனது திருமங்கிலியமானது ஒருபுலையன் காணவுமாயிற்றே யென்று கொல்லனுலையின்மேலிட்ட மெழுகையொப்பா யுருகினாள்-எ-று.

இருளறுங்குணத்தெந்தைக்குநல்வரம்
அருளுங்காலத்தரவணிவேணியான்
திருவுளஞ்செய்ததிவ்வியமென்மொழிப்
பொருளுமித்தலம்புக்கபின்பொய்யதே

(இ-ள்) அஞ்ஞான நீங்கிய குணத்தையுடைய எனது தந்தைக்கு நல்லவரத்தைக் கொடுக்கிறகாலத்திலே பாம்பை யணிந்த சடையையுடையகடவுள் திருவுளங் கொண்டருளின திவ்வியமான ரகசியவார்த்தையிலுள்ள அர்த்தமும் இந்தவூருக்குநான்வந்த பின்புபொய்யாகப் போயிற்று-எ-று.

பனிமதிச்சடைப்பாவைபங்காளனார்
இனியவாசகமின்றுமுடிந்ததால்
புனிதனாரினும்பூவளந்தோனினும்
முனிவனேமுதியோனெனவேங்கினாள்

(இ-ள்) குளிர்ந்தசந்திரனைச் சடையிலேகொண்ட பார்வதி சமேதரான கடவுள்சொன்ன நல்லவார்த்தையானது இன்றோடே முடிந்ததாயிற்று ஆகையால் அந்தப் பரிசுத்தரான சிவனினும்உலகமெல்லாமளந்த விஷ்ணுவினும் விஸ்வாமித்திரரோ சிறந்தவராறு ரென்றழுதாள்-எ-று,

அற்புக்காழியனரிச்சந்திரன்
விற்பப்போயினமேன்மைக்குலத்தோடும்
போற்புப்போம்பொறைபோநிறைபோமென்றன்
கற்புப்போவதென்னென்றுகலங்கினாள்

(இ-ள்) இரக்கத்துக்குக்கடல்போன்றவராகில் அரிச்சந்திர மகாராஜன் விற்க அதனாலேபோனமேன்மை யுள்ளகுலத்துடனேஎன் அழகுதான் போகும்இவையெல்லாம் போனாலும் என்னுடைய பதிவிரதாநிலைபோவதற்குக்காரணமென்னவென்றுமனங்கலங்கினாள்-எ-று.

அனையகாலையரிச்சந்திரனுந்தன்
மனைவியாமிவளென்றுமனக்கொளாத்

தனையன்மாண்டதுதன்னையுட்கொண்டவா
நினைவைநீக்கிமறப்பையுறுக்கிறான்

இ-ள்- அந்தவேளையில் அரிச்சந்திரமகாராசன் தனதுபாரியையே இவளாமென்று மனதிலேகொண்டுதன் புத்திரனிறந்துபோனதையு மனத்துள்ளேகொண்டு தனதுஉள்ளத்துள்ள நினைவுபோய்ப் பின்பு அந்தநினைவு தப்பினதையுந் தேற்றிக்கொண்டான்-எ-று.

கள்ளவேகத்தரவுகடிக்கநம்
வள்ளலோவிறந்தானென்றமன்னவன்
உள்ளநோநொந்துயிர்த்துயிர்த்துப்புறம்
விள்ளலானுணாவிம்மிமயங்கினான்

இ-ள்- திருட்டுத்தனத்தால்வந்த வேகத்தையுடையபாம்புகடிக்கநமது புத்திரனான பிரபுவோ செத்தானென்றுதெரிந்து அரசனானவன்மனம்வருந்திவருந்திப் பெருமூச்சுவிட்டுப் விட்டு வெளியே ஒரு வார்த்தையுஞ் சொல்லாதவனாகி துக்கித்துமயக்கத்தை கொண்டான்

அன்னையின்றியருங்கானிலெய்திய
உன்னையோடியரவங்கடித்தலின்
பின்னையுமுன்னையும்விற்றவெவ்வினை
என்னையெவ்வணநொந்தனையெந்தலே

இ-ள்- உனதுதாய உன்கூடவராமல் அரிதானகாட்டுக்குள்ளேபோன உன்னைஓடிவந்துபாம்புகடித்ததினாலே அப்போதுஉன்தாயையும் உன்னையும் ஒருவருக்குவிலையாகவிற்ற என்னை எவ்விதமாக எண்ணி நொந்துகொண்டாயோ ஓபுத்திரா-எ-று

நந்தநாடுநலமுமிழந்துநீ
எந்தமோடுவந்திவ்வணம்பட்டனை
மைந்தனேயென்றனன்பெற்றவாழ்வுனக்
கிந்தவாழ்வளவோவென்றிரங்கினான்

இ-ள்- நம்முடையநாட்டையு நம்முடையசுகத்தையும் விட்டுநீயும் எங்களுடனேகூடவந்து இவ்விதமானாய்ஓமகனே என்னாலேநீ பெற்றசுகம் உனக்கு இந்தச்சுகத்தளவுதானோ வென்றழுதான்-எ-று,

ஒன்றிலாதஉயிரினையோம்பிரியோம்பிரியே
பொன்றிலாதுபுலையனுக்காட்பட்டான்
வென்றியேதினிமீட்கத்தகுவனோ
என்றிறந்தனையோவென்றியம்பினான்

இ-ள்- நிலைபேரில்லாத உயிரைவளர்த்துக்கொண்டு சாவமாட்டாமல் ஒருபறையனுக்கு அடிமையானான் அப்படியானஐயத்தையுடைய

அரசன் இனி நம்மை மீட்டுக் கொள்ள மாட்டானென்று மாட்டார்ச் சென் றனையாதலின் மீந்தத்துப்போது சொன்னதனையென்றான்-எ-று

எத்தனாளினி மெய்ந்நெறி நிற்பது
பத்தினிக்குமனைவிக்குமுப்பாரத்திருக்க
நித்தனாணையுடையபாதத்தினையபிரு
உத்தமனவமெ நீக்கியெபாவென்றான்

இ-ள்- நான்விலைக்குவித்தபோது என்னுடைய பத்தினைக் கடுசொண்டிருந்த உன் மனைவியும் புத்திரனையும் விலைக்கு கொண்டுபோனவனுடைய பார்க்குமிடமெல்லாருமுள்ள இன்னதனையென்ன வனாவிற்கு உனையிடத்தில் விற்கவில்லைத்துர்க்க எண் விடத்திலேவிசித்த பாவத்தை இனநீக்கியெனக்கு போவென்றான்-எ-று.

விலைபட்டாய்ப்பட்டுக்கொல்லாவாய்ப்பட்டிக்
கொலைபட்டாவல்லே தொலிந்தொண்டு தீடத்
தலைபட்டார்த்தாயியேனெ வெந்தகார்
தலைபட்டாயிதுவோவிதிலையபனே

இ-ள்- நீபோவியலாளும் அப்படிவிலையாயேயும் ஒருவெல்விதான பாயமினவாயிருள்ளயிரத்தால் பின்புஉனதுதாயாவலன் தானசார் தறிக்கொண்டுவர அவன்தோளுக்குள்ளாளும் இப்போதுதான் துக்கி யெரிய அதனுடே விலைதலைய அலைச்சப்பட்டாய் என் அப்பனே உவாக்கியபடியாலிப்படிநேர்ந்தது-எ-று

காதலாலுனைக்காணுதலாயும்
ஈதெலாம்விளைத்தெந்தியவெவ்வினையும்
மீதெலாமரவினவிடமேயாயான்
ஏதலாமுறைத்தாயுரைபேசுதியே

இ-ள்- அன்பினுலே என்னைக் கூடவேயவர்தானல்லாக சொன்னாத உன்மாதாவையும் இதெல்லாஞ்செய்து இப்போதேயேக்கேசிக்ககன்னை யும்உன் உடம்பெல்லாம் பாம்பின் விடமேறியிருக்கபோது என்னென்ன வசொற்களெல்லாஞ் சொன்னாய் அப்போது புத்திரசொல்லு-எ-று

பிறப்புணர்த்தவன்றேடியிறந்தின்றியுன்
இறப்புணர்த்தனமென்னிருமெய்முனோர்
சிறப்புஞ்செல்வமுஞ்சோதலிந்திருக்கவர்
துறப்பெருமினமிவன்சொன்றமுழுமினுன்

இ-ள்- உன்ஜனனமிப்படிப்பட்டதென்றுதெரிந்து அப்போதேவெகு பாடில்லாமல் உனதுசாவுதெரிந்தோயானுமெனக்கட்கு முன்னோர்

கல்பெற்றிருந்த சிறப்புஞ் செல்வமுஞ் சேர்ந்திருப்பதினின்று நீங்கினபடி மிகவும் பெரிதான பாவம் பாவமென்று வருந்தினான்-எ-று.

வானின்மிக்க வாமன்னர்வந்துநின்
றானிக்கீழ்க்கழலின்றி நின்றாய்திருத்
தோளிலேற்றிச் சுடலையிலேவரு
வேனின்மிக்க வெவ்வினையோவென்றான்

இ-ள்- வான்வலியாலுயர்ந்த வெற்றிகொண்ட அரசர்கள்வந்துஉன் காலிலேவிழுந்தகுற்றேவலில்லாமல் உன்றாயானவள் தன் திருத்தோளின்மேலேற்றிக்கொண்டு சுடுகாட்டுக்குவர மண்மகளிலும் அழகாயிருந்தருவாரா அந்த வெவ்வினையானபாவஞ்செய்தயோ என்றழுதான்-

இன்னவாறழைத்தேங்கிடவேந்தினை
தன்னகத்தினுணர்ச்சிதழைத்திட
மன்னனையிவனென்றுமதித்தவன்
பொன்னடித்துணைபூண்டழுதோதுவாள்

இ-ள்- இந்தப்படி சொல்லி அரசனழும்போது சந்திரமதியானவள்தன்மனதிலேதெளிவுதோன்ற நமதரசனே இவனென்று துணிந்து அவ்வரசனுடைய அழகியபாதங்களிரண்டையும் பிடித்துக்கொண்டழுது சொல்லுகிறாள்-எ-று.

கொதித்தெழுந்துபடர்குடிகொண்டிளங்
கதித்ததுன்வயிர்கண்டனனுத்தம
விதித்ததல்லதுவேறணுகாதென
மதித்ததிருநுதல்வல்லவிளம்பினாள்,

இ-ள்- பொங்குதலாய்த்துன்பமே குடிகொண்டஉமதுமனத்திலே அதிகமானபடியை உமதிடத்திலேதானகண்டேன் ஓ புருஷோத்தமரே யாருக்கானாலும் லபித்தபடியே யல்லாமல் வேறே ஒன்றும் வராதென்று பாதிச்சந்திரன்போலுந் திருநெற்றியையுடைய சந்திரமதி சொன்னாள்-எ-று,

தீமைசெய்ததுனக்குஞ்சிறுவற்கும்
வாய்மைதானதுமண்ணுக்கும்விண்ணுக்கும்
தூய்மையேயிலியென்றுதுணிந்தனன்
நீமங்கலறத்தைநினையென்றான்.

[௫-அ]

இ-ள்- பாவங்களைச்செய்திருந்து எமக்கும்பிள்ளைக்குமெய்யானதே அந்தபாவம் இந்தமண்ணுலகத்துக்கும் விண்ணுலகத்துக்கும் இனிக ன்மையாகவே முடியுமென்று நான் துணிவுகொண்டேன் நீர் இனிமய ங்கவேண்டாம் உமதுசுதர்மத்தை யெண்ணிக்கொள்ளுமென்று சொ ன்னாள்-எ-று.

தோகைகேள்புலையற்குத்தொழும்பனான்
ஆகையான்மற்றவன்பணிநீத்தவன்
ஈகையானிழத்தாற்றவநெய்திடும்
போகைநன்றுபொருடருதற்கென்றான்

இ-ள்- பெண்ணேகேட்பாயாக இந்தச்சுடுகாட்டுக்கு உரிய பறைய னுக்குநான் அடிமையாதலாலே அவன் உத்தரவைக்கடந்து அவன் பொருளைநான் வாங்காமல்விட்டால் நீதிக்குவழுவுதலாகும் நி பொரு ள்கொடுப்பதற்காக இடம் விட்டுப் போகிறதே நல்ல காரியமென்று சொன்னான்- எ-று.

உன்னையாளு மறையவற்குற்றிது
சொன்னகாலந் தரிசனந்தூசொடு
பொன்னைவாங்கி யளித்துநின்புத்திரன்
தன்னைநீசுடத்தக்கதனக்கென்றான்.

இ-ள், உன்னை அடிமையாகக்கொண்டாளுகிறபிராமணனிடத்திற் குப்போய் இந்தப்பொருள் கொடுக்கவேண்டிய படியை நி சொன்ன போது அந்தப்பிராமணன் கொடுத்தால் அந்தக்கொள்ளிவஸ்திரத்து டனே பணமும்வாங்கிவந்துகொடுத்து உன்புத்திரனை நி தகனஞ்செ ய்துகொள்ளத்தகுமெனக்கென்று பின்னுஞ்சொன்னான்- எ-று.

அரக்கெனச்சிவப்புற்றவழற்கணன்
இரக்கமற்பமுமில்லவனிப்பொருள்
தரக்கருத்திலன்றந்திடிற்காண்பனென்
றுரைத்தவல்லிமகனைவைத்தோடினாள்

இ-ள்- அரக்கைப்போற் சிவப்புப்பொருந்திய நெருப்புக்கண்களையு டையவன் கொஞ்சமேனுமிரக்கமிலலாதவன் இந்தப்பணங் கொடுக்க ச்சம்மதியான் ஒருவேளைதருவானோ எப்படியோ கண்டறிகிறேனெ ன்று சந்திரமதியானவள் மகனை அங்குவைத்துவிட்டோடினாள்-எ-

வேறு,

மங்கைகடிதேகிறுமைந்தன்முகநோக்கி
அங்கைதொடநாணிமனமஞ்சியயலின்றே

கங்கைவளநாடனிருகண்கலுழிசிந்த
வெங்கையநுகர்ந்தவிளவின்கனியையொத்தான்

இ-ள்- அப்படிச்சந்திரமதி விரைந்தோடும்போது மகன்முகத்தை ப்பார்த்து தனதழுகியகையாலே தொடுதற்குக்கூசி மனத்திலேபயங் கொண்டு பக்கத்திலே நின்றுகொண்டு கங்கைவள நாட்டையுடைய அரசன் தனதிரண்டுகண்களிலும கான்யாறுபோனீரொழுக வெவ் விதானையானைத்துதிக்கைபோல்நீண்டமுன்காலொன்றுள்ளபொருநு ளம்பு பொத்தவிளவினதுகனியை ஒப்பாயினான்-எ-று.

மன்னவன்வருந்திபுறமாமயிலையன்னாள்
துன்னவரிதாயசுடுகாடதுகடந்தே
என்னவினையின்னம்வருமென்பதுகருத்தாய்
மின்னுமணிநீள்புரிசைவீதியிடைபுக்காள்

இ-ள்- அப்படி அரசன் வருந்திக்கொண்டிருக்க பெரியமயிலையொ ப்பான சந்திரமதியானவள் கிட்டுதற்கரிதான சுடுகாட்டைக்கடந்து போய் இன்னம் என்னபாவச்செய்கைகள் வரக்கூடுமோவென்றுகரு த்துள்ளவளாகி மின்னுகின்ற ரத்நங்கள் பதித்துள்ள மதில்சூழ்ந்த வீதிக்குள்ளே போயினாள்-எ-று.

கிள்ளைமொழியும்மருகுகிட்டுவதன்முன்னே
வள்ளையொலிமாடமிளிர்காசிநகர்மன்னன்
பிள்ளையையெடுத்தயல்பெயர்ந்துயிர்செகுத்தே
கள்ளர்சிலர்நல்லணிகவர்ந்துகொடுபோனார்

இ-ள்- கிளிபோலும வசனத்தையுடையசந்திரமதிபோகுதற்குமு ன்னே மங்கலவள்ளை ஒலிப்பதான காசிப்பட்டணத்துக்கு அரசனான வனுடைய பிள்ளையையெடுத்துக்கொண்டு தூரத்தேவந்து அந்தப் பிள்ளையுயிரைவதைசெய்து சிலகள்ளர்கள் அப்பிள்ளைமேலுள்ள நல் ல ஆபரணங்களையெல்லாந் திருடிக்கொண்டு போயினார்கள்-எ-று.

அம்மதலையைத்தெருவகத்தினிடைகாணா
இம்மதலையார்மதலையென்னவலமந்தாள்
எம்மதலையைக்கானமெறிந்ததுகொலென்னாத்
தம்மதலைமெய்க்குறிதனைத்தெரிதலுற்றாள்

இ-ள்- போகிறசந்திரமதியானவள் அந்த அரசன்பிள்ளையை அந் தவீதியிலேகண்டு இந்தப்பிள்ளையாருடைய பிள்ளையென்று துக்கித் தவளாய் எங்கள் பிள்ளையை அங்குள்ளபூதகணங்கள் கொண்டுவந்து

இங்கேபோட்டுவிட்டனளோவென்று தங்கள்பிள்ளையினுடம்பிலுள்ள அடையாளங்களைப்பார்க்கலாயினாள்-எ-று.

விடிந்திடுமுணர்ந்தகரிகாவலர்விரைந்தே
இடிந்தமதிலேறியுமிழிந்துமறுகுற்று
மடிந்தகுழவிக்கருகுகண்டுமடமாதை
கடிந்தனர்கொணர்ந்துயிர்கவர்ந்தநிவளென்றே

இ-ள்- அப்போது விடிகிறதற்குமுன்னே அந்தப்பட்டணத்தைக் காக்கிறதலையாரிகள் அநேகவிரைவில்வந்து கள்ளராலேயிடிந்துபோன மதில்வழியேயேறிவந்தும் பின்பிறங்கியும் பின்புவீதியிலேவந்து செத்துக்கிடக்கிற பிள்ளைக்குச் சமீபமாகவந்துகண்டு அங்கு நிற்கிறயேதேனுமொன்றுந்தெரியாமல் மயங்குகிற சந்திரமதியை இந்தப்பிள்ளையைக்கொண்டுவந்து இவனுயிரைவதைத்தவளிவள்தானென்று அடித்தார்கள்-எ-று.

பதைத்திடுசினத்தொடுபெருங்குழவிதன்னை
வதைத்தவிவளாமெனமலர்க்குழல்பிடித்தே
விதைத்தவின்விழுந்தனவிழுக்கனறெறிக்க
உதைத்தனரடித்தனரொடித்தனர்களென்பை

இ-ள்- அப்படி துடிதுடிப்பாகிற போபத்துடனே அந்தப்பச்சிளம்பிள்ளையைக்கொன்றது இவளேதானென்று அவளுடைய பூவையணிகிற கூந்தலைப் பிடித்துக்கொண்டு விதைக்கிறபோது சிதறுகிற விதைகளைப்போல் கண்களிலேநெருப்புப்பொறிகள் சிந்த உதைத்தார்கள் அடித்தார்கள் அவளெலும்பையுமொடித்தார்கள்-எ-று.

சென்றவர்சென்றவர்கள்சேரவடரக்கண்
டன்றவர்களிற்சிலர்விலக்கியகலப்போம்
என்றுகுலமேதுதலமேதுசிறுசேயைக்
கொன்றபரிசேதரிவைகூறெனவுரைத்தார்

இ-ள்- அப்படியானபோது வீதியிலேபார்த்துக்கொண்டு போகிறவர்களும் பார்க்கவருகிறவர்களும் கூடவருத்தப்படுத்துகிறதைக்கண்டு அப்போது அவர்களிலே சிலர்சிலரைவிலக்கிநீங்கள் தூரப்போங்களென்று சொல்லிச் சந்திரமதியைப் பார்த்து உன்குலம் யாது உன் ஊரெது அந்தச்சிறுபிள்ளையைக்கொன்ற தென்ன காரணம் ஏண்டி பெண்ணே நீ உள்ளதுசொல்லென்றுகேட்டார்கள்-எ-று.

தேவருணமக்கிலைசெருத்திலனெயிற்றாள்
ஆவதிலைநம்மொழியையாருறுதிகொள்வார்
நோவதினுநம்மகவிறேசகவினலும்
சாவதினிதென்பதுமனத்திடைதரித்தாள்

இ-ள்- நான்கொன்றிலேனென்றுசொன்னால் தெய்வகடாட்சம இப்போது நமக்கில்லாதிருக்கிறது ஆகையால் நாமசொல்லுகிற மெய்வார்த்தையையார்தானம்புகிறவர்கள் இப்போதிவர்களாலேவருத்தப்படுகிறதிலும் நமதுபுத்திரனிறந்துபோன துன்பத்தை யநுபவிக்கிறதிலும இனி இறந்துபோகிறதேநலமென்று தன் மனத்திலே திடப்படுத்திக்கொண்டாள்- எ-று.

மெய்யுரைசெயிற்பொரென்மேவியதுவினும்
ஐயமிதினில்லையதனற்புரையிலாத
பொய்யுரையுமெய்யொடுபொருந்துமெனநாடித்
தையலவரோடிதுதனைப்பகரலுற்றாள்.

இ-ள்- மெய்வார்த்தையைநாம் சொனனோமானால் அதுபொய்யென்றுதோற்றி இந்தமெய்பயனில்லாமற்போமஇதிலெவ்வளவுஞ்சந்தேகமில்லை அதனாலேகுற்றமில்லாத பொய்வார்த்தைமெய்யுடனேசேர்வதாகுமென்றாலோசித்துச் சந்திரமதியானவள் அதைத் தன்னைவிலைவினவர்களுடனே இந்தவார்த்தையைச் சொல்லத்துணிந்தாள்-எ

ஒன்றினிதுகேண்மினுலகத்தினிலரக்கத்
தன்றியுயிர்கொன்றுழலரக்கியறியீரோ
இன்றுயிரிழந்தமகவென்கையிலிருக்கக்
கொன்றதிலேமென்னவலனோகொடியளென்றாள்

இ-ள்- ஒருவார்த்தை நான்சொல்லுகிறேன் எல்லோரும் நன்றாய்க்கேளுங்கள் இரக்கமென்பதை இல்லாதவளாய் உயிர்களைக்கொன்று திரிகிறராட்சசி நானென்பதை நீங்கள் தெரிந்துகொண்டிலீர்களோ இப்போதுயிர்போனபிள்ளை என்கையின்மேலிருக்கச்சேதானே நான்கொன்றிலேனென்று சொல்லமாட்டுவேனோ நானே கொடுந்தொழிற்செய்கிறவளென்று சொன்னாள்- எ-று.

ஆயின்விடன்மின்னெனவடித்தணிகயற்றால்
சாயுமிருகைத்துணைபிணித்தவிவரத்தை
வேயும்விழைத்தோளின்மிசையேற்றிவிறன்மன்னன்
வாயிறனைநாடிமயிலைக்கொடுநடந்தார்

இ-ள்- அப்படியானால் இவளைவிட்டு விடாதீர்களென்று அடித்து அழகியதான கயிற்றாலே நீண்டுதொங்குகின்ற இரண்டுகைகளையுங்கட்டிச்செத்தபிணத்தை மூங்கிலும்வேண்டுவதானதோளின்மேலேற்றி வெற்றிகொண்ட காசிராஜனுடைய அரண்மனைவாசலைத்தேடிச்சந்திரமதியையிழுத்துக்கொண்டுபோனார்கள்-எ-று.

கைகொடுசவத்தினிருகால்களையணைத்து
மெய்கொடுசுமந்தடிவிதிர்ப்புறமிதித்துப்

பெய்ப்பொடிசேணக்குருதியின்றாழ்முறைபோயகா
லெய்க்குற்கவணக்கிலடைம்புரிந்திடநடந்தான்

இ-ள்- தனது கைக்கிலேவெட்டுண்ட பிணத்தினுடைய இரண்டு கால்களையும் அவ்விடத்தினின்றும் தூக்கியிழுத்துக்கொண்டு கலைகளுக்க கிருத்தியாத்தி ஒழுகுகின்ற வெவ்வியைமாலையினும் ரத்தமும் பின்புறத்திலும் முன்புறத்திலும் வழிந்தொழுகும்படியாய்நெருக்கி னைக்கரத்தையுடைய சந்திரமதி தனதிடைமூடுவதாக அந்தத்தலையாரிக ள் பின்னேசென்றான்-எ-று.

குதிக்குதிரைநதெரிகொதித்தலைவாட்டுக்கத்
தெரிந்ததிரிசிக்குவிதிரைக்கிணைசயின்மொய்க்கப்
பிரிந்திருகயிற்றிடைபிடிக்கவராசாபிமல்
வெறித்தடையாவெனவெருவிமுனைடக்கான்

இ-ள்- அவன்கொண்டதைக்கருதி அதிகேசபத்துடனே போக்கு தலால் அந்தத்தலையாரிகள் அடிக்கிறதினாலே தெறிக்கிற ரத்தத்துளிக் கள் எந்த இடங்களிலும் சிதறிப்பரவச்செய்து இருபக்கத்திலு ம் கட்டின கயிற்றைப்பற்றிக்கொண்டு வரும்போது காய்கள் வெறி கொண்டு சீறிவேகேபைகளிற் அருக்கிறவர்போல் பயந்துநடந்தான்-

வேலைகள்காளைளுற்வெதருளிவாகள்
ருலிவையல்லும்புறியனிக்கமடையாதம
காலேருசசகளுளுதுவாயில்கள்கடந்தே
மாலெருடிமன்னனானுநதண்டபமணைந்தார்

இ-ள்- கடல்போற்சிறந்த அந்தப்பட்டணத்தைக்காக்கிற தலையா ரிகளும் குருவேதப்பிராமணனுக்கு அப்போது தருமபாலகரும் வய ல்களுமகுற்வதான தம்துவாக கொடுத்த பெண்ணைமுன்ன சந்தி ரமதியுக வியப்புக்களைக்குறைக்கப்பிடிப்பதானகோட்டைவாயில்களெ ல்லாங்கடந்துபோய் மாலையணிந்தகிரீடாதிபதியான அரசனிருக்கிற சபாமண்டபத்துக்குள்ளேபோனார்கள்-எ-று.

அத்தலமனைநதவநூலக்கொடியர்மன்னைக்
கைத்தலமெடுத்திருமுந்தொழுதுநின்றார்
மெய்த்தவமுயன்றமனிவேலையைபதோன்மேல்
வைத்தபிணமுங்கொடுபடக்கொடியுநின்றான்

இ-ள்- அந்தச்சபாமண்டபத்தினருகே போனவுடனே அந்தப்பொ ல்லாததலையாரிகள் அரசனை நோக்கி இரண்டுகைகளையுங்கொண்டு அ வனிரண்டுகால்களையும் வணங்கிநின்றார்கள் மெய்ப்பானதவத்தினாலே வ ளர்ச்செய்வதான அரிச்சந்திரனுடைய தோளின்மேலே வைத் தபிள்ளைப்பிணத்தைத்தூக்கிக்கொண்டு சந்திரமதியுநின்றாள்-எ-று

நின்றளவின் மன்னனு நிகழ்ந்தபிழையென்கொல்
என்றதிசயித்திஃதிறக்கெனவுரைக்க
மன்றல்கமழ்சோலைப்பிணம்வைத்தன்னிலத்தில்
கொன்றபழிசொந்தநெறிகூறிடுமினென்றான்

இ-ள்- அப்படிநின்றபோது அரசனானவன் இவளாலே உண்டான குற்றம்யாதென்று அதிசயித்து இந்தப்பிணத்தை இறக்கிவையென்று சொல்லவே மணம்பரிமளிக்கின்ற கூந்தலையுடைய சந்திரமதிபிணத்தைக்கீழே இறக்கிவைத்தாள் வைத்தபின்பு இவளிந்தப்பிள்ளையைக்கொன்றதெவ்விதம் சொல்லுங்களென்றுகேட்டான் காசிராஜன்-எ

என்றிறையுரைத்திடவிறைஞ்சியவர்மன்றே
இன்றிரவுநின்மகவைவந்திவளெடுத்து
மன்றணிநெடுந்தெருவில்வைத்துடல்பிளந்து
கொன்றபடிகண்டுகொடுவந்தடிமுனென்றார்

இ-ள்- என்றுகாசிராஜன் கேட்டபோது வணங்கி அந்தத் தலையாரிகள் அரசனே இன்றிராத்திரி உம்முடைய பிள்ளையை இந்தராட்சசிவந்தெடுத்துக்கொண்டுபோய் நிரம்பின அலங்காரத்தையுடையராஜவீதியில்வைத்து உடம்பைப்பிளந்துகொன்றபடியால் கண்டுபிடித்துக்கொண்டுவந்தோம்உமக்குமுன்னேயென்றுசொன்னார்கள்- எ-று.

அந்தமொழிசொன்னவரையங்கையினமைத்து
வந்தபடியாவுமிவண்வல்லியுரையென்னச்
சந்திரமதித்தெரிவைதன்னடியைநோக்கிச்
செந்துவர்மலர்க்குமுதவாய்மலர்திறந்தாள்

இ-ள்- அந்தவார்த்தைசொன்னதலையாரிகளைத்தன்கையாலே அடங்கச்சொல்லி நீவந்தகாரியமெல்லாம் இவ்விடத்திலே ஓ அம்மே சொல்லென்றுகேட்க சந்திரமதியானவள் தன்பாதத்தைப்பார்த்துக்கொண்டு சிவந்தபவளம் போலவுங் குமுதமலர் போலவும் தனவாயைத் திறந்து சொல்லலானாள்-எ-று.

செய்யுமகவின்றுயிர்செகுத்தபடிகண்டாய்
கையினிலெடுத்ததோர்சவத்தையெதிர்கண்டாய்
மெய்யிடைபுலால்வெறிவிரிந்தமுடைகண்டாய்
ஐயமிலையானுமொராக்கியதியென்றாள்

இ-ள்- ஓ அரசனே இந்தச்செவ்விதமான பிள்ளையினுயிரைக் கொன்றபடியையும் நேரேகண்டீர் என்கையிலெடுத்துக்கொண்டு வந்ததான ஒருபிணத்தையும் உமக்குமுன்னே கண்டீர் என்னுடம்பிலே புலால்நாற்றம் விரிந்திருக்கிற படியையுங்கண்டீர் இனிச்சந்தேகிக்கத்தக்கதில்லை நானும்ராட்சசிகளிலொருத்தியென்று தெரிந்துக்கொள்ளுமென்றுசொன்னாள்-எ-று.

என்றுநாவன்றசைகளுண்டுடலெடுத்தேன்
வென்றிவடிவேலிறைநவின்னகரின்மேவி
இன்றிரவினின்மகவிளந்தசைவிரும்பித்
தின்றிடநினைத்துயிர்செகுத்ததுளதென்றாள்

இ-ள்- எப்போதும்நான்மனிதருடைய வலியமாமிசங்களையே சாப்பிட்டு என்சரீரத்தைவளர்த்தேன் வெற்றிபொருந்திய கூரியவேலையுடைய அரசனே இன்றுஉமதுடைய ஊருக்குள்ளேவந்து இராத்திரியிலே உமதுபிள்ளையாயி ளிளமையான மாமிசத்தைத்தின்ன ஆசைகொண்டு இந்தப்பிள்ளையினுயிரைக்கொன்றேனிதுவேமெய்யானதென்றுபின்னுஞ்சொன்னாள்-எ-று.

மடக்கொடியுரைக்கவிதுமன்னவனுரைப்பான்
அடக்கமுமொழுக்கமுமரக்கியவளென்னும்
இடர்பலவிவட்கிவரிழைத்தவைநமக்குச்
சுடர்சுடவுரைக்குமிவள்சொன்னமொழியென்றான்

இ-ள்- இப்படிச்சந்திரமதிசொல்லச்சே தானே அரசன் சொல்லுகிறான் இந்தஅம்மையினுடைய மனஅடக்கமும் கைகால்களினொழுக்கமும் ராட்சசியல்லவென்று சொல்லுகின்றன இந்தப்பெண்ணுக்குப் பலரும்பலதுன்பங்கள் செய்தவைகளுண்டு அவைகளெல்லாநமக்குத்தெரிவதாக சுடச்சுடச் சொல்லுகின்றது இந்த அம்மை சொன்ன வார்த்தையென்றான்-எ-று.

உயிர்க்கொலைபுரிந்தவர்முகக்குறியுரைக்கும்
கையிற்குறியுரைக்குமிருகட்குறியுரைக்கும்
குயிற்குரன்மடந்தையிவள்கொன்றகுறியுண்டென்
றயிர்ப்பிலையெனக்கெனவமைச்சரொடுரைத்தான்

இ-ள்- சீவவதைசெய்தவர்கள் முகக்குறியே வதைசெய்ததைத்தெரியச்சொல்லும இன்னும் வதைசெயதவர்களுடைய கையிலுள்ளகுறியுஞ்சொல்லும் இரண்டுகண்களிலுள்ள குறியுஞ்சொல்லும் குயில்போலும் தொனியையுடைய பெண்ணாகிய இந்தஅம்மைகொன்றகுறியுண்டென்று எனக்குச் சந்தேகித்தற் கிடமில்லையென்று மந்திரிகளுடனே பின்னுஞ்சொன்னான்-எ-று.

வள்ளலிவைகூறிடலும்வந்தவர்கண்மன்ற
பிள்ளையையெடுத்துவடிப்பிறகுசென்று
கள்ளியிவள்சொன்னபடிகண்டுகொடுவந்தோம்
உள்ளதலதில்லதையுரைக்கவிதியுண்டோ

இ-ள்- இப்படி அரசனானவன் சொல்லும்போது அவளைக்கொண்டுவந்தவர்கள் அரசனேபிள்ளையையெடுத்துக்கொண்டுவந்தாற்சுவட்

டின்பின்னேபோய்திருடியான இவள்கொன்றவடியையுங்கண்டு இவளைப் பற்றிக்கொண்டு வந்தோம் இதுஉள்ளபடியே அல்லாமல் இல்லா ததைச் சொல்லநியாயமுண்டோ-எ-று. (௮௬)

உன்னுரைதனக்கோரெதிருத்தரமுமுண்டோ
என்னுரைசெயத்தகுவதெம்பெருமவென்றே
மன்னுரைகடற்புவிவளாகமிசைவாழும்
இன்னுயிரிறக்குமிவடன்னைவிடிலென்றார்.

(இ-ள்) உம்முடையசொல்லுக்கு மறுமொழியுங்கூடநாங்கள்சொல்ல த்தக்கதுண்டோஎமதரசனே இனிச் சொல்லத்தக்க தியாதிருக்கின்றதெ ன்றுபின்னும் நுரைகள்பொருந்திய கடல்சூழ்ந்தபூமண்டலத்திலே வா ழுகின்ற இனியஉயிர்களெல்லாம் அழிந்துபோகும் இந்தநீலியை வதை செய்யாமலவிட்டாலென்றுசொன்னார்கள் எ-று, (௮௭)

அன்னவையுரைத்தவரைமன்னவனமைத்தே
என்னபலபேசுவதிலேழையடிதானே
பின்னையடிசென்றதுளதோபிறிதெனக்கண்
டின்னேடிபின்வந்திடுமெனச்சிலரைவிட்டான்.

(இ-ள்) அவ்வார்த்தைகள்சொன்னதலையாரிகளை அரசன் அமரச்சொல் லி இனிப்பலவுஞ்சொன்னதினாலே யாதுபயனென்றுமில்லை பிள்ளையை க்கொண்டுபோனவழியில் இந்தப்பெண்ணின்கால்கள்சென்றிருக்கின்றனவோ பின்னும்வேறோர்கால்கள்சென்றனவுண்டோவென்றுதெரிந்து இந்தக்க ணப்போதிலேவாருங்களென்று சிலரைஅனுப்பினான் எ-று. பிறிதுவே று அடிசென்றுளதோவெனக்கூட்டுக. (௮௮)

போற்றடிபணிந்தவர்கள்போய்மறுகினூடே
காற்றடிசிதைக்குமுனர்கண்டிடுதுமென்றே
மாற்றடியிலாற்றறியவல்லியடிவைப்பின்
வேற்றடிகள்பார்த்தவர்விரைந்துமெதிர்சென்றார்.

(இ-ள்) எல்லாரும்வணங்கத்தக்கஅரசனடியை வணங்கிக்கொண்டு அ ந்தச்சிலர்கள்வீதிவழியேசென்று காற்றினாலே-காற்சுவடுகளையுமுன்னே தெரிவோமென்று தலையாரிகளுடைய மாறுமலடித்த அடிப்பட்டுத் தா ங்கமாட்டாதிருக்கிற சந்திரமதியினுடையகால்கள்சென்றநிலத்திலேவே றானசிலகாற்சுவடுண்டோவென்று அவர்கள்பார்த்துக்கொண்டுவிரைவி லேசந்திரமதி வந்தவழியைக்குறித்துப்போயினார்கள் எ-று. (௮௯)

அங்கவர்கள்வந்திடுமுனத்தெருவகத்துக்
கங்கருகுகன்னல்விளைகன்னபுரிமன்னன்
மங்கையையடியயெழுதிமற்றையடியெல்லாம்
அங்கைகொடுநீவிமுனிகௌசிகனழித்தான்.

(இ-ள்) அங்கே அந்தச்சிலர்கள்வருவதற்குமுன்னே அந்தத்தெருவிலே தினைப்புனத்தருகே கரும்புகள்விளைவதான கன்னேசி-நாட்டரசன்பெற்றசந்திரமதி கால்களையேபதியச்செய்து மற்றைக் காற்சுவடுகளையெல்லாந்தமதழகியகையாலேதடவிக்கலைத்துவிசுவாமித்திரமுனிவர் அழித்துவிட்டார்-எ-று, (௬௰)

எந்தவடிவந்தமெதனவெண்ணியவணண்ணி
அந்தவடியிசுவடன்மைப்பனைவருங்கண்
டிந்தவடியேமுழுதுமியாவர்களுமிங்கே
வந்தவடியில்லையெனமன்னனுழைவந்தார்.

(இ-ள்) எந்தக்கால்கள் இங்கேநடந்துவந்தவையென்று ஆலோசித்துக்கொண்டிங்கேவந்து அந்தச்சந்திரமதியினுடையகால்கள் அழுந்தியிருக்கிறவடிகளைச் சிலரெல்லாருங்கண்டு இந்தப்பெண்ணடிச்சுவடுகளையல்லாமல் வேறேஒருவருமிவ்விடத்தேநடந்துவந்த சுவடுகளில்லையென்று சொல்லஅரசனிடத்திற்குவந்தார்கள்-எ-று. (௬௧)

உற்றடிவணங்கியவர்முற்கலையொதுங்கச்
சுற்றடிகள்பற்பலதொடர்ந்துநனிசென்றே
அற்றடியினிக்கொடியகள்ளியடியல்லால்
மற்றடிகளில்லையெனமன்னனொடும்

(இ-ள்) அப்படிவந்துஅரசன்கால்களைவணங்கி அந்தச்சிலர்கள் தாமுடுத்திருக்கிறமுன் வஸ்திரத்தைஒதுங்க அமைவதாகச்சூழ்ந்துகொண்டு பலபலகாலடிகளைமிகவுந்தொடர்ந்து பிடித்துப் போயினோம் அவ்வகைக்காற்சுவடுகளில் இந்ததிருடிகாற் சுவடுகளையல்லாமல்வேறுகாற்சுவடுகளில்லையென்றுஅரசனுடனேசொன்னார்கள்-எ-று, (௬௨)

வள்ளலும்வருந்திமிகமங்கைமுகநோக்கி
உள்ளதுரைசெய்கெனவுரைத்திடமறித்தும்
கள்ளியனேயல்லதிலையென்றுகழறக்கேட்
பள்ளல்வயனாட்டரசனெந்தகம்வியந்தான்.

(இ-ள்) அப்போதுஅந்தஅரசனானவன் மிகவும்நொந்துகொண்டு சந்திரமதிமுகத்தைப்பார்த்து உள்ளதைநீசொல்லக்கடவையென்று சொல்லபின்னும்திருடி என்னையல்லாமல்வேறொருவருமில்லையென்று சந்திரமதிசொல்லக்கேட்டு சேறுள்ளவயல் சூழ்ந்தநாட்டையுடையகாசிராஜன் மனம்நொந்து அதிசயங்கொண்டான்-எ-று. (௬௩)

சொல்லவிவள்வல்லவளுமல்லள்கொலைசெய்தாள்
அல்லலெளிலங்கொருவர்வந்தவடியில்லை
தொல்லைவினையெவ்வகைதொடர்ந்தசறிதக்க
இல்லையெனமைந்தனிவிட்குருகிநின்றான்

(இ-ள்) அந்தஅம்மைகொல்லவல்லவளல்லகொலைசெய்தவ ளிவளல்ல வென்றுகொள்வோமானல் அங்கேவேறேயொருவர்நடந்துசென்றகாற்சு வடுகளில்லைபழையபாசம்பந்தம் எவ்விதமாகவோவந்து நேரிட்டிருக்கிற து நம்மாலறியத்தக்கதாயில்லையென்று தன்பிள்ளைக்கிரங்குகிறதிலுமதி கமாகச் சந்திரமதிக்கேமிகவுமனமுருகினன் எ-று. (௯௪)

முன்னைவிதியாரும்வினை முற்றுமதனுலும்
என்னையிவடன்னைவிட லென்பதுநினைந்தே
கன்னல்செறிகாசிபதி கன்னபுரிமன்னன்
பின்னைவதைசெய்வது விரும்பியொருமித்தான்.

(இ-ள்) பூர்வகருமம்தான்முடியும்வகையேமுடியும் அதனலே இந்தப் பெண்ணைஎப்படிவிட்டுவிடுகிறதென்று நினைத்து கரும்புகள்விளைவதா னகாசிராஜன்சன்னேசி நாட்டரசன்மகளைக்கொலைசெய்வதற்கு வேண்டி மனதுசம்மதமானன்-எ-று. (௯௫)

அவ்வணநினைந்திடலுமவ்வளவுதன்னில்
செவ்வணவயிற்குரிசினீவினைகளெல்லாம்
இவ்வணமகன்றிடுமெனுங்குறிவிளங்க
மைவணவயங்கிருண்மறைந்தவிடத்தே.

(இ-ள்) அப்படிஅவன் ஆலோசிக்கும்போது அந்தசமயத்தில் சிவந்த நிறத்தையுடைய வேலாயுதத்தைக்கொண்டஅரிச்சந்திரமகாராஜனுடை ய பாபகருமங்களெல்லாம் இப்படியேகழிந்துபோகுமென்னுங்குறிதோ ன்றமைபோலுவதாயிருக்கிற இருள்கழிதலாயிற்று-எ-று, (௯௬)

தங்குதலமடந்தைபடு சஞ்சலமுணர்ந்தே
மங்குலெழுவெண்சசி மழுங்கியொளிமாயக்
கங்குன்மகளிந்தவினை கண்டகலவோட
வெங்குலநெடுங்கதிர் வெகுண்டனவெழுந்தான்.

(இ-ள்) தனதுகுலத்துப்பெண்படுகிற சஞ்சலங்களெல்லாந் தெரிந்து மேகத்திலேதோன்றுகிற வெள்ளியசந்திரனானவன் ஒளிமழுங்கி மறைய வும்அந்தராத்திரியானபெண் இந்தப்பாபகருமத்தைக்கண்டு தூரவோடி ப்போகவும வெப்பமானஅரிச்சந்திரன் குலத்துச்சூரியன் கோபங் கொ ண்டதுபோலுதயமாயினன்-எ-று. (௯௭)

காதலிபிடித்தநெறிகண்டெமதுகற்பின்
போதமிதுவென்றுபுருடர்க்கெதிர்குலாவும்
மாதர்முகமென்னவயலுந்தடலுமற்றும்
ஆதபன்முகத்தெதிரவர்ந்தவரவிந்தம்

(இ-ள்) எல்லாரும்விரும்பத்தக்க நன்மார்க்கத்தையுடைய சந்திரமதி கொண்டகொள்கையைப்பார்த்து-எங்களுடையகற்பினுக்குள்ள ஞானமி த்தன்மையதென்று புருஷர்தனக்குமுன்னே கொண்டாடத்தக்க பெண்

கள் முகங்கள்போல்வயல்களிலும் குளங்களிலும்-மற்ற இடங்களிலும்-சூரியோதயத்துக்குமுன்னே தாமரைமலர்கள்விகசிதமாயின-எ-று. ()

வேறு

விடிந்தகாலையில்வேறொருதிறம்புறங்காணான்
மடிந்தமைந்தனையெடுமனமனையிடைப்போக்கி
முடிந்ததீவினைப்பயனுமுதிர்வினையானும்
கடிந்திடும்படிகருதினன்காசியர்கோமான்

(இ-ள்) அப்படிவிடிந்தபோது வேறொருவரையும் பிரசித்தமாகக் காணாதவனாகி-இறந்தபிள்ளையைக்கொண்டுபோங்களென்று தனது அரண்மனைக்குள்ளேபோகவிட்டு அப்போதுமுடிவானகொலைப்பாவத்தினாலும்-மேன்மேலாக விஸ்வாமித்திரர்செய்கிற செய்கைகளினாலும்-சந்திரமதியைவதைசெய்யும்படி காசிநகரத்தாருக்கரசன் ஆலோசித்தான்-எ-று. ()

சோராமற்றயலுண்டெனிற்சோதித்துவந்திந்
நேரம்யாவருமுரைத்திலரவரவர்வினைவை
யாரறிந்தவரிவடனைவதைப்பதற்கழைத்து
வீரவாகுவைக்கொணர்கெனத்தூதரைவிடுத்தான்.

(இ-ள்) கள்ளர்கள்வேறேயின்னமுண்டென்றால் பரிசோதனை செய்துவந்து இந்தச்சமயத்தில்ஒருவருவந்து சொல்லுகின்றிலர் ஆனாலும்அவ்வவர்வினைவை யாவராலேஅறிந்துகொள்ளலாகும் ஆகையால் இந்தப்பெண்ணைக்கொலைசெய்வதற்கு வீரவாகுவைக்கூவிக் கூட்டிவாருங்களென்றுதூதரை அனுப்பினான்-எ-று. (௯)

விரைவினோடிச்சென்றவன்புலைச்சேரியின்மேவி
அரசர்கோனுனையருளிப்பாடெனவுரைத்தவழைக்கச்
சுரைகொள்வெள்ளைவாய்ச்சிவந்துகட்கருநிறச்சுடர்வாட்
கரதலத்தொடுங்கடிதுவந்தரசனைக்கண்டான்.

(இ-ள்) உடனே தூதர்கள் அதிசீக்கிரத்திலே ஓடிப்போய் அந்தவீரவாகுஇருக்கிறபறைச்சேரிக்குள்ளேபோய் மகிராஜாதிராஜன்உன்னைவரும்படி உத்தரவுசெய்தருளலாயிற்றென்று சொல்லிக்கூப்பிட்டழைக்க சுரைவிதைப்போல் வெள்ளைப்பற்களைக்கொண்டவாயும் சிவந்த கண்களும் கறுத்தவுடம்பும் ஒளிபொருந்தினவாளாயுதத்தைக்கொண்டகையுமாக விரைவிலேவந்துஅரசனைக்கண்டுகொண்டான்-எ-று. (௰௧)

தூரநின்றுவாய்புதைத்துளமலைந்துதூசொடுக்கிப்
பாரமேனியைச்சுருக்கிவீழ்ந்தரசனைப்பணிந்திந்
நேரநாயினேன்றன்னையெண்ணினைந்தவாறென்றான்
வீரவாகுவைநோக்கியவ்வேந்தர்க்கோனுரைப்பான்.

(இ-ள்) தூரத்தே நின்றுகொண்டு வாயைமூடி-மனநடுங்கி வஸ்திரத்தையொடுக்கிப்பெரியவுடம்பைச்சுருக்கமாகக்கொண்டுகீழேவிழுந்து அரசனைவணங்கினபின்புசுவாமி இந்தவேளையிலே நாயேனை நினைத்தழைத்தது யாதுகாரணமென்றுகேட்டானஅப்படிக்கேட்டவீரவாகுவைப்பார்த்து அந்தராஜாதிராஜன்சொல்லுகிறான்-எ-று (௱௨)

துட்டியாமிவள்குழவியைத் துணித்தனளென்றுத்
இட்டியார்கண்டோமெனச்சிலரிவளைப்பிடித்து
கட்டிவந்தனரகட்டோடுங்கொண்டுபோய்க்களத்தில்
வெட்டுவித்திடென்றீந்தனன்காசியர்வேந்தன்.

(இ-ள்) கெட்டசெய்கையையுடையவளாகிய இந்தப்பெண் என்பிள்ளையைவதைசெய்தவளென்று கண்ணாற்கண்டோமென்றுசிலர் இவ்வரிவையைப்பிடித்துக்கட்டிக்கொண்டுவந்தார்கள் ஆகையால்அந்தக்கட்டுடனே நீகொலைசெய்யுமிடத்துக்கொண்டுபோய் வெட்டிவிடும்படி செய்யென்று அவன்வசத்திலொப்பித்தான்காசிப்பட்டணத்தாருக்கரசனானவன்-எ-

பிள்ளைக்கொன்றுமுன்கட்டினையிறுகுறவிசித்து
மன்னனைக்கைதொழுதேத்தித்தன்சேரியில்வந்து
பின்னைத்தன்வயின்விலைபட்டவயோத்தியர்பெருமான்
றன்னைக்கூவியேயவன்கையிற்றையலைக்கொடுத்தான்.

(இ-ள்) சந்திரமதியைப்பிடித்து முன்கட்டினதைப்பின்னுமிறுக்கமாகக்கட்டி ராஜனைக்கையாற்கும்பிட்டுக்கொண்டு துதித்துத் தனது பறைச்சேரிக்குள்ளேவந்து பின்பு தன்னிடமாகவிலையாயிருக்கிற அயோத்தியாபுரிக்கரசனான அரிச்சந்திரனைக்கூப்பிட்டு அவன்வசமாகச் சந்திரமதியை வதைசெய்யும்படி ஒப்புவித்தான்-எ-று. (௱௩)

பிள்ளையைக்கொண்டுபோயுடல்பிளந்துயிர்தொலைத்த
கள்ளியைக்கொலைக்களத்திடைக்கொண்டுபோய்க்கவந்தம்
துள்ளியோடநீவெட்டெனத்தோகையைக்கொடுத்து
வள்ளியோன்கையிற்றன்வாளையுங்கொடுத்தான்.

(இ-ள்) இந்தவூரிராஜன்பிள்ளையைக்கொண்டுபோய் உடலைப்பிளந்துயிரைப்போக்கினதிருடியை நீகொலைசெய்யுமிடத்துக்குக் கொண்டுபோய் இவளுடையதலையில்லாத முண்டம்பதைத்து ஓடிப்போம்படி தலையை வெட்டென்று சந்திரமதியையொப்புவித்து இந்தமகாப்பிரபுவான அரிச்சந்திரன்கையில் தன்கையிலிருக்கிறகத்தியையுங்கொடுத்தான்வீரவாகு,

வாளைவாங்கித்தன்மாதையும்வாங்கினன்வந்தான்
பாளையோதியையறிந்தனன்பாவையுமறிந்தான்

வேளைவென்றவற்கேற்றதோவெனவிறைமெலிந்தான்
சாளைவாட்டமுங்கோட்டமுங்கன்னிகட்டுரைப்பாள்.

(இ-ள்) அப்படியேகத்தியையும்வாங்கிக்கொண்டு தன் மனைவியையும் கூட்டிக்கொண்டுவந்த அரிச்சந்திரமகாராஜன் கூந்தற்பனைபோள்றகூந்தலையுடைய அப்பெண்ணைத் தன்மனைவியாகிய சந்திரமதிதானென்று தெரிந்தான்சந்திரமதியும் அந்தச்சுடுகாட்டிலிருந்தநாயகனே இப்போது தன்னைவெட்டவந்தவரென்றுதெரிந்தாள், அப்போது மன்மதனையெரித்தகடவுளுக்கிதுசம்மதிதானோவென்று அரசன்மெலிவதானான் அப்போதுதனக்கதிசுந்தரனானநாயகனுடைய மனவாட்டத்தையும் மனங்கோணுதலையும்சந்திரமதிமதிதெரிந்துசொல்லுகிறாள் எ-று. (௱௬)

முன்னைநாளரசாண்டணிமுடிபுனைந்திருந்த
மன்னர்செய்கையுமரங்களுந்திறங்களும்வளர்ந்த
இன்னமுங்குறைநந்துயிர்தரித்திருந்தவரில்லை
அன்னதேதுணிவடியனேற்கிரங்கிலையென்றாள்.

(இ-ள்) முற்காலத்திலேஅரசாட்சிசெய்து அழகிதானகிரீடத்தைக்கொண்டிருந்தஅரசர்கள்செய்கையும் அவர்களதருமங்களும் சாமர்த்தியங்களும் இன்னமும்வளர்ந்துகொண்டேயிருக்கின்றன. அவைகளிற் குறைவாகித்தங்களுயிரைவைத்திருந்த அரசர்கள்உமதுகுலத்திலேஒருவருமில்லை ஆகையால்அவ்வரசர்கள் செய்கைப்படிநடக்கிறதே துணிவானகாரியம்அடியேனைப்பற்றிநீரெவ்வளவும் இரக்கஞ்செய்யவேண்டாமென்று சொன்னாள் எ-று. (௱எ)

அக்கணத்திலமைச்சனும்விரையவந்தணுகிப்
புக்கவாறெலாம்புரவலன்புகன்றிடக்கேட்டுப்
பக்கநோக்கியேமன்னனைப்பணிந்துயிர்பதைக்க
ஒக்கவேதிரியேசுடர்மணித்தெருவில்வந்துற்றான்.

(இ-ள்) அந்தக்ஷணப்பொழுதுக்குள்ளேமந்திரியானசத்தியகீர்த்தியும் விரைவிலேவந்துகூடிநடந்தசெய்கைகளெல்லா மரசன்சொல்லக்கேட்டுப்பக்கம்பார்த்துஅரசனைவணங்கித் தனக்குயிர்பதைப்பதாகக் கூடவேசென்றுகாந்தியுள்ளரத்னங்கள் மின்னுகின்றதெருவிலேசேர்ந்தான்(௱அ)

இடக்கைபாசமுமேதியும்பிடித்திடவலத்துத்
தடக்கைபற்றியசவஞ்சுடுகோலினூற்றள்ளிச்
சுடர்த்தெருதனிற்றோன்றிடத்துனுக்கமுற்றேங்கி
மடக்கொடித்திருமாதருமைந்தருமுரைப்பார்.

(இ-ள்) இடதுகையானதுகட்டினகயிற்றையும் கத்தியையும்பிடிக்கமற்றையவலதுதடக்கையிலேகொண்ட பிணஞ்சுடுகிறதடியினாலே சந்திரம

இயைத்தள்ளிக்கொண்டுவந்து பிரகாசமானதெருவிலேவரச்செய்தே கண்டோர்துடுக்கிட்டிறங்கி இளங்கொடிபோன்ற பெண்களும்புருஷர்களுஞ்சொல்லுகிறார்கள் எ-று. (௱௯)

வேறு.

கையோசெழுங்கமலமுகமோநிறைந்தமதிகாலோவிளஞ்சினைவரால்
மெய்யோகலாபமயிலிடையோநுடங்குகொடிவிழியோகடைந்தவடிவேல்,மையோசுருண்டகுழன்மலையோதிரண்டமுலைவனிதைக்கெனப்புகலுவார், ஐயோவிவட்குவிதிகொலையோவெனக்கதறி யழுவாரறைந்துவிழுவார்.

(இ-ள்) இந்தப்பெண்ணுக்குக்கைகளோசெழுமையான தாமரைமலர்கள்போலிருக்கின்றன முகமோபூரணச்சந்திரன்போலிருக்கின்றது-கணுக்கால்களோஇளமையான சினைவரால்மீன்கள்போ லிருக்கின்றது-உடம்போவாலையுடையமயிற்சாயலையொத்திருக்கின்றது-இடையோ துவளுகிறகொடிபோலிருக்கின்றது-கண்களோகடைந்துகொண்டகூரியவேல்கள்போலிருக்கின்றன சுருண்டகூந்தலோ மேகமோவென்னலாயிருக்கின்றன-திரண்டகொங்கைகளோமலைகளோ வென்னும்படியிருக்கின்றன வென்றுசொல்லுவார்கள் ஐயோயிப்படிப்பட்டபெண்ணுக்குச் சாவிதிகொலையினாலோவென்றுகதறியழுவார்கள்சிலர்முகத்திலே அடித்துக்கொண்டு கீழேவிழுவார்கள்சிலர்-எ-று. (௱௰)

தவளத்திருத்தரயநகையுஞ்சிறந்த விருதனுவைப்பழித்த நுதலும்
பவளத்தையொத்தகனியிதழும்படைத்தவிதி பதரிப்படைத்ததுளதோ
தவளக்களித்தரசனுலகத்துயிர்க்குதவு படற்றிரக்கமுடையோ, இவளைக்
கொலக்கருதியிவர்கைகொடுத்ததிறமேதென் றிரங்கியழுவார்.

(இ-ள்) வெண்மையானதிருமுத்துகள்போன்றபல்வரிசைகளும் சிறப்பானஇரண்டுவிற்களைப்பழிப்பனவானபுருவங்களும் பவளத்தை யொப்பாய்க்கனிபோன்ற இதழும்உண்டாகச்செய்தபிரமதேவன் பதறுதலாக அமைத்ததுண்டோ கவளமுண்கிறயானைமேலேறுகிறஅரசன் உலகத்திலுள்ளஉயிர்களுக்குதவுதல் செய்பவனுப்க் கபடமில்லாமல் இரக்கமுடையவன் இப்படிப்பட்ட பெண்ணைக்கொல்லக்ஷணி இந்தப்புலையன் வசமாகக்கொடுத்தவிதம் யாதுகாரணத்தினாலேயென்று அழுதுதுக்கிப்பார்கள்-எ-று, (௧௧௧)

வேலைப்பழித்தவிழியாளைச்சினத்தரசன்வெட்டென்றுரைத்தபொழுதே, சாலச்சவங்கள்சுடுகோலிர்கடிந்து நனிதள்ளிக்கொணர்ந்தபுலையன்,
சிலத்தையுங்கனகமார்பத்தையுங் குலவுதிண்டோளையுங் கண்டிடிஞ், சாலொப்பனன்றிமயிலோனொப்பனல்லதொருமத னொப்பனென்று மருள்வார்.

(இ-ள்) வேலாயுதத்தைப்பழிப்பதான கண்களையுடைய இந்தப்பெண்ணைக்கோபித்துவெட்டென்றுசொன்ன அப்பொழுதே மிகவும்பிணங்களைச்சுடுகின்றதடியினாலே அடித்துத்தள்ளிக்கொண்டுவந்த இந்தப்புலையனுடையநல்லகுணத்தையும் பொன்மயமானமார்பையும்கொண்டாடத்தக்கதிண்ணியதோள்களையும் பார்க்குமிடத்தில் திருமாலையொப்பாவான் அல்லதுமயில்வாகனக்கடவுளை யொப்பாவான் அல்லதுஒப்பற்ற மன்மதனையொப்பாவானென்றுமயங்குவார்கள்-எ-று. (௧௧௨)

மறையோனிடத்திவளைவிலைகூறிமிக் கொருங்கனோடும் விற்றவனிவன், குறையோபொருட்சிலவுதெரியாதுமற்றுமொரு கொடியானலக்கணுறவே, பறையோனிடத்திவளைவிலைகூறிவிற்றுமுளன் பலநாள்கழித்தறிவோம், இறையோன்மகற்கிறுதிசெயலாலிவர்க்குவருமிடையூறிதென்றுரைசெய்வார்.

(இ-ள்) பிராமணனிடத்திலே இந்தப்பெண்ணை விலைகூறி மேன்மையுள்ளஒருபுத்திரனையும் விற்றவனே இவன் இப்படிப்பட்ட இவனுக்குப பொருட்செலவுவந்தது என்னகுறைவினாலோதெரியாதுமறுபடியும்ஒரு பொல்லாதவன் துன்பப்படுதற்காக பறையனிடத்திலே இவளைவிலைகூறி விற்றவனுங்கூடவிருக்கிறான் இப்படியாகப் பலகாலமும் போக்கினதை நாமெல்லாருந்தெரிந்திருக்கிறோம் இப்போது இந்தக் காசிராஜன் மகனுடையஉயிருக்குமுடிவுசெய்ததினாலே இவர்களுக்கு வந்ததுன்பமிப்படியென்றுசொல்லிக்கொள்ளுவார்கள்-எ-று. (௧௧௩)

எங்கோமகன்கலறவுயிருண்டகொலைகாரி இவளோவெனத் தொடர்வார், வெங்கோபவன்கரியின்முன்போடுமென்றுசிலர்வெகுள்வார்நெருங்கியடர்வார், பங்கோபறைக்கிவளைவதைசெய்தனம்படைபடாதோவெனப்பதறுவார், செங்கோன்முறைக்கவழுநீர்சொல்வதென்றுசிலர்செயலால் விலக்கிவருவார்.

(இ-ள்) எமதரசனுடைய பிள்ளையினுயிரையுண்டு கொலைகாரி யிவள்தானேவென்றுகூடத்தொடருவார்கள்சில வெவ்விதான கோபத்தையுடையவலியயானைமுன்னேகொண்டுபோய் இவளைப் போடுங்களென்றுசிலர் கோபங்கொள்ளுவார்கள், சிலர் நெருங்கிவந்துவருத்தஞ்செய்வார்கள், பறையனுக்குஇவளைவதைசெய்யும்படி பங்குண்டோ நம்முடையஆயுதங்களிவளைக்கொல்லாதோவென்று பதறுவார்கள், சிலர் அரசனுடையநீதிமுறைக்குத்தப்புதலுண்டாகும் நீங்கள்கொல்லத்துணிவதென்று சிலர் தங்கள்செய்கைகளாலே அவர்களைவிலக்கிக்கொண்டுவருவார்கள்சிலர்-எ.

அழிபாதகாசி யிந்தகனுயிர்கொண்டல ளணிபாயகாரியபடி
பழிபூணிலக்கதவி லெறிந்தாய்ருடோரத்தமர் பலராவியும்பருகுவாள் [வே
விழியால்வெறித்துயிர்கவர்வாண முகத்தில்வெதிர் விழியாதுநின் றுமென
மொழிவார்வதைத்திடுகைப்பொருவற்பள கமூசியாளெனப்பகருவா

(இ-ள்.) அழிவில்லாதகாசிராஜன் மகனுயிரைவதைத்த இவள் அநியாயமேசெய்கிறவள் கெட்டவள் பழியேசெய்யத்தக்கவள் இவளிடம் விட்டுநீங்கினால் இலேசாய்விடாமல் நம்மெல்லாருடையவுயிரையுமுண்ணத்தக்கவள், இவள்கண்ணால்வெட்டியு நம்முயிரைவாங்குவாள், இவள் முகத்துக்குமுன்னே தோன்றாமல் நில்லுங்களென்றுசொல்லுவார்கள், இப்போதிவளைக்கொல்லுகிறதே முடிவுபொருளாயிருக்கச்செய்தே இவள்கொஞ்சமேனுமனம்வருந்தாதிருக்கிறாளென்று சொல்லுகிறார்கள் சிலர்-எ-று. (௱௰௫)

தப்பாதமன்மதனை யுயிர்கொண்டிதிரமுண்ட தறுகண்ணரக்கிமார்தங்
கைகப்பிச முற்றுளாரவலனோவிசும்பினிடையாரோதிருத்தலிலளெ்
அப்பாலனைக்கருவிழிவள்கொன்றதோவலதி யாரோகொன்றதோதெய்வ
மே,இப்பாவிதன்றலையில்வைத்தாயுனக்குநடுவிலையோவெனப்புகலுவா

(இ-ள்.) தப்பாமல் நமதரசன்மகனை உயிரைவதைத்துரத்தங்குடித்த அஞ்சாதராக்ஷசியானால் நம்போல்வாருடைய கையிற்கயிற்றாற்கட்டுண்டுவருவாளோ ஆகாயத்திலேபோய்மறையாதிருக்கிறாள் ஆகையால் இப்படியிவளடங்கியிருக்க காரணமென்ன அந்தஅரசன்மகனைச்சினங்கொண்டு இவள்கொன்றதுமெய்யோ அல்லது வேறேயாவர்கொன்றதோ ஓ!ஓ!தெய்வமே இத்தப்பாபாதகமாதலைமேற் சுமையாகப்பழிசுமத்தினாய் உனக்குப்பொதுவானநீதி யில்லையோவென்றுசிலர்சொல்லுவார்கள் எ-று. (௱௰௬)

கொலைகாரியைத்தெருவில் விலைகூறிவிற்றபடுகொலைகாரனுட்டனிவனு
ம்புலையாவியைக்கொலைசெயிவளாவிகொல்வதொருபொருளோவெனக்க
தருவார், விலைகூறிவிற்றவனு மிவனுமிகவிட்டிடுவனென்விடலியோனத்தொ
டருவார், கலையாவிருக்கிமட லுறவேபிணித்தகயிறுடனேபிடித்துவருவா

(இ-ள்.) இப்படிப்பட்ட கொலைசெய்கிற இவளை இந்தத்தெருவிலே விலைகூறி விற்றவனான கொலைசெய்கிற துஷ்டனாகிய இவன்பறையனாய்க்கொலைத்தொழில்செய்த இவளுயிரைவதைசெய்கிறவனுக்கு இதொருபெரிதோவென்று கத்தியழுவார்கள்சிலர், இப்படிவிலைகூறிவிற்றவனே இவனானால் இவளைக்கொல்லாமல்விட்டுவிடுவான் நீங்களெல்லாரும்இவர்களைவிடாமற்றொடருங்களென்றுசிலர்தொடருவார்கள், முன்னே சீலைத்துணி யாலிறுகக்கட்டித்தோள் மடல்கள்சேரக்கட்டினகயிற்றைத்தாங்களுங்கூடப் பற்றிக்கொண்டு வருவார்கள்சிலர்-எ-று. (௱௰௭)

தனிபாயபாவிகுறை யெவர்போயுரைக்கிடுவர் தருமாலயப்புரவலன்
அனியாயமென்றுகிறி துணராமேகொலைபெண்பழியையவமேசொல்லக்கரு
தினான்,இனியாரிங்குபவனியலைந்துவாய்திறந்துமறியாவுலைந்துசுழல்
வார்,கனிவாயுலர்ந்துநிலைதளர்வார் கலங்கியுடல்கரைவாருமேயழுவார்.

(இ-ள்.) இவளை வேறொருவருமில்லாதபாவி இவள்குறையையார்
வர்போய் மெய்விளக்கச்சொல்லுவார்கள், தருமக்கோயிலான அரசன்
இது அநியாயமென்று கொஞ்சமேனும் ஆலோசியாமல் ஒருபெண்பழி
யைவீணே கொல்லவெண்ணினான், இனிமேல்யாவர் இந்தஅநியாயத்து
க்குவியசனப்படுகிறவர்களொருவரையுங்காணோமென்றுவருந்திவயி
றெரிந்து உலைவாகிச்சுழலுவார்கள்சிலர், கனிபோன்றவாய்காய்ந்துதடு
மாறிபரவசப்புவார்கள்சிலர், மனங்கலங்கி உடல்கரைவார்கள்சிலர், பி
ரலாபித்தழுவார்கள்சிலர்-எ-று, (௱௰௮)

வல்லோர்கள்வல்லபடி சொல்வார்கள்மன்னுமிறை மருமானையிவள்
கொன்றவா, றில்லாதபோதிவனை யிறிதேவனைத்தபழியார்பாலதென்
றுபகர்வார், கொல்லாதுவன்சிறையில் வைத்தேவிளக்கினிவள்கொலை
தான்வனைந்திடுதலாம், அல்லாதுவிட்டிடலு மாமாகுமென்னவவரவ
ரோடுணாத்தழுவார்.

(இ-ள்) இப்படிவல்லவர்கள் தமக்குத்தோன்றினபடி சொல்லலானார்
கள், கிலைகொண்ட அரசகுமாரனை இவள்கொன்றபடியில்லாதபோது இ
வனைக்கொல்வதானபாவம் யார்வசமாகக்கூடுமென்று சொல்வார்கள்சி
லர், இவளைக்கொல்லாமல் வலியதானகாவற்கூடத்திலேவைத்தால்இவ
ள்செய்தகொலைதானே இவளைக்கொல்லும்படியாம் அதையல்லாமல்இ
வளைவிட்டுவிட்டாலும் அக்கொலை விடாதுசூழும், அல்லாமல்இவளைவி
டுகிறதினாலே புண்ணியமுமுண்டாகுமென் றொருவர்க்கொருவர்சொ
ல்லுவார்களாகிவருந்துகிறார்கள்-எ-று. (௱௰௯)

பதியேதுபாவியிவண் வரவேதுவந்துபெருபலனேதுபாவங்கெழ்பெண்
மதியேதிதித்தனையும் விளைவித்ததேதென்று மறுகாமருண்டுவிழுவார்
விதியேயறக்கொடியை வெளியாடனைக்கருவி விலைகூறிவிற்றதுமலால்
சதியேவினைத்தனையிதறமோவெனச்சிலர்கடளர்வார்முகத்திலறைவார்.

(இ-ள்.) இவள்ஊரேது பாவியான இவள்இவிடம்வருவதற்குக்கார
ணமென்னஇங்கேவந்துபெற்றபலனென்னஇந்தப்பாவமுண்டாகப்பெ
ண்புத்தியுண்டானதெப்படி இவ்வளவும் உண்டாகச்செய்ததென்னகரு
மமென்று மயங்கித்திகைத்து விழுவார்கள்சிலர், ஓ!தெய்வமேநீயோமி
கவுங்கொடுமையையுடைய இந்தஎளியவளை விரோதித்து விலைகூறிவிற்
கச்செய்ததுமல்லாமல் முழுதுங்கெடுதியையே உண்டாக்கினை இது உ

னைக்குநியாயமோவென்றுசிலர்கள்தளர்ச்சியையடைக்கிறார்கள்சிலர்சம துமுகத்திலடித்துக்கொள்ளுகிறார்கள்-எ-று. (௱௨௰)

அங்கேயடித்தவடி யிங்கேயலைக்குமலை வல்ல மலைய்துகொலையும்
பங்கேருகத்தினரு மலர்போல்விளங்குமுக மறியாதபாவையனையாள் எ
ங்கேபிறந்தனள்கொலெங்கேவளர்ந்தனள்கொலெங்கேயிருந்தனள்கொ
லோ;இங்கேயிறந்திவ வந்தாளெனப்பலரு மிடைகின்றவல்லைதனிலே

(இ-ள்.) அங்கேஅனையடித்தஅடி இங்கேநம்மைவருத்தச்செய்கிறது அந்த வருத்தத்தைப்படாமல் நடந்தகொலையும தாமரையினது நல்ல மலர்போன்ற முகத்தினாலே தெரிந்திராதபிரதிமைபோன்ற இந்தப் பெண்ணெவ்விடத்தேபிறந்தாளோ எங்கேவளர்ந்தாளோ எங்கேயிருந்தவளோஇங்கேவந்துசெத்துப்போகலானாளென்று பலருமிப்படிகூறுந்த ப்படிவந்துவிட்டபோது-எ-று. தாமரைமலர்போல்முகம்விளங்குகிறதினாலே கொலைசெய்யத்தெரியாதவளென்று கொண்டேவ்வாறு சொல்லுகிறார்களென்க. (௱௨௧)

வேறு.

என்னபாதகஞ்செய்தன மென்னிறநகைத்துக்
கன்னிகைகளைக்கட்டிய கயிறுகைப்பிடித்துத்
துன்னுமாணிக்கத் தோரணவாயிலைக்கடந்து
பொன்னினமாநகர்ப்புரிசையில புறத்துவந்திருந்தான்.

(இ-ள்.) நாமென்னபாவத்தைச்செய்தோமோவென்று அரிச்சந்திரமகாராசன்சிரித்துச் சந்திரமதியினுடைய கைகளைக்கட்டியிருக்கிற கயிற்றைத்தன்கையிலேகொண்டுநெருங்கினபெரிதான ரத்நகசிதமுள்ளதோரணங்கட்டியிருக்கிற வாயிலைக்கடந்து அந்தப்பொன்மயமான பட்டணத்துமதிலுக்குவெளியேவந்துசேர்ந்தான்-எ-று. (௱௨௨)

உற்றகாலையில்வசிட்டனவு மும்பர்கோன்றனக்குக்
கொற்றவானக்கியான்புகல் கோதிலானிடத்தே
அற்றைநாண்முதற்கொள்கை யனைத்துமுறனைத்தும்
இற்றைநாள்விடுங்காண்பநீ யெழுகவென்றிசைத்தான்.

(இ-ள்.) அப்படிமதிலுக்குவெளியேவந்தபோதில் வசிஷ்டமகாமுனிவர் தேவேந்திரனைப்பார்த்து அரசனே உனக்குநான்சொன்ன யாதொருகுற்றமுமில்லாத அரிச்சந்திரனிடத்திலே அன்றையதினந்தொடக்கமாக விசுவாமித்திரன்குற்றமுள்ளவனாகச்செய்யவேண்டி உண்டாக்கின இடையூறுகள்முழுதும் இன்றையதினம்விட்டுப்போம் அதைநீநானுக்காணக்கடவோம நீயெழுந்திருக்கவென்றுசொன்னார் எ-று. (௱௨௩)

தாழும்வார்சடைமாமுனி யவ்வுரைசாற்றச்
சூழுமாதரும் தும்புருநாரதர் தாமும்
வாழும்வச்சிரபாணியும்வசிஷ்டனுமியாரும்
ஏழுபாலருங்காணவந் தந்தரத்திருந்தார்

(இ-ள்) தொங்குவதான நீண்டசடையையுடையபெருமைபொருந்தின வசிஷ்டமுநிவர் அந்தவார்த்தைசொல்லவே எப்போதுஞ்சூழ்ந்திருக்கிறதெய்வப்பெண்களும் தும்புருநாரதர்களும் இவர்களோடுகூடிவாழ்கின்ற வச்சிராயுதபாணியான இந்திரனும்மற்றயெல்லாரும் மற்றதிக்குப்பாலகரேழுபேரும அரிச்சந்திரன்செய்கைபார்க்க ஆகாயத்திலே வந்து தோன்றியிருந்தார்கள்-எ-று. (௫௨௪)

அந்தவேலையிற்கௌசிகன் விரைந்துவந்தரசே
இந்தகோரத்தெய்தவென் னெனக்குநீமுன்னம்
தந்தநாடியான் தந்திலேனெனுமொழிசாற்றி
உயர்ந்துநாடுமிவ் வுயிர்களும்பெறுகவுரைத்தான்.

(இ-ள்) அந்தச்சமயத்திலே விசுவாமித்திரர் அதிசீக்கிரமாகவந்து அரிச்சந்திரமகாராசனே இந்தத்துன்பமடையவேண்டியதென்னவெனக்கு நீமுன்னேகொடுத்தநாட்டைநான்கொடுக்கவில்லையென்று ஒருபொய்வார்த்தைசொல்லித் தப்பிக்கொண்டு உன்னுடையஇந்தஉயிர்களும் பிழைக்கப்பெறுதியென்றுசொன்னார்-எ-று. (௫௨௫)

சேரநின்றவன் செப்பியதாங்கவறன்றி
யாருங்கேட்டிலர் வசிஷ்டனுமமரருமறிந்தார்
வீரவேந்தனுமங்கையு மவனடிவீழ்ந்திங்
கியாதைநீயிந்த வேழைமையுரைசெய்தீரென்றார்.

(இ-ள்) அப்படிக்கிட்டநின்று அந்தவிசுமித்திரர்சொன்னதை மந்திரிமுதலியமூவருங்கேட்டதேயல்லாமல் மற்றையெவர்களுங்கேட்டிலர்கள் வசிஷ்டமகாமுனிவருந் தேவர்களுமேதெரிந்தவர்கள் அப்போது மகாவீரனான அரிச்சந்திரமகாராசனும் சந்திரமதியும் அந்தவிஸ்வாமித்திரர்காலிலேவிழுந்து ஐயா இவ்விடத்திலேயாதைப்பார்த்து இந்த மூடத்தனத்துக்கிசைவாகச் சொன்னீரென்று பின்னுஞ்சொல்லுகிறார்கள்-எ-று. (௫௨௬)

சேய்மைபண்ணையி லுயிர்க்கொருதுணையெனச்சிறந்த
வாய்மையாலகந் தூய்மையாற்றிலம்புபத்தைத்
தூய்மைசெய்வதுநீரலாற் சொல்லினவேறுளதோ
பொய்மைசெய்யினும் வாய்மைபேசேனெனக்கருதி

(இ-ள்) தூரதேசத்திலும்சமீபத்திலும் உயிருக்கு ஒப்பற்றதுணையென் [illegible]

பரிசுத்தஞ்செய்வதில்லை காமனாமலைப்பரிசுத்தஞ்செய்வனா அதுபிற ந்தபிறோயல்லது சொல்லுமிடத்திலையென்றான்மேலா அதுபோல் துன்பஞ்செய்வதானாலும் சத்தியமேவிரதமென்றுகொண்டேன் எ-று. ()

புலையனும்விரும்பாத விப்புன்புலால்யாக்கை
நிலையெனுமருண்டுயிரினு நெடிதுறச்சிறந்தே
தலைமைசேர்ந்தருசத்தியம் பிறழ்வதுதாயேம்
கலையுணர்ந்தநீயெமக்கிது கழறுவதழகோ.

(இ-ள்) நீசனுங்கூடவேண்டாத இந்தப்புலையான புலால்நாறுகின்ற தேகத்தை நிலையுள்ளதென்று மயங்கி உயிரைப்பார்க்கிலும் அதிகமாகச் சிறந்து முதன்மைகொண்ட சத்தியந்தவறி நடக்கவுத்யோகமென் ஞானங்களெல்லாம் [illegible] தீர்ந்தவர்களாகிய நீங்கள் இந்தச்சத்தியந்தவறி நடப்பதைச் சொல்லுவது உமக்கழகாமோ-எ-று. (௩௨அ)

இம்மையம்மையும் விட்டினபமுறைப்புலன்கொள்வியப்பும்
மும்மையுந்தருமுறையுமடந்தவ இதிலேமுரணி
[illegible]
[illegible]

(இ-ள்) இப்பிறப்புமறுபிறப்பு மோக்ஷமென்று [illegible] கண்ணிவா கச்சொல்லுகின்ற [illegible] முறையுந் [illegible] முறை [illegible] டைய தென்கிற நிலைமைக்குவிரோதமாகவில்லை [illegible] நிலை அடக்கி மறுபடியும்வெளிவிடா திருக்கின்ற அக்கினிவாய்ந்த வெப்பத்தைக்கொண்டிருக்குநரகத்தில் விழுந்தாலும் சத்தியத்தை விடமாட்டேன்-எ-று. (௩௨௯)

பதியிழந்தனம்பாலனையிழந்தனம்படைத்த
நிதியிழந்தனமினிநமக்குள தெனநினைக்கும்
கதியிழக்கினுங் கட்டுரையிழக்கிலேமென்றார்
மதியிழந்துதன் வாயிழந்தருந்தவன் மறைந்தான்.

(இ-ள்) எங்கள்ஊரையுமிழந்தோம் பிள்ளையையுமிழந்தோம் நாங்கள் பெற்றுள்ளசெல்வத்தையுமிழந்தோம் இனிஎங்களுக்கு [illegible] நினைப்பதான நல்லகதியையிழந்தாலும் சொன்னசொல்லை இழக்கமாட்டோமென்றுசொன்னார் அதுகேட்டுத் [illegible] தன்வாயுமிழந்து அந்தஅருமையானதவத்தையுடைய விசுவாமித்திரமுனிவர் மறைந்துபோனார்-எ-று. (௩௩௰)

மறைந்துபோகலும் [illegible]
அ [illegible]
நிறைந்த [illegible]
குறைந்திருந்து [illegible]

(இ-ள்.) அப்படி விசுவாமித்திரர் மறைந்துபோகவே இந்திரனானவன் அந்தமகாமுனிவரைக்கூப்பிட்டு நீர் முன்னே சொன்ன காரியத்தை முழுதுந்தெரிந்துகொண்டுபோமென்று தன் சமீபமாக அழைத்தான் அதற்கு நிறைந்தவெட்கமுங் குறுகினபார்வையுமுண்டாகத் தலைகுனிந்து நிலைகுறைவாகிமேகமண்டலத்திலே மறைந்திருக்கிற அவர்களுடனே கூடியிருந்தார் விசுவாமித்திரர்-எ-று (௱௩௪)

வாசத்தார்புனைவாசவனுடன் முனிவரைக்கப்
பாசத்தாள்கரம் பணித்ததேர்ச் சசங்கைபற்றப்
பேசத்தான்பொருள் பிணங்குநிலைப் பேதுற்றள்ளி
நேசத்தார்மகன்கிடக்குந்தேசஞ் சென்றிட்டுற்றனன்

(இ-ள்.) பரிமளங்கொண்ட மாலையணிந்த இந்திரனுடனே கூடி விசுவாமித்திரர் நீக்கச்செய்த தனக்கன்புள்ளவளான சந்திரமதியின்கையிலே கட்டினகயிற்றைத் தன்கையிலே கொண்டு யாதொருவார்த்தையும் பேசமாட்டாதவளாகி அரிச்சந்திரமகாராசன் பிணங்களைச்சுமக்கிற தடியினாலே சந்திரமதியைத் தள்ளிக்கொண்டு தனக்குப் பணிந்துள்ள புத்திரன் இடப்பட்டதான அக்கரையில்லாத நீளநிலையுடைய சுடுகாட்டினிடத்தைச் சேர்ந்தான்-எ-று (௱௩௨)

வழக்கிதென்றுநீ வழிபடுதெய்வந்தனை வணங்கிக்
கிழக்குநோக்கியிங்கிருவெனக் கிளிமொழிமடந்தை
பழக்கமானவக்கணவனைப் பரவியென்னாவி
இழக்கற்கஞ்சிநீயறம் வழுவேலெனவியம்பும்.

(இ-ள்) சேர்ந்தபின்பு சந்திரமதியே நீ வழக்கப்படியே நீ வணங்கத்தக்க தெய்வத்தை வணங்கிக்கொண்டு கிழக்குமுகமாக நோக்கிக்கொண்டிங்கேயிருவென்று சொல்லவே அதற்குக்கிளிபோலும் பேச்சையுடைய சந்திரமதியானவள் தனக்கெப்போதும் பழக்கமாகவணங்குகிற அந்த நாயகனையே துதித்துவணங்கிக்கொண்டு இதோ என்னுயிரிழந்துபோவதற்குப்பயந்து நீர் உம்முடைய தருமத்தைவழுவாமற் கொள்ளுமென்று சொல்லுகிறாள்-எ-று. (௱௩௩)

பொருந்துநீர்த்திரைப்புற்புதவாழ்வை மெய்யென்
றருந்தவத்தையுமறத்தையுமெய்மையையும்விடுத்து
வருந்தமன்னவவழிசிறக்கெனவாழ்த்தி
இருந்தபின்சுடர்வாட்படைவலக்கையினெடுத்தான்

(இ-ள்) ஜலத்திலே பொருந்துகின்ற குமிழிபோன்ற இந்தவாழ்வை நீர் நிலையென்றுகொண்டு உம்முடைய அருமையான தவத்தையும் தருமத்தையும் மெய்ம்மையையும் விட்டு வருந்தும்படியாக அரசனே உம்முடைய விசயபாரம்பரியமாகச் சந்ததிசந்ததிச் சிறக்கவென்று வாழ்த்தியிருக்கு

னக்குழகாகவிருந்தாள் பின்பு அரசன் ஒளிக்கொண்ட வாளாயுதத்தை வலதுகையிலே கொண்டான்-எ-று. (௭௬௪)

உலகுயிர்க்கெலாம்பசுபதியொருமுதலாயின்
அலகில்சீருடையவன்மொழிமறையெனின்றன்கண்
இகலறமபலவற்றினும்வாய்மையீடலதேல்
விலகுறுமலவ்வாய்மையைவிரதமாகக்கொளியன்யான்.

(இ-ள்.) உலகத்துயிர்களுக்கெல்லாம் பசுபதியே ஒப்பற்றமுதற்கடவுளானால் அளவில்லாத சிறப்பையுடைய அந்தக்கடவுள் சொல்வேதமென்றால் அந்தவேதத்திலே விளங்கச் சொல்லுகின்ற தருமங்கள்பலவகைகளிலும் மெய்யே ஒப்பில்லாததானால் அதனை விலகவிடாமல் அந்தமெய்சொல்லுதலையே நான்விரதமாகக்கொண்டதுண்டானால்-எ-று.)

நெறியினன்னவென்றனை விடாநிறையிவட்குளதேல்
இறுதியின்மையைப்பெறுகவிலையெனினிவளிறுதி
பெறுகவென்றுவாள்வீசினன்பேதைதன்கழுத்தில்
மறுமணத்திடுமாலையாம்வீழ்ந்ததவ்வடிவாள்.

(இ-ள்.) அந்தமெய்சொல்லுகிற மார்க்கத்தையே விரதமாகக்கொண்டவென்னை நீங்காதநிறைகுணம் இவளுக்குண்டாயிருந்தால் இவள்சாவாமையைப்பெறக்கடவது இவைமெய்யல்லவிலையென்றால் இவள்சாவைப்பெறக்கடவதென்று வாளைக்கொண்டுவெட்டினான் அப்போது அந்தவெட்டினகூரியவாளானது இரண்டாவதாகிய கலியாணத்துக்கிட்டமாலையாகிச்சந்திரமதிகழுத்திலேவிழுந்தது-எ-று. (௭௬௫)

மயானகாண்டம்-முற்றிற்று.

ஆகவிருத்தம்-௬௰௨.

உ

கடவுள்துணை.

ஒன்பதாவது

மீட்சிகாண்டம்.

படக்கருதாயாவையும்பட்டுளத்தழுத்தும்
திடத்தினின்றுவாள்வெட்டினிற்பிழைத்தடுசெழுந்தீப்
புடத்தினின்றுமற்றுயர்ந்தசெம்பொனெனப்பொலிந்தாள்
மடந்திற்றீங்கொளிர்சந்திரமதியெனுமணங்கு.

(இ-ள்.) ஒருவராலும் படக்கூடாத பாடுகளெல்லாம்முழுதும்பரிசுத்தன்மனத்திலே அழுத்தமாகக்கொண்ட சத்தியவிரதத்துடனேநின்று கத்திவெட்டுக்குத்தப்பியிருக்கின்ற செழுமையான நெருப்புப்புடத்திலிருந்துமாற்றினுயர்ந்துள்ளசிவந்த பொன்போல்விளங்கினாள் அறியாமைகுணத்தினின்று நீங்கிவிளக்குகின்றசந்திரமதியென்கிறபெண் எ-று. (௧)

சண்டப்பேய்க்கெயமு முனிசைதரும்வினையால்
அண்டர்ட்டிருட்டீன கொலயக்கடற்கானவினையுஞல
கண்டபட்டான்பின்சமூமணிதேயவெளிகாட்டிக்
கொண்டபட்டார்புகழ்க்கோமகன் விளங்கினன் குலத்தால்.

(இ-ள்.) சண்டமான் பேய் கண்டவென்ப மைவிசுவாமித்திரமுனிவருடைய ... விளைவித்த அப்பட்டுவந்த இடையூறுகளெல்லாவற்றையுநீங்கிச் சகலகலைவிதமேல் கண்டபட்டு அதிர்க்கவிசும்பினின்று இன்றதெசமூகமணிகாப்போல வெளிதோற்றிக்கொடுத்ததுண்டாகி கீர்த்தியுடைய அரிச்சந்திரமகாராஜன் தன்குலத்துக்குத்துடனேவிளங்கினான்-எ-று. (௨)

புலத்தின்மாட்சிமிகொல்பொலக்கொடிப்படரவேங்காசு
குலத்தின்மாட்சியுங்குணத்தனிமாட்சியுங்குறைவறுசீர்
கலத்தின்மாட்சியும் வாய்மைமாட்சியுநனிமலர
நிலத்தின்மாட்சிமிகாண்காட்சியினோர்கள்பலரும்.

(இ-ள்.) ஆகாயத்தை ... சந்திரமதியைப்போல் கொடியுடையாகிய ... அரிச்சந்திரனுடைய குலத்தினது பெருமையும் குணத்தினது பெருமையும் குறைவற்ற சிறப்புப் பொருந்திய நன்மையினது பெருமையும் மெய்யென்கிற பெருமையும் மிகவுண்டாகும் ... கண்டிருக்கிறவர்கள் தோற்றக் கண்கிறதற்குப்பலரும்வந்துகூடினார்கள்-எ-று, (௩)

கண்டிருந்தநர்வல்வினைச்சூட்டினுய்வாளீர்
கண்டிருந்தவர்மதித்தனர்குளித்தனர்களித்தார்
பண்டைநத்திறத்தின்மார் உயிரவான்படைக்கைக்
கொண்டிருந்தவர்கிரீனுபிழ்ச்சியிற்குளித்தான்.

(இ-ள்.) அந்தவண்ணம் தெய்வப்பகானமல்லவை அரசன் சந்திரமதிக்குச்சூட்டினவளவிலே ஆகாயத்திலே அதைக்கண்டுகொண்டிருந்தவர்கள் மதித்துமெய்ச்சிலவாகளாகிச் சந்தோஷித்தாடினார்கள் பின்பு அந்தச்சுடுகாட்டிலத்திலே வந்திருந்தவர்கள் பலமானவாளாயுதத்தைக் கையிற்கொண்டிருந்த அரசன் அரிச்சந்திரன் ஆனந்தக்கடலிலேமுழுகினான்-எ-று. (௪)

என்றனுளியர்குணமெல்லாம்விளக்கிடுமெனீனப்போல்
நன்றியார்செய்தாரெற்கெனக்கைசமுகமலர்ந்து
அன்றவர்க்சடைகள்பிணைக்கசூழ்ன்றுவீழ்ந்தாட
வென்றுளாரெனனக்கெளிகொடியனன்வுரைத்து.

(இ-ள்) என்றுசொல்லி இந்த அரிச்சந்திரனுடைய நல்ல குணங்களெல்லாம் விளங்கச்செய்ததனால் எனைப்போல் இந்த அரிச்சந்திரனுக்கு நன்மை

செய்தவர்கள்யாவரும் [illegible]
[illegible]
[illegible] எ-று.

மொழியகாலொடுமெய்வருத்திய வசிஷ்டன்மெய்ப்புளகம்
[illegible]க்கங்கள் மூன்றையுமுணர்ந்தும்,
[illegible]
[illegible]டிஞன்மகிழ்ந்துவகைக்கடல்குளித்துறைந்தான்

(இ-ள்) [illegible] வசிஷ்ட மாமுனிவர் [illegible] அதிகமாகப் புளகாங்கிதங்கொண்டார், இறப்பெதிர்வுநிகழ்வென்கிற முக்காலங்களையுந் தெரிந்து [illegible], [illegible] சேர்வுங்கொண்டார் [illegible], அப்படி [illegible] ஆனந்தக்கடலிலே மூழ்கியிருந்தார்கள் எ-று. (௬)

அடையவானவர்திரண்டது திருவுளத்தடைத்துப்
புடையிலங்கியமைந்தரோ டிருவரும்பொருந்தத்
தொடையிலங்கியசடைமுடி முறைமுறைதுளக்கி
விடையிலேறிவந் துமையுடன்றோன்றினன்விமலன்.

(இ-ள்) தேவர்கள்முதலானோர் வந்துகூடியிருக்கிறதைத் தமது திருவுளத்திலேகொண்டு பக்கத்திலேவிளங்குகின்ற புத்திரர்களான விநாயக சுப்பிரமணியருடனே கொன்றைமாலைவிளங்குகின்றதமது சடைமுடியை அடிக்கடி அசைத்துக்கொண்டு இடபவாகனத்திலேறிக்கொண்டுவந்து பார்வதியுடனே விளங்கினார்பரமசிவன் எ-று. (௭)

இந்நெறிப்படி யவுணர்தம் முடல்களைத் தேய்த்த
ஐந்துவெம்படையடக்கியகர மெடுத்தமைத்துச்
சுந்தரத்திருத்தோளிணைபுளகமுற்றோங்க
வந்துதோன்றினன் வயினதேயன்மேற்றிருமறுமார்பன்.

(இ-ள்) இந்நெறியோடும்படி அசுரருடல்களைத் தேயப்பண்ணின செவ்விய பஞ்சாயுதங்களையுங்கொண்ட கைகளைத் தூக்கி எல்லாரையுஞ் சமாச் சொல்லி அழகானதிருத்தோள்களிரண்டுமின்னும் புளகாங்கிதங்கொண்டுவளரக் கருடவாகனத்திலேறிவந்து தோன்றலானார், திருவையும் மறுவையுங்கொண்டமார்பையுடையமகாவிஷ்ணு எ-று. (௮)

காதிற்றோன்றிய தண்டுழாய்த்தார்முகிலாயிப்
போதிற்றோன்றியநான்முகத்தொருதனிப்புத்தேன்
மாதிற்றோன்றிய வாணியோடோதிமப்புள்ளின்
மீதிற்றோன்றினன் விண்ணவர்யாவரும்வந்தார்.

(இ-ள்.) மகரதந்தங்களுடனே விளங்குகின்ற குளிர்ந்த துளசிமாலை யணிந்த மேகவண்ணனுடைய திருவுந்திமலரிலே பிறந்த சதுர் முகங்களை யுடைய ஒருறுப்புமில்லாத பிரம்மதேவரும் தம்முடைய வாக்கிலே தோன்றுகிற சரஸ்வதியுடனே அன்னவாகனத்தின்மேலேறிவந்தார், தேவர்களெல்லாரும்வந்து கூடினார்கள்-எ-று. (௯)

சித்தர்கின்னரர் தும்புருநாரதர் தேவர்
பத்தர்தானவர் கருடக்கருவர்கள்பசாசர்
பிங்கலன்றன்னொடுமாலொடும் பிதாமகனொடும்
மெய்த்துவத்தினைத்தீண்டினர் மேதினிமிசையே.

(இ-ள்.) இப்படிச்சித்தர்களுங் கின்னரர்களும் தும்புருநாரதர்களும் தேவர்களிலேபக்தர்களும் அசுரர்களும் கருடகாந்திருவர்களும் பைசாசர்களும் சிவனுடனேவிஷ்ணுவும் பிரமாவும்மெச்சிக்கொண்டு முழக்கமாகி அந்தஇடத்திலேவந்து சேர்ந்தார்கள்-எ-று. (௰)

சந்திராதித்தர்வைரவர் சத்தமாதர்களே!
யிந்திராதியரெண்மர் மாமுனிவரியக்கர்
மந்தரப்புயரதிதோய் வெனில்வேண்மற்றோர்
அந்தரத்தினைமறைத்து வந்தவையடைந்தார்.

(இ-ள்.) இன்னுஞ்சந்திரசூரியர்களும் வைரவர்களுஞ்சத்தமாதர்களுடனே இந்திரன் முதலானவர்களாகிய அஷ்டதிக்குப்பாலகரும் மகாமுனிவர்களும் இயக்கர்களும் மந்திரகிரிபோலுந் தோள்களிலே இரதிதேவிசேர்வதான கோடைகாலத்துக்குரிய மன்மதனும் மற்றுமுள்ளவர்களும் ஆகாயத்தைமூடிக்கொண்டுவந்து அவ்விடத்திலேகூடினார்கள்-எ-று. ()

கந்தரத்தினில்லா விசிமுதுகுறக்கதுவ
மந்தரப்புயமாயிர முடையவோர்வாணன்
சுந்தரக்கையான்முழக்கிடுங் குடமுழாத்தொனியும்
அந்தரச்செழுந் துந்துபித்துழனியுமார்க்க.

(இ-ள்) கழுத்திலேமாட்டின தோலிருக்கமான முதுகிலே பாதிதாயிருக்க மந்தரகிரிபோலும் தோள்களாயிரமுடைய ஒப்பில்லாத வாணாசுரனானவன் அழகானதனதுகையால் முழக்குகின்ற குடமுழாவின்சத்தமும் செழுமையான ஆகாசதுந்துமி வாத்தியத்தோசையும் எங்குமுழக்கமாக-எ-று. (௰௨)

சின்னம்பேரிகைசல்லிகை செய்பொனின்காளம்
மின்னுமாமுகி லிடியெனக்கடலெனவிம்மத்
துன்னரம்பையர் சொரிந்திடுகற்பகத்துணரும்
பொன்னினன்னெடும் பூக்களும்பொலிந்தனவன்றே.

(இ-ள்) சின்னம்பேரிகைசல்லிகைசெய பொன்னாலாகியகாளமாகிய இந்தவாத்தியங்கள் மின்னுகின்ற கறுத்தமேகத்திடிபோலவும் கடல்போலவுமுழங்க அங்கேநெருங்கினதாம்பாஸ்திரிகள் [பொழிகின்றகற்பகப்பூக்கொத்துகளும் பொன்னாகிய நல்லநெடியனவாயமலர்களும் எங்குநிறைதலாயின-எ-று. (௬௬)

வந்ததேவரைக்கண்டரிச் சந்திரன்மகிழ்ந்தே
என்றாதவமென்னையோ வென்னையோவென்னாச்
சிந்தைபுட்டிருநானந்தப் பெருவெள்ளத்தேங்கி
புந்தியாக்கரைபொடிபடப்புடைத்தனையன்றே.

(இ-ள்) அப்படிவந்தகூடின தேவர்களையெல்லாங்கண்டு [அரிசந்திரமகாராசன் சந்தோஷித்து தங்களுடையபெரிதானதவ மெப்படிப்பட்டதோ வெப்படிப்பட்டதோவென்று மனதுக்குள்ளேபெருகுகின்ற பெரிதான ஆனந்தவெள்ளத்தேங்குநலாகி அறிவுடையபுத்தியாகிய கரை தூளாகும்படி மோதியது-எ-று. (௬௭)

தொழுதனன்றொழுதெழுந் தன்னடிமுடிதொடங்கி
முழுதமுற்றியவுலகையும் பெருந்தடன்மூழ்கிப்
புழுதியாடியுங்கருணையுங் கண்ணினீர்பொழிய
அழுதுவீழ்ந்தனன்செய்தவமின்னதென்றறியான்.

(இ-ள்) அந்ததேவர்களையெல்லாம் வணங்கினான் வணங்கியெழுந்திருந்தான் அவர்கள்பாதங்களைத்தன்முடிமேலேசூடிக்கொண்டு முழுதுநிரம்புதலான சந்தோஷமாகிய அழகுற்றபெருங்கடலிலே முழுகியன்புழுதியெல்லாந் தனதுகிருபைபெருக்கின கண்களினீர் சிந்துதலினாலே தன்மேலெல்லாம் கிளர்ந்துபடிவதானான் பின்னும் அழுவதாயினான் தான்செய்த செவ்வையானதவம் இப்படிப்பட்டதென்றறியாதவனாகி-எ-று.

நாரிபாகனைமுகுந்தனை நான்முகத்தோனை
மூரிவேலனைவிநாயகமூர்த்தியைப்பணிந்தான்
*பூரைபூரையென்றிருமையாலமைத்தபுத்தேளிர்
யாரையாரையென்றறிந்தியாம்விளம்புதுமம்மா.

(இ-ள். பார்வதிசமேதனையும் மகாவிஷ்ணுவையும் சதுர்முகப்பிரம்மாவையும் நீண்டவேலாயுதக்கடவுளையும் விநாயகமூர்த்தியையும் வணங்கினான் வணங்கவே போதும்போதுமென்று இரண்டுகைகளாலும் அரிச்சந்திரனை அடங்கச்செய்த தேவர்களாயவரையின்னாரின்னாரென்று நாந்தெரிந்துசொல்லமாட்டோமே-எ-று. (௬௮)

மீட்டுமன்னவன் விமலனைத் தொழுதிவண்மிடைந்த
கூட்டமாயுளாரியாவர்க்குமாரிகைகள் [illegible]

---

* பூரை பூரை [illegible]

நீட்டும்பல்வளைக்கலைமகடனன்றேமெடுமாவில்
ஊட்டுநீசவானவர்க்குமுனக்குளிர்க்கின்றே.

(இ-ள்) அதற்பின்பும் அரிச்சந்திரன் பரமசிவனைவணங்கி இத்தேவ ர்கள்கூடின கூட்டமானவர்கள் யாவருக்கும் [illegible] கடவுளே நீ இன்று குறிப்பித்தாய் [illegible] நீர் நீட்டமான்பல்வளைக ளுக்கு [illegible] அப்படியே அந்தத்தேவர்களெல்லாருக்குமானந்த குளிர்ப்பியாநின்றீர்-எ-று. (௧௭)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்) சுவாமிகள்களைவம்சபாரம்பரியமாய்ஆடிமைகொண்டிருப்பை பண்ணுகின்றசிவந்தவடிவினை சிவலோகத்தையுடையவ [illegible] ன்றலையிலே விளக்குகின்றமையை [illegible] ன்கிடேமுவிறந்த [illegible] ன்னதென்றுசொன்னானரிச்சந்திரன்-எ-று. (௰அ)

[illegible] பிறைச்சந்திரமதியைக்
கையினாலேடுத்தாங்கவள் கற்பினைப்புகழ்ந்தாள்
தூய்யமுப்பத்திரண்டாம் வளர்த்தகைதொடலும்
மெய்குழைந்தது தழைந்ததுபேரின்பவெள்ளம்.

(இ-ள்) அப்போதுசுந்தரியான பார்வதியைவணங்கிநிற்கிறசந்திரம தியைத் தன்கையிலேவாரியெடுத்து அவளுடைய பதிவிரதாதருமத்தை மிகவுங்கொண்டாடினாள் பார்வதிதேவி அப்படிப்பரிசுத்தமான முப்ப த்திரண்டுதருமங்களையும் வளர்த்தகையினாலேதொட்டவளவிலேசந்தி ரமதியினுடைய உடம்பெல்லாம்தளர்ம்பால் விளங்கலாயிற்று பேரின் பவெள்ளமும் உள்ளேபெருகலாயிற்று-எ-று. (௰கூ)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்) அப்போது பயில்வாகனத்தை முன்போலும்படி [illegible] த்திக்கொண்டுவந்து இவருஞ்சகிரிபிளக்கக்கு [illegible] வ ல்பிடித்தசிவந்தகையிலேமேல் [illegible] உடனேகு யில்போலும் [illegible] செழுமையான மூலச்சொல்வசனி [illegible] இராசகுமாரன் [illegible] [illegible]-எ-று. (௨௰)

வேலர்கு [illegible] செய்துணை [illegible] காசி [illegible] கன்
பால [illegible] பொழுது [illegible] முதனைப் [illegible] ரான்
[illegible] [illegible] திருமுனிப்பிற்
காலகாலனுந்தேவரு நிற்பதுகண்டார்.

(இ-ள்.) அப்படியே முருகவேலையவர் கூப்பிட்ட பிள்ளை [illegible] தம்பி போல் காசிதேசத் [illegible] னுடைய பிள்ளையும் உயிருண்டாகி யெழுந் திருந்து அந் [illegible] வணங்கி [illegible] டான அந்த இரண்டு பிள்ளை [illegible] பாம்பு [illegible] மற் றுமுள்ளவர்களும் [illegible] சுத்தைப் பார்த்தார்கள்-எ-று. (உக)

ஆசிலன் குணத் தயோத்தியர் வேந்த னுமனைக்கும்
கசிவோடு [illegible] தவருக்கனி [illegible]
[illegible] மெய்யுயிர் [illegible] திடுக் [illegible] புளகம்
[illegible] யோங்கிடவிளைஞ்சினர் [illegible] சூமெனரால்.

(இ-ள்.) குற்றமில்லாத நல் குணத்தையுடைய அயோத்திக்கரசனாகிய அரிச்சந்திரனும் சந்திரமதியும் காசிராஜனும் [illegible] களும் சந்தோஷித்து [illegible] உடம்பெல்லாம் [illegible] புளகங்கொண்டார்கள், பின்னும் அந்தப்புளகாங்கித [illegible] மேன்மை [illegible] வணங்கினார்கள், பரவ [illegible] ரோமாஞ்சனம் [illegible] ல். (உஉ)

மன்னர்மன்னனைநோக்கியே மலர்க்கரமசைய
என்னை [illegible] திருவாயிலிருந்து
முன்னையு [illegible] தைக்குவெதிர்க்கும்
உன்னையெப்ப [illegible] வார்.

(இ-ள்.) [illegible] மலர்போலுள்ளகையில் மல ரச்செய்து இந்தியன் [illegible] முனைப்ப [illegible] திருவாயிலிருந்து [illegible] இப்பொழுது சொல்லுகிற நமக்கும் உன்னைப்போன்றவர் [illegible] ருவருமில்லை அரிச்சந்திர [illegible] முனிவர்கள் [illegible] ன்னார்கள்-எ-று. (உ௩)

[illegible] வர்களருளிய திருமொழிகளா
[illegible] பெற்று [illegible] தங்கி
[illegible] குழல் மல்லியும் புதல்வனும் புதை [illegible]
மூவருமினிப் [illegible] தொழுதார்.

(இ-ள்.) அப்படி [illegible] அரு ளி [illegible] திருவார்த்தை [illegible]

டிப்பட்டபேறு பெற்றவர்களென்று நைந்து உருகுதலாகிய பூபனைவிசு
வதான கூந்தலையுடைய சந்திரமதியும் புத்திரர்களும் மந்திரிகள் சிரோமன்
அரிச்சந்திரமகாராஜனுகிய மூவரும் அவர்கள்காலின்மேல் விழுந்தெழுந்தி
ருந்து பலபடி ஒவ்வொருவருந் தனித்தனியே தோத்திரஞ்செய்தார்கள்
எ-று. (௨௯)

வேறு.

அன்னவர்வணங்கியங்கனெக்குருகு மகேசன்மூற்றெழுந்திடுமனைமதி
கன்னிபங்காளனன் றிருச்சரமமைதனுக் கௌசிகன்றனையெதிர்நோக்கி
மன்னவன்றனக்குநீயிடர்விளைத்த வகைகளையுமாய்த்தியவாறும்
இன்னதற்றவத்துரியாவருமறிய வியப்பெனத்திருவுளமானார்.

(இ-ள்.) அவர்கள் அப்படிவணங்கித்துதித்து உடம்பெல்லாம் உட்டுவி
ட்டுருகிய பரவசமாக எழுந்திருக்கிறசமயத்தில் பார்வதிசமேதரானவ
ர்தமது திருக்கைகளால் அவர்களை அரசச்செய்துவிஸ்வாமித்திரனைப்
பார்த்துநீர் அரிச்சந்திரமகாராஜனுக்குச்செய்த துன்பவகைகளும் அந்
தத்துன்பங்களை அவன் ஆறுதலாய்த் தாங்கி இருந்ததெல்லாவற்றையும் இட
த்திலே எல்லாருந்தெரியச்செய்தாலும் திருவுளம்பற்றியருளினார்-எ-று.

இம்மொழியினையெல் விஸ்வாமுனிவ னிதயத்திற்றுணுக்கமுற்
றெதிர்போய், மும்முறைநிலத்தின் மிசைவிழுந்திறைஞ்சி முதுமறை
மொழுகளாற்புகழ்ச்சிக, கைமலர்வாய்ப்புதைத்து மெய்குனிந்துக
ண்ணீரரும்பமெய்பொடிப்ப, எம்மையாளுடையவிறைவ கேட்டருள்
கென்றியாவையுநிகழ்ந்தவாறிசைப்பான்.

(இ-ள்.) இந்தவார்த்தையைப் பரமசிவன்சொல்லக் கேட்கும்போது
விஸ்வாமித்திரமுனிவர் தம்முள்ளத்திலேபயங்கொண்டு அவர்க்குமுன்
னேபோய் மூன்றுதரம்பூமியிலே படியவிழுந்துவணங்கி பழையவேத
வாக்கியங்களாலே தோத்திரம்பண்ணிதமதுகையாகியபூவினாலேதமது
வாயைமூடிக்கொண்டு உடம்புவணங்கிக் கண்களிலேநீருண்டாகவும்உ
டம்புபுளகாங்கிதமாகவும் எங்களையெல்லாம் அடிமையாக்கொண்டகட
வுளே கேட்டருளுமென்று நடந்தபடிக்கெல்லாஞ்சொன்னார்-எ-று. ()

வாசவன்முன்னாள்வினயகாரணமும் வசிட்டனுந்தானுமன்றிட்ட
பூசலுமிவங்காத்புனமறுத்ததுவும் பூவலன்வேட்டைபோந்ததுவும்
நீசமங்கையரைவிடுத்ததும் நனுகருமாநிருபனன்னுடலித்தேகிக்
காசிபுக்கிங்காத்தடும்விளைத்தவாறுமுங்கௌசிகனுரைத்தான்.

(இ-ள்.) முன்னேஇந்திரன் கேட்டதினிமித்தமும் அதற்குவசிஷ்டரும்
தாமும் அப்படிசெய்து கொண்ட சண்டையும் பின்புமிருகங்களாலே
இவனுடைய புனமுதலியநாட்டெல்லாம் அழிப்பிச்சண்ணினதும் அதற்காகஅரசன்

வேட்டையாடவந்ததும் அப்போதுநீசகன்னிகளை அனுப்பினதும் அவர்கள்நிமித்தமரசன் தனதுநாடுமுழுதும் தமக்குக்கொடுத்ததும், கொடுத்துவிட்டுப்போய்க் காசிபட்டணத்துச்சுடுகாட்டைக்காத்ததவும் பின்புநடந்தசெய்கைகளும் விசுவாமித்திரர்சொன்னார்-எ-று. (உஎ)

என்றவனுரைக்கவிந்திரன்வையத்திலிருவினைவிளைத்த
தொன்றல்லவென்டவற்றினுன்மனத்திலுற்றதுபெற்றிலையுலாம்
அன்றவனளித்துமின்றிதுமட்டுமறக்கிலைபிழைத்தலைசனால்
வென்றவர்தோற்றார்யாரெனவிமலன்வினவிடக்கௌசிகன்விளம்பும்.

(இ-ள்) அப்படியாக அந்தவிசுவாமித்திரமுனிவர்சொலவேநீர்இந்திரன்சபையிலேவசிட்டருடனேபந்தயத்து அருமையானசெய்கைகளைச் செய்தது ஒருதரமையல்ல அநேகமுண்டு அப்படிச்செய்தனைகளாலேஉம்முடையமனதிலே கொண்டகொள்கையை அடைந்திலீர் தனதுநாட்டை அரிச்சந்திரன்கொடுத்த அன்றுமுதலின்றளவும் தனதுதருமநிலையின்றுந்தவறுதலில்லாதிருக்கிறான் அப்படியிருக்கிறதினாலே வென்றவர்யார்தோற்றவர்யாரென்று பரமசிவன்கேட்க விசுவாமித்திரர்சொல்லுகிறார்-எ-று. (உஅ)

கேதிலாக்குணத்தவனீதியுநெறியுங்குறியுமியானறிகிலாதிகழ்ந்தன
ஆதலால்வென்றேன்வசிட்டனேதோற்றானடியனேயடியனேன்மேனு
காதலாற்செய்தவத்தினிற்பாதிகாவலன்றனக்கியானளித்தேன் [ட்
காதலாலெனக்கன்றீந்தபேரரசுமீந்தனனென்றுரைசெய்தான்.

(இ-ள்.) குற்றமில்லாதகுணத்தையுடைய அரிச்சந்திரனுடையநீதிபும்நீதியெகிற்கிறதும் அவன்மனக்குறிப்பும் நான்தெரிந்துக்கொள்ளாமல்இந்தப்படி இகழ்ச்சிபண்ணினேன் ஆகையால் வென்றவர்வசிஷ்டரோ தோற்றவன்அடியேனே ஆனதினாலேமுன்னால்நான் அன்புடனேசெய்தவத்திலேபாதி அரிசசந்திரமகாராஜனுக்குக்கொடுத்தேன் இதையல்லாமல் அப்போதெனக்கு அவன்கொடுத்தபெரிதான அரசாட்சியையும் அவனுக்கேகொடுத்துவிட்டேனென்றுசொன்னார்-எ-று. (உகூ)

உரைத்ததுசெவியிற்காய்ந்தநாராசமோட்டியதென்விறையுருகிக்
காப்பினர்தாமுன்கொடுத்ததுவாங்கக்கண்டிலோகேட்டிலோங்கையே
ற்பிரப்பினர்க்களித்தபொருடினைக்கொண்டோனுமெனப்பெயர் ப
டைத்துலகம், புரப்பவன்யானோசெப்பழிதனையாபூண்கிலேனென்றன
ன்பின்னும்.

(இ-ள்.)அப்படி அரசர்சொன்னது தன்காதிலே காய்ந்தநாராசத்தைப்புகுத்தினாற்போலிருக்க அரசன்மனமுருகிஒருவர்கேட்டபொருளை இல்லையென்று மறைத்துக்கொள்ளுகிறவர்களுங் கூடக்கொடுத்தபொருளை வாங்கிக்கொள்ள நாங்கள்கண்டதுமில்லை கேட்டதுமில்லை கையையேந்தியாசிப்பவர்களுக்குக் கொடுத்தபொருளைத்திரும்பவும் வாங்கிக்

கொண்டவனிவனென்றபெயர்கொண்டு உலகத்தையாளுகிறவன்சா லே அவன் [illegible] அடையவேட்டேனென்றபின் னுஞ்சொல்லுகிறான்-எ-று. (௬௰)

இம்மையிற் பழிபோ [illegible] தளை [illegible]
செய [illegible] பெருமை [illegible]
தம்மை [illegible]
முப்பை [illegible] ணைப்பான்

(இ-ள்.) [illegible] கொண்டால் [illegible] டாரும் [illegible] டாரும் [illegible] பங்கின [illegible] மூன்றுகாலத்துக்கும் எனக்குப்பழிப்பையே உண்டாக்கு [illegible] உம்முடையபெருமைக்குத் தக்கதோவென்றுசொன்னான் அதற்குவிசுவாமித்திரர் சொல்லுகிறார் எ-று. (௬௧)

கன்னலஞ்சூழ [illegible] யான்விட்டு, பன்னவ [illegible] யானும், மு ன்மொழிந்த [illegible] முறைமை [illegible] தரும்.

(இ-ள். [illegible] டுமிக்க [illegible] விட்டுவிட்டு [illegible] முனிவரும்சா [illegible] க்க உன [illegible] ஆகை யா [illegible] சொல்ல அதற் கு [illegible] அரிச்சந்திரமகாராஜன் மறுபடியுந் தொடுத்துச்சொல்லுகிறான். (௬௨)

வேதியர்க்கடிமையாக [illegible] பர யச்ச [illegible] தேன், சோதிமண்டபத் [illegible] மண்புரக்க, நீதியச்செறஞ் [illegible] சகலித் தேசனிந்[illegible] பென்றான்.

(இ-ள்) பிராமணருக்கு அடிமையாக [illegible] என்பிள்ளை யையும் [illegible] அடிமையாய்ப் [illegible] கொண் டிருக்கிறேன் இனி [illegible]

ளர்த்தின்மேலெறி ஞானிவெ பாதத்தினலிடக்கைதர் சூழக்கொண்டு உலகத்தைகாட்டுகிறது நீயில்லையிவ் துதிப்போதுசன். அந்த அரசாட்சியை உனக்கேகொடுத்தேன் உனக்குமேவேண்டு மனைக்குறிதுவேதங்களின் துதிசொன்னான் - எ - று. (௬௧)

ஆர்கொலியானருக் கூட்டிலைர்த் திருப்புதல்வியார் திருப்பதந்தக்கன்
பமரேசனிமைக்குத் தீக்கரியிலை மனத்து புரவலனுமைப்பதுகேளா
வார்மேலைப்பட்டினையிலைகொண்டுமறையவனுகியங்கிறைக்க
தாயகேதலுங்காணுமாட்டுமகிறக்கிளிக்கிளையன் சொல்வான்.

(இ-ள்) எனக்குச்சுவிகாட்ட டக்காத்திருக்கிறதென கருதியானது உலகத்தைநக்காக்குக்கொண்டிருக்கிறதே உனக்குக்குநியானதுஆசையாலிளிர் அமீரக்கியபுரி துப்போகிறதேகாரியமென்று மித்துஅரசன் செல்லுகிறகைக்கேட்டு ஆழமுள்ள வேலையணிக்க சந்திரமதியை விலைக்குவாங்கிக்கொண்டுபோக பிராமணனுகியிருந்த அக்னிபகவான்பரமசிவனுடைய சந்நிதிமுன்னேவந்துநின்று இந்தவார்த்தைகள் சொல்வதானன் - எ - று. (௬௪)

என்னையே புணர்ந்தாயெனக்குவிற்றதுவு மிகழ்ச்சியோவிவ்விலைபடுதல்
முன்னமேயுணர்ந்துகொள்வதற்கிசைக்கு முழுமறைக்குத் தாவந்தநிக்
பின்னைபமைக்கன்றன்னையும்விற்கவிலைகொண்டவாவனைன்மீதென் [று
றன்னைப்பக்களவன்றிருமுனைவைத்தானரசனுமதிசயமுற்றான்

(இ-ள்) ஓ அரசனே நீ சொன்னசொன்னீர் எனக்குவிற்றதுங்கூட உமக்குஇகழ்வாகுமோ இக்கச்சந்திரமதிவிலைபாகிறது முன்னேதானேதெரிந்து விலைக்குவாங்குதற்குச்சம்மதித்துப மயதான வேதப்பிராமணகுலத்திலேவந்துநான் பிறந்து பின்னையேயாக்க சந்திரமதியையும் மகனையும் நீவிற்கநான்விலைக்குவாங்கினேனையா இலைஇதுவென்று பார்வதிசமேதர்சந்நிதிமுன்னேவைத்தான் அதுகண்டு அரசன் ஆச்சரியமடைந்தான் - எ - று (௬௫)

காலனைவ்வளவிற்கருங்கடா மேறிக் கருமுகிற்கப்புவிட்டனைய
கோலமுஞ்சிவந்த கண்களுநீவந்த குஞ்சியுங்குண்டலக்குழையும்
சூலமுங்காலதண்டமும்பனைக்க தோள்களுமார்புமுந்துலங்க [ன்
மூலமாமுதலைக்கேக்கவிழ்ந்துணைந்து முகமலர்ந்தரசன்முன்மொழிவா

(இ-ள்) அந்தச்சமயத்திலேயமனானவன் கறுத்தஎருமைக்கடாவின்மேலேறிக்கொண்டு கறுக்கமேகமானது கிளைகள்விட்டிருக்கிறதுபோலானகைகால்களோடு கூடினவடிவும் சிவப்பானகண்களும் நீண்டதலைமயிர்களும் குண்டலமணிந்தகாதுகளும் சூலாயுதமும் காலதண்டமும் பருத்ததோள்களும் மார்பும்விளங்க ஆதியானபெரியமுதற் கடவுளைதரிசித்துக் காலின்மேல்விழுந்து வணங்கிப் பின்புமுகமலர்ச்சியுடனே அரசனுக்குமுன்னேசொல்லுகிறான் - எ - று. (௬௬)

அலைகடற்புவியிற்புலையருக்கடிமையாவையென்பதுமுதலறிந்து
புலையனைப்பிறந்துகொண்டவன்யானேபொறுத்துநீதக்கவாவனமீ
திலேகுலாந்தொடையாயிருந்துகாத்திடுமுயிர்யாகசாலைகாண
தொலைவிலாமடிவெக்ஞனரிளிசழ்ந்தசுடலையைபாரெனவுரைப்பான்.

(இ-ள்) அலையினைக்கொண்ட கடலாலேசூழப்பட்ட வுலகத்திலேநீச ருக்குநீ அடிமையாவாயென்பதை நான்முன்னதாகவேதெரிந்துநீசனாகப்பிறந்திருந்து உன்னை விலைக்குவாங்கினவன்தானே அடிமையாக ஒப்புக்கொண்டு நீவழுதிந்தத்தவிலையோலை இதுதான்பச்சிலைக்கூடினமாலையணிந்த அரசனே நீயிருந்து காத்ததானசுடுகாடும் யாகச்சாலைகளென்றுதெரிந்துகொள் ஆசுதிதுஇழியாதபழிப்பின்று நீயென்னுனவயானல் நீஇகழ்ச்சிசெய்கிறசுடுகாட்டை நீயேபார்த்தறிந்து கொள்ளென்று சொன்னான் எமன்-எ-று. (௬௭)

அவணமிரண்டுங்கண்டிதம்பொழுதே யாபெணவறிந்துமெய்பதி
ழ்ந்து,கோவணக்கிரணமணிமுடிதனிகைக்கிலேசுருமபிணையுமகற்றிக்கா
வணநிழலிற்கழுகெழுந்தோங்குகனற்புகைச்சுடலையைப்பார்த்தான், பூ
வணக்குறையுபொய்கையும்வாசப்பொருளுபாய்ப்பொலிந்தையன்றே.

(இ-ள்) விலையோலையிரண்டையும்பார்த்துத்தங்களெழுதேசரியென்றுதெரிந்து உடம்பெல்லாம்பூரித்து பெருமைபொருந்தின நிறமானஒளியையுடையரத்னகிரீடத்தையணிகிறதலையையசைத்துதுன்பத்தையும்தன்னைப்பிடித்திருக்கிறவைகளையுநீக்கி பந்தல்போட்டநிழலைப்போற்ற கழுகுகள்எழுந்து உயர்ந்துபடர்வதாய் நெருப்புகைகிளருவதானசுடுகாட்டைப்பார்த்தான் பார்க்கவேஅவ்விடம்லட்சுமிதேவிவாசஞ்செய்வதானம்பூப்பொய்கையும் மணக்கிளருவதானசோலைமாகவிளங்கியது-எ-று

வாவியெலாம்யாகமரமெல்லாம்யூபம்வானெலாமங்குதித்தூபம்
தீயெலாமுத்தீதிருசயெலாந்தருப்பைதீப்படுவிறகெலாஞ்சமிதை [ள்
பேயெலாமுனிவோர்பேச்செலாம்வேதம்பிணமெலாமதற்சமைபசுக்க
ஆபவாறெல்லாநோக்கினன்றொல்லையைந்தவேயிதெனவமைந்தான்.

(இ-ள்) அந்தஇடங்களெல்லாம் வேள்விகள் அக்குள்ளமரங்களெல்லாம் வேள்வித்தூண்கள் ஆகாசமெல்லாம் அங்கேவேள்விசெய்தபுகைகள்நெருப்பெல்லாமகாருகபத்தியம் ஆகவநீயம்தெட்சிணாக்கினியம் அந்தத்திக்குகளெல்லாம்தர்ப்பைகள் அந்தநெருப்புமூட்டுகிற விறகுகளெல்லாம் சமித்துகள் அங்குள்ளபசாசுகளெல்லாம் முனிவர்கள் பேசுமொழியெல்லாம் வேதங்கள்பிணங்களெல்லாம் அந்தயாகத்துக்குத்தகு

தியாணைக்கள் இப்படியாயிருக்கிறவைகளெல்லாம் பார்த்தான் இவைக
ல்லாம் முன்னோர்களே அமைந்திருக்கிறதென்று சமதந்தானுன்-எ-று

அக்கவன்றன்னைப்பாவசூடநோக்கியாசமீயயோத்தியினணுகிக்
கீக்கறமகுடஞ்சூட்டியிம்முனிவன்செய்தவம்பாதிங்கொண்டு
வக்குநீருலகம்பொதுவறப்புரந்தருநீதியெமடைதத்திதிலென்னுந்
தேங்கமழ்சடையான்றிருவுளமகிழ்ந்துதேவர்கோமாற்குறைசெய்வான்

(இ-ள்) அப்படியவனைத் தந்த அரசனைச் சந்தோஷத்துடனேபார்த்து அரச
னே நீ அயோத்தியாபுரிக்குப்போய் முற்றுந்திருக்கிரீடஞ்சூட்டிக்கொண்
டு இக்கவிசுவாமித்திரர் செய்த தவத்திலேபாதியும் உன் சமார்க்கினவனு
ம்வளைக்கடல் சூழ்ந்தவுலகமெல்லாம் உனக்கேசொந்தமாகராட்சித்துப்
பின்பு நம்முடைய பதத்தாருக்கு நீவந்துசேர்க்கடவையென்று மணம்பரிம
ளிக்கின்ற சடையையுடைய பரமசிவனானவர் தமது திருவுள்ளமகிழ்வாய்
தேவேந்திரனைப்பார்த்துச்சொல்லுகிறான்-எ-று. (௪௰)

காரணமொன்றுகேட்டிப்பாரிலிங் கிசைந்ததுமுன் முனிவரரும்
வாரணவாசிமன்னனுமியபதிமன்னவன்றன் னுடன்போகித்
தோரணவீதிநகர்புகுந்தரசர்முடிசூட்டியபின்னர்
ஊரினிதிசென்றுமாதவனிருக்கவணங்கியுவகையாலன்னவருனைப்பார்.

(இ-ள்) இனிச்செய்யவேண்டிய காரணமொன்றுண்டு கேள்நீயும்பாவு
பழுதலானமுனிவர்களும் வாரணவாசிக்கரசனும் இந்த அயோத்தியா
திக்கரசனான அரிச்சந்திரனுடனேபோய் தோரணங்கட்டியிருக்கிறவீதி
களையுடைய அயோத்தியாபுரியாகிய திருநகருக்குள்ளே புகுந்து அரச
னுக்குஒளிபொருந்தின கிரீடஞ்சூட்டினபின்பு உன்னூருக்குநீபோகக்க
டவையென்றுசொல்ல அந்தக்கவணாவணங்கி அவர்கள்சொல்லுகிறார்க
ள்-எ-று. (௪௧)

திங்கள்மேவியசெஞ்சடைமுடியாய்நின்றிருவுளத்தின்படியல்லால்
எங்கண்மாட்சிமைவேறில்லை என்றனிதகவே வறந்தலை மிசைக்கொண்
டார், அங்கண் மாருலமகன்மெழுந்தீசனணிதிழ் மயிலையிற்புக்கான்
செயகணமாலைகிப்பாற்கடல்புக்கான்றிசைமுகன்றனதுலகடைந்தான்

(இ-ள்) சந்திரன்பொருந்தின சடைமுடியையுடையவரோ உமது தி
ருவுள்ளத்தின்படியேயல்லாமல் எங்கள்பெருமை வேறொன்றுமில்லை
யென்று அவர்கட்டளையிட்ட வசனத்தைகள் தலைமேலே கொண்டார்கள்
அப்போது அந்தஅழகான இடத்தையுடைய பெரிதான அந்தவெள்ளிமலை
யிப்பரமசிவனானவர் அழகுவிளங்குகின்றகயிலாசமலைக்கெழுந்தருளினா
ர் சிவந்தகண்களையுடைய திருமாலானவர் திருப்பாற்கடல்போய்ச்சேர்
ந்தார் பிரமதேவன் சத்தியலோகம்போய்ச்சேர்ந்தான்-எ-று. (௪௨)

எருத்தினின் மிழ்ச்சிபோக்கக் கடவுளே தவன்மாறு
தருந்திசொல் கேட்டுத்தஞ்சார்பினிலடைந்தபின்னர்
வருந்தழுவ்விளையுமாற்றின் மனைமாருடன் கூட்டி
இருத்திசாம்போமோவென் றுவிக்திரனினிதிருந்தான்.

(இ-ள்) மனைத்திலே சந்திரமதிகமாகக் [illegible] கடவு ளோவிலை [illegible] அதுபுகொண்டுபோய் தன்னிடம்சேர்த்தபின்பு உண் டானவருத்தமையு மற்றப்பாவர்செய்கைகளையும் போக்கி அரசனுக்கு [illegible] அயோத்தியிலிருக்கச்செய்து பின்புசாம்போவோமென் [illegible] சந்திரமதியோடிருந்தான் எ-று. (௪௩)

காசியல் பிருகு மகேசர் [illegible] ஆசாரன்
கோசிகன் வசிட்டன் [illegible] முனிவர்சியாத
ஆசிருத [illegible]
காசியிலினிதிருந்தார் கழிந்தனகுப்போது

(இ-ள்) காசியர்-பிருகு [illegible] வசிஷ்டர் [illegible] முனிவர் [illegible] முதலான [illegible] காசியிலே [illegible] இருந்தார்கள் [illegible] எ-று.

கழிந்தனகுப்போது [illegible] காசியிலிருந்தன்
மொழிந்தனவினை [illegible]
கொழுந்தடமுறாகம் [illegible]
எழுந்தனதேருமாவுமியானையுஞ்சேனைதானும்

(இ-ள்) அன்றிராத்திரி அப்படி [illegible] சேனைகளெல்லாம் பிர [illegible] உடனேசெழுமையா [illegible] முழுவதிக்குமெல்லாம் [illegible] காலாட்களுமெழுந்தன எ-று. (௪௫)

கரிபரியீட்டத் தடிக்கண் மணித்தேர் தந்தாரும்
[illegible] தானும்
எரிபெருந்தூளிய [illegible] வெண்கொடிப்படையெழுச்சி
கரிபெருங்கடைகள்போல [illegible] னைச்சார்ந்தவன்றே.

(இ-ள்) [illegible] கட்டமான [illegible] பெண்கள் கூட்டமும் [illegible]

ளைக்கொடிகள் அந்தரத்தானிடத்தை மறைக்கவும் முகில்கள் சஞ்சரி க்கின்ற கடல்களைப்போலவந்து அரிச்சந்திரபட்டணத்தைக்கூடின-எ-று.

வானவர்கோனும் வேத மாமுனிவோருந் தவமேற்
றோனையுங் காசிவேந்துஞ் சத்தியகீர்த்திதானும்
ஆனையுந் தேருமாவுடனெழு படையோத்திவேந்தன்
மானமார் [illegible] பூந்தான் மழைமுகமுரசமார்த்த.

(இ-ள்.) வானவர்களுக்கரசனாகிய இந்திரனும் பெரியவேதமுனிவர்களு டன்கூடியதவத்தையுடையவேனையுங் காசியரசனுஞ் சத்தியகீர்த்தியும்யா னைகளுந்தேர்களுங் குதிரைகளுஞ் [illegible] அயோத்தியாபுரிக்கரச னான அரிச்சந்திரன் அந்தப்பெரிய [illegible] பட்டணத்தைவிட்டெழு தலானான் அப்போது மேகங்கள்போலப் பேரிகைகள்முழங்கின-எ-று. ()

[illegible]

(இ-ள்) [illegible] ஆரவாரித்து [illegible] நகரத்தாசன் [illegible] வந்து கூடிவசாமைமாலைமார்பினை, நீர் [illegible] என்று சொல்ல அரசன் [illegible] என்று சொல்லக்கமுனிவரும் [illegible] அப்போது தேவ ர்களெல்லாருங்கூடி அரிச்சந்திரனைச்சிவந்தபொன் [illegible] களாலு ஞ்சமைந்த நீண்டதேரின்மேலேற்றினார்கள்-எ-று. (சஅ)

சந்திரமதியைக்கற்பின் றழலினைத் தீண்டவஞ்சி
அந்தரதிசைப்போர் [illegible] லைவருங் கலங்கினார்
இந்திர [illegible] புலைக்குலச்செந்தொற்
சந்திரதிரு [illegible].

(இ-ள்) சந்திரமதியாகிய [illegible] காக்கவந்த ஆகா யத்திலுள்ள தேவர்கள் [illegible] எல்லோரும் [illegible] கள் அப்போது [illegible] லைமுடை நந்தை [illegible] இனி செவ்வி [illegible] முடை யதிந்தராணியானவள் [illegible] எடுத்து அந்த [illegible] பொரு ந்தினாள்-எ-று. (சகூ)

[illegible]

(இ-ள்) வேடர்வலைக்குள்ளகப்பட்டு வருந்திப்பின்பு அவ்வலையைவிட்டு நீங்கின செவ்விதான ஆண்யானையும் அதனுடன் பெண்யானையும் முன்னே தாங்கள்சஞ்சரிக்கிற இடத்துக்குப்போகிறதுபோல மகாபுண்ணியவானான அரிச்சந்திரமகாராஜனும் மகனும்தேவியுந்தேர்மேற்கொண்டு உலகத்துள்ளவர்களெல்லாம் மங்களம்பாட அந்தப்பெரிதான காசிபட்டணத்தைவிட்டு நீங்கினார்கள் எ-று. (௫௰)

தோரணவயிற்பின்னாத துழனியஞ்சூழநிரண்ணிய
பூரணவாவிநீக்கிப் பூம்பொழில்பலவுந்தீர்ந்து
காரணத்தமைச்சரோடுங் கடற்பெருஞ்சேனையோடும்
வாரணவாசியாற்றின் வண்டலில்வந்திருந்தான்.

(இ-ள்) தோரணங்கள்கட்டியிருக்கிற கோட்டைவாயிலின்பின்னிட்டு ஒலிகளையுடைய அழகிதான மருதநிலத்தைக்கடந்து நீர்நிறைந்த குளங்களைப் புக்கடந்து பூஞ்சோலைகள் பலவற்றையுங்கடந்து பிரதானமானமந்திரிகளுடனே கடல்போன்றபெரிதான சேனைகளுஞ்சூழ வாரணவாசியினது ஆற்றங்கரையோரத்திலே வந்திறங்கினார்கள் எ-று. (௫௧)

அந்தயாத்திரிற்றீர்த்த மாடியன்றங்குவைகி
மந்தராசலப்புயந்தான் மற்றைநாளெகில்வாசச்
சந்தனுடவியும்வெற்புங் கடங்களுங்கடந்துமெல்ல
வந்தநாள்யமுனையாற்றின் கரையினைவல்லைச்சார்ந்தான்,

(இ-ள்)இறங்கி அந்தமகாநதியிலே ஸ்நானஞ்செய்துகொண்டு அன்றையதினம் அங்கேதங்கி மந்தரமலைபோலுந்தோள்களையுடைய அரிச்சந்திரமகாராஜன் மற்றுநாள்யாதோரிழிவுமில்லாத சந்தனவனங்களும் மலைகளும்மேடுகளுங்கடந்து மிருதுவாகவந்தபோது யமுனையாற்றங்கரைக்குவந்துசேர்ந்தார்கள்-எ-று, (௫௨)

அங்கதித்தீர்த்தமாடி யணிமணிதாளுஞ்செம்பொன்
மின்னவிர்தரங்ககோதா விரிதுறைதீர்த்தமாடிப்
டன்னதுகடந்துவெற்றிப் பகீரதன்கொணர்ந்தகங்கை
நன்னதியன்னைவந்து நண்ணினன்விண்ணோரோடும.

(இ-ள்) அந்த நதியிலும்ஸ்நானஞ்செய்துகொண்டு அழகானரத்னங்களும் முத்துக்களுஞ் செம்பொன்னுமின்னுகின்றஒளியைக்கொண்ட அலைகளையுடைய கோதாவிரித்துறையிலும் ஸ்நானஞ்செய்துகொண்டு இப்படியாகவேபலநதிகளுங்கடந்துவந்து ஜயத்தையுடையபகீரதன்கொண்டுவந்த கங்கையாகிய நல்லநதியைத் தேவர்களுடனேவந்துகண்டான்-எ-று (௫௩(

வேலிநுபுரமூமீண்டவெண்குடைமேனிமுற்ற
நாலிருதிசையுந்தருநாகமுமவுஞ்செல்ல

மேவிருவிசும்பைத்தாவிமறையவெண்கவரிக்கற்றை
காவிருமருங்குமேர்கக் கங்கைமாநதியைக்கண்டான்

(இ-ள்) சேனையுகங்கள் இருபக்கத்திலுங் கூடிவரவும் வெள்ளைக்குடைமேலே கவிழ்ந்து நிழலைச்செய்யவும் எட்டுத்திக்கிலும்-ரதங்களும்-யானைகளும்-குதிரைகளுங்கடக்கவும் மேலேபெரிதானஆகாயத்தைத்தாவிப்படர்ந்து மூடவும் வெண்சாமரங்களின் கற்றைகளால் காற்றுஇருபுறத்திலும் வீசவும்போய்க் கங்காநதியைக்கண்டான் அரிச்சந்திரமகாராசன்-எ-று

அருகுவந்தணைந்து துள்ளிக்களைத்தெழுங் காலுவன்பு
தருகுழக்கன்றைக்கண்ட தாய்முலைசுரந்ததேபோல்
நிருபனுமாதுஞ்சேயுநெடுநகர்நோக்கிமீண்டு
வருவதுகண்டுமங்கைமாநதிபெருகிற்றன்றே.

(இ-ள்) தனதுபக்கத்தில்வந்துகூடிநின்று துள்ளிக்களைத்துயிர்த்து நீங்காத அன்பைத்தருகிற இளங்கன்றைக்கண்ட தாய்ப்பசுவுக்குமடிசுரந்தாற்போல அரசனும்-மனைவியும்-மகனும்-தங்களுடையநெடிதானபட்டணத்தைக்குறித்துத் திரும்பிவருகிறதைக்கண்டு அந்தப்பெரிதானகங்காநதிபெருகுதலாயிற்று-எ-று. (௫௫)

வரைபலவுருட்டிநீண்ட மரம்பலபிடுங்கிக்கொள்ளை
நுரைபலசிதறியெங்கு * நாறையும்வராலும்பாய
நிரைநிரைபதுமராகநிதிலங்கொழித்திரண்டு
கரையையுங்கடந்துகாந்தங் கடலெனவந்ததன்றே.

(இ-ள்) பலமலைகளையுமுருட்டிக்கொண்டு நீண்டபலமரங்களையும்பிடுங்கிவெண்மையாகப் பலவகைநுரைகளையுஞ்சிதறி எவ்விடத்திலு மலங்குமீனும் வரால்மீனுந்துள்ள வரிசைவரிசையாக பதுமராகமணிகளையும்-முத்துகளையும்-ஒதுக்கிக்கொண்டு இருபுறத்திலுமுள்ள கரைகளையுமுடைத்து உலகமுழுவதிலேபெருகிறகடலென்னும்படிவருதலாயிற்று கங்காநதி-எ-று. (௫௬)

விரிகடலென்னவந்த விமலையின்கரையிலேறிச்
சொரிமலர்ச்சூழறோறுஞ் சுடர்மணிப்பாறைதோறும்
வரிமணல்வண்டறோறு மால்வரைச்சாரறோறும்
தெரிவையர்குழாமுந்தேவர் சேனையுமடைந்தவன்றே.

(இ-ள்) விரிந்தகடல்போல்வருவதான கங்காநதிக்கரையிலேறிச் சிந்துகின்றபூஞ்சோலைகளிலும் விளங்காநின்ற ... பாறைகளிலும் ஒதுங்கிக்கிடக்கிறமணற்குவியல்களிலும் பெரியமலைச்சாரல்களிலும்பெண்கள்கூட்டமும் தேவர்கூட்டங்களும்வந்துசேர்ந்தன-எ-று. (௫௭)

---

* நாறை மலங்குமீன்.

கார்கிளர் [illegible] சோலையிலே [illegible]வாழ்
கார்கிள [illegible] நங்கையர் [illegible]ற்றிற்பெற்ற
[illegible] மாயையார்வல்லிச்சா
[illegible] சார்ந்தான்.

(இ-ள்) [illegible] இடங்களிலே [illegible]ர்கள் [illegible] வாழுகின்ற மனிதர்கள் [illegible] [illegible] [illegible] தாங்களில் இடங்களில் [illegible] அப்பொழுது சூரியனுமேகத்திற்கி லேபோய்ச்சங்கிருன்-எ-று. (௫அ)

[illegible]
காழுருமகத்திதிருஞ்சேர்த்தனர் துங்கத்தெய்வப்
புரவிகள்பூண்டதேரிற் புட்பகந்தேருஞ்செம்பொன்
வரை [illegible] செறிந்தனவன்றே,

(இ-ள்) [illegible] கொண்டதெவ்வியயானைகளையுங் குதிரைகளையும் [illegible] சக்தன விருகூதங்களிலு ம் [illegible] சேரக்கட்டினார்கள் பின்பு உயர்வான [illegible] உருளைகளையுடைய புட்பகாகங்களும் [illegible] வரிசையாக வைத்தாற்போல [illegible] நெருங்கிநின்றன-எ-று. (௫௯)

ஆசபாகற் [illegible] பின்னைப்
பாதசமுனியம்பரித்பாவம [illegible]காலைப்
பூதலவேந்தன்வந்துபுண்ணியம்பரந்ததேபோல்
[illegible]ன்றே.

(இ-ள்) [illegible] சூரியன் ஆழமானகடலிலேபோய்ம றைந்தபின்பு பாவச்செய்கைகளைச்செய்த விசுவாமித்திர முனிவரும் உலகத்திலுள்ளபாவங்களும் [illegible] பின்பு உலகத்தையாளுகின்ற அரிச் சந்திரமகாராஜனுடைய புண்ணியமே எவ்விடத்தும் பரவினாற்போல ஒளியைப்பெரிதாகக்கொண்ட சந்திரனுதயமாகிப்பரிசுத்தமான சந்தி ரிகையைப்பரப்பியது-எ-று. (௬௰)

மாற்கடபயுக்கு [illegible] வாசியுமன்னர்தாமும்
[illegible]ற்படையுந் [illegible] விரிந்தவெண்ணிலவினீட்டம்
[illegible] நிலமுமெண்டிசையுமின்னும்
பாற்கடலாகாக்க [illegible] படியெனப்பகர்ந்தகன்றே.

(இ-ள்) மயக்கத்துடனே மதத்தைக்கொண்ட மலைபோன்ற யானைக ளும் [illegible] குதிரைகளும் அரசர்களும் வேலையுடையகடல்போன்

றசேனைகளும் விளக்கமாகவிரிவானவெள்ளைச் சந்திரிகையினுடையகூ ட்டமானது நீலநிலமானகடலிலே நடுவேதோன்றுகிறபூமியும் எட்டுத் திக்கும் ஆகாயமும் பாற்கடலானது உகமுடிவிலேபெருகினபடிபோற் றிவியது-எ-று. (௩௧)

நல்லவர்மனத்தொடர்ச்சி நல்லவர்க்குற்றதேபோல்
பல்லவப்பொழிலுமாறும் பருமணற்பரப்பும்வெற்புப்
புல்லுமான்மறையுங்கானு மேதியும்புள்ளுந்தூரத்
தெல்லவர்தமக்குத்தோன்ற வெண்ணிலாவெறித்ததிந்து.

(இ-ள்) நல்லோர்களுடைய மனச்சம்பந்தம் நல்லோர்களுக்கேவிளங்குகிறதைப்போல் தளிர்களையுடையசோலையும் ஆறும்பருத்தமணற்குன்றும் மலையும்கூடிச்சஞ்சரிக்கின்றமான்களும் மரைகளும்யானைகளும் பட்சிசாதிகளும் தூரத்திலேயிருக்கிற எல்லாருக்குந் தோன்றுவதாக வெண்மையான சந்திரிகையைவீசியது சந்திரன்-எ-று. (௩௨)

நிரந்தரம்வயிரந்துப்பு நித்திலம்பச்சைநீலம்
பரந்தசெம்மணியுமூன்றும் பகிரதியாற்றைநோக்கி
சிரந்தனைதுளக்கிமென்மே லணிமயிர்சிலிர்க்கவைவேற்
புரந்தரன்மகிழ்ச்சிகூர்ந்து புலோமிசைக்குரைப்பனான்.

(இ-ள்) எப்போதும் வயிரம் பவளம்-முத்து-பச்சை-நீலம்பரவுகலா னசிவப்பையுடைய மாணிக்கம்ஆகிய இவைகளை அலைகளாலே தாக்குவ தான கங்காநதியைப்பார்த்துத் தலையை அசைத்துமென்மேலும் அழகி யதான உரோமங்கள்சிலிர்க்கக் கூரிய வல்போன்ற வச்சிராயுதத்தை யுடைய இந்திரன் சந்தோஷத்தையடைந்து இந்திராணிக்குச்சொல்ல லானான்-எ-று. (௩௩)

கண்ணுதல்சடையின்வீழ்ந்த கங்கையின்கரையில்வந்து
நண்ணுதலுற்றவேக நாகமும்பூகக்காவும்
மண்ணுலகத்திற்றன்ன மணிகளும்புள்ளுமாவும்
விண்ணுலகத்திலுண்டோ மெல்லியேவிளம்புமென்றான்.

(இ-ள்) பரமசிவனுடைய சடையிலிருந்து விழுந்துவருகிற இந்தகங் காநதிக்கரையிலேவந்துசேருதலானவேகத்தையுடையநாகங்களும்கமு கக்காடுகளும் மண்ணுலகத்திலே பொருந்துகின்றரத்நங்களும்பட்சிக ளும்மாவும் மிருகங்களும் நமது ஆகாயத்திலேநீகண்டதுண்டோபெண் ணேசொல்லென்றுகேட்டான்-எ-று. (௩௪)

மந்திரவானோர்கோமா னுரைத்திடமகிழ்ந்துநந்தம்
இந்திரபுரத்துமங்கே விச்சிறப்பில்லையென்றாள்
சுந்தரியுடனேகூடித் துயின்றனன்மகவான்பின்னைச்
சந்திரனுதயமாறத் தரணிவந்துதயஞ்செய்தான்.

(இ-ள்) ஆலோசிக்கலையுடையசேவகர் சூரியகாசனுணவணிப்படிச்சொல்லிவ சக்கிரவஷம்செய்தோம்முடைய இந்திரலோகத்திலும் ஓ!ஓ!இப்படிப்பட்ட சிறப்புகள் கிடையாதேயென்முன் அப்படிச்சொன்ன இந்திராணியுடனேகூட இந்திரன் நித்திரைசெய்தான் பின்புசந்திரன் அஸ்தமிக்க சூரியன்வந்து உதயமானான்-எ-று. (௬௫)

மாமதியொளிமழுங்கி மயங்கிருள்விடிந்தகாலை
யோமதினிலவேயப் புலரியினெழுந்திருந்து
தாமதியாமலேகித் தடங்களும் வெற்புநீக்கிக்
கோமதியாற்றின்வண்டற் குன்றிடஞ்சென்றிருந்தார்.

(இ-ள்) அக்கப்பெரிதான சந்திரனொளிகுறைந்து அன்றுண்டான இருட்காலங்கழிந்தபின்பு பிராதக்காலத்திலே எண்ணங்கொண்டவிடியற்காலத்திலே தாமேயெழுந்திருந்து தாமதஞ்செய்யாமற்போய்மேடுகளும்மலைகளுங்கடந்து கோமதியாற்றினது வண்டல்கூடின மலையினிடத்திலேபோயிருந்தார்கள்-எ-று. (௬௬)

வள்ளலைமுனிவன்கூட்டி வருகின்றவாறுகேட்டுப்
பள்ளமுற்றும்பார்வெள்ளம்பரிசேபோல
உள்ளமகிழ்ரோமஞ் சிலிர்ப்புறவூரிற்சேனை
வெள்ளமுமரசர்தாமும் வியந்தெதிர்கொண்டாரன்றே

(இ-ள்) மகோதாரனான அரசனை விசுவாமித்திரமுனிவர்கூட்டிக்கொண்டுவருகிற சமாச்சாரங் கேள்வியாய் பள்ளத்தின்மேலே வெள்ளம் பொங்கிவருகிறபடிபோல தங்கள்மனமுஞ் சந்தோஷிக்க உரோமங்கள் சிலிர்ப்பாக அயோத்தியாபுரியிலுள்ள சேனைகளும் அரசர்களுமதிசயித்து எதிர்கொண்டார்கள்-எ-று. (௬௭)

அயினெடும்படைதுறந்த கரத்திரயோத்திமூதூர்
எயில்கடந்தேகிமன்னைக் கண்டனையுறைஞ்சிவீழ்ந்தார்
மயிர்பொடிப்புறமனங்கண் மகிழ்ந்திடமறலிகொண்ட
உயிர்வரப்படர்துறந்த வுடலமேயொத்தாரன்றே,

(இ-ள்) நீண்டவேலாயுதங்கள் முதலான ஆயுதங்களில்லாதகைகளையுடையவர்களால் அயோத்தியாபுரியினுடைய மதிலைக்கடந்துவந்து அரசனைக்கண்டு வணங்கிக் காலிலேவிழுந்தார்கள், உரோமங்கள்சிலிர்ப்பாக மனங்களானந்தத்தையுடைய யமன்கொண்டுபோனஉயிர்வரதுன்பநீங்கின உடம்பையொத்தார்கள்-எ-று. (௬௮)

ஆரணமுழங்கயோத்தியணிபெருஞ்சேனையோடும்
வாரணவாசிமன்னன படையொடும்வள்ளலேகித்
தோரணவாயினண்ணிச் சுடர்மணித்தேரிழிந்து
பூரணகும்பமன்னு மண்டபம்பொலியப்புக்கான்

(இ-ள்) வேதங்கள்முழங்குகின்ற அயோத்தியாபுரியிலுள்ளபெரிதான சேனைகளுடனே வாரணவவாசிக்கராசனானவனுடைய சேனைகளுங்கூட அரிச்சந்திரன்போய் தோரணங்கட்டின கோட்டைவாயிலுக்கருகே போய் ஒளிபொருந்தினரதத்தைவிட்டுகீழேயிறங்கி பூரணகுடங்கள் பொருந்தினசபாமண்டபமுழுதும்விளங்கப்புகுந்தான்-எ-று. (௬௯)

பன்முடிவேந்தர்தாழ்ந்து பணியப்பொற்றவிசினேற்றிச்
சொன்முடிவற்றசீர்மைத் தபோதனர்சூழ்ந்துவாழ்த்த
தென்முடிசாயப்பாயு சீர்வயகூடன்றனனைப்
பொன்முடிசூட்டிவாழ்த்திப் புரந்தரன்றிசையிற்போனான்.

(இ-ள்) அநேகக்கிரீடாதிபதிகள் குனிந்துவணங்கும்படி பொன்மயமான சிங்காசனத்திலே யேறச்செய்து சொல்லொணா முடிவுபெறாதநல்லகுணங்களையுடைய தபோதனர்களெல்லாருஞ் சூழ்ந்து ஆசீர்வதித்தருளசெல்வனாகவிலவனுக்கு [illegible] அரிச்சந்திரனுக்குப் பொன்முடிசூட்டி வாழ்த்தி [illegible] இந்திரலோகத்துக்குப்போயினான்-எ-று. (௭௰)

காருளசோலைசூழுங் கௌசிகன்றீமைகன்றே
நீருளவளவுமீராம் நிலமுளவளவுமுன்றன்
பேருளதொருகாலத்தும் பிழைப்பிலாதுனக்குநேர்வே
றாருளரென்றுபோற்றித் தவமுனிவர்போனார்

(இ-ள்) மேகங்கள்சஞ்சரிப்பதான சோலைசூழ்கின்ற கௌசிகதேசத்தரசனான விசுவாமித்திரர்செய்த தீமைகளெல்லாம் உனக்குநன்மையேயாயின கடலுள்ளளவும் பதினாலுலகங்களுள்ளவளவும் உனது பேருளதாயிற்று ஒருகாலத்தும் அழியாதுண்டாகாது உனக்குச்சரியாக வேறேயாரிருக்கிறார்கள் என்றுகொண்டாடி அருமையானதவமுனிவர்கள்போயினார்கள்-எ-று. (௭௧)

மைந்தனைக்கொன்றுமாதை யாவித்தவருத்தந்தந்தேன்
நிந்தனைசிறிதுநின்பாற் கண்டிலேனிதனாலிந்த
எந்தமாதவத்திற்பாதி யாவருங்காணவின்றே
தந்தனனுனக்கென்றுகௌசிகன்றனைவார்த்தான்.

(இ-ள்) உன்புத்திரனையும் உன்னையும் சந்திரமதியையும் இவ்வளவு வருத்தங்களெல்லாம் உண்டாகச்செய்தேன் ஆகையாற்கொடுஞ்செயலான உன்னிடத்திலே பழிப்புண்டாக்கினேனும் நீதிபுள்ள ஆகையினே இனிஎன்னுடைய மகாதவத்திலே பாதியெல்லாருங்காணக்கொடுத்தேன் உனக்கென்று விசுவாமித்திரர் தனைவார்த்தார்-எ-று. (௭௨)

உற்றதிக்கதனைவிட்டோர் தாய்மையைவிரும்பிப்பேசப்
பெற்றவைக்கொருந்திசேர்ந்தவட்டருமைவிடுத்தி

கொற்றவன் றன்னையாற்றிக் குமரனைப்பிணைத்தேற்றி
மற்றமந்திரியைவாழ்த்திக் கௌசிகன்வலத்திற்போனான்.

(இ-ள்.) பின்னும் சோதித்தெரிந்து அளவுசெய்துகொள்ளுதல் உண்மையும் அரிச்சந்திரனையும் நானிழந்து பாவங்களையெல்லாம் நீக்கி ன்பொறுக்கும்கொள்ளுங்கொள்ளு வசிட்டமகாமுனிவருக்குள்ளி இராத்தங்கள்சொல்லி அரசனையுந் தன்மனைச்செல்லுமனைவியையும் சந்திரமதி யையுந் தேறுதல்சொல்லிப் பின்னுமகனையும் மந்திரியையும் வாழ்த்துதல்செய்துவிசுவாமித்திரன் வசிட்டனை வலத்திற்போனான்-

தேவருமுனிவர்தாமுந் தென்புலத்தவர்தாமும்
யாவருமகன்றபின்னர் இனிமணிச்சுடர்விசு
மூவருமனையுமீர்மை முனிவனுக்காகிமேவுந்
ஏவருங்கிளைஞருமினி யினிதாக்காட்டிருந்தார்

(இ-ள்.) தேவர்களும் முனிவர்களும் பலதேவர் உலகத்தரசர்களு ம் எல்லாரும்போனபின்பு இரத்தினங்களைப்போல சோபிக்கின்ற மும் மூர்த்திகளையும் ஒப்பாகுணமுடைய வசிட்டமுனிவருக்கு அ சிராஜனும் ஒருவருக்குமில்லாத அரிச்சந்திரனுடைய சத்தியத்தைக் கொண்டு கூடியிருந்தார்கள்-எ-று, (எச)

இருந்தபின்காசிவேந்தன் வசிட்டனைவிறைஞ்சியத்தி
அருந்தவர்தாமெல்ல வறமலாலன் னிருமுறன்ீட
வருந்திடவிஷமாமித்தர வடைவரை செய்பவுள்ளம்
பொருந்திடவோ தன்னை வசிட்டனுமுரைக்கலுற்றான்.

(இ-ள்.) அப்படியிருந்தபின்பு காசிராசன் வசிட்டமகா முனிவனை வணங்கித்து ஐயா அரிதானவைமுனிவர்களிடத்தில் தருமகுணமே யல்லாமலிப்படிப்பட்ட பாபகுணங்களுண்டோ முனிவர்களிலிப்ப டிவருத்தமடைய இவர்களிடத்திலே மிக கொடுமைசெய்கிறதற்கு விசுவா மித்திரர்மனஞ்சம்மதித்தது யாதுகாரணமென்றுகேட்க வசிட்டர் சொல்லத்தொடங்கினார்-எ-று. (எரு)

நிலத்தியல்பற்றேகொண்டே நீரியல்பாசனற்றங்கள்
குலத்தியல்பெவர்க்குமன்னா வாழினுங்கெடினுங்குன்றா
உலத்தரசன்றுநீங்கித் தவத்தனுடுனுக்கொடாலே
நலத்ததுபோமோவென்று நாயதிக்கினிதுரைத்தான்.

(இ-ள்.) நிலத்தியல்பு தன்மையைப்போக்கி நீரினது தன்மை யுமதுபோல அவரவர்கள் குலசுபாவம் யாவரானாலும் அரசனேவா ழ்ந்தாலுங்கெட்டாலுங்குறைவுபடா விசுவாமித்திரன் உலகத்தரசாளு கையைவிட்டுத் தவஞ்செய்கிறவனானாலும் பறையசாதி தன்மையா ன படியேபோகுமென்று காசிராசனுக்குத்தன்மையாகச்சொன்னார். என்

அன்னதுகேட்டவண்ண லருந்தவத்தோனை நோக்கி
மன்னவனுனவாறு யாமுனிவரானவரும்
இன்னவாரின்னவாறென் றெனக்கருள்செய்வாயென்னப்
பொன்னணிமுடிவாய்கேளென் றம்புனிபுகலலுற்றான்.

(இ-ள்) அந்தவார்த்தைகேட்ட காசிராஜன் அருமையானதவத்தையுடைய வசிஷ்டரைப்பார்த்து அவர் அரசனேயிருந்தும் பின்புபெரியமுனிவரானதும் இன்னபடி இன்னபடியென்றெனக்குத் தெரியச்சொல்லவேண்டுமென்ன பொன்னாலலங்கிர்தமான கிரீடாதிபதியே கேளென்று அந்ததவசிஷ்டர் சொல்லத்தொடங்கினார் எ-று. (௭௭)

மீட்சிக்காண்டம்-முற்றிற்று.

ஆக-விருத்தம்-௩௱௮௰.

உ

கடவுள்துணை.

பத்தாவது

உத்தரகாண்டம்.

திசைமுழுதுங்கவிக்குடைசெங்கோல்வேந்தே
திசைமுகக்கோனவழிவந்தகுசனென்போற்கு
வசையறுசீர்க்குசன்குசநாபன்வதூர்த்தன்
வசுவென்னும்பெயருடையமக்கணால்வர்
குசனுக்குக்கிரிவிரசமெனுநாடுங்
குசநாபற்கரியகௌசாம்பிநாடும்
வசுவுக்குவசுமதியுமவதூர்த்தனுக்கு
வாரணமெனவளநாடும்வழங்கினனே.

(இ-ள்) எட்டுத்திக்குகளுக்கும் நிழலைச்செய்கிறகுடையையுஞ்செங்கோலையுங்கொண்டகாசிராசனே நான்முகப்பிரமனுடையவழியிலேபிறந்த குசனென்பவனுக்கு குற்றமற்றசிறப்பையுடைய குசனகுசநாபன்வதூர்த்தன்வசுவென்கிறபெயர்களையுடைய பிள்ளைகணால்வர் அவர்களில்குசனுக்கு கிரிவிரசமென்னநாடுங்குசநாபனுக்கு அருமையான கௌசாம்பிநாடும் வசுவுக்குவசுமதியும் வதூர்த்தனுக்குவாரணமென்கிற வளம்பொருந்தினநாடும் தகப்பன்கொடுத்தான் எ-று. (௧)

அக்கவரிற்கௌசாம்பிக்குசநாபற்கே
யைம்பதிற்றிரட்டிபெண்ணுமடைவுற்றோன்று
மங்கையர்தமொருநாளிற்புதுக்காவொன்றி
வண்டவிழ்த்திகொங்கலையுவைதி
திங்களுற்றேமொழிபிரன்றனைக
தீமனைத்துமுகிலஞ்செய்யவென்ன

எங்கள்பிதாவரியவெனைமவதனைகூட்டி
விணக்குமேவாயல்லதிதற்கிசையேமென்றார்.

(இ-ள்) அந்தநாலவரிலே கௌசாம்பிநாட்டையாளுகிற சூரபனுக்குறுமெனகிறசணக்குடனேபிறந்தபெண்கள் ஒருசோலைக்குள்ளேபோய்நாள்தோறும்வண்டலாட்டிச்செய்துகொண்டிருப்பார் அவ்விடத்தில்வாயுபகவான்வந்துசந்திரனிற்பாதிபோன்ற நெற்றியையுடைய பிராய்த்தேன்போலுமதுரவசனங்களையுடைய பெண்களே என்னுடைய இச்சைதீரும்படி என்னைக்கூடிச்சுகத்தைக்கொடுக்கவேண்டுமென்றுசொல்ல அதற்கு அப்பெண்கள் எங்கள் தகப்பனுக்குரிய கன்னிகைகளியாணஞ்செய்து கூட்டினால் கூடுவோம் அல்லாமல் எம்முடைய சொல்லுக்காக நாங்கள் சம்மதியோமென்று சொன்னார்கள்-எ-று. (௨)

மதகதுமறந்துரைத்திடவும்பொருந்திலாத
வல்லிபனைமூதுசொடியவாயமேமந்து
முறிந்துடுக்கத்தடைவிழ்ந்துப்போய்மாமின்னேர்
மெய்குறைவர்களத்துயரைரூடனிருந்தார்
செழுகவைகாககண்டிதுமேவிக்கொண்டைமேக்
திருவனையாரமூமுதுசெப்பததாதை
பிறிக்தணையாதாமொடுக்கிச்சூளிமைந்தன்
பிரமதத்தற்றனக்களித்தானேபதைமாரை.

(இ-ள்) இவ்வாறு நம் கன்னிகைகளைத்தடுத்துத் தடுக்கிறதுச்செல்லும்போது தனக்குச்சம்மதியாகாதபெண்களையெல்லாம் முதுகொடியும்படிவாயுவானவன அடித்துமுறியப்பண்ணிப்பூமியிலே விழும்படி செய்துபோனபின்புநெருங்கின கூந்தலையுடைய அப்பெண்கள் தளர்ச்சிகொண்டுதங்கள் வீட்டுவாசலுக்குப்போனார்கள் அவர்களைக்கண்டுதகப்பன்கோபங்கொண்டு இந்தப்படிவரக்காரணமென்னவென்றுகேட்க அந்தலட்சுமிக்கொப்பானபெண்கள் அழுதழுதுகொண்டுசொல்லஅதைக்கேட்டுத்தகப்பனானவன்வேறொன்றுஞ்சொல்லாமல் உள்ளதுன்பத்தை ஒடுக்கிக்கொண்டுசூளிபுத்திரனானபிரமதத்தனுக்கு அந்தப்பெண்களைவிவாகஞ்செய்துகொடுத்தான். (௩)

சூளிமகன்பிரமதத்தன்றன்னைச்சேர்ந்து
துயர்தீர்ந்தச்சுகமோங்கிப்பெருவாழ்வுற்றார்
மீளியெழிற்சூரபன்பின்புசெய்த
வேள்வனிற்கனதியெனும்விமானமொன்றில்
ஆளிதிகழ்வல்லிசரிமருட்டுன்றூட்டி
யாசகண்டுசிலகாலஞ்சென்றபின்னர்
சாளிமைப்போற்கவினைகையீன்றபின்பு
கௌசிகனைப்பெற்றெடுத்தாலந்தன்னில்.

(இ-ள்) அந்தப்பெண்களெல்லாரும் சூளிபுத்திரனான பிரமதத்தனைக் கூடித்துக்கங்கள்தீர்ந்தகுந்தசுகமோங்கிச் சுகசௌந்தரியமடைந்து பெரிதானவாழ்

னைக்கொண்டிருந்தார்கள் வீரத்தன்மைகொண்டெழுகின்ற குசநாபன் பின்புபுண்ணியவான்களின்வழியிலே காதியென்கிற ஒருவீரனுண்டாகிசிங்க ம்போலுலகாகவிளங்குகின்ற ஆசனத்தின்மேலேறிக்கிரீடஞ்சூடிக்கொ ண்டு அரசாட்சிசெய்து சிலகாலஞ்சென்றபின்பு காளியைப்போலுள்ள கௌசிகையென்னுமொருபெண்ணைப்பெற்று பின்புகௌசிகனைப்பெ ற்றுவளர்த்த அக்காலத்திலேதானே-எ-று. (௪)

இருசிகனக்கௌசிகையைப்புணர்ந்துசின்னா
　ளின்பநுகர்ந்திருந்தமைமீன்றபின்பு
பிரமனுலகினைத்துதகைம்புரிந்துமீளப்
　பிரிவுணர்ந்தவள்புலம்பமுனிவன்சீறி
வருபுனலொருதியெனச்சபித்தலோடு
　மானதவாவியில்வீழ்ந்தசரையோடே
அருகணைந்துபிரிதருகோமதியையானு
　ளவணிலைபெறிலுலகம்புரக்குநாளில்.

(இ-ள்) இருசிகமாமுனிவர் அந்தக்கௌசிகையோடுங்கலந்து கூடிச்சில காலம் சுகத்தையனுபவித்து அவளிரண்டுபிள்ளைகளைப்பெற்றபின்புத வத்தைச்செய்து பிரமதேவனுடைய உலகத்தைச்சேர்ந்து போகநாயக ன்பிரிவையெண்ணி அவள்பிரலாபிக்க அதற்கு அம்முனிவர் கோபங்கொ ண்டு ஓடிவருகிறநீராறாகவென்று சபித்தவுடனே மானதவாவிலேவிழு ந்து அந்தச்சரயுவுடனே கூடிச்சேர்ந்துபிரியகான கோமதிநதியானுள் அவள்வரலாறப்படியாக இந்தக்கௌசிகன் உலகத்தையாளுகிறகாலத் திலே-எ-று. (௫)

ஐமந்தரொருநூற்றுவரைப்பெற்றுவெற்று
　வடிவாளும்வருசிலையுங்களிறுமாவும்
இந்தவுலகத்திவர்போல்வல்லாரில்லை
　யென்னவளர்த்தவரோடிருக்குங்காலைத்
தந்திரமார்பெருப்படையுந்தேருமாவுந்
　தந்திகளுஞாழகளுமூர்ந்தியீண்ட
மந்திரிகடங்களொடுமக்களோடு
　மாண்வேட்டையாடவிலவனத்திற்புக்கான்.

(இ-ள்) ஒருநூறுபுத்திரரைப்பெற்று வெற்றியோடே கூடியவாளா யுதவலியினாலும்வரிந்த வில்வலியினாலும் யானையேற்றத்தினாலும்குதி ரையேற்றத்தினாலும் அந்தவுலகத்திலே இவர்களுக்குச்சமானமாவொ ருவரும்வல்லவர்களல்லை யென்னும்படிவளர்த்து அந்தப்பிள்ளைகளுட னே இருக்கிறகாலத்தில் நால்வகையுபாயங்களுந்தெரிந்தபெரிதானசே

ளைகளுங்கோழும் குதிரைகளும் யானைகளும் வேட்டைநாய்களுஞ் சூழ்ந்துச் செல்வதாகக் காண்டிருக்கடைசேர பிள்ளைகளுங் கூடிவர மான்வேட்டையாடுதற்காக இந்தச் சௌசிகராஜன் காட்டுக்குள்ளே சென்றான்-எ-று. ()

கரியினமும் புலியினமும் வெருளவோடக்
கலைகடமை யமைமுடியக் கணைகடிவி
எரிபரப்பி வனமடங்க வழிய நூறி
இருடிகடந் துறுமிலைகள் பாழாகச்செய்
கரியினமுங் குழுவுமுயனுமகலாவண்ண
மாவிலெல்லா குணிலுமெறிந்தனைத்துங்கொன்று
தெரியமிக்க சமிவதுப்பித்தின்றுதங்கிச்
சிலநாள் கானகத்துறைந்து திரியுநாளில்.

(இ-ள்) யானைக்கூட்டங்களும் புலிகூட்டங்களும் பயந்தோடவும் கலைமான் கடமைமான் புள்ளிமான்கள் மடியவும் பாணங்களை விட்டு நெருப்பை மூட்டி வனங்களெல்லாமழியும்படி கெடுத்து முனிவர்களுடைய ஆசிரமங்களெல்லாம் பாழாகும்படி பண்ணி சிங்கக்கூட்டங்களுங் குறியதானமுயற்கூட்டங்களும் தூரப்போகாதபடி கூரியவேலாயுதங்களையும் வளைதடிகளையுமெறிந்து எல்லாவற்றையுங்கொன்று. நன்றாகத்தெரியப்படுகிற சிவந்தமாமிசங்களைச்சுட்டுத்தின்றுகாட்டிலேதானே தங்குதலாய் சிலகாலம்வாசம்பண்ணிக் கொண்டிக்கொண்டு திரிகிறநாளிலே-எ-று.

ஒருஞான்றுபுலரிதனிலெழுந்துபோகி
யுயர்வரைகடோறுமுழன்றொன்றுமின்றி
வருநாளிலவ்விடத்தோர்மானின்பின்போய்
வாய்புலர்ந்துநாவுலர்ந்துகாலுமோய்ந்து
பெருநாணமும்பசியுந்தவிப்புமாகிப்
பின்பிடித்தவிலங்கைவிட்டுத்துன்பமெய்தித்
தருநீழறன்னிலியாணிணிதுவைகித்
தவம்புரியுமலைச்சாரற்றன்னிற்சார்ந்தான்.

(இ-ள்) ஒருநாள்விடியற்காலத்திலேயெழுந்துபோய்உயர்ந்தமலைகள் எல்லாவற்றிலுமலைந்து ஒன்றுமகப்படாமல் வருகிறபோது அவ்விடத்திலேஒருமானுக்குப்பின்னே தொடர்ந்துபோய் வாயுங்காய்ந்துநாவும் வரண்டுகால்களுமோய்ந்து பெரிதானவெட்கமும் பசியும் தாகமுமுண்டாகிப்பின்றொடர்ந்துவந்த அந்தமானைவிட்டுத் துன்பமடைந்துமரத்து நிழலிலே தான்சுகமாயிருந்து தவஞ்செய்கின்ற மலைபக்கத்திலேவந்தான்-எ-று. (அ)

வானைவனைக்கண்டிராக்கிரீயாசென்ன
வடிபணிந்துகௌசிகமன்னவன்பாணிந்தக்

(இ-ள்) நான் அந்தகௌசிகனைக் கண்டிரக்கங்கொண்டு நீயாரென்று கேட்க வன்பாதத்தில் வணங்கி நான் கௌசிகராஜன் இந்தகாட்டிலே மான்வேட்டையாடவந்து இங்கே ஒருகடியவேகமுள்ளமானைத்தொடர்ந்தோடிக் கால்கள் தளர்ந்து சேனைகளும் நானும்பசியும் தாகமுமுண்டாகித் தளர்ச்சியாய் உமது பாதத்தை யடைந்தேனென்று சொல்ல அவனுக்காக காமதேனுவை நான் வரவழைத்துப் போசன முதலான வெலாங்கொடுத்து நீங்காத பசியையும் தாகத்தையும் தீர்த்தபின்பு-எ-று. ௯

அப்பசிதீர்ந் தமைச்சரொடு விரைவின்வந்தென் னருகணைந் தமாமுனியே யடியனேற்கின், றிப்பசுவைத் தரல்வேண்டுமென்னக் கேட்கவிதற்குரியானல்லனென்னவோடும், அப்பசுவைக்கரிபரிதேர் சேனையோடு மடக்கவனைந்தெரிபாசத்தாலேவீசத்; தப்பறவே பூண்டகயிற் றெதிர்போயந்தத் தானையெலா மடிந்துவிழச் சாடிற்றவ்வான்.

(இ-ள்) அந்தப்பசிதாகமெல்லாந் தீர்ந்தபின்பு தன்மந்திரிகளுடனே அதிகவிரைவிலே என்னிடத்திலேவந்து ஓமகாமுனிவரே அடியேனுக்கு இப்போதிந்தப் பசுவைத் தரவேணுமென்று கேட்கஅவற்கு நான் இந்தப் பசுவைக் கொடுக்கத் தக்கவனல்லேனென்று சொல்லுமளவில் அவன் அந்தப் பசுவை தனது யானைகுதிரைதேர் முதலான சேனைகளுடனே முழுதுஞ் சூழ்ந்து கட்டத்தக்க கயிறு கொண்டுபிடிக்க ஒன்றாவது தப்பாமல் தன்னைக் கட்டின கயிற்றுடனே முன்னேபோய் அந்தசேனைகளை யெல்லா மிறந்து கீழேவிழும்படி கொன்றது அந்தப்பசு-எ-று. ௰

வேறு.

ஆலாலமெழுந்ததெனச் சினமுற்றணிபூடு புகுந்துதுகைத்திட்டுவ, வேலாவரும்வெங்கரிவித்தகரும் வில்லாளரும்வெம்பரி வீரர்களும், காலான்மிதிபட்டவர் கோடியர் கட்கனலாலெரிபட்டவர்கோடியர்நீள், வாலாலடிபட்டவர் கோடியர்வெண் மருப்பால்வதையுண்டவர்கோடியரே.

(இ-ள்) விஷங்கொதித் தெழுந்தாற் போல் கோபங் கொண்டு சேனை வகுப்புக்குள்ளே நுழைந்து காலால்மிதித்துக் கொல்ல அப்போது வேலாளிகளும் வெவ்விதானயானை வீரர்களும் வில்லாளிகளும் வெவ்விய குதிரைவீரர்களும் அந்தப்பசுவின் கால்களினாலேமிதிப்பட்டிறந்தவர்கள் கோடிபேர்கள் கண்களிலுண்டாகுகிற நெருப்பினாலே யெறிந்திறந்தவர்கள் கோடிபேர்கள் நீண்டவாலாலே அடிபட்டிறந்தவர்கள் கோடிபேர்கள் வெள்ளைக கொம்புகளாலேகுத்துபட்டிறந்ததர்கள் கோடிபேர்கள் ௧௧

கொழுமேவொடிறந்தசையி ரணிணக்குடர்மூளைசரிந்துதுழைந் திடுவார், மழுவாள்சிலை தண்டுகடைத் தலைவேல் வலயங் கரவாள்

பொடிக்கின்றார், விழுவார்சிலர் வாருநன்வார் புரள்வார்விதியேசதியாகவிளைத்தனையென், றழுவார்தகவல்லதுசெய்தமைக்கழுவேயெனவோடியகன்றனரே.

(இ-ள்) அசரூப்படவே ரத்தம் மாம்சம் எல்லவெனும் குடல் மூளைகளெல்லாஞ் சரிந்து குழைந்து போனவர்கள் சிலர்மழுவாளாயுதம் வில் தண்டாயுதம் சடைக்கெதிர்த்த வெல்லல்லயாம் வைவான்களெல்லாவொடித்து விழுகிறவர்கள் சிலர் ஓ தெய்வமே இப்படிக் கெடுதியுண்டாகச் செய்தாயே யென்றழுகிறவர்கள் சிலர் நியாயமல்லாததைச் செய்த நமக்குக் கெடுதலே யல்லது வேறுவரா தென்றோடினார்கள்சிலர்-எ-று. ௰௨

இவ்வாறுவெருட்டி வதைத்தெனை யுற்றினிபேதுசெயக்கடவேனடியேன், அவ்வாறுவை யென்ன வியாவிலி நீயகலவாவென் றிசைவென்னவினைத்தனிவிட், டெவ்வாறகல்வேனிவணிற்பனெனவிளிநீகடிதேகிவணிற்றலெனக், கொவ்வாதெனயானுரை செய்திடவேயுயர்வானிடைதேனுவு முற்றதுவே.

(இ-ள்) இந்தப்படி பயங்காட்டிக் கொன்று பின்புஎன்னிடத்திற்குவந்து இனி அடியேன் யாதுசெய்யக் கடவேன் அவ்வகையையெனக்குச் சொல்லுமென்று காமதேனுகேட்க நான்இனி நீ-ஆகாயத்துக்குப்போ வென்றுசொல்ல அதற்கு உம்மைத்தனியாக விட்டுவிட்டு எப்படிப் போவேன் இங்கேதானே நிற்கிறேனென்று அந்தக்காமதேனுவானது சொல்லநான் சீக்கிரத்திலேபோ இனிநீ இங்கே நிற்கிறதெனக்குத் தகாதென்றுசொல்ல உடனே காமதேனுவானதுஉயர்ந்த ஆகாயத்திற்குப் போய்விட்டது-எ-று. ௧௩

அமராவதியிற்பசு வெய்திடவேயரசன் றலைமைந்தர்க ணூற்றுவரும், எமதாவிகொளக்கருதிச் சினமுற்றிடிபோல் முழக்க மெழுக்குமுறிச்சமராடத்தொடங்கிநெடும்பொழுதிற்சரமாரிபொழிந்திடலும்முடலும் கமராகவெடித்துவிழித்து விழிக்கனலாலவர்வெந்து கழிந்தனரே.

(இ-ள்) அப்படித் தேவருலகத்திற்கு அந்தப் பசுப் போனபின் கௌசிக ராஜனுடைய புத்திரர்கள் நூறுபேரும் என்னுடையஉயிரைவாங்க நினைவுகொண்டு கோபமாய் இடிபோல் முழக்க முண்டாகக் கெர்ச்சனைபண்ணி யுத்தஞ்செய்யத் தொடங்கி நெடுங்காலநேரம் பாணவருஷங்களைப் பொழியுமளவில் என்னுடம் பெல்லாந்தொளைகளுண்டாக அதிர்ந்து நான்-திறந்துபார்த்த என்கண்களிலுண்டான நெருப்பினாலே அந்த நூறுபேரும்வெந்து சாம்பலானார்கள்.

கண்டத்தழலிலிவர்மைந்தர் படத்தனுமங்கை யெடுத்தெதிர்வந்துகடுங் கொண்டற்சரமாரிபொழிந்திடவே பொடிபோலிவனுக்

கெதிராவெளது, தண்டத்தினைகட்டனன் விட்டபெருஞசரயாமெ ழுக்கதைச் சக்கரம்வேல, விண்டற்பவரும்பொடியா யுதிரவிசையா னசையோடு விழுங்கினதால்.

(இ-ள்) அப்படி வேகமான நெருப்பிலே உயர்ந்த புத்திரர்கள்சா வக்கண்டு வில்லைத் தனதழுகிய கையிலேகொண்டு என்முன்னே வந்து கடுமையான மேகம்போல் பாணவருஷங்களைப் பொழிய அந்தப் பொல்லாதவனுக்கு முன்னே என்னுடைய தண்டத்தை ஊன்றி வைத்தேன் அப்போதவன்விட்ட பெரிதான பாணவருஷங்களையும் மழுவையும் கதையையும் சக்கரத்தையும் வேலையும் ஆகாயத்திலே சிறிதான நுண்ணிய தூளிகளாக வுதிரும்படி வேகத்துடனே தனக்குமிருந்தபசிதாகத்தாலுள்ள ஆசையுடனே தண்டுவிழுங்கியது.

விடுகின்றகொடும்படை யத்தனையும் விறல்கொண்டுயர் தண்டம்விழுங்கிடவே, அடுகின்றதெமக் கெளிதல்லவெனவுபராமசவாசை யடைந்துறவே, சுடுகின்றமனத்துடனாரணுகித்துறவோர்வலியோர்கிறைமேபாரிலெனுக, கொடுவெங்தொழினாடுதுறந்தகலக் குணபாலணுகித்தவமுற்றனனே.

(இ-ள்) அப்படி அந்தக்கௌசிக ராஜன் விடுகிற கொடுமையான ஆயுதங்களை யெல்லாம் பலங்கொண்டுயர்ந்த எனது தண்டம் விழுங்கும்போது இனிஇந்த முனிவனை நம்மாற்கொல்லுகிற தெளிதல்லவென்றடங்கி புத்திரவாஞ்சை மிகவுமுண்டாகிச் சுடுகிறதான மனத்துடனே தனதூருக்குப் போய்ச் சந்நியாசிகளைப் போல் வல்லவர்களாசர்களில்லையென்று கொடுமையான வெவ்விய தொழில்களைச் செய்துள்ள தனது நாட்டைவிட்டுத் தூரமாய்க்கிழக்குத் திக்கிலே வந்து தவஞ்செய்தான்-எ-று. ௰௬

இவனுற்றதவத்தை யழிக்க நினைத்திமையோர்க் கிறைவிட்ட திலோத்தமையோ, டவனத்தவம்விட்டு நலத்திடைபுக் கழிபட்டுடனே யறிவுற்றவனைப், புவனத்தின்மனித்தர் பிறப்பினினீபோ வென்றுசபித்தகரென்றிசைபோய்ச், சிவனைக்கருதித்தவமுற்றிடவே தீராவரமீசனளித்தனனே.

(இ-ள்) இப்படி இவன்கொண்ட தவத்தைக் கெடுக்க வெண்ணித் தேவர்களுக் கரசனான இந்திரன் அனுப்பின திலோத்தமையுடனே அந்தக்கௌசிகன் அந்தத்தவஞ் செய்கிறதைவிட்டுவிட்டு அவள்சுகத்திலே புகுந்து தவமெல்லா மழிதலாய் உடனே தெளிவு கொண்டு அந்தத்திலோத்தமையை உலகத்திலுள்ள மானிடப்பிறவியிலே நீபோய் பிறக்கக்கடவையென்று சாபங் கொடுத்துப்பின்பு அகன்ற தெற்குத் திசைக்குப்போய்ப் பரமசிவனைக்குறித்துத் தவஞ்செய்யும்போது அந்தப்பரம சிவன் அழியாதவரங்கொடுத்தருளினர்-எ-று.

அங்காளிலெனைத்திரி சங்குற்றங்கத்தொடு விண்புகல வேண்டுமெனச் சொன்னன்முடியாதெனயான் மொழியத்துறவோர் பிறாலுறவேனெனலும், இன்றதுரைசெய்தனை னீபுலையாகெனவேபுலைய

வெழில்கெட்டவமே, தன்னுடனுமித்தயர் சீசீயெனத்தள்ளத் தள்ள மெள்ள நடந்தனனே

(இ-ள்) அந்தக்காலத்திலே என்னைத் திரிசங்குவானவன் அறிந்து வந்து உடலோடே சுவர்க்கம்போகவேணுமென்று சொன்னான், அதற்கு நான் அப்படி உடலோடே சுவர்க்கலோகம்போகக்கூடாதென்று சொல்ல அந்தத் திரிசங்குமவரே உம்மைப்போலிருக்கிற அறுவத்து நாலுபேர்களாலே நான்போகிறேனென்றுசொல்ல நான் பொல்லாத அன்பவார்த்தையைச் சொன்னவனையே புலையனாகக் கடவை யென்று சொன்னவுடனே அந்தத் திரிசங்கு புலையனாகித் தன்னுடம்பெல்லாம் நீலக்குறளனானதுபோல் அவனைச்சேர்ந்தவர்களெல்லாம் சீசியென்று தள்ளத்தள்ள அதைக்கேட்டுமெள்ள மெள்ள அவிடம்விட்டுப் போயினான்-எ-று. ௰௯

அந்நேரமே யென்னை விட்டிவனைத் தரித்தன்னகத்தொடு விண்புகல் வேண்டுமெனக், கெஞ்சேறனைத்துதாம் சொல்லவவனென்றேயுடுத்த மரத்தொழிலால், குன்றேறும் விமான மழைத்துதன்மேற் சேலேற்றன வோடிநடத்திடவே, சென்றேயமராவதிசேருநவுந் தேவர் இபர்கண்டு சினந்தனரே.

(இ-ள்) அப்போதே என்னைவிட்டுவிட்டு இந்தக்கொசிகனைப்போய்க்கண்டு நான் உடலுடனே சுவர்க்கம் போக எனக்குவேணுமென்றுவேண்ட அவனப்படித் தன்னுள்ளத்திலுள்ள கருத்தைச்சொல்லவே அந்தக் கௌசிகன் முன்னே யென்னுடனே போராடிக் கொண்டிருக்கிறவீரச்செய்கையினுலேயே கொப்பாளாகுகவியானத்தை வரும்படி பண்ணி அந்தவிமானத்திலே அரசனையேற்றென்று சொல்ல அவனப்படியேயேறி நடத்தச்செய்தே அந்தவிமானம்போயமராவதிசேரும்போது தேவேந்திராதிகள் கண்டுகோபங்கொண்டார்கள்

புலையாசுரர்நாடு புகுகேலெனவே புறமுந்தினர் வானவர் புட்பக மோடலையாவிழுவன்முனி கௌசிகனுக்கபயம் மெனவிழ்தலிலுதிர்போய் நிலையானவிமானம் விழாதுநிறீஇ நெடிவெஞ்சினமாய்விழி நின்றனனால், பலபாலுமெரிந்தன பல்லுயிருப்படர் நீப்பினிய வெந்து பதைத்தனவால்.

(இ-ள்) அடாநீசா தேவருடைய நாட்டுக்குள்ளே புலையா நேயென்று சொல்லி வெளியேபோகத்தள்ளிவிட்டார்கள் தேவர்கள் அப்போது அந்தவிமானத்துடனே அலைவுபட்டு விழுகிறவன் கௌசிகமுனிவனுக்கபயமென்று விழுகிறது தெரிந்து அவனுக்கு முன்னேபோய்நிலைமையான விமானத்தைவிழாமல்நிறுத்திநெடிதானவெவ்விய சினங்கொண்டுகண்களிலுள்ளநெருப்பினாலேபல இடங்களிலும் எரிதலாயின பலவிதமான வுயிர்களும் அப்படிப்பரவுகின்ற நெருப்பினாலே வெந்துபதைப்பதாயின-எ-று. ௨௰

இவ்வண்டமனைத்துப் பெருத்தலகர்வேறுடனிந்திரனும்மயனு
ம், தெய்வங்களும்வேறு படைப்பனொடுத்தொழிபவ்பால்வினே
டயன்வந், தெவ்வண்ணம் விளைந்திதென்ன விரந்தருகின்றனி
ந் தணிவித்துலகம், உய்வண்ணமுறத்திரிசங்குதனக்குடுவின்பதநல்
கவுரைத்தனரே,

(இ-ள்) இந்த அண்டங்களையெல்லா மெரியச் செய்து பதினாலுல
கங்களையும் இந்திரனையும் பிரமாவையும் மற்றத்தெய்வங்களையும்வே
றேசிருஷ்டிக்கிறே னென்றுசொல்ல அப்போதுதேவேந்திரன்விஷ்
ணுவுடனே பிரமாவும் வந்து எப்படிமுடியுமோ வென்று நல்ல
வார்த்தைகளைச் சொல்லி அவனுக்குண்டாகுகின்ற கோபத்தைத்
தணியும்படி செய்து உலகமெல்லாம் பிழைக்கும்படியாகத்திரிசங்கு
வுக்கு நட்சத்திரபதவியைக் கொடுக்கும்படி சொன்னார்கள்-எ-று.

அத்தன்மையனம்முனி யென்னுடனே யங்காளிலெடுத்தமரத்
த்தொழிலால், எத்தன்மை யிழைத்தன்னனவெலாமென்னேநய
லித்திலவாதலினல், இத்தன்மையிழைத்தனன் மன்னனுடனிதனு
ம்வெலற்காரிதாயினவிப்பித்தனமெசய லித்தகவென்றறவோர்பெரு
மாணிறையோடுரை பேசினனே.

(இ-ள்) அப்படிப் பட்டவனான கௌசிகனான விசுவாமித்திர மு
னிவன் என்னுடனே அக்காலத்திலே கொண்ட வீரச்செய்கையினா
லே எப்படிப்பட்ட வைகளெல்லாஞ் செய்தானோ அவைகளெல்லா
ம் என்னுடம் பாடாகப் பலிக்கவில்லை ஆகையினாலே இப்படிப்பட்ட
காரியமும் பண்ணினான் இந்தஅரிச்சந்திரனுடனே இந்தவிஷயத்தி
லும் என்னைவெல்லப் படாதவனே யானான் இப்படிஇந்தப்பயித்தி
யக்காரனான கௌசிகன் செய்கைக ளிப்படிப் பட்டவைகளென்றுதூ
றவறத்தார்களிற்சிறந்தவரான வசிட்டர் அந்தக் காசிராஜனுடனே
சொன்னார்-எ-று. ௨௨

இன்னீர்மைவசிட்டனுரைத்திடலுமெழில்வாரணவாசியர்கோ
ன்முனிவோர், தன்னீர்மையைநீயலதாரறிவார் தழைஞான மிலாக்
கறிபத்தருமோ, நின்னீர்மை புணர்ந்தவரே யறிவார்நீயே யவர்னீர்
மையினைந்துணர்வாய், என்னீர்மையுனக்கரிதென்ன வெழுந்திரு பா
தமிறைஞ்சியிருந்தனனே.

(இ-ள்) இந்தவிசேஷங்களை யெல்லாம்வசிஷ்டமுனிவர்சொல்லும
ளவில் அழகுபொருந்தின வாரணவாசியாருக்கரசனானவன் ஐயாமு
னிவோர்களுடைய பெருமையை உம்மையல்லதுயார் அறியவல்லவ
ர்கள் முதிர்ந்த ஞானமில்லாதவர்களுக் கரியக்கூடுமோ உம்முடைய
பெருமையைத் தெரிந்தவர்களே தெரிவார்கள்னீரே அவர்களுடை
ய பெருமைக் குணத்தையுந் தெரிந்துணருவீர் எந்தப்பெருமைகள்
உமக்குக் கூடாதவைகளென்று எழுந்திருந்து அவருடையஇரண்டு
பாதங்களையும் வணங்கிக்கொண் டிருந்தான்-எ-று. ௨௩

அவ்வாரணகரத்தொரு திங்களிருந்தருண்மாமுனியைத்தொழு
தேவிடைகொண், டெவ்வாறுமறந்துதர்ப்பயெனு விறையும்மனும்

பிறரும் மெலியச், செல்வாரண வாசியர்கோனவரைத் திருமார்புற வேதழுவிப்பரியுங், கைவாரவுமும்படையும் மிடையக்காசித் திருநாடுபுகுந்தனனே.

(இ-ள்) அப்படி அந்தஒளியால் மிகுந்த அயோத்தியாபுரியிலேஒருமாதமளவுமிருந்து பின்புகிருபாசமுபான பெரிய வசிஷ்டரை வணங்கி விடைகொண்டு எப்படிக் காசிராஜனே உம்மைமறந்து தங்கக்கடவோம் நாங்களென்று அரிச்சந்திர மாராஜனும் மகனுமெலிவு கொள்ள செல்வையான வாரணவாசியென்னுங் காசிராஜனனவன் அவ்விருவரையும் தனது திருமார்பழுந்த ஆலிங்கனம்பண்ணிக்கொண்டு குதிரைகளும் துதிக்கைகளையுடைய யானைகளும் சேனைகளும் நெருங்ககாசியென்னுந் திருநாட்டுக்குப் போயினன்-எ-று. உசு

கடிமிகுதுறுகார்வளமல்குதிருக்காசித் திருநாடனுமேகியபின்முடிமிசைதொளிபொங்கிட வெண்குடையு முத்தின்குடையுங் கொடியுமிடையப், படிமிசையினின்மன்னவர் வந்துதொழப்பலபாவையர் பாணர் பரிந்திடவே, அடிமிசைவணங்க வயோத்தியர்கோனரி யாசனமிசையிருந்தனனே.

(இ-ள்) காவல்மிகுதியாய் மிகுந்த மேகங்களினுடையவளமையே அதிகமாயிருக்குமுள்ள திருக்காசிநாட்டரசன் போனபின்பு தலைக்கு மேலே வெள்ளைக்குடையினுடைய ஒளிபொங்குதலாக முத்துக்குடைகளும் கொடிகளும் நெருங்கஉலகத்திலுள்ள பலஅரசர்களும்வந்து வந்து வணங்க அநேகம் பெண்களும் பாணர்களும் சந்தோஷித்தன்புகொள்ளும்படி பாதங்களிலேவணங்க அயோத்தியாபுரிக்கரசனான அரிச்சந்திரமகாராஜன்சிங்காதனத்தின்மேலேறியிருந்தான்.

வேறு.

மன்னவர்வாழிய மாமறைவாழிய
செங்கெனன்மன்னுக செந்தமிழோங்குக
அன்னதான வரிச்சந்திரன்கதை
தன்னைக்கேட்டவர் வாழ்வுந்தழைக்கவே

(இ-ள்) ஆகையால் இக்காலத்துள்ள அரசர்களும்வாழ்க பெரிதானவேதங்களும் வாழ்க சிவந்தநெற்களெங்கும் விளைக செவ்விதான தமிழ்மொழியும் உயர்ந்துவாழ்க அப்படிப்பட்ட தானங் கொடுத்த அரிச்சந்திரமகா ராசனுடைய சரித்திர மகிமையைக் கேட்டவருடைய வாழ்வுந் தழைத்தோங்குக-எ-று. உகூ

உத்தரகாண்டம்-முற்றிற்று-ஆ-விருத்தம்-கூஉாய௲

அரிச்சந்திரபுராணம்

மூலமும்-உரையும்.

முற்றிற்று.

Cudg

2 4 92